கம்பர் அருளிய

இராம காதை

(பால காண்டம்)

உரையாசிரியர் :

சொ. முருகப்பன்.

கம்பர் பதிப்பகம்

மகளிர் இல்லம்—அமராவதிபுதூர்

இராமநாதபுர மாவட்டம்

வெளியீடு 3

முதற் பதிப்பு—1953

விலை ரூ. 5-0-0

சாது அச்சுக்கூடம், இராயப்பேட்டை - சென்னை—14.

கம்பர் கவிச் செல்வத்தில்

ஊறித் திளைக்கும்

செந்தமிழ்ச் செல்வர்

திரு. ராய. சொ. அவர்களுக்கு

இந்நூலை உரிமையாக்குகிறேன்

சொ. முரு.

உள்ளுறை

மகாமகோபாத்தியாய முதுபெரும்புலவர் பண்டிதமணி

மு. கதிரேசச் செட்டியார் அவர்கள்

நல்கிய

முகவுரை

திரு. சொ. முருகப்பா அவர்கள் இளமையிலே தாம் கற்ற கல்வியை அரசியல், சமூகம், மொழி, சமயம் முதலியவற்றின் சீர்திருத்தப் பணியில் பயன் படுத்தி வந்தனர். இப் பணிகளுக்குச் சிறந்த கருவியாகக் 'குமரன்' முதலான பத்திரிகைகளைத் துணைக்கொண்டு நல்ல முறையில் நடத்தினர். பொதுமக்கட்குக் கருத்து விளங்கினால் போதும் என்று மொழி மரபையும் நலத்தையும் பொருட்படுத்தாமல், பத்திரிகைகள் வெளி வந்த காலத்து, மரபு பிறழாமல் இலக்கிய இன்பமும் அமைய நல்ல தமிழ் நடையில் பத்திரிகை நடத்தி வந்த பெருமை இவர்க்கு உண்டு. தமிழ் நாட்டின் பற்பல கழகங்களில் தலைவராகவும், சொற்பொழிவாளராகவும் கலந்து தொண்டாற்றினர். எழுத்திலும் பேச்சிலும் தாம் எண்ணிய எண்ணங்களைப் பிறர் எளிதாகவும், விளக்கமாகவும் அறிந்துகொள்ளும்படி செய்யும் திறமை இவர்பால் நன்கு அமைந்திருந்தது. இத்துறையில் இளைஞர் பலர்க்கு இவர் வழிகாட்டியாக உள்ளார். சமய நெறிக்கண்ணே புறம்பான சடங்கு முதலியவற்றில் வெறுப்பு உடையவரேயன்றி, மெய்ப் பொருளாய கடவுளுண்மையில் பற்றுடையவர். இக்கொள்கையைத் தம் பேச்சிலும் எழுத்திலும் அவ்வப்போது புலப்படுத்தியிருக்கிறார். இவர் வாழ்நாளில் சிறு பொழுது முதலே மேற்

கூறிய துறைகளில் தமிழகத்துக்குத் தொண்டு செய்துவந்த அநுபவத்தின் பயனாக, முடிவில் சிறந்த தமிழ் இலக்கியத் துறையிற் புகுந்து சுவை நலம் அறிந்து மொழித் தொண்டு செய்து வருவது பாராட்டத் தக்கது. கல்வியாளர்கள் உலகியல் உணர்ச்சி நிரம்பப் பெற்றாலன்றி அவர் செய்யும் கலைத்தொண்டில் அநுபவ உண்மைகள் தோன்றா. அவ்வுண்மைகள் புலப்படும்படி இலக்கியப் பணி செய்தற்கு இவர் தகுதியுடையவர் என்பதை இவர் வரலாற்றால் அறியலாம்.

இலக்கியப் பணி செய்யத் தொடங்கிய திரு. முருகப்பா அவர்கள் தமிழ் நூல்கள் பலவற்றையும் ஆராய்ந்து முடிவில் சுவை பழுத்த தமிழ்க் காப்பியமாகிய கம்ப ராமாயணத்தை ஊன்றிப் படித்து அதன்கண் உள்ள நயங்களைத் தமிழ் மக்கள் அறிந்து இன்புறும் வண்ணம் தொகுத்து உரையெழுதி வருவது மகிழ்ச்சிக்கு உரியது. முதல் தொகுப்பாகப் பாலகாண்டம் வெளிவருகின்றது. முழுப் பால காண்டச் செய்யுள் சற்றேறக்குறைய 1400. கதாநாயகனைப் பற்றிய செய்திகளும் கிளைக் கதைகளாக அமைந்தனவும் பலவாதலின் அவற்றிற் கேற்பச் செய்யுள் எண்ணிக்கை அவ்வளவாயின. இவற்றுள், இத் தொகுப்பில் கொள்ளப்பட்டன 402 செய்யுட்கள். அதற்குக் காரணம் கிளைக் கதைகளைப்பற்றிய செய்திகளைக் குறைத்துக் கொண்டதாகும். முக்கியமான வரலாற்று மாந்தர் நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து அறிந்து கொள்வதற்கு இத்தொகுப்பு உறுதுணையாகும். பாடல்களைத் தொகுத்து வெளிப்படுத்தல் மாத்திரம் கற்பார்க்குச் சிறந்த பயன் விளையாது. அது கருதி, நல்ல பயன் விளையும்படியும் தொகுப்பு முயற்சி நிலைபெறும்படியும் தொகுத்த பாடல் களுக்கு உரையெழுதியும் நயங்களைப் புலப்படுத்தியும்

பழைய இலக்கியங்களிலிருந்து மேற்கோள்கள் எடுத்துக் காட்டியும் முடித்திருப்பது சிறந்த முறையாகும். ஆசிரியர் தகுதியும், தொகுப்பின் ஒழுங்கும் இவ்வாருக, இனி உரையின் சிறப்பியல்புகளை ஒருவாறு காட்டுவேன்.

1. சொற் பொருள் :—திரு. சொ. முரு. அவர்கள் பல சொற்களுக்குத் தெளிவான பொருளை வரையறுத்து எழுதியிருக்கிருர்கள். "பித்தர் – அறிவு திரிந்தோர். பேதையர்– அறிவு வளராதவர். பத்தர் - அறிவு முதிர்ந்து அன்பின் வயப்பட்டு நிற்பவர்" (3). கூற்றம் - உயிரை இடையிற் பிரிக்கும் நிகழ்ச்சி (19). கூச்சம்-உடலில் ஏற்படும் நடுக்கம் (103). நெரிதல்-சினமும் வெறுப்பும் கொண்டவர் கண்ணை ஒடுக்கி விழித்துப் பார்க்கும்போது ஏற்படுகிற நெற்றிச் சுருக்கம் (273).

2. பொருள் நயம் :—கம்பர்தம் காப்பியம் நிகரற்ற சுவை யூற்ருகும். சொல்லாலும் அடையாலும் இலக்கணத்தாலும் கருத்தாலும் தோன்றக் கூடிய நயங்கள் பலவாகும். 'ஆயர் மங்கையர் அங்கை வருந்துவார்' (15) என்பதற்கு, "பயனைவிட முயற்சியின் அருமை அற்புதமாக விளக்கப் பட்டிருக்கின்றது" என்றும், 'கரிய செம்மல் ஒருவனைத் தந்திடுதி' (57) என்ற இடத்தில் "முனிவர் தயரதனைத் தம்மினும் உயர்ந்தோனுகக் கருதி 'ஈ' எனவும் கூருது, இழிந்தோனுகக் கருதி 'கொடு' எனவும் கூருது, தம்மோடு சமமாகக் கொண்டு 'தா' எனக் கூறுவது நோக்கத் தக்கது" என்றும், 'உண்டபின் கலவிப் போரில்' (158), என்பதற்கு, "கலவி நிகழ்ச்சியில் யார் வெற்றி பெறுபவர் என்று போட்டியிடுவது போல் ஊக்கங்கொள்வதால் அந் நிகழ்ச்சி 'போர்' என்று கூறப்பட்டது" என்றும், "பருத்த உடலுடையார் இதற்கு (நாட்டியத்துக்கு)த் தகுதியற்றவர் என்பதை விளக்க 'ஐய நுண் இடையார்' (159) என்று

கூறப்பட்டது " என்றும் ஆராய்ந்து இன்புற எழுதியிருக்கிருர்கள். ' இயைந்த செய்க ' (64) ' சிவந்து காட்டிற்று ' (124) ' தள்ளரிய பெருநீதி ' (213) ' மாயவிற்கு ' (221) ' கால் வலிது ' (235) ' நெடுந் தடங்கண் ' (252) ' சொல்லென ' (253) ' வினையறு துறக்க நாடு ' (308) எனவரும் பகுதியெல்லாம் முருகப்பா அவர்களின் கூர்த்த மதிக்குச் சான்ருகின்றன.

3. உரை நுட்பம் :—இதுவரை சொல்லி வந்த உரைகள் பொருத்தமில்லை என்று கண்ட இடங்களுக்குப் புத்துரை தந்து விளக்கியுள்ளனர் ஆசிரியர். ' இடையூற்றுக்கு இடையூருய் யான் காப்பென் ' (59) ' கண்ணினைக் காக்கின்ற இமையிற் காத்தனர் ' (126) 'வள்ளல் மணத்தை மகிழ்ந்தனன் ' (237) என்றவற்றின் உரைகளைக் காண்க. கற்பவர்க்கு இவை இவை முரண்களாகப்படும் என உட்கொண்டு ' புரந்தரனும் ' (59) ' உயிர்க்கு உயிராய் ' (207) ' நாண் இனிது ஏற்றினன் ' (256) என்ற பகுதிகளுக்கு முரணற விளக்கஞ் செய்திருப்பது போற்றத் தகும். ' வருந்தி வந்தவர்க்கு ' (17) ' செங்கனிவாய்' (212) என்னும் இடங்களில் புதிய பொருள்கள் எழுதப்பட்டுள.

4. காவிய அமைப்பு :—பாத்திரங்களின் இயல்புகளையும், மன வளர்ச்சிகளையும் காப்பியப் போக்கினையும் உரிய இடங்கள் தோறும் காட்டிச் செல்லும் இவ்வுரையொழுங்கு சுவையுடையதாக இருக்கின்றது. ' களிப்பின் உச்சத்தில் எதிர்மறையான நிகழ்ச்சி உருவாகப் பார்க்கின்றது ' (47) ' இராமனைப்பற்றி நன்குணர்ந்த கோசிக முனிவர் இனிக் காதல் உணர்ச்சி அரும்பும்படி தங் கூற்றை அமைத்துச் செல்வதைக் காணலாம். கவிஞர் பெருமானும் அந்த வகையில் தம் கவிகளைத் திருப்பி நடத்துதலையும் காணலாம் ' (145) ' இராமனின் இளம் பருவ வாழ்க்கை

இப்படிப் பண்பட்டு வருகின்றது' (154) 'இதுவரை பால் போன்று இருந்த சீதையின் குழந்தை மனம் திரிவுபட்டு உலகியலில் திரும்பி விட்டது' (173) இனைய உரைவள மெல்லாம் முருகப்பா அவர்களின் ஆழ்ந்த இராமாயணப் பயிற்சியை நமக்குக் காட்டுகின்றன.

5. பாட பேதம் :—பழம் பெரும் புலவர்கள் பாட பேதங்களோடு தம் செய்யுட்களை ஆக்கியிருக்க மாட்டார்கள். பாடபேதத்தோடு அமைத்திருப்பார்களாயின், அவ் விடங்களில் அக்கவிகள் துணிந்த பொருளைப் பிறர் அறிந்து கொள்ள இயலாது. நூல் தோன்றிய பின்னர், அதனைப் பயில்வாரும் கேட்பாரும் படியெடுப்பாரும் விளங்கிக் கொள்ள மாட்டாமையால் செய்த திருத்தங்களே பாட பேதங்கள் எனப்படும். இந்நிலைக்குச் சான்ருக இன்றும் சிலரைக் காண்கின்றேன். தமிழ்த்துறையறிவு தெளிவின்மையால், முறையற்ற இத்திருத்தங்களாகிய குற்றங்களைச் செய்து வருகின்றவர், வேறு பல உலகியல் சார்பு பற்றிப் புலமைப் புகழ் பெற்று வருதல் வியப்பைத் தருகின்றது. அறியாமையால் தமிழ் வரம்பு அழிப்பாரைப் போற்ருது இனியேனும் தமிழ்நாடு உய்வதாக.

திரு. முருகப்பா அவர்கள் இராமாயண ஏடுகளையும் நூற் பிரதிகளையும் ஆராய்ந்து தேர்ந்து ஏற்ற பாடங்களைத் தழுவியிருக்கிருர்கள். புதுவதாக ஒரு பாடம் படைத்துக் கொண்டு வரம்பு அழிக்கவில்லை என்பது அனைவரும் பாராட்டுதற்குரியது. 'கற்பக நாட்டு அணி நகரும்' (54) 'வெள்ளை மனத்தவன்' (237) என்ற பாடங்கள் பொருந்தாமையைக் காரணத்தோடு காட்டியிருப்பது ஏற்றுக் கொள்ளத் தக்கதாகும்.

திரு. முருகப்பா அவர்கள் பொதுமக்கட்கும், புலவர் கட்கும் அளித்த கலைக்கொடையாகிய இராம காதைத்

தொகுப்புக்கு முகவுரை எழுதும்படி என் தளர்ச்சி நிலை தெரிந்தும் என்னை வேண்டினர். பல காலம் பழகிய நண்பர் ஆதலாலும், அவர் மேற்கொண்ட தொண்டு எனக்கு உவந்த தமிழ் இலக்கியத்துறை யாதலாலும் அவர் வேண்டுகோளை மனமுவந்து ஏற்றுக்கொள்ளலானேன். அதற்காக என் நன்றியறிவை அவர்க்குப் புலப்படுத்திக் கொள்கின்றேன். இப்பால காண்டத் தொகுப்புப் போல இராம காதையின் ஏனைய காண்டங்களையும் தொகுத்து நல்லுரை யெழுதித் தமிழ் நிலத்தார்க்கு வழங்கும்படி, இவ்வாசிரியர்க்கு நோயற்ற நீண்ட வாழ்நாளும், தம் பணியில் தளராத ஊக்கமும் அருளுமாறு சொற்பொருள் வடிவினராகிய அம்மையப்பர் திருவருளை வேண்டி வாழ்த்துகின்றேன்.

மகிபாலன்பட்டி
விஜய புரட்டாசி உஎ
13-10-1953

மு. கதிரேசன்

திருவாங்கூர்ப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர்

எஸ். வையாபுரிப் பிள்ளை, பி. ஏ., பி. எல்., அவர்கள்

நல்கிய

அணிந்துரை

சென்ற முப்பது ஆண்டுகளாகக் கம்பராமாயணம் பற்றிப் பெருமுயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

மூல பாடத்தை நிர்ணயித்துச் சுத்தப்பதிப்பு வெளியிடும் முயற்சி அவற்றுள் ஒன்று. இது பலராலும் மேற்கொள்ளப்பட்டு முடிவெய்தாது நிற்கின்றது. தற்பொழுது அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தாரும், சென்னைக் கலாக்ஷேத்திர நிர்வாகிகளும் இம்முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். இது நன்கு முற்றுப்பெற வேண்டுமாயின், பல பிரதேசத்துப் பிரதிகளையும் தக்க முறையில் ஒப்பிடுதல் வேண்டும். மூலபாட நிர்ணயத்திற்குரிய நியமங்களை அடிகோலிக் கொள்ள வேண்டும். கம்பராமாயணத்தையும் பூர்வ இலக்கியங்களையும் நன்கு கற்றுணர்ந்த சிலரேனும் ஒரு கலைக்கூடத்தில் ஒன்று கூடியிருந்து ஆராய்தல் வேண்டும். ஆராய்ச்சியும் நெறிப்பட நிகழ்தல் வேண்டும். பதிப்பு முதலியன பற்றி மேல் நாட்டினர் கையாண்டுள்ள நெறிகளை நன்குணர்ந்தவர்களே இவ்வாராய்ச்சியில் தலையிடுதற்குரியர். ஆராய்ச்சி செய்வோரும் பொறுப்புணர்ச்சியோடு இவ்வேலையில் முனைதல் வேண்டும். முயற்சி மேன்மேலும் நிகழ நிகழ, புதுப் புது நியமங்களைக் கைக்கொள்ள வேண்டியதாயுமிருக்கும். இங்ஙனமாகப் பல ஆண்டுகள் ஒரே சிந்தனையாய் உழைத்து வந்தால்தான் இம்மூலபாட நிர்ணயப் பதிப்பு முற்றுப் பெறுவதாம். இதற்குரிய பொருட் செலவும், துணையாளருதவியும், கால அளவையும் எத்துணையாக

வேண்டப்படும் என்பதை நாமே ஊகித்துக் கொள்ளலாம். இம்முயற்சியில் நாம் போராடி வெற்றி கொள்ளுதல் அவசியமே. ஆனால், இடையூறுகளும் மிகப்பல. இவற்றுள் ஒரு சிலவற்றை நண்பர் சொ. முருகப்பா அவர்கள் 'கம்பர் காவியம்; அதன் நிலை விளக்கம்' என்ற நூலில் ஆராய்ந்துள்ளார்கள். அவர்களது முடிவு, இவ்வகை ஆராய்ச்சிப் பதிப்பு என்றேனும் வெளிவருமா என்ற மலைவுதான். வியாச பாரதப் பதிப்பிற்குப் பூனா நகரத்தில் செய்து வந்துள்ள முயற்சியை நோக்கினால், இம்மலைவிற்கு அவசியமில்லை என்பது காணலாம்.

அடுத்தபடியாக நாம் கருதக் கூடியது யாது? இப்போதுள்ள அச்சுப் பிரதிகளை எடுத்துக்கொண்டு, அவற்றோடு இரண்டொரு ஏட்டுப் பிரதிகளையும் உடன்வைத்து ஒப்புநோக்கிப் பிழைகளை நீக்கி, ஒருவாறு சுத்தஞ் செய்து ஒரு பதிப்பு வெளியிடுதலாகும். இது தமிழ் மக்கள் பெரும்பாலார்க்கு ஒருவாறு திருப்தி தரலாம். ஆனால், இடைச்செருகல் என்று மிகத் தெளிவாய் விளங்கும் பகுதிகளும் இதில் இடம் பெற்றுவிடும். எனினும் பிழை பொதிந்துள்ள தற்காலப் பதிப்புக்களைவிட இது கொள்ளத் தக்கதாதல் வெளிப்படை. இது போன்ற பதிப்புக்கூட இன்னும் வெளிவரவில்லை. பலர் பதிப்பித்ததாக வெளிவந்துள்ள பிரதிகளின் தலைப்புப் பக்கத்தில் 'பலதேசத்துமுள்ள பிரதிரூபங்களைப் பரிசோதித்துப் பிழையறப் பதிப்பித்தது' என்று காணப்படுகின்றதே யன்றி உண்மையில் அவ்வாறு பதிக்கப் பெறவில்லை. பிழைகள் மிகுதியாய்ப் பல்கியதுதான் இவ்வுழைப்பின் பயன்.

இதனை அடுத்துச் செய்யக் கூடிய முயற்சி இராமாயணச் சுருக்கம் பற்றியதாகும். என்னிடமுள்ள 'அவசர–ராமாயணம்' என்ற ஏட்டுப் பிரதி இந்நெறியைப் பின்பற்றியதே. இந்நெறியில் அச்சுப் பிரதி வெளிவந்தது 1878–ல் ஆம். 'இது வித்தியாசாலைகளின் உபயோகத்துக்

காகப் பிழையறப் பரிசோதிப்பித்துச் சென்னை ராஜதானிப் பாடசாலைப் புத்தக சங்கத்தாரது கருத்துக் கிணங்கப் படலக் கதைகளின் சுருக்கத்துடன் பதிப்பிக்கப் பட்டது.” பாலகாண்டத்தில் காணும் 1405 செய்யுட்களில் 1171 செய்யுட்கள் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளன. இச்சுருக்க நெறியைப் பின்பற்றித் தோன்றியது வ. வெ. சு. ஐயரவர் களது பதிப்பு.

சுருக்க நெறியிலே நாம் கையாளுதற்குரிய நியமங்கள் சிலவற்றை இங்கே ஞாபகப் படுத்திக் கொள்ளலாம்.

1. கதை தொடர்புற அமைதல்.
2. முக்கிய நிகழ்ச்சிகள் அனைத்தும் அவற்றுக்குரிய பூர் வாங்கத்துடன் காணப்படுதல்.
3. கதாபாத்திரங்களின் தனிச் சிறப்பு விளங்குதல்.
4. நூலின் அமைப்பு, பெருமை, இதிகாசம் அல்லது பெருங்காப்பியத்தின் சிறப்பியல்புகள் முதலியன நன்கு புலப்படுதல்.
5. சுவையுடைய கவிதைகள் அனைத்தும் உளவாதல்.

இவற்றையும் இவை போன்ற பிற நியமங்களையும் இயன்றவரை தழுவிச் சுருக்கம் அமைதல் நலமாகும். கம்ப ராமாயணம் பற்றிய அளவில் அது ஒரு பேரிதிகாசம் என்பதை நாம் மனங் கொள்ள வேண்டும். கிளைக்கதை கள் வருதல் இதிகாசத்துக்கோர் இலக்கணமாகும். எவ் வகையான கிளைக்கதைகளைச் சுருக்கத்தில் வைத்துக் கொள்ளல் வேண்டுமென்பது பற்றியும் கலையுணர்ச்சியோடு ஆராய்ந்து கொள்ளத்தக்கன கொள்ளப் படுதல் வேண்டும்.

இதிகாசத்தின் மற்றோரிலக்கணம் அதில் வரும் தலைமைக்கதை பரம்பரைக் கேள்வி வாயிலாகவும் பிறவா றுகவும் ஒரு நாட்டிலுள்ளார் அனைவர்க்கும் தெரிந்த தொன்று யிருக்கும். இராமகாதை அவ்வாறுள்ள தொன் றல்லவா? எனவே, சாதாரண ‘நாவல்’களில் அடுத்து

வரும் நிகழ்ச்சி யாது யாதென அறிவதற்கு அவாவி நிற்கும் விரைவு இதிகாசம் பற்றிய அளவில் தோன்றுவதில்லை. கதையைச் சாவகாசமாய்க் கவிஞன் கூறுவான். சில இடங்களில் விரைந்து செல்வான். சில இடங்களில் உளங் கூர்ந்து அனுபவித்து நிற்பான். சில இடங்களில் தவழ்ந்து சென்று அயற் காட்சிகளை மனக் கண்முன் நிறுத்தி நெகிழ்ந்து தோன்றுவான். கவிதை வளமும் கதை வளமும் நிரம்பிச் செல்லும்போது, கவிதையின் போக்கு நின்றுவிட்டதோ என்று கூட நாம் கருதிவிடுவோம். இவ்வாறெல்லாம் செல்லும் கதியைத்தான்,

"சான்றோர் கவியெனக் கிடந்த கோதாவரி"

எனக் கம்பன் உணர்த்தினன்.

கதை இங்ஙனம் செல்லுமுறையில் கம்பனது மேதா விலாசம் தோன்றவில்லை என்று எண்ணுதல் இயல்பு தானே! நூலின் விரிவும் மிக்க மலைவு உண்டுபண்ணு மல்லவா? எனவே, ஒரு சில அறிஞர்கள் ஒவ்வொரு பகுதியிலும் சுவையும் அழகும் உடையனவாகத் தாம் கருதும் செய்யுட்களைத் தெரிந்தெடுத்து, தொடர்பிற்கு வேண்டிக் கதைப் பொருளைத் தமது சொந்த வசன நடையில் அமைத்துப் பதிப்புக்கள் வெளியிடலாயினர். வெ. ப. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் வெளியிட்டுள்ள கம்பராமாயண இன் கவித்திரட்டு, ஆனந்த விகடனில் எனது நண்பர் பி. ஸ்ரீ. ஆச்சார்யா எழுதிவரும் சித்திர-ராமாயணம் முதலியன இந்நெறியைப் பின்பற்றி எழுந்தன. ஆனால், கம்பனது பேராற்றலின் பல அம்சங்கள் இவ்வகை உரையிடையிட்ட சுருக்கங்களில் காணப் படுதலில்லை. இதை யாவரும் எளிதில் உணரலாம்.

மேல் விவரித்த மூல நிர்ணயப்பதிப்பு, சுத்தப்பதிப்பு, சுருக்கப்பதிப்பு, உரையிடையிட்ட சுருக்கப்பதிப்பு என்பன எல்லாம் ஒரு புறம் இருக்க, வேறொரு பதிப்பு முயற்சி நமது

நாட்டில் நடைபெற்று வருகிறது. இம்முயற்சியை மேற்கொண்டவர்கள் எனது அருமை நண்பர் ரஸிகமணி டி. கே. சி. முதலியார் அவர்கள். திரு. முதலியாரவர்கள் கம்பனை ஆழ்ந்து கற்றவர்கள்; செய்யுளோசையை நுனித்தறிவதில் பெருந்திறல் வாய்ந்தவர்கள்; கவிதை யின்ப நுகர்ச்சியில் எப்பொழுதும் திளைத்து வாழ்பவர்கள்; ஆங்கில இலக்கிய அறிவு நன்கு பெற்றுள்ளவர்கள்; செய்யுட் சுவையைப் பகிர்ந்தளிப்பதிலும், 'கற்ற செலச் சொல்வதி' லும் பேராற்றல் படைத்தவர்கள்; நாணய பரிசோதகனைப் போல ஓசையின் தன்மைகொண்டே 'இது கம்பன் பாட்டு, இது கம்பன் பாட்டு அல்ல' என்று துணிதலில் பெருந் தெளிவுள்ளவர்கள். இவர்கள் தங்கள் இயற்கையான அறிவாற்றலாலும், கல்வித் திறத்தாலும், கலையுணர்ச்சியாலும் இப்பொழுதுள்ள இராமாயணப் பதிப்பென்னுங் குப்பையிலே மறைந்துகிடக்கும் நன்மணிகளைப் பொறுக்கியெடுத்துக் கோக்க முயன்று வருகின்றார்கள். இங்கிலீயில் இதனைத் 'தெரிவுப்பதிப்பு முயற்சி' என்றலே தக்கது. பாலகாண்டமும் அயோத்தியா காண்டமும் ஆரணியகாண்டமும் இப்பொழுது வெளி வந்துள்ளன. பாலகாண்டத்தில் இவர்கள் பொறுக்கியெடுத்துள்ளவை 167 கவிதைகளே. தற்காலப் பதிப்புக்களிலுள்ள செய்யுட்களில் எட்டில் ஏழு பங்கிற்குமேல் கம்பனது கவிதைகள் அல்லவென நீக்கப்பட்டுள்ளன. இப்பதிப்பில் தொடர்ச்சி யென்பது இருக்க முடியாது. பாலகாண்டக் கதை பற்றிக் கம்பன் பாடிய மற்றைப் பாடல்களெல்லாம் அழிவெய்தி விட்டன; இவற்றிற்குப் பதிலாக இப்போது காணப்படுவன அனைத்தும் இடைச் செருகல்கள்: என்பது திரு. முதலியாரவர்கள் கருத்து. இவ்வாறு கூறிய அளவில் இவர்களது முயற்சியை முற்றக் கூறியதாகாது. தெரிவுச் செய்யுட்களில் பல இவர்களது உயரிய கவிதை-லட்சியத்திற்கு ஒத்தொழுகவில்லை. இவற்றைச் செம்மையாக்கி, இவர்கள்

கருத்துப்படி கம்பன் பாடல்களாக அமைக்கும் பொறுப்பும் முதலியாரவர்களைச் சார்ந்து விட்டது. ஆகவே, அங்கங்கே திருத்தம் செய்ய வேண்டும் அவசியம் ஏற்பட்டது. இவர்கள் வெளியிட்டுள்ள பாலகாண்டப் பதிப்பு முதலியன இவ்வாறு திருத்தப் பட்டவையே. இவ்வகைப் பதிப்பினைத் 'தெரிவுத் திருத்தப் பதிப்பு' என்று நாம் கூறலாம். ஆனால், இவர்கள் ' உண்மை மூலபாடப் பதிப்பு ' என்பார்கள்.

திரு. டி. கே. சி. அவர்களது நூதன ஆராய்ச்சி நெறியிலே செல்லாது, பழைய நெறியொன்றிலே செல்வது அன்பர் திரு. சொ. முருகப்பா அவர்களது பாலகாண்டப் பதிப்பு. இவர்கள் நீண்டகாலமாகத் தமிழ சமுதாயத்திற்கும், தமிழுக்கும் தொண்டு புரிந்து வருபவர்கள்.

கம்பராமாயணப் பதிப்பு முயற்சியில் இப்போது ஈடுபட்டிருக்கிறார்கள். இக்காவியத்தின் நிலை எவ்வாறு உள்ளது என்பதை விளக்கிச் சில மாதங்கட்குமுன் ஒரு நூலும் எழுதி வெளியிட்டிருக்கிறார்கள். பதிப்பு முறைபற்றிச் சிந்தித்து முள்ளார்கள். எனவே, இவர்களது பதிப்பு முயற்சியில்பல சிறந்த அம்சங்கள் காணப்படுதல் இயல்பே.

முதலாவது, தலைமைக்கதைத் தொடர்பு இடைமுரியாமற் செல்லுகிறது. இதனால் தொடர்பு தெரிதற்குப் பதிப்பாளரது வசனப்பகுதி சிறிதும் வேண்டியதில்லை. பிற விஷயங்கள் எவ்வாறாயினும், கம்பன் இராமனது சரிதத்தை முற்ற எழுதியுள்ளான் என்பதில் சிறிதும் ஐயமில்லை. கதையின் தொடர்புக்குரிய செய்யுட்களெல்லாம் மறைந்துவிட்டன எனல் சம்பாவிதமன்று. ஆனால் இப்பதிப்பாளர் செய்ததுபோல் திருவவதாரப் படலக் கதையை நீக்கலாமா என்று சிலர் கேட்கலாம். இப்பகுதியில் கவிதை வளமில்லை ; கதையின் வளந் தான் உள்ளது. குலமுறை கிளத்து படலத்திலே அவதார வரலாறு மிக அற்புதமாகக் கூறப்பட்டுள்ளது. இப்படலம் இருக்க, திருவவதாரப் படலத்தை நீக்குதல் ஒரு வகையில் தக்கதே எனத் தோன்று

கிறது. கிளைக் கதைகளும் ஒதுக்கப்பட் டிருக்கின்றன. இவற்றிலும் கவிதைவளம் காணுதல் அரிது. பூக்கொய் படலம், உண்டாட்டுப்படலம் முதலியவற்றிலும் பல பகுதி கள் நீக்கப்பட்டுள்ளன. இவையும் வேறொரு காரணத் தால் நீக்கத்தக்கனவே. அழகுணர்ச்சியில் விரஸம் தோன் றச் சிறிதும் இடங்கொடுக்கலாகாது.

கதையிலுள்ள முக்கிய நிகழ்ச்சிகள் எதுவும் இப்பதிப் பில் விடப்படவில்லை. இது நன்றாகக் கவனிக்கத் தக்கது. இங்ஙனமே கதாபாத்திரங்களின் இயல்புகள் நன்கு விளங் கும் பகுதிகள் இப்பதிப்பில் இடம்பெற்றுள்ளன. உதா ரணமாக, தசரதன் தனது முதற்புதல்வனாகிய இராம னிடத்தில் வைத்திருக்கும் பிரேமாதிசயத்தைக் கூறலாம். இன்னுமொன்று, சுவையுடைய கவிதைகள் பெரும்பாலும் இப்பதிப்பில் தரப்பட்டுள்ளன. இவற்றை யெல்லாம் நோக்கும்போது, இப்பதிப்பு இராமாயணச் சுருக்கமேயாகு மெனத் தடையின்றிக் கூறலாம்.

பாலகாண்டத்தில், இப்பதிப்பிற்காணும் செய்யுட்களை மாத்திரந்தானா கம்பன் இயற்றினான் என்ற சர்ச்சை இங்கு அவசியமே இல்லை. முருகப்பா அவர்கள் ஏட்டுப் பிரதிகளை ஒப்புநோக்கி யிருக்கிறார்கள். எதன்பொருட்டு என்றால், ஏதேனும் ஒரு சிறந்த பாடத்தைத் தேர்ந்தெடுப்பதன் பொருட்டே. இவர்கள் தாமே கவிதைகளைத் திருத்திவிட வில்லை என்பதும் நாம் போற்றிக் கூறவேண்டும் அம்சங்க ளில் ஒன்றாகும்.

இப்பதிப்பில் இராமாயணத்தின் பெயர் “இராம காதை” எனக் கொடுக்கப்பட்டுள்ளது. கம்பன் இட்ட பெயர் எதுவாயிருப்பினும், இப்பெயர் சுருக்கமாகவும், விளக்கமாகவும், கம்பன் தன் நூலினுள் ஆண்டுள்ளதாக வும் (செய்யுள் 2) காண்கின்றது. இதனைப் பதிப்பாசிரியர் நூற்பெயராகக் கொடுத்தது பொருத்தமுடையதே.

இச்சுருக்கத்தைச் சந்தி பிரித்துப் பதிப்பித்திருக்கும் முறையும், பலரும் கற்று அனுபவிக்க வேண்டுமென்ற தனிப் பெருநோக்கத்துடன் இயற்றிய உரையும் சிறப்பாகக் கூறத்தக்க அம்சங்களாம். "கண்ணிணைக் காக்கின்ற இமையிற் காத்தனர்" (126) என்பதன் உரையில் 'இந்தப் பொருளுக்கெல்லாம் இடங்கிடையாது' என்று எழுதுகின்றார்கள். இந்த மனப்பான்மையே தற்கால உரைகாரர் மேற்கொள்ளத்தக்கது. அதிவியாக்கியானம் அதிவிருஷ்டியைப் போன்றது; இரண்டும் கேடுபயப்பனவே யாகும். கேட்போர் வியப்புக்கடலில் அமிழ்ந்து கரையேறுவண்ணம் இராமாயணப் பிரசங்கிகள் விரித்துச் சொல்லும் அதிவிநோத வியாக்கியானங்களெல்லாம் இலக்கியச் சுவை நுகர்ச்சியில் விஷமென்றே கருதத் தக்கது.

இங்ஙனமாகப் பலவகையிலும் இப்பதிப்புச் சிறந்து விளங்குகின்றது. இதனைக் காட்டிலும் மேம்பட்டு ஏனைக் காண்டங்களின் சுருக்கங்களும் பதிப்பிக்கப் பெற்று வெளிவருதலைத் தமிழுலகம் எதிர்பார்த்து நிற்கின்றது. இப்பதிப்பு முயற்சி முற்ற முடிதற்கு இறைவன் திருவருள் முன்னிற்க.

திருவிதாங்கூர்ப் பல்கலைக் கழகம்,
திருவனந்தபுரம், 22-11-53

எஸ். வையாபுரிப் பிள்ளை

முன்னுரை

கம்பர் இயற்றிய *இராம காதை தமிழில் ஒரு ஒப்பற்ற காவியம் என்பது உலகறிந்ததாகும். தமிழ் மக்களின் பண்பாட்டையும், தமிழ் இலக்கிய மரபையும் உணர்ந்த பெரும் புலவரான கம்பர் உயர்ந்ததொரு காவியத்தை ஆக்கி அளித்தனர். செய்யுள் நயத்துக்கும், சொல் வளத்துக்கும், கருத்தாழத்துக்கும், பாவ உணர்ச்சிக்கும் இந்நூலே இந்நூலுக்கு இணையென்று கூறுதல் மிகையன்று. எனவே மக்களிடை இது பரவியதுபோல வேறெந்தத் தமிழ் இலக்கியமும் பரவியதில்லை. இதன் சிதைவு நிலையே இதற்குச் சான்றாகும். பலதிறப்பட்டவரும் இதனைப் பயின்றதாலும், ஏற்றுக்கொள்ளத்தக்க கொள்கையானால் இதில் கூறப்பட்டிருக்க வேண்டும் என்று மக்கள் நம்பியதாலும் செருகு கவிகள் சேரவும் உண்மைக் கவிகள் சிதைவுபடவும் இடமாயிற்றென்று கருத வேண்டியிருக்கிறது.

ஒப்பற்ற உலக காவியம்

செருகு பாடல்கள் இந்நூலில் மலிந்துள்ளன என்பதை யாரும் மறுப்பதில்லை. ஆனால் செருகுபாடல் எது என்பதில்தான் புலவர்கள் கருத்து வேற்றுமை கொள்கின்றனர். பல நூற்றாண்டுகட்கு முன்பு தோன்றிய நூலில், பல காலத்தில் பல புலவர்களால் செருகப்பட்ட பாடல்களைத் துல்லிதமாகக் கண்டுபிடிப்பது எளிதான

---

*கம்பர் தம் நூலுக்கு 'இராம காதை' என்ற பெயரையே சூட்டினார். பின்னாளில் அது 'கம்ப ராமாயணம்' என்று வழங்குவதாயிற்று.

காரியமன்று. நிற்க, இன்று கம்ப ராமாயணத்திலுள்ள பத்தாயிரத்துக்கு மேற்பட்ட பாடல்களைப் படித்து முடிப்பதும் எளிதன்று. இது யாவரும் உணர்ந்தது. முழுதும் கம்பர் வாக்குத்தான் என்று நம்புபவர் கூடப் படிக்கும் பகுதிகள் சிலவே. இந்நிலையில் கம்பராமாயணத்தைச் சுருக்கித் திரட்டுவதுதான் பயன்தருமென்று கருதியவர் பலர். அங்ஙனம் பாலகாண்டத்தைத் திரட்டியவர்களின் பெயரும் பாடலின் தொகையும் வருமாறு:

திரு. வ. வெ. சு. ஐயர் அவர்கள்	545
,, வெ. ப. சுப்பிரமணிய முதலியார் அவர்கள்	198
,, சி. குமாரசாமி நாயுடு அன் சன்ஸ்	300
,, பி. ஸ்ரீ. ஆச்சாரியார் அவர்கள்	303
,, அ. செ. சுந்தரராஜன் அவர்கள்	164

இவற்றுள் திரு. வ. வெ. சு. ஐயர் அவர்கள் பதிப்பு ஒன்றுதான் பாடலில் கதைத் தொடர்புடையது. மற்றைய பதிப்புக்களில் கதைத் தொடர்பு இடையிடையே வசன நடையில் எழுதி இணைக்கப்பட்டிருக்கிறது. திரு. டி. கே. சிதம்பரநாத முதலியார் அவர்கள் பதிப்பித்த கம்ப ராமாயணப் பாலகாண்டம் 169 பாடல்களைக் கொண்டிருக்கிறது. அவைதாம் கம்பர் பாட்டுக்கள் என்று அவர்கள் கருதுவதால் அதனை மேலே காட்டப்பட்ட திரட்டு வரிசையில் சேர்க்கவில்லை. இதிலும் கதைத் தொடர்பு வசனநடையில்தான் எழுதி இணைக்கப்பட்டிருக்கிறது. காவியத்துக்குக் கதைத் தொடர்பு இன்றியமையாதது. ஆதலால் சில பாடல்கள் மட்டமாக இருப்பினும் கதைத் தொடர்பு கருதி என் பதிப்பில் நீக்கப்படாமல் இருக்கின்றன. இவற்றின் தரம் 'படிப்போர்க்கு எளி

பாடல் நேர்ந்த நெடுந்தனிநம்

தில் விளங்கிவிடும். பல உயர்ந்த பாடல்களுக்கு இடையே சில பாடல்கள் மட்டமாக இருப்பதால் தம்மை வெளிப் படுத்திக்கொள்ள அப் பாடல்களே முற்பட்டு நிற்கும். இந்த இராம காதைப் பாலகாண்டப் பதிப்பில் சிறந்த பாடல்கள் விட்டுப் போகாமலும், கதைத் தொடர்பு தடைப்படாமலும் 402 பாடல்கள் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளன.

இன்றுள்ள கம்பராமாயணப் பாடல்களில் ஏற்பட் டுள்ள பாட பேதங்கள் கணக்கில் அடங்கா. அவற்றைப் படிக்கும்போது அத்தனையையும்விட நல்லனவாகப் பல புதுப்பாடங்கள் நம் மனத்தில் தோன் றுவ துண்டு. இப்படி இருந்தால் நன்றாக இருக்குமே என்று தோன்றும்போது திருத்திவிடத்தான் கைநீளும். என்றாலும் ஒரு வரம்பு தேவை. பதிப்பிப்பவ ரெல்லாரும் திருத்திக்கொண்டே போவதென்றால் எங்கே போய் நிற்கும் என்றெழும் வினா வுக்கு விடை பயங்கரமானது. இப்போதிருக்கிற நிலையே படிப்பவரை முன்னும் பின்னும் தெரியவொட்டாமல் குழப்பிக்கொண் டிருக்கிறது. ஆதலால் சொந்தமாகப் பாடத்தைத் திருத்துவதில்லை யென்று முடிவுசெய்து கொண்டே நூலுள் நுழைந்திருக்கிறேன். உள்ள பாடங் களில் சிறந்தவை—பொருத்தமானவை என்று தோற்றிய பாடங்கள் கொள்ளப்பட்டுள்ளன.

பாட பேதங்கள்

உரையாவது நூலுக்கும் மக்களுக்கும் இடையில் போடப்படும் பாலம் போன்றதாகும். சிலபோது நூலுக்கு மேலே பாலம் போட்டவர்களும் உண்டு. படிப் பில் குறைந்துள்ள மக்கள், நூலின் பொருளை உணரமுடியாத நிலை ஏற்படு கிறது. அப்போது, பொருளை மக்கள் உணருதற்கு உதவி

உரை

செய்யக் கைக்கொள்ளும் முயற்சியே உரையாகும். நூலின் தன்மையையும் அதன் குறிக்கோளையும் பொருளையும் மக்கள் உணருதற்கு உதவி செய்வதே உரையாசிரியனின் கடமையாகும். தான் கற்ற வித்தைகளையெல்லாம் பூதக்கண்ணாடி வைத்துப் பெரிதாகக் காட்டி மிரட்டுவது நியாயமன்று. இதைப் பற்றி பாரதியார்,

"வேதத் திருவிழியாள்—அதில்
மிக்கபல் உரையெனும் கருமை இட்டாள்"

என்ற பாஞ்சாலி சபதத்தின் அடிகட்கு ஒரு குறிப்பு எழுதியிருக்கிறார்.

"ஞான நூல்களாகிய கண்ணில் பலவித வியாக்கியானங்கள் பாஷியங்கள் எனும் கரிய மையைப் பூசியவள். மை கண்ணுக்கு நல்லது; அழகுங்கூட. ஆனால் அளவுக்கு மிஞ்சிப் பூசினால் விகாரமாகத் தோன்றுவதுடன் கண்ணே போனாலும் போய்விடும்" என்பது அது.

அச்சு வசதியற்ற முன்னாளில் ஆசிரிய பரம்பரை வழியாகவே நூல் பயிலப்பட்டு வந்தது. அவர் வாய்வழியே நூற்கருத்துக்களைப் பொதுமக்கள் அறிந்தனரே யன்றி நேரான நூல் தொடர்பு பொதுமக்கட் கில்லை. ஆதலால் உரையாசிரியர் கற்றாரை நோக்கி உரை கண்டனர். கால மாறுபாட்டில் அம்முறை நீங்கிவிட்டது. இன்று மக்களே நேருக்கு நேராக நூலினைக் கற்கவேண்டிய நிலையில் இருக்கின்றனர். எனவே மக்களை நோக்கி இந்நாளில் நூலுக்கு உரை காண்பது நேர்மையாகும்.

இற்றைத் தமிழக மக்களில் இலக்கிய இலக்கணங் கற்று உரைகண்டு திளைக்கக் கூடியவர் தொகை மிகக் குறைவு. ஆழமாகக் கல்வி கற்போர் தொகை நாளுக்கு நாள் அருகி வருகிறது. எனவே உரை தேவை. தமிழ்

மக்களுள் படிப்பே இல்லாதவர் பலர். எழுதப் படிக்கத் தெரிந்தவர் சிலர். இந்த இரு குழுவினர்க்கு எந்த உரையும் பயன்படுதற் கில்லை. இதற்குமேல் ஒரு கூட்டம் இருக்கிறது. இவர்கள் ஓரளவு தமிழறி வுள்ளவர்கள். கேட்பதை உணரக் கூடியவர்கள். சொல்லப்படுகிற பொருளை வாங்கி அனுபவிக்கக் கூடிய ரசனைச்சுவை பெற்றவர்கள். இவர்களை நோக்கியே இவ்வுரை எழுதப் பட்டிருக்கிறது. கற்று வல்ல பண்டிதர்களை விட்டு விலகிப் போய்விடக் கூடாதென்பதையும் மறக்கவில்லை. இரு குழுவினரையும் இரு கைகளால் தழுவிச் செல்லவே இயன்றவரை முயன்றிருக்கிறேன்.

இந்நூலுக்கு உரை காண்பதில்,

1. சொற்களின் புணர்ச்சியைப் பிரித்துத் தனிப்படுத்திக் காட்டல்.
2. வேற்றுமைத் தொகை முதலிய தொகைகளை விரித்துக் காட்டல்.
3. சாதாரணமாக வழக்கில் இல்லாத அருஞ் சொற்களுக்குப் பொருளை விளக்கல்.
4. சொல்லிலும் பொருளிலும் தோன்றும் நயங்களை எடுத்துக் காட்டல்.

இவற்றை ஓரளவு விளக்கிப் படிப்போரை நூலில் ஈடுபடும்படி செய்தால் பின்னர் படிப்பவரின் தகுதிக் கேற்ப, நூலோடு பழகி யறிதல் எளிதாக இருக்கும் என்று கருதினேன்.

பாடல்களை வெளியிட்டு உரை விளங்காத இடங்களில் மழுப்பி விடுதல் இதில் கையாளப்படவில்லை. உரை தெரிந்தே பாடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. குழப்பமான பாடல்களையும், சிதைந்த பாடல்களையும் வைத்துக்

கொண்டு உரைகாணத் துணிந்து படிப்பவரை ஒரு நாளும் தெளிவுபெற வொட்டாமல் குழம்ப வைப்பது பெரும்பாவம் என்பது என் கருத்து. சொல்லிலோ பொருளிலோ குழம்பும்படியாக எந்தப் பாடலுக்கும் இடம் வைக்கவில்லை. கம்பர் பாடல்கள் எல்லாம் தெளிவுடையன என்பது என் எண்ணம். தான் சொல்ல நினைக்கிற பொருளைத் தெளிவுபடச் சொல்லும் வலியற்றவர் மகா கவி யன்று. சீரிய ஒழுக்கமும், உளநிகழ்ச்சிப் பேரறிவும், மனத்தெளிவும், உலகியலனுபவமும், உயிர்கள்பால் அன்பும், கடவுளுணர்வும், முன்னோர் மரபு பேணுங் குணமும் கொண்டவர் கவி. அவருக்கு எதையும் கவிதையில் தெளிவுபடுத்திக் காட்டும் வன்மை யுண்டு என்ற அடிப்படையிலேயே இந்நூலை அமைத்து உரைகாண முயன்றிருக்கிறேன். இவைகளுக்கு அப்பாற்பட்ட செய்யுள்களும் கதைகளும் கம்பருக்குப் புறம்பென்பது எனது முடிபாகும்.

கம்பரின் நூல் பெருஞ் சிறப்புடையதாக இருந்தும் இதற்கொரு நல்ல பதிப்பில்லை யென்ற ஏக்கம் எனக்கு ஒரு மாமாங்கத்துக்கு முன்பே ஏற்பட்டது. 1950-ல் காரைக்குடிக் கம்பர் விழாவை யொட்டி வெளியிடப் பட்ட கம்பன் கவிதை என்ற புத்தகத்தில் 'நல்ல பதிப்பு வரவேண்டும்' என்ற தலைப்புடன் ஒரு கட்டுரையை வெளியிட்டேன். அதில், "கம்பராமாயணத்தைத் தொட்டு வெளியிட முற்பட்டால் எதிர்ப்பு வரவே செய்யும். எதிர்ப்பதில் உரிமை ஏகபோகமாக நமக்கிருக்கிறது. ஆதலால், அதை நிறுத்திவைக்க வேண்டும்.

பதிப்பு

ஒரு நல்ல 'கமிட்டி'யை அமைக்கலாம். அதிலிருந்து புத்தகத்தைவெளியிடலாம்" என்று எழுதியிருந்தேன். அதன் பிறகு கம்பர் நூலின்

ஈடுபாட்டில் குறிப்பிடத்தக்க பெரியாரான ரசிகமணி டி. கே. சி. அவர்களுடைய பதிப்பு வெளிவந்தது. பின்னர் முழுப்பதிப்பு வெளியிடப் பலர் முயன்றார்கள்; முயன்று கொண்டும் இருக்கின்றனர். இவைகளைக் கூர்ந்து கவனித்து வந்த எனக்கு ஒன்று தெளிவாயிற்று. "ஒருவராகத்தான் திருந்திய முறையில் பதிப்பு வெளியிட இயலுமே யன்றி இருவர்கூட இணைந்து இந்நூலைப் பதிப்பிக்க முடியாது! முடியவே முடியாது" என்ற முடிவு ஏற்பட்டது. பல ஆண்டுகள் முயன்ற முயற்சியில் கண்ட உண்மைகளை ஓரளவு விளக்கி எழுதி, 'கம்பர் காவியம்; அதன் நிலைவிளக்கம்' என்ற பெயரில் ஒரு நூலை வெளியிட்டேன். அதில் கம்பருடைய அருமை நூல் சிதைந்துள்ள வகைகள், செருகுபாடல்கள், பாட பேதங்கள், நூற்பெயர், படலப்பெயர்கள் முதலிய யாவும் விளக்கிக்கூறப்பட்டுள்ளன. இப்பொழுதுமுதற்பகுதியாக இப்பாலகாண்டத்தை வெளியிடுகிறேன். தமிழிலக்கியத்தில் ஆர்வமுள்ளவர்கள், தங்கள் படிப்பு அனுபவங்கள் கொண்டு இந்நூலைப் படித்துப் பார்த்து, பாடல்தேர்வு, பாடபேதம், உரை ஆகியவற்றில் குறைவுபட் டிருக்கிறதென்று தோன்றினால் தெரிவிக்கலாம். அதைத் தலைவணங்கி ஏற்று ஆராய்வேன்.

பதிப்பிக்கும் முறையில் பல தொல்லைகள் உள்ளன. தமிழ்ப் பாடல்கள்-முக்கியமாகக் கம்பர் பாடல்கள்-ஓசை தாளம் பற்றி நடப்பன. பொருள் நயத்தையும் பாவ உணர்ச்சியையும் எடுத்துக்காட்டப் பாடலின் சந்தம், ஓசை அமைப்பு வெகுவாக உதவி புரிகின்றன. ஆனால் பொருள் விளங்குதற்குத் தடை ஏற்படுவதையும் அறிகிறோம். சந்திகளைப் பிரித்து அச்சிடுவதானால் ஓசை தடைப்படுகிறது. ஓசையை நோக்கிக் கடும் புணர்ப்புள்ள

சந்தியுடன் வெளியிடுவதானால் படிப்பவர்க்குப் பயங்கரத்தை யுண்டுபண்ணுகிறது. பல்லாண்டுகளாகப் பதிப்பிப்போர் இதை உணர்ந்துள்ளனர். குழப்பந்தான் மிச்சம். சந்தியைப் பிரித்துப் போடுவதே சரியெனத் தோன்றுகிறது. பாடலைப் பாடும்போது கண்டிப்பாகச் சேர்த்தே பாடுதல் வேண்டும். இதனை யெண்ணிப் பாடல்களை இருவகையாகவும் அமைத்துப் பதிப்பிக்க நினைத்ததுண்டு. ஆனால் புத்தகம் கனத்துப் போகுமென்று கருதி அம்முறை கையாளப்படவில்லை. பிரித்துப் பதிப்பிப்பதில் ஏற்படும் பெரிய இடையூறு குற்றியலுகரத்தைப் பற்றியதுதான். ஓசையை இடைமறித்து நிறுத்துவது குற்றியலுகரமே யாகும். திருவாசகத்தைப் பதிப்பித்த போப்பு துரை குற்றியலுகர எழுத்துக்குக் கீழே ஒரு புள்ளியை வைத்துக் காட்டினார். சிலர் பிரித்த குற்றியலுகர எழுத்தை அடைப்புக் குறியினுள் அடக்கினர். எப்படிச் செய்தாலும் அந்த ஒரு மாத்திரை வாயினுள் கிடந்து கரைவதாக இல்லை. ஆதலால் இந்நூலைப் படிப்பவர் குற்றியலுகரத்தின் புணர்ச்சி விதியைமட்டும் தெரிந்துகொள்ளல் இன்றியமையாதது. அப்படியானால் தான் இத்தொல்லை நீங்கும். எனவே, குற்றியலுகர இலக்கணத்தை எளிதாக உணரும்படி இந்நூலின் பிற்பகுதியில் ஒரு விளக்கம் சேர்க்கப்பட்டிருக்கிறது. அதனை முதலில் படித்துத் தெரிந்துகொண்டால் பாடல்களைப் படிப்பதில் இடர் ஏற்படாது.

இப்பதிப்புக்கு மூலாதாரமாக வுள்ள பாடல் தேர்வு செய்து முடித்த பிறகு, இப்பகுதியிலுள்ள கல்லூரிகள், உயர்நிலைப் பள்ளிகளிலுள்ள தமிழாசிரியர் பலருடனும் ஏனைத் தமிழறிஞர் பலருடனும் இருந்து பல மாதங்கள் விவாதித்து அவர்களுடைய கருத்துக்களையும் அறிந்து

பாடல்கள் உறுதி செய்யப்பட்டன. இதில் திரு. ராய. சொ. அவர்களின் உதவி பெரிது. மற்றையோரின் உதவியும் குறைந்ததன்று. அவ் வுதவிக்கு நானும் கடமைப்பட் டிருக்கிறேன்; தமிழகமும் கடமைப்பட் டிருக்கிறது. இவ் விராமகாதை மூவாயிரத்துச் சொச்சம் பாடல்களில் நிறைவுறுவதாகும்.

செருகு பாடல்களை நீக்கவேண்டுமென்று கருதி ஆய்ந்து பாடல்களை நீக்கியிருக்கிறேன். மிஞ்சியிருப்பது தாம் கம்பர் பாடல்கள் என்று கருதுவார் கருதுக. திரட்டி யெடுக்கப்பட்ட நல்ல பாடல்கள் இவை என்று கருதினும் கருதுக. இந்த இராம காதையைப் படித் துணர்ந்தால் கம்பர் காவியம் எப்படிப்பட்ட தென்ப தைத் தெள்ளத் தெளிய மாசுமறுவின்றி உணர முடியும். சிறந்த புலமையும் ஏற்படும். எஞ்சியுள்ள பாடல்களைப் படித்தறிவது ஒரு விளையாட்டைப் போல எளிதாகிவிடும்.

தேர்வு செய்யப்பட்டுள்ள இராம காதைப் பாடல் களைக் கொண்ட இதுவே கம்பர் நூலென்பது பொருந்தா தென்றும், கம்பராமாயணம் என்ற பெயரால் அச்சிடப் பட்டு இன்று உலவுகிற பாடல்கள் அனைத்தும் கம்பர் பாடியனவே என்றும் கருதுவோர் போருக்கு முற்பட வேண்டியதில்லை. அந்தப் பதிப்பு கடையில் கிடைக்கும். வாங்கிப் படிக்கலாம். பண்டைய நாளில் சமயவாதி களும் அரசர்களும் பிறரும் தங்கட்கு உடன்பாடில்லாத நூல்களையும் நூற்பகுதிகளையும் எரித்தும் ஆற்றில் போகவிட்டும் செய்தமாதிரி இப்போதொன்றும் நடை பெற்றுவிடவில்லை.

ஆனால் ஒன்று. செருகு கவிகளையும் போலிப் பாடபேதங்களையும் கம்பர் தலையில் சுமத்தி வைத்ததால்

கம்பருக்கும் தமிழுக்கும் தமிழ நன்மக்களுக்கும் பெரிய இழுக்கு உண்டாகி வளர்ந்து வந்திருக்கிறது. இனியும் தொடர்ந்து வரவேண்டா மென்பது என் கருத்து. இதுவே இந்நூலை வெளியிடத் தூண்டுகோலாயிற்று.

இப் பதிப்பைப் பாராட்டி, தமிழ்ப் புலவர்களின் மணிமுடியாக விளங்கும் மகாமகோபாத்தியாய முது பெரும் புலவர் பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் அவர்கள் முகவுரை நல்கியிருக்கிறார்கள். பலநாள் ஆராய்ந்து உரை எழுதிய இப்பதிப்புக்கு நன்மதிப்பு வழங்கத் தகுதியுடையார் பண்டிதமணி அவர்கள்தாம் என்று எண்ணினேன். என் விருப்பப்படி அவர்களுடைய தள்ளாத பருவத்தில், தளர்ந்த உடல்நிலையில் ஆர்வத்தோடு நல்கியிருக்கிறார்கள்.

தமிழகத்தில், கம்பராமாயணத்திலும் ஏனைத் தமிழ் நூல் பலவற்றிலும் திளைத்து, ஆராய்ச்சித் துறையில் தலைசிறந்து விளங்கும் திரு. எஸ். வையாபுரிப் பிள்ளை, பி. ஏ., பி. எல். அவர்கள் இந்தப் பாலகாண்டப் பதிப்பைப் படித்துப் பார்த்துத் தம் அபிப்பிராயத்தை அணிந்துரையாக வழங்கியிருக்கிறார்கள். அவர்களும் பண்டிதமணி யவர்களும் அணிந்துரையும் முகவுரையும் வழங்கியிருப்பதைப் பெரும் பாக்கியமாகக் கருதுகிறேன்.

அமராவதி புதூர்
விஜய கார்த்திகை ௧௫
30–11–1953

சோ. முருகப்பன்

கதைச் சுருக்கம்

கையடைப் படலம்

நீர்வளம் நிலவளம் முதலிய வளங்கள் குறைவறப் பெருகியுள்ள கோசல நாட்டின் தலைநகரான அழகிய அயோத்தியில், தேவரும் திகைப்புறும்படியான அரண் மனையில், ஒப்பற்ற மணி மண்டபத்தில் மன்னர் மன்னனை தயரதன் வீற்றிருந்து அரசுபுரிந்து வந்தான். அவ்வாறு அரசு புரிந்து வருகிற காலத்தில், ஒருநாள் கோசிகன் என்ற முனிவர், தயரதனிடம் வந்தனர். தயரதன் அவரை வரவேற்று முகமன் கூறி, “ தாம் எழுந்தருளியது எதன் பொருட்டோ ?” என்று வினவினான். வனத்தில் தாம் செய்யும் வேள்விக்கு அரக்கர் இடையூறு விளைப்ப தால் அவர்களை ஒழிக்க வேண்டுமென்றும், இராமனைத் தம்முடன் அனுப்ப வேண்டுமென்றும் விடை பகர்ந்தார். தயரதன் தவங்கிடந்து பெற்ற பிள்ளையை அதிலும் அரசுக் குரிய இராமனை அனுப்ப இசையவில்லை. தானே வந்து அரக்கர்களை அடக்குவதாகச் சொன்னான். முனிவருக்குக் கோபம் மூண்டுவிட்டது. இதைக் கண்ட வசிட்டர், முனி வருடன் இராமன் செல்வதால் நன்மையே ஏற்படுமென்று சொல்ல, தயரதன் இணங்கி இராமனை அழைத்து அவனு டன் வந்த இலக்குவனையும் சேர்த்துக் கோசிக முனிவருடன் அனுப்பிவிட்டான்.

தாடகைவதைப் படலம்

மூவரும் நகர்ப்புறத்தைக் கடந்து சென்றனர். மன் மதன் எரிந்த இடமென்று கூறப்படும் இடமான காமனாச் சிரமத்தில் அன்றிரவு தங்கினர். மறுநாள் புறப்பட்டுச்

செல்லும்பொழுது கொடிய பாலைநிலங் குறுக்கிட்டது. அதைக் கடக்கும்போது குழந்தைகள் வாடிப்போயின. அதைக் கண்ட முனிவர், அதை இனிதாகக் கடக்கும்படியான வித்தையை அவர்கட்குக் கற்றுக் கொடுத்தார். அதனைக் கடந்தனர். "இந்நிலம் எதனால் இப்படியாயிற்று ?" என்று முனிவரை இராமன் கேட்டான்.

"தாடகை என்ற பெயருடைய பொல்லாத அரக்கி இங்கே இருக்கிறாள். அவள் இங்கே வந்து தங்கி, அழகிய வயலும் வயல் சார்ந்த நிலமுமாக இருந்த இந்த வளமுள்ள பகுதியை இப்படியாக்கிவிட்டாள். இலங்கை அரசன் ஏவலால் இவள் இங்கே இருந்து உயிர்ப் பொருள்களை அழித்துக் கொண்டிருக்கிறாள்" என்று முனிவர் பதிலுரைத்தார்.

இப்படிப் பேசிக்கொண்டிருக்கிறபொழுதே அவள் பேரிரைச்சலுடனும் கோபத்தோடும் வானத்தில் தோன்றிவிட்டாள். இராமனைக் கொல்ல முற்பட்டுக் கையில் சூலத்தையும் எடுத்துவிட்டாள். ஆனால் "இவள் பெண்ணாக இருக்கிறாளே, இவளுடன் எதிர்ப்பது அறமல்லவே" என்று இராமன் நினைத்தான். முனிவர் அதனை அறிந்தவராய் "இவளைப் பெண் என்று நினையாதே! ஆண்களை விட மிக்க ஆண்மையுள்ளவள்" என்றார். இதற்குள் அவள் சூலத்தை வீசிவிட்டாள். இராமன் ஓர் அம்பினால் அந்தச் சூலத்தை நொறுக்கினான். அவள் கொடிய போரைத் தொடங்கிவிட்டாள். இராமனும் எதிர்த்து, அவளைக் கொன்று தீர்த்தான்.

வேள்விப் படலம்

அதனால் மகிழ்ச்சியடைந்த கோசிகர் உயர்ந்த படைக் கலங்களை இராமனுக்கு நல்கினர். பின்னர் வழிநடந்தனர். திருமால் யோகம் செய்திருந்த இடமென்று சொல்லப்படும் சோலையை அணுகினர். அங்கே நிகழ்ந்த நிகழ்ச்சி ஒன்றை முனிவர் பின்வருமாறு கூறினார்.

"மாவலி என்ற ஒரு அசுர மன்னன் வலிமையால் வானுலகு, மண்ணுலகு ஆகியவற்றைப் பற்றிக் கொண்டான். தன் வயப்பட்ட யாவற்றையும், வேள்வி செய்து அந்தணர்க்கு ஈவதென முடிவு செய்தான். இதையறிந்த தேவர்கள் திருமாலிடஞ் சென்று முறையிட்டனர். மாவலியை அழிக்க இணங்கிய திருமால், மிகக் குள்ளமானதொரு வடிவுள்ளவராக, காசிபன்—அதிதி என்பவர்க்கு மகவாகப் பிறந்தார். ஒருநாள் மாவலியின் முன் சென்றார். என்னுடைய காலால் மூன்றடி நிலம் வேண்டுமென்றார். மகிழ்ச்சியோடு தர மாவலி இசைந்தான். அவனுக்குக் குருவாகவும் மந்திரியாகவும் இருந்த வெள்ளி என்பவன், 'இவன் திருமாலாவன், குள்ளனாகிய பிராமணன் என்று ஏமாறாதே' என்று தடுத்தான். மாவலியோ கேட்கவில்லை. குள்ளனாகிய வாமனன் கையில் நீரை வார்த்துத் தானம் செய்தான். உடனே அந்தக் குள்ளன் வானளாவ வளர்ந்தான். ஓர் அடியால் நிலவுலகத்தையும் மற்றோரடியால் வானுலகத்தையும் அளந்தான். எஞ்சியுள்ள ஓரடிக்கு இடமெங்கே என்றான். மாவலி தன் தலையை முன் காட்டித் தாழ்ந்தான். குள்ளனான திருமால் பூவுலகையும் வானுலகையும் தேவரிடம் ஒப்புவித்துவிட்டுப் பாற்கடலை அடைந்தான்" என்று கோசிகர் கூறி, அங்கே இருந்து வேள்வியைத் தொடங்கினார்.

இராமனும் இலக்குவனும் அவ்வேள்வியைக் காவல் புரிந்தனர். அப்பொழுது வானத்தில் அரக்கர் திரண்டு ஆரவாரம் செய்தனர். அவர்களைக் கொல்லு முன்பு அவர்களுடைய உடலின் நிணமும் இரத்தமும் ஓமத்தீயில் விழாதிருக்கும் பொருட்டு அந்த வேள்விச் சாலையின்மேல், அம்புகளைக் கொண்டு கூடமாக்கினான். முனிவர்கள் அஞ்சி அலறிக் கொண்டு இராமனிடத்துச் சரண் புகுந்தனர். அவர்களுக்கு அடைக்கலமளித்துவிட்டு, வில்லைப் பூட்டி எய்து அரக்கர்களைக் கொன்றான். அப்பொழுது தாடகை

யின் மக்களுள் ஒருவன் இறந்தான். மற்ெறாருவன் கடலில் தூக்கி எறியப் பட்டான். தேவர்கள் பூமழை பொழிந்தார் கள். கோசிக முனிவர் மகிழ்வெய்தி, "உலகையே காக்கிற் திருமாலே நீ என்றால் இந்த வேள்வியைக் காத்தது ஒரு பெரிய செயலா?" என்று முகமன் கூறினார். அதைக் கேட்ட இராமன் "இனி நான் செய்யவேண்டிய பணி இன்னதெனப் பணித்தருள்க" என்று கேட்டான். அதற்கு, "நான் எதைச் சொன்னாலும் அதைச் செய்வது உனக்கு அரிதல்ல; இன்னும் பெரிய செயல்கள் பின்னாலே உள்ளன; இப்பொழுது மிதிலையில் அந்நாட்டு மன்னன் ஒரு வேள்வி செய்யப் போகிறான். அதைப் பார்க்கலாம்" என்று சொல்ல, மூவரும் புறப்பட்டனர்.

அகலிகைப் படலம்

வளம் மிகுந்த மிதிலை நாட்டை யடைந்து பல வளங் களையும் பார்த்துக்கொண்டே அந்நாட்டின் தலைநகரான மிதிலையின் புறமதிலை யடைந்தனர். அங்கே உள்ள ஓர் இடத்தில் கிடந்த கருங்கல்லில் இராமனின் கால் தூசி பட்டவுடன் அது ஒரு பெண் உருவங்கொண்டு நின்றது. முனிவர், "இராமா! மின்னலைப் போல உள்ளக் களிப் போடு நிற்கிற இவள், இந்திரனுக்கு ஆயிரம் கண் உண் டாகும்படி செய்த கோதம முனிவரின் மனைவியாவாள்" என்று கூறினார். "தாயைப் போன்ற இவளுக்கு இப்படிக் கல்லுரு ஏன் வந்தது?" என்று இராமன் கேட்டான்.

"முன்னொரு காலத்தில் இந்திரன் இந்த அகலிகை யினிடத்து ஆசை கொண்டு வஞ்சனையால் முனிவரை வெளியேற்றிவிட்டு, அந்த முனிவரைப் போல உருக் கொண்டு குடிசையினுட் புகுந்து அகலிகையோடு இன்பந் துய்த்தான். இடையில் முனிவர் வந்து செய்தியறிந்து, இந்திரன் உடல் முழுமையும் ஆயிரம் பெண்குறிகளாகச் சபித்தனர். அக்குற்றத்துக்குட்பட்ட இவளையும் கல்லு

ருவம் பெறும்படி சபித்தனர். இவள் 'இதற்கு முடிவு எப்பொழுது?' என்று கேட்க, இராமன் இவ்வழி வரும் போது அவனுடைய கால் துகள்படும்; அப்போது உண் மையான உருப் பெறுவாய்' என்று கூறினர். பிரமன் முதலிய தேவர்கள் வந்து வேண்ட இந்திரன் உடலில் ஏற் பட்ட ஆயிரங் குறிகளும் ஆயிரங் கண்களாகப் பிறருக்குத் தெரியும்படி முனிவர் சாப நீக்கம் கூறினர்" என்று கோசிகர் கூற, அதனை இராமன் உணர்ந்து "மாதவனின் அருள் ஏற்படும்படி வழிபாடு செய்! வருத்தப்பட வேண் டாம்! தாயே நீ போய்வா" என்று அகலிகைக்கு விடை கொடுத்தான். அவளும் இராமனது திருவடிகளை வணங்கி விட்டுச் சென்றாள்.

மிதிலைக்காட்சிப் படலம்

மிதிலை நகரின் மாடங்களில் பறந்து கொண்டிருக்கும் கொடிகள் இராமனை விரைந்துவா என்றழைப்பது போல ஆடிக்கொண்டிருந்தன. அழகிய சீதை இருக்கிற தாமரை மலரைப் போலப் பொலிவுடன் உள்ள மிதிலை நகரத்திற் புகுந்தனர். நகரத் தெருக்களின் வழியாக அங்கே இரு புறமும் நடைபெறும் பலவகையான காட்சிகளைப் பார்த்துக் கொண்டே சென்றனர்.

கன்னிமாடத்தின் மேல்தளத்தில் சீதை பேடும் சேவலு மான இரு அன்னங்கள் விளையாடுவதைப் பார்த்துக் கொண்டு நின்றாள். தெரு நெடுகச் செல்லும் இராமன், மேலே நின்ற சீதையைப் பார்த்தான். சீதையும் அதே நேரத்தில் இராமனைப் பார்த்தாள். பார்க்கும் போதே ஒருவர் பார்வை மற்றவர் கண்ணில் பட்டது. காதற் கடலில் முழுகிப் போயினர். இராமன் முனிவர்பின் போய்க்கொண்டிருக்கும்போதே இந்நிகழ்ச்சிநடைபெற்றது. சீதை அவனுடைய முன்னழகையே பார்த்து நின்றாள். தன்னைக் கடந்து அவன் சென்றதும் அவனுடைய பின்

னழகைப் பார்த்து நின்முள். அவன் சென்று மறைந்து விட்டான். சீதை இராமன் பிரிந்து சென்றதை யெண்ணி வருந்தினுள். இராமனை எப்படி யடைவது என்பதை எண்ணி ஏங்கினுள். ஆசைத்தீ அவளை வாட்டியது.

இராமன், தம்பியோடும் முனிவரோடும் சென்று சனக மன்னனைக் கண்டு, அவனளித்த மாளிகையை அடைந் தனன். முனிவரும் இலக்குவனும் உள்ளே சென்று படுத்துக் கொண்டனர். இராமன் மட்டும் தனியாக ஒரு புறத்தில் படுத்துக்கொண்டான். சீதையை எப்படி அடைவ தென்ற கவலை அவனை வாட்டியது. இரவு முழுதும் உறக்கம் வராமல் துன்பமுற்முன். அதிகாலையில் எழும் வழக்கமுள்ள அவன் ஞாயிறு தோன்றிய பின்னரே எழுந் தான். மூவரும் சென்று வேள்விச் சாலையை அடைந்தனர். வேள்வி முடிந்ததும் முனிவருடன் இராம இலக்குவரைத் தனி இடத்தில் அழைத்து வைத்துச் சனகன் முனிவருடன் உரையாடினுன். இவர்கள் யாவர் என்று முனிவரைக் கேட்டான். முனிவர் கூறத் தொடங்கினுர்.

குலமுறைகிளத்துப் படலம்

“மனு, பிருது, இக்குவாகு, சிபி, பகீரதன், அயன் போன்ற பல மன்னர் பிறந்து புகழுடைந்த சூரிய குலத்தில் பிறந்தவர்கள் இவர்கள். அயனுக்குப் புதல்வனுன தயரதனை உனக்குத் தெரியும். அவன் பிள்ளையில்லாமல் நெடுங்காலம் வருந்தினுன். உலகில் விரிந்துள்ள தீவினை செய்த தீவினையாலும், அறம் செய்த அறத்தினுலும் இந்தக் கரிய திருமேனியை யுடைய இராமனைக் கோசலை என்ற உத்தமி பெற்முள். நீதிக்கே உறைவிடமான பரதனைக் கேகய நாட்டு மன்னன் மகள் பெற்முள். மேரு மலையையும் கைலையங்கிரியையும் ஒத்த (இலக்குவன் சத்துருக்கன் என்ற) இருவரையும் தயரதனின் மூன்முவது மனைவியான சுமித் திரை பெற்றெடுத்தாள். நால்வரும் வில்வித்தையில்

தேர்ச்சி பெற்றார்கள். இவர்கள் இவ்வண்ணம் வளர்ந்து வருகிறபோது, என்னுடைய வேள்விக்கு இடையூறு செய்து வந்த அரக்கர்களைக் கொல்ல எண்ணி இந்த இராம இலக்குவரான இருவரையும் அழைத்துச் சென்றேன். வழியிலே கொடிய தாடகையே முதலாவதாக முற்பட்டாள். இதோ இருக்கிறானே இராமன்! இவனுடைய நீண்டு உயர்ந்திருக்கிற கைகளை நீயே பார்! கொல்லன் உலை யிலிருந்து நெருப்பு, சீறி வருவதைப் போன்ற கொடிய கண்ணையுடைய தாடகையின் மேல் ஒரே ஒரு அம்பைத் தான் எய்தான். அது அவளுடைய மார்பைத் துளைத்து, மலையைத் துளைத்து, மரங்களைத் துளைத்து, மண்ணையும் துளைத்துச் சென்றது. பின்னே வந்த அரக்கரின் தலை மலை யாகக் குவிந்ததற்குக் கணக்கில்லை. இன்னுமொரு அம்பை விட்டான். அரக்கியின் ஒருமகன் வானுலகம் சென்றான். மற்றையவன் போன இடம் தெரியவில்லை. தொல்லை ஒழிந்தது. கவலையற்று வேள்வியை முடித்தேன். என் னுடைய மகிழ்ச்சி காரணமாக, வலிமை மிக்க படைக்கலங் கள் பலவற்றைக் கொடுத்தேன். கொடுக்கப்பட்ட அவை இவன் கையிலிருந்து செய்யும் செயலைக் கண்டு நானே திகைக்கும்படி யிருக்கிறது. அப்படி இவன் அவற்றைக் கையாளுகிறான். இவனுடைய காலின் தூசி பட்டதனால் கல்லாகக் கிடந்த அகலிகை முன்னைய உருவை அடைந் தாள். என்னுடைய உயிரைக் காட்டிலும் மிகுந்த அன்பு இவனிடம் எனக்கு ஏற்பட்டிருக்கிறது" என்று கோசிகர் கூறினார்.

கார்முகப் படலம்

"நான் சொல்ல என்ன இருக்கிறது. இந்த மாய வில்லை வளைப்பவற்குப் பெண்ணை அளிப்பதாகச் சொல்லி நானடைந்த தோல்வியை நினைத்தால் நெஞ்சம் நடுங்கு கிறது. இவன் நாணேற்றுவானானால் சீதையும் தவமுடை

யவள். என்னையும் துன்பக் கடலிலிருந்து கரையேற்றிய தாகும்" என்று சனகன் கூறி அங்கு நின்றவரை நோக்கி, 'வில்லைக் கொண்டு வருக' என்றனன். நால்வர் ஓடினர். வில் இருக்கிற இடத்தை அடைந்தனர். யானையைப்போன்ற உடலையும், கல்லைப்போன்ற தோளையும், பேராற்றலையும் உடைய பலர் வில்லைத் தூக்கி வந்தனர். ஒரே படித்தாகக் கொண்டுவர முடியவில்லை யாதலால் இடையிடையே ஆயக் காலைக் கொடுத்துத் தாங்கித் தோளை ஆற்றிக்கொண்டனர். வில் புறப்பட்டு வருவதை யறிந்த நகர மக்கள் யாவரும் வில்லைத் தொடர்ந்து வந்து கூடிவிட்டனர். வந்தவர் வில்லைக் கண்டு வியந்தனர். இதை யார் வளைக்கப் போகிறார்கள் என்று அங்குள்ள அரசர்கள் திகைத்தார்கள். இந்த மாய வில்லையும், இராமனையும் பார்த்துத் தன் மகளை யெண்ணி வருந்துகிற சனகனின் மனக்கலக்கத்தை அறிந்து சதானந்தர் (மிதிலையின் அரச குரு) பின் வருமாறு கூறினார்.

"வேள்வியின் பொருட்டு அரசனை முற்கொண்டு நிலத்தை உழுதோம். உழுமுகத்தில் நிலமகளின் உண்மை உருவம் வெளிப்பட்டாற் போலச் சீதை தோன்றினாள். பாற்கடலில் அமிழ்தத்தோடு தோன்றிய பூமகளும் நாணும் படியான அழகுடன் அவள் விளங்கினாள். அவளுடைய நற்குணங்களைப் பற்றிக் கூறுவது முடியக் கூடியதன்று. அழகு, தவம் செய்து இவளை வந்தடைந்திருக்கிறது. கங்கை யாறு தோன்றிய பிறகு எவ்வாறு மற்றைய ஆறுகளின் பெருமை அடங்கிப் போயிற்றோ அவ்வாறு இந்தச் சீதை தோன்றிய பிறகு எந்தப் பெண்ணுக்கும் பெருமை கூற முடியாமற் போய்விட்டது. சீதையின் அழகு, குணம் முதலியவற்றைக் கேள்விப்பட்டுப் பல அரச குமாரர்கள் வந்து மணம் பேச முற்பட்டனர். சிவனுடைய வில்லை யார் நாணேற்றுகிறானோ அவன் தான் சீதையின் மணத்திற் குரியவன் என்று கூறினோம். அன்று தொட்டு இன்று

வரை புதிதாக யாரும் வரவில்லை. கேட்டுச் சென்றவர்களும் திரும்பவில்லை. இனி எங்கே மணம் நடக்கப் போகிறதென்று சலித்துப் போனோம். இவன் நாணேற்றுவானாகில் மிகவும் நன்று. சீதையின் வாழ்வு பழுதாகாது.''

இவ்வாறு சதானந்தர் கூறினதைக் கேட்டுக்கொண்டிருந்த கோசிக முனிவர் தலையை அசைத்து இராமனைத் திரும்பிப் பார்த்தார். முனிவரின் நோக்கத்தை அறிந்து இராமன் வில்லைப் பார்த்தான். பெருமிதத்தோடு எழுந்தான். ''இவன் வளைத்தால்தான் உண்டு. இல்லாவிட்டால் சீதைக்கு வாழ்வே கிடையாது'' என்றும், ''இவனும் வளைக்க முடியாவிட்டால் சீதையோடு நாமும் நெருப்பில் குதிக்க வேண்டியதுதான்'' என்றும், ''இவனைக் கண்டதும் சீதையை மணம் செய்து கொடுக்காமல் வில்லைக் குறுக்கே வைத்து வளைக்கச் சொன்னது மூடத்தனம்'' என்றும் அங்குக் கூடியிருந்த பெண்கள் பேசிக்கொண்டிருக்க, முனிவர்கள் ஆசி கூற, தேவர்கள் மகிழ்ச்சியுற, இராமன், சிங்கமும் இடபமும் மலையும் நாணும்படி நடந்து வில்லினருகில் சென்றான். மேரு மலைபோல் கிடந்த வில்லை, சீதைக்குச் சூட்டும் மணமாலையை எடுப்பது போல எளிதாக எடுத்தான். யாவரும் விழித்த கண் விழித்தபடியே பார்த்துக்கொண்டிருந்தனர். ஆயினும் எடுத்ததைக் கண்டனர்; வில் ஒடிந்த ஓசையைக் கேட்டனர்; அவ்வளவுதான். இடையில் என்ன நடந்தது என்பது தெரியவில்லை. அவ்வளவு விரைவாக நடந்துவிட்டது. சனகனுக்கு நல்வினைப் பயன் வந்து கூடியதென்று தேவர் பூமாரி பொழிந்தனர்; முனிவர் வாழ்த்தினர்; நகர் முழுமையும் மகிழ்ச்சி நிறைந்தது. அந்நாளை மக்கள் ஒரு திருநாளாகக் கொண்டாடினர்.

இராமன் வில்லை வளைத்த கூட்டத்தில் நின்ற நீலமாலை என்ற சீதையின் தோழி ஓடினாள். சீதையிடம் சென்று, கல்வியிற் சிறந்தவனும், பெரிய சேனையை யுடையவனும்,

கொடையில் சிறந்தவனும், மன்னர் மன்னனும் ஆன தயரதனின் புதல்வன் ; மன்மதனைக் காட்டிலும் அழகிற் சிறந்தவன் ; மராமரம் போன்ற தோளையுடையவன் ; திருமாலைப் போன்றிருக்கிறான் ; அவன் பெயர் இராமன் ; முனிவருடனும் தம்பியுடனும் இங்கே வந்தான் ; சிவனுடைய வில்லை நாணேற்றிவிட்டான் ; பிறகு நாணியைக் காதளவு இழுக்கும்போது வில் முறிந்து போயிற்று'' என்று கூறினாள். சீதைக்கு ஒரே மகிழ்ச்சி. இருந்தாலும் "அன்று காணப்பட்டவனாக இருந்தால் சரி, அல்லன் என்றால் இறந்து போவேன்'' என்று மனத்திலே ஒரு முடிவு செய்துகொண்டாள்.

இங்கே கோசிக முனிவரை நோக்கி, அளவிலாத மகிழ்ச்சி யடைந்த சனகன் "உன் மகனின் திருமணத்தை உடனே முடித்துவிடலாமா ? அல்லது தயரதனையும் வரவழைக்க வேண்டுமா ?'' என்று கேட்டான். தயரதனையும் விரைவில் வரவழைத்து விடுதலே நல்ல தென்றார் முனிவர். தயரதனுக்கு மண ஓலையைக் கொடுத்துத் தூதுவரை அயோத்திக்குச் சனகன் அனுப்பினான்.

எழுச்சி, வரைக்காட்சி, உலாவியற் படலங்கள்

தூதுவர் அயோத்தியை அடைந்து தயரதனிடம் சொல்லி ஓலையையுங் கொடுத்தனர். படிக்கச் செய்து கேட்ட தயரதன் உள்ளம் பூரித்தான். சேனைகளுடனும், சிற்றரசர்களுடனும், மனைவியர் முதலிய சுற்றத்தாருடனும் மிதிலைக்குப் புறப்பட்டான். வழியில் இந்து சயிலம் என்னும் மலையில் தங்கி, மூன்றாம் நாள் மிதிலையை அடைந்தான். சனகனும் இராம இலக்குவரும் நகர மக்களும் எதிர் கொண்டனர். தயரதன் இராம இலக்குவரைத் தழுவி மகிழ்ந்தான். இராமனை முன்னால் அழைத்துச் செல்லும்படி கட்டளையிட்டான். இராமன் இரதத்தில் தம்பியர் புடை சூழ ஊர்வலமாகச் சென்று, கோசிகரும்

வதிட்டரும் இருந்த மண்டபத்தை அடைந்தான். தயரத னும் அங்கே வந்து சேர்ந்தான்.

கோலங்காண் படலம்

சீதையை அழைத்து வரும்படி சனகனிடம் வதிட்டர் சொன்னார். நிறைந்த அழகுடன் சீதை, மண்டபத்தை அடைந்தாள். தந்தையின் அருகிலிடப்பட்ட இருக்கையில் அமர்ந்தாள். மண்டபத்தில் இருந்தோர் ஓவியம் போல வியப்பில் மூழ்கி யிருந்தனர். இராமன் அளவிலாத மகிழ் வெய்தினான். இரு முனிவரும் தயரதனும் மகிழ்ச்சி அடைந் தனர். சீதை மெதுவாக இராமனைப் பார்த்துத் தனக் கிருந்த ஐயத்தை நீக்கிக் கொண்டாள். கோசிக முனிவரை நோக்கித் தயரதன், "திருமண நாள் என்று?" எனக் கேட்க, "நாளைக்கு நல்ல நாள்" என்று கோசிகர் பதி லுரைத்தார். யாவரும் எழுந்து சென்றனர்.

கடிமணப் படலம்

நாளைச் சீதைக்குத் திருமணம் நடைபெறும் என்று முரசறையப்பட்டது. நகர மக்கள் நகரை அழகு செய் தனர். வெளியிடங்களிலிருந்து மக்களும் மன்னரும் வந்து சூழ்ந்தனர். மனமகிழ்ச்சியோடு மணவிழா ஏற்பாடுகள் நடைபெற்றன.

உயர்ந்த அழகிய மணி மண்டபத்தில் திருமண ஏற்பா டாயிற்று. தயரதன் வந்து சேர்ந்தான். முனிவர்களும், அரசர்களும் வந்து நிறைந்தனர். சனகனும் தன் சுற்றத்தா ருடன் மண்டபத்தை அடைந்தான். சிற்றரசர்கள் சூழ இராமன் இரதத்தில் வந்திறங்கி, தம்பியர் பக்கத்தில் வர, மண்டபத்தை அடைந்து, முனிவர்களையும் தந்தையையும் வணங்கி அமர்ந்தான். பிறகு சீதை வந்தாள். இராமனும் சீதையும் திருமண இருக்கையில் அமர்ந்தனர். சனகன், என் மகள் சீதையுடன் திருமாலும் இலக்குமியும் போல

நீடு வாழ்க என்று இராமன் கைகளில் சீதையை ஈந்தான். எல்லோரும் வாழ்த்தினர். செய்ய வேண்டிய மற்றைச் சடங்குகளைச் செய்து முனிவர்களையும் தயரதனையும் வணங்கிவிட்டுச் சீதையின் கையைப் பிடித்துக்கொண்டு வீட்டினுள்ளே சென்றான் இராமன். தாயரை வணங்கினான். சீதையும் அவர்களை வணங்கினாள். அவர்கள் வாழ்த்தினர். ஏராளமான நன்கொடைகளைப் பலரும் சீதைக்கு வழங்கினர். சீதையும் இராமனும் அவர்களுக்கென்று விடப்பட்ட சிறந்த மாளிகையில் இனிது வாழ்ந்தனர்.

பரசிராமப் படலம்

இராமனும் சீதையும் இப்படி இன்புடன் வாழ்ந்து கொண்டிருக்கிறபோது கோசிக முனிவர் தவம் செய்யக் கருதிப் பிரிந்து இமயமலையை நோக்கிச் சென்றுவிட்டார். பின்னர் சிலநாள் சென்ற பிறகு, தயரத மன்னனும், சேனைகளும், மணமக்களும், மற்றையோரும் மிதிலை மக்களின் வாழ்த்துதலுடன் புறப்பட்டு, அயோத்தியை நோக்கிச் சென்றனர்.

செல்லும் வழியில், ஆயிரம் தோள்களையுடைய வலிய வீரனான கார்த்தவீரியாருச்சுனனை வீழ்த்திய பரசிராமன், கடுங்கோபத்துடன் இராமனை நோக்கி வந்தான். இராமன் இவன் யார் என்று தன் தந்தையை நோக்கிக் கேட்கும் போது, தயரதன் இராமனுக்குப் பதிலுரையாமல், பரசிராமனுடைய கால்களில் விழுந்து வணங்க, பரசிராமன் தயரதனைப் பொருட்படுத்தாமல் இராமனுக்கு முன்நின்று கூறலானான்.

“ இருபத்தொரு தலைமுறையாக இவ்வுலகத்திலுள்ள மன்னர் பரம்பரையை என்னுடைய மழுவாயுதத்தால் களைபறிக்கிற மாதிரி கொன்று தீர்த்தேன். அவர்களுடைய இரத்தவெள்ளத்தில் என்னுடைய தந்தைக்கு நீர்க்கடன் கழித்தேன். பிறகுதான் என்னுடைய கோபம் அடங்கிற்று.

அந்த அரசர் ஆண்ட உலகத்தை முனிவர்க்குக் கொடுத்தேன். தோன்றுகிற பகைவரே கிடையாது. எண்ண முடியாத தவங்களைச் செய்துகொண்டு என்னுடைய மலையில் இருந்தேன். அங்கே நீ வில்லை முறித்த ஓசை கேட்டது. உடனே சீற்றங்கொண்டு வந்தேன். உன்னோடு போர் செய்ய நிற்கிறேன். வலிமை இருந்தால் இந்த வில்லைப் பிடி என்று நாரணனுடைய வில்லை நீட்டினன். இதைக் கண்ட இராமன் புன்சிரிப்புத் தவழ்ந்த முகத்தினனாகி, அந்த வில்லைத் தா என்று வாங்கி நாணேற்றி அம்பு பூட்டி இழுத்துக்கொண்டு,

"இந்த நிலத்திலுள்ள அரசர்களையெல்லாம் கொன்று தீர்த்தாய். என்றாலும், நீ வேதங்களுக்கு விதைபோன்ற சமதக்கினி முனிவன் மகனாக இருக்கிறாய். தவிர தவம் செய்வோனாகவும் இருக்கிறாய். ஆகையினாலே உன்னைக் கொல்லுதல் கூடாது. ஆனால் தொடுத்த அம்பு வீணாகச் செல்வதும் இல்லை. இதற்கு இலக்கு யாதெனக் கூறு" என்று சொன்னான். அதற்குப் பதிலாக, "என்னிடத்தில் ஒன்றுங் கிடையாது. நான் செய்த தவந்தான் எஞ்சியுள்ளது. அதைக் கவர்ந்துகொள்" என்றான் பரசிராமன்.

இவ்விதம் பரசிராமன் வலியழிந்து சென்றபின் மயக்கமுற்றுக் கிடக்கிற தந்தையைத் தெளிவித்தான் இராமன். மயக்கம் தெளிந்த தயரதன் மகனைத் தழுவி அளவிலா மகிழ்ச்சி அடைந்தான். வருணன் என்பவனிடம் அந்த வில்லைக் கொடுத்துவிட்டுச் சேனையுடன் அயோத்திக்குப் போய்ச் சேர்ந்து இன்ப வாழ்வில் திளைத்திருந்தனர்.

ஒரு நாள் தயரத மன்னன், பரதனை நோக்கி, "உன்னுடைய பாட்டனாகிய கேகய நாட்டு மன்னன் உன்னைப் பார்க்கவேண்டுமென்ற ஆசை யுடையவனாக இருக்கிறான். ஆதலால் அங்கு சென்றுவா" என்று கூறினான். தந்தையின் ஏவலை மேற்கொண்டு, தனக்கு உயிராக விளங்கும் இராமனிடம் சென்று விழுந்து வணங்கி, விடைபெற்றுக்

கொண்டு, உயிரைப் பிரிந்த உடலைப்போலப் புறப்பட்டுக் கேகய நாட்டுக்குச் சென்றான். அவன் சென்ற பின்னர் தயரதன் குறைவில்லாமல் அந்தப் பெரிய அரசை இனிதாக நடத்திக்கொண்டிருக்கிறபோது தேவர் செய்த தவத்தின் பயனாக மேலே நடந்த நிகழ்ச்சிகளைக் கூற முற்படுகிறேன் என்று கூறிக் கவி அயோத்திக் காண்டத்தைத் தொடங்குகிறார்.

கதைப் பாத்திரங்கள்

1. தயரதன்

கோசலநாட்டு மன்னன். இராமன் முதலிய நால்வருக்கும் தந்தை. இவனுக்குப் பட்டத்து மனைவியவர் மூவர். வேறு அறுபதினாயிரம் மனைவியரும் உண்டு. இவன் அறுபதினாயிரம் ஆண்டுகள் அரசாண்டான்; ஆண்டுக்கு ஒருமனைவியராக மணந்தான். நெடு நாட்கள், மனைக்கு மங்கலமாகும் மக்கட்பேறு இன்றி வருந்தினான். பின்னர், நான்கு மக்கள் பிறந்தனர். அவர்களில் மூத்தவனாகிய இராமனுக்குப் பட்டங் கட்ட முயன்று, அது இயலாதபடியாலும், இராமன் வனம்புக நேர்ந்ததாலும் துயர் பொறுக்கமாட்டா மல் உயிர் துறந்தான். பத்துத் திசைகளிலும் தேர் செலுத்திப் போர்புரியும் திறனுடையோனாதலால் இவன் தயரதன் (தசரதன்) என அழைக்கப் பெற்றான்.

2. இராமன்

'இராமகாதை'யின் தலைவன். உலக மக்களின் நல்வாழ்வுக்குத் தடையாக உள்ள கொடியவர்களை ஒழித்து, உலகில் அறவாழ்வை நிலைநாட்டத் தோன்றியவன். கோசலை பெற்ற மகன்.

3. பரதன்

இராமனின் அடுத்த தம்பி. உயர்ந்த பண்புகளுக்கு உறைவிடமானவன். தமையனான இராம னிடத்துக் கரையற்ற பத்தி கொண்டவன். அவனுக்குரிய ஆட்சி

யைப் பறித்துத் தன் தாயாகிய கைகேயி தனக்குத் தந்த போது, அதை மறுத்து ஆட்சித் துறவு கடைப்பிடித்த அறவோன்.

4. இலக்குவன்

இராமனுக்கு இரண்டாவது தம்பி; பிரியாத் தோழன். சுமித்திரை பெற்ற மகன். இராமனைக் காத்துத் தொண்டு புரிவதே தன் வாழ்வெனக் கொண்டு, அவனுக்காகத் தன் உடல், உயிர் அனைத்தையும் தியாகம் செய்யும் உள்ளம் படைத்த வள்ளல்.

5. சத்துருக்கன்

இராமனின் மூன்றுவது தம்பி. இராமனுக்கு இலக்குவன் எப்படியோ, அதுபோலப் பரதனுக்கு வாய்த்த பண்புமிக்க தோழன். 'இராமகாதை'யில் பேசாதே வந்து சென்று பெருமை கொண்ட தூயோன்.

6. கோசலை

தயரதனின் முதல் மனைவி. இராமனுக்குத் தாய். உயர்ந்த குணமுள்ளவள். கோசல நாட்டரசி யாகையால், கோசலை எனப் பெயர் பெற்றனள்.

7. கைகேயி

தயரதனின் இரண்டாவது மனைவி. பரதனுக்குத் தாய். பேரழகும் பெருந்தன்மையும் வாய்ந்தவள். அரசியல் அறிவில் தலைசிறந்தவள்; போர்த்தொழிலி லும் வல்லவள். தயரதன் சம்பராசுரனோடு போர் புரியும்போது, தேர் செலுத்திக் காலத்தால் உதவி செய்து அவன் கருத்தில் இடம் பெற்றாள். இராம னிடத்தில் அளவற்ற அன்புடையவள். பின்னர், மந் தரை சூழ்ச்சியால் மனம் வேறுபட்டு, பரதனுக்குப்

பட்டம் சூட்டவும், இராமனைக் காட்டுக்கு அனுப்பவும் காரணமாக இருந்தவள். கேகய நாட்டு மன்னன் மகள், ஆகையால் கைக்கேயி எனப் பெயர் பெற்ருள்.

8. சுமித்திரை

தயரதனின் மூன்ருவது மனைவி. இலக்குவனை யும், சத்துருக்கனையும் பெற்றவள். உயர்ந்த குண முள்ளவள். கோசலைக்குத் தோழிபோல் நடப்பவள்.

9. சீதை

இராமன் மனைவி ; கதைத் தலைவி. சனகன் மக ளாதலால் சானகி எனப் பெயர் பெற்றவள்.

10. வதிட்டன்

தயரதனின் குலகுரு. அரசியல் துறையில் அக்கரைகொண்டு மிகுந்த உரிமை பெற்ற முனிவன்.

11. கோசிகன்

அரசனுக இருந்து, முனிவன் ஆனவன். பிரம்ம ரிஷியான வதிட்டனுடன் மீளா எதிர்ப்புக் காட்டிய வன். விசுவாமித்திரன் என்ற பெயருடையவன். நான் முகனுடன் போட்டியிட்டுப் புதியதோர் உலகையும், பொருள்களையும் படைத்தவன். இளம்பருவ இராமனை யும், இலக்குவனையும் வனத்திற்கு அழைத்துச்சென்று படைப்பயிற்சி கொடுத்து, தாடகையைக் கொல்வித்து, சீதையின் திருமணத்திற்கும் உறுதுணையாக இருந் தவன்.

12. தாடகை

இராவணனின் பாட்டி. விசுவாமித்திரனின் வேள்வியைக் காக்க இராமன் வருகையில், எதிர்ப்பட்டு இராமனுல் கொல்லப்பட்டவள்.

13. இராவணன்

இலங்கை மன்னன். பிரம்மாவின் பேரனுக்கு மகன். (பிரமன் மகன் புலத்தியன், அவன் மகன் விச்சிரவசு ; அவன் மகன் இராவணன். இராவணன் தாய் சுமாலி என்ற அரக்கனின் மகள். கைகசி.) வேதம் முதலிய நூல்களை நன்கு ஓதினவன். இசைப்பயிற்சியில் ஒப்பற்றவன். பெரிய வீரன். பெரிய பலசாலி. பூவுலகிலே யன்றி, மேலுலகிலும் எதிரில்லாதவாறு வெற்றி கண்டவன். இவனுடைய முக்கிய குணம் தன்மானம். தன் தாய்வழி முன்னோரின் வாழுமிடமாயிருந்த இலங்கையைக் கைப்பற்றி ஆண்ட குபேரனைத் துரத்திக் கைக்கொண்டவன். கயிலை மலையைத் தூக்கி எடுத்தவன். வீணை மீட்டிச் சிவனருள் பெற்று மீண்டவன். எட்டுத் திசையிலுள்ள யானைகளுடனும் போரிட்டு அதன் கொம்புகளை முறித்தவன். எண்ணற்ற வரம் பெற்றவன். மூன்றுகோடி ஆண்டு வயதுக் காலத்தை வரத்தாற் பெற்றவன்.

14. அகலிகை

கோதம முனிவரின் மனைவி. இந்திரனால் கற்பழிக்கப்பட்டுக் கல்லாகச் சபிக்கப்பட்டவள். இராமனின் கால் தூசிபட்டு, உயிர் பெற்றவள்.

15. சனகன்

மிதிலை நாட்டு மன்னன். சீதையைப் பெற்றவன். உண்மையுணர்ந்த ஞானி.

16. சதானந்தன்

மிதிலை நாட்டின் அரசகுரு. கோதம முனிவனின் மகன்.

17. நீலமாலை

சீதையின் தோழிப்பெண்.

18. பரசிராமன்

பிராமண முனிவன். சமதக்கினி முனிவனின் மகன். பரசு என்ற படைக்கலம் தாங்கியதால் பரசிராமன் எனப் பெயர் பெற்றான். அரச குலத்திற் கொண்ட வெறுப்பினால், பலநூறு மன்னர்களைக் கொன்று அந்த இரத்தத்தினால் தந்தைக்கு நீர்க்கடன் செய்தவன். மிதிலையில் இராமன் வில்லை முறித்தான் என்பதறிந்து, அவன்மீது பொறாமைப் பட்டு, எதிர்த்துத் தோல்வியுற்றவன்.

படலங்களின் அட்டவணை

கம்பர் அருளிய

இராம காதை

சிறப்புப் பாயிரம்

1 தராதலத்தின் உள்ள தமிழ்க்குற்றம் எல்லாம்
அராவும் அரமாயிற்று அன்றே—இராவணனை
அம்பினுல் வீழ்த்தான் அடிபணியும் ஆதித்தன்
கம்பநா டாள்வான் கவி.

இராவணனை அம்பெய்து கொன்றவனுகிய இராமபிரானின் திருவடிகளைப் பணிகின்றவரும், கம்பநாட்டை ஆள்பவருமாகிய கம்பரின் கவிகள், உலகத்தில் தமிழில் ஏற்பட்டிருக்கின்ற குற்றங்கள் யாவற்றையும் அராவித் திருத்திக்கொள்ளும்படி வாய்த்த அரமாக விளங்குகின்றன.

---

1. தராதலம் - நிலவுலகம். ஆதித்தன் - சூரியன்; சூரியனைப் போன்று புகழ்ஒளி பரப்பும் கம்பர். ஆதித்தன் என்பவரின் மகன் என்றும் கூறுவர். கம்பநாடு - கம்பர் பெயரிட்டப்பட்ட சிறு நாடு. ஆள்வான் - (அதை) ஆளுகின்ற கம்பர்.

(விளக்கம்) தமிழ்ப் புலவர்களிடம் கவி இயற்றுவதில் தோன்றியிருந்த குற்றங்களை எல்லாம் கம்பரின் இராம காதை தோன்றி ஒழுங்கு படுத்திவிட்டது. வார்ப்படத்தில் உருவாகிய தங்கப் பணியை அரங்கொண்டு அராவித் திருத்துவதுபோல, பிற புலவர்கள் தம் தமிழ்க் கவிகளைக் கம்பர் கவிகொண்டு சீர்செய்து கொள்வர். பாடலால் பாடலைச் செம்மை செய்தலென்பது வயிர ஊசியால் வயிரத்தை இழைப்பது போன்றது.

2 வாழ்வார் திருவெண்ணெய் நல்லூர்ச்
சடையப்பன் வாழ்த்து பெறத்
தாழ்வார் உயரப் புலவோர்
அகஇருள் தான்அகலப்
போழ்வார் கதிரின் உதித்நதெய்
வப்புலமைக் கம்பநாட்
டாழ்வார் பதத்தைச்சிந் திப்பவர்க்கு
யாதும் அரியதன்றே.

கம்பர் பாடிய இராம காதை ஒரு பெரு விளக்காக அமைந்தது. அதனல் சடையப்பரின் புகழ் விளங்கியது. அறிவிலே தாழ்ந்து கிடந்த மக்கள் அறிவு பெற்று விளங்கினர். கண்மூடிக் கவி பாடிய புலவர்கள் தெளிவடைந்து விளங்கினர். கம்பரை நம்பி அவர் நூலைப் படிப்பவர்க்கு எல்லா நலனும் எளிதிற் கிடைக்கும்.

---

2. வாழ்வுஆர்-வாழ்க்கைநலம் நிரம்பிய. போழ்வார் கதிரின்-(இருளைப்) பிளந்து நீண்ட ஒளியைப் பரப்புகின்ற சூரியனைப்போல. ஆழ்வார் - பக்திக் கடலில் திளைப்பவர். பதத்தை - திருஅடியை; சொல் என்றும் கூறலாம்.

3 நாரணன் விளையாட் டெல்லாம்
நாரத முனிவன் கூற
ஆரணக் கவிதை செய்தான்
அறிந்தவான் மீகி என்பான்
சீரணி சோழ நாட்டுத்
திருவழுந் தூருள் வாழ்வோன்
கார்அணி கொடையான் கம்பன்
தமிழினுற் கவிசெய் தானே.

திருமாலின் இராமாவதார நிகழ்ச்சிகளை நாரத முனிவர் சொல்லக் கேட்டு, வேதம் போன்ற கவிகளை வான்மீகர் இயற்றினர். சிறந்த சோழநாட்டில் உள்ள திருவழுந்தூரில் வாழ்கின்றவரும், மேகம்போலக் கொடுப்பவரும் ஆகிய கம்பர் தமிழிலே கவிகளை இயற்றினர்.

(வி - ம்) ஆரணக் கவிதை என்றதனல் வான்மீகி வடமொழியிற் செய்தார் என்பது பெறப்படுகிறது.

4 அம்பிலே சிலையை நாட்டி
அமரர்க்குஅன்று அமுதம் ஈந்த
தம்பிரான் என்னத் தானும்
தமிழிலே தாலை நாட்டிக்
கம்பநா டுடைய வள்ளல்
கவிச்சக்ர வர்த்தி பார்மேல்
நம்புபா மாலை யாலே
நரருக்கின்று அமுதம் ஈந்தான்.

---

3. நாரணன் - திருமால் ஆகிய இராமன். ஆரணம் கவிதை- வேதத்துக்கு நிகரான இராமாயணப் பாடல்களை. கார் அணி - மேகத்தை ஒத்த.

4. அம்பு - கடல்; பாற்கடல். சிலை - மலை; மந்திரமலை. தம்பிரான் - திருமால். தாலை - நாவை. கம்பநாடு உடைய வள்ளல்

பாற்கடலிலே மந்தரமலையை நிறுத்திக் கடைந்து தேவர்களுக்குத் திருமால் அமிழ்தம் எடுத்துக் கொடுத்தது போலக் கம்பர் என்ற வள்ளல், தமிழ்க் கடலிலே தன்னுடைய நாவை நிறுத்தி இராமகாதை என்னும் அமிழ்தத்தை மனித குலத்துக்குத் தந்தார்.

5 எண்ணிய சகாத்தம் எண்ணூற்
றேழின்மேற் சடையன் வாழ்வு
நண்ணிய வெண்ணெய் நல்லூர்
தன்னிலே கம்ப நாடன்
பண்ணிய இராம காதை
பங்குனி அத்த நாளிற்
கண்ணிய அரங்கின் முன்னே
கவிஅரங் கேற்றி னானே.

சாலிவாகன சகம் 807ல் (கி. பி. 885) சடையப்ப வள்ளல் வாழ்ந்திருந்த திருவெண்ணெய்நல்லூரிலே, கம்பர் தாம் பாடிய இராம காதையைச் சிறந்த புலவர் நிறைந்த அவையில் அரங்கேற்றினார்.

(வி - ம்) இராமகாதை பாடிய இடமும் அரங்கேற்றப் பட்ட இடமும் திருவெண்ணெய்நல்லூரே யாகும்.

கவிச் சக்ரவர்த்தி - கம்பநாட்டுக்குத் தலைவரும், வள்ளலாக வரையாது செல்வத்தையும் கவிகளையும் வழங்குபவரும், கவிஞர் களுக்குள்ளே சக்கரவர்த்தி போன்றவரும் ஆகிய கம்பர். நம்பு - விரும்புகிற. நரர் - மனிதர்.

5. எண்ணிய - கணக்கிடப்பட்ட. சகாத்தம் - சாலிவாகன சக ஆண்டு; இது கி. பி. 79லிருந்து தொடங்குவது. கண்ணிய அரங்கின் முன்னே - தகுதி வாய்ந்த அவையோர் முன்னிலையில். கவி அரங்கு - அரங்கேற்றும் அவை.

6 இம்பர் நாட்டிற் செல்வமெல்லாம்
எய்தி அரசாண்டு இருந்தாலும்
உம்பர் நாட்டிற் கற்பகக்கா
ஓங்கு நிழல் இருந்தாலும்
செம்பொன் மேரு அனையபுயத்
திறல்சேர் இராமன் திருக்கதையிற்
கம்ப நாடன் கவிதையிற்போற்
கற்றோர்க்கு இதயம் களியாதே.

இந்த உலகத்தில் செல்வம் என்ற எல்லாவற்றையும் குறைவறப் பெற்று முடிமன்னனாக வாழ்ந்தாலும் சரிதான்; வானுலகில் கற்பகத் தருவின் நிழலில் வீற்றிருந்து வாழ்ந்தாலும் சரிதான். கற்றவர்க்கு அந்த இன்பம் எல்லாம், கம்பர் பெருமான் பாடியிருக்கிற இராம காதையினால் ஏற்படும் இன்பத்திற்கு இணையாகா.

(வி - ம்) இராமனுடைய திருக்கதையை எத்தனையோ கவிஞர்கள் பாடியிருக்கிறார்கள்; அவற்றுள் கம்பருடைய கவிதையில் உண்டாகும் மனமகிழ்ச்சியே மகிழ்ச்சியென்று அறுதியிட்டுக் கூறப்படுகிறது. பிறர் கவியின்பம், அரச இன்பமும் நிழலின்பமும் போன்றவையாம்.

7 நாடிய பொருள்கை கூடும்
ஞானமும் புகழும் உண்டாம்
வீடியல் வழியது ஆக்கும்
வேரிஅம் கமலை நோக்கும்

6. இம்பர்நாடு-மண்ணுலகம். உம்பர்நாடு - மேல்உலகம். கற்பகக் கா - கற்பகச் சோலை. மேரு - மலை. திறல் - வலிமை.

7. ஞானம்-அறிவுத் தெளிவு. வீடு இயல்-விடுதலைக்கு உரிய. வழியது ஆக்கும் - வழியிலே கொண்டு சேர்க்கும். வேரி அம் கமலை - மணமும் அழகும் உடைய மலரில் இருக்கும் இலக்குமி.

நீடிய அரக்கர் சேனை
நீறுபட்டு அழிய வாகை
சூடிய சிலைஇ ராமன்
தோள்வலி கூறு வோர்க்கே.

பெருகிநின்ற அரக்கர் கூட்டத்தைச் சாம்பலாகும்படி செய்து வெற்றிமாலை சூடிய கோதண்டத்தைத் தாங்கிய இராமபிரானது பேராற்றலைப் புகழ்பவருக்கு, விரும்புகிற பொருள்கள் எல்லாம் கிடைக்கும்; அறிவுத் தெளிவும் புகழும் கிடைக்கும்; முத்தியும் கிடைக்கும்; இலக்குமியும் அருள் செய்வாள்.

நீடிய - மிகுதியான. நீறுபட்டு - சாம்பலாகி. வாகை - வெற்றிக்கு அடையாளமாக அணியும் மாலை. வாகை சூடிய என்ற அடை சிலைக்கும் இராமனுக்கும் பொருந்தும்.

பால காண்டம்

[இராமனின் பாலப் பருவ நிகழ்ச்சிகளைக் கூறும் காண்டம். காண்டம் - பெரும் பிரிவு.]

கடவுள் வணக்கம்

1 உலகம் யாவையும்
　　தாம்உள வாக்கலும்
நிலைபெ றுத்தலும்
　　நீக்கலும் நீங்கலா
அலகி லாவிளை
　　யாட்டுடை யார்அவர்
தலைவர் அன்னவர்க்
　　கேசரண் நாங்களே.

உலகப் பொருள்களை யெல்லாம் உண்டாக்குவதும், அவற்றைக் காப்பாற்றி வளர்ப்பதும், அவற்றைக் கலைப்பது மாகிய மூன்று தொழிலையும் இடைவிடாமல் எத்தனையோ விதமான விளையாட்டாக நடத்திக்கொண் டிருக்கிறவர் எவரோ அவரே கடவுள். அவருக்கே நாங்கள் அடைக் கலம் ஆவோம்.

(வி - ம்) உலகிலுள்ள சராசரம் யாவற்றையும் தோற்று வித்துக் காத்து நீக்கும் கடவுளே! நான் நூல் செய்ய முற் படுகிறேன். எல்லாம் உன் பொறுப்பு என்று கூறி அவன்

1. உள ஆக்கலும் - உண்டாக்கலும். நீங்கலா - இடை விடாமல் தொடர்ச்சியான. அலகு இலா-வரம்பு இல்லாத. சரண் - அடைக்கலம்.

வயமாக நின்று பாடத் துவங்குகிறார். ‘நான்’ என்று கூறாமல் நாங்கள் என்று கூறியதனால், பாட முற்பட்ட நானும், என் தமிழும், என் கவியும், கதையும், முயற்சியும் எல்லாம் உனக்கு அடைக்கலம் என்றவாறு.

அவை அடக்கம்

[அவைக்கு அடங்கிக் கூறுவது]

2 ஓசை பெற்றுயர்
பாற்கடல் உற்றொரு
பூசை முற்றவும்
நக்குபு புக்கென
ஆசை பற்றி
அறையல்உற் றேன்மற்றிவ்
†ஏசில் கொற்றத்து
இராமன் கதைஅரோ.

பேரிரைச்சலோடு கிளம்பும் பெரிய அலைகளைக்கொண்ட பாற்கடல் முழுதையும் தன்னுடைய ஒரு சிறு நாக்கினால் நக்கிக் குடித்துவிடுவேன் என்று கருதி ஒரு பூனையானது முற்படுவது போல நான் இந்தப் பெருமை பொருந்திய இராம கதையை ஆசைப் பெருக்கினால் கூற முற்பட்டிருக்கின்றேன்.

(வி - ம்) இராமனுடைய கதை ஒரு பாற்கடல்போலிருக்கிறது. பூனைக்குப் பால் குடிப்பது இயற்கை. எனினும் தன் சிறுமை நோக்காது பாற்கடலையே குடித்துவிடலா

2. பூசை - பூனை. நக்குபு - நக்கிக் குடிக்கும் பொருட்டு. புக்கு என - முற்பட்டதைப் போல. ஏசு இல் கொற்றத்து - பிறரால் பழிப்புக் கூற இயலாத வீரத்தை உடைய.

†‘ ஏசில் ’ என்ற பாடம் சரசுவதி மால் ஏட்டிற் காணப் பட்டது.

மென்று ஆசை மிகுதியால் எண்ணுகிறது. அதுபோலவே, கம்பருக்குப் பாடுவது இயல்பாயினும் தம் ஆசை மிகுதியால் இராம காதையைப் பாடிவிட வேண்டும் என்று எண்ணுகிறார்.

3 முத்தமிழ்த்துறை
 யில்முறை போகிய
உத்த மக்கவி
 கட்கொன் றுணர்த்துவன்
பித்தர் சொன்னவும்
 பேதையர் சொன்னவும்
பத்தர் சொன்னவும்
 பன்னப் படுபவோ.

இயல், இசை, நாடகம் என்ற மூவகைத் தமிழையும் முறையாகக் கற்றுச் சென்று அறிவு முற்றிய உத்தமமான புலவர் பெருமக்களுக்கு என்னுடைய விண்ணப்பமாவது: நான் இராம காதையைப் பாடவேண்டும் என்பதில் ஈடுபட்டு வேறெதையும் கருதாத பித்தனாகிவிட்டேன்; அறிவு வளராத இளங்குழந்தை என்று என்னை நினைக்க வேண்டும்; இராமனைக் கடவுளாகக் கொண்ட பக்தனும் ஆவேன். ஆகையால், என்னுடைய பாடல்களை வைத்துத் தர்க்க விவகாரங்களைச் செய்ய முற்படுவது நியாயமல்ல.

---

3. முத்தமிழ்த்துறையில் - இயல், இசை, நாடகம் என்ற மூன்று தமிழ்ப் பகுதிகளிலும். முறை போகிய - முறையாகக் கற்றுத் தெளிந்த. பித்தர் - அறிவு திரிந்தோர். பேதையர் - அறிவு வளாரதவர்; குழந்தைகள். பத்தர் - பக்தர்; அறிவு முதிர்ந்து அன்பின் வயப்பட்டு நிற்பவர். பன்னப்படுபவோ - விவகாரம் செய்து பேசத்தகுதி உடையது ஆகுமோ? இம்மூவரில் தம்மைப் பத்தர் கூட்டத்தில் சேர்த்துக் கொள்கிறார். முத்தமிழ் என்பதற்கு எழுத்து, சொல், பொருள் என்றும் கொள்ளலாம்.

1. ஆற்றுப் படலம்

[ஆற்றைப்பற்றிக் கூறும் படலம்; படலம் - சிறு பிரிவு]

சரயு நதியின் சிறப்பு

4 இரவி தன்குலத்
தெண்ணில்பல் வேந்தர்தம்
பரவு நல்லொழுக்
கின்படி பூண்டது
சரயு என்பது
தாய்முலை அன்னதிவ்
உரவு நீர்நிலத்
தோங்கும் உயிர்க்கெலாம்.

சூரிய குலத்து அரசர்களின் உயர்ந்த நல்லொழுக்கத்தைப் போல, நீண்டகாலமாக ஓடிக்கொண்டிருப்பது சரயு என்ற நதியாகும். அது, நிலத்தில் உள்ள எல்லா உயிர்களுக்கும் தாய்ப்பால் போல விளங்குகிறது.

(வி - ம்) தாய்ப்பால் பிள்ளைகளுக்கு மட்டுந்தானே உதவுகிறது? நீரானது நடந்துவளரும் உயிருக்கும், இருந்து வளரும் மரம், செடி, கொடி முதலியவற்றிற்கும் உயிராக விளங்குகிறது. "பரவு நல்லொழுக் கின்படி பூண்டது" என்பது வெள்ளப் பஞ்சமோ வறட்சிப் பஞ்சமோ இல்லாது சரயு நதி என்றும் அளவான நீரோட்டமுடையது என்பதாம். அரசர் பரம்பரையும் அப்படிப்பட்டது. கடல்சூழ்ந்த உலகமாயினும் உயிர் வாழ்வதற்கு உதவுவது சரயு நதியே யாகும்.

---

4. இரவிதன் குலத்து - சூரிய குலத்தில் உதித்த. பரவு - புகழப் படுகிற. தாய்முலை அன்னது - தாய்ப் பாலைப்போன்றது. உரவு நீர் - வலிமையுள்ள கடல் நீர்.

மழை பொழிதல்

5 புள்ளி மால்வரை
பொம்எனல் நோக்கிவான்
வெள்ளி †வீழ்இடை
வீழ்த்தெனத் தாரைகள்
உள்ளி உள்ளவெ
லாம்உவந் தியும்அவ்
வள்ளி யோரின்
வழங்கின மேகமே.

இமயமலையின் தன்மையைக் கண்டு வெள்ளிக் கம்பி போன்ற விழுதை இறக்கி மேகமானது மழை பொழிந்தது. அது, நினைத்துப் பார்த்து, இருப்பவற்றை எல்லாம் மன முவந்து அள்ளி வழங்கும் வள்ளலைப்போன் றிருந்தது.

(வி - ம்) இமயமலையானது ஒரு காலத்திலும் வளங் குறைவதில்லை. காரணம், தொடர்ந்து மழை பெய்வதுதான். 'வீழ்து இடை வீழ்த்தென' என்ற குறிப்பால் வானுக்கும் மண்ணுக்கும் இடையே வெள்ளித் தாரைகள் நிலைத்து நின்று ஒரே வெள்ளையாகத் தோற்றமளிக்கிறதென்பது கருத்து. அப்படித்தானே இன்றைக்கும் அங்கே மேகம் நிலைத்து இருந்து வள்ளலாக வழங்கிக்கொண் டிருக்கிறது? இமய மலைச் சாரலில், வளம் ஒருசிறிதும் குறையாமல் பார்த்துக் கொண்டே முன்னுணர்ந்து பெய்யும் மழையை, தன்னிடத் தில் கொடை பெறுபவனிடம் குறை தோன்று முன்பே

---

5. புள்ளிமால்வரை - இமயம் என்ற பெரிய மலை. பொம் எனல் நோக்கி-பொலிவுடையதாக இருக்க வேண்டுமென்று கருதி. வெள்ளி வீழ்து - வெண்மை நிறமான விழுது. உள்ளி - நினைத்து. வள்ளியோரின் - வள்ளல்களைப் போல.

†'வீழ்திடை' சரசுவதிமால் ஏட்டிற் கண்டது.

உணர்ந்து கொடுக்கும் வள்ளலுக்கு உவமை கூறப்பட்டது. வள்ளல் கொடுக்கத் தலைப்பட்டால், பெறுபவனும் குறையென்பதை அறியாமல் நிறைசெல்வனாக ஆக்கப்படுவான் என்பது குறிப்பு. மேகத்தைப் போல வள்ளல் இருக்கிறார் என்பதுதான் இயல்பாக உவமை கூறும் மரபு. இங்கே வள்ளலைப் போல மேகம் இருக்கிறதென்று கூறப்பட்டிருப்பது இன்புறத் தக்கது. "பாரி ஒருவனும் அல்லன், மாரியும் உண்டு ஈண்டு உலகு புரப்பதுவே" (புறம் : 107) என்பது நோக்கத் தக்கது. "உள்ளி உள்ள மெலாம் உவந்து ஈயும் வள்ளல்" என்பதை உள்ளி ஈயும், உள்ளமெலாம் ஈயும், உவந்து ஈயும் வள்ளல் என இயைக்க.

வெள்ளம் வாய்க்கால்களிற் பிரிதல்

6 *காத்தகால் மள்ளர் வெள்ளக்
கலிப்பறை கறங்கக் கைபோய்ச்
சேர்ந்தநீர்த் திவலை பொன்னும்
முத்தமும் திரையின் வீசி
நீத்தமாம் தலைய தாகி
நிமிர்ந்துபார் கிழிய நீண்டு
கோத்தகால் ஒன்றின் ஒன்று
குலம்எனப் பிரிந்த தன்றே.

7 கால்வாய்க் கரையைக் காக்கும் காவலர்கள், புது வெள்ளம் வருகிறதென்பதைப் பறைகொட்டித் தெரிவிக்கிறார்கள். சேர்ந்த நீர், பெருகிப் புரண்டு பேராறு ஆகி,

6. காத்த கால் மள்ளர் - கால்வாய்க் கரையைக் காத்து நின்ற உழவர். வெள்ளக் கலிப்பறை - புதுவெள்ளம் வந்துவிட்டதென்று முழக்கும் தமுக்கு. கறங்க - ஒலிக்க. கோத்தகால் - ஒன்றில் இருந்து ஒன்றாகப் பிரியும் வாய்க்கால்கள்.

*இது சந்தம் மாறுதலைக் குறிக்கும்.

இணைக்கப்பட்டிருக்கிற வாய்க்கால்களில் பிரிந்து செல்கிறது; அப்பிரிவு குடும்ப பரம்பரை, கிளைகிளையாகப் பிரிவதைப் போன்றது.

(வி - ம்) ஒரு குடும்பம் பல குடும்பமாகக் கிளைத்துச் செல்வதுபோலச் சரயு நதி பல கிளைகளாகப் பிரிந்து நாடு முழுதும் பரவிச் செல்கிறது.

சரயு பலநிலை யடைதல்

7 கல்இடைப் பிறந்து போந்து
கடல்இடைக் கலந்த நீத்தம்
எல்லைஇல் மறைக ளாலும்
இயம்பரும் பொருள்ஈ தென்னத்
தொல்லையில் ஒன்றே ஆகித்
துறைதொறும் பரந்த சூழ்ச்சிப்
பல்பெரும் சமயம் சொல்லும்
பொருளும்போற் பரந்த தன்றே.

மலையிலிருந்து தொடங்கிக் கடலில் கலக்கிற ஒரே ஆற்றுநீரானது, வேதங்களாலும் சொல்லமுடியாத கடவுள் இதுதான் என்று காட்டக்கூடிய வகையில், பல இடங்களிலும் பாய்ந்து பெருகிப் பலவிதமான விரிந்த கொள்கைகளைக் கொண்ட பலவேறு பெரிய சமய வாதிகள் சொல்லுகின்ற சொற்களையும் பொருளையும்போலப் பரவியது.

(வி - ம்) மேகத்திலிருந்து விழுந்த நீரானது மலையிலிருந்து ஆறாகத் தோன்றிக் கடலில் கலந்துவிடுகிறது. பிறகு ஆவியாக மாறி மேகமாகிறது. அப்பால் மழையாகப் பொழி

7. கல் இடை - மலையில். நீத்தம் - நீர். இயம்ப அரும் பொருள் - சொல்லுதற்கு அரிய கடவுள். தொல்லையில் - ஆதியில்.

கிறது. முதலில் ஒன்ருக இருக்கிற கடவுள் தத்துவம் எல்லாமாகி எங்குமாகிப் பரந்து நிறைந்து பெருகிப் பலராலும் பல பெயர் சொல்லப்பட்டாலும் முடிவில் (ஒரே நீராவது போல) பொருள் ஒன்றே என்ற உண்மைநிலையில் முடிகிறது.

நீர் பரவுதல்

8 தாதுகு சோலை தோறும்
 சண்பகக் காவு தோறும்
போதவிழ் பொய்கை தோறும்
 புதுமணல் தடங்கள் தோறும்
மாதவி வேலிப் பூக
 வனந்தொறும் வயல்கள் தோறும்
ஓதிய உடம்பு தோறும்
 உயிர்என உலாய தன்றே.

மகரந்தம் சிந்துகிற சோலைகளிலும், சண்பகக் காடுகளிலும், தாமரை மலர்கிற பொய்கைகளிலும், புதிய மணல் பரப்பிய குளங்களிலும், மாதவிக் கொடிபடர்ந்த வேலியையுடைய பாக்குமரத் தோப்புகளிலும், வயல்களிலும், உடலில் நிறைந்துள்ள உயிரைப் போல நீரானது உலாவியது.

(வி - ம்) இன்ன இடத்தில்தான் தங்கியிருக்கிறது என்று கூறமுடியாதபடி உடம்பின் ஒவ்வொரு அணுவிலும்

---

8. தாது - மகரந்தம். காவு - சோலை. பொய்கை - இயற்கையான நீர்நிலை. தடங்கள் - நீந்தி விளையாடும் குளங்கள்; குளிக்கும் குளத்தில் ஆண்டு தோறும் பழைய மணலை நீக்கிப் புதிய மணலைப் பரப்புவார்கள். மாதவி வேலி - ஒருவகைக் கொடியால் போடப்பட்டுள்ள வேலி. மாதவி என்பது கொடிச் சம்பங்கியாக இருக்கலாம். பூகவனம் - பாக்கு மரச்சோலை.

உயிர் தங்கி நிறைந்திருப்பதைப் போல, நாட்டில் உள்ள மண் முழுமையும் சரயு நதியின் நீரானது சுற்றிச் சுற்றிப் பாய்ந்து நனைத்துப் பயிரை வளர்த்து வருகிறது.

---

2. நாட்டுப் படலம்

[நாட்டின் வளம் முதலியவற்றைக்கூறும் படலம்]

நாட்டின் செழிப்பு

9 வரம்பெலாம் முத்தம்; தத்தும்
மடைஎலாம் பணிலம்; மா நீர்க்
குரம்பெலாம் செம்பொன்; மேதிக்
குழிஎலாம் கழு நீர்க் கொள்ளை;
பரம்பெலாம் பவளம்; சாலிப்
பரப்பெலாம் அன்னம்; பாங்கர்க்
கரும்பெலாம் செந்தேன்; சந்தக்
காவெலாம் களிவண்டு ஈட்டம்.

வரப்புக்களில் முத்துக்களும், சிதறும் மடைக் குழிகளில் சங்குப் பூச்சிகளும், அணைகளில் (காக்காய்ப்) பொன்னும், எருமை கிடக்கிற குழிகளில் செங்கழு நீர்ப் பூக்களும், பரம்படித்த வயல்களில் பவழமும், நெல்வயல்களில் அன்னப்

9. வரம்பு - வரப்பு. பணிலம் - முத்து. குரம்பு - வாய்க்காலை அடைக்கின்ற அணை. மேதிக்குழி - எருமை படுத்திருந்த சேற்றுக் குழி. கழுநீர்க்கொள்ளை - கொள்ளை கொள்ளையான நீலோற்பலப் பூக்கள். பரம்பு - பரம்படித்துச் சமன்செய்த நிலம். சாலிப்பரப்பு - நெற்பயிர் நிறைந்த பரந்தவயல். பாங்கர்க் கரும்பு எலாம் - அருகில் விளைந்திருக்கிற கரும்புகளில் எல்லாம். சந்தக்கா எலாம் - அழகிய சோலைகளில் எல்லாம். ஈட்டம் - கூட்டம்.

பறவைகளும், பக்கத்திலுள்ள கரும்புகளில் தேன் கூடு களும், சோலைகளில் களிப்பினையுடைய வண்டுகளும் காணப்படுகின்றன.

மருதநிலச் சிறப்பு

10 தண்டலை மயில்கள் ஆடத்
தாமரை விளக்கம் தாங்கக்
கொண்டல்கள் முழவின் ஏங்கக்
குவளைகண் விழித்து நோக்கத்
தெண்டிரை எழினி காட்டத்
தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட
மருதம்வீற் றிருக்கும் மாதோ

சோலைகளில் ஆண் மயில்கள் தோகை விரித்தாடவும்; தாமரை மலர்கள் விளக்குப் போல் விளங்கவும்; மேகங் கள் மத்தளம் வாசிப்பது போல் முழங்கவும்; நீலோற்பல மலர்கள் அவையினரின் கண்களைப் போல் விழித்துப் பார்க்கவும்; நீர்நிலைகளில் அடிக்கும் அலையானது திரைச் சேலைபோல் மறைத்து மறைத்துக் காட்சியைக் காட்டவும்; யாழ் வாசிப்பதைப்போல் வண்டுகள் பாடிக்கொண்டிருக்க வும் மருதநிலம் என்ற அரசி கொலு வீற்றிருக்கின்றாள்.

(வி - ம்) பேரியாழ், சகோடயாழ், மகரயாழ், செங் கோட்டியாழ் என்ற நான்கு வகையான யாழ்கள் உண்டு. யாழ், வீணையைப் போன்றதொரு இசைக்கருவி. அது

---

10. தண்டலை - சோலை. எழினி - திரை. தேம் - தேன். பிழி - பிழியப்படுகின்ற. 'தேம்பிழி' என்பதைப் 'பிழிதேம்' என்று மாற்றிப் பொருள் கொள்ள வேண்டும். மகரயாழின் - மகர யாழைப்போல.

வீணைதோன்றுவதற்கு முன்பு தமிழகத்தில் தலைசிறந்திருந்தது. மாதவியும், கோவலனும் இதில் திறமையுடையவர்கள். இதன் விரிவு சிலப்பதிகாரத்திலும், யாழ்நூலிலும் காணக் கிடைக்கும். மருத நிலந்தான் மக்களுக்குச் சோறு ஊட்டுவது. அந்த நிலம் மற்றை நிலங்களுக்குத் தலைமை பூண்டு கவலையற்று இசையில் மூழ்கி இன்பத்தில் திளைத்துக் கொலு வீற்றிருந்து அரசுபுரிகிறது. எனவே நாட்டின் செழுமையைக் கூற வேண்டுமா?

11 சேலுண்ட ஒண்க ணாரில்
திரிகின்ற செங்கால் அன்னம்
மாலுண்ட நளினப் பள்ளி
வளர்த்திய மழலைப் பிள்ளை
காலுண்ட சேற்று மேதி
கன்றுள்ளிக் கனைப்பச் சோர்ந்த
பால்உண்டு துயிலப் பச்சைத்
தேரைதா லாட்டும் பண்ணை

கெண்டை மீனை ஒத்த கண்களையுடைய பெண்களைப் போலத் திரிகிற சிவந்த கால்களையுடைய அன்னப் பறவைகள், பெருமை பொருந்திய தாமரைப்பூவாகிய படுக்கையில் இளங்குஞ்சுகளைப் படுக்க வைத்துள்ளன. அங்கே சகதியில் காலை மாட்டிக்கொண்ட எருமை தன்கன்றை நினைத்துக் கனைத்ததும், மடிசுரந்து ஒழுகிய பாலைக் (அன்னத்தின் குஞ்சுகள்) குடித்துவிட்டுத் தூங்கும்படி, பச்சைநிறத் தவளைகள் தாலாட்டுவது போலச் சத்தமிடுகின்ற வயல்கள் நிறைந்துள்ளன.

---

11. சேல் - கெண்டைமீன். மால் - பெருமை. நளினம் - தாமரைப்பூ. பிள்ளை - குஞ்சு. கன்றுஉள்ளி - கன்றைநினைத்து.

(வி - ம்) வயல்களில் நீர் நிறைந்துள்ளன. தாமரையும் பூத்திருக்கிறது. பூவின்மேல் அன்னக்குஞ்சுகள் கிடக்கின்றன. எருமையின் மடிசுரந்து பாலைப்பீச்சியடிக்கிறபோது அந்தக் குஞ்சுகள் குடிக்கின்றன. தவளை சத்தமிடுகிறது. அச்சத்தத்தைத் தாலாட்டாகக்கொண்டு குஞ்சுகள் தூங்குகின்றன. இப்படியாக நீர்வளமும் வயல் வளமும் மிகுந்திருந்தன.

வயலெல்லாம் பால்

12 *ஈர நீர்படிந்து
இந்நிலத் தேசில
கார்கள் என்ன
வரும்கரு மேதிகள்
ஊரில் நின்றகன்று
உள்ளிட உண்முலை
தாரை கொள்ளத்
தழைப்பன சாலியே

குட்டைகளில் உள்ள நீரில் கிடந்து எழுந்து வீடு நோக்கி எருமைகள் வருவது பெரிய மேகக் கூட்டம் வருவது போலிருக்கிறது. வீட்டில் இருக்கும் கன்றுகளை நினைத்தவுடனே பால் சுரந்து தாரையாக வயல்களிலெல்லாம் பாய்வதால், நெல்லே பாலில் விளைவது போலிருக்கின்றது.

(வி - ம்) வயல்களின் ஊடே வரப்பு வழியாகச் செல்லும் எருமைகள் சுரக்கும் பால் வயலில் கட்டி இருக்கிற

---

12. கார்கள் என்ன - மேகத்தைப் போல. மேதிகள் - எருமைகள். கன்று உள்ளிட - தன் கன்றை நினைக்க. தாரை கொள்ள - பால் தாரையாக வடிந்து பெருக. உண்முலை - கன்று உண்ண ஊட்டிப் பழகிய முலை. சாலி - நெற்பயிர்.

நீரில் கலந்து வெண்மை நிறமாகத் தெரிகிறது. சம்பா நெல் நீரில் விளைகிறதா? பாலில் விளைகிறதா என்ற ஐயம் எழுகின்றது! மாடுகளுக்கு உணவு அதிகமாகக் கிடைப்பதால் அளவு கடந்து பாலைப் பெருக்குகிறது. மனிதர்க்கும் உணவு தேவைக்குமேல் கிடைப்பதால் பாலை அதிகம் விரும்புவதில்லை. ஆகவே, எருமைகள் தாமாகச் சுரந்த பால் வயலிற் பெருகுவதில் வியப்பில்லை. கம்பர் பிறந்த தஞ்சை மாவட்டம் முழுமையும் நன்செய் நிலமேயாம். இடையிடையே நீர்நிரம்பிய குட்டைகள் இருக்கும். அதில் எருமைகள் கிடக்கும். மாலையில் கன்றை நினைந்து எழுந்து செல்லும்பொழுது வரப்புகளின் வழியே செல்வதை இன்றும் காணலாம்.

கழுநீராற் பயிர் வளர்தல்

13 முட்டில் அட்டில்
முழங்குற வாக்கிய
நெட்டு லைக்கழு
நீர்நெடு நீத்தந்தான்
பட்ட மென்கமுகு
ஓங்கு படப்பைபோய்
நட்ட செந்நெலின்
நாறு வளர்க்குமே

தட்டுப் பாடில்லாத அடுப்படிகளில் ஓசையுண்டாகும்படி வடித்துவிடப்படுகிற அரிசி களைந்த நீர் பெருகிப் பின்புற வழியாகச் சென்று நட்டிருக்கின்ற சம்பா நெல்லை வளர்க்கின்றது.

---

13. முட்டு இல் அட்டில் - குறைவில்லாத சமையல் இடம். வாக்கிய - வடியவிட்ட. கழுநீர் - அரிசி களைந்த நீர். பட்ட - பொருந்திய. நாறு - நடப்பட்ட நெற்பயிர். படப்பை - புழக்கடை.

(வி - ம்) தட்டுப்பாடில்லாத அடுப்படிகளே அங்குள்ளன. ஏராளமாகச் சோறு சமைக்கப்படுகிறது. அரிசி களைகிற தண்ணீர் ஆறாய்ப் பெருகி வாய்க்காலில் ஓடி வயலிற் பாய்ந்து பயிரை வளர்க்கிறது என்பது கருத்து. இதில் நாட்டு வளமும், பயனும் ஒன்றை ஒன்று பின்னி நிற்கின்றன.

குருவிக்கூட்டில் மாணிக்கம்

14 சூட்டு டைத்துணைத்
தூ நிற வாரணம்
நாட்டு ணைக்குடை
யும் நகை சால்மணி
மேட்டி மைப்பன
மின்மினி ஆம்எனக்
கூட்டில் உய்க்கும்
குரீஇயின் குழாம்அரோ

உச்சிக் கொண்டையை உடைய வெள்ளைச் சேவல்கள், குப்பையைக் கால்களினால் குடைகின்றன. அதனால் உயர்ந்த இரத்தினங்கள் குப்பை மேட்டில் ஒளி வீசுகின்றன. அதைக் கண்ட குருவிக் கூட்டங்கள் பறந்து வந்து, இரத்தினங்களை மின்மினிப் பூச்சிகள் என்று கருதித் தங்களுடைய கூடுகளுக்கு எடுத்துக்கொண்டுபோய் வைக்கின்றன.

(வி - ம்) மக்கள் அணிந்துள்ள நகைகளில் இருந்து உதிர்ந்து விழும் இரத்தினங்கள், குப்பையில் ஒதுக்கப்படு

---

14. தாட்டுணை - தாள்துணை. சூட்டு - உச்சிக்கொண்டை. வாரணம் - கோழி. மேடு - குப்பை மேட்டில். குரீஇயின் குழாம் - குருவியின் கூட்டம்.

கின்றன. அவற்றைப் பிறகு மக்கள் தேடி எடுக்கவும் இல்லை. குருவிகள் இரவில் வெளிச்சம் தெரிவதற்காகத் தம் கூண்டு களில் மின்மினிப் பூச்சியை வைக்கும் என்பது கவி மரபு. மின்மினிப் பூச்சி, குஞ்சுகளுக்கு இரை என்று கூறுவதும் உண்டு.

தயிர் கடைதல்

15 தோயும் வெண்தயிர்
மத்தொலி துள்ளவும்
மாய வெள்வளை
வாய்விட் டரற்றவும்
தேயும் நுண்இடை
சென்று வணங்கவும்
ஆயர் மங்கையர்
அங்கை வருந்துவார்

தயிர் கடைகின்ற மத்திலிருந்து எழும் ஒலி துள்ளித் துள்ளிக் கேட்கவும், முன்னும் பின்னுமாக அலைகின்ற கைவளையல்கள் கதறவும், மெலிகின்ற இடையானது, வலமும் இடமும் சென்று துவளவும் இடைப் பெண்கள் தயிர் கடைந்தனர்.

(வி - ம்) தயிர் கடையும்போது ஓசை நேராக வருவ தில்லை. வலமும் இடமுமாக மறித்து மறித்து மத்தை இயக்குவதாலும், கெட்டியான தயிரில் மத்துச் சுழல்வதா லும் துள்ளித் துள்ளித் தான் ஓசை கேட்கும். 'மெல் விரற் காந்தள் சேப்ப வெண்தயிர் கடையும் ஓதை, கொல்புலி முழக்கம் என்ன' என்றும் கூறப்பட்டிருத்தல் காண்க.

---

15. தோயும் - உறைந்த. மாய வெள்வளை - கையில் முன் னும் பின்னுமாக ஓடிப் பார்வைக்கு அகப்படாமல் ஒலிக்கின்ற சங்கு வளையல்கள். வணங்கவும் - துவளவும் : நுடங்கவும்.

மத்தை முன்கையில் அணைத்துத் தயிர் கடையும் வழக்கம் உண்டு. அது சிறு அளவான பாலை உறையிட்டுக் கடையும் போதுதான் இயலும். அப்படிக் கடையும் பெண்கள் கையில் வளையலை அணிந்துகொள்ள இயலாது. வளையல் முழங்கு கிறது என்பதால் பெரிய மிடாவில் இருக்கும் தயிர், நிலை மத்துப் போட்டுக் கயிற்றால் இழுத்துக் கடையப்பட்ட தென்று தெரிகிறது. வெண்ணெய் நிறைய உள்ள கெட் டித் தயிரைப் பலங்கொண்டு இழுத்துக் கடைவதால் பெண் களின் கைகளேயன்றி இடுப்பும் நிமிர்ந்துபோகிறது. இப் பாடலில் 'கடைந்தார்கள்' என்று கூறாமல் 'அங்கை வருந்துவார்' என்று வினைமுற்றுக் கொடுக்கப்பட்டிருக் கிறது. பயனைவிட முயற்சியின் அருமை அற்புதமாக விளக்கப்பட்டிருக்கிறது.

கோசலத்திற் சிலம்புவன

16 ***தினைச்சி லம்புவ***
தீஞ்சொல் இளங்கிளி;
நனைச்சி லம்புவ
நாகிள வண்டு; பூம்
புனற்சி லம்புவ
புள்ளினம்; வள்ளியோர்
மனைச்சி லம்புவ
மங்கல வள்ளையே

---

16. தினை - தினைப்புனங்களில். சிலம்புவ - ஒலிப்பன. நனை - பூஅரும்பு. நாகு இளவண்டு-மிக இளமையான வண்டுகள். பூம்புனல் - பூக்கள் நிரம்பிய நீர்நிலைகளில். வள்ளியோர் - வள முள்ளவர்; வேளாளர். மனை - வீடுகளில். வள்ளை - வள்ளைப் பாட்டு; பெண்கள் நெற்குத்தும் பொழுது, வீட்டுத் தலைவனை அல்லது அரசனை வாழ்த்திப் பாடும் பாட்டு.

தினைப்புனங்களில் இனிய சொல்லையுடைய இளங்கிளிகள் ஒலிக்கின்றன. பூமொட்டுக்களில் இளவண்டுகள் ஒலிக்கின்றன. பூக்கள் நிறைந்த நீர்நிலைகளில் பறவைக்கூட்டம் ஒலிக்கின்றது. கொடையாளர்களின் வீடுகளில் மங்கலமான வள்ளைப்பாட்டு ஒலிக்கின்றது.

பெண்கல்வியின் பயன்

17 பெருந்த டங்கண்
பிறைநு த லார்க்கெலாம்
பொருந்து செல்வமும்
கல்வியும் பூத்தலால்
வருந்தி வந்தவர்க்
கீதலும் வைகலும்
விருந்தும் அன்றி
விளைவன யாவையே

அகன்ற பெரிய கண்களையும், எட்டாம் பிறைபோன்ற நெற்றியினையும் உடைய பெண்கள் யாவர்க்கும் நல்வழியிற் பொருந்திய செல்வமும், கல்வி அறிவும் இருப்பதால், வருத்தமுற்று அயல் நாடுகளிலிருந்து யாராவது வந்தால், அவர்களுக்குக் கொடுத்தலும், விருந்தளித்தலும் அன்றி வேறென்ன விளையக்கூடும்.

---

17. பெருந்தடங்கண் - தோற்றத்தில் பெரிதாகவும், குறுகல் இல்லாத அகண்ட பார்வையை உடையதாகவும் உள்ள கண்கள். பிறைநுதலார் - எட்டாம் நாள் மதியினைப் போன்ற நெற்றியை உடைய பெண்கள். பொருந்து செல்வம் - ஒழுங்காக வளர்ந்து வருகிற செல்வம். பூத்தலால் - உண்டாகியிருக்கிறபடியால். வருந்தி வந்தவர் - அகதிகள்.

(வி - ம்) தம் நாட்டில் ஏழையில்லை. வெளிநாட்டிலிருந்து ஏழையாக யாரும் ஒருகால் வந்தால், இங்கே என்ன நடக்கும்? கொடுத்து உதவி செய்யக்கூடும்; விருந்தளிக்கக் கூடும். வெளி நாடுகளிலிருந்து உதவி நாடி யாராவது வர மாட்டார்களா என்று அந்நாட்டுப் பெண்கள் எதிர் பார்த்திருந்தனர். அந்நாட்டு மக்களுக்கு ஈகைக்குணம் நிறைந்திருந்தது. ஆனால், வாய்ப்பு ஏற்படவில்லை.

பரம்பரை ஒழுக்கம்

18 கலம்சு ரக்கும்
நிதியம்; கணக்கிலா
நிலம்சு ரக்கும்
நிறைவளம்; நன்மணி
பிலம்சு ரக்கும்;
பெறுதற் கரியதம்
குலம்சு ரக்கும்
ஒழுக்கம் குடிக்கெலாம்

(வி - ம்) ஒரு நாடு செல்வத்தில் உயர வேண்டுமானால், வெளிநாடுகளிலிருந்து மாற்றுப் பொருள்கள் வர வேண்டும். செல்வம் இரண்டுவகையில் உயரும்; ஒன்று நிலத்தில் இருந்து வெளிப்படுவது; மற்றொன்று கை முயற்சிகளிலிருந்து தோன்றுவது. நிலத்திலிருந்து பயிரைத் தோற்றுவித்துப் பயனைப் பெறவேண்டும். நிலத்தைக் குடைந்து தங்கம் முதலிய கனிப்பொருள்களை வெளியே கொண்டு வரவேண்டும். இவைகளைக் கப்பலில் ஏற்றி இவை கிடைக்காத இடங்கட்கு அனுப்பி, அங்குள்ள பொருள்களை மாற்றிக்கொண்டு வரவேண்டும். இங்கில்லாத செல்வத்தைக்

---

18. கலம் - கப்பல். பிலம் - சுரங்கம். குலம் - பரம்பரை.

கப்பல்கள் கொண்டுவரும்; நிறைந்த கணக்கற்ற வளமான பொருள்களை நிலமானது சுரந்து தந்து கொண்டே இருக்கும். இரத்தினங்கள் போன்றவற்றைச் சுரங்கங்கள் தந்து கொண்டே இருக்கும். இவைகள் எல்லாம் கிடைக்கக் கூடியவைதாம். ஆனால், கிடைப்பதற்கு அருமையான ஒழுக்கத்தை ஒவ்வொரு பரம்பரையும் வளர்த்துப் பின் தோன்றும் குடும்பங்களுக்கு வற்றாத ஊற்றாகச் சுரந்து கொடுத்துக்கொண்டிருக்கும். செல்வமும், சிறப்பும், வாழ்வும் எல்லாம் ஒழுக்கம் பெருகி நிலைப்பதற்காகத்தான் என்பது இப்பாடலின் தேர்ந்த முடிவாகும். அதோடு இத்தனை செல்வமும் பெருகி நிற்கும் இடத்தில்தான் ஒழுக்கம் செழித்து நிற்கும் என்பதும் ஒன்று.

தாழ்வு கிடையாது

19 *கூற்றம் இல்லையோர்*
குற்றம்இ லாமையால்
சீற்றம் இல்லைதம்
சிந்தையிற் செம்மையால்
ஆற்றல் நல்லறம்
அல்லதி லாமையால்
ஏற்ற மல்ல
திழிதக வில்லையே

எவரும் குற்றம் செய்வதில்லை. ஆதலால், அகால மரணம் ஏற்படுவதில்லை; மனச் செம்மையுடையவராக இருப்

19. கூற்றம் - உயிரை இடையிற் பிரிக்கும் நிகழ்ச்சி. சீற்றம் - கடுங்கோபம். ஆற்றல் - ஆற்றுவது; அந்நாட்டு மக்கள் செய்வது. இழிதகவு - தாழ்வு.

பதால் கோபம் ஏற்பட இடமில்லை; செய்வது நல்ல அறமே யல்லாமல் தீமை செய்வதில்லை யாதலால், அங்கே புகழ் மிகுந்ததே அன்றித் தாழ்வு ஏற்படவில்லை.

(வி - ம்) உடலெடுத்தவர் நிறைந்த ஆயுளுடன் இருந்து இயல்பாகப் பலங்குன்றி இறப்பதை அல்லாமல், குற்றம் செய்து கொலைத்தண்டனை அடைந்தோ, வெறுப்பினாலே தற்கொலை செய்து கொண்டோ, தொத்து நோயால் உயிர் பிரிந்தோ சாவதில்லை. போர் காரணமாகச் செத்தவரு மில்லை.

நாட்டின் நன்னெறி

20 நெறிகடந்து
பரந்தன நீத்தமே
குறிஅழிந்தன
குங்குமத் தோள்களே
சிறிய மங்கையர்
தேயும் மருங்குலே
வெறியவும்அவர்
மென்மலர்க் கூந்தலே

வெள்ளப் பெருக்கு மட்டுந்தான் சிலபோது கரைகடந்து செல்லும்; மனிதர் வரம்பை மீறுவதில்லை. பெண்களின் மார்பில் குங்குமத்தால் எழுதப்பட்ட தொய்யில்தான் அழியும்; வாழ்வின் குறிக்கோள் அழிவதில்லை. தேய்ந்து சிறி

20. நெறி - ஒழுங்கு. நீத்தம் - வெள்ளம். குறி - குறிக்கோள், தொய்யில். தொய்யிலாவது பெண்கள் மார்பில் கலவைச் சாந்தால் எழுதப்படும் சித்திரங்கள். மருங்குல் - இடை. வெறிய - வெறியை ஊட்டுவன.

தாகத் தோன்றுவது பெண்களின் இடைதான்; மக்களது எண்ணத்திலும் செயலிலும் சிறுமை இல்லை. பெண்களின் மலரணிந்த கூந்தல்தான் காதலர்க்கு மதமதப்பைத் தருகின்றன; மனத்தை மாற்றி அறிவை மீறுவனவாகிய கள் முதலிய பொருள்கள் எவையும் இல்லை.

பெண்ணின் பெருமை

21 *விதியினை நகுவன
அயில்விழி; பிடியின்
கதியினை நகுவன
அவர்நடை; கமலப்
பொதியினை நகுவன
புணர்முலை; கலைவாழ்
மதியினை நகுவன
வனிதையர் வதனம்

திருமணத்திற்கு மணமக்களைத் தேர்ந்தெடுக்கிற சட்ட திட்டங்களைப் பார்த்து, பெண்களது வேல்போன்ற விழிகள் சிரிக்கின்றன. பெண் யானையின் நடையினைப் பார்த்து அங்குள்ள பெண்களின் நடைசிரிக்கிறது. தாமரை

---

21. விதி - காதலுக்கு மக்கள் ஏற்படுத்திவைக்கும் கட்டுப்பாடு. நகுவன - பார்த்துச் சிரிக்கின்றன. பிடி - பெண்யானை. கதி - நடையின் போக்கு. கமலப்பொதி - தாமரை மொட்டு. புணர்முலை - நெருங்கியிருக்கும் முலைகள். இருமுலைகளும் இடைவெளியில்லாமல் நெருங்கியிருத்தல் பெண்ணில் சிறந்தவரின் இலக்கணமாகும். 'ஈர்க்குஇடை போகா ஏர்இளவனமுலை' (பொருநராற்றுப்படை - 36.) மதி - சந்திரன். வதனம் - முகம்.

மொட்டுக்களைப் பார்த்து அப்பெண்களின் முலைகள் சிரிக்கின்றன. முழுமதியைப் பார்த்து ஆயிரக்கணக்கான பெண்களின் முகங்கள் சிரி சிரி யென்று சிரிக்கும்படி யாகி விட்டது.

இதுவும் அது

22 பகலிெனாடு இகலுவ
படர்மணி ; மடவார்
நகிலிெனாடு இகலுவ
நளிவளர் இளநீர் ;
துகிலிெனாடு இகலுவ
சுதைபுரை நுரை;கார்
முகிலிெனாடு இகலுவ
கடிமண முரசம்

பெண்கள் உடலில் அணியப்பட்டுள்ள இரத்தினங்கள் சூரிய வெளிச்சத்தோடு போட்டியிட்டு ஒளிவீசுகின்றன. குளிர்ச்சியையுடைய இளநீர்கள் பெண்களின் தனங்களோடு போட்டியிடுகின்றன. பால் போன்ற வெண்மையான நுரையானது பெண்களின் ஆடையோடு போட்டியிடுகின்றது. திருமணக் காலங்களில் முழங்கும் முரசங்கள் இடி முழக்கத்தோடு போட்டியிட்டு முழங்குகின்றன.

---

22. இகலுதல் - போட்டி போடுதல். நகில் - முலை. சுதை- பால். புரை - ஒத்த. முகில் - மேகம் ; இங்கே இடியைக் குறித்தது.

பல்வகை வளம்

23 கோதைகள் சொரிவன
குளிர் இள நறவம்
பாதைகள் சொரிவன
பருமணி கனகம்
ஊதைகள் சொரிவன
உறைஉறும் அமுதம்
காதைகள் சொரிவன
செவிநுகர் கனிகள்

பூங்கொத்துக்கள் குளிர்ந்த தேனைக் கொட்டுகின்றன. கப்பல்கள் இரத்தினங்களையும், தங்கத்தையும் அள்ளிக் கொண்டு வந்து கொட்டுகின்றன. குளிர்காற்றானது துளியாகப் பொருந்திய நீரினைத் தூற்றுகிறது. நூல்கள் காதுக்கு இனிய கனிகளாகக் கவிகளைப் பொழிகின்றன.

மங்கையும் மயிலும்

24 *இடங்கொள் சாயல்கண்டு
இளைஞர் சிந்தைபோல்
நடங்கொள் சோலைவாய்
மலர்கொய் தாழ்குழல்

---

23. கோதைகள் - பூங்கொத்து. நறவம் - தேன். பாதைகள் - கப்பல்கள். ஊதை - குளிர்காற்று; உறை - துளி. அமுதம்- நீர். சாரலினால் பொருந்தும் அமிழ்தத்தை ஊதைக் காற்றுத் தருகிறது. காதைகள் - கதை நூல்கள்; காவியங்கள். செவி நுகர் கனிகள் - காதினால் கேட்டு உண்ணும் படியான இசையோடு கூடிய கனிந்த பாடல்கள்.

24. இடங்கொள் சாயல்-பலவகைப் பட்ட உணர்ச்சியோடு கூடிய தோற்றம். தாழ்குழல் - நீண்ட கூந்தல்.

வடங்கொள் பூண்முலை
மடந்தை மாரொடும்
தொடர்ந்து போவன
தோகை மஞ்ஞையே

ஆண்மயில்கள், நீர்நிலைகளையுடைய சோலைகளில் பூப் பறிக்கின்ற - நீண்ட கூந்தலையும், முத்துமாலையணிந்த மார்பையும் உடைய - இளம்பெண்களின் பல விதமான சாயல்களைக் கண்டு, இளைஞர்களின் மனம் போல ஈடுபட்டுச் சென்றன.

(வி - ம்) வாலிபப் பெண்கள் போகிறார்கள். அலங்காரமும், இளமை இறுமாப்பும், அப்பெண்களின் நடையும், நடையிலே உள்ள ஓர் உல்லாசமும், உடல் அசைவும், பார்க்கும் பார்வையும் எல்லாம் ஒவ்வொரு உணர்ச்சி பாவத்தை உடையதாக இருக்கின்றன. பார்த்துக் கொண்டிருக்கின்ற காதலர்களுக்குப் பெண்களின் ஒவ்வொரு அசைவும் ஒவ்வொரு இன்பத்தைத் தருகிற படியால், அவர்களின் உள்ளம் காதற் பெண்களைப்பற்றிப் பின்செல்லும். அப்படியே சோலையில் பூக்கொய்கிற பெண்களின் சாயலைக்கண்டு தம்மை அறியாமலேயே அங்கு திரிகின்ற மயில்கள் அவர்களைத் தொடர்ந்து போகின்றன.

ஏற்றத்தாழ்வு இல்லை

25 வண்மை இல்லைஓர்
வறுமை இன்மையால்
திண்மை இல்லை*ஓர்
செறுநர் இன்மையால்

---

24. வடம் - முத்துமாலை. மஞ்ஞை - மயில்.

25. செறுநர் - பகைவர்.

*ஓர் என்ற பாடம் சரசுவதிமால் ஏட்டிற் கண்டது.

உண்மை இல்லைபொய்
உரைஇ லாமையால்
ஒண்மை இல்லைபல்
கேள்வி ஓங்கலால்

வறுமை அந்நாட்டில் இல்லாத படியால், வள்ளல்கள் இருக்கிறார்களா இல்லையா என்பதைக் கண்டுகொள்ள இயலவில்லை. எதிர்த்துப் போர் செய்யும் பகைவர் எவரும் இல்லாததால், அந்நாட்டு மக்களுக்கு வலிமை உண்டா இல்லையா என்று தெரிவதற்குச் சந்தர்ப்பம் இல்லை. பொய் பேசுவார் இல்லாத படியால், உண்மை என்று ஒன்று உண்டா என்று ஆய்விட்டது. எல்லோரும் கல்வி கேள்வி களில் சிறந்தவர்களாக இருப்பதால், பேரறிஞர் என்று ஒருவரையும் பாராட்ட இடமில்லை.

விளைபொருள் வண்டிகள்

26 எள்ளும் ஏனலும்
இறுங்கும் சாமையும்
கொள்ளும் கொள்ளையிற்
கொணரும் பண்டியும்
அள்ளல் ஓங்குஅளத்
தமுதின் பண்டியும்
தள்ளும் நீர்மையில்
தலைம யங்குமே

25. கேள்வி - நூற்கேள்வி.

26. ஏனல் - தினை. இறுங்கு - ஒருவகைச் சோளம். கொள்ளையில் - மிகுதியாக. பண்டி - வண்டி. அள்ளல் ஓங்கு அளத்து - சேறு மிகுந்திருக்கிற உப்பளத்திலிருந்து. அமுது - உப்பு.

(வி - ம்) மலையிலும், நிலத்திலும், கடற்கரையிலும் உண்டாகும் பல்வேறு பொருள்களையும், ஊருக்குள் கொண்டு வரும் வண்டிகள் வீதிகளில் ஒன்றோடொன்று முட்டுவதனால் போக்கு வரத்துத் தினறுகிறது.

சோறூட்டும் தாய்

27 தாலி ஐம்படை
தழுவு மார்பிடை
மாலை, வாய்அமு
தொழுகு மக்களைப்
பாலின் ஊட்டுவார்
செங்கைப் பங்கயம்
வால்நி லாஉறக்
குவிவ மானுமே

நகை அணிந்திருக்கின்ற மார்பில் வாய்நீர் ஒழுகிக் கொண்டிருக்கின்ற குழந்தைகளுக்குப் பெண்கள் பாற் சோற்றை ஊட்டும்பொழுது குவிந்திருக்கிற சிவந்த கைகள், சந்திரனைக் கண்டு கூம்பும் தாமரைமலர்களைப் போல இருக்கின்றன.

(வி - ம்) பாற்சோற்றை ஊட்டும்போது கை குவிவது, மதியைக் கண்டு செந்தாமரைப்பூ குவிவதுபோலத் தோன்றுகிறது. காப்புக் கடவுள் கண்ணன் ஆதலால் அவனுக்குரிய சங்கு, சக்கரம், கதை, வாள், கோதண்டம் என்னும் ஆயுதங்களின் வடிவாகச் செய்து கோக்கப்பட்ட சங்கிலியைக்

---

27. தாலி ஐம்படை - ஐம்படைத் தாலி. மாலை—தொடர்ந்து. வாய்அமுது - வாய்நீர். பாலின் ஊட்டுவார் - பாலில் கலந்து சோற்றை ஊட்டுவார். வால்நிலா - வெண்மையான சந்திரன். மானும் - ஒத்திருக்கும்.

குழந்தைகளுக்கு அணிவது ஒரு வழக்கம். இந்த நகை ஐம்படைத்தாலி என்று கூறப்படுகிறது. 'தாலி களைந் தன்று மிலனே' (புறம் - 77), 'பொன்னுடைத்தாலி என் மகன்' (அகம் - 54) "தன் படைகளான திரு ஐம்படை தரித்தே" (கலிங் - அவதா – 9).

எல்லை காணாத ஆட்சி

28 சோலை மாநிலம்
துருவி யாவரே
வேலை கண்டுதாம்
மீள வல்லவர்
சாலும் வார்புனல்
சரயு வும்பல
காலின் ஓடியும்
கண்ட தில்லையே.

சோலைகள் நிறைந்த, தயரதனின் ஆட்சி பரவியுள்ள நிலத்தின் எல்லையைத் தேடிக்கண்டு திரும்பக் கூடியவர் யாவர்? மிகுந்து பெருகும் நீரையுடைய சரயு நதியும் தன்னுடைய பல வாய்க்கால்களால் ஓடியும் (நாட்டின்) எல்லையைக் கண்டதில்லை.

(வி - ம்) சரயுநதி தன்னுடைய ஆயிரக் கணக்கான கால்களால் வேகமாக ஓடியும் எல்லையைக் காண முடியாத போது இரண்டு கால்களுடைய மனிதர் எப்படி அதன் எல்லையைக் காணமுடியும் என்ற நயம் காணத்தக்கது.

---

28. துருவி - தேடி. வேலை - எல்லை. சாலும் - மிகுதி யான. கால் - வாய்க்கால்.

3. நகரப்படலம்

[அயோத்திமா நகரத்தின் சிறப்பைக் கூறும் படலம்]

வெள்ளை மாளிகை

29 *திங்களும் கரிதென
வெண்மை தீற்றிய
சங்கவெண் சுதையுடைத்
தவள மாளிகை,
வெங்கடுங் கால்பொர
மேக்கு நோக்கிய
பொங்கிரும் பாற்கடல்
தரங்கம் போலுமே.

சந்திரனும் சிறிது கருப்புத்தான் என்று சொல்லும் படி சங்குவெள்ளை பூசிய சுவரில் தேய்ப்புக் கொடுத்த வெள்ளை மாளிகைகள், கடுமையான காற்றடிக்கும்போது, மேல் நோக்கிப் பொங்கி எழுகின்ற பாற்கடலின் அலைகளைப் போன்றிருந்தன.

(வி - ம்) புயல் அடிக்கும்போது பாற்கடலில் அலை கிளம்பினால் உயரமாகவும், தாழ்வாகவும், சமமாகவும் எவ்வாறு காணப்படுமோ அவ்வாறு அந்நகரில் உள்ள பெரிய, சிறிய கட்டிடங்கள் ஒரே வெண்மையாகப் பால் நிறத்தில் தெரிகின்றன. நகரத்திற்கு மேலே விமானத்திலிருந்து பார்ப்பவர்களுக்கு அப்படி இருக்கிறது. சுண்ணும்பு நீற்றுவதில் பலவிதமுண்டு. நிலத்திலிருந்து எடுக்கப்படும் ஒருவகைக்கல், மலையிலிருந்து எடுக்கப்படும் சலவைக்கல்,

---

29. சங்க் வெண் சுதை - சங்கை நீற்று எடுத்த வெண்மையான சுண்ணும்பு. தவள மாளிகை - வெண்ணிறமான கட்டிடங்கள். கால் - காற்று. மேக்கு நோக்கிய - வானத்தைப் பார்த்த. இரு - பெரிய. தரங்கம் - அலை.

கடலில் கிடைக்கும் கிளிஞ்சில், சங்கு ஆகியவைகளை நீற்று, சுண்ணும்பு எடுக்கப்படுகிறது. இவற்றில் சங்கு நீற்ற வெள்ளை சிறப்புடையது. இது சுவரில் பூசித் தேய்க்கப் படும். எவ்வளவு தேய்க்கப்படுகிறதோ அவ்வளவு கெட்டி யும், பளபளப்பும், வழுவழுப்பும் ஏற்படும். 'வெண்மை தீற்றிய' என்ற சொற்கள் இங்கே மின்னும்படி தேய்த்த என்ற பொருளைக்கொண்டு நிற்கின்றன.

பொன் வேய்ந்த மாளிகை

30 புள்ளியம் புறவிறை
பொருந்தும் மாளிகை
தள்ளரும் தமனியத்
தகடு வேய்ந்தன;
எள்ளரும் கதிரவன்
இளவெ யிற்குழாம்
வெள்ளியங் கிரிமிசை
விரிந்த போலுமே.

புள்ளிகளை உடைய அழகிய மாடப்புருக்கள் தங்கும் படியான கூடுகளைப் போன்ற பலவித வேலைப்பாடுகள் அமைந்த மாளிகைகளில், நீக்க முடியாத தங்கத் தகடுகள் மேலே போடப்பட்டுள்ளன. அவை, கயிலாய மலையில் காலைச் சூரிய ஒளி பரவியது போலிருக்கிறது.

(வி – ம்) சங்கு வெள்ளை வைத்துத் தேய்க்கப் பட்ட மாளிகையின் மேற்பாகத்தில் செம்பொன் தகடு வேய்ந் திருப்பது, வெள்ளி மலையின்மீது காலை ஞாயிற்றின் செந்நிற ஒளி படுவது போலிருக்கிறது. இவ்விடத்தில் தில்லைப் பொன்னம்பலத்தை நினைவுபடுத்துகிருர் போலும்.

---

30. தள்ள + அரும்; எள்ள + அரும். புறவு - புரு. இறை - தங்குமிடம். தமனியம் - பொன்.

பொன்னுெளி புகுந்த வானம்

31 மின்என விளக்கென
வெயிற்பி ழம்பெனத்
துன்னிய தமனியத்
தொழில்த ழைத்தஅக்
கன்னிநல் நகர்நிழல்
கதுவ லால்அரோ
பொன்உலகு ஆயதப்
புலவர் வானமே.

மின்னல் என்றும், விளக்கின் சுடர் என்றும் வெயி லின் சோதி என்றும் சொல்லும் படியாகத் தங்கத்தினுல் வேலைப்பாடுகள் அமைந்த அந்த அயோத்தி நகரத்தின் நிழல், கவ்வி நிற்பதால்தான் தேவர்களுடைய வானுலகம், பொன் னுலகம் என்று சொல்லப்படுகிறது.

ஓவியம் இமையாத காரணம்

32 பொழுதுணர்வு அரியஅப்
பொருவில் மாநகர்த்
தொழுதகை மடந்தையர்
சுடர்வி ளக்கெனப்

31. துன்னிய தமனியத் தொழில் - கட்டிடங்களில் உயர்ந்த தங்கத்தினுல் செய்யப்பட்டிருக்கும் சித்திர வேலை. கன்னிநல் நகர் - அழித்தற்கியலாத நல்ல அயோத்தி. நிழல் - ஒளி. கதுவல் - கவ்விக்கொள்ளுதல் ; பற்றுதல். புலவர் - தேவர்.

32. பொழுது உணர்வு அரிய - இரவு, பகல் என்றில்லாத. பொருவு இல் - ஈடில்லாத. சுடர்விளக்கு எனப் பழுதறு மேனியை - ஒளியுள்ள விளக்கு என்று சொல்லும்படியாகவுள்ள குற்றமற்ற உடம்பை.

பழுதறு மேனியைப்
பார்க்கும் ஆசைகொல்
எழுதுசித் திரங்களும்
இமைப்பி லாதவே.

இரவு, பகல் என்று பொழுதைப் பகுத்து உணர முடியாத அந்த ஒப்பற்ற அயோத்தியில், யாவரும் தொழத் தக்க பெண்கள், சுடருகின்ற விளக்குப்போல் விளங்கு கின்றனர்; அவர்களது மாசுமறுவற்ற மேனியழகைப் பார்க்கும் ஆசையினுல்தான், சுவரில் எழுதி வைத்த சித்திரங் களும் கண் இமையாமல் இருக்கின்றன போலும்.

(வி - ம்) சித்திரங்கள் விழித்த கண்களுடன் எழுதப் பட்டிருக்கின்றன. வியப்புக் குறியுடன் அமைந்துள்ளன அவை. அந்நாட்டுப் பெண்களைக் கண்டு வியந்து நிற்கின்ற வெளிநாட்டு மக்களுக்கு, சித்திரங்களும் வியந்துதான் விழித்தபடி நிற்கின்றன என்று தோன்றுகிறது. சித்திரங் களும், சித்திரங்கள் என்று கருத முடியாதபடி உயிருள்ள உருவங்கள் என்றே தோன்றுகின்றன. அவற்றின் பாவ உணர்ச்சிகளைத் தெளிவுபடத் தீட்டியிருக்கின்றனர்.

நாட்டியப் பெண்கள்

33 பதங்களில் தண்ணுமை
பாணி பண்உற
விதங்களில் விதிமுறை
சதிமி திப்பவர்

---

33. பதங்களில் - பாடல்களில். தண்ணுமை - மத்தளம். பாணி - தாளம். பதம் - அபிநயத்துக்கும், நாட்டியத்துக்கும் என்றே பாடப்படும் பாட்டு. பண் - இராகம். விதிமுறை - பரத நூல் முறைப்படி. சதி - அடிவைத்தல்.

மதங்கியர் ; அச்சதி
வகுத்துக் காட்டுவ
சதங்கைகள் அல்லன
புரவித் தார்களே.

இசைக்கும், நடிப்புக்கும் இயைந்த பாடல்களோடு, மத்தளமும், கைத்தாளமும், இராகப் பண்ணும் பொருந்தப் பல விதங்களில், நாட்டிய இலக்கணத்தின்படி சதிமிதிப்பவர் நாட்டியப் பெண்களாவர். அந்தச் சதியை விரித்து விளக்குவது, காலில் அணிந்துள்ள சதங்கைகள் மட்டுமல்ல, நாட்டியக் குதிரைகளுக்கு அணிந்துள்ள கிண்கிணி மாலைகளும் ஆகும்.

(வி - ம்) பரதநாட்டியம் ஆடும் பெண்களுடன் நாட்டியக் குதிரைகளும் ஆடுகின்றன. சதி சுரத்துக்குத் தக்கபடி குதிரைகளும் அடிபோடுவதால், பெண்களின் காற் சதங்கை ஒலியும், குதிரைகளின் கழுத்து மணி ஒலியும் வேறுபாடின்றி ஒத்து விழுகின்றன.

இசை ஒலி

34 வளைஒலி, வயிர்ஒலி,
மகர வீணையின்
கிளைஒலி, முழவொலி,
கின்னரத்தொலி,

---

33. மதங்கியர் - நாட்டியம்ஆடும் இளம் பெண்கள். தார் - கிண்கிணி மாலைகள்.

34. வளை - சங்கு. வயிர் - ஊது கொம்பு. கின்னரம் - வீணை வகையைச் சார்ந்த ஒரு இசைக் கருவி.

துளை ஒலி, பல்லியம்
துவைக்கும் கம்மையின்
விளை ஒலி, கடல் ஒலி
மெலிய விம்முமே.

அந்த நகரத்தில், சங்கொலியும், ஊது கொம்புகளின் ஒலியும், மகர வீணையிலிருந்து பலவிதமாகப் பிரிந்து எழும் ஒலியும், மத்தள ஒலியும், கின்னரம் என்ற கருவியின் ஒலியும், குழல் முதலிய துளைக் கருவிகளிலிருந்து வரும் ஒலியும், மற்றும் பல வகையான (தாள) வாத்தியங்கள் கலந்த பின்னணி இசை முழக்குவதால் ஏற்படும் ஒலியும் சேர்ந்து கடல் அலையின் ஒலி கீழாகும்படி நிறைந்தன.

பல்வகை மண்டபம்

35 மன்னர் தருதிறை
அளக்கும் மண்டபம்,
அன்னமென் நடையவர்
ஆடும் மண்டபம்,
உன்னரும் அருமறை
ஓதும் மண்டபம்,
பன்னரும் கலைதெரி
பட்டி மண்டபம்.

ஏனை மன்னர்கள் தருகின்ற கப்பப் பொருளைக் கணக்கிட்டுப்பார்க்கும் மண்டபமும், அன்னம் போன்ற நடையை யுடைய நடனமாதர் நாட்டியமாடும் மண்டபமும், நினைக்க முடியாத அரிய மறைகளை ஓதுதற்குரிய மண்டபமும்,

---

34. பல்லியம் - பின்னணி இசைக் கருவிகள்.

35. திறை - கப்பம். உன்ன+அரும் - நினைத்தற்கரிய. பன்ன+அரும் - சொல்லுதற்கரிய.

சொல்ல முடியாத அருங்கலைகளை ஆராய்கிற பட்டி மண்டபமும் அந்நகரில் உள்ளன.

பொழுது போக்கு

36 ஊடவும் கூடவும்
உயிரின் இன்இசை
பாடவும் விறலியர்
பாடல் கேட்கவும்
ஆடவும் அகன்புனல்
ஆடி அம்மலர்
சூடவும் பொழுதுபோம்
சிலர்க்குஅத் தொல்நகர்

அந்நகரில் உள்ள இளங்காதலர்களுக்கு, பிணங்குதலிலும், பிறகு இணங்கி இன்புறுதலிலும், உயிரோடு ஒட்டி உருகத்தக்க இனிய இசையைப் பாடுதலிலும், பாடி ஆடும் விறலிப் பெண்களின் பாடலைக் கேட்பதிலும், நடனம் பயிலுதலிலும், நீச்சுத் தடங்களில் நீந்தி விளையாடுதலிலும், மலர் கொய்து தொடுத்து, அணிந்து அழகு பார்ப்பதிலும் பொழுது கழியும்.

(வி - ம்) உயிரோட்ட முள்ள இசை அல்லது உயிரைக் காட்டிலும் இனியதாகக் கொள்ளத்தக்க இசை என்று கொள்க. ஊடிக் கூடுதலே காமத்திற்கு இன்பமாதலால் ஊடலையும் உடன் கூறினர். "ஊடுதல் காமத்திற் கின்பம் அதற்கின்பம், கூடி முயங்கப் பெறின்" (குறள் 1330).

---

36. விறலியர் - மெய்ப்பாடு தோன்றப் பாடி ஆடும் பெண்கள். ஆடவும் - நடனம் ஆடவும். அகன்புனல் - பரந்து கிடக்கிற நீர்நிலை.

இதுவும் அது

37 கரியொடு கரிஎதிர்
பொருத்திக், கைப்படை
வரிசிலை முதலிய
வழங்கி, வால்உளைப்
புரவியிற் பொருவில்செண்டு
ஆடிப், போர்க்கலை
தெரிதலிற் பொழுதுபோம்
சிலர்க்கு அச்சேண் நகர்.

யானையோடு யானையைப் போர் மூட்டியும், கையின் கண் உள்ள வில் முதலிய படைக்கலங்களைக் கொண்டு போர் செய்து பழகியும், குதிரை மீதேறி அரிய செண்டாட்டம் ஆடியும், இந்தவிதமாகப் போர்க்கலை பயிலுதலில் சில இளைஞர்களுக்கு, அந்த நகரில் பொழுது கழியும்.

இன்ப நகரம்

38 *ஏகம் முதற்கல்வி முளைத்தெழுந்து,
எண்ணில் கேள்வி
ஆகும் முதல் திண்பணை போக்கி,
அருந்தவத்தின்
சாகம் தழைத்து,அன்பு அரும்பி,
தருமம் மலர்ந்து,
போகம் கனிஒன்று பழுத்தது
போலும் அன்றே.

---

37. கரி - யானை. வால் உளை - நீண்ட பிடரி மயிர். பொருவு இல் - ஒப்பில்லாத. செண்டு - குதிரைமீதேறிச் சுழற்றிப் பழகும் கருவி. சேண் - பரந்த.

38. கல்வி ஏகம் - கல்வி என்கிற ஒப்பற்ற. முதல் - விதை. முதல் திண்பணை - அடிமரமும், கிளைகளுமாக. சாகம் - இலைகள்.

கல்வி என்ற விதை முளைத்து அளவில்லாத கேள்வி யாகிய அடிமரமும் கிளைகளும் எழும்பி, அருமையான தவம் என்கிற இலைகளைப் பரப்பி, அன்பாகிய அரும்பை உண் டாக்கி, தருமமாகிய பூவை மலர்வித்து, இன்பமாகிய பழத்தைத் தந்தாற்போல இந்த அயோத்தி நகரம் விளங்கு கிறது.

(வி – ம்) மக்களுக்கு, இந்நகரம் அறிவிலே தோன்றி வளர்ந்து பழுத்த ஒரு இன்பப் பழம் என்பது கருத்து. போகக்கனி என்பது போகங்கனி என மெலித்தல் விகாரம் பெற்றது.

---

4. அரசியற் படலம்

[அரசு+இயல்+படலம். தயரத மன்னனின் ஆட்சி முறைமையைக் கூறும் படலம்.]

தயரதத் தருமமூர்த்தி

39 அம்மான் நகருக்கு அரசன்;
அரசர்க் கரசன்;
செம்மான் தனிக்கோல் உலகேழினும்
செல்ல நின்றான்;
இம்மான் கதைக்கோர் இறையாய
இராமன் என்னும்
மொய்ம்மான் கழலோற் றருநல்அற
மூர்த்தி அன்னான்.

39. செம்மாண் - செம்மையான பெருமையையுடைய. இம் மாண் கதைக்கு - இந்த உயர்ந்த இராமகதைக்கு. கழலோன் தரு - வீரக்கழலை அணிந்திருக்கின்ற இராமனைப் பெற்ற. அறமூர்த்தி அன்னான் - தரும தேவதையைப் போன்ற தயரதன்.

பெருமை பொருந்திய அந்த அயோத்தி நகருக்கு அரசனும், மற்றைய அரசர்க்கெல்லாம் சக்கரவர்த்தியும் ஆகிய தயரதன், செம்மையான ஒப்பற்ற தன் அரசாட்சி, ஏழு உலகும் செல்லும்படி ஆண்டான். அவன் யார் என்றால், இந்த இராம காதைக்குத் தலைவனாகிய இராமன் என்று சொல்லப்படுகின்ற நிறைந்த பெருமை பொருந்திய வீரக்கழலை அணிந்தவனைப் பெற்ற நல்ல தரும தேவன் என்று சொல்லும் பெருமையுடையவனாவான்.

தயரதன் பண்பு

40 **தாய்ஒக்கும் அன்பில்; தவம்ஒக்கும்**
நலம்ப யப்பில்;
சேய்ஒக்கும் முன்நின்று ஒருசெல்கதி
உய்க்கும் நீரால்;
நோய்ஒக்கும் என்னின் மருந்தொக்கும்;
நுணங்கு கேள்வி
ஆயப் புகுங்கால் அறிவொக்கும்
எவர்க்கும் அன்னான்.

அந்தத் தயரதன், மக்களிடத்து அன்பு செலுத்துவதில் தாயைப் போன்றவன் ; நன்மை செய்வதில் தவத்தைப் போன்றவன் ; முன்னே நின்று நல்வழியில் அழைத்துச் செல்வதில் தலைவனைப் போன்றவன் ; வளர்ச்சி யடைந்து நோய் துன்புறுத்தும் பொழுது அதைத் தடுத்துப் போக்கும் மருந்தைப் போன்றவன் ; நுட்பமான நூற்பொருளை ஆராய முற்பட்டால், அதற்கேற்ற அறிவு விளக்கப் பொருளைப் போன்றவனாகவும் இருக்கின்றான்.

---

40. சேய் - தலைவன். செல்கதி உய்க்கும் நீரால் - மக்கள் செல்லவேண்டிய நெறியிலே கொண்டு செலுத்தும் தன்மையினாலே. உய்க்கும் - செலுத்தும். நுணங்கு - நுட்பமான.

(வி - ம்) பிள்ளைக்குப் பசிக்கும் நேரத்தை அறிந்து பாலூட்டுபவள் தாய். 'பாலுண் குழவி பசுங்குடர் பொறுதென, நோயுண் மருந்து தாயுண்டாங்கு' என்று தாயின் அன்பு கூறப்படும். அந்த நாட்டு மக்கள்பால் தாய்போல அன்பு பூண்டு நின்றான். அந்த நாட்டு மக்கள் எல்லோரும் செய்த தவமாக மன்னன் பிறந்தான்; தவத்தின் பயனாக அல்ல. தவமே நேரில் வந்து, தவம் புரிந்த மக்களுக்கு நன்மை செய்யக் காத்திருப்பதைப் போல மன்னன் இருக்கின்றான். 'சேய் ஒக்கும்' என்ற தொடருக்கு, செல்லவேண்டிய நற்கதியில் செலுத்துதலால், மகனை ஒப்பான் என்று உரைப்பாரும் உளர். உடல் நோய், மன நோய் என்ற இரண்டுக்கும் மருந்துபோல அவன் ஆட்சி விளங்குகிறது. நுட்பமான நூற்பொருளை ஆராயப் புகுமிடத்து அறிவு விளக்கம் தரும்படி விளங்குகின்றான்.

உலகமே ஒரு நகர்

41 *நேமிமால் வரைமதில்
ஆக, நீள்புறப்
பாமமா கடல்கிடங்கு
ஆக, பன்மணி
வாமமா ளிகைமலை
ஆக, மன்னற்குப்
பூமியும் அயோத்திமா
நகரம் போலுமே.

மண்ணுலகிற்கு வெளி எல்லையாக உள்ள சக்கர வாள கிரி மதிற்சுவராகவும், நாற்புறமும் சூழ்ந்திருக்கின்ற பரந்த

---

41. நேமி - சக்கரவாளகிரியாகிய. பாம - பரந்த. வாம - அழகான. கிடங்கு - அகழி. 'மாளிகை மலையாக' என்பதை 'மலை மாளிகையாக' என்று மாற்றிக்கொள்ளவேண்டும்.

கடல் அகழியாகவும், பல மணிகள் நிறைந்துள்ள பல மலைகள் அழகிய மாளிகைகளாகவும் காட்சியளிக்க, மண்ணுலகமே அயோத்தி மாநகரம் என்று சொல்லும்படி மன்னவன் ஆட்சி பரவி நின்றது.

(வி - ம்) அயோத்தியைத் தலைநகராகக் கொண்டு தயரதன் கோசல நாட்டை ஆண்டான். ஆனால், அதே பொழுதில் உலகத்துக்கே சக்கரவர்த்தியாக இருந்தான். அவனுடைய பெரிய அரசாட்சியின் விரிவை வருணித்தால், பெரிய சக்கரவாளகிரியைக் கோட்டை மதிலென்றும், சுற்றி வளைந்து கிடக்கும் கடலை அகழி என்றுந்தான் கூற வேண்டும். அங்ஙனம் கூறினால், இந்த எல்லைக்குட்பட்ட நிலப்பரப்பை அயோத்தி நகரம் என்றும், இடையே நிற்கும் மலைகளை எல்லாம் மாளிகைகள் என்றும் எண்ணிக் கொள்ளவேண்டியதுதான். இங்ஙனம் ஒரு பரந்தகன்ற பார்வையைக்கொண்டு பார்த்தால், காவியப் படைப்பு எப்படிப் போகிறது என்பது தெரியும். தலை நகரமாகிய அயோத்தியில் உள்ள எல்லா வசதிகளும், அவன் ஆட்சிக்குட்பட்ட நிலப்பரப்பெங்கும் கிடைத்தன என்பது கருத்து.

கழலும் வேலும்

42 ஆவரும் வன்மைநேர்
அறிந்து நீட்டலால்
மேவரும் கையடை
வேலும் தேயுமால்;

---

42. ஆவரும் - உண்டாகும். வன்மை - மிகுந்த அழுக்கு ; திரு. மேவ அரும் - பயன் படுத்துவதற்கு வாய்ப்பு இல்லாத.

கோவுடை நெடுமணி
மகுட கோடியால்
சேவடி அணிந்தபொற்
கழலும் தேயுமால்.

தானே உண்டாகின்ற துருவின் மிகுதியை நன்ருகத் தெரிந்து தீட்டுவதால், பயன்படுத்தப்படாமல் கிடக்கின்ற கைவேலும் தேய்ந்துபோகிறது. மற்றைய அரசர்களின், மணிகள் பதித்த கோடிக்கணக்கான மகுடங்கள் தீண்டுவதால் கால்களில் அணிந்திருக்கின்ற வீரக்கழல்களும் தேய்ந்து போகின்றன.

(வி - ம்) சாதாரணமாகப் போரில் பயன்படுத்தும் பொருட்டு அடிக்கடி சாணைபிடிக்கப்படுவதால் ஆயுதங்கள் தேய்வதும், நகைகள் அணிந்தும் கழற்றியும் துடைத்தும் மெருகிட்டும் வருவதால் தேய்வதும் இயல்பு. ஆனல், இங்கேயோ தயரதன் என்ற பெயர் கேட்ட மாத்திரத்தில் எதிரிகள் அடங்கிவிடுகிருர்கள். ஆதலால், ஆயுதங்கள் துருப்பிடித்துக் கிடக்கின்றன. ஆயுத பூசை போன்ற காலங்களில்தான், எடுத்து நல்ல பட்டைச் சேலை போட்டுத் தேய்த்துத் துருவைப் போக்குகிருர்கள். அதில்தான் வேல் முதலிய படைக்கலங்கள் தேய்கின்றன. காலில் அணிந்திருக்கின்ற வீரக்கழல்களோ, திறைகொண்டு வந்த மன்னர்கள் விழுந்து விழுந்து வணங்க அவர்களின் முடிகள் உராய்வதால் தேய்ந்து மெருகேறிக் கொள்ளுகின்றன. போர் நடக்கவில்லை என்பது மட்டுமல்ல, போர் செய்யும் அரசர்களும் காலில் வந்து விழுந்து வணங்குகிருர்கள் என்பது கருத்து.

---

42. சேவடி - செம்மை + அடி - செம்மையான பாதங்கள்.

குடை நிழல்

43 மண்இடை உயிர்தொறும்
வளர்ந்து தேய்வின்றித்
தண்நிழல் பரப்பவும்
இருளைத் தள்ளவும்
அண்ணல்தன் குடைமதி
அமையும் ஆதலால்
விண்இடை மதியினை
மிகைஇ தென்பவே.

தயரதனின் ஆட்சியானது, பூவுலகில் உள்ள உயிர்களுக்கு நோய், பகை முதலிய வெப்பம் தோன்றாமல் இன்பமாகிய குளிர்ச்சியைத் தருவதாலும், அறியாமையாகிய இருளை நீக்குவதாலும், அந்த நிலை தேய்வில்லாமல் வளர்ந்தோங்கி வருவதாலும், வளர்ந்து தேய்கிற மற்றொரு வானத்துச் சந்திரன் தேவையில்லாத பொருள் என்று அந்நாட்டவர் கூறினார்கள்.

(வி - ம்) அரசர்கள், தங்கள் ஆட்சியின்கீழ் உள்ள உயிர்களுக்குத் துன்பமாகிய வெப்பம் தாக்காதபடி இன்பமாகிய நிழலைச் செய்து ஆட்சிபுரிகின்றோம் என்ற குறிப்பை உணர்த்துதற் பொருட்டு, சந்திரவட்டக் குடையின்கீழ் இருந்து ஆட்சிபுரிவது மரபு. தயரதனின் ஆட்சியானது, உயிர்களுக்கு இன்பத்தையும், அறிவையும் தருவதால், சந்திரன் தேவையில்லை என்று தோன்றுகிறது. இந்நாடு வெப்ப நாடாதலால் நிழல் இன்பமாகவும், சூடு துன்பமாகவும் கருதப்பட்டன.

---

43. இருளை - அறியாமை இருளை. குடைமதி - சந்திரவட்டக்குடை.

உயிரேலாந் தாங்கும் உடல்

44 வயிரவான் பூண் அணி
மடங்கல் மொய்ம்பினன்
உயிர்எலாம் தன்உயிர்
ஒப்ப ஓம்பலால்
செயிர் இலா உலகினிற்
சென்று நின்றுவாழ்
உயிர்எலாம் உறைவதோர்
உடம்பும் ஆயினன்.

வயிரத்தினலான நகைகளை அணிந்துள்ளவனும், சிங்கத்தைப் போன்ற வலிமை பொருந்தியவனுமாகிய தயரதன், உலகிலுள்ள உயிர்களைத் தன் உயிர் என மதித்துப் பாதுகாத்து வருதலால், குற்றமற்ற இந்த உலகில், நின்றும் நடந்தும் வாழுகின்ற எல்லா உயிரும் பொருந்தி யிருப்பதாகிய ஒரே உடம்பு போல விளங்கினன்.

(வி – ம்) உலக மக்களின் உயிராக அரசன் இருக்கின்ருன் என்பதுதான் ஆசிரியர்கள் கூறிவந்த மரபு. அப்படியேதான் மக்களும் கருதிவந்தனர். "நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே, மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்" (புறம் - 186). ஆனல் இங்கே தலைப்பு மாறிவிட்டது. மக்கள்தான் உயிர்; மன்னன்தான் உடல் என்று கூறப்பட்டுள்ளது. மக்களின் நோக்கத்தை உடலாகிய மன்னன் நிறைவேற்ற வேண்டும் என்ற குடியரசின் தத்துவத்தை, ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கூறி

---

44. மடங்கல் - சிங்கம். மொய்ம்பினன் - வலிமையையுடைய தயரதன். செயிர் - குற்றம். சென்று நின்று வாழ் உயிர் - நடப்பனவும் நிற்பனவும்.

அரசியலிலேயே ஒரு பெரும் புரட்சியை உண்டாக்கியிருக்கிறார் நம் கம்பர்.

ஆட்சிச் சக்கரம்

45 குன்றென உயரிய
குவவுத் தோளினன்
வென்றி அம் திகிரிவெம்
பரிதி ஆம்என,
ஒன்றென உலகிடை
உலாவி, மீமிசை
நின்றுநின்று உயிர்தொறும்
நெடிது காக்குமே.

மலை என்று சொல்லும்படி பருத்து உயர்ந்த திரண்ட தோள்களையுடைய தயரதனின், வெற்றி தரும் சிறந்த ஆட்சிச் சட்டமானது, சூரியன் என்று சொல்லும்படியாகவும், உலகிற்கே ஒன்றுதான் என்று சிறப்பித்துச் சொல்லும்படியாகவும், உலாவி உயரத்தில் நின்று நின்று பார்த்து ஒவ்வொரு உயிரும் துன்புறாமல் இன்புறும்படி தொடர்ந்து இடையறாது காப்பாற்றும்.

(வி – ம்) ஆட்சியாகிய சக்கரம் (சட்டம்) எல்லோருக்கும் ஒரே படித்தாக இருந்தது. சூரியனைப் போல விளக்கமாகவும், யாரும், எதுவும் அனுபவிக்கும்படியாகவும் இருந்தது. மேலும் எல்லா உயிரையும் வேறுபாடின்றிக் காப்பாற்றியது.

---

45. திகிரி - சக்கரம்; ஆட்சிக்குரிய சட்டத்தைச் சக்கரம் என்று சொல்லுவது மரபு. பரிதி - ஞாயிறு; சூரியன். மீமிசை - வான வெளிக்கு மேலே.

உலகம் ஒரு வயல்

46 எய்என எழுபகை
எங்கும் இன்மையால்
மொய்பெறுத் தினவுறு
முழவுத் தோளினன்
வையகம் முழுவதும்
வறிஞன் ஓம்புமோர்
செய்எனக் காத்தினிது
அரசு செய்கின்றான்.

என்மேல் அம்பைவிடு பார்க்கலாம் என்று எழுந்து எதிர்த்து வருகின்ற பகைவர்கள் எங்கும் இல்லாதபடியால், போர் செய்யப் பெறுமல் தினவெடுக்கின்ற மத்தளம் போன்ற தோள்களை உடைய தயரதன், வறுமையுள்ள ஒரு உழவன் எப்படித் தனக்குள்ள விளைநிலத்தைப் பண்படுத்திப் பயிரிட்டுக் காப்பானே அப்படி வையக முழுவதையும் காப் பாற்றி அரசாண்டான்.

(வி – ம்) போரில்லா திருந்தால்தான் உலகம் அமைதி யாகவும் ஆட்சி ஒழுங்காகவும் நடைபெற முடியும் என்ற குறிப்பும் தோன்றுகிறது.

---

46. எய்என - அம்பை என்மேல் விடுஎன்று. எழுபகை - எதிர்த்துவரும் பகைவர்கள். மொய்பெறு - போர் கிடைக்கப் பெறுமல். தினவு - விருவிருப்பு.

5. கை அடைப் படலம்

[கோசிக முனிவரிடம் இராம இலக்குவரை ஒப்புவித்த செய்தியைக் கூறும் படலம். கைஅடை - அடைக்கலம்]

கரையிலாக் களிப்பு

47 அரசர்தம் பெருமகன்
அகிலம் யாவையும்
விரசுறு தனிக்குடை
விளங்க வென்றிசேர்
முரசொலி கறங்கிட
முனிவர் ஏத்துறக்
கரைசெயல் அரியதோர்
களிப்பின் வைகுநாள்

அரசர்க்கெல்லாம் அரசனாகிய தயரதன், உலகம் முழுதும் செறிந்து பொருந்திய ஒப்பற்ற தன்ஆட்சி விளங்கவும், வெற்றி முரசு முழங்கவும், முனிவர்கள் வாழ்த்தவும் கரை கடந்த மகிழ்ச்சியில் திளைத்திருக்கிற நாளில்.

(வி – ம்) இப்பொழுது தயரதனுக்கு ஒரு குறையுமில்லை. ஆட்சி, செல்வம், மனை, மக்கள் ஆகிய எல்லா இன்பமும் பெருகியிருக்கின்றன. ஒரே களிப்பு. களிப்பின் உச்சத்தில் எதிர் மறையான நிகழ்ச்சி உருவாகப் பார்க்கிறது.

---

47. அகிலம் - உலகம். விரசுறு - செறிந்த ; (வேறு ஆட்சி புக முடியாதபடி).

மன்னன் கோலுமண்டபம் புகுதல்

48 நனைவரு கற்பக
நாட்டு நன்னகர்
அனைவரும் அணைதர
அயிர்க்கும் சிந்தையால்
நினையவும் அரியது
விசும்பின் நீண்டதோர்
புனைமணி மண்டபம்
பொலிய எய்தினுன்.

பூமொட்டுக்கள் பொருந்திய கற்பக மரம் அடர்ந்த அமரர் நாட்டினது தலைநகரில் உள்ள தேவர்கள் யாவரும் (இதுதான் இந்திரன் கொலு மண்டபமோ என்று கருதி) வந்து சேரும்படி ஐயப்பாட்டைத் தருகிறது. இந்த மாதிரி வேறொரு மண்டபத்தை அமைக்கலாம் என்று நினைக்கவும் முடியாது. வான மண்டலத்தின் அளவுக்கு உயர்ந்துள்ளது. அப்படி இரத்தினங்கள் பதித்து அழகு செய்யப்பட்ட கொலு மண்டபம் விளங்கும்படி தயரதன் வந்தான்.

ஐயமும் தெளிவும்

49 தூயமெல் அரியணைப்
பொலிந்து தோன்றினுன்;
சேயிரு விசும்பிடைத்
திரியும் சாரணர்
நாயகன் இவன்கொலென்று
அயிர்த்து நாட்டம்ஓர்
ஆயிரம் இல்லைஎன்று
ஐயம் நீங்கினுர்.

---

48. நனைவரு - பூ அரும்பு தோன்றுகின்ற. புனைமணி மண்டபம் - மணி புனை மண்டபம்.

49. சேய் இரு - உயர்ந்த பெரிய. சாரணர் - தூதுவர். நாயகன் - தங்கள் தலைவனுகிய இந்திரன்.

குற்றமற்ற மெத்தென்றிருக்கிற அரியணையில் பொலிவு பெற்று வீற்றிருந்தான். உயர்ந்த பெரிய வானத்தில் உலா வித் திரிகின்ற தேவதூதர்கள், தங்கள் தலைவனாகிய இந்திரன் தானே இங்கே வீற்றிருக்கின்றான் என்று சந்தேகப்பட்டுப் பிறகு, இவனுக்கு ஆயிரம் கண்கள் இல்லை ஆகையால் இவன் இந்திரன் அல்லன் என்று உறுதி கொண்டனர்.

கோசிக முனிவரின் தோற்றம்

50 மடங்கல்போல் மொய்ம்பினான்
முன்னர் மன்னுயிர்
அடங்கலும் உலகும்வேறு
அமைத்துத் தேவரோடு
இடங்கொள் நான் முகனையும்
படைப்பன் ஈண்டெனாத்
தொடங்கிய கோசிக
முனிவன் தோன்றினான்

முன் ஒரு காலத்தில் உலகில் உள்ள உயிர்கள் யாவற்றையும், உலகினையும் உண்டாக்கி, தேவர்களையும், பிரமனையும் புதிதாக உண்டு பண்ணுவேன் என்று முற்பட்ட கோசிகன் என்ற முனிவர், சிங்கத்தைப் போன்ற வலிமை பொருந்திய தயரதனுக்கு முன்பு தோன்றினார்.

மன்னன் முனிவரை வணங்கல்

51 *வந்துமுனி எய்துதலும்
மார்பின்அணி ஆரம்
அந்தர தலத்திரவி
அஞ்சஒளி விஞ்சக்

---

50. மடங்கல் - சிங்கம். மொய்ம்பு - வலிமை. கோசிகன் - கதைப் பாத்திரங்கள் 11 பார்க்கவும்.

51. இரவி – சூரியன்.

கந்தமல ரிற்கடவுள்
தன்வரவு காணும்
இந்திரன் எனக்கடிது
எழுந்தடி பணிந்தான்

முனிவர் வந்து நுழைந்ததும், தன் மார்பில் அணிந்திருக்கின்ற இரத்தின மாலைகள், வானில் உள்ள சூரியன் அஞ்சும்படி ஒளி மிஞ்சி அடிக்க, தாமரை மலரிலிருக்கும் பிரமனைக் கண்ட இந்திரனைப் போன்று விரைவாக எழுந்து முனிவருடைய காலில் விழுந்து வணங்கினன் தயரதன்.

(வி – ம்) உலகை எல்லாம் பிரமனோடு போட்டி போட்டுப் படைத்தவராதலால், கோசிகருக்குப் பிரமன் உவமை. செல்வத்தில் சிறந்த இந்திரன், தயரதனுக்கு உவமை. விண்ணுலகிலன்றி மண்ணுலகிலும் பிரமனும் இந்திரனும் இருக்கின்றார்கள்!

முனிவரை வழிபடல்

52 பணிந்துமணி செற்றுபு
குயிற்றி அவிர் பைம்பொன்
அணிந்ததவிசு இட்டினிது
அருத்தியொ டிருத்தி,
இணைந்தகம லச்சரன்
அருச்சனைசெய்து, இன்றே
துணிந்ததுஎம் வினைத்தொடர்பு
எனத்தொழுது சொல்லும்

---

51. கந்த மலரில் கடவுள் – மணமுள்ள தாமரை மலரில் உள்ள பிரமன். மலரென்றாலே தாமரை மலரைத்தான் குறிக்கும். “பூவெனப் படுவது பொறிவாழ் பூவே.”

52. மணி செற்றுபு குயிற்றி–இரத்தினங்களை நெருக்கமாகப் பதித்து. அவிர் – ஒளி விடுகின்ற. தவிசு – ஆசனம்; இருக்கை. அருத்தியொடு – அன்போடு. சரண் – திருவடிகளை. துணிந்தது – வெட்டுப்பட்டது; ஒழிந்தது.

(தயரதன் இவ்வாறு) வணங்கி, இரத்தினங்கள் பதித்து அழகாக விளங்குகின்ற பொன்னாலாகிய இருக்கை இட்டு, அதில் அன்போடு அம்முனிவரை இருக்கும்படி செய்தான். ஒன்று சேர்ந்திருக்கின்ற அவரது இரண்டு திருவடிகளையும் அருச்சித்து வழிபாடு செய்து, கூப்பிய கையுடன் நின்று, என்னுடைய வினை எல்லாம் ஒழிந்தது என்று கூறி, மேலும் தொழுது கூறுகின்றான்.

முனிவர்க்கு முகமன் மொழிதல்

53 நிலம்செய் தவம் என்றுணரின்
அன்று; நெடி யோய்! என்
நலம்செய்வினை உண்டெனினும்
அன்று; நகர் நீயான்
வலம்செய்துவ ணங்களளி
வந்தஇது முந்தெம்
குலம்செய்தவம்; என்றினிது
கூறமுனி கூறும்

பெருமை பொருந்தியவனே! நான் வலம் செய்து வணங்கும்படி நீ எளிதாக இந்நகரத்துக்கு எழுந்தருளியது, இந்நாடு செய்த தவத்தினால் மட்டும் அல்ல, நான் செய்த நல்வினையினால் மட்டுமல்ல, என் முன்னோர் செய்த தவத்தினால் விளைந்ததே யாகும் என்று அரசன் கூற, முனிவர் கூறுகின்றார்.

---

53. நெடியோய் - அறிவு, ஒழுக்கம், தவம் முதலிய வகைகளில் உயர்ந்தவனே. நலம் செய்வினை – நல்ல செயல்களினால் ஆகிய நல்வினை. எளி வந்த இது – வருந்தியழையாமல் தாமாக வந்த இந்த நிகழ்ச்சி.

(வி – ம்) நாடு முழுதும் வருந்தி அழைத்தாலும் கோசிக முனிவர் வரமாட்டார். மன்னர்மன்னன் அழைத்தாலும் வரமாட்டார். இப்பொழுது அழைப்பில்லாமலே தாமாகப் புறப்பட்டு வந்திருப்பதால், தன் முன்னோர் தொடர்ந்து செய்த பெருந்தவம் எல்லாம் ஒன்று சேர்ந்து இவருடைய வருகையை உண்டாக்கி இருக்கிறது என்று உபசரித்தான்.

முனிவரின் கூற்று : தயரதனைப் புகழ்தல்

54 *என்அனைய முனிவரரும் இமையவரும்
இடையூறென்று உடையர் ஆனல்
பன்னகமும் நகுவெள்ளிப் பனிவரையும்
பாற்கடலும் பதும பீடத்
தன்நகரும் கற்பகநாட்டு அணிநகரும்
மணிமாட அயோத்தி என்னும்
பொன்நகரும் அல்லாது புகல்உண்டோ
இகல்கடந்த புலவு வேலோய்!

என்னைப் போன்ற முனிவர்களும், தேவர்களும் ஏதாவதொரு இடையூற்றுக்குள் அகப்பட்டுக் கொண்டால் அவர்களுக்கு எல்லா மலைகளுக்கும் மேலாக விளங்குகிற கைலாய மலையும், பாற்கடலும், தாமரை மலரிலிருக்கிற பிரமனின் சத்திய உலகமும், தேவருலகத்தின் அழகை எல்லாம் கவருகின்ற மாட மாளிகைகளையுடைய அயோத்தி நகரமும் அல்லாமல் வேறே போக்கிடம் ஏது ?

---

54. பல் நகமும் நகு - பல மலைகளையும் பார்த்துச் சிரிக்கின்ற. நகம் - மலை. பனி வெள்ளி வரை - குளிர்ந்த கைலாயமலை. பதும பீடத்தன் - தாமரை மலரை இருக்கையாகக் கொண்டவன்; பிரமன். பதுமம் - தாமரை; பீடம் - இருக்கை. இகல் கடந்த - போர் செய்தல் என்னும் எல்லையைக் கடந்த. புலவு வேல் - கொழுப்புத் தடவப் பெற்ற வேல்.

(வி – ம்) என்னைப் போன்ற முனிவர்களுக்கும், தேவர்களுக்கும் முயலுகின்ற செயலில் ஏதாவது இடையூறு ஏற்பட்டால் சிவன், திருமால், பிரமன், தயரதன் ஆகியோர் இருக்கும் இடங்களாகிய இந்த நான்கைத் தவிர, போய் முறையிட வேறு இடம் எங்கே இருக்கிறது என்று கோசிக முனிவர் பாராட்டினார். மும்மூர்த்திகளோடு தயரதனை நாலாவது மூர்த்தியாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

'கற்பக நாட்டு அணி நகரும்' என்று பாடங்கொண்டு தேவருலகத்திலுள்ள அழகிய அமராவதி நகரமும் என்று ஐந்தாகக் கணக்கிட்டு உரைப்பாரும் உளர். இந்தப் பாடம் பிழையானதாகும். முனிவர்க்குத் துன்பம் உண்டானால் அமராவதிக்குச் சென்று முறையிடலாம். தேவர்கட்குத் துன்பம் வரும்போது அமராவதிக்குச் சென்று முறையிடல் இயலாததொன்று. 'முனிவரும் இமையவரும் இடையூறென் றுடையரானல்' என்பதைக் கவனிக்க வேண்டும். மேலும் அடுத்துவரும் பாடலைக்கொண்டு இந்திரன் அசுரர்களை முற்ற அழிக்கும் ஆற்றல் இல்லாதவன் என்பதும் அதற்குப் பிறர் உதவியை நாடுபவன் என்பதும் அறியக் கிடக்கின்றன. அதனால் இங்கு அமராவதி எனக் கொள்வது பொருந்தாது.

இதுவும் அது

55 இன்றளிர்க்கற் பகநறுந்தேன் இடைதுளிக்கும்
நிழல்இருக்கை இழந்து போந்து
நின்றளிக்கும் தனிக்குடையின் நிழல்ஒதுங்கிக்
குறைஇரந்து நிற்ப நோக்கிக்

55. இன் + தளிர் - இனிய கொழுந்துகளையுடைய. நின் + தளிக்கும் - உன்னுடைய செழித்த.

குன்றளிக்கும் குலமணித்தோட் சம்பரனைக்
குலத்தோடும் தொலைத்து நீகொண்டு
அன்றளித்த அரசன்றோ புரந்தரன் இன்று
ஆள்கின்றது அரச என்றான்

கற்பக மரங்களுக்கு இடையில் நல்ல தேன் துளித்துக் கொண்டிருக்க, கவலையற்றிருக்கும் தேவேந்திரன் அரசைப் பறிகொடுத்துவிட்டு உன்னுடைய குளிர்ந்த குடைநிழலில் ஒதுங்கி நின்று பிச்சை கேட்க, அன்று இந்திரன் பகைவனு கிய சம்பராசுரனை அடியோடு தொலைத்துத் தேவருலகத்தை மீட்டு உன்னால் ஈயப்பட்டதல்லவா, இப்பொழுது இந்தி ரன் இருந்து ஆளுகிற பொன்னுலக ஆட்சி என்று மிகவும் தூக்கிப் பேசுகின்றார் கோசிக முனிவர்.

(வி - ம்) இந்திரன் தயரதனுக்குமுன்னே கையேந்தி நின்று, தன் அரசைப் பிச்சை வாங்கிக்கொண்டு போய் ஆளுகிறான் என்கிறார் முனிவர்.

தயரதன் மகிழ்ந்து கூறல்

56 உரைசெய்யும் அளவில்அவன் முகம்நோக்கி
உள்ளத்தில் ஒருவ ராலும்
கரைசெய்ய அரியதொரு பேர்உவகைக்
கடல்பெருக, கரங்கள் கூப்பி,
அரசெய்தி இருந்தபயன் எய்தினன்;மற்று
இனிச்செய்வ தருளு கென்று,
முரசெய்து கடைத்தலையான் முன்மொழியப்
பின்மொழியும் முனிவன் ஆங்கே

---

55. குன்று அளிக்கும் குலமணி-மலையிற் கிடைக்கும் பலவித இரத்தின நகைகளை அணிந்த.

56. உவகைக் கடல் - மகிழ்ச்சிக் கடல் ; கடல் போலப் பெருகிய மகிழ்ச்சி. கடைத்தலை - தலை வாயில்.

இப்படி முனிவர் சொன்னவுடனே, எவராலும் அடக்கமுடியாத அளவற்ற மகிழ்ச்சிக் கடல் கரைகடந்து பெருக, கைகளைத் தலைமேற் கூப்பிக்கொண்டு நான் அரசனாகி (அறுபது ஆயிரம் ஆண்டு) இருந்த பயனை இன்று தான் பெற்றேன். இனி ஆக வேண்டியதைச் சொல்லி யருளுக என, முரச வாத்தியம் முழங்குகிற தலை வாயிலை யுடைய தயரதன், முனிவரைப் பார்த்துக் கூறினான். அதற்கு முனிவர் மறுமொழி கூறுகிறார்.

(வி - ம்) முனிவரின் புகழ்ச்சி, எல்லை மீறிவிட்ட படியால், ஏதோ தேவையைக் கருதித்தான் இவ்வளவு தூரம் புகழ்கின்றாரோ என்ற ஐயம் தயரதனுக்குத் தோன்றி விட்டது. ஆகவே, தனக்கேற்பட்ட மகிழ்ச்சிப் பெருக்கினால் என்ன வேண்டும் என்று நிமிர்ந்து விட்டான். எதை வேண்டினாலும் கொடுப்பது என்ற உள்ளம் மேலோங்கி விட்டது.

முனிவர் இராமனைத் தா எனல்

57 தருவனத்துள் யான் இயற்றும் தவவேள்விக்கு
இடையூருத் தவம்செய் வோர்கள்
வெருவரச்சென்று அடைகாம வெகுளிஎன,
நிருதர் இடை விலக்கா வண்ணம்,
செருமுகத்துக் காத்தி என நின்சிறுவர்
நால்வரினும் கரிய செம்மல்
ஒருவனைத் தந் திடுதி;என உயிர் இரக்கும்
கொடுங்கூற்றின் உளையச் சொன்னான்.

---

57. தருவனம் - மரமடர்ந்த காட்டினிடையே உள்ள ஒரு இடம். தவ வேள்வி - பற்றை நீக்கிக் கடவுளை நோக்கி வழிபாடு செய்வது ; வெருவர - அஞ்சும்படி ; காமவெகுளி என - பெண்ணாசையும், கோபமும் என்று சொல்லும்படி. (தவசிகளுக்கு இவ்

மரமடர்ந்த வனத்தினுள்ளே யான் செய்கிற தவ வேள்விக்கு இடையூருக, தவம் செய்பவர்கள் அஞ்சும்படி எழுகின்ற காமத்தையும், கோபத்தையும்போல அரக்கர்கள் வந்து தடுக்கின்ருர்கள். அவர்கள் அவ்வாறு தடுக்காதிருக்கும் பொருட்டு, போர் செய்து காக்கும்படி உன் மக்கள் நால்வரில் மிக்க கருப்புநிறமுள்ள ஒருவனைத் தா என்று, எமன் எதிரே வந்து 'உன் உயிரைத்தா' என்று இரந்து கேட்பதுபோல, மனம் துன்புறும்படி முனிவர் சொன்ஞர்.

(வி – ம்) கூற்றுவன் வந்தால் உயிரைக் கொண்டு போவது இயல்பு. ஆனல் கூற்றுவன், உருவத்தோடு எதிரே வந்து இருந்துகொண்டு 'உன் உயிரைக்கொடு' என்று கேட்கிறமாதிரி இருக்கிறது கோசிக முனிவருடைய சொல். இராமனைக் கொடுத்தால் சாவு; கொடுக்காவிட்டால் சாபம்! முன்பாடலில் ஏற்பட்ட பெருமகிழ்வு எப்படிப் புகைந்து போகிறது? எதைக் கேட்டாலும் கொடுக்கின்றேன் என்று எழுந்த பெரிய உள்ளம், புண்ணுகிப் பெரிய கஞ்சத் தனத்திலும், தன்னலத்திலும் விழுந்து விடுகிறது. முனிவர் தயரதனைத் தன்னினும் உயர்ந்தோனுகக் கருதி 'ஈ' எனவும் கூருது, இழிந்தோனுகக் கருதிக் 'கொடு' எனவும் கூருது, தன்னேடு சமமாகக்கொண்டு 'தா' எனக் கூறுவது நோக்கத்தக்கது. தவவேள்வி என்றதனல் செல்வம் பதவி முதலியவற்றைக் கருதிச் செய்யப்படும் வேள்வியன்று. உலக நலத்துக்காகச் செய்யப்படும் வேள்வி எனக்கொள்ள வேண்டும்.

விரண்டும் பொல்லாத பகைகளாகும்). நிருதர் - அரக்கர்கள். செரு முகத்து - போர்க்களத்தில். கரிய செம்மல் - இராமன். இராமன் பரதனைக் காட்டிலும் கருப்பு என்று கொள்ள வேண்டும். உயிர் இரக்கும் - உயிரைத் தா என்று யாசிக்கும்.

தயரதன் வருந்துதல்

58 எண்ணிலா அருந்தவத்தோன் இயம்பியசொல்
மருமத்தின் எறிவேல் பாய்ந்த
புண்ணில்ஆம் பெரும்புழையிற் கனல்நுழைந்தால்
எனச்செவியிற் புகுத லோடும்
உண்ணிலா வியதுயரம் பிடித்துந்த
ஆர்உயிர்நின் றூசல் ஆடக்
கண்ணிலான் பெற்றிழந்தான் எனஉழந்தான்
கடுந்துயரம் கால வேலான்.

நினைக்க முடியாத அருமையான தவத்தைச் செய்துள்ள கோசிகர் சொன்ன சொல்லானது, மார்பிலே எறிந்த வேல் பாய்ந்து புண்ணாகி, அப்புண்ணில் உண்டான பெரிய துவாரத்தில், பழுக்கக் காய்ச்சிய இரும்புக் கோலை நுழைத்த மாதிரி காதிற் புகுந்தது. அதனால் ஏற்பட்ட துயரம் உயிரைப் பிடித்து வெளியே தள்ள, உயிரானது நின்று தவித்தது. கண்ணில்லாத குருடன் கண் பெற்று மறுபடியும் இழந்தாற்போல, எதிரிகளின் உயிரை வாங்கும் எமனைப் போன்ற வேலினை உடைய தயரதன் துன்பப்பட்டான்.

(வி - ம்) முனிவர் சொன்ன சொல் தயரதனுக்கு எப்படி இருந்தது? வேல் வேகமாகப் பாய்ந்து பிளந்த பெரிய தொளையில் பழுக்கக் காய்ச்சிய இரும்புக் கோலை நுழைத்த மாதிரி காதிற் புகுந்தது. உயிரே ஆட்டங்கண்டு விட்டது. இராமனை நினைக்கும் பொழுது உயிர் உள்ளே நிற்கப்பார்க்கிறது. முனிவருடைய வேண்டுகோள் உயிரை வெளியே தள்ளுகிறது. இதற்கிடையில் உயிர் நின்று ஊசலாடுகிறது. கண்ணில்லாதவன் உலக இன்பங்களைக் கண்டு அறியமாட்டான். அவனுக்கு உலகம் ஒரே இருட்டாக

58. எண் இலா - நினைக்கவும் முடியாத; மருமம் - மார்பு; புழை - துவாரம்; உண்ணிலாவிய - உள் + நிலாவிய.

இருக்கும். அவனுக்குக் கண்களைக் கொடுத்துப் பார்க்கச் செய்தால், உலகமே விளக்கமாகிறது. அறிந்து, அனுபவித்து ஆனந்தப் படுகின்றான். உடனே கண்களைப் பிடுங்கினால் எப்படி இருக்கும் அவன் நிலை? கண்ட காட்சி எல்லாம், அதனால் அனுபவித்த இன்பமெல்லாம் இழந்து போகிற போது அத்துன்பத்தைப் பொறுக்க முடியாது. இப்படியே 60 ஆயிரம் ஆண்டு, பிள்ளை இல்லாத தயரதன், பிறகு உயர்ந்த பிள்ளையைப்பெற்று உச்ச நிலையில் வாழ்ந்துகொண் டிருக்கும்போது பிள்ளையைக் காட்டுவழியில் அனுப்புவ தென்பது இலகுவானதா?

'இராமனைத் தருக' என்ற சொல் நெஞ்சில் வேல் பாய்ந்த மாதிரி இருந்தது. செருமுகத்து என்ற சொல்லைக் கேட்டதும் வேல்பாய்ந்த புண் பெரிய துவாரமாகியது. அரக்கரைக்கொன்று காக்கவேண்டும் என்றசொல் பழுக்கக் காய்ச்சிய நெருப்புக் கோலை நுழைத்தமாதிரி யாகிவிட்டது. இந்தச் சொல்லைச் சொல்லும் பொழுது முனிவரும் கவன மாகக் கூறுகிறார். 'செருமுகத்துக் காத்தி' எனக் கூறி னாரேயன்றி, 'செருமுகத்து அரக்கரைக் கொல்லவேண்டும்' என்று கூறினாரில்லை. எங்ஙனம் கூறினும் பொருள் அது தானே! 'உழந்தான் கடுந்துயரம்' என்பதை 'கடுந்துயரம் உழந்தான்' என்று மாற்றிப் பொருள் கொள்க.

தயரதன் 'தான் காப்பேன்' எனல்

59 தொடைஊற்றில் தேன் துளிக்கும் நறும்தாரான்
ஒருவண்ணம் துயரம் நீங்கிப்,
படைஊற்றம் இலன்;சிறியன் இவன்;பெரியோய்!
பணி இதுவேல் பனி நீர்க் கங்கை

---

59. தொடை ஊற்றில் - இடையறாமல் ஊற்றெடுக்கிற. தார் - ஆண்கள் அணியும் மாலை. படைஊற்றம் - எதிர்த்துப் போர் புரிந்து பயிலும் அனுபவப் பயிற்சி.

புடைஊற்றும் சடையானும், புரந்தரனும்,
நான்முகனும் புகுந்து செய்யும்
இடையூற்றுக் கிடையூருய் யான்காப்பென்;
பெருவேள்விக்கு எழுக! என்ருன்.

இடையருது தேன் வடிகின்ற மணமுள்ள மாலையை அணிந்திருக்கின்ற தயரதன், (அரக்கரைக் கொல்லுகின்ற காரியந்தானே! ஆகவே, நாமே சென்று கொன்று இடையூற்றை நீக்கி விடலாம் என்று) ஒருவாறு துயரம் நீங்கியவனய், இந்த இராமன் சிறுவன்; போர்க்களம் கண்டு அனுபவப் பயிற்சி பெருதவன். பெருமையுடைய முனிவரே! தாங்கள் சொன்ன இதுதான், செய்ய வேண்டிய காரியம் என்ருல், குளிர்ந்த கங்கையை அணிந்த சடையையுடைய சிவபெருமானும், இந்திரனும், பிரமனும் வந்து செய்ய வேண்டியதாகிய அவ்வளவு பெரிய காரியமாக இருந்தாலும் நான் வந்து காப்பாற்றுகின்றேன். வேள்விக்குப் புறப்படலாம்; எழுங்கள் என்று கூறினன்.

(வி – ம்) முனிவருக்கு வேண்டியது நிருதரைத் தடுப்பது தானே? அதை, நாமே செய்து விடலாம் என்று தயரதன் கருதியபடியால், ஒருவாறு துயரம் நீங்கிற்று. ஆகவே, சிவபெருமானும், இந்திரனும், பிரமனும் முன் வந்து தடுத்துக் காக்கக்கூடிய அவ்வளவு பெரிய காரியமாக இது இருந்தாலும் நானே முன்னின்று காக்கின்றேன். புறப்படலாம் என்று கூற முற்பட்டான்.

'புகுந்து செய்யும் இடையூற்றுக்கு இடையூருய் யான்காப்பென்' என்ற தொடருக்கு மூவரும் முற்பட்டு உம்முடைய தவத்துக்குச் செய்யும் இடையூற்றுக்கு, நான்

59. இடையூற்றுக்கு இடையூறு - அரக்கர் செய்யும் இடையூற்றைத் தடுத்தல்.

இடையூறு செய்து தடுத்துக் காக்கின்றேன் என்று தயரதன் கூறியதாக அனைவரும் உரைகண்டுள்ளனர். சிவன் முதலிய மேலுலகத் தேவர்கள், முனிவர்கட்கு அருள் சுரப்பவரேயன்றி இடையூறு செய்பவரல்லர் என்பது 'என் அனைய' என்ற பாடலாலும், பின்வருகின்ற தாடகை வதைப் படலத்தில் 'யாமும் எம்' என்ற பாடலாலும் அறியக்கிடக்கிறது. கோசிக முனிவர், 'நிருதர் இடை விலக்கா வண்ணம்' என்று தமது வேண்டுகோளைத் தெளிவாகக் கூறியிருக்கிறார். எனவே, மூவரும் புகுந்து செய்ய வேண்டுவது இடையூற்றுக்கு இடையூறு செய்வதேயாகும். தவத்துக்கு அரக்கர் இடையூறு செய்கிறார்கள். அந்த இடையூற்றுக்கு இடையூறு செய்யவேண்டும். அதாவது அரக்கரைத் தடுக்கவேண்டும் என்றவாறு. அந்தக் காரியம் மூவரும் முற்பட்டுச் செய்யவேண்டிய அளவு பெரிதாக இருந்தாலும் நான் செய்து காக்கின்றேன் என்று தயரதன் கூறினான் என்க. இப்பொருளுக்கு, 'இடும்பைக் கிடும்பை' என்றாற் போல 'இடையூற்றுக்கு இடையூறு' என்பதை ஒரே சொல்லாகக் கொள்ள வேண்டும். புகுந்து செய்யும் இடையூறாக - (எந்த இடையூறு ? அரக்கர் செய்யும் இடையூற்றுக்கு இடையூறு). யான் காப்பென் எனக் கூட்டி முடித்தல் வேண்டும். கோசிக முனிவர் காமிய வேள்வி செய்யவில்லை. தேவர்களுக்கும், உலகுக்கும் நலம் பயக்கும் தவவேள்வியே செய்ய முற்பட்டார். கோசிக முனிவர் 'யான் இயற்றும் தவவேள்விக்கு' என்றுதான் குறிப்பிடுகின்றார். ஆதலால், தேவர்கள் எதிர்க்கத் தேவை இல்லை. உதவிசெய்வதே அவர்கள் கடன். சாதாரணமாகக் கடவுளே வந்து தடுத்தாலும் நான் காப்பாற்றிவிடுகின்றேன் என்று உணர்ச்சி வேகத்தில் தயரதன் கூறினான் என்று கூறுதலும் தகாது. தெய்வத்தையும் எதிர்க்கிறேன் என்ற

சொல், பொறுப்பற்றவர் வாயில் வர இயலுமேயன்றித் தெய்வத்திற்காகவும், தேவர்க்காகவும் வாழ்கின்ற தயரதன் வாயில் வந்ததென்பது பொருந்தாது. 'என்னனைய' என்ற பாடலில் தேவேந்திரன் சொல்லப்படாமல், இப்பாடலில் மட்டும் 'புரந்தரனும்' என்று வருவது சரியா என்றால், சரிதான். முந்தியது முனிவர் வாக்கு. முனிவர் இந்திரனைப் பாராட்டிக் கூற இடமில்லை. முனிவர் இந்திரனை மதிப்பதில்லை என்பதை அவர் வரலாறு கொண்டு தெளிக. இங்கே தயரதன் இந்திரனைப் பெரியவனாகவே மதிக்கின்றான். வச்சிராயுதம் இலகுவானதன்று. அது சம்பராசுரன் முதலிய சில அசுரரிடம் செல்லவில்லை என்பதற்காக அவனுடைய வலிமை குறைந்தே போய்விட்டதென்பது தயரதன் கருத்தன்று.

முனிவரின் கடுஞ்சினம்

60 என்றனன்என் றனும்முனிவோடு எழுந்தனன்மண்
 படைத்தமுனி; இறுதிக் காலம்
அன்றெனஆம் என இமையோர் அயிர்த்தனர்;மேல்
 வெயில்கரந்தது; அங்கும் இங்கும்
நின்றனவும் திரிந்தன;மீ நிவந்தகொழும்
 கடைப்புருவம் நெற்றி முற்றச்
சென்றன;வந் ததுநகையும்; சிவந்தனகண் ;
 இருண்டனபோய்த் திசைகள் எல்லாம்.

---

60. மண்படைத்த முனி - உலகத்தை உண்டாக்கிய கோசிக முனிவர். இறுதிக்காலம் - ஊழிக்காலம். மேல்வெயில்கரந்தது - மேலே காணப்பட்ட சூரிய ஒளி மறைந்தது. அங்கும் இங்கும் - மேல் உலகத்திலும், மண்ணுலகத்திலும். நின்றனவும் - உள்ள பொருள்கள் எல்லாம். திரிந்தன - மாறுபட்டுத் தோன்றின. மீநிவந்த - மேலே ஏறிய. கண் இருண்ட - திசையே தெரியாதபடி கண்கள் இருண்டு போயின.

தயரதன் இப்படிச் சொன்னவுடனே அடங்காத கோபத்தோடு உலகைப் படைத்த முனிவர் எழுந்தார். உலகுக்கே முடிவு காலம் வந்துவிட்டதோ என்று தேவர்கள் சந்தேகம் அடைந்தனர். அங்கே இருந்த எல்லோருக்கும் அச்சத்தினாலே கண் இருண்டு போய்விட்டது. சூரிய வெளிச்சமே தொலைந்து போனமாதிரி தோன்றியது. நின்ற தாவரங்களும் நிலை பெயர்ந்தன போல் தோன்றுகின்றன. முனிவருக்கோ புருவங்கள் நெற்றிவரையில் மேலேறிற்று. கோபச் சிரிப்பு வெளிப்பட்டது. கண் பழுத்துப் போய்விட்டது. எங்கும் சந்தடி இல்லாத பெரிய இருட்டாய் விட்டது.

(வி - ம்) முனிவருடைய கோபத்தைக் கண்டதும் என்ன சாபம் வெளிவருமோ என்று ஏங்கியதால், இப்படிப் பட்ட நிலைமை ஏற்பட்டது. மனம் அச்சத்தினால் அழுத்தப் பட்டு உணர்ச்சியும் அடங்கிவிட்டால் மிஞ்சியிருப்பது ஒரே இருட்டுத்தானே !

வசிட்டன் கூற்று

61 *கறுத்த மாமுனி
கருத்தை உன்னி, நீ
பொறுத்தி என்றவற்
புகன்று, நின்மகற்கு
உறுத்தல் ஆகலா
உறுதி எய்தும்நாள்
மறுத்தி யோஎன
வசிட்டன் கூறுவான்.

61. கறுத்த - கோபங்கொண்ட ; உறுத்தல் ஆகலா - அடைவித்தற்கு முடியாத ; உறுதி - உண்மை.

கோபங்கொண்ட பெரிய முனிவரின் எண்ணத்தை நினைத்து, முனிவரே ! பொறுத்துக்கொள்ளும் என்று கூறி விட்டு, அரசனை நோக்கி, உன் மகனுக்குக் கற்றுக்கொடுக்க முடியாத கல்வி வலிய வந்து எய்துகிற காலத்தை வேண் டாம் என்று மறுக்கிறாயா என்று வசிட்டர் சொல்லி மேலும் சொல்லுகின்றார்.

இதுவும் அது

62 பெய்யும் மாரியால்
பெருகு வெள்ளம்போய்
மொய்கொள் வேலைவாய்
முடுகு மாறுபோல்
ஐய நின்மகற்கு
அளவில் விஞ்சைவந்து
எய்து காலம்இன்று
எதிர்ந்த தென்னவே.

(தானே) பெய்யும் மழையினால் பெருகிய நீர்ப் பெருக் கானது கடலில் போய்ப் பாய்வதைப் போல, ஐய ! நின் மகனுக்கு அளவு கூறமுடியாத அளவு வித்தைகள் வந்து எய்துகிற காலம் இன்று தானாகவே வந்திருக்கிறது என்று வசிட்டர் கூறினார்.

தயரதன் உடன்படல்

63 குருவின் வாசகம்
கொண்டு கொற்றவன்
திருவின் கேள்வனைக்
கொணர்மின் சென்றென

---

62. முடுகுமாறுபோல் - பாய்வதைப் போல் ; விஞ்சை - வித்தைகள் ; மொய்கொள் - (நீர்) நிறைந்த ; வேலை - கடல்.

வருக என்றனன்
என்ன லோடும்வந்து
அருகு சார்ந்தனன்
அறிவின் உம்பரான்

தயரதன் தன் குருவாகிய வசிட்டரின் சொல்லை ஏற்றுக் கொண்டு, இலக்குமியின் மணவாளனாகிய இராமனை அழைத்து வாருங்கள் என்று உத்திரவிட்டான். தூதுவன் சென்று, வருக என்றழைக்க, உடனே மேலான அறிவை உடைய இராமன் வந்து தந்தையின் அருகில் நின்றான்.

இராமனை அடைக்கலங் கொடுத்தல்

64 வந்த நம்பியைத்
தம்பி நன்னொடும்
முந்தை நான்மறை
முனிக்குக் காட்டி, நல்
தந்தை நீ; தனித்
தாயும் நீ; இவர்க்கு
எந்தை தந்தனென்
இயைந்த செய்கென்றான்.

தம்பியாகிய இலக்குவனோடு வந்த இராமனை, பழைய நால்வேதம் அறிந்த கோசிகமுனிவருக்குக் காட்டி, என் அப்பனே! இவர்களுக்கு நல்ல தந்தையும் நீதான், ஒப்பற்ற தாயும் நீதான்; தந்து விட்டேன். உமக்கு வேண்டிய வகையில் பயன் படுத்திக்கொள்க எனக் கூறினான்.

---

63. வருக என்றனன் என்னலோடும் - அரசன் உன்னை வருக என்று சொன்னான் என்று சொல்லிய அளவில்; அறிவின் உம்பரான் - யாவருடைய அறிவையும் கடந்தவன்; இராமன்.

64. நம்பி - ஆடவரிற் சிறந்தவன்; இராமன்.

(வி - ம்) 'இயைந்த செய்க' என்றனன். அரக்கரிடம் போர் செய்யச் சொல்க என்று சொல்ல அரசனுக்கு வாய்வரவில்லை. பிள்ளை செய்யக் கூடிய காரியத்தைச் செய்யச் சொல்க என்று சிலேடையாகப் பொருள் அமைந்து கிடக்கிறது. வெளிப்படையாகச் சொன்னால் முனிவருக்குக் கோபம் பிறக்கும். எனவே, உமக்கு இயைந்ததைச் செய்க என்ற பொருளில் கூறப்படுகிறது. ஆனால், 'உனக்கு' என்றோ 'பிள்ளைக்கு' என்றோ கவி கூறாமல் தயரதனுக்கும், முனிவருக்கும், நமக்கும் விருப்பமான சொல் அங்கே தோன்றுமாறு விட்டிருக்கிறார். உமக்கு இயைந்ததைச் செய்துகொள்க என்று சொல்லும் போதே பிள்ளைக்கு இயைந்ததைச் செய்தால் நல்லதாக இருக்கும் என்ற தந்தையின் பரிதாபமும் அடைக்கலங் கொடுப்பவரின் மனநிலையும் தெளிவாக விளங்குகின்றன.

முனிவர் மைந்தரை அழைத்துச் செல்லல்

65 கொடுத்த மைந்தரைக்
  கொண்டு சிந்தைமுந்து
எடுத்த சீற்றம்விட்டு
  இனிது வாழ்த்திமேல்
அடுத்த வேள்விபோய்
  முடித்தும் நாம்என
நடத்தல் மேயினான்
  நவைக்கண் நீங்கினான்

தயரதனால் கொடுக்கப்பட்ட பிள்ளைகளை அழைத்துக் கொண்டு, மனத்தில் எழுந்த கோபம் தணிந்து, மனமகிழ்ச்சியுடன் வாழ்த்துக் கூறிவிட்டு, மேலே வேள்வி செய்யும்

65. சிந்தை முந்து - மனத்திலே முன்பு; எடுத்த சீற்றம் - மிகுதியாகக் கொண்ட கோபம்; நவைக்கண்-குற்றங்களில் நின்றும்.

இடத்துக்கு நாம் போய் முடிக்கலாம் என்று குழந்தைகளிடம் சொல்லிக்கொண்டே நடந்து சென்ருர் குற்றமற்ற கோசிகமுனிவர்.

இராமன் போர்க்கோலத்துடன் செல்லல்

66 வென்றி வாள்புடை
விசித்து மெய்ம்மைபோல்
என்றும் தேய்வுருத்
தூணி யாத்திரு
குன்று போன்றுயர்
தோளில் கொற்றவில்
ஒன்று தாங்கினுன்
உலகம் தாங்கினுன்

வெற்றியைத் தருகிற உடைவாளைப் பக்கத்திலே கட்டி, உண்மையைப்போல என்றும் அழிவில்லாத அம்பருத் தூணியை முதுகிலே கட்டி, இரண்டு மலைகளைப் போல வளர்ந்துள்ள தோள்களில் (ஒருபுறமாக) வெற்றி வில்லைத் தாங்கினுன், உலகத்தையே தாங்கிக் காப்பாற்றுகின்ற திருமாலாகிய இராமன்.

மதிலைக் கடத்தல்

67 அன்ன தம்பியும்
தானும் ஐயன்ஆம்
மன்னன் இன்உயிர்
வழிக்கொண் டால்எனச்

---

66. புடை விசித்து - பக்கத்திலே கட்டி ; தூணி யாத்து - அம்புக்கூட்டைக் கட்டி ; இரு – பெரிய ; உலகம் தாங்கினுன் - உலகத்தைக் காப்பாற்றும் கடவுள் ; இராமன்.

67. அன்ன - தன்னை ஒத்த ; ஐயன் ஆம் மன்னன் - தந்தையாகிய அரசனுடைய.

சொன்ன மாதவற்
றொடர்ந்து சாயைபோல்
பொன்னின் மாநகர்ப்
புரிசை நீங்கினன்

தன்னைப் போலவே தயாரான தம்பியும், தானும் தன் தந்தையான தயரத மன்னனுடைய இனிய உயிரானது வழி கூடி நடந்து செல்கிறது என்று சொல்லும்படி, முற்கூறப் பட்ட பெரிய தவமுனிவரைத் தொடர்ந்து அவருடைய நிழலைப்போல அந்த அழகான அயோத்தி நகரின் மதிலைக் கடந்து சென்றார்கள்.

இளைப்பாறுதல்

68 கரும்பு கால்பொரக்
கழனி வார்ந்ததேன்
வரம்பு மீறிடு
மருத வேலிவாய்
அரும்பு கொங்கையார்
அம்மெல் ஓதிபோல்
சுரும்பு வாழ்வதோர்
சோலை வைகினர்

பெருங்காற்று அடித்ததனாலே கரும்புகள் ஒடிய, அதில் உள்ள தேன்கூடுகள் உடைய, வயலிலே வடிந்த தேன் பெருகி, மருத நிலத்தின் வரப்புக்களை மீறுகின்றன. (அத

---

67. மாதவன் தொடர்ந்து-கோசிகமுனிவரைத் தொடர்ந்து; சாயை - நிழல்; புரிசை - மதில்; நீங்கினன் - இராமன் நீங்கினன்.

68. கால் பொர - காற்றானது மோத; கழனி - வயல்; மருதவேலி - மருத நிலம்; ஓதி - கூந்தல்; சுரும்பு - வண்டு.

னருகில்) இளமை பொருந்திய கொங்கைகளையுடைய பெண்களின் மெல்லிய கூந்தலைப் போல வண்டுகள் தொடர்ந்து மொய்த்துக் கொண்டிருக்கிற ஒரு சோலையை அடைந்து இளைப்பாறினர்.

இராமன் வேள்விகண்டு வினவுதல்

69 தேவு மாதவற்
றொழுது தேவர்தம்
நாவுள் ஆகுதி
நயக்கும் வேள்விவாய்த்
தாவு மாபுகை
தழுவு சோலைகண்டு
யாவது ஈதென்றான்
எவர்க்கும் மேல்நின்றான்

யாவர்க்கும் மேலான இராமன், பூரண ஆகுதி வழங்கும்போது எழுகின்ற பெரும்புகை நிறைந்த ஒரு சோலையைக்கண்டு, தெய்வத்தன்மை பொருந்திய மாதவரை வணங்கி, இது என்ன என்று கேட்டான்.

———

69. தேவு - தெய்வத்தன்மை ; தேவர்தம் நாவுள் – நெருப்பின்மூலமாகத் தேவர்களுடைய வாயில் ; ஆகுதி - யாகநெருப்பில் வார்க்கிற பொருள் ; தாவு மாபுகை - எழுகின்ற மிகுந்த புகை ; எவர்க்கும் மேல் நின்றான் – இராமன்.

6. தாடகை வதைப் படலம்

[தாடகை இராமனால் வதைக்கப்பட்ட செய்தியைக் கூறும் படலம்]

கோசிகன் மறுமொழி கூறல்

70 *திங்கள்மே வும்சடைத்
தேவன்மேல் மாரவேள்
இங்குநின் றெய்யவும்
எரிதரும் நுதல்விழிப்
பொங்குகோ பம்சுடப்
பூளைவீ அன்னதன்
அங்கம்வெந்து அன்றுதொட்
டனங்கனே ஆயினான்

பிறைச்சந்திரன் பொருந்தியிருக்கிற சடையையுடைய சிவபெருமான் மீது, மன்மதன் இந்த இடத்தில் நின்று அம்பை எய்தவுடனே, நெருப்புக் கண்ணின் மூலமாக எழுந்த கோபத்தீயானது சுட, பூளைப்பூவைப் போன்ற தன்னுடைய உடல் வெந்து அன்றுமுதல் உடல் அற்றவன் ஆனான்.

---

70. தேவன் - சிவபெருமான்; மாரவேள் - மன்மதன்; நுதல்விழிப் பொங்கு கோபம் - நெற்றிக்கண்ணிலிருந்து பொங்கி வெளிப்பட்ட கோபத்தீ; பூளை வீ - பூளைப் பூ; அனங்கன் - உடல் இல்லாதவன்; மன்மதன்.

காமன் எரிந்த இடம்

71. வாரணத் துரிவையான்
மதனனைச் சினவுநாள்
ஈரம்அற் றங்கம்இங்கு
உகுதலால் இவண்எலாம்
ஆரணத் துறையுளாய்!
அங்கநா டிதுவும்அக்
காரணக் குறியுடைக்
காமன்ஆச் சிரமமே

வேதத்தின் உட்பொருளாகிய இராமா! யானைத் தோலை அணிந்துள்ள சிவபெருமான் மன்மதனைக் கோபித்த போது, அவன் உடல் சாம்பலாக, எலும்புகள் இங்கே விழுந்தன. ஆதலால் இந்த இடம் அங்கநாடு என்று சொல்லப் படுகிறது. இந்த ஆச்சிரமமும் காரணப்பெயராக மன்மதனுடைய ஆச்சிரமம் என்று வழங்குகிறது.

பாலை நிலத்தை அடைதல்

72. என்றஅந் தணன்இயம்
பலும்வியந்து அவ்வயிற்
சென்றுவந் தெதிர்தொழும்
செந்நெறிச் செல்வரோடு

---

71. வாரணம் - யானை; உரிவையான் - தோலைப்போர்த்தி யிருக்கும் சிவபெருமான்; ஆரணத்து உறையுளாய் - வேதத்தில் குடியிருப்பவனே; இராமா! காரணக் குறி — காரணத்தால் ஏற்பட்ட பெயரையுடைய.

72. என்றவந்தணன்-என்று + அ + அந்தணன்.

அன்றுறைந்து அலர்கதிர்ப்
பரிதிமண் டிலம்அகன்
குன்றின்வந்து இவரஓர்
சுடுசுரம் குறுகினர்

என்று முனிவர் கூறியதும், வியப்பெய்தி அவ்விடத்திற்குச் சென்று, மகிழ்ந்து எதிர்கொண்டு தொழுதசெவ்விய நெறியிற் செல்பவரான முனிவர்களுடன் அன்று தங்கியிருந்தனர். மறுநாள் கதிர்களைப் பரப்புகின்ற ஞாயிறு குன்றின்மேல் உயர்ந்து வரும்போது ஒரு பாலைநிலத்தை அடைந்தார்கள்.

பாலை நில வருணனை

73 *தாவரும் இருவினை
செற்று, நள்ளரும்
மூவகைப் பகைஅரண்
கடந்து, முத்தியில்
போவது புரிபவர்
மனமும் பொன்விலைப்
பாவையர் மனமும்போல்
பசையும் அற்றதே

கடத்தற்கரிய இருவினைகளை ஒழித்து, நீக்கமுடியாத காமம் வெகுளி மயக்கம் என்ற பகை அரண் மூன்றையும்

---

72. பரிதி மண்டிலம் - ஞாயிறு ; சூரியன். இவர — உயரும் போது ; சுடுசுரம் — கொடிய பாலைநிலம்.

73. தாவு அரும் - கடத்தற்கு அரிய ; இருவினை - நல்வினையும் தீவினையும் ; மூவகைப் பகை அரண் - ஆசை, கோபம், அறியாமை ஆகிய மதில்போல நிற்கும் உட்பகையான தடைகள். பொன்விலைப் பாவையர் - வேசியர் ; பசை - ஈரம்.

கடந்து, முத்தியை நாடிச் செல்பவரின் மனமும், பணத்திற்காக உடலின்பத்தை விற்கும் வேசியரின் மனமும் போல (அந்தப் பாலேவனம்) ஈரப்பசை அற்றிருந்தது.

(வி - ம்) முத்திக்குப் பக்குவப்பட்ட முனிவரின் மனம் உலகப்பற்று (பசை) அற்றிருக்கும். வேசியருடைய மனம் காதல் (பசை) அற்றிருக்கும். அப்படியே இந்தப் பாலேநிலம் காய்ந்து அணுவளவும் ஈரம் (பசை) இல்லாமல் ஆய்விட்டது. இருவினே அற்ருல்தான் வீடு கிடைக்கும். நல்வினே செய்தாலும் பிறந்து இன்பம் அனுபவிக்க வேண்டும். தீவினே செய்தாலும் பிறந்து துன்பம் அனுபவிக்கவேண்டும். ஆதலால்தான் இருவினேயும் நீங்கவேண்டுமென்று ஞானிகள் முயலுகின்றனர்.

இதுவும் அது

74 பொரிபரற் படர்நிலம்
பொடிந்து கீழ்உற
விரிநலிற் பெருவெளி
விளங்கித் தோன்றலால்
அரிமணிப் பணத்தரா
அரசன் நாட்டினும்
எரிகதிர்க்கு இனிதுபுக்
கியங்கல் ஆயதே

காய்ந்து விரிவு ஏற்பட்டு அடிவரையிலும் நிலம் பிளந்து கிடப்பதால் பெரிய இடைவெளி நன்ருகத் தெரிகிறது.

---

74. பொரி பரல் - சூட்டில் பொரிந்துகொண்டிருக்கிற சிறு கற்கள் (பெருமணல்கள்) ; பொடிந்து - வெடித்து ; அரிமணி - சிவந்தமணி ; மாணிக்கம். பணத்து அரா அரசன் - படத்தையுடைய பாம்புகளுக்கு அரசன் ; ஆதிசேடன்.

ஆதலால் சூரியஒளி ஆதிசேடனுடைய உலகத்திலும் தாராள மாக, எளிதிற் புகுந்து பரவ இடமேற்பட்டு விட்டது.

மைந்தர் நிலைகண்டு மனம் இரங்கல்

75 எரிந்தெழு கொடுஞ்சுரம்
இனையது எய்தலும்
அருந்தவன் இவர்பெரிது
அளவில் ஆற்றலைப்
பொருந்தினர் ஆயினும்,
பூவின் மெல்லியர்;
வருந்துவர் சிறிதென,
மனத்தின் எண்ணினன்

தீப் பிடித்து எரிவதுபோல் கொதிக்கிற கொடிய அந்தப் பாலை நிலத்தை அடைந்ததும், "இந்தச் சிறுவர்கள் அளவில்லாத பேராற்றல் உடையவர்தாம்; இருந்தாலும் பூவைக் காட்டிலும் மென்மையானவர்; இந்தக் கொடுமை யைத் தாங்காது வருத்தமுறுவர்" என, கடுந்தவம் புரியும் கோசிக முனிவர் தன் மனத்தில் நினைத்தார்.

வெம்மை தணிய மந்திரம் கற்பித்தல்

76 நோக்கினன் அவர்முகம்;
நோக்க நோக்குடைக்
கோக்குமரரும்அடி
குறுக, நான்முகன்
ஆக்கிய விஞ்சைகள்
இரண்டும் அவ்வழி
ஊக்கினன்; அவைஅவர்
உள்ளத்து உள்ளினர்

76. கோக் குமரரும் - அரச குமாரர்களும்; விஞ்சைகள் - மந்திரங்கள்; ஊக்கினன் - உபதேசித்தான்; உள்ளினர் - அழுந்த நினைத்தார்கள்.

(தனக்குப்பின் வருகிற) அவர்களுடைய முகத்தை (முனிவர்) பார்த்தார். அப்படிப் பார்த்தவுடனே சூரிய கண்ணையுடைய அரசகுமாரரும் கிட்ட நெருங்கினர். பிரமன் அருளிய மந்திரங்கள் இரண்டைக் கற்பித்தார். அவர்களும் அவற்றை மனத்தால் அழுந்த நினைத்தனர்.

பாலைவனம் சோலைவனம் ஆகியது

77 உள்ளிய காலையின்
ஊழித் தீயையும்
எள்ளுறு கொழுங்கனல்
எரியும் வெம்சுரம்
தெள்ளுதண் புனல்இடைச்
சேறல் ஒத்தது ;
வள்ளலும் முனிவனை
வணங்கிக் கூறுவான்

அவ்வாறு உள்ளத்தோடு ஒன்ற நினைத்தவுடனே ஊழிக் காலத்துப் பெருநெருப்பையும் பார்த்துக் கேலி செய்யும்படியான கொழுத்த நெருப்பைக் கக்கும் கொடும் பாலையானது, அவர்களுக்குக் குளிர்ந்த நீரோடை அருகிற் செல்லுவதுபோல் இருந்தது. வள்ளலாகிய இராமன் முனிவரைப் பார்த்துக் கூறுகிறான்.

---

77. தெள்ளு தண் - தெளிந்த குளிர்ந்த ; சேறல் - செல்லுதலை ; ஊழித் தீ - உலகமுடிவில் தோன்றும் தீ.

வெப்பத்திற்குக் காரணம் கேட்டல்

78 சுழிபடு கங்கைஅம்
தொங்கல் மௌலியான்
விழிபட வெந்ததோ!
வேறுதான் உண்டோ!
பழிபடர் மன்னவன்
படைத்த நாட்டினூங்கு
அழிவதென் காரணம்
அறிஞ! கூறு என்றான்

சுழித்துச் செல்லுகின்ற கங்கையையும், அழகிய சடைமுடியையும் உடைய சிவபெருமான் நெற்றி விழி பட்டதனல் வெந்து போயிற்ரு? வேறு காரணம் எதுவும் உண்டா? பழிவளர்க்கும் ஓர் அரசன் பெற்ற நாட்டைக் காட்டிலும் இப்படி அழிவதற்கு என்ன காரணம் அறிஞனே! கூறுவாயாக என்ருன்.

தாடகையின் வரலாறு கூறுதல்

79 என்றலும் இராமனை
நோக்கி, இன்உயிர்
கொன்றுழல் வாழ்க்கையள்;
கூற்றின் தோற்றத்தள்;
அன்றியும் ஐஇரு
நூறு மையல்மா
ஒன்றிய வலியினள்;
ஊறிந் நீஅனள்;

78. சுழிபடு கங்கை - நீர்ச்சுழிகளை உடைய கங்கையைத் தலையில் கொண்டிருக்கிற; தொங்கல் — ஆண்களின் தலைமயிர்; சடை. மௌலி-முடி; படைத்த - ஆளுகின்ற; நாட்டின் ஊங்கு-நாட்டைக் காட்டிலும்.

79. ஐ இருநூறு - ஆயிரம்; மையல் மா — மதம் பிடித்த யானை; ஒன்றிய - அடைந்துள்ள.

என்று கூறினவுடனே இராமனை நோக்கி, இனிய உயிரையெல்லாம் கொன்று திரிகின்ற வாழ்க்கையை உடையவள்; எமனைப் போன்ற தோற்றமுடையவள்; அதைவிட, ஆயிரம் மதயானைகளின் வலிமையைப் பெற்றவள். ஊழிக் காலத்துத் தீயைப் போன்ற கொடுமைக் குணமுடையவள்.

இதுவும் அது

80 மண்உருத் தெடுப்பினும்,
கடலை வாரினும்,
விண்உருத் திடிப்பினும்,
வேண்டிற் செய்கிற்பாள்;
என்உருத் தெரிவரும்
பாவம் ஈண்டிஓர்
பெண்உருக் கொண்டெனத்
திரியும் பெற்றியாள்

கோபங்கொண்டு நிலத்தைப் பெயர்க்க வேண்டுமானாலும், கடலை அள்ளி முகக்க வேண்டுமானாலும், வானைப் பிளக்கவேண்டுமானாலும், நினைத்தால் செய்யவல்லவள். நினைக்கவும் உருத்தெரியவும் முடியாத பாவங்களெல்லாம் திரண்டு ஒரு பெண்ணுருக் கொண்டிருக்கிறதெனக் காணப் படும் தன்மையுடையவள்.

---

80. உருத்து மண் எடுப்பினும் - கோபங்கொண்டு நிலத்தையே எடுக்கவேண்டுமென்றாலும்; வேண்டிற் செய்கிற்பாள் - விருப்பம்போல் செய்யக்கூடிய ஆற்றலுள்ளவள்; எண் உருவு தெரிவு அரு பாவம் - அளவும் உருவமும் கணிக்க முடியாத (பெரும்) பாவங்கள்; ஈண்டி — ஒன்றாகத் திரண்டு.

இதுவும் அது

81 சூடக அரவுமல்
சூலக் கையினள் ;
காடுறை வாழ்க்கையள் ;
கண்ணில் காண்பரேல்
ஆடவர் பெண்மையை
அவாவும் தோளினுய் !
தாடகை என்பருச்
சழக்கி நாமமே. கஉ

கைக் காப்பாகப் பாம்புகள் கிடந்து ஆடுகின்ற கையில் சூலாயுதத்தைக் கொண்டவள் ; காட்டினையே இடமாகக் கொண்டு வாழ்பவள் ; கண்ணுலே கண்ட ஆடவரும் பெண் தன்மையை விரும்பும்படியான தோளினை உடைய இராமா ! அந்தக் கொடியவளுடைய பெயர் தாடகை என்பதாகும்.

(வி - ம்) ஆணைப் பார்த்து ஆண் அனுபவிப்பதைக் காட்டிலும் ஆணைப் பெண் கண்டால் ஏற்படும் அனுபவம் தனியானதுதான். இராமனின் தோள் அழகைக் கண்ட வர்கள் தாங்கள் பெண்ணுகப் பிறக்கவில்லையே, அப்படிப் பிறந்திருந்தால் பெண்மனங்கொண்டு இந்த ஆண் அழகை அறியலாமே என்று ஏங்கினர். குழந்தையின் தன்மையை அனுபவிக்கும் இன்பம் தாயாக நின்று அனுபவிப்பதில் தானே கிட்டும் ; அதுபோல.

---

81. சூடகம் - கைவளை. சழக்கி - கொடியவள்.

வெப்பத்தின் காரணம் தாடகைதான் எனல்

82 உளப்பரும் பிணிப்பரு
உலோபம் ஒன்றுமே
அளப்பரும் குணங்களை
அழிக்கு மாறுபோல்,
கிளப்பரும் கொடுமைய
அரக்கி, கேடிலா
வளப்பரு மருதவைப்பு
அழித்து மாற்றினாள். கஉ

அசைக்க முடியாத, பற்று நீங்காத உலோபித்தனம் என்ற ஒரு கெட்ட குணமானது, எண்ண முடியாத நல்ல குணங்களையெல்லாம் அழிப்பது போல, சொல்ல முடியாத கொடுமையையுடைய இந்த அரக்கி, ஓர் அழிவுமில்லா திருந்த இந்த நஞ்சைநிலப் பகுதியை அழித்துப் பாலைநில மாக்கிவிட்டாள்.

(வி — ம்) இந்த நிலப்பகுதி முழுதும் சிறந்த வயலும் வயல்சார்ந்த நிலமுமாகச் செழித்திருந்தது. தாடகை இதைக் கைப்பற்றி இங்குள்ள யாவற்றையும் தின்று தீர்த்துவிட் டாள். நிலத்தில் தோன்றும் பொருள்களை உண்டாக வொட்டாது அழித்துக்கொண்டே இருந்தால் நிலம் வளம் இழந்து பாலையாகிவிடு மென்பது உணரத்தக்கது.

---

82. உளப்பு - அசைவு. உலோபம் - ஈயாமை. கிளப்பு — சொல் (கிளத்தல்). வளப் பரு மருத வைப்பு - வளமுள்ள பரந்த மருதநிலம்.

இராவணன் ஏவலால் துன்பம்

83 *இலங்கைஅர சன்பணி
அமைந்தொர் இடைஊறு
விலங்கல்வலி கொண்டெனது
வேள்விநலி கின்றாள்;
அலங்கல்முகி லே! அவள்இவ்
அங்கநிலம் எங்கும்
குலங்களொடு அடங்க,நனி
கொன்றுதிரி கின்றாள். கசு

இலங்கை மன்னனை இராவணனின் ஏவல் ஆளாக இருந்து, மலைபோன்ற வலிமையுடையவளாகி, என்னுடைய வேள்விக்கு இடையூறாக நின்று கேடு செய்கிறாள். மாலையணிந்த மேகம் போன்ற இராமா! (எனக்கு மட்டுமல்ல) அவள் இந்த அங்க நாடு முழுதும் ஒவ்வொரு குலமும் அடியோடு ஒழியும்படி முழுக்க முழுக்கக் கொன்று திரிகிறாள்.

(வி – ம்) இராமன் மார்பில் மாலை அணிந்திருக்கிறான். அது மேகத்துக்கு மாலை சாத்தினமாதிரி இருக்கிறது. விலங்குக் குலம், பறவைக் குலம், மக்கட் குலம், பாம்புக் குலம் என்று சொல்லப்படுகிற ஒவ்வொரு குலத்தையும் விடாமல் முழுமையும் கொன்று தின்றுகொண்டு திரிகிறாள். ஒன்றிரண்டா? அல்ல, குலம் குலமாகத்தான் சாப்பாடு!

இவளை விட்டு வைத்தால் உலகையே தின்றுவிடுவாள் என்று கூறல்

84 ‘முன்உலக ளித்துமுறை
நின்றஉயிர் எல்லாம்
தன்உயிர்எ னக்கருது
தன்மையவன் மைந்த!

---

83. விலங்கல் - மலை. அலங்கல் - மாலை. முகில் - மேகம்.

என்இனிஉ ணர்த்துவது ?
இனிச்சிறிது நாளில்
மன்உயிர்அ னைத்தையும்
வயிற்றின்இடும்' என்றான். கரு

பழைமையான உலகங்களைக் காப்பாற்றி, (அப்படி) ஒழுங்கிலே நின்ற உயிரையெல்லாம் தன் உயிர் எனக் கருது கின்ற இயற்கையை உடைய தயரதனின் மகனே! (நான்) இதற்குமேல் (நீ) உணரும்படி செய்ய என்ன இருக்கிறது? இன்னும் சில நாள் விட்டுவைத்தால், (உலகத்திலே) பொருந்தியிருக்கிற உயிர் முழுவதையும் தன் வயிற்றுக்குள் வைத்துவிடுவாள் என்று முனிவர் கூறினர்.

இவள் இருக்குமிடம் எது?

85 அங்கிறைவன் அப்பரிசு
உரைப்பஅது கேளா,
கொங்குறை நறைக்குல
மலர்ச்செனி குலுக்கா,
'எங்குறைவது இத்தொழில்
இயற்றுபவள்?' என்றான்
சங்குறை கரத்தொரு
தனிச்சிலைத ரித்தான். கசு

---

84. முன்+உலகு+அளித்து - பழைமையான உலகைக் காத்து; முறை நின்ற - முறை தவறாமல் வாழ்கிற; மன் உயிர் - பொருந்திய உயிர்இனம்.

85. இறைவன் - தலைமைக் குரிய கோசிக முனிவர்; கொங்கு - மணம்; நறைக் குல மலர்ச் செனி - தேன் பொருந்திய சிறந்த மலர் மாலையை அணிந்துள்ள தலையை; சென்னி, செனி என விகாரப்பட்டது; குலுக்கா-குலுக்கி; சங்கு உறை கரம் - (திருமால்) சங்கைக் கொள்ளுகிற இடது கை; தனிச் சிலை - ஒப்பற்ற வில்.

அவ்விடத்தில் தலைவரான முனிவர் அவ்வாறு சொல்ல, அதைக் கேட்டு, மணமுள்ள, தேன்பொருந்திய மாலையணிந்த தலையை (ஒரு குலுக்கு)க் குலுக்கி, "இப்படிப்பட்ட தொழில் செய்பவள் இருக்கு மிடம் எது?" என்றான். யார்? சங்கைத் தாங்குகின்ற (இடது) கையில் ஒப்பற்றதான ஒரு வில்லைத் தாங்கியிருக்கிற இராமன்.

தாடகை எதிர்ப்படல்

86 கைவரை எனத்தகைய
காளைஉரை கேளா
ஐவரை அகத்திடை
அடைத்தமுனி, 'ஐய!
இவ்வரை இருப்பதவள்'
என்பதனின் முன்புஓர்
மைவரை நெருப்பெரிய
வந்ததென வந்தாள். கஎ

யானையைப் போல நின்ற இராமன் சொன்னதைக் கேட்டு, ஐந்து புலன்களின் சேட்டையை அடக்கிவைத்திருக்கிற அந்த முனிவர், ஐயா! இதோ தெரிகிற மலைதான் அவள் இருப்பது என்று சொன்னார்; அப்படிச் சொல்லுவதற்குள்ளாக, ஒரு கரிய மலையானது நெருப்புப் பற்றி எரிய அது கிளம்பி வந்ததைப் போல வந்தாள்.

---

86. கைவரை - கையை உடைய மலை: யானை; காளை - காளையைப்போன்ற இராமன்; கேளா - கேட்டு; ஐவர் - சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற ஐவகை இன்பத்தின்மேல் எழும் ஆசை: இவை மனத்தோடு ஆள் நின்று போராடுவது போலப் போராடுவதால் ஐவர் என்று குறிப்பிடப்பட்டது; அகத்திடை அடைத்த முனி-இவர்களை மனத்தினுள்ளேயே அடக்கிக்கொண்ட கோசிக முனிவர்; மை - கருநிறம்.

(வி - ம்) செந்நிறமான அவளுடைய பறட்டைத் தலைமயிர் தீப்பற்றி எரிகிறமாதிரி இருக்கிறபடியால் "நெருப் பெரிய வந்ததென" என்று கூறப்பட்டது.

தாடகையின் பார்வை

87 இறைக்கடை துடித்தபுரு
வத்தள்;எயி றென்னும்
பிறைக்கடை பிறக்கிட
மடித்தபில வாயள் ;
மறக்கடை அரக்கி,வட
வைக்கனல் இரண்டாய்
நிறைக்கடல் முளைத்தென
நெருப்பெழ விழித்தாள். கஅ

கடை துடித்து (நெருப்பு) சிதறுகிற புருவத்தை உடையவளும், பற்கள் மூன்றும் பிறை மதியின் கடைசிப் பாகம் போல வெளியே துறுத்திக்கொண்டிருக்க மடித்த குகைபோன்ற வாயை உடையவளும் ஆகிய கொலைத் தொழிலிலும் கடைப்பட்ட அரக்கியாகிய தாடகை, வட வைத் தீயானது இரண்டு கூறுகிக் கருங்கடலின் இரண்டிடத்தில் சீறிக் கிளம்பினாற்போலக் கண்களை உருட்டி விழித் தாள்.

(வி - ம்) தாறுமாறான கோபத்தோடு வருவதால் கடைக்கண்ணின் வழியாகத் தீப்பொறி சிதறுகிறது. புரு வம் துடிக்கிறது. கீழ் உதட்டின்மேல், மேல் உதட்டைப்

---

87. இறை - சிதறுதல்; எயிறு - பற்கள்; பிறை — மூன்றும் பிறை ; பிறக்கிட — வெளியே துறுத்திக்கொண்டிருக்க ; நிறைக் கடல் - நிறைந்த கடல்; வடவைக் கனல் - கடலின் நடுவில் உள்ள தீ.

போட்டு வாய்மடித்து வருகிறாள். கடைசியில் உள்ள வளைபற்கள் (வக்கிர தந்தம்) இரண்டும், மூன்றாம் பிறைச் சந்திரனை இரண்டாக ஒடித்துச் செருகினமாதிரி வெளியே தெரிகின்றன. கடலும் கருப்பு நிறம். தாடகையும் கருப்பு நிறம். கடலில் ஆற்றுநீர் ஊற்றுநீர் மழைநீர் ஆகிய மூன்று நீர்கள் கூடிப் பெருகுகின்றன; என்றும் உள்ள கடல் நீரின் அளவுக்கு மேலே நீர் பெருகாதவாறு தடுக்கும் பொருட்டுக் கடலின் அடியில் வடவைத் தீ என்ற ஒன்று இருந்து அதிகப்படும் நீரையெல்லாம் குடித்துக் கொண்டிருப்பதாகக் கதை. அப்படிப்பட்ட வடவைத் தீயானது இரு பிளவாகக் கிளம்பிக் கடலுக்கு வெளியே சீறி வருவது போல இந்தத் தாடகையின் கண்கள் கோப நெருப்பைக் கக்குகின்றன. தாடகையின் உருவம் கடல்போலப் பெரிது! அதற்கேற்ற கொடுங் கண்கள்! அவளுடைய பார்வை அவ்வளவு கொடிது! நிறைக் கடல்—நிறைகடல் என்பது எதுகை நோக்கி விகாரப்பட்டது.

தாடகையின் ஆரவாரம்

88 **கடம்கலுழ் தடங்களிறு**
கையொடுகை தெற்று
வடம்கொள, நுடங்கும்இடை
யாள்மறுகி வானோர்
இடங்களும் நெடும்திசையும்
ஏழுலகும் எங்கும்
அடங்கலும் நடுங்கஉரும்
அஞ்சநனி ஆர்த்தாள். கக

---

88. கடம் - மதம்; கலுழ் - ஒழுகும்; தடம் களிறு - பெரிய ஆண் யானைகளை; தெற்று - முடிந்து; மறுகி - நிலைபெயர்ந்து; அடங்கலும் — அடியோடு; உரும் - இடி.

மதம் பொழிகிற பெரிய பல யானைகளைப் பிடித்து ஒன்றின் தும்பிக்கையோடு மற்றொன்றின் தும்பிக்கையை முடிந்து ஒரே மாலையாக அணிந்துகொண்டு நெளிகிற இடையையுடைய அவள், தேவர் இருக்கிற இடங்களும், நீண்ட எட்டுத் திசைகளும், ஏழு உலகும் மற்ற எல்லாமும் அடியோடு நிலைபெயர்ந்து நடுங்கும்படி இடியும் நாணுமாறு பெரிய ஆரவாரம் செய்தாள்.

தாடகையின் வீரப்பேச்சு

89 'கடக்கரும் வலத்தெனது
காவல்; இதில் யாவும்
கெடக்கருஅ றுத்தனென் ;
இனிச்சுவை கிடக்கும்
விடக்கரிதெ னக்கருதி
யோவிதிகொடு உந்தப்
படக்கருதி யோபகர்மின்
வந்தபரிசு' என்றே. ௨௦

(வந்தவர்) தப்ப முடியாதபடியுள்ள என்னுடையகாவல் (இடம் இது) இங்கே இருந்த எல்லாவற்றையும் கருவோடு உண்டு முடித்துவிட்டேன். சுவையான மாமிசம் கிடைக்க இங்கே வகையில்லை என்பது தெரிந்து நீங்கள் விருந்தாக வந்திருக்கிறீர்களா ? அல்லது விதி பிடித்துத் தள்ளிக் கொண்டுவரச் சாவதற்காக வந்தீர்களா ? வந்த விதத்தைச் சொல்லுங்கள் என்று சொல்லிக்கொண்டே....

---

89. கடக்க + அரும் - கடக்கரும் ; கரு அறுத்தனென் - கரு உண்டாகவும் வழியில்லாமல் ஒழித்துவிட்டேன் ; விடக்கு - மாமிசம்.

தாடகையின் அடங்காச் சினம்

90 மேகம்அவை பற்றுபு
பிழிந்தனள் விழுங்கா,
மாகவரை அற்றுக
உதைத்தனள் ; மதித்தின்
பாகம்எனும் முற்றெயிறு
அதுக்கி, அயில் பற்ரு,
ஆகம்உற உய்த்தெறிவென்
என்றெதிர் அழன்ருள். உக

மேகத்தைப் பிடித்துக் கசக்கிப் பிழிந்து விழுங்கினுள். பெரிய மலேகள் தூளாகி உதிரும்படி உதைத்தாள். சந்திரனின் பாதி வடிவம் என்று சொல்லும்படியான பற்களேக் கடித்துச் சூலத்தைக் கையில் எடுத்து, 'உன் உடலில் எறிகிறேன், பார்' என்று எதிரில் வந்து நின்று கொதித்தாள்.

பேண் என இராமன் நினைத்தல்

91 அன்னல்முனி வற்கது
கருத்தெனினும், ஆவி
உன்என வடிக்கணை
தொடுக்கிலன் ; உயிர்க்கே

---

90. பற்றுபு — பிடித்து ; மாகவரை — ஆகாயத்தை எட்டிய பெரிய மலேகள் ; அற்று உக - தூளாகிச் சிதறும்படி ; மதித்திண் பாகம் எனும் - சந்திரனிலுள்ள வலிமையான பகுதி என்று கருதக்கூடிய ; முற்று எயிறு - கோரப் பற்களே ; ஆகம் உற - உடலில் தாக்கும்படி.

91. அண்ணல் - பெருமையிற் சிறந்த ; அது - அம்பை விட்டுக்கொல்வது ; வடிக்கணே - கூர்மையான அம்பை ; துண் எனும் — திடுக்கிடத்தக்க.

துன்எனும் வினைத்தொழில்
தொடங்கிஉள ளேனும்
பெண்என மனத்திடை
பெருந்தகை நினைந்தான். உஉ

கோசிக முனிவர்க்கு (தாடகைமேல் உடனே அம்பை விடவேண்டும் என்ற) அது எண்ணமாக இருந்தாலும், இவளுடைய உயிரை உண்பாயாக என்று கூர்மையான அம்பை இராமன் விடவில்லை. இராமனுடைய உயிருக்கே ஆபத்தான செயலை அவள் தொடங்கிவிட்டாளென்பதை அறிந்தாலும் (அம்பை விடவில்லை); இவள் ஒரு பெண் அல்லவா என்ற நினைப்பு அவனுடைய உள்ளத்தில் ஏற்பட்டது.

(வி - ம்) முனிவர் சொல்வதை வேதமாகக்கொண்டு நடக்க வேண்டுமென்பதுதான் இராமனின் கருத்து. அரக்கர் செய்யும் இடையூற்றைச் செருமுகத்தில் காப்பதற்காகத் தான் வந்திருக்கிறான். மேலும் தன் உயிருக்கே குறி வைத்து எறியும் பொருட்டுச் சூலத்தையும் எடுத்துவிட்டாள். இத்தனையும் போகட்டும். ஒரு பெண்ணை அம்பு விட்டுக் கொல்லலாமா? அது வீரத்திற்கு அழகா? இரக்கத்துக் கிலக்காகும் பொருளை எதிர்ப்புக்கு இலக்காக்கலாமா? இந்த உணர்ச்சி பெருந்தகைக்கு இயல்பாக மீறி எழுந்ததில் வியப்பு என்ன?

இராமன் கருத்தை முனிவர் உணர்தல்

92 *வெறிந்த செம்மயிர்
வெள்எயிற் றாள்'அயில்
எறிந்து கொல்வென்'என்று
ஏற்கவும் பார்க்கிலாச்

செறிந்த தார்அவன்
சிந்தைக் கருத்தெலாம்
அறிந்து நான்மறை
அந்தணன் கூறுவான். ௯௨

விரைத்து நிற்கிற செம்பட்டை மயிரையும், வெண்மையான பற்களையும் உடையவளாகிய தாடகை, சூலத்தை எறிந்து கொல்வேன் என்று எதிர்க்கும்போதும் இலட்சியம் செய்யாத இராமனது மனத்தில் தோன்றிய எண்ணங்களை எல்லாம் தெரிந்துகொண்டு நாலு வேதம் அறிந்த முனிவர் சொல்லுகிறார்.

(வி - ம்) தார் என்பது ஆண்மகன் அணிவதும், மாலை என்பது பெண்மகள் அணிவதுமாம் என்பர். 'தாரும் மாலையும் மயங்கி', என்பது சிலப்பதிகாரம். (மனையறம் 35)

இவளைப் பெண்ணென்று நினைக்கிறாய்?

93 'தீதென் றுள்ளவை
யாவையும் செய்தெமைக்
கோதென்று உண்டிலள்
இத்தனை யேகுறை;
யாதென் றெண்ணுவது
இக்கொடி யாளையும்
மாதென் றெண்ணுதி
யோ?மணிப் பூணினாய்! ௯௩

92. வெறிந்த - மடங்காமல் விரைத்து நிற்கிற: பறட்டை; பார்க்கிலா - கவனியாத; செறிந்த தாரவன் - நெருக்கமாகக் கட்டப்பெற்ற மாலையை அணிந்திருப்பவன்.

93. கோது - சாறு பிழியப்பட்ட சக்கை; இத்தனையே குறை - (சொல்லப்போனால்) இவ்வளவுதான் மிச்சம்.

மணிகளாலாகிய நகைகளை அணிந்துள்ள ஏ இராமா! உலகில் தீமை என்று உள்ளவற்றில் (ஒன்றையும் விடாமல்) யாவற்றையும் செய்து முடித்து, முனிவர்களாகிய எங்களை மட்டும் (சாறு அற்ற) சக்கை என்று உண்ணுமல் விட்டிருக்கிருள். இதுதான் பாக்கியாக இருக்கிறது. (இவளைப் பற்றி) யாது (செய்வது) என எண்ண என்ன இருக்கிறது? இந்தக் கொடியவளையும் பெண் என்று நினைக்கிருயா?

(வி - ம்) இரத்தப் பசையுள்ள எல்லாப் பொருள்களையும் மென்று தின்றுவிட்டாள். தவம் செய்து விரதந்தனில் இளைத்த மேனியை உடைய தவசிகளின் உடம்பு சத்தில்லாமல் வறண்டிருப்பதால், இதைச் சாறுபிழிந்த கரும்புச் சக்கை என்று கருதிவிட்டாளென்று முனிவர் கூறுகிருர். 'கடக்கரும்' (89) என்ற பாடலை இதில் ஒட்டிப் பார்க்க வேண்டும். அப்பாடலில் எனக்கு நல்ல வழுவழுப்பான கொழுங்குட்டிகள் கிடைக்காத குறையைத் தீர்க்க வந்தீர்களா என்ற குறிப்பில் தாடகையே கேட்கிருள். 'யாது என்று எண்ணுவது' என்ற தொடர், அச்சத்தாலும் ஏக்கத்தாலும் முனிவரது நாக்கு, சரியாகப் பேசவில்லை யென்பதைக் காட்டுவதோடு, அவருடைய கருத்தை அத் தொடர் தெளிவாக நமக்கு அறிவுறுத்தவும் செய்கிறது.

இதுவும் அது

94 'மன்னும் பல்உயிர்
வாரித்தன் வாய்ப்பெய்து
தின்னும் புன்மையில்
தீமைஎதோ? ஐய!

---

94. மன்னும் - உடலோடு பொருந்திப் பிறந்திருக்கிற.

பின்னும் தாழ்குழல்
பேதைமைப் பெண்இவள்
என்னும் தன்மை
எளிமையின் பாலதே. உரு

பொருந்திய பல உயிரையும் அள்ளி வாயிற் போட்டுத் தின்னுகிற தாழ்ந்த செயலைக் காட்டிலும் தீமை வேறு ஏதாவது உண்டா? ஐயனே! பின்னி நீண்ட சடைபோட்டுக்கொண்டிருக்கிற உங்களூர்க் கன்னிப் பெண் என்று இவளை நினைப்பது விளங்காத் தனத்தைச் சேர்ந்ததாகும்.

(வி - ம்) காட்டில் காட்டுத்தனமாகத் திரிகிற அரக்கிகளை இராமன் பார்த்ததில்லை. அயோத்தியிலே அழகான மெல்லியலார் பலரும் தலையை வாரிச் சடைபோட்டுக் கொண்டு அன்னமும் மயிலும் குயிலும் மானும் போல உலாவுவதைப் பார்த்தவன். அந்த வகையைச் சேர்ந்த பெண் இவள் என்ற பைத்தியக்கார நினைப்பை விட்டுவிடு என்கிறார் முனிவர்.

தயங்காமல் கோல் எனல்

95 'ஈறில் நல்அறம்
பார்த்திசைத் தேன்;இவட்
சீறி நின்றிது
செப்புகின் றேன்அலேன்;
ஆறி நின்றது
அறன்அன் று; அரக்கியைக்
கோறி' என்றெதிர்
அந்தணன் கூறினான். உசு

---

95. ஈறு இல் நல் அறம் - அழிவில்லாத நல்ல அறம்: சத்தியம்; இவள் + சீறி - இவளைக் கண்டு கோபங்கொண்டு; ஆறி

சத்தியத்தை நோக்கிச் சொன்னேனே அல்லாமல் இவள்மேலேற்பட்ட கோபத்தால் இப்படிக் கூறவில்லை. நீ சாந்தமாக இருப்பது தருமமன்று. அரக்கியைக் கொல் என்று எதிரே நின்று முனிவர் கூறினர்.

(வி – ம்) எவ்வளவு நடுநிலையோடு கூடிய பெரியோ ராயினும் தாங்கள் விரும்புகிற காரியத்தோடு ஒட்டி அறம் சொல்லும்போது, உண்மை அறமாக அது இருந்தாலும் ஏற்போருக்கு ஐயம் எற்படுவது இயல்பு என்பது இங்கே வலியுறுகிறது. கோசிக முனிவர் உலக நலங் கருதித்தான் தாடகையைக் கொல் என்று அறம் உரைக்கிருர். இராமன் இதையெல்லாம் நினைக்கவில்லை. அவனுடைய பண்பட்ட மனமானது 'இது பெண்' என்று ஞாபகப்படுத்தி யிருக் கிறது. அவ்வளவுதான். ஆனல் முனிவரின் மனத்தில் முனி வர்க்கு அரக்கர் எதிரிகளாதலால், எதிர்ப்பு நோக்கத்தில் இவர் கூறுகிருரோ என்று இராமன் ஐயப்படுகிருன் என்று தோன்றுகிறது.

சூலத்தை ஏவினள்

96 கங்கைத் தீம்புனல்
நாடன் கருத்தைஅும்
மங்கைத் தீஅனை
யாளும் மனக்கொளாச்,

நின்றது - நீ சாந்தத்தோடு நிற்பது ; கோறி - கொல்லுதி : கொல் வாயாக.

96. வெம் கண் தீ - கொடிய பார்வையான நெருப்பு; வெங் கட்டீ=வெம்மை+கண்+தீ.

செங்கைச் சூலவெம்
தீயினைத் தீயதன்
வெங்கட் டீயொடு
மேற்செல வீசினள். உஎ

கங்கையாற்றின் இனிமையான நீர்பாயும் நாட்டையுடைய இராமனின் (தன்னை எதிர்ப்பான் என்ற) கருத்தை அந்த மங்கை வடிவங்கொண்ட கொடியவளான தாடகை மனத்தில் எண்ணி, சிவந்த கையால் தீயின் கடுமையோடு இருக்கிற சூலத்தைத் தன்னுடைய கொடிய கொதிக்கிற கண்ணிலிருந்து கிளம்புகிற தீயோடு இராமன்மேல் செல்லும்படி வீசினள்.

(வி - ம்) என்றும் வற்ருத கங்கை நீர் பாய்கிற தீம்புனல் நாடன், அதாவது குளிர்ச்சி மாருத நிலத்தில் வாழ்ந்த, இனிய குளிர்ந்த மனமுடையவன். அவன்பேரில் வறண்ட பாலை நிலத்தில் திரிகிற தீ அனையாள், சூலவெம் தீயினை, தீய தன் வெம் கண்ணின் தீயொடு வீசினள். எத்தனை தீ? வெப்பம் என்பதையே அறியாத இளம் தளிர்போன்ற இராமன்மேல் இத்தனை தீயையும் சேர்த்துவிடுவதைச் சொல்லக் கவியின் மனம் துடிக்கிறது, திணறுகிறது. பின் இரண்டு அடிகளில், கையை உதறுகிற மாதிரி சொற்கள் உதறி விழுகின்றன.

இராமன் தன் வாயினுற் பேசவில்லை, தயங்குகிருன் என்பதைக் குறிப்பால் அறிந்த முனிவர் சமாதானம் கூறினர். சமாதானத்தை ஏற்று முனிவர் கருத்துக்கு இணங்கி விட்டான் என்பதைக் குறிப்பால் அறிந்த அரக்கி, உடனே சூலத்தை வீசிவிட்டாள். குறிப்பறிவதில் நுட்ப உணர்வுள்ள முனிவரைப் போலவே முரட்டுத்தனமுள்ள அரக்கியும், இருந்திருக்கிருள் என்பது குறிப்பிடத்தக்கது.

சூலத்தை இராமன் துணித்தல்

97 மாலும் அக்கணம்
　　வாளியைத் தொட்டதும்
கோல விற்கால்
　　குனித்ததும் கண்டிலர் ;
காலனைப்பறித்து
　　அக்கடி யாள்விட்ட
சூலம் அற்றுறு
　　துண்டங்கள் கண்டனர். உஅ

திருமாலின் அவதாரமான இராமன் அந்தக் கணத்தில் அம்பை எடுத்ததையும், அழகிய வில்லின் காலை வளைத்ததையும் யாரும் காணவில்லை. எமனையே பிடித்து எவினமாதிரி, தாடகை பிடுங்கி வீசிய சூலமானது வெட்டுப்பட்டு (கீழே) விழுந்த துண்டங்களைக் கண்டனர்.

தாடகையின் கல்மாரியை இராமன் விலக்கல்

98 அல்லின் மாரி
　　அனைய நிறந்நவள்
சொல்லின் மாத்திரை
　　யிற்கடல் தூர்ப்பதோர்
கல்லின் மாரியைக்
　　கைவகுத் தாள்;அது
வில்லின் மாரியின்
　　வீரன் விலக்கினன். உகூ

---

97. மாலும் - திருமாலாகிய இராமன் ; குனித்ததும் - வளைத்ததும் ; காலனைப் பறித்து - எமனையே இருந்த இடத்திலிருந்து எடுத்து ஏவிவிட்ட மாதிரி ; அற்று உறு - ஒடிந்து தங்கள் அருகில் விழுந்த.

98. அல் - இருட்டு ; மாரி - மழை.

இருட்டில் சூழ்ந்த மழைமேகத்தை ஒத்த நிறமுள்ள தாடகை ஒரு சொல் சொல்லுகிற அளவுநேரத்தில் கடலையே தூர்த்துவிடக்கூடிய அவ்வளவு கற்களை மழையாகக் கைகளினாலே பொழிந்தாள். அதனை வில்லிலிருந்து எழுந்த அம்பு மழையால் இராமன் தடுத்தான்.

அம்பு தாடகை நெஞ்சை உருவிச் சென்றது

99 *சொல்ஒக்கும் கடிய வேகச்
சுடுசரம் கரிய செம்மல்
அல்ஒக்கும் நிறத்தி னாள்மேல்
விடுதலும் வயிரக் குன்றக்
கல்ஒக்கும் நெஞ்சில் தங்காது
அப்புறம் கழன்று கல்லாப்
புல்லர்க்கு நல்லோர் சொன்ன
பொருள்எனப் போயிற் றன்றே. ௩௦

சாபச் சொல்லை ஒத்து, மிகுந்த விரைவோடு கூடிக் கொதிக்கின்ற அம்பை, இராமன் இருட்டின் நிறமுள்ள தாடகையின்மேல் விட்டவுடனே, வயிரம்பாய்ந்த மலைக்கல்லை ஒத்த அவளுடைய நெஞ்சில் பாய்ந்து துளைத்துக் கொண்டு பின்புறத்தில் போயிற்று. கல்வி அறிவுத் தெளிவில்லாத அற்பரிடத்தில் அறிவுத் தெளிவுள்ள நல்லவர் சொல்லும் உண்மையானது எப்படி மனத்தில் பற்றாமல் போகுமோ அதுபோல.

(வி - ம்) பிரகலாதன் கடவுளுண்மையைச் சொன்னான். இரணியன் காதில் ஏறவில்லை. ஆனாலும் பிரகலாதனின் சொல்

---

99. சொல் - சாபம் ; சுடுசரம் — கடுமையான அம்பை ; செம்மல் - வீரன்.

வீணாகவில்லை. இரணியனின் முடிவுக்குக் காரணமாயிற்று. வீடணன் சீதையை எடுத்துவந்தது பிழை, விட்டுவிடு என்று அறவழியைக் கூறினான். இராவணன் காதில் ஏறவில்லை. ஆனாலும் வீடணன் சொல் வீணாகவில்லை. இராவணனின் முடிவுக்குக் காரணமாயிற்று. நல்லோர் சொல்கின்ற அறச்சொல் புல்லர்கள் காதில் புகுந்து தங்காமல் சென்று விடும். சென்றாலும் வீணாவதில்லை. அறத்தைச் செய்து முடித்துவிடும் என்பது கருத்து.

தாடகை இறந்து விழுந்தாள்

100 பொன்நெடும் குன்றம் அன்னான்
புகர்முகப் பகழி என்னும்
அந்நெடுங் கால வன்காற்று
அடித்தலும், இடித்து வானில்
கன்னெடு மாரி பெய்யக்
கடையுகத்து எழுந்த மேகம்
மின்னொடும் அசனி யோடும்
வீழ்வதே போல வீழ்ந்தாள். ௩௧

மேருமலையை ஒத்தவனான இராமனால் விடப்பட்ட கூர்மையான நுனியையுடைய அம்பு என்னும் ஊழிக்காற்றானது அடித்தவுடனே தாடகை விழுந்தாள். எப்படி விழுந்தாள்? யுகத்தின் முடிவு காலத்தில் பேரிடி இடித்துக் கல்மழையைப் பெய்யக் கிளம்பிய மேகமானது, மின்னலோடும் இடியோடும் நிலத்தில் விழுந்தமாதிரி விழுந்தாள்.

---

100. பொன் நெடும் குன்றம் - மேரு மலை; புகர் முகப் பகழி - கூர்மையான நுனியை உடைய அம்பு; நெடுங் கால வன் காற்று - ஊழிக்காலத்தில் வீசும் வலியகாற்று; அசனி - இடி.

(வி-ம்) இராமனுடைய அம்பு பட்டதும் அலறிக் கொண்டு செத்துக் கீழே விழுந்தாள். பல் மின்னலுக்கும், அலறல் இடிக்கும் உவமை. மேருமலை—பருமைக்கும் பெருமைக்கும் உவமையே அன்றி நிறத்துக்கு அன்று.

இராவணன் வீழ்ச்சிக்கு முன்னறிவிப்பு

101 பொடிஉடைக் கானம் எங்கும்
குருதிநீர் பொங்க வீழ்ந்த
தடிஉடை எயிற்றுப் பேழ்வாய்த்
தாடகை, தலைகள் தோறும்
முடிஉடை அரக்கற்கு அந்நாள்
முந்திஉற் பாதம் ஆகப்
படிஇடை அற்று வீழ்ந்த
வெற்றிஅம் பதாகை ஒத்தாள். ௩௨

புழுதிமயமான காடு முழுமையும் இரத்த நீர் பெருகும்படி வீழ்ந்தவளும், தின்ற ஊன்தசை பல் இடுக்குகளில் ஒட்டிக் கொண்டிருக்கிற திறந்த வாயையுடையவளுமான தாடகை, பத்துத் தலைகளிலும் முடியைத் தாங்கியிருக்கிற இராவணனுக்கு ஏற்படவிருக்கும் கேட்டின் முன்அறிவிப்பாக, நிலத்தில் அறுந்து விழுந்த வெற்றிக் கொடியையொத்தாள்.

(வி-ம்) இவள் இராவணனுக்குப் பாட்டி. அவனுடைய ஏவலால் இந்தக் காட்டில் இருந்து வருகிறாள்.

---

101. பொடி - புழுதி; குருதி — இரத்தம்; தடிஉடை எயிற்று - தின்ற இறைச்சி தங்கியிருக்கிற இடைவெளியைக் கொண்ட பற்களையுடைய; பேழ்வாய் — திறந்த வாய்; தலைகள் தோறும் முடியுடை அரக்கற்கு — பத்துத் தலைகளிலும் கிரீடங்களைத் தாங்கியிருக்கிற இராவணனுக்கு; உற்பாதம் — கேட்டின் முன்னறிவிப்பு; படி - பூமி; பதாகை - கொடி.

இவளுடைய வீழ்ச்சி, இராவணனுடைய வெற்றிக்கொடி அறுந்து வீழ்ந்ததற்கு ஒப்பாகும்படி ஆகிவிட்டது.

இரத்த வெள்ளம்

102 கான்திரிந் தாழி ஆகத்
 தாடகை கடின மார்பத்து
ஊன்றிய பகழி வாய்ஊடு
 ஒழுகிய குருதி வெள்ளம்,
ஆன்றஅக் கானம் எல்லாம்
 ஆயினது அந்தி மாலைத்
தோன்றிய செக்கர் வானம்
 தொடக்கற்று வீழ்ந்தது ஒத்தே. ருரு

காட்டிலே திரிந்த கருங்கடல் போன்ற உடலையுடைய தாடகையின் கடினமான நெஞ்சில் அழுத்திய அம்பின் குத்துவாயிலிருந்து ஒழுகிய இரத்த வெள்ளமானது, மாலைப் பொழுதில் தோன்றும் செவ்வானம் அப்படியே அறுந்து மேலிருந்து கீழே விழுந்துகிடக்கிற மாதிரி அந்த நிலம் முழுமையும் காணப்பட்டது.

(வி - ம்) சிவப்புப் பட்டினால் ஆகிய ஒரு மேற்கட்டிச் சேலை கட்டப்பட்டது போன்ற மாலை நேரத்துச் செவ்வானமானது, கட்டிய கயிறு அறுந்து நிலத்தில் விழுந்து கிடக்கிற மாதிரி இருந்தது. தரையெல்லாம் ஒரே இரத்த வெள்ளம்! கான் திரிந்த + ஆழி = கான் திரிந்தாழி என்று

---

102. கான் திரிந்த - காட்டிலே சுற்றித் திரிந்த; ஆழி ஆகத் தாடகை - கடலை ஒத்த பெரிய கறுத்த நிறத்தையுடைய தாடகை; ஆன்ற - பரந்த; செக்கர் வானம் - செவ்வானம்; தொடக்கு - பிடிப்பு; குருதி - இரத்தம்.

வந்திருப்பது, புகழ் புரிந்த+இல்இல்லோர்க்கு என்பது, 'புகழ் புரிந்தில்லில்லோர்க்கு' என்றாற்போல. அகரம் தொக்கது.

கூற்றுவன் சுவை அறிதல்

103 வாசநாள் மலரோன் அன்ன
மாமுனி பணிம றுத்த
காசுலாம் கனகப் பைம்பூண்
காகுத்தன் கன்னிப் போரில்,
கூசிவாள் அரக்கர் தங்கள்
குலத்துயிர் குடிக்க அஞ்சி
ஆசையால் உழலும் கூற்றும்
சுவைசிறிது அறிந்த தன்றே. ௩௪

மணமுள்ள புதிய தாமரை மலரில் இருக்கும் பிரம தேவனை ஒத்து உயர்ந்த கோசிக முனிவரது ஆணைக்கு மறுப்பில்லாத இராமனுடைய முதலாவது போர் நடந்ததில், வாளாயுதத்தைக்கொண்ட அரக்கர் குலத்து உயிரைக் குடிக்கக் கூசிப் பயந்து திரிந்த எமனும் கொஞ்சம் சுவைபார்த்தான்.

(வி - ம்) கூச்சம் - உடலில் ஏற்படும் நடுக்கம்; அச்சம் - மனத்திலேற்படும் நடுக்கம். எமனுக்கு அரக்கர்

---

103. நாள்மலரோன் - அன்று அலர்ந்த மலரில் இருப்பவனை : பிரமனை ; காசு - இரத்தினம் ; பைம்பூண் காகுத்தன் - அழகிய அணிகலன்களை அணிந்திருக்கிற இராமன் ; கன்னிப் போர் - முதலாவது போர் ; கூசி - நாணி ; அஞ்சி ஆசையால் உழலும் - பயம்பிடித்து ஆனால் ஆசையையும் விடாமல் சமயம் பார்த்துத் திரிகிற ; கூற்று - எமன்.

உயிரைக் குடிக்க ஆசை. ஆனால் கிட்ட அணுக முடிய வில்லை. இனி நடக்கப் போகிற போர்களில் எமன் குடிக் கப்போகிற உயிர்க் கடல் பெரிது. இங்கே சிறிது அறிந் தான்; பின்னாலே பெரிதை அறியப்போகிறான் என்ற குறிப்புக் காட்டப்படுகிறது. உயிரானது குடிக்கும் படிக் கான நீர்ப்பொருள் அன்று. என்றாலும் 'உயிரை உண் டான்' என்று கூறுதல் மரபு. 'உடலைவிட்டுப் பிரித்தான்' என்பதுதான் பொருள். 'செல்லாது உயிருண்ணும் கூற்று' (குறள் 326). இனி, உயிரை இறைவனே கரைத்து அன்புநீராக்கித் தன்னோடு கலந்து கொள்கிறான் என்பதும் காண்க. 'இன்பே அருளி எனை உருக்கி உயிர் உண்கின்ற எம்மானே' (திருவாசகம் - 44. 3).

விண்ணவர் வாழ்த்துதல்

104 யாமும்எம் இருக்கை பெற்றேம்,
உனக்கிடை யூறும் இல்லை,
கோமகற்கு இனிநீ தெய்வப்
படைக்கலம் கொடுத்தி என்று,
மாமுனிக்கு உரைத்துப், பின்னர்
விற்கொண்ட மழைய னன்மேல்
பூமழை பொழிந்து வாழ்த்தி,
விண்ணவர் போயி னாரே. ௩௫

எங்கள் இருப்பிடமான வானுலகம் இனி எங்களுக்குக் கிடைத்த மாதிரிதான். உனக்கு ஏற்பட்ட இடையூறும் தீர்ந்தது. மன்னன் மகனாகிய இராமனுக்குத் தெய்வத் தன்மை பொருந்திய படைக்கலங்களைக் கொடுப்பாயாக என்று முனிவரிடம் சொல்லிவிட்டு வில்லோடு தோன்றிய

104. மழையனன் - மேகத்தை ஒத்த இராமன்.

மழைமேகத்தைப் போல நிற்கிற இராமன்மேல் பூமாரி பொழிந்து மனமார வாழ்த்திக்கொண்டு தேவர்கள் போனார்கள்.

(வி – ம்) இந்தப் போரைக் காணத் தேவர்களெல்லாரும் வந்திருந்தார்கள். அவர்களுக்கு இதைவிட முக்கியமான வேலை வேறென்ன இருக்கிறது ? மழைக் காலத்தில் வானத்தில் வில் தோன்றுவ துண்டு. இங்கே இராமன் மழைமேகம் போன்றிருக்கிறான். அந்த இராமன் வில்லோடு நிற்கிறான் அல்லவா ?

---

7. வேள்விப் படலம்

[கோசிக முனிவர் செய்யும் வேள்வியைப் பற்றிக் கூறும் படலம்]

இராமனுக்கு முனிவர் படைக்கலம் கொடுத்தல்

105 விண்ணவர் போய பின்றை
விரிந்தபூ மழையி னாலே
தண்எனும் கானம் நீங்கித்
தாங்கரும் தவத்தின் மிக்கோன்
மண்ணவர் வறுமை நோய்க்கு
மருந்தன சடையன் வெண்ணெய்
அண்ணல்தன் சொல்லே அன்ன
படைக்கலம் அருளி னானே. க

---

105. பூமழையினாலே தண் எனும் - பூவை மழைபோலத் தேவர் பொழிந்ததால் குளிர்ந்திருக்கிற.

தேவர்கள் போன பிறகு, அவர்களால் தூவப்பெற்று விரிந்து கிடக்கிற பூக்களினாலே குளிர்ந்திருக்கிற அந்த இடத்தை விட்டுச் சென்று, அரிய தவத்தைச் செய்பவ ராகிய முனிவன், மண்ணுலக மக்களின் வறுமைப் பிணிக்கு மருந்தாக விளங்கும் திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப வள்ளலின் சொல்லைப் போன்ற படைக்கலங்களை இராம னுக்குக் கொடுத்தார்.

(வி — ம்) வறுமை என்ற பொல்லாத பெரிய நோய்க்கு உடனே தீர்க்கும் நல்ல மருந்தாகச் சடையப்ப வள்ளல் திருவெண்ணெய் நல்லூரில் விளங்கிக்கொண் டிருக்கிறார். அவர் சொல்லும் சொல் எப்படிப் பொய்ப்பதில்லையோ அப்படிக் குறி தவறுதனவாக இருக்கின்றன போர்க் கருவிகள். வறுமை என்பது பண்டைத் தலைவிதியின் காரண மாக ஏற்படுவதன்று; உதவுவார் இன்மையினாலேயே ஏற்படுகின்றது; நீக்கக் கூடியதொரு நோய் போன்றது இது. நோய்க்கு மருந்து என்றாலே வறுமை நோய் தீர்க்கக் கூடியதென்பதே பொருள். "பசிப்பிணி மருத்துவன் இல்லம், அணித்தோ சேய்த்தோ கூறுமின் எமக்கே" (புறம் - 173) என வருதல் காண்க.

ஆரவாரம் என்ன என்று கேட்டல்

106 இனையன நிகழ்ந்த பின்னர்க்
காவதம் இரண்டு சென்றார்;
அனையவர் கேட்க ஆண்டோர்
அரவமது எழுந்தது ஆங்கே;

---

106. காவதம் - காதம்; 10 மைல்; $7\frac{1}{2}$ நாழிகை வழி; அரவம் - ஓசை; முன்னவன் - இருவரில் முன்னவனாகிய இராமன். வினை; நல்வினையும் தீவினையும்.

முனிவ ஈது யாவ தென்று
முன்னவன் வினவப், பின்னர்
வினைஅற நோற்று நின்ற
மேலவன் விளம்பல் உற்ருன். உ

இந்த நன்கொடை ஆனபிறகு இரண்டு காததூரம் சென்றனர். அவர்கள் காதில் விழும்படி ஒரு ஓசை கேட்டது. இது என்ன ஓசை என்று முனிவரை இராமன் கேட்க, இருவினை தீரத் தவம் செய்த முனிவர் கூறுகிருர்.

கோசிகை நதியை அடைதல்

107 மானச மடுவில் தோன்றி
வருதலால் சரயு என்றே
மேன்முறை அமரர் போற்றும்
விழுநதி; அதனி னேடும்
ஆனகோ சிகைவந்து எய்தும்
அரவமது என்ன, அப்பாற்
போனபின் பவங்கள் தீர்க்கும்
புனிதமா நதியை உற்ருர். ௩

பொய்கையிலிருந்து தோன்றி வருதலால், சரயு என்று தேவர்களும் போற்றுகிற சிறந்த நதியோடு கோசிகை என்ற நதி வந்து கலப்பதால் இந்த இரைச்சல் கேட்கிறது என்று முனிவர் கூற, அப்பாற்சென்று பாவங்களைப் போக்கும் அந்த நதியை அடைந்தார்கள்.

---

107. மானச மடு – (பிரமன்) மனத்தினுல் நிருமித்த பொய்கை ; சரயு - பொய்கையிலிருந்து பெருகி வருவது ; என்ன- என்று சொல்ல ; பவங்கள் - உற்பத்தியை : பிறப்பை.

செங்கண்மால் தவம் செய்த இடம்

108 தங்கள்நா யகரில் தெய்வந்
தான்பிறிது இல்லென் றெண்ணும்
மங்கைமார் சிந்தை போலத்
தூயது ; மற்றும் கேளாய்
எங்கள்நான் மறைக்கும் தேவர்
அறிவிற்கும் பிறர்க்கும் எட்டாச்
செங்கண்மால் இருந்து மேல்நாள்
செய்தவம் செய்த தன்றே. ௪

தங்கள் கணவனைக் காட்டிலும் சிறந்த தெய்வம் வேறில்லை என்றெண்ணுகிற பெண்களின் மனத்தைப்போல பரிசுத்தமானது. நம்முடைய நான்கு வேதங்கட்கும் தேவர் களின் அறிவிற்கும் (முனிவர் முதலிய) மற்றையோர்க்கும் (அறிதற்கு) எட்டாத திருமால் முன்னாளில் இருந்து தவம் செய்த இடம் இது.

மாவலியின் வரலாறு கூறல்

109 *ஆனவன் இங்குறை
கின்றஅந் நாள்வாய்
ஊனம்இல் ஞாலம்
ஒடுங்கும் எயிற்றின்

---

108. செங்கண்மால் — திருமால் ; செய்தவம் - செய்தற்கு உரிய தவம் ; பிறரின் தீமை கருதிச் செய்கிற தவமும் உண்டு, அது அல்ல இது.

109. ஆனவன் - அப்படித் தவம் செய்தவன் ; ஊனம் இல் ஞாலம் - குறைவில்லாத இந்த உலகம் முழுவதும் ; ஒடுங்கும் எயிற் றின் - அடங்குகின்ற சிங்கப் பல்லையுடைய ; ஏனம் - பன்றி : வராகமூர்த்தி; எனும் திறல் மாவலி - என்று கருதத் தக்க மாவலிச் சக்கரவர்த்தி ; வௌவுதல் - பற்றிக் கொள்ளுதல்.

ஏனம் எனுந்திறல்
மாவலி என்பான்
வானமும் வையமும்
வௌவுதல் செய்தான். ௫

திருமால் இங்கு தங்கியிருந்த நாளில், அழிவில்லாத பூமி அடங்கி நிற்கும்படியான பற்களையுடைய ஆதி வராகம் என்று சொல்லும்படியான வலிமை படைத்த மாவலிச் சக்கரவர்த்தி என்பவன், இந்த உலகத்தையும் வானுலகத்தையும் கைப்பற்றிக்கொண்டான்.

(வி - ம்) பிரளய காலத்தில் பூமி கடலுட் புகுந்து மறைந்து போனபொழுது திருமால் பன்றி உருவெடுத்து, சிங்கப் பல்லில் விளையாட்டாக அப்பூமியைத் தாங்கி எடுத்து வந்தார் என்பது புராணக் கதை. அதைப்போல மாவலியானவன் எளிதாகப் பூமியையும் வானத்தையும் கைப்பற்றினன்.

மாவலி அந்தணர்க்கு முழுதும் வழங்க நினைத்தல்

110 †செய்தபின் வானவ
ரும்செயல் ஆற்ரு
நெய்நவழ் வேள்வியை
முற்றிட நின்ருன்;
ஐயமில் சிந்தையன்
அந்தணர் தம்பால்
வையமும் யாவும்
வழங்க வலித்தான். ௬

110. செய்தபின் - வானையும் பூமியையும் கைப்பற்றிய பிறகு; செயல்ஆற்ரு - செய்ய முடியாத; ஐயம் இல் சிந்தையன் - இடையூறு வரும் என்ற சந்தேகமே இல்லாத மனத்தை உடையவனுகி; வலித்தான் - உறுதிசெய்து விட்டான்.

†செய்தபின் - சரசுவதிமால் ஏட்டிற் கண்டது.

இப்படிக் கைப்பற்றிய பிறகு, தேவரும் செய்ய முடியாத, நெய்பெய்து செய்யும் ஒரு வேள்வியைச் செய்து முடிக்க முற்பட்டான். சிறிதுகூட எண்ணிப் பார்க்காமல், இந்த உலகத்தையும் மற்ற யாவற்றையும் பிராமணருக்குத் தானம் செய்வதென்று முடிவுசெய்துவிட்டான்.

தேவர் விருப்பத்திற்குத் திருமால் உடன்படல்

111 ஆயது அறிந்தனர்
வானவர் ; அந்நாள்
மாயனை வந்து
வணங்கி இரந்தார் ;
தீயவன் வெம்தொழில்
தீர்என நின்றார் ;
நாயக னும்அது
செய்ய நயந்தான். எ

தேவர்கள் அதனை உணர்ந்தார்கள். தவம்புரிகின்ற திருமாலிடம் வந்து வணங்கி வேண்டினார்கள். இந்தக் கொடியவன் செய்யப்போகிற கொடிய செயலைத் தீர்த்து ஒழித்து விடு என்று பிடிவாதம் செய்தனர். அந்தக் கடவுளும் அதற்கு உடன்பட்டார்.

(வி - ம்) மாவலி செய்தது நன்மையான செயல் தான். தான் சம்பாதித்ததை பிராமணருக்குத் தானம் செய்ய விரும்பினான். வேறு கெட்ட வழியில் செய்ய, முற்படவில்லை. பிராமணருக்குத் தானம் செய்வது அரசர்க்கு இன்றியமையாத கடன் ஆகும். ஆனால் இங்கே அது வெம் தொழில் என்றும் அதைச் செய்யும் வள்ளல் தீயவன்

---

111. தீயவன் – மாவலி ; நாயகனும் – திருமாலும் ; நயந்தான் – இணங்கினான்.

என்றும் கூறப்படுகிறது. பிராமணர்க்கு ஒருசிறிது அவர்கள் தேவைக்கு உதவுவதுதான் தருமமே யன்றி ஒரு மாபெரும் அரசாட்சியைத் தானம் செய்வது கொடுமை என்பது கருத்து. எதுவும் அளவுக்கு உட்பட்டுத்தான் நடக்க வேண்டும். நல்லதாயினும் அல்லதாயினும் அளவுக்கு மேலே சென்றால் அது அழிவுக்கு ஏதுவாகும் என்பது படைப்பு நீதி. உலக இயற்கையால் அதனை அழிக்க முடியாத போது ஒரு பெரும் சக்தி தோன்றி அழிக்கும். அந்தச் சக்தி தான் அவதாரம் என்று சொல்லப்படுகிறது.

திருமால் குறளுருவம் கொள்ளல்

112 காலம் நுனித்துணர்
காசிப னுக்கும்
வால்அதி திக்கும்ஓர்
மாமக வாகி,
நீல நிறத்து
நெடுந்தகை வந்தோர்
ஆல்அமர் வித்தின்
அருங்குறள் ஆனான். அ

காலப்போக்கை நுட்பமாக அறிகிற திறனுள்ள காசிப முனிவருக்கும், பரிசுத்தமான அதிதி என்னும் நங்கைக்கும் மகனாக, நீல நிறத்தையுடைய திருமால் வந்து ஆலம் விதையைப் போல அருமையான குறளனாகப் பிறந்தான்.

(வி - ம்) ஓர் ஆலமரத்தில் ஆண்டு தோறும் பழுக்கிற பழத்தை எண்ணி முடியாது. ஓர் ஆண்டில் ஒரு மரம் ஒரு கோடி பழம் பழுக்கும். இப்படி எத்தனை கோடிமரம்

---

112. ஆல் அமர் வித்து - ஆலமரத்தை அடக்கிக்கொண்டிருக்கிறவிதை ; அருங்குறள் - ஆச்சரியமான ஒரு குள்ளனாக.

உலகில் இருக்கின்றன! எத்தனை ஆண்டுகள் உயிருடன் இருந்து பழுத்துக்கொண்டே இருக்கின்றன. சரி. ஒரு பழத்தினுள் எத்தனையோ விதை. ஒரு விதைக்குள் ஒரு ஆலமரம் அடங்கியிருக்கிறது. அந்த ஆலமரம் எத்தனையோ பழம் பழுக்கும். ஒவ்வொரு பழத்தில் எவ்வளவோ விதை கள். அந்த ஒவ்வொரு விதைக்குள்ளும் ஒவ்வொரு ஆல மரம் அடங்கியிருக்கிறது. இப்படிப் பார்த்தால் படைப்பின் உள்ளீடு விளக்கமாகக் கூடும். எப்படி ஆலம் விதையானது பெரிய தத்துவத்தை அடக்கிவைத்துக் கொண்டிருக்கிறதோ அப்படித்தான் நிலவுலகத்தை யெல்லாம் ஒரு அடியில் அடக் கும்படி பேருருவத்தை அடக்கிக் கொண்டு இந்தச் சிறு குறளன் நிற்கிறான். 'ஆல்அமர் வித்தின் அருங்குறள்' என்ற தொடர், 'கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக் குறுகத் தரித்த' திருக்குறளை நினைவூட்டுகிறது. திருவடியால் உலகளந்த இக் கதையையே குறிப்பிட்டுப் பாராட்டிய பரணர் பாட்டு வருமாறு :

> மாலுங் குறளாய் வளர்ந்திரண்டு மாணடியால்
> ஞாலம் முழுதும் நயந்தளந்தான்—வாலறிவின்
> வள்ளுவருந் தங்குறள்வெண் பாவடியால் வையத்தார்
> உள்ளுவவெல் லாம்அளந்தார் ஓர்ந்து.

திருமால் மாவலியிடம் செல்லல்

113 முப்புரி நூலினன்;
முஞ்சியன்; விஞ்சை
கற்பதோர் நாவன்;
அனற்படு கையன்;

---

113. முப்புரிநூல் - மூன்று வடம் கொண்ட பூணூல்; (இது பிரமசாரிக்கு உரியது) விஞ்சை - வித்தை : சாத்திரம்;

அற்புதன் ; அற்புத
ரேஅறி யும்தன்
சிற்பதம் ஒப்பதொர்
மெய்க்கொடு சென்றான். ௯

மூன்று புரிகளுள்ள பூணூலை அணிந்தவனும், அரையில் முஞ்சிப்புல் அரைஞாண் கட்டியிருக்கிறவனும், சாத்திரங்களை ஓதிக்கொண்டிருக்கிற நாவையுடையவனும், வேள்வி நெருப்பின் பக்கத்திலேயே இருப்பவன் என்ற தோற்றம் பொருந்திய கையை உடையவனும் ஆன கடவுள், பெரிய ஞானிகளே அறியத்தக்க தன்னுடைய ஞான சொரூபத்தை ஒப்பதான உருவத்தோடு மாவலிக்கு முன்னாகச் சென்றான்.

வேதியனைக் கண்டு மாவலி மகிழ்தல்

114 அன்றவன் வந்தது
அறிந்துல கெல்லாம்
வென்றவன் முந்தி
விரைந்தெதிர் கொண்டான் ;
நின்றனின் அந்தணர்
இல்லை நிறைந்தோய் !
என்றனின் உய்ந்தவர்
யார்இனி என்றான். ௧0

அன்று அந்தக் குறளன் வந்ததை அறிந்து, உலகெலாம் வென்றவனான மாவலி, விரைந்து முன்னின்று வரவேற்றான். நின்னினும் சிறந்த அந்தணன் யார்? ஒருவருமில்லை. எல்லாம்

அற்புதன் - கடவுள் ; அற்புதரே அறியும் - ஞானிகளாலேயே அறியத்தக்க ; தன் சிற்பதம் — தன்னுடைய ஞான உருவத்தை.

114. நின்தனின் - உன்னைக் காட்டிலும் ; என்தனின் உயர்ந்தவர் - என்னைக் காட்டிலும் ஈடேறினவர்.

நிறைந்தவனே! உன்னைக் காணப்பெற்ற என்னைக் காட்டிலும் பேறு அடைந்தவர் யாரேனும் உளரோ என்றான்.

(வி - ம்) அவனைக் கண்டதும் வேதியன் என்ற அளவிலே மாவலி கொண்ட உணர்ச்சிதான் இது. வந்தவன் கடவுள் என்பது மாவலிக்குத் தெரியாது.

மாவலியைப் புகழ்தல்

115 ஆண்டகை அவ்வகை
கூற, அறிந்தோன்
'வேண்டினர் வேட்கையின்
மேற்பட வீசி
நீண்டகை யாய்'என
நின்உழை வந்தோர்
மாண்டவர்; அல்லவர்
மாண்பிலர் என்றான். கக

ஆண்மைக் குணமிக்க மாவலி இப்படிச் சொன்னவுடனே, எல்லாவற்றையும் அறிந்த குறளன், யார் எதை வேண்டுகிறார்களோ அதைக் காட்டிலும் பல மடங்கு அள்ளி வழங்கி வழங்கி நீண்ட புகழைப் பெற்ற கையை உடையவனே! இனி நின்னிடம் வந்து கை நீட்டினவர்தாம்

---

115. ஆண்தகை – ஆணில் தகுதி பெற்ற மாவலி; அறிந்தோன்-குறளனாகி நிற்கும் திருமால்; வேண்டினர் வேட்கையின்- இரப்பவர்களுடைய விருப்பத்தைக் காட்டிலும்; நீண்ட கையாய் என - வளர்ந்த கையை உடையவனே என்று; நின் உழை - உன்னிடத்து; வந்தோர் மாண்டவர் – வந்தவர்தாம் மாட்சிமைப் பட்டவராவர்; அல்லவர் மாண்பிலர் - மற்றவரெல்லாம் சிறப்புடையவர் அல்லர்.

மாட்சிமைப் பட்டவர். அப்படி உன்னிடம் வந்து கை யேந்தி வாங்காதவர் மிகவும் தாழ்மைப்பட்டவர்தான்" என்று கூறினன்.

(வி - ம்) கொடாதவரிடத்துச் சென்று, துயருற்றுத் திரும்புவதே உலகியல்பு. கேட்டதில் பகுதி பெறுவதும் உண்டு. கேட்டது முழுவதையும் கொடுப்பவரும் உண்டு. ஆனல் கேட்டதைப்போற் பல மடங்கு கொடுத்து, அதை யும் உவகையோடு எளிதாக வாரிவிடுவது பெரிய செயல். வாங்க வேண்டுமென்று நினைப்போர் இங்கே வந்தால்தான் அவரும் கொடையின் பெருமையை அறிவர். தாம் கொடை யாளராகும் தகுதியையும் அடைவர். ஆதலால் உன்னிடம் வந்து இரப்போர் மாண்புடையோர் என்ருர். அப்படி வராதவர், செல்வராதல், வள்ளலாதல் ஆகிய இரண்டையும் இழப்பதால் மாண்பிலர் என்பது பெறப்படுகிறது.

மூவடி மண்வேண்டல்

116 சிந்தை உவந்து எதிர்
என்செய என்ருன்;
அந்தணன் மூவடி
மண் அருள் உண்டேல்
வெந்திற லாய் இது
வேண்டும் எனுமுன்,
தந்தனன் என்றனன்;
வெள்ளி தடுத்தான். கஉ

116. மூவடி - மூன்றடி; உண்டேல் - கூடுமானல்; எனு முன் - என்று சொல்லும் போதே; (விரைவு பற்றி முன்என்று கூறப்பட்டது.) வெள்ளி - சுக்கிரன்; (மாவலியின் குருவும் மந்திரி யுமாவான்).

இந்தப் புகழுரையைக் கேட்டு மனம் மகிழ்ந்த மாவலி நான் என்ன செய்யவேண்டும் என்றான். "பகைவர்க்குக் கொடிய வலிமை உடையவனே! கூடுமானால் மூன்றடி அளவுள்ள நிலம் தருவாயாக! இது எனக்கு வேண்டும்" என்றான் குறளன். என்று சொல்லும்போதே 'தந்தேன்' என்றான் மாவலி. 'கொடாதே' என்று தடுத்தான் வெள்ளி.

வெள்ளி தடுத்தல்

117 கண்ட நிறத்திது
கைதவம்; ஐய!
கொண்டல் நிறக்குறள்
என்பது கொள்ளேல்;
அண்டமும் முற்றும்
அகண்டமும் மேல்நாள்
உண்டவன்; நீஇது
உணர்ந்துகொள் என்றான். கரு

கண் காண நிற்கிற இவ்வுருவம் ஒரு வஞ்சனை. ஐயனே! கரிய நிறத்தையுடைய ஒரு குள்ளன் என்று நினையாதே! இந்தப் பூவுலகையும் இன்னுமுள்ள கண்டம் அகண்டம் ஆகிய முழுவதையும் முன்னாளில் உண்டு வயிற்றில் அடக்கிய திருமால் ஆவன். நீ தெரிந்துகொள் என்று வெள்ளி சொன்னான்.

---

117. கண்ட நிறத்து இது - காணப்படும் இந்த உருவம்; கைதவம் - வஞ்சனை; கொண்டல் நிறக்குறள் - மேக நிறத்தனை (சாதாரணக்) குள்ளன்; உண்டவன் - உண்டு முடித்த திருமால்; அகண்டம் - வரம்புக்கு அடங்காத பொருள்.

மாவலியின் பதில்

118 நினைக்கிலை ; என்கை
நிமிர்ந்திட வந்து
தனக்கிய லாவகை
தாழ்வது தாழ்வில்
கனக்கரி யானது
கைத்தலம் என்னின்,
எனக்கிதன் மேல்நலம்
யாதுகொல் என்றான். கஅ

"நீ நினைத்துப் பார்க்கவில்லை. என்னுடைய கை மேலே நிற்க, இங்கே வந்து, தன்னுடைய பெருமைக்குத் தகாத முறையில் இரப்பது, ஒரு குறைவும் இல்லாத மேகத்தை ஒத்த திருமாலினது திருக்கை என்றால், இதற்குமேல் நன்மையான செயல் என்ன இருக்கிறது?" என்றான் மாவலி.

(வி - ம்) "எனக்குத் தீமை வராமல் காப்பாற்றுவதாக நினைத்து என்னைத் தடுக்க நினைக்கிற குருதேவரே! திருமாலே நேரில் வந்து கையேந்திக் கேட்கும் வாய்ப்பு ஏற்படுமானால், கொடுப்பதைத் தவிர நன்மை என்று நினைக்கக் கூடிய செயல் ஏதாவது உண்டா? நன்மை செய்வதாக எண்ணிப் பெரிய நன்மையைத் தடுக்கிறீரே" என்று சிரித்தான் மாவலி மன்னன்.

---

118. நிமிர்ந்திட - மேலே இருக்கும்படி ; தனக்கு இயலா வகை தாழ்வது - அவனுடைய பெருமைக்குத் தகாத வகையில் இரப்பது ; கனம் - மேகம்.

ஈகைச் சிறப்பு

119 மாய்ந்தவர் மாய்ந்தவர்
அல்லர்கள் ; மாயாது
ஏந்திய கைகொடு
இரந்தவர் எந்தாய் !
வீந்தவர் என்பவர் ;
வீந்தவ ரேனும்
ஈந்தவர் அல்லது
இருந்தவர் யாரே. கடு

தந்தைக்கு நிகரான பெரியோய் ! இறந்தவரை எல்லாம் இறந்தவர்கள் என்று சொல்லுதல் கூடாது. இறவாமல் உயிருடன் இருந்தாலும் கையேந்தி இரப்பவர்தான் செத்தவர் ஆவர். ஆனால் இறந்து போனவர் இறந்து போனவர்களானாலும் தானம் செய்தவர்களை யல்லாமல் வேறு யாரை இருந்தவர் என்று கூற முடியும் ?

(வி – ம்) இறந்து போனவரெல்லாரும் செத்துப் போனார்கள் என்று நினைத்தல் கூடாது. இறவாமல் உயிருடன் இருப்பவர் எல்லாரும் உயிருடன் இருக்கிறார்கள் என்றும் நினைப்பதற்கில்லை. உயிருடன் இருப்பவரானாலும் கையேந்திப் பிச்சை கேட்கிறார்களே அவர்கள்தாம் செத்தவர்கள். இறந்து போனவரானாலும் கொடுத்தவர்தாம் உயிருடன் என்றும் இருப்பவர் ஆவர். உலகில் நாள்தோறும் பிறக்கவும் இரக்கவும் செய்கிறார் எண்ணற்றவர். ஆனால் வழங்கிப் புகழுடைந்தவரைத் தவிர யார்தான் உலக மக்களின் நினைவில் இருக்க முடிகிறது ?

---

119. மாய்ந்தவர் – இறந்தவர் ; இரந்தவர் – யாசிப்பவர் ; எந்தாய் – என் தந்தை போன்ற சுக்கிரனே ; வீந்தவர் – இறந்தவர்.

மூவடிமண் ஈதல்

120 *முடியஇம் மொழிஎலாம்
மொழிந்து மந்திரி
கொடியன்என் றுரைத்தசொல்
ஒன்றும் கொண்டிலன் ;
அடிஒரு மூன்றும்நீ
அளந்து கொள்கென
நெடியவன் குறியகை
நீரின் நீட்டினன். கசு

இம்மாதிரிச் சொற்களையெல்லாம் சொல்லி முடிவில், மந்திரியாகியுள்ள சுக்கிரனவன் ‘ இவன் கொடியவன் ’ என்று சொன்ன சொல்லை ஒருவழியாலும் ஏற்கவில்லை. மூன்றடி நிலத்தை நீயே அளந்து கொள்வாயாக என்று, இனிமேல் நீண்டு வளர்ந்து நெடியோனகப் போகிறவனுடைய குட்டையான கையில் நீரை வார்த்துப் பெருங் கொடையை நல்கினன்.

குறளன் வானுற வளர்தல்

121 கயம்தரு நறும்புனல்
கையில் தீண்டலும்
பயந்தவர் களும்இகழ்
குறளன் பார்த்தெதிர்

---

120. கொள்கென - கொள்வாயாக என்று சொல்லி ; நெடியவன் - திருநெடுமாலினது ; நீரின் - தாரை வார்த்ததனல் ; நீட்டினன் - கொடுத்தான். கொள்க + என - கொள்கென; அகரம் தொக்கது.

121. கயம் - குளம் ; நறும்புனல் - தூய்மையான நீர் ; கையில் தீண்டலும் - குள்ளன் கையில் பட்ட அளவில் ; பயந்தவர்களும் - பெற்றவர்களும் ;

வியந்நவர் வெருக்கொள
விசும்பின் ஓங்கினான்
உயர்ந்நவர்க்கு உநவிய
உநவி ஒப்பவே. கள

குளத்திலிருந்து கொண்டுவரப்பட்ட நல்ல நீர் கையில் பட்டவுடனே, பெற்றதாயும் இகழும்படியான உருவத்தை யுடைய அந்தக் குறளன், எதிரே இருந்து இந்நிகழ்ச்சியைக் கண்டு வியந்தவர்களும் அஞ்சி அலறும்படி வானத்திலே உயர்ந்து வளர்ந்தான், உயர்ந்தவர்களுக்குச் செய்யப்பட்ட உதவி உயர்வது போல.

(வி - ம்) விகாரமாக இருந்தாலும், உறுப்புக் குறை வாக இருந்தாலும், எப்படிப்பட்ட கொடூரமாக இருந்தாலும் பெற்ற தாய் தன் பிள்ளையைக் கேலியாக நினைக்கமாட்டாள். இது உலகியல்பு. ஆனால் இந்தக் குறளன் மாதிரிப் பிள்ளை பிறந்தால் பெற்ற தாயும் இகழ்வாள். அப்படிப்பட்ட அசிங் கமும் விகாரமுமாக இருக்கிறான். எல்லோரும் அவனைப் பார்த்தபடியே இருக்கிறார்கள். கையில் நீரை வார்த்த வுடன் வளர்ந்தானே பார்க்கலாம். ஓரளவு வளரும்போது எல்லோரும் வியப்பால் திகைத்தனர். பிறகு வானளாவத் தலையும், பூமியின் பரப்பை நோக்கிக் காலும் வளரவே யாவரும் அஞ்சி அலறிப் போயினர். குறளன் ஓங்கி வளர்ந்தது எவ்வாறு இருந்ததென்றால், உயர்ந்தவர்க்கு உத விய உதவி எவ்வாறு ஓங்கி வளருமோ அவ்வாறு இருந்தது. இங்கு நிகழ்ச்சியிலிருந்தே உவமையும் காணப்பட்டிருக் கிறது. உயர்வென்று எது கருதப்பட்டதோ அச்செயலே அச் செயல் செய்தவனின் வாழ்வுக்கு அழிவாக இருந்தது. திரு

121. வியந்தவர்-ஆச்சரியப்பட்டவர் ; வெருக்கொள-அஞ்சி நடுங்க

மால் உயர்ந்தவன். அவற்கு உதவிய மாவலியின் வாழ்வோ சிறிது நேரத்தில் அதோகதியாகப் போகிறது. இந்நிலையில் இவ் உவமை பொருந்துமோ எனின், பொருந்தும். இறப்பதும் பிறப்பதும் ஆவதும் அழிவதும் வேறு விஷயம். எது எப்படியானாலும் வண்மை நிலைத்தது தானே! மாவலி, என்றுவது ஒரு நாள் உலகைவிட்டுப் பிரிவான். அப்படிப் பிரிந்தால் புகழுக்கு இடமில்லை. கொடுத்ததால் புகழை அடைந்தான். கடவுளிடம் கொடுத்தான்; சிறிது பெரிதாயிற்று. 'தான் சிறிதாயினும் தக்கார் கைப் பட்டக்கால், வான் சிறிதாப் போர்த்துவிடும்' (நாலடி. 38) 'உதவி வரைத்தன் றுதவி, உதவி செயப்பட்டார் சால்பின் வரைத்து' (குறள் 105.)

மண்ணையும் விண்ணையும் அளத்தல்

122 நின்றகால் மண்ணெலாம்
 நிரப்பி அப்புறம்
சென்றுபா விற்றிலை
 சிறிது பாரென ;
ஒன்றவா னகமெலாம்
 ஒடுக்கி உம்பரை
வென்றகால் மீண்டது
 வெளிபெ றுமையால். கஅ

கீழே ஊன்றிய ஒரு காலானது மண்ணுலக முழுமையும் தன்னுள் அடக்கிக்கொண்டு, காலின் அளவுக்குப் பூமி சிறிதாகிவிட்டபடியால் அப்பால் வளராமல் நின்றது.

122. பாவிற்று இலை - (பூமியின் அளவுக்குமேல்) பரவவில்லை ; சிறிது பார் என - நிலம் சிறிதாகிவிட்டது என்பதனால் ; உம்பரை வென்ற கால் - மேலுலகத்தை அளந்து முடித்த மற்றொரு காலானது.

வானத்து இடமெல்லாம் ஒன்றாக ஒடுக்கித் தேவரையும் அகப்படுத்திக்கொண்ட (மேலே தூக்கிய) மற்றொரு கால் காலின் பரப்புக்கு இடம் போதாமையால் திரும்பிக் கீழே வந்தது.

(வி – ம்) குறள் வடிவாயிருந்த உருவம், வளர வளர நிலப்பரப்பெல்லாம் ஓர் அடியில் அடங்கியது. மற்றொரு காலை மேலே தூக்கியவுடன் வானம் முழுதும் அந்த அடிக்குள் அடங்கியது. இரண்டடி ஆகிவிட்டது. மற்றொரு அடி வைத் தளப்பதற்காக மேலே சென்ற கால் கீழே திரும்பியது.

மூன்றும் அடிக்கு மாவலியின் முடி

123 உலகெலாம் உள்ளடி
அடக்கி, ஓர்அடிக்கு
அலகிலாது அவ்வடிக்கு
அன்பன் மெய்யதாம்;
இலைகுலாம் துழாய்முடி
ஏக நாயகன்
சிலைகுலாம் தோளினாய்!
சிறியன் சாலவே. கக

இரு உலகங்களையும் தன் இரண்டு அடிகளினுள் அடக்கிக்கொண்டு, மற்றுமுள்ள ஓர் அடிக்கு இடமில்லாத படியால் அன்பனாகிய மாவலியின், உடல்பே இடமாயிற்று. வில்லை அணிந்திருக்கிற தோள்களையுடைய இராமா! இலைகள் விளங்குகின்ற துளசி மாலையை முடியில் அணியும் ஒப்பற்ற

123. உள்ளடி – அடிக்குள்; அலகு இலாது – இடமில்லாத படியால்; துழாய் – துளசி மாலை; சிலை – வில்; குலாம் – பொருந்திய; சால – மிகவும்.

திருமால் மிகமிகச் சிறிய ஆள்! (இருந்தும் செய்கை எப்படி?)

(வி - ம்) திருமால் வளர்ந்தார். பூமியின் பரப்புக்குச் சரியாக்கி நிறுத்திக்கொண்டார் திருவடியை. நல்ல வேளை யாக ஓர் அடிக்கே போதவில்லை என்று சொல்லாமல் விட்டது நல்லதாகிவிட்டது. மற்ருெரு அடியால் வானத்தை அளந்துகொண்டார். மூன்ருவது அடிக்கு வழி எங்கே? மாவலி தலையை வணங்கிக் கொடுத்தான். வானை அளந்த திருவடி திரும்பி அவன் தலைக்குச் சரியாக நின்று அளந்து அடிமை கொண்டது என்று கோசிக முனிவர் கூறிவிட்டு, வில்லைத்தாங்கிய தோளையுடைய இராமா! தழை நிறைந்த துளசிமாலையை அணிந்த சர்வேசுவரன் எப்படி யிருக்கிருன்? மிகமிகச் சிறியவன் அல்லவா? என்று சொல்லிச் சொல்லிச் சிரித்தார். இங்கே மாவலி, அன்பன் என்று குறிப்பிடப்படு கிருன். தீமை விளையுமெனத் தெரிந்தும் கொடுக்க உடன்படு வதால், அன்பு நிறைந்த உள்ளம் இல்லா விட்டால் கொடை மலராது.

திருமால் பாற்கடற் பள்ளி சேர்தல்

124 உரியஇந் திரற்கிதென்று
உலகம் ஈந்துபோய்
விரிதிரைப் பாற்கடற்
பள்ளி மேவினுன்;
கரியவன் உலகெலாம்
கடந்த தாளிணை
திருமகள் கரம்தொடச்
சிவந்து காட்டிற்றே. உ0

124. பள்ளி - (பாம்பாகிய) படுக்கை; தாள் இணை - இரண் டாகிய திருவடிகள்; கரியவன் - திருமால்.

இந்திரனுக்குச் சொந்தமென்று உலகத்தைக் கொடுத்துவிட்டுத் திருமால், மிகுந்த அலைகளையுடைய திருப்பாற் கடலினுள்ள அரவப் பள்ளியை அடைந்தார். உலகங்களைத் தாண்டி வளர்ந்த அந்தத் திருவடிகள் அங்கே திருமகளின் மெல்லிய கைகள் தொட்டுத் தடவச் சிவந்து போய்விட்டன.

(வி — ம்) உலகங்களைத் தாண்டி நிற்கும்படி பருத்து வளர்ந்த தாளிணையானது பூமகளது மெல்லிய கரங்கள் பட்டவுடனே சிவந்து காட்டிற்று என்னும் தெய்வ உண்மை நோக்கத் தக்கது. செயற்படும் போது மிக்க வன்மையையும், அன்பு கனியுமிடத்து மிக்க மென்மையையும் உடையவன் கடவுள் என்ற குறிப்பு இங்கே நயம்பட வெளிப்பட்டிருக்கிறது. பூவிலே பிறந்து வளரும் பூமகளின் கரங்கள் பூவினும் மென்மையுடையன வாகும். அந்தக் கைகளால் மெதுவாகத் தடவுவதைத் தாங்காமல், திருமாலின் திருவடிகள் சிவந்துவிட்டன.

கோசிக முனிவர் வேள்வி தொடங்குதல்

125 ஈண்டிருந் தியற்றுவென்
யாகம் யான்என,
நீண்டபூம் பழுவத்து
நெறியின் எய்திப்பின்,
வேண்டுவ கொண்டுநன்
வேள்வி மேவினன்
காண்டகு குமரரைக்
காவல் ஏவியே. உக

---

125. பழுவம் - சோலை : காண் + தகு = காண்டகு.

இந்த இடத்தில் இருந்து யான் வேள்வியைச் செய்வேன் என்று, பெரிதான அந்தப் பூஞ்சோலை வழியே சென்று, வேண்டிய பொருள்களைச் சேகரம் செய்து, யாவரும் கண்டு மகிழத்தக்க சிறுவர் இருவரையும் காத்து நிற்கும்படி சொல்லிவிட்டு வேள்வியைத் தொடங்கினர்.

மைந்தர்கள் வேள்வியைக் காத்தல்

126 எண்ணுதற்கு ஆக்கரிது
இரண்டு மூன்றுநாள்
விண்ணவர்க்கு ஆக்கிய
முனிவன் வேள்வியை,
மண்ணினைக் காக்கின்ற
மன்னன் மைந்தர்கள்
கண்ணினைக் காக்கின்ற
இமையிற் காத்தனர். உ௨

நினைப்பதற்கும் செய்வதற்கும் முடியாத வகையில் தேவர்களின் பொருட்டு ஆறு நாட்களாக நடந்த வேள்வியை, நிலத்தைக் காத்து அரசு செய்கிற தயரத மன்னனது மக்களான இராம இலக்குவர் கண்ணை இமை காத்தாற் போலக் காத்தார்கள்.

(வி - ம்) கண்ணின் மேலிமையைப்போல இராமன் சுற்றிவந்தான் என்றும், கீழிமையைப்போல இளையவன் நின்ற இடத்திலே நின்றான் என்றும், ஒவ்வொரு முறையும் மேலிமை கீழிமையைத் தட்டுவது போல இராமன் இலக்குவனைத் தட்டி 'கவனம்' என்று சொன்னான்

126. எண்ணுதற்கு ஆக்க அரிது - பிறரால் நினைத்தற்கும் செய்தற்கும் அருமையான; இரண்டு மூன்று நாள் - ஆறு நாட்கள்; இமையின் - கண் இமை போல.

என்றும் இன்னும் நீளமாக விரித்துப் பொருள் கூறு கின்றனர். இந்தப் பொருளுக்கெல்லாம் இடங் கிடையா தென்பது அடுத்த பாடலின் முதல் அடியைப் படித் தால் விளங்கும். 'திரிகின்ற காளை வீரரில் மூத்தவன்' என்பது அது. மற்றும், பெரிய கட்டிடத்தினுள் யாகம் செய்யப்படவில்லை. பொட்டலில்தான் செய்யப்பட்டது. "நிணமும் சோரியும் ஓமவெங் கனலிடை உகுமென்று உன் னியே....கூடமாக்கினன்" (129) என வருதல் காண்க.

அரக்கர் எப்போது வருவரென இராமன் வினவல்

127 காத்தனர் திரிகின்ற
காளை வீரரில்
மூத்தவன், முழுதுணர்
முனியை முன்னி'நீ
தீத்தொழில் இயற்றுவர்
என்ற தீயவர்
ஏத்தரும் குணத்தினய்!
வருவதென்று?' என்றான். உரு

வேள்வியைக் காத்துக்கொண்டு உலவி வருகிற இளமை பொருந்திய இரண்டு வீரர்களில் மூத்தவனாகிய இராமன், எல்லாம் தெரிந்த முனிவரிடம் சென்று, துதித்தற்கு அருமை யான குணத்தையுடைய முனிவ! தீய தொழிலைச் செய்பவர் என நீ சொல்லிய தீயவர் எப்பொழுது வருவர் என்று கேட்டான்.

---

127. காத்தனர் திரிகின்ற - (வேள்வியைக்) காவல் செய்து கொண்டு உலவி வருகிற ; காளை வீரரில் - இளைஞர்களாகிய வீரர் களில் ; ஏத்து - துதித்தற்கு.

அரக்கர் வருகை

128 வார்த்தைமாறு உரைத்திலன்
முனிவன் மோனியாய் ;
போர்த்தொழிற் குமரனும்
தொழுது போந்தபின்
பார்த்தனன் விசும்பினை ;
பருவ மேகம்போல்
ஆர்த்தனர் இடித்தனர்
அசனி அஞ்சவே. உ௪

வேள்வி செய்துகொண் டிருக்கிற முனிவர் வாய் மூடினவராக விடை யொன்றும் கூறவில்லை. போரில் முற்பட்டுள்ள இராமனும் தொழுதுகொண்டே போய்விட்டான். போனவன் உயர நோக்கினன். கார்காலத்து மேகத்தைப் போல (அரக்கர்) இடியே அஞ்சும்படி பெரிய ஆரவாரத்தைச் செய்தனர்.

அம்புக் கூடம் அமைத்தல்

129 தூமவேல் அரக்கர்தம்
நிணமும் சோரியும்
ஓமவெங் கனலிடை
உகும்என் றுன்னியே,
தாமரைக் கண்ணனும்
சரங்க ளேகொடு
கோமுனி இருக்கைஓர்
கூடம் ஆக்கினன். உ௫

128. ஆர்த்தனர் இடித்தனர் - மிகுந்த ஆர்ப்பாட்டம் செய்தனர் (ஒரு பொருட் பன்மொழி) ; அசனி - இடி.

129. தூமம் - புகை ; நிணம் - கொழுப்பு ; சோரி - இரத்தம்; ஓமம் - வேள்வி; தாமரை - தாமரை மலர் (ஆகுபெயர்).

(கண்ணிற்) புகை எழுகின்றவரும், வேலை உடைய வருமான அரக்கர்களுடைய தசையும் இரத்தமும் ஓமம் செய்யப்படுகிற நெருப்பில் விழும் என்று நினைத்து, தாமரை மலர் போன்ற கண்ணையுடைய இராமன் அம்புகளைக் கொண்டு முனிவர் இருக்கும் வேள்விச் சாலையின் மேல் ஒரு பந்தல்போட்டுவிட்டான்.

முனிவர்கள் இராமனிடம் அடைக்கலம் புகுதல்

130 நஞ்சட எழுதலும்
நடுங்கி நாண்மதிச்
செஞ்சடைக் கடவுளை
அடையும் தேவர்போல்,
வெஞ்சின அரக்கரை
வெருவி மாதவர்,
'அஞ்சன வண்ண! நின்
அபயம் யாம்' என்றார். உ௩௰

(பாற்கடலைக் கடையும்போது) நஞ்சானது (யாவரையும்) கொல்லுமாறு எழுந்தவுடனே, பிறை அணிந்துள்ள சிவந்த சடையையுடைய சிவபெருமானை அடைக்கலம் புகுந்த தேவர்களைப் போல, கடுஞ்சினமுள்ள அரக்கர் கூட்டத்தைக் கண்டு நடுங்கிப் போய் முனிவர்கள் 'மை வண்ணனே! நீதான் எங்கட்கு அபயம் அளித்துக் காப்பாற்ற வேண்டும்' என்று வந்து விழுந்தனர்.

---

130. அட - கொல்ல; நாண்மதி - புதிய நிலா; (மூன்றாம் பிறை; மூன்றாம் நாளில்தான் பிறை தோன்றும்; ஆதலால் புதிது). வெருவி - நடுங்கி.

இராமன் அஞ்ச வேண்டாம் எனல்

131 கவித்தனன் கரதலம்
கலங்க லிர்என ;
செவித்தலம் நிறுத்தினன்
சிலையின் தெய்வநாண் ;
புவித்தலம் குருதியிற்
புணரி ஆக்கினன் ;
குவித்தனன் அரக்கர்தம்
சிரத்தின் குன்றமே. உஎ

அஞ்ச வேண்டாம் என்று தன் கையைக் காட்டி அமர்த்தினன். வில்லினுடைய தெய்வத்தன்மை பொருந்திய நாணை இழுத்துக் காதளவு கொண்டு போய் நிறுத்தினன். நில முழுமையும் இரத்த வெள்ளமாக்கினன். அரக்கரின் தலைகளை வெட்டி மலையாகக் குவியச் செய்தனன்.

சுபாகுவைக் கொன்று மாரீசனைக் கடலில் தள்ளியது

132 திருமகள் நாயகன்
தெய்வ வாளிதான்
வெருவரு தாடகை
பயந்த வீரர்கள்
இருவரின் ஒருவனைக்
கடலில் இட்டதவ்
ஒருவனை அந்தகன்
புரத்தில் உய்த்ததே. உஅ

---

131. கவித்தல் - கையினால் காட்டப்படும் அபயக் குறி ; கலங்கலீர் - கலக்கம் அடையாதீர்கள் ; புணரி - கடல்.

132. இருவரின் ஒருவனை - சுபாகு, மாரீசன் என்ற இரு வரில் மாரீசன் என்பவனை ; அந்தகன் புரம் - எமனுடைய ஊர் ; உய்த்தது - செலுத்தியது.

இலக்குமியின் நாயகனான இராமனுடைய அம்பானது, அச்சத்தைத் தரும் தாடகை பெற்ற மக்கள் இருவரில் ஒருவனைக் கடலில் தள்ளியது; மற்றொருவனை எமனுடைய ஊரில் சேர்த்தது.

முனிவர் வேள்வியை முடித்தல்

133 *புனித மாதவர் ஆசியின்
பூமழை பொழிந்தார் ;
அனைய கானத்து மரங்களும்
அலர்மழை சொரிந்த ;
முனியும் அவ்வழி வேள்வியை
முறைமையின் முற்றி,
இனிய சிந்தையன் இராமனுக்கு
இனையன இசைத்தான். உகூ

புனிதமான வாழ்க்கையை உடைய பெரிய தவ முனிவர்கள் ஆசி உரையாகிய இனிய பூமழையைப் பொழிந்தார்கள். அந்தக் காட்டிலுள்ள மரங்களும் பூக்களை மழையாகச் சொரிந்தன. கோசிக முனிவரும் அந்த இடத்திலே வேள்வியை முறையாகச் செய்து முடித்து, மகிழ்ந்த மனத்தையுடையவராக, இராமனுக்கு இப்படிக் (கீழ் வருமாறு) கூறினார்.

---

133. இனிய சிந்தையன் - மகிழ்ந்த மனத்தை உடையவனாய்.

முனிவர் இராமனைப் பாராட்டுதல்

134 பாக்கியம் எனக்கு உளதென
நினைவுறும் பான்மை
போக்கி, நிற்கிது பொருள்என
உணர்கிலென்; புவனம்
ஆக்கி மற்றவை அகிலமும்
மணிவயிற்று அடக்கிக்
காக்கும் நீஒரு வேள்விகாத்
தனைஎனும் கருத்தே. ௩௦

என் பேற்றாலேதான் (நீ வந்து இப்படியெல்லாம் செய்தாய்) என்று நினைப்பதல்லாமல், உனக்கு இது ஒரு பெரிய செயல் என்று நான் கருதவில்லை. இந்த உலகங்களை யெல்லாம் படைத்து, பிறகு அவை முழுமையும் அழகிய வயிற்றில் (தாய் கருவில் வைத்துக் காப்பது போல்) வைத்துக் காக்கின்ற நீ ஒரு வேள்வியைக் காத்தாய் என்னும் எண்ணமா (எனக்கு உண்டாகும்).

இனிச் செய்யவேண்டுவது யாதெனல்

135 என்று கூறிய பின்னர்அவ்
எழில்மலர்க் கானத்து
அன்று தான்உறைந்து அருந்தவ
முனிவரோடு இருந்த
குன்று போற்குணத் தான்எதிர்
கோசலை குரிசில்
'இன்று யான்செயும் பணிஎன்கொல்?
பணி'என இசைத்தான். ௩௧

134. பான்மை போக்கி-தன்மையை விட்டுவிட்டு; பொருள் என - பெரிய செயல் என்று; புவனம் - உலகம்; அகிலமும் - முழுவதும்.

135. குன்று போல் - மலையைப்போல் அசையாத; பணி என் கொல்-செயல் எது? பணி என-கட்டளை இடுவாயாக என்று.

என்று முகமன் சொல்லிவிட்டு அந்த அழகிய மலர் வனத்தில், அன்று தங்கி, அரிய தவம் செய்கிற முனிவர்களோடு இருந்த மலைபோல அசையாத குணமுள்ள கோசிக முனிவரின் முன்பு இராமன் சென்று, 'இன்று யான் செய்ய வேண்டிய செயல் என்ன? பணித்தருள்க' என்று கூறினன்.

மிதிலைக்குப் புறப்படுதல்

136 'அரிய யான்சொலின் ஐயநிற்கு
அரியதொன் றில்லை ;
பெரிய காரியம் உள;அவை
முடிப்பது பின்னர் ;
விரியும் வார்புனல் மருதம்சூழ்
மிதிலையர் கோமான்
புரியும் வேள்வியும் காண்டும்நாம் ;
எழு'கெனப் போனர். கஉ

ஐயனே! செய்தற்கு அருமையுடையன என்று ஏதோ சிலவற்றை யான் சொன்னல் உனக்குச் செய்ய முடியாதது ஒன்றுமில்லை. பெரிய செயல்கள் இருக்கத்தான் செய்கின்றன. அவைகளைப் பின்னர்ச் செய்து முடிக்கலாம். இப்பொழுது நீர்வளம் மிகுந்த வயல்கள் சூழ்ந்திருக்கிற மிதிலை நாட்டு மக்களின் அரசன் (சனகன்) செய்கிற வேள்வியையும் நாம் காணலாம், புறப்படுக என்று சொல்லப் புறப்பட்டுச் சென்றார்கள்.

---

136. எழுக என - புறப்படுங்கள் என்று கோசிகமுனிவர் சொல்ல.

8. அகலிகைப் படலம்

[அகலிகையின் வரலாறு கூறும் படலம்]

மிதிலை நாட்டெல்லையை அடைதல்

137 பள்ளி நீங்கிய பங்கயப்
பழனநல் நாரை
வெள்ள வான்களை களைவுறு
கடைசியர் மிளிர்ந்த
கள்ள வாள்நெடும் கண்நிழல்
கயல்எனக் கருதா
அள்ளி நாணுறும் அகன்பணை
மிதிலைநாடு அடைந்தார். க

தாமரை மலர்ந்திருக்கிற வயல்களில் தூக்கத்திலிருந்து விழித்த நல்ல நாரைகள், பெருகியிருக்கும் நீருக்கு மேலே தோன்றுகின்ற, களையைப் பறிக்கின்ற உழவர் பெண்களின் பிறழ்கின்ற குறுகுறுப்பான நீண்ட கண்களின் நிழல் நீரில் தோன்றுவதைக் கண்டு, கெண்டை மீன் (துள்ளுகின்றது) என்று நினைத்து, (தம் மூக்கினால்) குத்தி (அது பிடிபடாததால்) வெட்கப்படுகின்ற விரிந்த வயல் சூழ்ந்த மிதிலை நாட்டினை அடைந்தனர்.

(வி - ம்) வயலில் களை பறிக்கின்ற பெண்கள், மிக விரைவாக அங்கும் இங்கும் சென்று களை பறிக்கின்றனர். அவர்களுடைய பார்வை தண்ணீரை நோக்குவதால், கண் நிழல் நீரில் தோன்றுகிறது. அப்படியே நிலையாக ஓரிடத்து நில்லாமல் அவர்கள் பார்வை விழுமிடமெல்லாம் கண்நிழல்

137. பங்கயம் - தாமரைப்பூ ; பழனம் - வயல் ; களைவுறு- பறிக்கின்ற ; கடைசியர் - உழவர் பெண்கள் ; கண்நிழல் - கண்ணின் சாயை நீரில் விழுவதை ; கயல் - கெண்டை மீன்.

தோன்றித் தோன்றி மறைகிறது. அங்கே தூக்கக் கலக்கத்தில் இதைக் கண்ட நாரைகள், கெண்டை மீன்கள்தாம் தண்ணீரில் துள்ளுகின்றன என்று நினைத்துக் கண் நிழலைக் குத்தி எடுக்கப் பார்த்து ஏமாறுகின்றன. இந்த வேடிக்கையைப் பார்த்துக்கொண்டே மிதிலை நாட்டின் எல்லையை மூவரும் அடைந்தனர்.

"கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன், குத்தொக்க சீர்த்த விடத்து" என்னும் குறளை உணர்ந்த கம்பர், கொக்கின் குத்துத் தவறாது என்று வள்ளுவர் கூறிய கருத்தை மறுக்க மனம் வராததால், 'பள்ளி நீங்கிய' என்று கூறியுள்ளார். குத்துத் தவறாத நாரையும், மிதிலை நாட்டுப் பெண்களின் உறுப்பு நலங் கண்டு ஏமாந்து தவறிப் போகும் என்பது கவனிக்கத்தக்கது.

"பள்ளி நீங்கிய பங்கயப் பழனநல்நாரை" என்பதை பங்கயப்பள்ளி நீங்கிய பழனநல்நாரை எனவும் மாற்றிப் பொருள் கொள்ளலாம்.

சோலை அரங்கில் மயில்கள் நடனம்

138 வரம்பில் வான்சிறை மதகுகள்
முழவொலி வழங்க,
அரும்பு நாள்மலர் அசோகுகள்
அலர்விளக் கெடுப்ப,
நரம்பின் நான்றதேன் தாரைகொள்
நறுமலர் யாழில்
சுரும்பு பாண்செயத், தோகைநின்று
ஆடுவ சோலை. உ

---

138. வரம்பு இல் - எண்ணிக்கை இல்லாத ; சிறை-அணைக்கட்டு ; மதகு - நீர் விழும் மடை ; அலர் விளக்கு - மலராகிய விளக்கு ; நான்ற-ஒழுகுகின்ற ; தாரை - இடையறாது வடிகின்ற ; மலர்யாழில்-மலராகிய யாழில்; சுரும்பு - வண்டு; பாண்-பண்கள்.

சோலைகளில் எண்ணிக்கை இல்லாத உயர்ந்த அணைக் கட்டுகளின் நீர் வீழ்ச்சிகள் மத்தள ஒலியை உண்டாக்க, மலர்கின்ற புது மலரையுடைய அசோக மரங்கள் அலர் விளக்கு ஏந்தி நிற்க, நரம்புபோல இடையறுத தேன் தாரையை யுடைய மணமிக்க மலராகிய யாழில் பொருந்தி வண்டுகள் பாடுதலைச் செய்ய, மயில்கள் நின்று ஆடுகின்றன.

(வி – ம்) இவை, தனித் தனி நிகழ்சிகளேயானாலும், சேர்த்துப் பார்க்கும் பொழுது ஒரு தொடர்புள்ளவை போன்றிருக்கின்றன. சோலைகளின் ஊடே குளிர்ச்சிக் காகச் சிறுசிறு கால்களாக நீர் கொட்டிக்கொண்டே இருக் கும்படி அமைப்பது இயல்பு. சோலை வகுக்கும் பொழுதே நீரோடையும் அமைக்கப்படும். சீதை பிறந்த மிதிலையை இங்ஙனம் சிறப்பித்த கவி, இராமன் பிறந்த அயோத் தியைத் 'தண்டலை மயில்களாட' (11) என்ற பாடலால் சிறப்பித்துள்ளது ஒப்பு நோக்கி இன்புறத்தக்கது.

புள்ளுறங்காத பொய்கை

139 தூவி அன்னம்தன் இனமென்று
நடைகண்டு தொடரக்
கூவும் மென்குயிற் குதலையர்
குடைந்ததண் புனல்வாய்
ஓவில் குங்குமச் சுவடுற
ஒன்றொடொன்று ஊடிப்
பூஉ றங்கினும் புள்உறங்
காதன பொய்கை. ௩

(அழகிய) சிறகுகளை உடைய அன்னப் பறவைகள் (நீராட வந்த பெண்களின்) நடை அழகைப் பார்த்துப் பின்

139. குதலை-மழலைச்சொல்; குடைந்த - நீராடின; ஓவுஇல்- நீங்குதல் இல்லாத ; ஊடி - பிணங்கி.

தொடர்ந்தன. கூவுகின்ற இனிய குயில்போல மழலைமொழி பேசுகின்ற பெண்கள் நீராடிவிட்டுப் போன தண்ணீரில், நிறைந்து மிதந்த குங்குமச் சேறு அங்குள்ள பறவைகளின் உடல்களில் ஒட்டிக்கொண்டது. அவை ஒன்றோடொன்று கலவரப்பட்டுத் தாமரைப் பூக்கள் குவிந்து அடங்கிய பிறகும், இவை உறங்காமல் சண்டையிடும்படியாகப் பொய்கைகள் விளங்கின.

(வி - ம்) பெண்கள் உடம்பில் பூசியிருந்த குங்குமங் கலந்த குழம்பு நீரில் மிதந்து சில பறவைகளின் உடலில் ஒட்டிக்கொண்டது. மற்றைப் பறவைகளினின்றும் இவை நிறம் வேறுபட்டுத் தோன்றுவதால், இனம் தெரிந்துகொள்ள முடியாமல் ஒன்றையொன்று வேறாக நினைத்துக் கலவரப் பட்டுப்போயின. இவை இப்படியாக, பகலவன் மறைந்து போனதால், தாமரைப் பூக்கள் குவிந்துவிட்டன. என்றாலும் இந்தப் பறவைகளின் பூசல் ஒழிந்தபாடில்லை; உறங்கின பாடும் இல்லை.

எருமைக்குத் தெரியுமா இன்னிசை ?

140 இழைக்கும் நுண் இடை இடைதர
முகடுயர் கொங்கை
மழைக்கண் மங்கையர் அரங்கினில்
வயிரியர் முழவம்

---

140. இழைக்கும் - நூலைக்காட்டிலும்; நுண்இடை - நுண்ணிய இடை; இடைதர - பின்வாங்க; மழைக்கண் - குளிர்ச்சியான கண்; அரங்கினில் - மேடையில்; வயிரியர் - நாட்டியப் பெண்களுக்குப் பக்கவாத்தியம் வாசிப்பவர்; முழவம்- மத்தளம்.

முழக்கும் இன்னிசை வெருவிய
மோட்டிள மேதி
உழக்க, வாளைகள் பாளையிற்
குதிப்பன ஓடை. ௪௰

நூலைக்காட்டிலும் மெல்லிய இடையானது பின் வாங்கும்படி தலைநிமிர்ந்து வளர்ந்திருக்கும் கொங்கைகளையும், குளிர்ந்த கண்களையும் உடைய பெண்கள் ஆடும் நாட்டிய மேடையில், பக்கவாத்தியம் வாசிப்பவர்கள் முழக்குகின்ற இனிய இசையைக் கேட்டு வெருண்ட பெரிய இளம் எருமை ஓடி நீரில் விழுந்து கலக்க, ஓடையில் உள்ள வாளை மீன்கள் பாக்குமரப் பாளைகளில் துள்ளிக் குதித்தன.

(வி - ம்) அரங்கில் இள நங்கையர் கண்ணினாலே பாவ விசாலத்தைக் காட்டிப் பாடத் தொடங்கும் பொழுது, மத்தளம் இனிமையாகத் தட்டப்படுகிறது. இரசிகர்களோ, அப்பெண்ணமுதத்தின் வாயிலிருந்து பண்ணமுதம் எப்படி வருகிறதென்று எதிர்பார்க்கிறார்கள். அவ்வாறு எதிர்பார்த்திருக்கும் கூட்டத்தின் பக்கத்தில் கட்டியிருந்த எருமை ஒன்று கட்டுத்தறியை முறித்து வெருண்டு குதிபோட்டு ஓடிற்று. குளத்தில் இறங்கி ஓடிஆடிக் கலக்க அந்தக் குளத்தில் கிடந்த வாளைமீன் எல்லாம் மிரண்டு பக்கத்தில் நிற்கிற பாக்குமரத்தின் பாளைகளில் துள்ளிக்குதித்தன. இசையில் சுவையுணர்ச்சி இல்லாத ஓருயிர் நல்ல இசையரங்கிற்குப் பக்கத்தில் இருந்தால் எப்படியிருக்கும் என்பதை இப்பாடலால் அறியலாம்.

---

140. மோட்டு இளமேதி - பெரிய இளமையான எருமை; உழக்க - கலக்க; வாளைகள் - வாளை மீன்கள்.

மகளிர் நீராடும் குளங்கள்

141 *படைநெடுங் கண்வாள் உறைபுகப்*
படர்புனல் மூழ்கிக்
கடைய முன்கடற் செழுந்திரு
எழும்படி காட்டி,
மிடையும் வெள்வளை புள்ளொடும்
ஒலிப்ப மெல்லியலார்
குடைய, வண்டினம் கடிமலர்
குடைவன குளங்கள். ரு

பெண்கள் தமது நீண்ட கண்களாகிய வாளாயுதம் உறையினுள் புகும்படி பரந்த நீரினுள் முழுகி (தாம் மேலே எழும்போது) முன்னாளில் பாற்கடலைக் கடைந்த பொழுது அழகிய இலச்சுமி மேலே எழுந்த தன்மையைத் தோற்று வித்து, நெருக்கமாக அணிந்திருக்கின்ற சங்குவளையல்கள் பறவைகளின் ஒலியொடு சேர்ந்து ஒலி செய்யும்படி நீராட, வண்டுக்கூட்டமானது, மணமுள்ள மலர்களில் புகுந்தபடியே தேனை உண்டு கொண்டிருக்கும் படியான குளங்கள் பல அங்கே காணப்பட்டன.

(வி – ம்) குளத்தில் பெண்கள் முழுகும் பொழுது, கண்கள் மூடிக்கொள்வது ஒரு தனி அழகு. மெதுவாக எழும் பொழுது பாற்கடலில் திருமகள் எழுவது போலிருக் கிறது. விழுந்து விழுந்து குளிக்கும்பொழுது சங்குவளையல் கள் ஒலிக்கின்றன. அந்த ஒலி சுற்றிலும் உள்ள பறவை

---

141. படை வாள் - போர்வாளைப் போன்ற ; உறைபுக - வாள், உறையிலே புகுவதைப் போலக் கண், இமையினுள்ளே மறைந்து போக ; கடி - மணம்உள்ள ; குடைவன - குடைந்து தேனை உண்ணுவன.

களின் ஒலியோடு இரண்டறக்கலந்துவிடுகிறது. இவ்வளவு நடந்தாலும் பூக்களில் இருக்கும் வண்டுகளோ, தம் காரியத்திலேயே கண்ணாக இருந்து குடைந்து குடைந்து தேனைப் பருகி இன்பத்தில் மூழ்குகின்றன.

அகலிகை கல்லாய்க் கிடப்பதைக் காண்டல்

142 இனைய நாட்டினை இனிதுசென்று
 இஞ்சிசூழ் மிதிலை
புனையும் நீள்கொடிப் புரிசையின்
 புறத்துவந்து இறுத்தார்;
மனையின் மாட்சியை அழித்திழி
 மாதவப் பன்னி
கனையும் மேட்டுயர் கருங்கல்ஓர்
 வெள்ளிடைக் கண்டார். ௬௭

இப்படிப்பட்ட (மிதிலை) நாட்டினை இனிதாக அடைந்து, அரண் சூழ்ந்து கொடிகள் ஆடிக்கொண்டிருக்கிற மிதிலை நகரின் கோட்டைச் சுவரின் பக்கத்தை அடைந்தார்கள். இல்லற மாண்பு தவறித் தாழ்வடைந்தவளான ஒரு முனிவரின் மனைவியான அகலிகை கெட்டியான மேட்டின்மேல் கருங்கல்லாகக் கிடப்பதை ஒரு பொட்டலில் கண்டார்கள்.

---

142. புரிசை - கோட்டைச்சுவர்; இறுத்தார் - சேர்ந்தார்; மனையின் மாட்சியை - இல்லறத்தின் பெருமையை; மாதவப் பன்னி- முனிவரின் மனைவி: அகலிகை; கனையும் - கெட்டியான; வெள்ளிடை - பொட்டல்.

அகலிகை தன்னுரு அடைதல்

143 கண்ட கல்மிசைக் காகுத்தன்
கழற்றுகள் கதுவ,
உண்ட பேதைமை மயக்கற
வேறுபட்டு உருவம்
கொண்டு, மெய்யுணர் பவன்கழல்
கூடியது ஒப்ப,
பண்டை வண்ணமாய் நின்றனள்;
மாமுனி பணிப்பான். எ

கண்ட அந்தக் கல் உருவத்தின்மீது இராமனுடைய காலின் தூசி (பட்டது.) பட்டவுடனே, அவளை முன்பற்றிய அறியாமையான மயக்கம் (நீங்கியது.) நீங்க, (கல் உருவத்தினின்றும்) வேறுபட்டுத் தன் உண்மை உருவத்தைப் பெற்று, மெய்ப்பொருளை உணர முற்பட்ட தொண்டன், இறைவன் திருவடியை அடைந்தாற்போல, முந்திய அழகு வடிவமாய் (அகலிகை) நின்றாள். கோசிக முனிவர் கூறுகின்றார்.

இவள் அகலிகை என்று அறிவித்தல்

144 *மாயிரு விசும்பிற் கங்கை
மண்மிசை இழித்தோன் மைந்த!
மேயின உவகை யோடு
மின்என ஒதுங்கி நின்றாள்

---

143. கழல் துகள் - அடிப்பொடி; பாததூளி; கதுவ - பொருந்திய அளவிலே; உண்ட பேதைமை மயக்கு அற - (இந்திரனோடு) அனுபவித்த அறியாமை மயக்கம் தெளிய; வேறு பட்டு - மாற்ற மடைந்து; உருவங்கொண்டு - உண்மை உருவம் பெற்று; கழல் - திருவடிக்கு; மாமுனி - கோசிக முனிவர்; கழல் கூடியது ஒப்ப-திருவடிக்கு ஆளான நாளை ஒப்ப; பணிப்பான் - சொல்வான்.

144. இழித்தோன் - இறக்கிக் கொண்டுவந்தவன்;

தீவினை நயந்து செய்த
தேவர்கோன் தனக்குச் செங்கண்
ஆயிரம் அளித்தோன் பன்னி
அகலிகை ஆகும் என்றான். அ

மிகப் பெரிய வானத்திலிருந்து கங்கையை பூமிக்குக் கொண்டுவந்த பகீரதன் பரம்பரையில் தோன்றிய குமரனே! மிகுந்த மகிழ்ச்சியோடு மின்னலைப் போல ஒதுங்கி நிற்கின்ற இந்தப் பெண், தீவினையை விருப்பத்துடன் செய்த தேவேந்திரனுக்கு ஆயிரம் கண்களைக் கொடுத்த கோதம முனிவரின் மனைவியாகிய அகலிகை ஆவாள் என்று கோசிக முனிவர் கூறினார்.

(வி – ம்) இந்திரன் மிகவும் விருப்பப்பட்டுத் தீவினையைச் செய்தான். அதற்குப் பரிசாக ஆயிரம் கண்களைக் கோதம முனிவர் அருளிச் செய்தார் என்று முனிவர் கூறி நகைச்சுவையை அனுபவிக்கிறார்.

அகலிகையின் வரலாற்றை இராமன் வினவுதல்

145 பொன்னையேய் சடையான் கூறக்
கேட்டலும், பூமிகேள்வன்
என்னையே என்னை யேஇவ்
உலகியல் இருந்த வண்ணம்!

---

144. பன்னி - மனைவி; நின்றாள் - நிற்கும் இவள்.

145. பொன்னை எய் - தங்கத்தைப் போன்ற ; பூமி - நிலவுலகத்துக்கு ;

முன்னை யூழ் வினையி னாலோ
நடுவொன் று முடிந்த துண்டோ
அன்னையே அனையாட் கிவ்வா று
அடுத்தவா று அருளு கென்றான். ௬

பொன்னிறமான சடையை உடைய கோசிக முனிவர் கூறியதைக் கேட்டவுடனே, இராமன், (வியப்படைந்து) என்ன என்ன இந்த உலகத்தின் போக்கு! முந்திய ஊழ் வினையினாலா? அல்லது இடையில் ஏதாவது நேர்ந்ததா? தாய்போன்ற இவளுக்கு இப்படி வந்து விடிந்த காரணத்தைத் தெரிவித்தருள்வீராக என்றான்.

(வி – ம்) இதைக் கேட்டதும் இராமனுக்கு ஒரே வியப்பு! இப்படி உலகத்துக்கே தாய்போல இருக்கும் இவள் ஏன் கல் ஆனாள்? இப்பொழுது ஏன் பெண் ஆனாள்? இந்த உலகின் போக்குப் பெரிய வேடிக்கையாக அல்லவா இருக்கிறது. ஊழ்வினை என்கிறார்களே அதனாலா? இல்லை, அதற்கிடையில் வேறு ஏதாவது புகுந்து இப்படிச் செய்து விட்டதா? என்று இராமன் கேட்கின்றான். உலகியல் அனுபவத்தின் முதற்படியில் இராமன் நிற்கின்றான் என்பதை இங்கே காணமுடிகிறது. தாய் உணர்ச்சியைத் தவிர வேறு எந்தவித உணர்ச்சியும் கொண்டு எப்பெண்ணையும் பாராத பசுங்குழந்தையாக இருக்கின்றான் இராமன். இராமனைப் பற்றி நன்குணர்ந்த கோசிக முனிவர் இனிக் காதல் உணர்ச்சி அரும்பும்படி தன் கூற்றை அமைத்துச் செல்வதைக் காணலாம். கவிஞர் பெருமானும் அந்த வகையில் தம் கவிகளைத் திருப்பி நடத்துதலையுங் காணலாம். இவை சீதையைக்

145. கேள்வன் - தலைவணங்கிய இராமன்; அருளுகென்றான்=அருளுக+என்றான்.

கண்டதும் காதல் தோன்றுவதற்குப் பகைப்புலம் அமைப்பதுபோல் விளங்குகின்றன.

அகலிகை வரலாறு கூறல்

146 அவ்வுரை இராமன் கூற
அறிஞனும் அவனை நோக்கிச்
செவ்வியோய் கேட்டி! மேனாள்
செறிசுடர்க் குலிசத்து அண்ணல்
அவ்வியம் அவித்த சிந்தை
முனிவனை அற்றம் நோக்கி
நவ்விபோல் விழியி னாள்தன்
வனமுலை நணுகல் உற்றான். ௬0

அங்ஙனம் இராமன் கூறியவுடன், முனிவர் இராமனை நோக்கி நன்மையை உடையவனே! முன்னொரு நாள் ஒளி நிறைந்த வச்சிராயுதத்தை உடைய இந்திரன், பொறாமை முதலிய கெட்ட குணங்களை நீக்கிய மனத்தையுடைய கோதமர் இல்லாத சமயம் பார்த்து, மான்விழிபோன்ற (சூதறியாத) கண்களையுடைய இந்தப் பெண்ணின் இன்பத்தை அடைய முற்பட்டான்.

இந்திரன் முனியுருக்கொண்டு புகுதல்

147 தையலாள் நயன வேலும்
மன்மதன் சரமும் பாய
உய்யலாம் உறுதி நாடி
உழல்பவன், ஒருநாள் உற்ற

---

146. செறிசுடர் - நிறைந்த ஒளி; குலிசத்து அண்ணல் - வச்சிராயுதத்தையுடைய தேவேந்திரன்; அவ்வியம் - மனக்குற்றங்களை; அவித்த - கெடுத்த; முனிவனை - கோதம முனிவரை; அற்றம்-சமயம்; நவ்வி-பெண்மான்; வனமுலை-அழகிய கொங்கை.

147. உய்யலாம் உறுதி - ஆசையை அனுபவித்துத் தப்பித்துக் கொள்ளும் வழியை;

மையலால் அறிவு நீங்கி,
மாமுனிக்கு அற்றம் செய்து,
பொய்யிலா உள்ளத் தான்தன்
உருவமே கொண்டு புக்கான். கக

இந்தப் பெண்ணினுடைய கூரிய பார்வையும், மன்மத னுடைய அம்பும் பாயவே, இவ்விரண்டையும் கடப்பதற்கு வழி தேடி அவதிப்பட்ட (இந்திரன்) ஒரு நாள் ஏற்பட்ட அதிக ஆசையினுலே அறிவு கெட்டு முனிவரை (குடிசையை விட்டு) நீங்கும்படி செய்து, குற்றமற்ற அந்த முனிவரது வேடத்துடன் போய்ச்சேர்ந்தான்.

(வி – ம்) இந்திரன் சமயம் பார்த்துக் கொண்டே திரிந்தான். ஒரு நாள் முனிவரை ஏமாறச் செய்து வெளி யேற்றிவிட்டான். பொய்யில்லாத உள்ளத்தை உடைய முனிவரைப் போலப் பொய்வேடம் புனைந்துகொண்டுகுடிலி னுள்ளே புகுந்தான். நள்ளிரவில் சேவலின் உருக்கொண்டு கூவினன் என்றும், விடிந்தது என்று எண்ணி முனிவர் எழுந்து ஆற்றுக்கு நீராடச் சென்ருர் என்றும் கூறப் படும்.

இன்பம் நுகர்தல்

148 புக்கவ ளோடும் காமப்
புதுமண மதுவின் தேறல்
ஒக்கஉண்டு இருந்த லோடும்
உணர்ந்தனள்; உணர்ந்த பின்னும்

---

147. மையல் – பெண் மோகத்தினுல் ஏற்படும் ஆசை; அற்றம் – பிரிவு.

148. ஒக்க உண்டல் - ஏககாலத்தில் இருவரும் இன்பம் துய்த்தல்; உணர்ந்தனள் – தன் கணவன் அல்ல என்பதை உணர்ந் தாள்;

நக்கநன்று என்ன ஓராள்
தாழ்ந்தனள் இருப்பத், தாழா
முக்கணன் அனைய ஆற்றல்
முனிவனும் முடுகி வந்தான். கஅ

குடிலினுட் புகுந்து காம இன்பமாகிய புதிய மணம் பொருந்திய கள்ளின் தெளிவை, ஒன்றுபட அனுபவித்துக் கொண்டிருக்கும்போது, இவளுக்கு முனிவர் அல்ல என்ற உணர்ச்சி ஏற்பட்டது. என்றாலும் இது கூடாதது என்று விலக்கவில்லை. அச்செயலுக்கு ஆட்பட்டிருக்கும்பொழுது, நெருப்புமிழும் நெற்றிக் கண்ணையுடைய சிவபெருமானைப் போன்ற ஆற்றலையுடைய முனிவர் விரைவாக வந்து சேர்ந்தார்.

(வி — ம்) அனுபவத்திலிருந்து தன் கணவனல்ல இவன் என்று உணர்ந்தாள். ஆனால் உருவம் கணவனேயாக இருப்பதால், மனத்தெளிவு ஏற்படவில்லை. அதனால் விலகும் துணிவும் உண்டாகவில்லை. சமமான போககால அனுபவ மயக்கத்தில் பிரிவு இயலாததொன்றென்பதும் குறிப்பிடத் தக்கது.

கோதமன் சபித்தல்

149 தீவிழி சிந்த நோக்கிச்
செய்தகை உணர்ந்து செய்ய
தூயவன், அவனை நின்கைச்
சுடுசரம் அனைய சொல்லால்

148. முடுகி - விரைந்து.

149. அவனை — இந்திரனை ; நின் கைச் சுடுசரம் அனைய சொல்லால் - (இராமா !) உன்னுடைய கையிலிருக்கின்ற கொதிக்கின்ற அம்புபோன்ற சாபச் சொல்லாலே.

ஆயிரம் மாதர்க் குள்ள
அறிகுறி உனக்குண் டாகென்று
ஏயினன்; அவையெ லாம்வந்து
இயைந்தன இமைப்பின் முன்னம். கங

கண்ணில் தீப்பொறி பறக்கும்படி பார்த்து, செய்த காரியத்தையும் உணர்ந்து, செம்மையும், தூய்மையும் உடைய கோதமர், இந்திரனை நோக்கி, உன்னுடைய கொதிக்கின்ற அம்பு (இராம பாணம்) போன்ற சொல்லினாலே ஆயிரம் பெண்களுக்குள்ள அடையாளம் உனக்கு உண்டாகட்டும் என்று (சாபத்தை) ஏவினார். கண் சிமிட்டும் நேரத்திற்குள்ளேயே அவை எல்லாம் வந்து இந்திரனின் உடம்பில் பொருந்திவிட்டன.

(வி - ம்) எந்த ஒன்றை விரும்பி அக்கிரமம் செய்தானோ அது ஆயிரமாக அவன் உடம்பை விட்டு நீங்காதிருக்கட்டும் என்று முனிவர் சாபமிட்டார். செய்ய தூயவன் என்றது, உடற்செம்மையும் மனத்தூய்மையும் உடைமை பற்றி. 'நின்கைச் சுடுசரம்' என்றது இராமனை நோக்கிக் கூறியது.

அகலிகை கல்லாதல்

150 எல்லையில் நாணம் எய்தி
யாவர்க்கும் நகைவந் தெய்தப்
புல்லிய பழியி னோடு
புரந்தரன் போய பின்றை,
மெல்லிய லாளை நோக்கி,
விலைமகள் அனைய நீயும்
கல்லியல் ஆதி என்றான்;
கருங்கலாய் மருங்கு வீழ்வாள்; கச

150. கல்இயல் ஆதி-கல்லாக ஆவாயாக; மருங்கு-பக்கத்தில்.

அளவுகாண முடியாத வெட்கத்தை அடைந்து, பார்த்தவர் யாவருக்கும் சிரிப்பு வரும்படி தான் அடைந்த பழியினோடு இந்திரன் போனபிறகு, மெல்லியதன்மையுடைய இப் பெண்ணை நோக்கி விலைமகளின் நிலையை அடைந்த நீயும் கல்லின் உருவத்தை அடைவாயாக என்று கூறினர். உடனே கருங்கல்லாகிப் பக்கத்தில் வீழ்கிற அவள்,

சாப நீக்கங் கூறல்

151 பிழைத்தது பொறுத்தல் என்றும்
பெரியவர் கடனே என்பர்,
அழற்பெருங் கடவுள் அன்னாய்!
முடிவிதற்கு அருளு கென்னத்
'தழைத்துவண்டு இமிரும் தண்தார்த்
தயரத இராமன் என்பான்
கழற்றுகள் கதுவ இந்தக்
கல்உருத் தவிர்தி என்றான். கடு

(அறியாமற் செய்த) பிழையைப் பொறுப்பது என்றும் பெரியோர்களுக்கு உரியது என்று கூறுவார்கள். நெருப்பான மேனியை உடைய பெரிய தெய்வத்தைப் போன்றவரே! இதற்கு ஒரு முடிவையும் அருளிச் செய்ய வேண்டும் என்று வேண்டினாள். "செழித்து வண்டுகள் ஒலித்தற்கு இடமான குளிர்ந்த பூமாலையை அணிந்துள்ள தயரதன் புதல்வனான இராமனின் காலடித் தூசி வந்து பொருந்தும் போது இந்தக் கல் உரு மாறப்பெறுவாய்" என்று முனிவர் கூறினர்.

151. பிழைத்தது - செய்த பிழையை ; கடவுள் அன்னாய் - கடவுளைப் போன்றவனே ; தழைத்து - செழித்து ; இமிரும் - ஒலி செய்வதற்கிடமாக உள்ள ; தண்தார் - குளிர்ந்த பூமாலை ; கதுவ - பொருந்த.

(வி - ம்) பின்னளில் இராமன் வருவானென்பதை முன் அறியக் கூடிய முனிவருக்கு, இந்திரன் வந்து பிழை செய்யக் கூடுமென்பதை ஏன் முன்னதாக அறிய முடிய வில்லை என்றால், சாதாரணமாக முனிவர்கள் மனிதப்பண் பிலேதான் இருப்பரென்பதும், முனைந்து அறிய முற்படும் போதுதான் உண்மைகளை உணர்வர் என்பதும் பெறப்படு கின்றன.

இந்திரனுக்குச் சாப மாற்றம்

152 அந்தஇந் திரனைக் கண்ட
அமரர்கள் பிரமன் முன்னா
வந்து,கோ தமனை வேண்ட,
மற்றுஅவை தவிர்த்து மாறாச்
சிந்தையின் முனிவு தீர்ந்து
சிறந்தஆ யிரம்கண் ஆக்க,
தந்தம துலகம் புக்கார்;
தையலும் கிடந்தாள் கல்லாய். கரு

அந்த இந்திரனைப் பார்த்த தேவர்கள், பிரமனைத் தலை வனைக் கூட்டிக்கொண்டு வந்து, கோதம முனிவரை வேண்டிக்கொள்ள, திரிபில்லாத தன் மனத்தில் எழுந்த கோபம் தீர்ந்தவனாய், முன் ஏற்பட்டதை (ஆயிரம் பெண் குறி ஆக என்றிட்ட சாபத்தை) விலக்கி, அவை ஆயிரம் கண்கள் ஆகும்படி செய்ய (அவர்கள்) தங்களுடைய உல கங்களுக்குச் சென்றார்கள். இப்பெண் கல்லாகக் கிடந் தாள்.

---

152. பிரமன் முன்னா - பிரமனைத் தலைவனாகக் கொண்டு; மற்று அவை தவிர்த்து - சாபத்தால் ஏற்பட்டவைகளை நீங்கச் செய்து; மாறாச் சிந்தை - திரிபில்லாத மனம்.

கைவண்ணமும் கால்வண்ணமும்

153 இவ்வண்ணம் நிகழ்ந்த வண்ணம்;
இனி இந்த உலகுக் கெல்லாம்
உய்வண்ணம் அன்றி, மற்றுஓர்
துயர்வண்ணம் உறுவது உண்டோ?
மைவண்ணத்து அரக்கி போரில்
மழைவண்ணத்து அண்ணலேஉன்
கைவண்ணம் அங்குக் கண்டேன்;
கால்வண்ணம் இங்குக் கண்டேன். கள

இதுதான் (இப்பெண்ணைப் பற்றி) நிகழ்ந்த செய்தி யாகும். இனி இந்த உலகுக்கு, எல்லாம் உய்யும் வண்ணந் தான் நடக்குமே யன்றி, வேறு ஏதாவது துயரம் வந்து பொருந்துமா? கருநிறத்து அரக்கியுடன் போர் நடக்கும் போது, நீருண்ட மேகத்தை யொத்த பெருமானே! உன் கையின் பெருமையை அங்கே கண்டேன்; காலின் மகிமையை இங்கே கண்டேன்.

(வி - ம்) தீமை செய்பவரையும் இறுமாப்புடைய வரை யும் அழிப்பதும், நல்லவர்களையும் தம் குற்றத்தை உணர்ந்து ஆற்றுமையால் வருந்துபவர்களையும் காப்பதும் தெய்வ குண மாதலால் இரண்டையும் கூறி முனிவர் பாராட்டினுர். அங்கே ஒரு பெண் கொல்லப்பட்டாள். இங்கே ஒரு பெண் உயிர்ப் பிக்கப்பட்டாள். அகலிகைக்கு நேர்ந்த பிழை உலகியலில் பிறர் கொடுமையால் நிகழக் கூடியது. இதற்குத் தண்ட னையே போதியதாகும். ஆளைத் தள்ளுபடி செய்யவேண் டியதில்லை என்பது கதையின் கருத்து. இங்கே கைவண்ணம் வில்தொழில் வன்மையும், தீயவரை ஒழிக்கும் அறமுமாம். கால்வண்ணம் குற்றத்தை நீக்கி உண்மையைத் தோற்று விப்பதும் அறிவைக் கொடுத்து ஆட்கொள்ளுதலுமாம்.

---

153. வண்ணம் - வகை, நிறம், சிறப்பு.

அகலிகைக்கு விடை கொடுத்தல்

154 தீதிலா உதவி செய்த
சேவடிக் கரிய செம்மல்,
கோதிலாக் குணத்தான் சொன்ன
பொருளெலாம் மனத்திற் கொண்டு,
மாதவன் அருள்உண் டாக
வழிபடு! படர்உ ருதே!
போதுநீ அன்னை! என்னப்
பொன்னடி வணங்கிப் போனாள். கஅ

குற்றமற்ற, உதவிசெய்த திருவடிகளையுடைய கார் வண்ணனாகிய இராமன், குற்றமற்ற குணத்தினையுடைய கோசிக முனிவர் கூறிய செய்திகளை எல்லாம் மனத்தில் வாங்கிக்கொண்டு, (அகலிகையை நோக்கி) மாதவராகிய கோதமருடைய அன்பு உண்டாகும்படி அவருக்கு வழிபாடு செய்வாயாக! கவலைப்படாதே! போவாய் தாயே! என்று கூற, (இராமனுடைய) பொன் போன்ற திருவடிகளை வணங்கிவிட்டு அகலிகை சென்றாள்.

(வி — ம்) தீதிலா உதவி செய்பவன் இராமன். குற்றமில்லாத குணத்தை உடையவர் கோசிக முனிவர். இருவரும் ஒன்றுபட்டு விளங்குகின்றனர். இராமனின் இளம்பருவ வாழ்க்கை இப்படிப் பண்பட்டு வளருகிறது.

---

154. கரிய செம்மல் - இராமன்; கோதிலாக் குணத்தான் - குற்றமற்ற குணங்களையுடைய கோசிக முனிவர்; படர் உறுதே - வருத்தப்படாதே.

9. மிதிலைக் காட்சிப் படலம்

[சனகனுடைய மிதிலை நகரத்தில் இராமன் முதலியோர் கண்ட காட்சிகளைக் கூறும் படலம்.]

கொடிகளின் வரவேற்பு

155 மையறு மலரின் நீங்கி
யான்செய்மா தவத்தின் வந்து
செய்யவள் இருந்தாள் என்று
செழுமணிக் கொடிகள் என்னும்
கைகளை நீட்டி அந்தக்
கடிநகர், கமலச் செங்கண்
ஐயனை ஒல்லை வாஎன்று
அழைப்பது போன்றதுஅம்மா. க

மிதிலை நகரத்தின் கொடிகள் ஆடிக்கொண்டிருப்பதானது, குற்ற மற்ற தாமரைப் பூவிலிருந்து புறப்பட்டு, யான் இயற்றிய பெரிய தவத்தின் பயனாக என்னிடத்திலே வந்து திருமகள் வீற்றிருக்கின்றாள் என்ற செய்தியைக் கூறி, அழகிய கொடிகளாகிய தன் கைகளை உயரத் தூக்கி விரைந்து வருக என்று மிதிலை நகரம் செந்தாமரைக் கண்ணனாகிய இராமனை அழைத்தாற் போன்றிருந்தது.

(வி – ம்) மதில்மீது கொடிகள் ஆடிக்கொண்டிருப்பது, இராமனை வா வா என்று அழைப்பது போல இருந்தது.

---

155. மைஅறு - குற்றம் இல்லாத ; மலரின் - செந்தாமரை மலரிலிருந்து ; செய்யவள் - திருமகள் ; கடிநகர் - காவல் உள்ள மிதிலை நகரம் ; கமலச் செங்கண் - செங்கமலக் கண் ; ஒல்லை - விரைவாக.

கோடிகளின் ஆடல்

156 நிரம்பிய மாடத்து உம்பர்
நிரைமணிக் கொடிகள் எல்லாம்
தரம்பிறிது இன்மை உன்னித்
தருமமே தூது செல்ல
வரம்பில்பேர் அழகி னாளை
மணஞ்செய்வான் வருகின் றானென்று
அரம்பையர் விசும்பின் ஆடும்
ஆடலின் ஆடக் கண்டார். உ

நிறைந்திருக்கின்ற மாடமாளிகைகளின் மேலே, வரிசை வரிசையாக உள்ள அழகிய கொடிகள் எல்லாம், "தகுதி யுள்ளது வேறு எதுவும் இல்லை என்று எண்ணித் தருமதேவதையே தூது சென்று சொல்ல, அளவுக்கு அப்பாற்பட்ட பேரழகியான சீதையை, மணப்பதற்கு உரிய இராமன் வருகின்றான்" என்று தேவமாதர் வானுலகில் ஆடுவதைப்போல ஆடுவதை (மூவரும்) கண்டனர்.

(வி–ம்) காதலர்களுக்கு இடையில் தூது நடக்கவேண்டும். இங்கே அது நடக்கவில்லை. பெற்றோர் பார்த்துப் பேசி முடித்து நடத்தும் மணமாகவும் இது இருக்கவில்லை. ஆனால் மிதிலை நகரத்து மாளிகைகளின் மேல் இருக்கின்ற கொடிகள்தாம் முதலில் இராமனைப் பார்க்கின்றன. அவன் சீதையை மணக்கத்தான் வருகின்றான் என்பதை எப்படியோ அவை உணர்ந்துவிட்டன. அவைகளின் எண்ணம் பின் வருமாறு நிகழ்கிறது: மணமக்கள் இருவரும் ஒருவருக்கு ஒருவர் தூதுவிட்டுப் பேச இயலாமற் போய்விட்டது.

---

156. உம்பர் - மேலிடத்தில்; நிரைமணிக் கொடிகள் - வரிசை வரிசையாகக் கட்டப்பட்டிருக்கின்ற அழகிய கொடிகள்.

வண்டு, நாரை, மேகம் இப்படிப்பட்ட எதுவும் தூதுக்குத் தரமுள்ளதாக இல்லாதபடியால், இயற்கையாக உலகத்தை நடத்துவிக்கும் தருமமே தூதாகிவிட்டது; இனி, சீதைக்குத் திருமணம் நடக்கும் என்ற மகிழ்ச்சியால் கொடிகள் நாட்டியமாடுவதைப் போன்றிருக்கிறது. பின் நகர் நீங்கு படலத்தில் " குழைக்கின்ற சவரி இன்றிக் கொற்ற வெண் குடையும் இன்றி, இழைக்கின்ற விதிமுன் செல்லத் தருமம் பின் இரங்கி ஏக " என வருதல் காண்க.

மூவரும் மிதிலை நகருட்புகுதல்

157 ஆதரித்து அமுது கோல்தோய்த்து
    அவயவம் அமைக்கும் தன்மை
யாதெனத் திகைக்கும் அல்லால்
    மதனற்கும் எழுத ஒண்ணுச்
சீதையைத் தருத லாலே
    திருமகள் இருந்த செய்ய
போதெனப் பொலிந்து தோன்றும்
    பொன்மதில் மிதிலை புக்கார். ௯

மிக்க விருப்பத்துடன் (சீதையின் வடிவத்தைப் படத்தில் எழுத முற்பட்டு), அமிழ்தத்தில் எழுதுகோலைத் தோய்த்துக்கொண்டு, உடம்பின் உறுப்புக்களை எப்படி அமைப்பது என்று திகைப்பதல்லாமல், வல்லவனுக்கும் எழுத இயலாத வடிவினையுடைய சீதையை உண்டாக்கித் தருதலினாலே, திருமகள் எழுந்தருளி இருக்கின்ற செந்தாமரை மலர் என்று சொல்லும்படி விளங்கித் தோன்றுகின்ற உலோகங்களால் ஆகிய மதிலையுடைய மிதிலை மாநகரில் புகுந்தார்கள்.

---

157. ஆதரித்து - விரும்பி ; மதனற்கும் - வலிமையுடைய வற்கும் ; மதன் - வலிமை ; பொன் - உலோகம்.

(வி - ம்) ஓவியம் எழுதுவதில் முற்ற முடிந்த வல்ல வனுக்கும் படத்தில் சீதையின் வடிவை எழுத முடியவில்லை. எழுத ஆசைப்படுகின்றான். சாதாரணமான மையைத் தோய்த்து எழுதினால் சீதையின் இனிமை எப்படி உண்டா கும் என்ற ஐயத்தால், அமிழ்தத்திலேயே கோல் தோய்க்கப் படுகிறது. என்றாலும், சீதையின் உருவத்தையும் பார்த்துக் கொண்டே வெளிக்கோட்டைக்கூட வரைய முடியவில்லை. எழுத ஒண்ணா ஓவியமான சீதையைப் பெற்றதனாலே அந்த மிதிலை நகரம் பூரித்துப்போயிருக்கிறது. 'மதனன்' என்ற சொல்லுக்கு வலியவன் அதாவது தொழிலில் வல்லவன் என்று பொருள் கொள்ளவேண்டும். 'இன்னலம் தெரிய, வல்லான் எழுதியதென்ன நின்றாள்' 'வல்லோன் தைஇய வரி வனப்புற்ற வல்லிப்பாவை' (புறம் - 33), 'வல்லவன் தைஇய பாவைகொல்' (கலி, குறிஞ்சி 20). மதனன் - மன்மதன் எனக்கொள்ளுதல் இயலாததொன்று. மன்மதன் அழகில் தலை சிறந்தவனே யன்றி, ஓவியம் தீட்டுவதில் தலை சிறந்த திறமையுடையான் என்று கொள்ளுதற்கு இட மில்லை.

தெருவழியே செல்லுதல்

158 தண்டுதல் இன்றி ஒன்றித்
 தலைத்தலை சிறந்த காதல்
உண்டபின் கலவிப் போரில்
 ஒசிந்தமென் மகளி ரேபோல்

158. தண்டுதல் இன்றி - எக்காரணத்தாலும் தடைப்படுதல் இல்லாமல் ; தலைத்தலை சிறந்த காதல் - படிப்படியாகத் தங்கள் தங்களுக்குள்ளே வளர்ந்து எழுந்த காதல் ; உண்டபின் - தங்களை அக்காதல் விழுங்கிய பிறகு ; கலவிப் போரில் - சேர்க்கையாகிய போராட்டத்தில் ; ஒசிந்த - துவண்டுகிடந்த;

பண்தரு கிளவி யார்தம்
புலவியிற் பரிந்த கோதை
வண்டொடு கிடந்து தேன்சோர்
மணிநெடுந் தெருவிற் சென்றார். ௯

தடையில்லாமல் பொருந்தித் தனக்குத் தானாக வளர்ந்த காதலில் மூழ்கி, புணர்ச்சியாகிய போராட்டத்தில் துவண்டு போன மெல்லிய பெண்களைப் போல, சொல்லெல்லாம் இசையாக விளங்குகின்ற பெண்களின் சிறிய ஊடலால் பறித்தெறியப்பட்ட பூமாலைகள் தேனைச் சொரிந்துகொண்டு வண்டுகளுடனே கிடக்கின்ற அழகிய தெருக்களின் வழியாகச் சென்றார்கள்.

(வி – ம்) கலவி நிகழ்ச்சியில் யார் வெற்றி பெறுபவர் என்று போட்டியிடுவதுபோல் ஊக்கங் கொள்வதால் அந் நிகழ்ச்சி, போர் என்று கூறப்பட்டது. இப் போரில் தலைமகள் தோற்பது சிறப்பு. தலைமகன் தோற்பது பேடிமையின் பாற்படும். எனவே, 'ஓசிந்த மென் மகளிரே போல்' என்று சுட்டப்பட்டது. இருவர் கூட்டத்திற்கு இடம், நேரம், உரிமை, சோர்வு முதலிய எவ்விதத் தடையும் இல்லாதிருந்தால்தான், முற்றிய இன்பம் பெற முடியும். ஆதலால், 'தண்டுதலின்றி' எனப்பட்டது. கண்டதும் கூடுவதென்றால், ஒத்த இன்பம் கிட்டுவதில்லை. ஆற்று வெள்ளத்தை தடுத்துப் பாய்ச்சுவது போல்வதான இன்றியமையாப் புலவி நிகழ்ச்சியைத் தெருவிற் கிடக்கும் மாலை காட்டுகிறது. "ஊடுதல் காமத்திற் கின்பம்" (குறள் – 1330).

---

158. பண்தரு கிளவியார் - இசைபொருந்திய சொல்லையுடைய இளம் பெண்கள்; புலவியில் பரிந்த கோதை - சிறு மனத்தாபத்தால் எடுத்தெறியப்பட்ட பூமாலைகள்; தேன் சோர் - தேனை வடித்துக்கொண்டிருக்கின்ற.

ஊடலால் தெருவில் எறியப்பட்ட மாலைக்கு, ஒசிந்த மென் மகளிர் உவமை.

நடனசாலையைக் காண்டல்

159 நெய்திரள் நரம்பில் தந்த
மழலையின் இயன்ற பாடல்
தைவரு மகர வீணை
தண்ணுமை தழுவித் தூங்க,
கைவழி நயனம் செல்ல,
கண்வழி மனமும் செல்ல,
ஐயநுண் இடையார் ஆடும்
ஆடக அரங்கு கண்டார். ரு

நெய் தடவிய நரம்பிலிருந்து எழுப்பப்படுகின்ற மெல்லிய ஓசைபோலப் பொருந்திய பாடலானது, விரலால் தடவி மீட்டப்படுகின்ற மகரவீணை ஒலியையும் மத்தள ஓசையையும் தழுவி மென்மையாக ஒலிக்கவும், கை காட்டுகிற முத்திரையை நோக்கிக் கண் இயங்கவும், கண் காட்டும் அபிநயத்தில் கலந்து மனோபாவம் விளங்கவும், மெல்லிய இடையையுடைய பெண்கள் ஆடுகின்ற நாட்டிய மேடைகளைக் கண்டார்கள்.

(வி — ம்) துருப்பிடியாமல் காத்தற்பொருட்டு உலோகத்தினாலான யாழின் தந்தியில் நெய் தடவப்படுகிறது. நரம்பினாலான தந்திக்கு நெய் தடவுவதில்லை. ஆனால் நரம்பைக் குங்கிலியக் கட்டியில் தேய்த்துப் பதப்படுத்திக் கொள்ளுதல் இயல்பு. எனவே, நெய் என்பதற்குப் பதப்படுத்தும் பொருள் எனக் கொள்ளலாம். பேரியாழ், சகோடயாழ்,

---

159. தைவருதல் - தடவுதல் ; தண்ணுமை - மத்தளம் ; ஆடக அரங்கு - நாட்டிய மேடை ; நரம்பு - யாழ்நரம்பு (தந்தி).

மகரயாழ், செங்கோட்டியாழ் என்ற யாழ் வகை நான்கில் மகரயாழ், மகர மீனைப்போன்ற வடிவுடையதும், பத்தொன்பது நரம்புகளைக் கொண்டியங்குவது மாகும். யாழினுடைய திரிபே வீணை. நூல்களில் யாழும், வீணையும் மயங்கி வருகின்றன. கை சுத்தமாகவும் தெளிவாகவும் முத்திரை காட்டவேண்டும். கை காட்டும் முத்திரையை நோக்கிக் கண் பேசவேண்டும். பாட்டின் பொருளை உணர்ந்து கண்ணிலும், முத்திரையிலும் உடல் அணு ஒவ்வொன்றிலும் பாவ உணர்ச்சியை மனமானது பாய்ச்ச வேண்டும். பாட்டோடு இசை ஒத்துச் செல்லவேண்டும். பருத்த உடலுடையார் இதற்குத் தகுதியற்றவர் என்பதை விளக்க 'ஐயநுண் இடையார்' என்று கூறப்பட்டது.

மனத்தின் வழி கண் செல்ல என்று கூறுமல் 'கண்வழி மனமும் செல்ல' என்று கூறியிருப்பது பயிற்சி மிகுதியைக் காட்டுகிறது. பயிற்சி மிகுந்து விட்டால் ஒவ்வொரு உறுப்பும் தனக்குத்தானே தொழிற்படுவதன்றி ஒன்றையொன்று நோக்கி நிகழ்வதில்லை.

மகளிரோடும் ஊஞ்சலைக் காண்டல்

160 பூசலின் எழுந்த வண்டு
மருங்கினுக்கு இரங்கிப் பொங்க
மாசறு பிறவி போல
வருவது போவ தாகிக்
காசறு பவளச் செங்காய்
மரகதக் கமுகிற் பூண்ட
ஊசலின் மகளிர் மைந்தர்
சிந்தையோ டுலவக் கண்டார்.

160. பூசலின் - ஆரவாரத்துடன்; மருங்கு-இடை; பொங்க- இரைய ; மாசு - குற்றம் ; காசு - குற்றம்; ஊசல் - ஊஞ்சல்.

குற்றமிகுந்த பிறவியைப் போலக் கீழே வருவதும், மேலே போவதும் ஆகி, குற்றமற்ற பவளம் போன்ற சிவந்த காய்களையுடைய பச்சை நிறமான பாக்கு மரங்களில் பூட்டப்பட்ட ஊஞ்சல்களில் (ஏறியிருந்து) இளம்பெண்கள், ஆரவாரத்தோடு எழுந்த வண்டுகள் இடை முறிந்து போய் விடுமோ என்று இரக்கப்பட்டு இரைச்சல் போடும்படியாக இளைஞர்களின் உள்ளத்தைப் பற்றிக்கொண்டு உல்லாசமாக, ஆடுவதைக் கண்டனர்.

(வி – ம்) ஊஞ்சலில் இளம்பெண்கள் ஆடுகின்றார்கள். ஊஞ்சல்களோ, உயர்ந்த, செழுமையான இரண்டு பாக்கு மரங்களுக்கிடையில் சட்டத்தை இணைத்து அதில் கட்டப் பட்டுத் தொங்குகின்றன. வீடு பேறு அடையாத உயி ரானது எப்படி மேலுலகுக்கும் கீழ்உலகுக்குமாக இறந்தும் பிறந்தும் அலையுமோ அப்படி ஊஞ்சல் மேலும் கீழுமாகப் போய்வருகிறது. பக்கத்திலே இளைஞர் பலர் ஊஞ்சற் பெண்களின்மேல் வைத்த பார்வையை வாங்கமாட்டாமல் பார்த்துக் கொண்டிருக்கின்றனர். அவர்களுடைய கண் ணும், மனமும் ஒன்றுபட்டு, ஊஞ்சலோடு ஒட்டிக்கொண்ட படியால், ஊஞ்சல் போகிற போக்கில் இவர்களின் உள்ள மும் போகிறது. இப்படியாக இளைஞர்களின் உள்ளத்தைக் கவர்ந்துகொண்டு உல்லாசமாகப் பெண்கள் ஆடிக்கொண் டிருக்கிற காட்சியைக் கண்டார்கள்.

வாலிபர் கூட்டத்தைக் காண்டல்

161 வெஞ்சுடர் உருவுற் றன்ன
மேனியர், வேண்டிற் றுஈயும்
நெஞ்சினர், ஈசன் கண்ணின்
நெருப்புறு அனங்கன் அன்னார்,

---

161. வெம்சுடர் - சூரியன் ; உரு + உற்ற + அன்ன = உரு வம் அடைந்தாற் போன்ற ;

செஞ்சிலைக் கரத்தர், மாதர்
புலவிகள் திருத்திச் சேந்த
குஞ்சியர் சூழ நின்ற
மைந்தர்தம் குழாங்கள் கண்டார். எ

சூரியன் உடல் பெற்று வந்தாற்போன்ற தோற்றத்தை உடையவரும், கேட்பதை எல்லாம் கொடுக்கக் கூடிய மனம் உடையவரும், சிவபெருமானது நெற்றிக் கண்ணின் நெருப்புப்படாத மன்மதனை ஒத்தவரும், நேர்மையான சிலைபிடித்த கையை உடையவரும், கடந்த இரவில் ஊடிய மனைவியரின் பிணக்கைத் தீர்த்துச் சிவந்த தலைமயிரை உடையவரும் ஆகிச் சூழ்ந்து நின்ற இளைஞர் கூட்டங்களைக் கண்டனர்.

(வி - ம்) இளைஞர்கள், கூட்டம் கூட்டமாக நிற்கின்றார்கள். உடம்பு தளதள வென்று மின்னிக்கொண்டிருக்கின்றது. மன்மதன் ஒருகால் சிவபெருமானின் நெற்றிக் கண்பட்டு எரிந்து போனான்; ஆனால் இவர்கள் நெற்றிக் கண்ணின் நெருப்புப் படுவதற்கு முன்னிருந்த மன்மதனைப் போல இருக்கின்றார்கள். இவர்களுடைய தலைமயிர் மட்டும் இயல்பாக இல்லை; ஏதோ சிவப்புச் சாயம் தோய்ந்தமாதிரி இருக்கிறது. கடந்த இரவில் மனைவியர் பிணங்கி நிற்க, அப் பிணக்கைத் தீர்க்க முயன்றதில், மனைவியரின் கால்களில் பூசப்பட்டிருந்த செம்பஞ்சுக் குழம்பு இவர்களின் தலைமயிரில் ஒட்டியிருக்கிறது; காலிலே விழுந்து கும்பிட்டுச் சமாதானப்படுத்தி யிருக்கிறார்கள் என்பதுதான்! பலருக்கும் பலவகையிற் புலவி நிகழுமாதலால் புலவிகள் என்று பன்மையிற் கூறப்பட்டது.

---

161. செஞ்சிலை - செம்மையான சிலை; தவறான வழியில் அம்பைச் செலுத்தாத சிலை; புலவிகள் - பிணக்குகள்; சேந்த - சிவந்த; குஞ்சி - ஆடவரின் தலைமயிர்.

'பொன்முடியின், மேல்வருடும் தொண்டை விரை நாறும் இன்னமும் என், கால்வருடும் சேடியர்தம் கை' (நந்திக் கலம்பகம்) 'வெய்துயிர்த்து, அனிச்சப் போதின் மிதிப்பினும் பனித்து வாடும், தெய்வமென் கமலப் போது சென்னிமேற் சூடினனே' (நைடதம், மணம்புரி - 50).

சோலை காண்டல்

162 *பாகொக் கும்சொற் பைங்கிளி
யோடும் பலபேசி
மாகத்து உம்பர் மங்கையர்
நாண மலர்கொய்யும்
தோகைக் கொம்பின் அன்னவர்க்கு
அன்னம் நடைதோற்றுப்
போகக் கண்டே வண்டினம்
ஆர்க்கும் பொழில்கண்டார். அ

தேவ மங்கையரும் கண்டு வெட்கம் அடையும்படி, வெல்லப் பாகுக்கு ஒப்பான சொற்களால், அழகிய கிளிகளோடு பேசிக்கொண்டே பூப்பறிக்கின்ற (மயிலையும், பூங் கொம்பையும் ஒத்த) பெண்களின் நடைக்குத் தோற்று அன்னப் பறவைகள் ஓடுவதைக் கண்டு, வண்டுகள் ஆரவாரம் செய்கின்ற பூஞ்சோலையைக் கண்டனர்.

(வி - ம்) தேவமங்கையரும் பார்த்து வெட்கப்படும் படி, கிளிகளோடு இனிமையான சொற்களைப் பேசிக்

162. பாகு - வெல்லத்தைக் காய்ச்சிய பாகு; (ஜீரா); மாகம் - ஆகாயம்; உம்பர் மங்கையர் - மேலே உள்ள தேவ மாதர்கள்; தோகைக் கொம்பின் அன்னவர்க்கு - மயில் போன்ற சாயலினையும் பூங்கொடி போன்ற தோற்றத்தினையும் உடைய பெண்களுக்கு.

கொண்டே பெண்கள் பூப்பறிக்கின்றனர். அங்குமிங்கும் சென்று அவர்கள் பூப்பறிக்கின்றபொழுது அவர்கள் நடையைக் கண்ட அன்னப் பறவைகள் நாணிப் புறமுதுகிட்டு ஓடுகின்றன. வண்டுகள் பூக்களிலிருந்து கலைந்து ஒலிப்பது நடைக்குத் தோற்ற அன்னப் பறவைகளைக் கண்டு கேலி செய்வது போன்றிருக்கிறது.

சீதையின் தோற்றம்

163 பொன்னின் சோதி போதினின்
நாற்றம் பொலிவேபோல்
தென் உண் தேறல் தீஞ்சுவை
செஞ்சொற் கவி இன்பம்,
கன்னிம் மாடத் தும்பரின்
மாடே களிபேடோடு
அன்னம் ஆடும் முன்துறை
கண்டங்கு அயல்நின்ருர். க

பொன்னினது ஒளி போலவும், மலரினது மணமும், பொலிவும்போலவும், வண்டுகள் உண்ணும் தேனினது இனிய சுவை போலவும், செவ்விய சொல்லினாலான கவிதையின் இன்பம் போலவும் (உள்ள சீதை), மகிழ்ச்சியோடு கூடிய தன் பெட்டையுடனே, ஆண் அன்னம் ஆடுகின்ற முன் பக்கத்தின் துறையை நோக்கியபடி கன்னிமாடத்தின் மேல் தளத்தில் அங்கே ஒரு பக்கமாக ஒதுங்கி நின்ருள்.

(வி – ம்) மெய் வாய் கண் மூக்கு செவி என்ற பொறிகளால்தான் இன்பத்தை அறிந்து அனுபவிக்க முடிகிறது. பொன்னின் சோதியும், மலரின் மணமும், தேனின் சுவையும்,

163. போது - தாமரைமலர் ; நாற்றம் - மணம் ; தேன் - தேன்வண்டு ; உம்பரின் மாடு - மேலிடத்தின் பக்கம்.

செஞ்சொற் கவியும் சேர்ந்த இன்ப வடிவமாகச் சீதை நின்ருள். அன்னமும் பெடையும் விளையாடுவதைப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

இந்தப் பாடலின் கடைசிச் சொல், கிடைத்த பிரதிகளில் எல்லாம் 'நின்ருர்' என்றிருக்கிறது. அது 'நின்ருள்' என்றிருக்க வேண்டும். என்ன காரணத்திஞலோ மாறிக் கிடக்கிறது. இராமன் முதலிய மூவரும் வழிநெடுகப் போய்க்கொண்டிருக்கின்ருர்கள்; வழியில் பல நிகழ்ச்சிகளைப் பார்த்துக்கொண்டே செல்லுகின்ருர்கள். எங்கும் நிற்கவில்லை. இவ்வுண்மை இப்பாடலின் முன் பாடல் வரையும் தெரியக்கிடக்கிறது. இதுதான் சீதையைப் பற்றிச் சொல்லத் தொடங்குகின்ற முதல் இடம். 'இன்பம்' என்ற சொல்லுக்குச் சீதை என்று பொருள் செய்வதே சாலச் சிறந்தது; சரியான பொருளுமாகும். கோலங்காண் படலத்தில் 'பொன்னின் ஒளி பூவின் வெறி' என்ற பாடலின் கருத்து இதைத் தழுவி நிற்பது காணத்தக்கதாகும்.

இங்கே அன்னம் ஆடுவதைக் கண்டு மூவரும் நின்ருர்கள் என்று சிலர் பொருள் கூறினர். வழியில் பல நிகழ்ச்சிகளைக் கண்டும் நில்லாத இவர்களை இங்கே நிற்கவைப்பது பொருந்தாது. விதி காரணமாக நின்ருர்கள் என்ருல், மூவரும் சீதையைப் பார்த்திருக்கவேண்டும். பார்க்கவில்லை. கோலங்கண்ட மண்டபத்தில் சீதையைப் பார்த்த கோசிக முனிவர், 'நச்சுடை வடிக்கண் மலர் நங்கை இவள் என்ருல்' என்று கூறி ஆச்சரியப்படுகின்ருர். எனவே, அங்கேதான் முதல் தடவையாகச் சீதையை முனிவரும் இலக்குவனும் கண்டனர் என்பதில் ஐயமில்லை.

பொன்னின் சோதி முதலியவற்றை அன்னத்தின் இணைக்கு ஏற்றி 'பொன்னும் சோதியும் போலவும்' என்

றெல்லாம் பொருள் கூறி இடர்ப்பட்டிருக்கின்றனர். இங்கே இராமனையும் சீதையையும் நிறுத்தி வைத்துக் கொண்டு, அன்னத்தின் இணைக்குச் சிறப்புக் கற்பிப்பது பொருத்தமற்றதாகும். 'பாகொக்கும்' என்று முன்னால் தொடங்கும் பாட்டில் அன்னத்தைக் கண்டார்கள். ஆனால் நிற்கவில்லை. எனவே, அன்னப் பறவையைக் கண்டு நிற்கும் குணம் அவர்கட்கு இல்லை என்று கருதலாம்.

அந்தமில் அழகனை என்ற பாடலில் 'நலனும் பின்செல மைந்தனும் முனியொடு மறையப் போயினன்' என்று கூறப் படுகிறது. இதனால் மூவரும் போய்க்கொண்டேயிருந்தார் கள். கடைசியில் சென்ற இராமன் சீதையைப் பார்த்தான். போய்க்கொண்டே எதிரில் பார்க்கமுடிந்தவரை பார்த்தான். பிறகு முனிவரோடு மறைந்தான். இதுதான் இயல்பு. அன் னப் பறவைகளைப் பார்த்து நின்றதும், நின்ற மூவரில் இரா மன் மட்டும் பெண்ணைப் பார்த்தான் என்பதும், பிறகு மூவ ரும் போனார்கள் என்பதும் பொருந்தாத வீண் கற்பனைதான். கடைசிச் சொல்லை, 'நின்றார்' என்று கொண்டாலும், நின் றாள் என்பதே பொருள். 'சானகியார் பேரழகும் அவர்தம் கற்பும்' (இரா - வதைப்படலம்) என வருவதறிக. இராமனும் நின்று பார்க்கவில்லை : போகிற போக்கில்தான் பார்த்தான் என்பதை "ஆயவள் மின்னின் மின்னிய மேனி கண்டான்" (மிதிலைக்காட்சி) என்று வரும் வரிகளிலிருந்தும் உணரலாம்.

தோழியரின் பணிவிடை

164 தன்நேர் இல்லா மங்கையர்
செங்கைத் தளிர்மானே
அன்னே தேனே ஆர்அமிழ்
தேஎன் றடிபோற்றி

---

164. தளிர் - கொழுந்து போன்ற ; அன்னே - தாயே ; ஆர் - பொருந்திய.

முன்னே முன்னே மொய்ம்மலர்
தூவி முறைசாரப்
பொன்னே சூழும் பூவின்
ஒதுங்கிப் பொலிகின்ருள். ௬0

தனித்தனி தத்தமக்கு இட்ட பணிகளைச் செய்வதில் நிகரற்ற தோழிகள் ‘ சிவந்த தளிர்போன்ற கையையுடைய மானே ! தாயே ! தேனே !! கையில் கிடைத்த தேவாமிர்தமே !!!’ என்று பணிந்து போற்றிப் புகழ்ந்து நடக்குமிடமெல்லாம் மலரைத் தூவிக்கொண்டு நிற்க, மகரந்தம் நிறைந்த அப்பூக்களின்மேல் ஒதுங்கி விளங்கிச் சீதை நின்ருள்.

(வி - ம்) சீதை செல்கின்ற இடமெல்லாம், தோழியர் பூவைத்தூவிக்கொண்டு செல்லுகின்றனர். அதன் மேல் சீதை துவண்டு ஒதுங்குகின்ருள். விரித்த பூக்களின் மேல் சீதை செல்வது மிகுந்த பொலிவுதரும் காட்சியாக இருக்கிறது.

மின்னல் அரசி

165 பொன்சேர் மென்காற் கிண்கிணி
ஆரம் புனைஆரம்
கொன்சேர் அல்குல் மேகலை
தாங்கும் கொடிஅன்ஞர்
நன்சேர் கோலத்து இன்னழில்
காணச் சதகோடி
மின்சே விக்க மின்அரசு
என்னும் படிநின்ருள். கக

164. முறைசார - வரிசையாகச் சூழ்ந்து நிற்க ; பொன் - மகரந்தம்.

165. கிண்கிணி - சதங்கை : ஒலிக்குறிப்புப் பெயர் ; ஆரம்- முத்து ; புனைஆரம் - கட்டப்பட்ட மாலை ; கொன் - பெருமை ; மேகலை - ஒட்டியாணம் ; சதம் - நூறு.

பொன்னால் செய்யப்பட்ட, மெல்லிய கால்களில் அணியத்தக்க சதங்கையையும், முத்துக்களால் கட்டப்பட்ட மாலைகளையும், பெருமை பொருந்திய இடுப்பின் கீழிடத்தில் ஒட்டியாணத்தையும், அணிந்திருக்கின்ற கொடிபோன்ற தோழிமார்கள், தன்னை அடைந்திருக்கின்ற உருவத்தின் இனிய அழகைக் கண்டு களிக்கும்படி, நூறுகோடி மின்னல்கள் கைகட்டிச் சேவை செய்ய, மின்னலுக்கு எல்லாம் அரசி என்று சொல்லும்படியாக நின்றாள்.

பெண் கனி

166 கொல்லும் வேலும் கூற்றமும்
    என்னும் இவைஎல்லாம்
வெல்லும் வெல்லும் என்ன
    மதர்க்கும் விழிகொண்டாள்;
சொல்லும் தன்மைத்து அன்றுஅது;
    குன்றும் சுவரும்திண்
கல்லும் புல்லும் கண்டுரு
    கப்பெண் கனிநின்றாள். கஉ

கொலை செய்யத்தக்க வேலாயுதத்தையும், எமனையும், இன்னும் (கொலையைச் செய்யத்தக்க) எல்லாவற்றையும் 'வெற்றி கொள்ளும், வெற்றி கொள்ளும்' என்று செருக்குக் கொண்டு திகழ்கின்ற விழிகளைக்கொண் டிருக்கின்றாள். அதைப்பற்றி வருணித்துச் சொல்ல முடியாது. சொல்லால் சொன்னால் அந்தச் சொல் குறைவை அடையும். ஆனால் சுவரும் உறுதியான கல்லும் புல்லுங்கூட இப்பெண்ணைப் பார்த்தால் உருகிப்போகும். அப்படிக் கனிந்து நின்றாள்.

---

166. மதர்த்தல் - செருக்கடைதல்; பெண்கனி - கனி போன்ற இனிய பெண்.

(வி - ம்) வேல்பட்டால் உயிரை வாங்கியும் விடும், வாங்காமலும் போகும். எமன் பெரும்பாலும நோயாளி களின் உயிரைத்தான் வாங்கி விடுகின்றான். சீதையின் கண் ஒரே ஒரு மகாவீரன் மேல்பட்டது. அவன் உயிரை வாங்கி விட்டது. கொல்லவில்லை; தன் உயிரைப் பதிலுக்குக் கொடுத்தது. மற்றைய ஆயுதங்கள் உயிரைப் பிரித்துத் துன்பம் செய்யும். சீதையின் விழிகள் அம்பாகவும், கூற்ற மாகவும் வேலை செய்தாலும், பாய்ந்த பொருளை ஒன்றுக்கு நூறாக உயர்த்திவிட்டன. ஆகையால் பெருமிதம் கொண்டு தோன்றின அவ் விழிகள். சீதையின் அழகும், பருவ வளர்ச்சியும், நிறத்தில் காணப்படும் மெருகும், பார்த்த பெண் கட்குச் சீதை, கண்ணிலேயே நின்று உள்ளத்தை உருக்குவ தால், கல்லைப் பார்த்தாலும், மண்ணைப் பார்த்தாலும் இதே நினைப்பில் எல்லாப் பொருளும் சொக்கி நிற்பதாகவே தோன்றும்படி ஆகிவிட்டது. கல்லையும், மண்ணையும் கண்டு உருகும்படி மக்கள் மனத்தை உருக்குகின்றாள் சீதை.

உணர்வு ஒன்றியது

167 *எண்அரும் நலத்தினாள்
இனையள் நின்றுழி,
கண்ணொடு கண் இணை
கவ்வி ஒன்றைஒன்று
உண்ணவும் நிலைபெறாது
உணர்வும் ஒன்றிட,
அண்ணலும் நோக்கினான்;
அவளும் நோக்கினாள். கரு

167. நலம் - அழகு; இனையள் - இத்தகையளாக; நின் றுழி - நிற்கும் பொழுது.

எண்ணிப்பார்ப்பதற்கு முடியாத அழகையுடைய சீதை இத்தகையளாக நிற்கும்பொழுது, கண்களோடு கண்கள் பற்றிப் பிடித்து, ஒன்றை மற்றொன்று உண்ண உண்ண, முழுவதையும் உண்ண முடியாமல் உணர்வு ஒன்றிச் சொக்கிப் போகும்படி, இராமனும் நோக்கினன்; அப் பொழுதே சீதையும் நோக்கினள்.

(வி - ம்) கீழே நடந்து சென்று கொண்டிருக்கின்ற இராமனும், மேலே நிற்கின்ற சீதையும் ஒருவரை ஒருவர் பார்த்தனர். ஆனல் அந்தப் பார்வை இரண்டும் தற்செயலாகக் கண்களில் விழுந்தன. பார்வை கலந்தது மட்டுமல்ல, உணர்ச்சியும் ஒன்றிப் போயிற்று. இந்தப் புதிய அனுபவத்தை அவர்களால் தாங்க முடியவில்லை என்றபடி. யார் முதலில் நோக்கினர் என்று கூறுதற்கின்றி, ஒரே நேரத்தில் இருவரும் நோக்கினர். ‘கண்ணொடு கண்ணிணை கவ்வி’, ‘ஒன்றை ஒன்று உண்ணவும்’ ‘உணர்வும் ஒன்றிட’ என்பதனல் இவ்வுண்மை அறிக.

ஒன்றுபட்ட பார்வை

168 நோக்கிய நோக்கெனும்
நுதிகொள் வேல்இணை
ஆக்கிய மதுகையான்
தோளின் ஆழ்ந்தன;
வீக்கிய கனைகழல்
வீரன் செங்கணும்
தாக்கணங்கு அனையவள்
தனத்தில் தைத்தவே. கஅ

168. நுதி-கூர்மை; ஆக்கிய - உண்டாக்கப்பட்ட; மதுகை-வலிமை; அணங்கு - தீண்டி வருத்தும் தெய்வம்.

அழுத்தமாகப் பார்த்த பார்வையாகிய கூர்மையான இரட்டை வேல்கள், வலிமை கொண்டு உண்டாக்கப் பட்டதோ என்னும்படி வளர்ந்துள்ள இராமனது தோள்களில் ஆழ்ந்தன. கட்டப்பட்டு ஒலிக்கின்ற வீரக் கழலைக் காலில் அணிந்திருக்கிற வீரனாகிய இராமனுடைய செந்தாமரைக் கண்களும், தாக்கி வருத்தும் தெய்வத்தைப் போன்ற சீதையின் மார்பில் தைத்தன.

(வி - ம்) ஆடவற்குப் பெண்ணின் தனமும், பெண்ணிற்கு ஆடவர் தோளுடன் கூடிய மார்பும் கவர்ச்சிக்குரிய பொருள்களாகும். முன் பாடலில் கண்கள் ஒன்றின. குறுகுறு என்று பார்த்த பெண்ணுள்ளம் நாணின் வயப்பட்டுச் சிறிது மேலிமை கவிழ்ந்தது; தாழவில்லை. அதிகக் கூர்மையோடு கூடிய இரண்டும் வேலாகி இராமன் தோள்களில் பதிந்தன.

இராமனும் தன் கண்களைச் சிறிது மீட்டான். வாங்க முடியாத பார்வையானது சிறிது பின்னிட்டுச் சீதையின் தனத்தில் வேகமாகத் தைத்தது. "நோக்கினாள் நோக்கெதிர் நோக்குதல் தாக்கணங்கு, தானைக்கொண்டன்ன துடைத்து" (குறள் - 1082.)

இதயக் கலப்பு

169 பருகிய நோக்கெனும்
பாசத் தாற்பிணித்து
ஒருவரை ஒருவர்தம்
உள்ளம் ஈர்த்தலால்,
வரிசிலை அண்ணலும்
வாட்கண் நங்கையும்
இருவரும் மாறிப்புக்கு
இதயம் எய்தினார். கரு

169. பாசம் - கயிறு ; ஈர்த்தல் - இழுத்தல்.

இப்படிப் பருகிய பார்வை என்னும் கயிற்றினால் கட்டப்பட்டு ஒருவரை மற்றவருடைய உள்ளம் இழுத்த லால், வரிகளையுடைய வில்லை அணிந்திருக்கின்ற இராமனும், வாளாகிய கண்களையுடைய சீதையும் ஆகிய இருவரும் மாறி மற்றவருடைய உள்ளத்தில் புகுந்து அதை நிறைத்துக் கொண்டனர்.

(வி - ம்) இராமன் ஒப்பற்ற வில்லை வைத்திருக் கின்றான். சீதையும் அதற்குச் சரியாக (கண்களாகிய) வாளை வைத்திருக்கின்றாள். இருவருடைய கண்களும், உள்ளமும் விளையாடிக்கொண் டிருக்கின்றன. விளையாட்டு மட்டுமல்ல, போராடவும் செய்கின்றன. போராட்டத்தில் இருவருக்கும் வெற்றிதான்! ஒருவருடைய இதயத்தை மற்றவர் பிடித்துக்கொண்டு விட்டார்கள்.

ஈருடலுக்கு ஓருயிர்

170 மருங்கிலா நங்கையும்
வசைஇல் ஐயனும்
ஒருங்கிய இரண்டுஉடற்கு
உயிர்ஒன் றாயினர்;
கருங்கடற் பள்ளியிற்
கலவி நீங்கிப்போய்ப்
பிரிந்தவர் கூடினாற்
பேசல் வேண்டுமோ. கசு

இடை இல்லை என்று கருதும்படியான பெண்களில் சிறந்த சீதையும், பழிப்புக்கு இடமில்லாத இராமனும்,

170. மருங்கு - இடை ; கருங்கடல் - பெருமை பொருந்திய கடல் ; பள்ளி - படுக்கை ; கலவி - சேர்ந்திருத்தல்.

ஒற்றுமைப்பட்ட இரண்டு உடல்களுக்கு ஏற்பட்ட ஓர் உயிராக விளங்கினார்கள். பெருமை பொருந்திய பாற் கடலிலே ஆதிசேடனாகிய படுக்கையில் கூடியிருந்து நீங்கிப் போய்ப் பிரிந்த அவர்கள் மறுபடியும் கூடுவதென்றால், மேலே சொல்ல என்ன இருக்கிறது ?

(வி - ம்) பார்வை ஒன்றாயிற்று, உணர்ச்சி ஒன்றா யிற்று, இப்பொழுது உயிரும் ஒன்றாயிற்று. உடல்களோ ஒன்றாகிவிடத் தவித்துத் திண்டாடுகின்றன. இருவரின் உணர்ச்சியும், உயிரும் மாறிப் புகுந்துகொண்டன. எனவே, உடலிரண்டும் ஒன்றான மாதிரிதான் என்று கூறுவதுபோல 'இரண்டு உடற்கு உயிர் ஒன்றாயினர்' என்று கூறப்படுகிறது. கடவுள் தத்துவத்தில் திருமாலும், இலக்குமியும் ஒரே பொருள்தான். இங்கே உடல் இரண்டு என்று கருத வேண்டாம். ஒன்றுதான் என்ற குறிப்பை உணர்த்துதற்குப் பாற்கடலை நினைப்பூட்டுகிறார் போலும்.

கருங்கடல் என்றது நிறத்தைக் குறித்தது அன்று. கருமை என்பதற்குப் பெருமை என்பது பொருள். பாற்கடல் வெண்மையாயினும் திருமாலினது நீலஒளி பரவி நிற்றலால் பாற்கடல் கருங்கடலாகத் தோற்றுகிறதென்றும் கொள்ள லாம்.

சித்திரப் பதுமை

171 அந்தம் இல் அழகனை
அணுகி லாமையாற்
பைந்தொடி ஓவியப்
பாவை போன்றனள் ;

---

171. அந்தம் - முடிவு : எல்லை ; ஓவியப் பாவை - (உயிரில் லாத) சித்திரப் பதுமை ;

சிந்தையும் நிறையும்மெய்
நலனும் பின்செல
மைந்தனும் முனியொடு
மறையப் போயினான். கஎ

எல்லையற்ற அழகனாகிய இராமனைக் கட்டித் தழுவ இயலாதபடியால், அழகிய வளையலை அணிந்த கைகளையுடைய சீதை, ஒரு ஓவியத்தில் எழுதி வைக்கப்பட்ட சித்திரம் போல் ஆகிவிட்டாள். சீதையின் மனமும், கற்பும், உடலின் அழகும், எல்லாம் இராமனுக்குப் பின்னே தொடர்ந்து செல்ல இராமன் முனியோடு மறைந்து சென்றுவிட்டான்.

(வி — ம்) இதுவரை நடந்த நிகழ்ச்சிகளை நோக்கினால் இருவரும் கட்டித் தழுவுதல் என்ற ஒன்றுதான் பாக்கி, அதற்கு இடமேற்படாததால், சீதை அப்படியே நிலைத்து நின்றுவிட்டாள். கண்முதலிய உடலின் அங்கங்கள் எல்லாம் செயல் ஒழிந்து போய்விட்டன. அவள் உயிரற்ற பதுமை போல் ஆயினாள். இவளிடத்தில் முன் கட்டுப்பட்டு இயங்கிக் கொண்டிருந்த மனமும், அடக்கமும், உடலின் மெருகும் சேர்ந்து இராமன் பின்னாலேயே அவனைத் தொடர்ந்து சென்றுவிட்டன. ஆதலால், இந்தப் பைந்தொடி ஓவியப் பாவையே ஆயினாள். ஓவியத்தில் உடல் அழகும், நிறமும் இருக்கும். ஆனால் உடலின்மேல் மிளிரும் உயிர்ச்சத்து இராதது போல சீதையின் உடல் வெளுத்துச் செழுமை குறைந்துவிட்டது. "உடல் சிந்தைவசமன்றோ?" (கோலங் காண் படலம்).

---

171. நிறை - எண்ணத்தை நிறுத்தி அடக்கும் அடக்கம் (கற்பு வழியில் அடங்கி நிற்றல்); மெய் நலன் - உடலின் மெருகு; (உடலின் மேல் பரந்து ஒளி செய்து கவர்ச்சிகரமாக விளங்கும் ஒருவகை மினுமினுப்பு.)

"அந்தமில் அழகனை அணைகிலாமையால்" என்பதை 'அந்தமில் நோக்கு இமை அணைகிலாமையால்' என்று பாடங் கொண்டு, இராமனைக் கண்ட கண்களின் இமைகள் மூடாதபடியால் சீதை ஓவியப் பாவைபோற் காணப்பட்டாள் என்று கூறுவாருமுளர்.

அடங்காத யானை

172 பிறைஎனும் நுதலவள்
பெண்மை என்படும்;
நறைகமழ் அலங்கலான்
நயன கோசரம்
மறைதலும், மனம்எனும்
மத்த யானையின்
நிறைஎனும் அங்குசம்
நிமிர்ந்து போயதே. கஅ

மணமுள்ள மாலை அணிந்த இராமனது உடலின் தோற்றம், கண் பார்வைக்கு அப்பாற்பட்டு மறைந்தபொழுது, சீதையின் மனமாகிய மதயானையை அடக்கக் கூடிய நிறை என்ற அங்குசம் வளைவுநிமிர்ந்து போய்விட்டது. அப்படியானல் பிறை போன்ற நெற்றியையுடைய சீதையின் பெண்தன்மை என்ன கதியை அடையும்?

(வி - ம்) இராமன் வந்துகொண்டிருக்கும்பொழுது பார்த்தாள்; பார்த்துக்கொண்டே நின்ருள். அவன் போய்க்

172. பிறைநுதல் - எட்டாம் பிறைச் சந்திரனைப் போன்ற நெற்றி; நறை — மணம்; அலங்கல் — மாலை; நயனம் — கண்; கோசரம் — பார்வை; மத்த யானை - மதங்கொண்டயானை; அங்குசம் — யானையைக் குத்தியிழுத்து அடக்கும் கருவி (துறட்டி போல வளைந்திருக்கும்.)

கொண்டே இருக்கின்றான். பார்த்துக்கொண்டே நிற்கின்றாள். தூரத்தில் போய் மறைந்துவிட்டான். அவளைப் பற்றிய எல்லாம் அவனோடு போய்விட்டன. சீதையின் உடல்தான் மிச்சம். எல்லாந்தான் போயிற்று; மன அடக்கமுமா போயிற்று என்றால், ஆம்; ஆசை என்ற பெரிய யானை இவளிடத்தில் தோன்றி வளர்ந்தது. அது ஏதாவது சேட்டை செய்யுமானால், அதை அடக்குவதற்காகப் பலமான அங்குசமும் அவளிடம் தயாராக இருந்தது. இன்று இராமனைப் பார்த்ததும் யானை ஒரே அடியாக, என்றுமில்லாத பெருமதம் பிடித்துக் கிளம்பியபடியால், அதை அடக்கும் பொருட்டு அங்குசம் போட்டு இழுக்கப்பட்டது. ஆனால் அந்த அங்குசத்தின் வளைவு ஒரே நேராக நிமிர்ந்து போகவே, செய்ய வேறு செயல் இல்லை. அங்குசம் இருக்கத்தான் இருக்கிறது. ஆனால் இங்கே உதவ வலுவிழந்துவிட்டது. அங்குசம் ஒடியவில்லை, நிமிர்ந்துதான் போயிருக்கிறது என்பது சிந்திக்கற்குரியது.

காதலின் விளைவு

173 மால்உற வருதலும்
மனமும் மெய்யும்தன்
நூல்உறு மருங்குல்போல்
நுடங்கு வாள், நெடும்
கால்உறு கண்வழி
புகுந்த காதல்நோய்
பால்உறு பிரைஎனப்
பரந்தது எங்குமே. கக

---

173. மால் - திருமால்; கால் - வாய்க்கால்; பிரை - பால் உறையும் பொருட்டு ஊற்றப்படும் மோர்த் துளி.

திருமாலாகிய இராமன் நெருங்கி வந்தவுடனே, மனமும் உடம்பும் நூலை ஒத்த தன்னுடைய இடையைப் போலத் துவண்டு நின்ற சீதையின் அழகிய கண்ணின் வழியாகப் புகுந்து சென்ற காதலாகிய நோய், பானையில் உள்ள பாலில் இடப்பட்ட பிரைமோரைப்போல உடல் முழுதும் பரவிவிட்டது.

(வி-ம்) காதல், இன்பத்தைத் தருவதானாலும், அதில் வெற்றி முற்றாதபொழுது, நோயைப் போல வளர்ந்து துன்புறுத்தும் குணமுடையது ஆதலால், இங்கே நோய் எனப் பட்டது. ஒரு மிடாப் பாலில் விடப்பட்ட ஒரு துளி மோர் அப் பால் முழுவதும் பரவுவதுபோலக் கண்வழிச் சென்ற ஒரே பார்வை – சிறிதுநேரப் பார்வையானது, பல வருடம் பண்பட்ட குணம் முழுவதையும் மாற்றிவிட்டது. இது வரை பால் போன்றிருந்த சீதையின் குழந்தை மனம், இன்று திரிவுபட்டு உலகியலில் திரும்பி விட்டதென்பது.

எரிகிற நெருப்புக்கு விறகு

174 நோம்உறும்; நோய்நிலை
நுவல கிற்றிலள்;
ஊமரின் மனத்திடை
உன்னி விம்முவாள்;
காமனும் ஒருசரம்
கருத்தில் எய்தனன்
வேம்எரி அதனிடை
விறகிட் டென்னவே.

---

174. நோம் - நோகும்; துன்பப்படுவாள்; நுவலகிற்றிலள்- சொல்லும் ஆற்றல் இல்லாதவளானாள்; உன்னி - நினைத்து; சரம் - அம்பு; வேம் - வேகும்; எரி - எரிகிற நெருப்பு.

துன்பப்படுகிறாள் ; பொருந்திய நோயின் நிலையை வாய்திறந்து சொல்லச் செயலில்லாதவளாய், ஊமையரைப் போல மனத்தினுள்ளே நினைத்து நினைத்துப் பொருமுகிறாள். எரிகிற நெருப்பிலே விறகை வைத்து மூட்டிவிட்டாற்போல சீதையின் நெஞ்சை நோக்கி முதலாவது அம்பை மன்மதன் எய்தனன்.

(வி - ம்) நோய் இன்னது என்பதைத் தெரிந்து கொண்டாலும் துன்ப உணர்ச்சிப் பெருக்கில், வாய் திறக்க மாட்டேன் என்கிறது.

ஊமையன் வாயடைத்துப் பேச முடியாதிருப்பது போல உணர்ச்சி அவளுடைய வாயை அடைத்துவிடுகிறது. "கையில் ஊமன் கண்ணிற் காக்கும், வெண்ணெய் உணங் கல் போலப், பரந்தன்று இந்நோய்" (குறுந் - 58) என்ற குறுந்தொகைப் பகுதி ஈண்டு நோக்கத்தக்கது.

மன்மதன் தன்னுடைய ஐந்து அம்புகளில் முதலாவ தாகிய அரவிந்தத்தை நெஞ்சில் எய்தான். 'நெஞ்சில் அரவிந் தம் நீள்சூதம் கொங்கையின்மேல், அஞ்சும் விழியில் அசோக மாம்—வஞ்சியரே, சென்னிமிசை முல்லை திகழ்நீலம் அல்கு லிலே, இந்நிலைவேள் எய்வான் இவை.' "நினைக்கும் அர விந்தம் நீள்பசலை மாம்பூ, அனைத்துணவு நீக்கும் அசோகு— வனத்திலுறு, முல்லை கிடைகாட்டும் மாதே முழுநீலம், கொல் லும் மதனம்பின் குணம்" (இரத்தினச் சுருக்கம்).

தோழியர் தூக்கிச் செல்லல்

175 கலம்குறைந் துக,நெடு
நாளும் கண் அற,
நலம்குறை தர,நகில்
முகந்தின் ஏ உண்டு,

---

175. கலம் – அணி கலன்கள் ; கண் அற - ஒழிய ; நகில் – முலை ; ஏ - அம்பு.

மலங்குஉழை எனஉயிர்
வருந்திச் சோர்வுறும்
பொலங்குழை மயிலேக்கொண்டு
அரிதிற் போயினர். உக

துயரத்தால் உடல் மெலிந்து, அணிகலன்கள் கழன்று உதிரவும், மிகுந்த நாணம் ஒழியவும், அழகு மாறவும், முலையின் முகத்தில் மன்மதனுடைய இரண்டாவது மலர் அம்பினுல் அடிபட்டு, அம்புபட்ட மான்போல மயக்கமுற்று, வருந்திச் சோர்ந்து விழுகின்ற, தங்கக் குழையணிந்த காதினையுடைய மயில் போன்ற சீதையைத் தூக்கிக்கொண்டு (தோழிகள்) மிகுந்த துன்பத்தோடு சென்றனர்.

(வி - ம்) உயிர் சோர்வுறலாவது அடிக்கடி மூர்ச்சை யடைதல். நடக்கும் நிலையிழந்து போனபடியால் தூக்கிச் செல்ல வேண்டியதாயிற்று. முலைமுகத்தில் மன்மதன் அம்பு எய்தல் இரண்டாம்படி என்பர். "நீள் சூதம் கொங்கையின் மேல்", "நீள் பசலை மாம்பூ" (இரத்தினச் சுருக்கம்) என வருதல் காண்க.

மலர்ப்படுக்கையில் கிடத்துதல்

176 காதொடும் குழைபொரு
கயற்கண் மங்கைதன்
பாதமும் கரங்களும்
அனைய பல்லவத்
தாதொடும் குழையொடும்
அடுத்த தண்பனிச்
சீதநுண் துளிமலர்
அமளி சேர்த்தினர். உஉ

---

176. காதொடும் குழை - குழைக்காதொடும்; குழையணிந்த காதோடு; பொரு — போரிடுகின்ற : தொட்டுப் பிடிக்கிற ; கயற் கண் - கயல்போன்ற கண்.

குழையணிந்த, காதுவரை செல்லும் கெண்டை மீனை ஒத்த கண்களையுடைய நங்கையின் பாதங்களையும் கைகளையும் போன்ற தளிர்களையும் பூவிதழ்களையும் குழைகளையும் இட்டுப் பரப்பிய, மிக்க குளிர்ந்த பன்னீர் தெளித்த பூப்படுக்கையில் கிடத்தினார்கள்.

(வி - ம்) பல்லவம், குழை இரண்டும் இளந்தளிரின் வளர்ச்சிப் பருவத்தைக் குறிப்பன. தண் பனி, சீதம் என்பன ஒரு பொருட் கிளவிகள்.

திட்டி கழித்தல்

177 தாதியர், செவிலியர்,
தாயர், தவ்வையர்
மாதுயர் உழந்துழந்து
அழுங்கி மாழ்கினர்;
யாதுகொல் இதுஎன
எண்ணல் தேற்றலர் ;
போதுடன் அயினிநீர்
சுழற்றிப் போற்றினர். உரு

வேலைக்காரிகளும், வளர்ப்புத்தாயரும், ஏனைய தாயரும், மூத்த பெண்களும் மிக்க துயரமடைந்து அழுது தவித்தனர். இது என்ன என்று நினைத்துப் பார்க்கக்கூட அவர்களால் முடியவில்லை. மலரோடு கூடிய ஆரத்தி நீரைக் கொண்டு திட்டி சுற்றினர்.

---

177. செவிலியர் - வளர்ப்புத் தாய்மார் ; தாயர் - சனகன் மனைவியர் ; தவ்வையர் — வயது முதிர்ந்த பெண்கள் ; போது - மலர் ; அயினி - செஞ்சோறு.

எண்ண அலைகள்

178 அல்லினை வகுத்ததோர்
அலங்கற் காடெனும்,
வல்எழு அல்லஓர்
மரக தப்பெரும்
கல்எனும் இருபுயம்,
கமலம் கண்எனும்,
வில்லொடும் இழிந்ததோர்
மேகம் என்னுமால். உச

இருளைக்கொண்டு செய்ததுபோன்ற தொடுத்த மலர்க் கூட்டம் அவனுடைய உருவம் என்று நினைப்பாள்; தோள்கள் வலிய தூண்கள் அல்ல, ஒரு பெரிய மரகதக் கல்லினால் செய்யப்பட்டவை என்று நினைப்பாள். கண்கள் தாமரைப் பூவே என்று நினைப்பாள்; ஒரு மேகமானது வான வில்லோடு கீழே இறங்கி வந்தது என்றும் எண்ணுவாள்.

(வி - ம்) தன் நினைவற்று மயக்கம் போட்டுக் கிடந்த சீதையின் உள்ளத்தில் பலவகையான எண்ண அலைகள் தோன்றுகின்றன.

மன்மதன் அல்லன்

179 நெருக்கி,யுட் புகுந்தரு
நிறையும் பெண்மையும்
உருக்கி,என் உயிரொடும்
உண்டு போனவன்

---

178. அல் - இருட்டு; அலங்கல் - மாலை; எழு - தூண்; இழிந்தது - இறங்கிவந்தது.

179. நிறை - மனக்கட்டுப்பாடு: மனஉறுதி;

பொருப்புறழ் தோள்புணர்
புண்ணி யத்தது
கருப்புவில் அன்று;அவன்
காமன் அல்லனே. உடு

என்னை அழுத்தி என் மனத்தினுள்ளே புகுந்து, அரிய மனவுறுதியையும், பெண் குணங்களையும் கரையச் செய்து, அவற்றை என் உயிரோடு சேர்த்துக் கவர்ந்து போனவனுடைய மலைபோன்ற தோளில் பொருந்தி யிருந்ததே அந்தப் புண்ணியம் செய்த பொருள்! – அது கரும்பு வில் அல்ல; ஆதலால் அவன் மன்மதனன்று.

(வி – ம்) தன்னை இப்படி நிலைகலங்கச் செய்து சென்றவன் யாராக இருக்கலாம் என்று நினைத்துப் பார்க்கிறாள். கருப்பு நிறத்தோடு கண்கொள்ளாத அழகு பொருந்தியவனாதலால் ஒரு வேளை மன்மதனாக இருக்கலாமா என்ற ஐயம் எழுந்தது. அவனுடைய தோளில் பொருந்தியிருந்த வில் கரும்பு வில் அல்லவே? ஆதலால் அவன் மன்மதனல்லன் என்று தெளிவடைகிறாள். தான் தழுவ எண்ணித் தவிக்கும்போது, அந்தத் தோளைத் தழுவும் பேற்றினை அடைந்த வில் சீதை உள்ளத்தில் 'புண்ணியம் செய்தது' என்று தோன்றுகிறது.

கண்வழி நுழைந்த கள்வன்

180 *பெண்வழி நலனொடும்*
பிறந்த நாணொடும்
எண்வழி உணர்வும்நான்
எங்கும் காண்கிலேன்;

---

179. பொருப்பு - மலை; உறழ் - ஒத்த; கருப்பு – கரும்பு. (வலித்தல் விகாரம்).

180. நலன் – குணம்; எண் - நினைப்பு.

மண்வழி நடந்துஅடி
வருந்தப் போனவன்
கண்வழி நுழையும்ஓர்
கள்வனேகொலாம். உகூ

பெண்களுக்கு வழிவழியாக வருகின்ற குணத்தோடு, உடன் பிறந்ததாகிய நாணமும், நினைப்பின் வழித்தோன்றும் உணர்வும், என்னிடமிருந்து காண முடியாமலே போய் விட்டன. மண்ணிலே வழி நடந்து கால்வருந்தும்படி சென்ற அவன் கண்வழியாக உள்ளே புகுந்து கொள்ளை கொள்ளும் கள்வனாக இருக்குமோ?

(வி - ம்) நாணம் பெண்ணின் பிறப்பிலேயே உடன் தோன்றுவதென்று கூறப்படுகிறது. "பூணாகம் தா என்று புல்லப் பெறுவேனோ, நாணோ டுடன்பிறந்த நான்" என்பது முத்தொள்ளாயிரம். இவன் பெருங்கள்ளன் என்று கூறுவதில் அன்புநிறைந்த ஆற்றாமை தோன்றுகிறது. "என் உள்ளங் கவர் கள்வன்" (ஆளுடைய பிள்ளையார்), "கள்வன்கொல் யானறியேன் கரியான் ஒரு காளை" (திவ்வியப்பிரபந்தம்), "கொல்வான் போல் நோக்கி நகைக்கூட்டம் செய்தான் அக் கள்வன் மகன்" (கலி - குறிஞ்சி).

உயிரை உண்ட புன்சிரிப்பு

181 இந்திர நீலம்ஒத்து
இருண்ட குஞ்சியும்
சந்திர வதனமும்
தாழ்ந்த கைகளும்

---

181. இந்திர நீலம் - ஒருவகை நீல ரத்தினம்; குஞ்சி - ஆண்மயிர்; வதனம் - முகம்;

சுந்தர மணிவரைத்
தோளு மேஅல ;
முந்தியென் உயிரைஅம்
முறுவல் உண்டதே. உஎ

இந்திர மணியைப் போலக் கருத்திருந்த தலை முடியும், முழுநிலவைப்போன்ற முகமும், மிக நீண்டு தாழ்ந்து காணப் பட்ட கைகளும், அழகான நீலமலை என்று சொல்லும் படியான தோள்களுமா என் உயிரை உண்டன ? அல்ல ; முதலிலேயே என் உயிரை அந்தப் புன்சிரிப்புத்தான் உண்டு விட்டது.

(வி - ம்) வர வர நினைப்பில் சிறிது தெளிவு காணப் படுகிறது. முன் நிகழ்ந்ததை எண்ணிப்பார்க்க முடிகிறது. தன்னை முற்றுங் கவர்ந்தது எது என்று எண்ணிப்பார்க் கிருள். கரிய தலைமயிரா ? முகமா ? கைகளா ? தோளா ? எது ? இவையெல்லாம் என்னைக் கவர்ந்தன என்ருலும் ஆளைப் படுக்கவைத்தது அந்தக் கள்ளப் புன்முறுவல்தான் என்ற முடிவுக்கு வருகிருள்.

உளங்கவர்ந்த நடை

182 படர்ந்தொளி பரந்துயிர்
பருகும் ஆகமும்
தடந்தரு தாமரைத்
தாளு மேஅல ;
கடந்தரு மாமதக்
களிநல் யானைபோல்
நடந்தது கிடந்ததென்
உள்ளம் நண்ணியே. உஅ

---

181. மணி - நீலநிறம் ; ('மல்லாண்ட திண்டோள் மணி வண்ணா' பெரியாழ்வார்) முறுவல் - புன்சிரிப்பு.

182. ஆகம்-மார்பு; தடம்-பெருமை; கடம்-யானையின்கன்னம்.

விரிந்து ஒளி நிறைந்து காண்போர் உயிரை உண்ணுகின்ற மார்பும், பெருமை பொருந்திய செந்தாமரைப் பூப் போன்ற திருவடிகளும் என் மனத்திற் பதிந்தன அல்ல. மிகுந்த மதம் பொழிகின்ற களிப்பு மிகுந்த யானையைப் போல நடந்த நடைதான் என் உள்ளத்தைப் பற்றிப் பிடித்துக் கிடந்ததாகும்.

(வி - ம்) நடந்து சென்ற கால்களா அல்லது அழகான மார்பா? எது தன்னுடைய உள்ளத்தைப் பற்றியது என்று நினைத்துப்பார்க்கிருள். அவை யல்ல. நடந்து சென்ற கம்பீரந்தான் தன்னை இழுத்திருக்கிறது என்று தோன்றுகிறது. நல்யானை என்பது எல்லா நல்ல இலக்கணங்களும் அமைந்த யானை.

ஐயந் தெளிதல்

183 உரைசெயின் தேவர்தம்
உலகு ளான்அலன்
விரைசெறி தாமரை
இமைக்கும் மெய்ம்மையால் ;
வரிசிலைத் தடக்கையன் ;
மார்பில் நூலினன் ;
அரசிளங் குமரனே
ஆதல் வேண்டுமால். உக

அவனைப் பற்றிச் சொல்வதென்றால், தேவர்களுடைய உலகத்தைச் சேர்ந்தவன் அல்லன், மணம் நிறைந்த தாமரை

---

183. விரை – மணம் ; தாமரை - தாமரை மலர்போன்ற கண்கள் ; தாமரை - இருமடியாகுபெயர் ; தாமரை என்ற முதலின் பெயர் மலருக்காகி, மலர்போன்ற கண்களைக் குறித்தது. வரிசிலை - வரிந்து கட்டப்பட்ட வில்.

(மலர் போன்ற கண்கள்) இமைக்கிறபடியால். கட்டமைந்த வில்லைப் பெரிய கையில் கொண்டிருக்கிறான்; மார்பில் பூணூல் அணிந்திருக்கிறான்; ஆதலால் இவன் அரச குமாரனாகவே இருத்தல் வேண்டும்.

(வி – ம்) அழகும் தோற்றப் பொலிவும் கொண்டு இப்படி வந்து போனவன் தேவனா மனிதனா என்ற ஐயம் உண்டாகி, கண் இமைப்பதனாலும், வில்லையும் பூணூலையும் தாங்கி யிருப்பதனாலும் இவன் மனிதன்தான், அதிலும் அரச குமரனே என்ற தேற்றமேற்படுகிறது.

'சிறந்துழி ஐயம் சிறந்த தென்ப, இழிந்துழி இழிபே சுட்ட லான'

என்ற சூத்திர உரையில் (தொல். பொருள் - 94) இளம் பூரணர், 'தலைமகன் தலைவி இருவரும் உயர்ந்தவராயின் ஐயப்பாடு சிறந்தது' என்று பால் வேற்றுமை யின்றி நூலாசிரியரது கருத்தையே உரைத்தார். இறையனார் களவி யல் உரை ஆசிரியரும் (சூ. - உ) 'இவளும் (தலைமகளும்) அவனை ஐயப்படும். 'கடம்பமர் கடவுள் கொல்லோ, இயக் கன் கொல்லோ, அன்றி மக்களுள்ளான் கொல்லோ என்று இங்ஙனம் ஐயப்படும்' என்றும், 'ஆடை மாசுண்டலானும், கால் நிலந்தோய்தலானும், கண் இமைத்தலானும் கண்ணி வாடுதலானும், சாந்து புலர்தலானும்' தலைமகனிடம் தெளிவு பிறக்கும் என்று கூறி, 'இவளும் அவனை இவ்வாறே தெரிந்து மக்களுள்ளான் என்பது துணியும்' என்று தலை மகளது தெளிவையும் கூறினார். இங்ஙனம், 'அன்பினானும், குணத்தினா னும் கல்வியினானும் உருவினானும் திருவினானும்' ஒத்த தலை வன் தலைவியரின் ஐயத்தையும் தெளிவையும் வேறுபாடின்றித் தொல்காப்பியரும், இளம்பூரணரும், களவியலுரையாசிரி யரும் தமிழ்மக்கள் அகஒழுக்கத்தை ஒரே மாதிரி கூறியிருக்க, உச்சிமேற் புலவர் கொள் நச்சினார்க்கினியர் மட்டிலும்,

'தலைவற்குத் தெய்வமோ அல்லளோ வென நிகழ்ந்த ஐயம், நூன் முதலியவற்றால் நீக்கித் தெய்வமன்மை உணர்தற்கு அறிவுடைய ஞதலும், தலைவிக்கு முருகனே இயக்கனே மகனே வென ஐயம் நிகழின் அதனை நீக்கி உணர்தற்குக் கருவியிலள் ஆகலானும் இங்ஙனம் கூறினர்' என்று தலைமகளைக் குறைத்துக் கூறினர். ஆனல் கம்பர் தொல்லாசிரியர் கூறிச்சென்ற நெறிவழியே ஆணைப்போல பெண்ணுக்கும் ஐயமும் தெளிவும் உண்டென ஈண்டு வற்புறுத்தி யிருக்கிறார்.

பல் நினைவுகள்

184 என்றுஇவை இனையன
 எண்ணும், வந்தெதிர்
நின்றனன் இவன்எனும்,
 நீங்கினன்எனும்,
கன்றிய மனத்துறு
 காம வேட்கையால்
ஒன்றல பலநினைந்
 துருகுங் காலையே. ௩௦

என்று இப்படிப் பலபடியாக நினைப்பாள்; எதிரே வந்து இங்கே நிற்கிறான் என்று கருதுவாள்; போய்விட்டான் என்று எண்ணுவாள். இதிலே ஈடுபட்டு வெதும்பிப்போன மனத்தில் பொருந்திய காம வேட்கையினல் ஒன்றல்ல இரண்டல்ல பலவற்றையும் நினைந்து உருகிக்கொண்டிருக்கும் போது;

---

184. கன்றிய - வெம்பிய; வேட்கை - பற்றுள்ளம்.

மாலையா ? எமனா ?

185 *கயங்கள் என்னும் கனல்தோய்ந்து
கடிநாள் மலரின் விடம்பூசி,
இயங்கு தென்றல் மன்மதவேள்
எய்த புண்ணின் இடைநுழைய,
உயங்கும் உணர்வும் நன்னலமும்
உருகிச் சோர்வாள் உயிர்உண்ண
வயங்கும் மாலை வரல்நோக்கி,
'இதுவோ கூற்றின் வடிவு'என்றாள். ௩௧

குளங்கள் எனப்படுகிற நெருப்பிலே மூழ்கி, மணமுள்ள புதுப்பூக்களிலிருந்து மகரந்தம் என்னும் நஞ்சைப் பூசிக்கொண்டு, சுற்றித் திரிகின்ற தென்றற் காற்றானது, மன்மதன் எய்து துளைத்திருக்கிற புண் வழியே நுழைகிறது. அதனால் வாடுகிறாள் ; தன் உணர்வும் நல்ல எழிலும் உருகிச் சோர்ந்து போகிறாள். அத்தகைய சீதையின் (மீதியிருக்கிற) உயிரையும் உண்ணும் பொருட்டு வந்து தோன்றுகிற மாலைப் பொழுதைக் கண்டு 'இதுதானோ எமனுருவம் ?' என்று (சீதை) கூறினாள்.

(வி - ம்) தென்றற்காற்று இயற்கையில் குளிர்ச்சியும், இனிமையுமானது. இப்பொழுது அது வெம்மையாக இருக்கிறது. அதே தென்றல் நீரில் படிந்து பூக்களில் புரண்டு தான் இப்பொழுதும் வருகிறது. ஆனால் நெருப்புப்போல உடம்பைப் பற்றிக் கொளுத்துகிறது. ஆகையால் குளத்து நீர் நெருப்பாகி விட்டது போலும், பூக்களெல்லாம் நஞ்சாகி விட்டன போலும் என்று தோன்றுகிறது. பிரிந்து வருந்துவோருக்குப் பகல் நேரம் ஒருவாறு கழிந்து போகும். மற்றெல்லா மனிதரும் விலங்கும் பறவையும் தொழிற்பட்டுக்

185. கயங்கள்-குளங்கள்; கடி-மணம்; வயங்கும்-விளங்குகிற.

கொண்டிருத்தலாலும் பலவற்றையும் பார்க்க வெளிச்சம் இருத்தலாலும் அவைகளில் மனம் சிறிது பற்றித் துன்ப உணர்ச்சி குறையக்கூடும். இரவு வந்தால் எண்ணமெல்லாம் பிரிந்த பொருளிலேயே செல்லுமாதலால் இரவில்தான் புலப்பம் அதிகப்படுகிறது. எனவே மாலை நேரம் முதற்படி. 'காலை அரும்பிப் பகலெல்லாம் போதாகி, மாலை மலரும்இந் நோய்' (குறள் - 1227).

மணிவிளக்கு அமைத்தல்

186 ஆண்டங் கனையாள் இனையநினைந்து
அழுங்கும் வேலை அகல்வானம்
தீண்ட நிமிர்ந்த பெருங்கோயில்
சீத மணியின் வேதிகைவாய்
நீண்ட சோதி நெய்விளக்கம்
வெய்ய என்றங்கு அவைநீக்கித்
தூண்டல் செய்யா மணிவிளக்கின்
சுடரால் இரவைப் பகல்செய்தார். ௬௨

அவ்விடத்தில் சீதை இவ்வாறெல்லாம் எண்ணித் துன்பப்படுகிறபொழுது, விரிந்த வானத்தைப் பொருந்தி உயர்ந்த பெரிய கன்னி மாடத்தின் குளிர்ந்த அழகிய மேடையில், மிகுந்த ஒளி செய்கிற எண்ணெய் விளக்குகள் வெப்பந்தருமென்று கருதி அவ்விடத்தில், அவற்றை ஏற்றாமல், தூண்ட வேண்டிய தேவையில்லாத இரத்தின விளக்கின் ஒளியினாலே இருட்டை நீக்கி வெளிச்சத்தை உண்டாக்கினர்.

(வி - ம்) குளிர்ந்த மேடையில் படுக்க வைத்தார்கள். நோய்ப்பட்டவர்க்கு ஒளியுள்ள விளக்குப் பெருந் துன்ப

186. அங்கனையாள் - பெண் ; அழுங்குதல் - துன்பப்படுதல்; சீதம் - குளிர்ச்சி ; வேதிகை - மேடை.

மாக இருப்பது இயல்பு. எனவே, அதை நீக்கினர். ஒளியுள்ள இரத்தினக் கற்களைப் பதித்த விளக்குகளை வைத்தனர். இரவைப் பகல் செய்தலாவது இருட்டை விலக்கி வெளிச்சத்தை உண்டாக்குதல்தான்.

நிலவின் தோற்றம்

187 வண்ண மாலை கைபரப்பி
உலகை வளைத்த இருளெல்லாம்
உண்ண எண்ணித் தண்மதியத்து
உதயத் தெழுந்த நிலாக்கற்றை
விண்ணும் மண்ணும் திசைஅனைத்தும்
விழுங்கிக் கொண்ட விரிநன்னீர்ப்
பண்ணை வெண்ணைச் சடையன்தன்
புகழ்போல் எங்கும் பரந்துளதால். ருரு

நிறமுள்ள இரவானது தன்கைகளை விரித்து, உலகை வளைத்து அகப்படுத்திக்கொண்ட எல்லா இருட்டையும் உண்டுவிட வேண்டும் என்று நினைத்து, குளிர்ந்த நிலவு தோன்றும்போது எழுந்த கதிர்த்தொகுதி எப்படியுளதென்றால், வானையும் நிலத்தையும், இடையே உள்ள எல்லாத் திசைகளையும் ஒரேயடியாகத் தன்னுள் அடக்கிக்கொண்டிருக்கிற திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப வள்ளலின் புகழ்போல் உலகம் முழுமையும் பரவியிருந்தது. அத்திருவெண்ணெய் நல்லூர் எத்தகையதென்றால், விரிந்து பாய்ந்து பரந்திருக்கிற நல்ல நீர்வளமுள்ள வயல்களை நிறைய உடையது.

(வி – ம்) உலகைச் சூழ்ந்த இருளை ஒழிக்கப் புறப்பட்டாற்போல நிலா தோன்றியது. சடையப்ப வள்ளலின்

---

187. வண்ணம் - நிறம். (இங்கே கருநிறம்) ; மாலை - இராப்பொழுது; 'மாலையும் படா விழி' (தக்கயாகப் பரணி 155).

புகழ் எப்படி உலகில் தோன்றி வறுமையும், அறியாமையு மாகிய இருட்டை விழுங்கிவிட்டுக் குளிர்ந்த இனிய ஒளியைச் செய்கிறதோ அப்படி நிலவு பரவிற்று. இப் பாடற் கருத்து சீதையின் இன்றையத் துயரத்துக்குச் சம் பந்தப்பட்டதன்று. பொதுநிகழ்ச்சி கூற எழுந்ததாகக் கொள்ள வேண்டும்.

விழுங்கிக் கொண்ட புகழ் என்று கூட்ட வேண்டும். "மாலை கை பரப்பி" என்ற பாடத்தை "மாலைக்கை பரப்பி" என்று பாடங்கொண்டு மாலைப் பொழுதாகிய சிவந்த கையை விரித்து என்று பொருள் கண்டனர். இருட்டுக்குச் சிவந்த கை இருத்தலும், பிறகு அது நீங்குத லும் பொருந்தா தென்பதறிக.

உடல் வேம்புதல்

188 *நீக்கம் இன்றி
    நிமிர்ந்த நிலாக்கதிர்
தாக்க வெந்து
    தளர்ந்து சரிந்தனள்;
சேக்கை ஆகி
    மலர்ந்தசெந் தாமரைப்
பூக்கள் பட்டநப்
    பூவையும் பட்டனள், ௬௪

இடைவெளியின்றிப் பரந்திருக்கிற நிலவாகிய கிரணங் கள் உடலில் வந்து தாக்குவதால் கொதிப்படைந்து சோர்ந்து சாய்ந்து விழுந்தாள். படுக்கையாக விரிந்துகிடந்த செந்தா மரைப் பூக்களின் இதழ்கள் வாடிப் போயின. அதைப்

188. நீக்கம் - இடைவெளி ; நிமிர்ந்த - பரந்த ; சேக்கை - படுக்கை.

போலவே நாகணவாய்ப் பறவை போன்ற அந்தச் சீதையும் வாடினாள்.

(வி - ம்) இந்த நிலையில் சீதைக்குக் காய்ச்சலே வந்து விட்டது. பெரும் அதிர்ச்சி, பெரும் ஏக்கம், மிகுந்த அச்சம் முதலியன ஏற்பட்டால் சாதாரணமாகக் காய்ச்சல் வருவது இயல்புதானே.

ஆசை நோய்க்கு மருந்து உண்டா?

189 வாச மென்கல
வைக்களி வாரி மேற்
பூசப் பூசப்
புலர்ந்து புழுங்கினள்;
வீச வீச
வெதும்பினள் மென்முலை;
ஆசை நோய்க்கு
மருந்தும்உண் டாம்கொலோ? ரூ௫

(தோழியர்) மணமுள்ள கலவைக் குழம்பை அள்ளி அள்ளிச் சீதையின் உடலின்மேற் பூசுகின்றனர். பூசப்பூச மேலும் புழுங்கித் தவித்தாள். (விசிறி கொண்டு) வீச வீச வெதும்பினாள் மெல்லிய கொங்கையையுடைய சீதை. காம நோய்க்கு (வேறு) மருந்தும் உண்டாவதுண்டோ?

(வி - ம்) காய்ச்சல் தோன்றி விட்டது, மயக்கம் வருகிறது, வியர்க்கிறது. உடம்பைப் புரட்டுகிறது, பேச முடியவில்லை. உடல் வெளுத்துப் போய்விட்டது, உணவு செல்ல வில்லை, உறக்கம் கொள்ள வில்லை. இவற்றைக் கண்டு எத்துணையோ பரிகாரங்களை யெல்லாம் செய்து பார்க்

189. கலவைக்களி - பல பொருள்களைக் கொண்டு கலந்த குழம்பு.

கின்றனர்; விசிறியால் வீசுகின்றனர்; மலரையும், தளிரையும் படுக்கையில் பரப்புகின்றனர்; பன்னீரையும் தெளிக்கின்றனர்; நெற்றியிலும் கை கால்களிலும் பற்றுப் போடுகின்றனர். அதுதான் 'கலவைக்களி' என்று இங்கே கூறப்படுகிறது. அதுவும் பொரிந்து போகிறது; பலனளிக்கவில்லை. கவி இங்கே மருத்துவம் செய்பவர்களைக் கேலி செய்வதுபோல "ஆசை நோய்க்கு மருந்தும் உண்டாங்கொலோ" என்று கூறுகின்றார். இலையும், தழையும், கிழங்கும், வேரும் கலந்த மருந்துபோட்டுக் குணப்படுத்த முடியாது. "பிணிக்கு மருந்து பிற, மன் அணியிழை தன்னோய்க்குத் தானே மருந்து"—(குறள் 1102) இங்கே நோய் பெண்ணின்மேல் நின்றது.

இராமன் நிலை கூறத் தொடங்குதல்

190 கன்னி நன்மனை
யிற்கமழ் சேக்கையுள்
அன்னம் இன்னணம்
ஆயினள்; ஆயவள்
மின்னின் மின்னிய
மேனிகண் டான்எனச்
சொன்ன அண்ணலுக்கு
உற்றது சொல்லுவாம். ௯௬

சிறந்த கன்னிமாடத்தில் மணமிக்க மலர்ப் படுக்கையிலுள் அன்னப் பறவையைப் போன்ற சீதை இப்படிக் கிடந்தனள். மின்னலைப் போலத் தோன்றி மறைந்த அவளுடைய மேனியைக் கண்டான் என்று சொன்னோமல்லவா?

190. சேக்கை - படுக்கை; அன்னம் - அன்னம் போன்ற சீதை.

அந்த அண்ணலாகிய இராமனுக்கு நேர்ந்த நிலையைக் கூறுகிறோம்.

(வி – ம்) சீதை ஒரு அபாயகரமான நிலையில் இருக்கிறாள். இந்நிலையில் அவளை விட்டுவிட்டு வேறிடத்திற்குக் கதை சொல்லப் போவதே துன்பமான செயலாகக் கவிக்குத் தோன்றுகிறது போலும். கன்னிமாடம் அதாவது காவலுள்ள மாடத்தில் - நல்ல வீட்டில் - அன்னம் எப்படித் தாமரை மலரினுள் இருக்குமோ அப்படிப் படுக்கையில் கிடந்தாள் என்று கூறப்படுகிறது. படுக்கையில் என்று கூடக் கூறாமல், "படுக்கையுள்" என்று நயம்படக் கூறப் படுகிறது. படுக்கையில் என்றால் ஒருவேளை ஓரம் ஒதுக்கில் படுத்து, மயக்கத்திலும் துயரத்திலும் புரண்டு கீழே விழுந்து விடக் கூடுமோ என்று கருதி, படுக்கையுள் அதாவது நடுப் படுக்கையில் என்று நயம்படச் சொல் மலர்ந்திருக்கிறது. துன்ப மென்பதையே அறியாத குழந்தை, துன்பப்பட்டால் அதை விட்டுத் தாய் பிரிய வேண்டிய - தள்ளமுடியாத சமய மேற்பட்டால் எப்படித் தாய் பிள்ளைக்குக் காவலமைத்து விட்டுச் செல்லுவாளோ அப்படிச் செய்துதான் கவி நம்மை இராமனிடத்துக்கு அழைத்துச் செல்கிறார்.

இராமன் முதலியோர் மாளிகையில் தங்கல்

191 ஏகி மன்னனைக்
கண்டுஎதிர் கொண்டுஅவன்
ஓகை யோடும்
இனிதுகொண் டுய்த்திடப்,
போக பூமியிற்
பொன்நகர் அன்னதோர்
மாக மாடத்து
அனையவர் வைகினர். ௩௭

191. ஓகை-மகிழ்ச்சி ; உய்த்திட-கொண்டுபோய்ச் சேர்க்க; போகபூமி - இன்ப நிலம் ; இந்திர உலகம். நகர் - மாளிகை.

சீதையைப் பார்த்துச் சென்ற இராமனும் மற்ற இருவரும்போய், சனகமன்னனைக் கண்டனர். எதிர்கொண்ட சனகமன்னன் மகிழ்ச்சியோடு வரவேற்று, இந்திரலோகத்திலுள்ள தங்க மாளிகையைப் போன்றதொரு பெரிய மாளிகையில் இனிமையாக அழைத்துச் சென்றுவிட, அவர்கள் அங்கே தங்கியிருந்தார்கள்.

இராமனின் தனிமை

192 முனியும் தம்பியும்
போய்முறை யால்நமக்கு
இனிய பள்ளிகள்
எய்திய பின், இருட்
கனியும் போல்பவன்
கங்குலும் திங்களும்
தனியும் தானும்அத்
தையலும் ஆயினன். ௱அ

முனிவரும் இலக்குவனும்போய் அவர்களுக்கென்று போடப்பட்டிருந்த இனிய படுக்கையில் படுத்துக் கொண்டனர். அப்பால் இருள் பழுத்த மாதிரியான நிறத்தையுடைய இராமன், இருட்டும், நிலாவும், தனிமையும், தானும், அந்தச் சீதையுமாக ஆயினன்.

(வி - ம்) மற்ற இருவரும் உள்ளேபோய்ப் படுத்துக் கொண்டனர். இராமன் மட்டும் வெளித் தாழ்வாரத்தில் படுக்கையைப் போட்டுக்கொண்டான். "இரவி இளங்கரத்தால் அடிவருடி" என்று (201) வருவதால் ஒரு ஓரத்தில் படுத்

192. கங்குல் - இரவு.

திருந்தான் என்று தெரிகிறது. அங்கே இவன் தனியாகத் தான் படுத்திருந்தான்; ஆனால் இந்தக் கவலையான நேரத்தில் இதுவரை துணையாக இருந்த இருவரையும் பிரித்து, இவனைத் தனிப்படுத்துவது சரியல்ல என்ற கருத்தினாற்போலும் சிலரை இராமனுக்குத் துணைசேர்த்து வைக்கிறார் கவி. இராமனுக்குத் துணை எத்தனைபேர்? இரவு ஒன்று; நிலாவொன்று; தனிமை ஒன்று. இந்த மூன்றும் துணையாக நிற்க, இராமனுக்குச் சீதையின் எண்ணம் வளரத் தொடங்கியது. இராமன் சீதையை நேரிற் கண்டபோது இவனோடு இருவர் இருந்தனர். சீதையுடன் பலபேர் இருந்தனர்; அவள் மேலே நின்றாள்; இவன் கீழே நடந்துபோய்க் கொண்டிருந்தான்; இப்பொழுதோ இரவுநேரம்; காதலர் தம் துணையை எதிர்பார்க்கும் முன்பு இரவு நேரத்தைத் தானே எதிர் பார்க்கின்றனர். பகற்பொழுது இன்பத்திற்கு ஒரு சிறிதும் ஏற்றதன்று. இரவே இன்பத்துக் குரிய நேரம். உடலில் இன்ப ஊற்றைத் தோற்றுவிப்பது நிலவின் ஒளியாகும். தனிமைதான் இன்பத்தின் அடிப்படை. "இனிது இனிது ஏகாந்தம் இனிது." முத்தியை நாடுவார்க்கு மட்டும் தனிமை இன்பளிப்ப தல்லாமல், காதலர்க்கும் தனிமைதான் இன்பத்தைத் தரவல்லது. ஆனால் காதலர் இருவரும் தனிப்பட்டுக் கூடுதல் இன்பத்துக் கிடமாகும். இருவரும் வேறாகத் தனிப்படும் பிரிவு துன்பத்துக் கிடமாகுமென்பது அகத்துறைகளாலும் அனுபவத்தாலும் அறியப்படும். இங்கே இராமன் தனியாக இருந்தாலும், சீதையும் தானும், எண்ணத்தில் சேர்ந்து தனிப்பட்டிருப்பதால் இரவு, நிலவு, தனிமை ஆகிய மூன்றும் துணையாக நிற்கின்றன போலும். இம்மூன்றும், பிரிந்தவர்க்குத் துன்பப் பெருக்காகவும், கூடியவர்க்கு இன்பக் கடலாட்டமாகவும் இருப்பனவாம்.

'ஆயினன்' என்ற வினைமுற்றுக்குப் பொருள் உள்ளத்தில் காணமுடிகிறதன்றி உரையில் காண இயலவில்லை. எப்படி முடியும்? உள்ளத்தின் உணர்ச்சிவேகம் தெரிகிறது. உணர்ச்சியைக் காட்டமுடியுமேயன்றி உரைப்பதெங்ஙனம்?

கண்ணிலும் கருத்திலும் சீதைதான்!

193 விண்ணின் நீங்கிய
 மின்உரு இம்முறை
பெண்ணின் நன்னலம்
 பெற்றதுண் டேகொலோ
எண்ணின் ஈதலது
 என்றறி யேன்இரு
கண்ணி னுள்ளும்
 கருத்துளும் காண்பெனல் ரு௬

ஆகாயத்திலிருந்து நீங்கிய மின்னலின் உருவமானது இப்பொழுது பெண்ணுருவம் தாங்கிவந்ததா? இது இன்ன தன்மையுளது, இது இன்னதன்மை அல்லாதது என்று நினைவைக் கொண்டு பகுத்தறிய முடியாதவனாக இருக்கிறேன். அப்படியிருக்கும் என்னுடைய இருகண்களின் உள்ளேயும், மனத்தினுள்ளேயும் (அவ்வுருவத்தை) நான் காண்கின்றேன்.

(வி - ம்) இதுவரை நான் மின்னலைப் பார்த்திருக்கிறேன். அது மின்வெட்டும்; பிறகு மறைந்துபோகும். ஆனால் இந்தத் தடவையும் தோன்றி மறைந்தாலும் அந்த உருவமானது வேறொரு பொருளையும் எண்ணிப் பார்க்க விடாமல் கண்களையும், மனத்தையும் கவர்ந்துகொண்டு விட்டதே! என்று எண்ணுகிறான். மனம் முழுவதும் சீதை

193. நன்னலம் - நல்ல அழகிய உருவம்; எண் - நினைவு.

யின் உருவம் பற்றிப் பரந்து நிற்கிறது. வெளியேயுள்ள வேறுருவம் தெரியமுடியாமல் எல்லாம் சீதை மயமாகத்தான் தெரிகிறது. ஆனால் கவி இராமன் கண்ணிலுள்ள பாவையாட்டமே சீதை மயமாகிவிட்ட தென்கிறார். ‘கண்ணின் உள்ளும்’ என்பது கவனிக்கத் தக்கது. வெளியே உள்ள பொருளைக் காணும் ஆற்றலைக் கண் இப்போது இழந்திருக்கிற தென்பது கருத்து. கண்ணிற்படுகிற வெளியுருவ மெல்லாம் அவள்மயமாகத் தெரிகிற தென்றே கூறுவது மரபு. ‘கோடும் குளமும் குளத்தருகே நிற்கும் குன்றுகளும், காடும் செடியும் அவளாகத் தோன்றும்என் கண்களுக்கே’ (அசதிக் கோவை) இங்கு கண்ணின் உள்ளே சீதையின் உருவம் பதிந்துவிட்டபடியால் வேறு உருவத்தைக் கண் பார்க்க முடியவில்லை எனப்படுகிறது.

இத்தனை வேண்டுமா?

194 வண்ண மேகலைத்
    தேர்ஒன்று, வாள்நெடும்
கண்இ ரண்டு,
    கதிமுலை நாம்இரண்டு,
உள்நி வந்த
    நகையும்என் றுண்டால்
என்னுங் கூற்றினுக்கு
    இத்தனை வேண்டுமோ? ௪௦

அழகான ஒட்டியாணம் அணியப் பெற்றிருக்கிற அல்குலாகிய தேர் ஒன்று; வாள்போல வெட்டுகிற நீண்ட

194. வண்ணம் - அழகு; தேர் - தேரைப்போன்ற இடையின் கீழ்ப்பாகம்; கதி - கதித்தல்: விம்மி ஓங்குதல்.

கண்கள் இரண்டு; வளர்ந்திருக்கிற முலைகள் இரண்டு; வாயினுள்ளே எழுந்த சிரிப்பு என்ற ஒன்றும் உண்டு. என்னைக் கொல்ல வேண்டுமென்று கூற்றுவன் நினைத்தால் இத்தனையா வேண்டும்?

(வி - ம்) என் உயிரை வாங்குவதற்கு இந்த ஆறு பொருள்களில் ஒன்றே போதுமே! என்கிறான்.

மன்மதன் ஆற்றலை வியத்தல்

195 கன்னல் வார்சிலை
கால்வளைத் தேமதன்
பொன்னை முன்னிய
பூங்கணை மாரியால்
என்னை எய்து
தொலைக்கும்என் றால்இனி
வன்மை என்னும்இது
ஆரிடை வைகுமே. சக

மன்மதன் கரும்பினாலாகிய நீண்ட வில்லின் காலை ஊன்றி வளைத்து, இலக்குமி பொருந்தியிருக்கிற பூவாகிய அம்புகளை மழைபோலத் தூவி, என்னை ஈடழிக்கிறான் என்றால், வலிமை என்பது யாரிடத்தில் தங்கியிருக்கப் போகிறது?

(வி - ம்) மிகுந்த வலிமையையும், இரும்பு போலும் மலைபோலும் உள்ள எத்தனை இராக்கதர்களை எளிதாகக் கொன்று தள்ளியிருக்கிறேன்! என்மேல் அம்புக் காயமே பட்டதில்லை. கரும்பிலே வில்! பூவிலே அம்பு! இதென்ன

195. கன்னல் - கரும்பு; மதன் - மன்மதன்; பொன் - இலக்குமி.

கூத்து? உருவமே இல்லாத இவனிடத்தில் நாம் அடிபட்டு விழுவதென்றால் வலிமை என்பதே உலகிலே இல்லாமற் போய்விட்டது போலும் என்று நினைக்கிறான். வலிமைக் குத் தானே மணிமுடி என்று நினைத்திருக்கிறான். அவ் வளவு தன்னம்பிக்கை! ஆசைவயப் பட்டவரின்மேல் மன் மதன் முதலாவதாக எய்யும் மலரம்பு அரவிந்தமாகும். மழை யைப்போல அம்புகளை எய்தான் என்றால் தாமரை மலரம்பு களையே பொழிந்தான் என்பது பொருள். அவனிடமுள்ள அம்பு ஐந்துவகைப்பட்டது. மற்றவற்றை இங்கே எய்ய வில்லை.

வெள்ளை நிற நஞ்சு

196 கொள்ளை கொள்ளக்
கொதித்தெழும் பாற்கடற்
பள்ள வெள்ளம்
எனப்பட ரும்நிலா
உள்ள உள்ள
உயிரைத் துருவிட
வெள்ளை வண்ண
விடமும்உண் டாங்கொலோ. சஉ

உலகத்தையே அழிப்பதற்கு முற்பட்டுக் கோபித்துக் கிளம்புகின்ற ஆழமான பாற்கடலின் வெள்ளம் என்று சொல்லும்படி, உலகம் முழுவதும் நிலவானது பரந்து பெருகு கிறது. (அந்தப் பெண்ணை நான்) நினைக்க நினைக்க உயிரையே

196. கொள்ளை கொள்ளுதல் - அடியோடு அழித்தல்; பள்ளம் - ஆழம்; பாற்கடல் பள்ள வெள்ளம் என்பதை பள்ளப் பாற்கடல் வெள்ளம் என்று மாற்றிக் கொள்ள வேண்டும்; துருவுதல் - துளைத்தல்.

துளக்கும்படி வெள்ளை நிறமுள்ள நஞ்சொன்று படைக்கப் பட்டிருக்கிறது போலும்.

(வி - ம்) நிலவு, நிலம் முழுவதும் நிறைந்து பரவியிருக் கிறது. நிலவைக் கண்டவுடன் உடல் உணர்ச்சி மிகுந்து விட்டது. முன்னம் துயருறுத்துகிற ஆறு பொருள்களும் போதா வென்று இது ஒன்று வந்திருக்கின்றதே என்ற ஏக்கம். நஞ்சு என்பது கருப்பு என்றுதான் அறிந்திருக் கிறோம்; ஆனால் வெள்ளை நிறத்தோடு கூடிய நஞ்சு ஒன்று இருக்கிறது போலும் என்று தோன்றுகிறது. நஞ்சு கொல்லத்தானே செய்யும்? உயிரைப் பாடாகப் படுத்து கிறதற்கு ஏற்பட்டதால்தான் வெண்மையாக இருக்கிறதோ என்று நினைக்கிறான்.

கன்னிப் பெண்தான்

197 ஏகு நல்வழி
அல்வழி என்மனம்
ஆகு மோஇதற்கு
ஆகிய காரணம்
பாகு போல்மொழிப்
பைந்தொடி கன்னியே
ஆகும்; வேறுஇதற்கு
ஐயுற வில்லையே. ௭௱

என்னுடைய மனமானது நேரான வழியிலேதான் செல்லும். அல்லாத வழியிலே செல்லுமா? (இப்பொழுது ஒரு பெண்ணின்பால் மனம் சென்றுவிட்டது.) இப்படி மனம் சென்றதற்குப் பொருந்திய காரணம், கற்கண்டுப்

197. பைந்தொடி - அழகிய வளையலை யணிந்த பெண். (அன்மொழித் தொகை)

பாகுபோன்ற சொல்லையுடைய அந்தப் பெண் கன்னியே ஆவாள் என்பதாகும். இதற்கு ஐயமே இல்லை.

(வி - ம்) சீதை திருமணம் ஆனவளா? ஆகாதவளா? என்ற ஐயம் ஏற்பட்டுவிட்டது இராமனுக்கு. இதுவரை எந்தப் பெண்ணிடத்தும் மனம் செல்லாமல் இவளிடத்தே இப்பொழுது சென்றதால், கட்டாயம் இவள் கன்னியாகத் தான் இருக்க வேண்டும் என்று உறுதிகொள்ளுகிறுன். தன் மனம் தூய்மையானது என்ற நம்பிக்கையில் தலைசிறந்திருந் தான் என்பது விளங்குகிறது. நேர்வழியிலேயே பயின்று வருகிற மனம் தவறவே மாட்டா தென்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு.

சூரிய உதயம்

198 *ததையுமலர்த் தாரண்ணல் இவ்வண்ணம்
மயலுழந்து தளரும் எல்வை,
சிதையுமனத்து இடருடைய செங்கமல
முகமலரச் செய்ய வெய்யோன்
புதையிருளின் எழுகின்ற புகர்முகயா
ஊயினுரிவைப் போர்வை போர்த்த
உதயகிரி எனுங்கடவுள் நுதல்கிழித்த
விழியேபோல் உதயம் செய்தான். ௪௪

நெருங்க வைத்துத் தொடுத்த மாலையை அணிந்துள்ள இராமன், இவ்வாருகத் துயரப்பட்டுத் தளர்ந்தான். அப் பொழுது, நிலைகுலைந்து போய்த் துன்பமடைந்த செந்தாமரை மலர்களின் முகம் மலரும்படி, கதிரவன் தோன்றினுன். அவன் தோன்றியது எப்படியிருந்த தென்றுல், யானைத்

198. ததைதல் - நெருங்குதல் ; எல்வை - பொழுது ; புகர்- புள்ளி ; நுதல் - நெற்றி.

தோலைப் போர்த்திருக்கிற சிவன் நெற்றியிலிருந்து தோன்றின நெருப்புக் கண் தோன்றினாற்போல இருந்தது.

(வி - ம்) கதிரவன் வரும்போது தாமரை மலர் மலரும்; மறையும்போது அது வாடிப்போகும். சீதை நேரில் இருந்தால் இராமன் முகம் மலரும்; பிரிந்தால் வாடும். இன்றிரவில் தாமரை மலர்கள் வாடிப்போயின. கதிரவன் தோன்றுகிறான்; செந்தாமரையின் முகம் மலர்கிறது. (கதிரவன் தோன்றுவதும் தாமரை மலர்வதும் இயற்கையான நிகழ்ச்சிகள்தாம். இவைகளைத்தான் கதையிலும், கதைப் பாத்திரங்களிலும் ஏற்றிக் கூறுவது கவி மரபு) செறிந்த இருட்டில், வானில் விண்மீன்கள் விளங்க, இடையில் இருக்கிற உதயகிரியானது, முகப்புள்ளிகளையுடைய யானைத் தோலைப் போர்த்த சிவனைப் போன்றிருக்கிறது. உதயகிரியின் இடையே கிரணங்களை வீசி எழும் ஞாயிறு சிவபெருமான் நெற்றிக்கண்ணைப்போல ஒளிவீசி எழுகிறது.

போய்கைகளில் தாமரைமலர்கள்

199 பண்டுவரும் குறிபகர்ந்து பாசறையிற்
பொருள்வயினிற் பரிந்து போன
வண்டுதொடர் நறுந்தெரியல் உயிர்அனைய
கொழுநர்வர மணித்தே ரோடும்
கண்டுமனம் களிசிறப்ப ஒளிசிறந்து
மெலிவுஅகலும் கற்பி னார்போல்
புண்டரிக முகம்மலர அகம்மலர்ந்து
பொலிந்தனபூம் பொய்கை எல்லாம். சரு

199. குறி - அடையாளம்; பாசறை - போர் நடக்கும் இடத்திலுள்ள பாடி வீடு; நறு - மணமுள்ள; தெரியல் - மாலை; புண்டரிகம் - தாமரை.

தாம் திரும்பி வருகிற காலத்தைச் சொல்லிவிட்டு முன்னர் போர்க் காரணமாகவும், பொருள் தேடவும் பிரிந்து சென்ற மாலையணிந்த உயிரை யொத்த கணவர் திரும்பி வருகிறார் என்று தெரிந்து, அருகில் வருமுன்பே, தேரொடு கண்டு மனம் மகிழுகிற கற்புடைப் பெண்களைப் போல, கதிரவன் வரப்போகிறா னென்று தடாகங்க ளெல்லாம் தாமரை முகம் மலர உள்ளிடமெல்லாம் மலர்ந்து விளங்கின.

(வி – ம்) அகப்பொருள் முறையில், கணவன்பொருள் தேடும் பொருட்டும், சிலபோது போர்செய்யும் பொருட்டும் மனைவியைப் பிரிந்து செல்வதுண்டு. கார்காலத்தில் திரும்பி வருவான். குறித்த நாளில் வராமல் தாமதப்படுவது முண்டு. அப்படிப்பட்ட காலத்தில் பெண் இருந்திருந்து ஏங்குவாள். கணவன் தேரில் வருவதைக் கண்டால் மனம் மகிழ்வாள். பிரிவினால் ஏற்பட்ட மெலிவு அகலும். உடல்வண்ணம் ஒளிரும். அப்படித் தாமரைக் குளங்களில் முதல்நாள் மலர்ந்திருந்த தாமரைப் பூக்கள் சூரியனைப் பிரிந்தவுடன் வாடிப் போயின. ஒளிமறைந்து இருட்டிப் போய்விட்டது. சூரியன் வருகின்றான் என்றறிந்ததும் ஒரே கொண்டாட்டமாயிற்று.

சூரியனின் நடனம்

200 என்னரிய மறையினொடு கின்னரர்கள்
இசைபாட, உலகம் ஏத்த,
விண்ணவரும் முனிவரரும் வேதியரும்
கரங்குவிப்ப, வேலை என்னும்

---

200. கின்னரர் - யாழில்வல்ல ஒருவகைத் தேவ சாதியார் ; மண்ணும் - பசை பூசிய ; மணி - அழகிய ; முழவு - மத்தளம் ; அரங்கு - நடனமாடுகின்ற மேடை ; வாள் இரவி - ஒளிபொருந்திய

மன்னும்மணி முழவதிர வான்அரங்கின்
நடம்புரிவாள் இரவி யான
கண்ணுதல்வா னவன்கனகச் சடைவிரிந்தால்
எனவிரிந்த கதிர்கள் எல்லாம். உ௬

எண்ணி முடியாத வேதங்களோடு கின்னரர் இசையினை முழக்கவும், உலகமெல்லாம் துதிக்கவும், தேவர்களும், முனிவர்களும், வேதமறிந்தவர்களும் கைகுவித்து வணங்கவும், கடல், மத்தளம்போல் முழங்கவும், வானமாகிய நாட்டிய மேடையில் நடம்புரிகின்ற சூரியன் என்று சொல்லப்படுகின்ற சிவபெருமானுடைய தங்க நிறமான சடையானது விரிந்தாற்போலக் கிரணங்கள் விரிந்தன.

(வி – ம்) முதல் மூன்று அடிகளும் சூரியனுக்கும் சிவபெருமானுக்கும் சிலேடை. வேதியர் கரங்குவித்தலாவது சூரிய உதயத்துக்கு முன்பு சந்தி செய்தல். 'காணுமற் கோணுமற் கண்டு கொடு' என்பது விதி. சந்தி செய்பவர் காலையில் சூரியனைக் காண்பதற்கு முன்பும், பகலில் சரியாக சூரியன் உச்சியிலிருக்கிறபோதும், மாலையில் சூரியன் மறைவதற்கு முன்பும் செய்தல் மரபு.

துயில் நீங்கல்

201 கொல்ஆழி நீத்தங்கோர் குனிவயிரச்
சிலைநடக்கை கொண்ட கொண்டல்
எல்ஆழித் தேர்இரவி இளங்கரத்தால்
அடிவருடி அனந்தல் தீர்ப்ப,

சூரியன் ; கண் நுதல் - நுதற்கண் : நெற்றிக்கண். கதிர்கள் - கிரணங்கள்.

201. ஆழி - சக்கரம் ; வயிரச்சிலை - உறுதியானவில் ; எல் - ஒளி ; ஆழி - உருளை ; அனந்தல் - தூக்கம் ; அல்-இருட்டு

அல்ஆழிக் கரைகண்டான் ஆயிரவாய்
மணிவிளக்கம் அழலும் சேக்கைத்
தொல்ஆழித் துயிலாதே துயர்ஆழி
இடைக்கிடந்து துயில்கின் ருனே. ௬௭

கொல்லுதலைச் செய்கின்ற சக்கராயுதத்தைப் போட்டு விட்டு, வளைந்த உறுதியான வில்லைக் கையிலே எடுத்துக் கொண்டு வந்த மேகத்தைப் போன்ற இராமனை ஒளிபொருந் திய உருளையையுடைய தேரில்வரும் சூரியனானவன் தன் மெதுவான கிரணங்களாகிய கைகளினால் காலைத் தடவி எழுப்பினன். அப்படி எழுப்பியவுடனே, இராமன் விடிந்து போய் விட்டதை உணர்ந்தான். (அவன் யார்?) வந்து வாய்த்த ஆயிரம் நாகரத்தினங்களாகிய தூண்டா மணி விளக்குகள் ஒளிசெய்கிற ஆதிசேடனாகிய படுக்கையில், என்றுமுள்ள திருப்பாற் கடலில் துயில் கொள்ளாமல், இந்தக் காதல் துயரமாகிய ஆழமான அகன்ற கடலில் விடிந்தது தெரியாமல் கிடந்து துயில்கின்றவனாகிய இராமன்.

(வி - ம்) இரவெல்லாம் எண்ணி எண்ணித் துன் பப்பட்டு உறக்கம் வராமல் கிடந்தான். இரவின் கடைசிப் பகுதியில் அயர்ந்து தூங்கியிருக்கிறான். இதுவரை இல்லாத பழக்கமாக எழுப்பவேண்டியதாகிவிட்டது. முனி வரும் இலக்குவனும் இராமனை எழுப்ப முற்படவில்லை. கதி ரவன் காலைத் தடவி எழுப்பிவிட வேண்டியதாயிற்று. இரா மன் வெளித்தாழ்வாரத்திலோ அல்லது கீழ்ப்புறத்திலுள்ள

வாய் - வாய்க்கப்பெற்ற ; மணிவிளக்கம் - தூண்டாமணி விளக்கு; அழலும் - பிரகாசிக்கின்ற ; தொல் - பழமையான ; ஆழி நெடுங் கடல் - ஆழமுள்ள விரிந்த கடல்.

சன்னல் ஓரமாகவோ படுத்திருந்தான் என்று கொள்ள வேண்டும்.

சனகனுடை வேள்விச்சாலை சார்தல்

202 ஊழிபெயர்ந் தெனக்கங்குல் ஒருவண்ணம்
புடைபெயர உறக்கம் நீத்த
சூழியா னையின்எழுந்து, தொல்நியமத்
துறைமுடித்து, சுருதி அன்ன
வாழிமா தவர்ப்பணிந்து, மனக்கினிய
தம்பியொடும் வரம்பின் மாலை
தாழுமா மணிமௌலித் தார்ச்சனகன்
பெருவேள்விச் சாலை சார்ந்தான். சஅ

கற்பகாலம் போல இருந்த இருட்டானது ஒருவகையாக விலகிற்று. உறங்கி விழித்த யானையைப்போல எழுந்து காலைக் கடன்களை முடித்தான். வேதமென்று சொல்லக் கூடிய கோசிகமுனிவரை வணங்கி, மனமொத்த தம்பி இலக்குவனோடும் முனிவரோடும் எண்ணிக்கை யில்லாத பல வகை இரத்தினச் சரங்கள் தொங்கவிடப்பட்டு மணிகள் பதிக்கப்பட்ட முடியையும் மாலைகளையும் அணிந்துள்ள மன்னனின் பெரிய வேள்விச்சாலையை அடைந்தான்.

---

202. ஊழி - கற்பகாலம்; கங்குல் - இருட்டு; புடைபெயர - இடம் விட்டு விலக; சூழி - யானையின் முகத்தில் அணியும் துணி (முகபடாம்); சுருதி - வேதம்; மாலை - முத்து முதலிய இரத்தினங்களாலாகிய சரங்கள்: முடியில் தொங்கவிடப்படுவன.

சனகன் வீற்றிருத்தல்

203 முடிச்சனகர் பெருமானும் முறையாலே
பெருவேள்வி முற்றி, சுற்றும்
இடிக்குரலின் முரசுஇயம்ப இந்திரன்போற்
சந்திரன்தோய் கோயில் எய்தி,
எடுத்தமணி மண்டபத்துள் எண்தவத்து
முனிவரொடும் இருந்தான் பைந்தார்
வடித்தகுனி வரிசிலைக்கை மைந்தனும்தம்
பியும்மருங்கின் இருப்ப மாதோ. சகூ

முடிதாங்கிய சனககுலத் தலைவனாகிய சனக மன்னன் குறித்தபடி வேள்வியை முடித்துவிட்டு, இடியோசைபோல முரசு முழங்க வானத்தை அளாவிய அரண்மனையை அடைந்து, உயர்ந்த கொலுமண்டபத்தில், கோசிகமுனிவரும் இராமரும், இலக்குவனும் பக்கத்தில் வீற்றிருக்க இந்திரன் போல வீற்றிருந்தான்.

இராம இலக்குமணர்களை யாவர் எனத்தெரிவித்தல்

204 இருந்தகுலக் குமரர்தமை இருகண்ணும்
முகந்துஅழகு பருக நோக்கி,
அருந்தவனை அடிவணங்கி, 'யாரை இவர்
உரைத்திடுமின் அடிகள்' என்ன,

---

203. முற்றி - முடித்து ; சுற்றும் - எல்லாப் பக்கத்தும் ; கோயில் - அரண்மனை; எண்தவத்து - முதலில் வைத்து எண்ணத் தக்க தவங்களைச் செய்துள்ள ; பைந்தார் - அழகிய மாலை(யை யணிந்த); வடித்த - உயர்ந்த ; குனிசிலை - வளைந்த வில்.

204. யாரை இவர்-இவர்கள் யாவர் ; அடிகள்-சுவாமிகளே; விருந்தினர் - புதியவர் ; காணிய - காணும் பொருட்டு; தகைமை-தகுதி.

விருந்தினர்கள் ; நின்னுடைய வேள்விகா
ணியவந்தார் ; வில்லும் காண்பார் ;
பெருந்தகைமைத் தயரதன்தன் புதல்வர்'என
அவர்தகைமை பேசல் உற்ருன். ௫0

பக்கத்திலிருக்கின்ற உயர்ந்த பரம்பரையில் வந்த இளை ஞர்களைத் தன் இரு கண்களும் அழகை அள்ளிப் பருகும் படி பார்த்து, கோசிகமுனிவரைவணங்கி, இவர்கள் 'யாவர் எனத் தெரிவிக்கவேண்டும் முனிவரே!' என்று கேட்க, முனிவர் 'புதிதாக இங்கு வந்துள்ள இவர்கள் நீ செய்த வேள்வியைப் பார்க்க வந்தார்கள். வில்லின் வலிமையை யும் பார்ப்பார்கள். பெருந்தன்மையுள்ள தயரதன் மக்கள்' என்று கூறிவிட்டு, அவர்களுடைய தகுதியை விரித்துச் சொல்ல முற்பட்டார்.

(வி – ம்) பக்கத்திலிருந்த பிள்ளைகளை, சனகமன்ன னின் கண்கள் தாமாகவே பார்த்து, கரையற்ற அந்த அழ கில் ஈடுபட்டு முழுகிப்போயின என்ற குறிப்பை "இரு கண்ணும் முகந்து அழகு பருக" என்று கண்ணின் வினை யாகக் கூறப்பட்டிருப்பதைக் கொண்டு அறியலாம். சன கன் கண்ணுக்குப் பின்னுலே இருந்து நோக்குகிருன். வந்த காரியம் வேறேயானுலும் உனக்குத் தீராத வேதனையைத் தருகின்ற வில் இருக்கின்றதே அதையும் ஒருகை பார்ப்பார் கள் என்ற குறிப்பை 'வில்லும்' என்ற உம்மையால் அழுத் தப்படுத்துகிருர் முனிவர். முனிவர் வில்லை வளைக்கவே இங்கு இராமனை அழைத்துவந்திருக்கிருர் என்பது வில்லின் பேச்சை அவர் வலிய இழுப்பதிலிருந்து விளங்குகிறது.

—

10. குலமுறை கிளத்து படலம்

[இராமனின் குலப்பெருமையைக் கூறும் படலம். குலம் — பரம்பரை, முறை - பெருமை, கிளத்தல்-கூறுதல்.]

மனுவும் பிருதுவும்

205 *ஆதித்தன் குலமுதல்வன்
மனுவினையார் அறியாதார்?
பேதித்த உயிர்அனைத்தும்
பெரும்பசியால் வருந்தாமல்,
சோதித்தன் வரிசிலையால்
நிலமடந்தை முலைசுரப்ப,
சாதித்த பெருந்தகையும்
இவர் குலத்தோர் தராபதிகாண் ௬

ஆதித்தன் என்ற சோழ மன்னனுடைய குலத்துக்கு முதல்வனான மனு என்ற அரசனை அறியாதவர் யாவரேனும் உண்டோ? பல்வேறு வகைப்பட்ட உயிர்த்தொகை அனைத்தும் மிகுந்த பசித்துன்பத்தால் வருந்தாமல் ஒளி பொருந்திய தன் வில்லினால் நிலமடந்தையின் முலைப்பாலைப் போன்ற வளங்கள் பெருகும்படி செய்த பெருந்தகையான பிருது என்னும் அரசனும் இவர்கள் குலத்திற் பிறந்த ஒரு மன்னன் ஆவான்.

(வி - ம்) ஆதித்தன் என்ற சோழ மன்னன் சகம் 796 முதல் 816 வரை வாழ்ந்தவன். இவனுடைய காலத்தில், கம்பர் நூல் அரங்கேற்றப் பட்டது என்று கூறப்படு

---

205. பேதித்த - வேறுபட்ட; முலைசுரப்ப - முலையிலிருந்து பால் சுரப்பதைப்போல; தராபதி - அரசன்.

கிறது. தன்னை ஆதரித்த அரசனை இங்கே குறிப்பிட்டார் என்று கருதலாம். வேறு காரணங்களால் இது சரி அன்று என்பாரும் உளர். 'ஆதித்தன் குலமுதல்வன் மனு' என்பதற்குச் 'சூரிய குலத்துக்கு முதல்வனான மனு' என்று பொருள் கொள்வர். பிருது என்ற அரசன் தன் ஆட்சியில் மேடும் காடுமாக இருந்த நிலத்தைப் பண்படுத்திப் பயிர் உண்டாகச் செய்து உயிர்களைக் காப்பாற்றினான். ஆதலால் தான் இந்த உலகத்துக்கே பிருதுவி என்ற பெயர் வந்தது என்பர்.

இட்சுவாகு

206 பிணிஅரங்க, வினைஅகல,
பெருங்காலம் தவம்பேணி,
மணிஅரங்கு நெடுமுடியாய்!
மலர்அயனே வழிபட்ட
பணிஅரங்கப் பெரும்பாயற்
பரஞ்சுடரை யாம்காண,
அணிஅரங்கம் தந்தானை
அறியாதார் அறியாதார். உ

மாணிக்கம் பதிக்கப்பட்ட நீண்ட முடியை உடைய சனக மன்னனே! கேள், உயிருக்கு விடுதலை இல்லாமற் செய்கின்ற கட்டு அழியவும், அதனால் முன் ஏற்பட்ட

---

206. பிணி-கட்டு ; அரங்க - அழிய ; வினை - நல்வினையும் தீவினையும் ; அரங்கு - அழுத்திப் பதித்த ; பணி அரங்கப் பெருப்பாயல் - பணிபெரும் அரங்கப்பாயல் என மாற்றிக் கொள்க ; பணி - பாம்பு ; ஆதிசேடன் ; அரங்கம் - மேடை போன்ற ; பரஞ்சுடர் - மேலான ஒளி : தெய்வஒளி : கடவுள் ; அரங்கம் - ஆற்றின் நடுவில் உள்ள திட்டு : திருவரங்கம் என்ற ஊர்.

வினைகள் நீங்கவும் கருதி, திருமாலின் விக்கிரகத்தை மலரில் இருக்கும் பிரமதேவனே வைத்து வழிபட்டான். அப்படிப் பட்ட, பாம்பைப் பெரிய படுக்கையாகக் கொண்டிருக்கும் திருமாலை நாமெல்லாம் கண்ணாலே காணும்படி, அழகிய திருவரங்கத்திலே எழுந்தருளும்படி செய்தவனாகிய இட்சுவாகு மன்னனை அறியாதவர்கள் ஒன்றையும் அறியாதவர்களே ஆவர்.

(வி – ம்) பிரமதேவன் கடவுள் அல்லன். படைக்கும் தொழிலைச் செய்பவன். அவனையும் கருமம் பிடித்துக் கொண்டது. அந்தக் கருமம் தொலைவதற்காக, திருமால் உருவம் செய்துவைத்து வணங்கி வந்தான். இதனை அறிந்த இட்சுவாகு மன்னன், பிரமனிடம் சென்று அந்த விக்கிரகத்தைப் பெற்றுவந்து திருவரங்கத்தில் எழுந்தருளுவித்ததாகக் கூறப்படும். இட்சுவாகுவின் செயலை அறிவுடைய யாவரும் அறிவார்கள். திருவரங்கத்தை அறியாதவர் இந்நாட்டில் இருந்தால் அவர் வேறொன்றையும் அறியாதவர்தானே! என்பது கருத்து.

பறவைக்கு உயிர்கொடுத்தவன்

207 இன்னுயிர்க்கும் இன்உயிராய்
இருநிலங்காத் தார்என்று
பொன்னுயிர்க்கும் கழலவரை
யாம்போலும் புகழ்கிற்பாம்;
மின்னுயிர்க்கும் நெடுவேலாய்!
இவர்குலத்தோன் மென்பறவை
மன்னுயிர்க்கு நன்னுயிரை
மாறாக வழங்கினனால். ௩

207. இன்உயிர் - இனிமையமான உயிர்; இரு - பெரிய; பொன் உயிர்க்கும் - பொன்னின் ஒளி வீசும்; மின்

உலகிலுள்ள இனிய உயிர்கட்கு இனிய உயிர் போல இருந்து (இந்தப்) பெரிய உலகத்தை (அரசுபுரிந்து) காப்பாற்றினார்கள் என்று சொல்லி, பொற் கழலணிந்தவர் களை (சூரிய குலத்து அரசர்களை) நாமாபுகழ வல்லவர்கள் ? மின்னலின் ஒளிவீசும் நீண்ட வேலினை உடையவனே ! இவர் குலத்திலே பிறந்த ஒருவன் எளிய பறவையின் உயி ரைக் காப்பாற்றும் பொருட்டுத் தன் உயிரையே வழங்கி யிருக்கிறான்.

(வி – ம்) முன் உலக மக்களாகிய உயிருக்கு மன் னன் உடலாக இருக்கிறான் என்று கூறப்பட்டது. இங்கே மக்களாகிய உயிருக்கு உயிராக மன்னன் இருக்கிறான் என்று கூறப்படுகிறது; அதற்கு இது மாறுபட்ட கருத் தன்று. ஏன்? அது கவிக்கூற்று. இது கோசிக முனிவர் கூற்று. உடலிலிருக்கிற உயிருக்கு முடிவுகாலம் வரும் போது அந்த உயிர் நிலைக்கும் பொருட்டுத் தன் உயிரை நல்குகிறான் மன்னன் என்ற பொருளில் இங்கே குறிப் பிடப் படுகிறது. பறவையின் உயிரைக் காக்கத் தன் உயிரை வழங்கியவன் சிபிச் சக்ரவர்த்தி. இவன் சோழர் குலத்தவன். பறவையின் உயிரைக் காக்கத் தன் உயிரைக் கொடுத்த மன்னனின் நாட்டிலிருந்து இங்கே வந்து, குற்ற மற்ற கணவனைப் பறிகொடுத்தவள் நான் என்று கண் ணகி பாண்டியனிடம் கூறுகிறாள். 'எள்ளறு சிறப்பின் இமையவர் வியப்பப், புள்உறு புன்கண் தீர்த்தோன்' (சிலப்பதி – வழக்குரை–51) என வருதல் காண்க.

உயிர்க்கும் - மின்னலின் ஒளி வீசும் ; மென்பறவை - அற்பமான பறவை ; மன் உயிர் - நிலை பெற்ற உயிர் ; (உயிர் அழியாத பொருள்.)

கங்கையைக் கொணர்ந்தோன்

208 தூ நின்ற சுடர்வேலாய் !
அனந்தனுக்கும் சொலற்கரிதேல்
யானின்று புகழ்ந்துரைத்தற்கு
எளிதோ ? ஏ டவிழ்கொன்றைப்
பூ நின்ற மவுலியையும்
புக்களைந்த புனற்கங்கை
வானின்று கொணர்ந்தானும்
இவர்குலத்தோர் மன்னவன்காண். ௬

நிணம் பொருந்திய, ஒளியுள்ள வேலாயுதத்தை உடையவனே ! ஆதிசேடனுக்கும் சொல்லமுடியாதென்றால் நான் இப்பொழுது புகழ்ந்து சொல்வ தென்பது நடக்கும் காரியமல்ல. இதழ் மலர்ந்த கொன்றைப் பூ விளங்குகிற சிவ பெருமானின் சடைமுடியில் புகுந்து ஒரு துழாவு துழாவிய நீர்நிறைந்த கங்கையாற்றை வானத்திலிருந்து நிலத்துக்குக் கொண்டு வந்தவனும் இவர் குலத்திலுதித்த மன்னன்தான்.

(வி – ம்) ஆதிசேடனுக்குத் தலை ஆயிரம். பாம்பின் வாய் ஒன்றுக்கு நா இரண்டு. எனவே, இரண்டாயிரம் நாக்குகளைக் கொண்டவன் ஆதிசேடன். பாம்புருவுடைய ஆதிசேடன் மனிதப் பண்பிலேயே நோக்கப்படுவதால், இரண்டாயிரம் நாவினாலும் பேசக் கூடும் என்பது கருத்து. சூரிய குலத்தாரின் புகழ் இரண்டாயிரம் நாவுடையோனால் பல நாட்கள் சொல்லிக் கொண்டிருந்தாலும் முடிவுக்கு வராது. அதனை ஒரு நாவுடைய யான் இன்றே சொல்லி முடிப்ப தென்பது ஆகாத காரியம் என்றபடி. கங்கையைக் கொண்டு வந்த மன்னன் பகீரதன். இவனால் கொண்டு

208. தூ - புலால்: கொழுப்பு ; அனந்தன் - ஆதிசேடன்; ஏடு - இதழ் ; அளைதல் - துழாவுதல்.

வரப்பட்ட படியால் கங்கைக்குப் 'பாகீரதி' என்ற பெயர் வழங்குகிறது.

அயன் என்ற மன்னன்

209 வில்என்னும் நெடுவரையால்
வேந்தென்னும் கடல்கலக்கி,
எல்என்னும் மணிமுறுவல்
இந்துமதி எனும்திருவை
அல்என்னும் கருநிறத்த
அரிஎன்ன அயன்என்பான்
மல்என்னும் திரள்புயத்துக்கு
அணிஎன்ன வைத்தானே. ௫

திருமால் என்று சொல்லத்தக்க அயன் என்ற (இவர் குலத்திற் பிறந்த) அரசனொருவன், வில் என்னும் நீண்ட மலையினாலே, அரசர் கூட்டமாகிய கடலைக் கலக்கி, ஒளி பொருந்திய அழகிய பல் வரிசையையுடைய இந்துமதி என்ற பெண்ணைத் தனது வன்மை வாய்ந்த திரண்ட தோள்களுக்கு, அழகாகும்படி ஏந்திக்கொண்டான்.

(வி – ம்) மந்திரமலையை மத்தாகக் கொண்டு, திருப் பாற்கடலைக் கடைய அதில் தோன்றிய இலக்குமி தேவியைத் திருமால் மார்பில் அழகாகச் சேர்த்துக்கொண்டாற் போல, அயன் என்ற மன்னன், தன்னைக் கடல்போல வந்து எதிர்த்த அரசர் கூட்டத்தைத் தன் வில்லைக்கொண்டு கலங்கி ஓடச்செய்து இந்துமதி என்ற பெண்ணைத் தன் தோளில் தாங்கிச் சென்றான். உயர்ந்த பொருளை உயர்ந்த இடத்தில் வைப்பது மரபு. பெண்குலத்திற் சிறந்த உமை,

209. எல் – ஒளி ; திருவை – இலக்குமி போன்றவளை ; அல் – இருட்டு.

இலக்குமி, கலைமகள் ஆகியோர் இருக்கும் இடங்கள் நோக்கத் தக்கன.

இந்துமதிக்குச் சுயம்வரம் நடந்தது. அவள் இந்த அயன் கழுத்தில் மாலையைப் போட்டாள். அங்கு வந்திருந்த அரசர்கள் பொறாமைப் பட்டுச் சண்டைக்குப் புறப்பட்டார்கள். அவர்களை எதிர்த்துச் சிதற அடித்துவிட்டுப் பெண்ணை அயன் கொண்டுபோய் விட்டான் என்பது வரலாறு.

அயன் மகன் தயரதன்

210 அயன்புதல்வன் தயரதனை
அறியாதார் இல்லை ; அவன்
பயந்தகுலக் குமரர் இவர்
தமைஉள்ள பரிசெல்லாம்
நயந்துரைத்துக் கரையேறல்
நான்முகற்கும் அரிதாம்;பல்
இயம்துவைத்த கடைத்தலையாய்!
யான்அறிந்த படிகேளாய். ௬

அப்படிப்பட்ட அயனுடைய மகனாகிய தயரதனை அறியாதவர் இல்லை. அவன் பெற்ற மேன்மையுள்ள மக்களாகிய இவர்களைப்பற்றிய தன்மைகளை எல்லாம் விரித்துச் சொல்லி முடிப்பதென்பது நான்கு முகங்களையுடைய பிரமனுக்கும் முடியாத காரியமாகும். பலவிதமான இசைக் கருவிகள் முழங்குகின்ற முன் வாயிலையுடைய மன்னனே! நான் அறிந்ததைச் சொல்கின்றேன்; கேட்பாயாக. (என்று கோசிக முனிவர் கூறத்தொடங்கினர்)

---

210. பயந்த - பெற்ற ; பரிசு - தன்மை ; இயம் - இசைக் கருவிகள் ; துவைத்த - ஒலிக்கின்ற ; கடைத்தலை - தலைவாயில்.

தயரதனின் மகவில்லாத் துயர்

211 துனிஇன்றி உயிர்செல்லச்
சுடர்ஆழிப் படைவெய்யோன்
பனிவென்ற படிஎன்னப்,
பகைவென்று படிகாப்போன் ;
தனுஅன்றித் துணைஇல்லான் ;
தருமத்தின் கவசத்தான் ;
மனுஎன்ற நீதியான் ;
மகவின்றி வருந்துவான். எ

திருமாலின் சக்கரப்படையைப் போன்ற ஒளியையுடைய சூரியன், பனியை வெல்லுகின்றது போல, மக்கள் வாழ்வுக்கு எதிர்ப்பான கூட்டத்தைக் கண்டவுடன் அதை விலகி ஓடச் செய்து துன்பமில்லாமல் உயிர்கள் வாழும்படி உலகைக் காப்பாற்றுகின்றவன் ; தனக்குத் தன் வில்லையன்றி வேறு துணையை எதிர்பாராதவன் ; தருமத்தையே தன் உடற்பாதுகாப்பாகக் கொண்டவன் ; மனுவைப்போல நீதி செலுத்துபவன் ; (அப்படிப்பட்ட தயரத மன்னன்) பிள்ளையில்லாமல் வருந்தினான்.

(வி – ம்) சூரியனைக் கண்டதும் பனி தானாக விலகி விடுகிறது. சூரியனை எதிர்க்க வேண்டும் என்று பனியானது படைதிரட்டி எதிரே வந்து போர் முரசடிப்பதில்லை. அப்படியே எவரும் தயரதனோடு சண்டைக்குத் தயாராகவில்லை. பனி எப்படி மக்களுக்குச் சிறிது தொல்லையைக் கொடுக்கிறதோ அப்படி ஏதாவது தொல்லை ஏற்பட்டால், தயரதன் திரும்பிப் பார்த்தவுடனே அந்தத் தொல்லை தானாக இருந்த

211. துனி - துன்பம் ; சுடர் ஆழிப்படை என்பதை ஆழிப்படைச் சுடர் என்று மாற்றிக்கொள்க ; ஆழிப்படை - சக்கரப் படை ; சுடர் - ஒளி ; படி - நிலவுலகம்.

இடம் தெரியாமல் போய்விடும். எந்தக் காரியத்திற்கும் பிறர் துணையை எதிர்பார்ப்பவனல்லன்; தன்னையும், தன் வில்லையும் நம்பினவன்; அசகாயசூரன் என்றபடி. 'தருமத்தின் கவசத்தான்' என்றதால் தன்னை அழிப்பதும் காப்பதும் தருமம் ஒன்றே என்ற நம்பிக்கை கொண்டவன் என்பது பெறப்படுகிறது. மனு என்பவன் மனித சமூகம், தனக்கு உற்ற தருமத்தைப்பற்றி உயர்ந்து வாழுமாறு ஆட்சி புரிந்தவன் ஆவான். மனுதருமம் என்று வழங்கும் நூலை இயற்றியவன் அன்று. மனுநீதி கண்ட சோழன் என்ற மன்னன், தன் மகன் பசுங்கன்று ஒன்றின் மேல் தேரை ஓட்டிச் செல்லக் கன்று இறந்து போயிற்று. கன்றிறக்கக் காரணனாக இருந்த தன் ஒரு மகனைக் கிடத்தித் தேரூர்ந்தான் என்ற வரலாறு காண்க. 'வாயிற் கடைமணி நடுநா நடுங்க, ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சுசுடத் தான்தன், அரும்பெறற் புதல்வனை ஆழியின் மடித்தோன், பெரும் புகழ்ப் புகார் என்பதியே' (சிலப் - வழக்).

கவுசலை இராமனைப் பெறுதல்

212 விரிந்திடுதீ வினைசெய்த
வெவ்வியதீ வினையாலும்,
அருங்கடைஇல் மறைஅறைந்த
அறம்செய்த அறத்தாலும்,
இருங்கடகக் கரதலத்துஇவ்
எழுதரிய திருமேனிக்
கருங்கடலைச் செங்கனிவாய்க்
கவுசலைஎன் பாள்பயந்தாள். அ

212. வெவ்விய - கொடுமையான; கடைஇல் - முடிவில்லாத; அருங்கடையில் - கடையில் அரும் எனமாற்றிக் கொள்க.

உலகில் விரிந்து பரந்திருக்கிறதீவினை செய்த கொடுமையான தீவினையினாலும், எல்லையில்லாத, அருமையான வேதத்தில் சொல்லப்பட்ட அறம் இருக்கிறதே அது செய்த தருமத்தினாலும் செம்மையான கனிந்த சொல் பேசுகிற வாயையுடைய கோசலை பெற்றாள். யாரை? பெரிய தோள் வளையை அணிந்துள்ள கைகளையும், எழுதுதற்கு அருமையான திருமேனியையும் உடைய கருங்கடலான இராமனை.

(வி - ம்) இதுவரை தீவினையானது எதிர்ப்பாரில்லாமல், ஏகபோகமாக விரிந்து பரந்து எக்களித்திருந்தது. அறமோ இருந்த இடம் தெரியாமல் மங்கிக் கிடந்தது. ஆனால், தீவினை தனக்கு முன் செய்து கொண்ட கொடிய தீவினைப் பயனைப் போல இராமன் பிறந்தான். அதுமட்டுமல்ல. அறம், முன் செய்த நல்வினைப் பயனாகவும் இராமன் பிறந்தான். தீ வினையை அழித்து, அறத்தைக் காக்கப் பிறந்தான் என்றபடி. கேடு வந்தால் முன் செய்த தீவினையால் வந்ததென்பதும், நன்மை வந்தால் நல்வினையால் வந்ததென்பதும் உலக வழக்கு.

“ செம்கனி வ்ாய் ” என்பதற்குச் சிவந்த வாய் கனிந்த வாய் என்று கொள்ளல் சிறப்பன்று. கோசலையின் வாய் உண்மைதான் பேசும்; அதையும் கனிவான முறையில் பேசும் என்பதே பொருள். “ இன்சொலால் ஈரம் அளைஇப் படிறிலவாம், செம்பொருள் கண்டார்வாய்ச் சொல் ” (குறள் 91).

‘ கருங்கடல் ’ என்பதிலுள்ள கரு, உலகத் தோற்றத்தின் ஆதிக் கரு—அணு என்று கொள்ளினும் அமையும். கருவாகத் தோன்றி நின்று வளர்ந்து கடலாகப் பெருகி நிற்பது போலக் காரணமான ஆதிதத்துவம் கடலாக—இராமனாகத்—தோற்றமளித்திருக்கிறதெனக் கொள்ளலாம்.

கருவாகவும் கடலாகவும் கருக்கடலாகவும் உள்ளவன் கடவுள் என்க. திருமாலைப் பற்றிப் பரிபாடலில் கூறப் படும் முதற்பாடல் "கருவளர் வானத்து" என்று இக் கருத்துக்கொண்டு தொடங்குதல் காணத்தக்கது. (பரி பாடல் 2) கருங்கடல் மெலித்தல் விகாரம்.

கைகேயி பரதனைப் பெறுதல்

213 தள்அரிய பெருநீதித்
தனிஆறு புகமண்டும்
பள்ளம்எனும் தகையானை,
பரதன்எனும் பெயரானை,
எள்அரிய குணத்தாலும்
எழிலாலும் இவ்விருந்த
வள்ளலையே அனையானைக்,
கேகயர்கோன் மகள்பயந்தாள். க

பெருமை பொருந்திய நீதியாகிய, தடுக்க முடியாத பெரிய ஆறானது, வந்து பாய்ந்து நிறைகின்ற கடல் என்று கருதும்படியான தகுதியை உடையவனும், பரதன் எனும் பெயரை உடையவனும், யாராலும் அலட்சியப்படுத்த முடியாத குணநலத்தினாலும் அழகினாலும் இங்கிருக்கிற இராம னையே ஒத்தவனும் ஆன ஒருவனைக் கேகய நாட்டு மன்னன் மகள் பெற்றாள்.

(வி – ம்) தள்ளரிய பெருநீதித் தனியாறு என்பதை, பெருநீதித் தள்ளரிய தனியாறு என மாற்றிக்கொள்க. தள்ளரிய—தள்ளிச் செல்லும்படி அணையிட்டுத் தடுக்க முடியாத. தனியாறு என்றது துணையாகப் பல சிற்றாறு

---

213. எள்அரிய - அலட்சியப் படுத்த முடியாத ; எழில் - அழகு ; வள்ளல் - இராமன் ; பயந்தாள் - பெற்றாள்.

கள் தன்னுடன் வந்து கலக்கப் பெருகிச் செல்லும் பேராற்றை. பலவகைப்பட்ட நற்பண்புகளும் வந்து பெருகி நிற்கும் நீதிக் கடல்போல விளங்குகிறான் பரதன். நீதி என்பது இடமும் காலமும் நோக்கி எழுதலும் கூடுமென் பர். அப்படிப்பட்ட நீதிகள் சில இடத்தில் கொள்ளப் பட்டும் சில இடத்தில் தள்ளப்பட்டும் நிலைபேறெய்துவ தில்லை. அப்படியல்லாமல் தள்ளமுடியாத—என்றும் நிலைத் துள்ள—நீதியையே "தள்ளரிய பெருநீதி" என்று குறிக்கப் பட்டது. சிலருக்குள்ள குணங்களைச் சிலர் நல்ல குண மென்று பாராட்டுவர்; வேறு சிலர் ஏற்கமாட்டார். பரத னுடைய குணநலன் எவராலும் அலட்சியமாகக் கருதி நீக்கப்படுவதற்கில்லை.

சுமித்திரை இலட்சுமண சத்துருக்கரைப் பெறுதல்

214 அருவலிய திறலினராய்
அறங்கெடுக்கும் விறல்அரக்கர்
வெருவருதின் திறலார்கள்;
வில்ஏந்தும் எழிற்செம்பொன்
பருவரையும் நெடுவெள்ளிப்
பருப்பதமும் போல்வார்கள்;
இருவரையும் இவ்இருவர்க்கு
இளையாளும் ஈன்றெடுத்தாள். ௧௦

பிறரால் வெல்லுதற்கு அரிய வலிமையுடையவர்களும், அறத்துக்கு ஊறுசெயும் வலியவர்களும் ஆன அரக்கர்கள் அச்சப்படக்கூடிய மிக்க வலிமையைப் பெற்றவர்கள்; வில்லைத் தாங்கிய அழகிய பொன்மலையையும் வெள்ளிமலை

214. வெருவருதல் - அஞ்சுதல்; பரு - பருமனான; வரை - மலை; பருப்பதம் - பருத்த இடம் : மலை.

யையும் போன்றவர்கள்; அப்படிப்பட்ட இலக்குவன் சத்துருக்கன் என்ற இருவரையும் இந்தக் கோசலை கைகேயி என்ற இருவர்க்கும் இளையவளான சுமித்திரை பெற்றாள்.

(வி – ம்) இலக்குவன் மஞ்சள் கலந்த நிறமுடையவனென்றும், சத்துருக்கன் வெண்மை கலந்த நிறமுடையவன் என்றும் இராமன் கருநிறமுடையவன் என்றும் தெரிகிறது. "நால்வரினும் கரிய செம்மல்" (57) என்று இராமனைக் குறிப்பதால், பரதன் கருநிறம் உடையனாயினும் இராமனைக் காட்டிலும் சிறிது குறைந்த கருமை உடையான் என்று கருதலாம். கோசலையும் கைகேயியும் அருகிலில்லை என்றாலும் 'இவ்விருவர்க்கு இளையாள்' என்று அண்மையாகச் சுட்டப்பட்டிருப்பது இருவரைப்பற்றிக் கூறியதோடு தொடர்ந்து உரைப்பதனாலாகும்.

நால்வரின் வளர்ச்சி

215 தலைஆன பொருளுணர்வில்
கலைமகட்கும் தலைவராய்ச்,
சிலைஆயும் தனுவேதம்
தெவ்வரைப்போற் பணிசெய்யக்,
கலைஆழிக் கதிர்த்திங்கள்
உதயத்திற் கலித்துஓங்கும்
அலைஆழி எனவளர்ந்தார்
மறைநான்கும் அனையார்கள். கக

தலைமையாகிய பொருள்களின் (உண்மைகளை அறிந்து) உணர்வதில் கலைமகளுக்கும் மேம்பட்டவராய், வில் வித்

215. கலைமகள் - கலையாகிய தெய்வம்; தெவ்வர் - பகைவர்; கலை - சந்திரனுக்கு உரிய பதினாறு கலைகள்; கலை முழுதும் வளர்ந்த திங்கள் - முழுநிலா; உதயம் - தோற்றம்; கலித்தல் - ஒலித்தல்; அலை ஆழி - அலைகளையுடைய கடல்.

தையை ஆராய்ந்து கூறும் தனுவேதமானது (அடிமைப் பட்ட) பகைவரைப்போல் ஏவல் செய்ய, ஒளியைச் செய்கின்ற வட்டமான முழுமதி புறப்படும்போது, ஒலித்துப் பொங்குகிற அலைகடலைப் போல நான்கு வேதங்களை யொத்த நால்வரும் வளர்ந்தார்கள்.

இருவரும் வேள்வி காத்தமை கூறல்

216 ஈங்குஇவரால், என்வேள்விக்கு
இடையூறு கடிதியற்றும்
தீங்குடைய கொடியோரைக்,
கொல்விக்கும் சிந்தையனாய்,
பூங்கழலார்க் கொண்டுபோய்
வனம்புக்கேன் ; புகாமுன்னம்
தாங்கரிய பேராற்றல்
தாடகையே தலைப்பட்டாள். கஉ

நான் செய்கிற வேள்விக்கு விரைந்து இடையூறு செய்கிற தீய கொடியவர்களை, இங்குள்ள இவர்களால் கொல்விக்க நினைத்து, பூப்போன்ற பாதங்களையுடைய இவர்களை அழைத்துக்கொண்டு வனத்தினுள்ளே புகுந்தேன். புகுவதன் முன்பாகவே எவராலும் சமாளிக்க முடியாத பேராற்றலை யுடைய தாடகையே முன்வந்து நின்றாள்.

(வி – ம்) வேள்வியைத் தொடங்கவேண்டியதுதான் தாமதம். அப் பொழுதே வந்து அழித்து விடுவார்கள் என்பது தோன்ற 'கடிதியற்றும் தீங்குடைய கொடியோர்' என்றார். பூப்போன்ற கால்களினால் பரல்பாயும் காட்டில் நடக்கவிட்டு அழைத்துச் சென்றேன். சென்றதும் வேறு எந்த அரக்கரேனும் வரலாகாதா ? கொடிய தாடகையே

---

216. கடிது - விரைந்து.

வந்துவிட்டாள் என்று முனிவர் கூறுவது குழந்தைகளிடத்தில் கொண்டிருந்த அன்பை விளக்குகிறது. இராமன் சிறந்த வன்மையுள்ள வீரன்தான். என்றாலும் அவன் போர்க்களத்தை இன்றுதான் முதன்முறையாகக் காண்கிறான். திடுமென்று தாடகையே வந்ததில் முனிவரின் மனம் பரிதாபப்பட்டுப் போயிருக்கிற தென்பது இங்கே தெரிகிறது.

இராமன் தாடகையின்மீது விடுத்த அம்பு

217 அலைஉருவக் கடல்உருவத்து
ஆண்தகைதன் நீண்டுயர்ந்த
நிலைஉருவப் புயவலியை
நீஉருவ நோக்கையா!
உலைஉருவுஅக் கனல்உமிழ்கண்
தாடகைதன் உரம்உருவி
மலைஉருவி மரம்உருவி
மண்உருவிற்று ஒருவாளி. கரு

அலைகளின் உருவமாகக் காணப்படும் கடலின் தோற்றமென்று சொல்லும்படி வீற்றிருக்கிற ஆணிற் சிறந்த இந்த இராமனுடைய நீண்டு உயர்ந்திருக்கிற நிலைத்த உருவமான தோளின் வலிமையை நான் சொல்ல வேண்டுமா? ஐயா சனகனே! நீயே பார்! கொல்லனுடைய உலையிலிருந்து (துருத்தியை அழுக்கும்போது) நெருப்பானது எப்படிச் சிறி வெளிப்படுமோ அப்படி நெருப்பைக் கக்குகிற கண்களை யுடைய தாடகையின் மார்பைத் துளைத்துக் கொண்டு, பின்னாலிருந்த மலையைத் துளைத்து, அப்பாலிருந்த மரத்தைத் துளைத்து, பிறகு மண்ணையும் துளைத்துக்கொண்டு

217. நிலை உருவம்-நிலைபெற்ற உருவம்; நீ உருவ நோக்கு - நீ ஊடுருவும்படி பார்; உரம் - மார்பு; வாளி - அம்பு.

போய்விட்டது. ஆனால் எய்ததெல்லாம் ஒரே ஒரு அம்பு தான்.

(வி - ம்) தாடகை கண்ணைத் திறந்து பார்க்கும் போது சூரியனிலிருந்து வருகிற கதிர்களைப் போல "குப், குப்" என்று ஒளி வீசுகிறது. அது கொல்லன் உலையில் நெருப்புப் பீறிட்டு அடிப்பதுபோல் இருக்கிறது. உருவமோ மலைமாதிரி இருக்கிறது. அவளைப் பார்க்கவே முடியவில்லை. அவள் மேலே விட்டதெல்லாம் ஒரே ஒரு அம்புதான். அது என்ன போக்குப் போனது தெரியுமா? அவள் நெஞ்சிற்பட்டு முதுகில் உருவியது. தாடகை என்ற மலையைத் துளைத்த பிறகு இன்னொரு மலையை அகம் புற மாகத் துளைத்தது. வரிசையாக நின்ற மரமெல்லாவற்றை யும் துளைத்தது. அப்பால் நிலத்தையும் துளைத்து உள்ளே சென்றது என்று முடிக்கிறார். நீண்டுயர்ந்த தோளை நீயே பார்! எப்படியிருக்கிறது! என்று இராமனின் தோளைப் பார்த்துப் பார்த்து முனிவர் பூரிக்கிறார். சொல்ல என்ன இருக்கிறது ஐயா நீயே பார் என்ற அருமைப்பாடு நோக்கத் தக்கது.

வேள்விமுடித்து மிதிலை வந்தமை கூறுதல்

218 செக்கர்நிறத்து எரிகுஞ்சி
சிரக்குவைகள் பொருப்பென்ன
உக்கனஓர் முடிவில்லை;
ஓர்அம்பி னெடும்அரக்கி
மக்களில்அங்கு ஒருவன்போய்
வான்புக்கான்; மற்றையவன்
புக்கஇடம் அறிந்திலேன்;
போந்தனன்என் வினைமுடித்தே. கசு

---

218. செக்கர் - செவ்வானம்; குஞ்சி - ஆண் தலைமயிர்; பொருப்பு-மலை; உக்கன-சொரிந்தன; வினை-வேள்வியாகிய வினை.

(அவளுக்குப் பிறகு அவளுடைய மக்கள் இருவர் படைகளோடு வந்தனர். இவன் விட்ட அம்புகளால்) செவ்வானத்தின் நிறத்தை யொத்த எரிகிற நெருப்பைப் போன்ற தலைமயிரையுடைய தலைக் குவியல்கள் மலைகளைப் போல உதிர்ந்ததற்கு ஒரு கணக்கேயில்லை. பிறகு ஒரு அம்பை எய்தான்; அதனோடு, தாடகையின் மக்களில் ஒருவன் (சுபாகு) வானுலகம் சென்றான். மற்றொருவன் (மாரீசன்) ஓடிப்போன இடமே தெரியவில்லை. என்னுடைய வேள்வியை முடித்துக்கொண்டு (நலமாக) இங்கே வந்து சேர்ந்தேன்.

தான் கொடுத்த படைக்கலங்கள் இராமனுக்கு ஏவல் செய்யும் தன்மை

219 ஆய்ந்தேற உணர் ஐய !
அயற்கேயும் அறிவரிய
காய்ந்தே இவ் உலகனைத்தும்
கடலோடும் மலையோடும்
தீய்ந்தேறச் சுடுகிற்கும்
படைக்கலங்கள், செய்தவத்தால்
ஈய்ந்தேனும் மனம்உட்க,
இவர்க்கேவல் செய்குனவால். கரு

(இவனுடைய பெருமைகளை) ஆராய்ந்து முழுதும் உணர்வாயாக ஐயனே ! பிரமனுக்கும் அறிவதற்கு முடியாதவை அவை. நான் இவனுக்குக் கொடுத்த படைக்கலங்கள், இவ்வுலகம் முழுவதையும் கடலோடு மலைகளையும் சேர்த்துக் காய்ந்து தீய்ந்து போகும்படி சுட்டுத்தீர்க்கக்

219. ஏற - முடிய ; காய்ந்து - கோபித்து ; செய்தவம் - முன் செய்த தவம் : புண்ணியம் ; உட்க - அஞ்ச : அஞ்சித் திகைக்க.

கூடியவை. முன் செய்த புண்ணியத்தினாலே இவனுக்குக் கொடுக்கும் பேறு கிடைத்தது. அப்படிக் கொடுத்த நானே மனந்திகைக்கும்படி அவை இவனுக்கு ஏவல் செய்கின்றன.

(வி - ம்) சனகன் மெய்ஞ்ஞானி. ஆதலால்தான் அயனுக்கும் அறிய முடியாத பெருமையுள்ள இராமனை நீ உணர்வாயாக என்று குறிப்பிட்டார். படைக்கலங்கள் சிறந்தனவாக இருந்தாலும் அவற்றைப் பயன் படுத்துவோன் தகுதி யற்றிருந்தால் பயனற்றுப்போம். தகுதியற்ற ஆயுதமும் தலைவன் சிறப்பினால் வலிமை பொருந்திப் பயனளிக்கும். தான் கொடுத்த படைக்கலங்கள் எந்த அளவு பயன்படும் என்று எண்ணினரோ அதைவிடப் பன்மடங்கு இராமன் கையாளும் முறையில் சிறப்படைந்ததை முனிவர் கண்டார்; வியப்புற்றார்.

இராமனது சிறப்பு

220 கோதமன்தன் பன்னிக்கு
முன்னைஉருக் கொடுத்ததுஇவன்
போதுவென்ற தெனப்பொலிந்த
பொலன்கழற்கால் பொடிகண்டாய்!
காதல்என்றன் உயிர்மேலும்
இக்கரியோன் பால்உண்டால்;
ஈதிவன்தன் வரலாறும்
புயவலியும் எனஉரைத்தான். கசு

கல்லாகக் கிடந்த, கோதமனுடைய மனைவிக்கு, முன்னிருந்த பெண் உருவைக் கொடுத்தது, தாமரை மலரை விட மென்மையாக விளங்கும் அழகிய வீரக்கழலணிந்த கால்

220. பன்னி - மனைவி; போது - மலரை; வென்றதென- தோல்வியுறச் செய்ததென; பொலன் - பொன்.

களின் தூசிதான் என்று அறிவாயாக! என் உயிரைவிட அதிகமான அன்பு இந்தக் கரிய திருமேனியனை இராமனிடம் எனக்கு உண்டு. இவனுடைய வரலாறும் தோள் வலியும் இதுவாகும் எனவுரைத்தார் கோசிக முனிவர்.

(வி – ம்) ஈது என்பதைத் தனித்தனி கூட்டி, வரலாறு ஈது, புயவலி ஈது என்று கொள்க. முனிவர் என்னுடைய உயிரைக் காட்டிலும் சிறந்தவன் இராமன் என்று மனமாரக் கூறுகிறார். பாலை நிலத்தில் இவனுடைய மெல்லிய கால்கள் வருந்தினதைக் கண்டு, தன்னால் தானே இவன் இப்படி நடக்க நேர்ந்தது என்ற ஆற்றாமையால் பல இடங்களில் இராமனுடைய காலின் மென்மையைக் கூறும் அருமை நோக்கத்தக்கது. இங்கே சனகனிடம் அகலிகைக்கு முன்னைஉரு இராமனால் கிடைத்தது என்று கோசிக முனிவர் கூறும்போது, சதானந்தர் அதனை அறிந்து வியப்புற்றார் என்றோ மகிழ்வுற்றார் என்றோ பாடல்கள் காணப்படவில்லை. சதாநந்தர் அகலிகையின் மகனவர். இங்கே பாடல்கள் அழிந்து போயிருக்குமென்று கருத இடமிருக்கிறது.

———

11. கார்முகப் படலம்

[வில்லைப்பற்றிக் கூறும்படலம். கார்முகம் - வில்]

நாணேற்றினால் துன்பம் தீரும்

221 *மாற்றம்யாது உரைப்பது ?
மாய விற்குநான்
தோற்றவாறு எனமனம்
துளங்கு கின்றதால் ;
' நோற்றனள் நங்கையும்
நொய்தின் ஐயன்வில்
ஏற்றுமேல் இடர்க்கடல்
ஏற்றும் ' என்றனன். க

நான் பேச என்ன இருக்கிறது ? மாயவித்தை செய்கிற இந்த வில்லுக்கு நான் தோற்றது என்ன வியப்பு ! என்று மனம் கலங்குகிறது. எளிதாக இந்த இராமன் வில்லின் நாணினை ஏற்றுவானானால், துன்பக் கடலில் கிடக்கிற என்னைக் கரையேற்றினவனாவான் ; சீதையும் தவம் செய்தவளாவாள் ! என்று சனக மன்னன் கூறினான்.

(வி – ம்) சாதாரணமான வில் என்று கருதித்தான் இதனை வளைக்க வேண்டுமென்று சனகன் திட்டமிட்டான். ஆனால் கிட்ட நெருங்கவே முடியவில்லை. விளங்காத ஒரு வில்லங்கத்தில் மாட்டிக்கொண்டான். இப்பொழுது என்ன செய்கிறதென்றே தெரியவில்லை. வில்லின் விவகாரம் வேண்டாமென்றால் கேலிக்கூத்தாகி விடும். வில்லுப்பந்தயம்

---

221. மாற்றம் - சொல் ; மாயம் - தன்மையை அறிய முடியாத நிலை ; துளங்குதல் - அசைதல் ; நொய்தின் - எளிதாக; வில் ஏற்றுதல் - வில்லில் நாணை ஏற்றுதல்.

* இவ்வடையாளம் பாடலின் சந்தம் மாறுவதைக் குறிக்கும்.

இருக்கிறவரை மாப்பிள்ளை கிடைக்காது. சனகன் நன்றாக அகப்பட்டுக் கொண்டான். ஆனால் குற்றம் தன்னிடம் இருக்க, வில்தான் பெரிய மாயவேலை செய்கிறதென்று கருதுகிறான். எத்தனையோ வில்லை வளைத்துப் பழகுகிற அவனுக்கு இது விளங்காத புதிராகிவிட்டது. அவனுடைய ஆற்றாமையும், பெண்ணின் நிலையை எண்ணி இரங்கும் பரிதாபமும் சேர்ந்து இங்கே வெளிப்படுகின்றன.

வில்லைக் கோணர்க எனல்

222 என்றனன்; ஏன்றுநன்
எதிர்நின் றுரைஅக்
குன்றுறழ் வரிசிலை
கொணர்மின் ஈண்டுஎன,
நன்றெனா வணங்கினர்;
நால்வர் ஓடினர்;
பொன்றினி கார்முகச்
சாலை புக்கனர். உ

என்று சொன்ன சனகன், ஏற்றுக்கொண்டு எதிரே நின்ற ஏவலாளரை நோக்கி, அந்த மலைபோன்ற கட்டமைந்த வில்லை இங்கே கொண்டு வாருங்கள் என்றான். நன்று என்று வணங்கிக்கொண்டே நால்வர் ஓடினர்; பொற் கட்டமைந்த வில் இருக்கிற கூடத்தை அடைந்தனர்.

(வி - ம்) 204-ப் பாடலில், 'வில்லுங் காண்பார்' என்று கூறியதை மனத்திற் கொண்டு, வில்லைக் கொணர்க என்று சனகன் ஏவினான்.

---

222. ஏன்று - (இராமன் வில்லை வளைக்க உடன்பட்டதை) ஏற்றுக்கொண்டு; உறழ் - ஒத்த; கார்முகம் - வில்.

வில்லைக் கொண்டுவருதல்

223 உறுவலி யானையை
ஒத்த மேனியர் ;
செறிமயிர்க் கல்எனத்
திரண்ட தோளினர் ;
அறுபதி னாயிரர்
அளவில் ஆற்றலர் ;
தறிமடுத்து இடைஇடை
தண்டில் தாங்கினர். ருஅ

மிகுந்த வலிமையுள்ள யானையை ஒத்த உடலை யுடைய வரும், கல் என்று சொல்லும்படி திரண்டு, மயிர் அடர்ந் துள்ளதுமான தோளை யுடையவரும், அளவிட்டுக் கூற முடியாத ஆற்றலையுடையவருமான அறுபதினாயிரம் பேர், வில்லைத் தூக்கிக் கொண்டு வந்தனர். (தோள் வலி எடுத்த தால்) இடையிடையே கவையுள்ள தாங்குமரத்தை வில்லின் கீழே கொடுத்துத் தாங்க வேண்டியதாயிற்று.

(வி - ம்) வில் மிகப்பெரிது. வலிமையுடைய பலர் சென்றனர். தூக்கி வந்தனர். மிக்க கனமானதால், தோளிலேயே தாங்கிக் கொண்டுவர முடியவில்லை. இடை யிடையே ஆயக்காலைக் கொடுத்துத் தாங்கித் தோளை ஆற் றிக்கொண்டனர். கோவில்களில் பெரிய வாகனங்களைத் தூக்கி வரும்போது பார்த்தால் இந்நிகழ்ச்சி தெளிவாகும். அறுபதினாயிரம் என்பது மிகப் பலர் என்ற பொருளில் வழங்கப்படும் ஒரு சொல் எனக் கொள்ளல் வேண்டும்.

---

223. தறி - தாங்குமரம் : ஆயக்கால் ; மடுத்து - பொருந் தச் செய்து ; தண்டு - வில்.

இதுவும் அது

224 நெடுநில மகள்முதுகு
ஆற்ற நின்றுயர்
நடநிமிர் வடவரை
நாணும் நாணுற,
இடம்இலை உலகென,
வந்தது எங்கணும்
கடல்புரை திருநகர்
இரைத்துக் காணவே. ௪

நீண்ட நிலமடந்தை தன் முதுகை ஆற்றிக் கொள்ளவும், நிலைபெற்றோங்கிய பெருமை மிகுந்த மேருமலையே வெட்கப் படவும், கடலை யொத்த மிதிலை நகர மக்கள் எல்லா விடங் களிலும் திரண்டு பேரிரைச்சலுடன் காணவும், உலகமே இதற்கு இடம்போதாது போலிருக்கிறதே என்று கண்டவர் சொல்லும்படி (வில்) வந்து சேர்ந்தது.

(வி — ம்) வில் எப்படியும் நிலத்தின் மேலேதான் இருக்கிறது. என்றாலும், இருந்த இடத்தை விட்டுச் சற்றே மாற்றினால் இருந்த இடத்தைப் பொறுத்த மட்டிலும் ஆறு தல் தானே! ஒரு தோளில் பெரிய பொருளைத் தூக்கிச் செல்லும் ஒருவன் அதனைத் தாங்க இயலாதபோது, மற் றொரு தோளுக்கு மாற்றிக்கொண்டால் சிறிது ஆறுதல் ஏற்படத்தானே செய்கிறது? வில் கிளம்பின உடனே சீதைக்குத் திருமணம் வரப்போகிறது என்ற ஒரே ஆர வாரம் மக்களிடையே தோன்றிவிட்டது.

---

224. நிலமகள் - நிலமடந்தை ; வட வரை - இமயமலை ; புரை - போன்ற ; திருநகர் - திருநகரத்து மக்கள் (ஆகுபெயர்).

வில்லைப் பற்றிய மலைப்பு

225 திண்ணெடு மேருவைத்
திரட்டிற் றேஎன்பார்
வண்ணவான் கடல்பண்டு
கடைந்த மத்தென்பார் ;
அண்ணல்வாள் அரவினுக்கு
அரசனோ என்பார் ;
விண்இடு நெடியவில்,
விழ்ந்ததோ என்பார். ரு

உறுதியான நீண்ட மேருமலையைத்தான் உருட்டி அடித்து வில் உருவமாக்கி யிருக்கிறார்களா ? அல்லது அழகிய மேன்மையான பாற்கடலை முன்னாளில் கடைந்த மந்திர மலைதானோ இது ? பெருமை பொருந்திய ஒளியுள்ள பாம்புகளுக்கு அரசனான ஆதிசேடன்தானோ ? நீண்டு காணப் படும் வானவில் வந்து விழுந்ததா ? என்று சொல்லுவார்கள்.

கண்ட மன்னர்களின் நடுக்கம்

226 மொய்த்தனர் இன்னணம்
மொழிய மன்னன்முன்
உய்த்தனர் ; நிலமுதுகு
உளுக்கிக் கீழ்உற
வைத்தனர் ; வாங்குநர்
யாவ ரோஎனக்
கைத்தலம் விதிர்த்தனர்
கண்ட வேந்தரே. சா

225. திண் - உறுதியான ; கடல் கடைந்த மத்து - மந்தர மலை ; அண்ணல் - பெருமை பொருந்திய ; வாள் - ஒளி பொருந்திய ; அரவு - பாம்பு.

226. உய்த்தனர் - சேர்த்தனர் ; உளுக்கி - நெளித்து ; வாங்குநர் - வளைப்பவர் ; விதிர்த்தனர் - உதறினர்.

கூடி மொய்த்துக் கொண்டு தொடர்ந்து வந்த மக்கள் இப்படிப் பலவாறு கூற, சனக மன்னனுக்கு முன்னர் வில்லைக் கொண்டு வந்து சேர்த்தனர். நிலத்தின் மேற்புறம் குழிபறிந்து நெளிந்து போம்படி வைத்தனர். வில்லைக் கண்ட வேந்தர்கள் 'இதை வளைப்பவர் யாவர்' என்று கைகளை உதறினர்கள்.

(வி - ம்) வில் வந்ததும் வளைக்கப் போகிறவர் யாரென்பது மற்ற அரசர்களுக்குத் தெரியவில்லை. எனவே, சனகன் கோசிகனையும் இராம இலக்குவரையும் வரவேற்றுப் பேசிய இடம் வேறு. வில் வந்திருக்கிற இடம் வேறென்று தெரிகிறது. வில்லைப் பார்த்த அரசர்கள் வில விலத்துப் போய்க் கைகளை உதறினர். அச்சம் மிகுதியினால் உண்டாகும் மெய்ப்பாட்டில் கை உதறலும் ஒன்று.

சதாநந்தர் கூறத் தொடங்குதல்

227 போதகம் அனையவன்
பொலிவை நோக்கிஅவ்
வேதனை தருகின்ற
வில்லை நோக்கித், தன்
மாதினை நோக்குவான்
மனத்தை நோக்கிய
கோதமன் காதலன்
கூறல் மேயினன். எ

யானையைப்போல் வீற்றிருக்கிற இராமனின் முகப் பொலிவை நோக்கி, வேதனை தருகிற அந்த வில்லையும் பார்த்து, தன்னுடைய அருமை மகளான சீதையை எண்ணி இருக்கிற சனகன் மனக்கவலையை நினைத்து, கோதம முனிவரின் மகன் (சதானந்த முனிவர்) கூறத் தொடங்கினர்.

227. போதகம் - யானை.

(வி - ம்) இராமனைப் பார்த்தால் கண்கொள்ளாத காட்சியாக இருக்கிறது. வில்லோ துன்ப மயமாகத் தோன்றுகிறது. இந்த வில்லின் தொல்லை ஒழிந்து எப்படிச் சீதை வாழ்வடையப் போகிறாள் என்று நினைக்கும்போது சனகன் மிக்க வேதனை அடைகிறான்.

நிலம் உழப்பட்டது

228 *இரும்புஅனைய கருநெடுங்கோட்டு
இணைஏற்றின் பணைஏற்ற
பெரும்பியலில் பளிக்குநுகம்
பிணைத்ததனோடு அணைந்துசார்க்கும்
வரம்பில்மணிப் பொற்கலப்பை
வயிரத்தின் கொழுமடுத்திட்டு,
உரம்பொருவில் நிலம்வேள்விக்கு
அலகில்பல சால்உழுதேம். அ

இரும்பைப்போல் வலிய கருமையான நீண்ட கொம்பு களையுடைய இரண்டு காளை மாடுகளின், பருத்த பெரிய பிடரியின் மேல், பளிங்கினாலான, நுகத்தடியை வைத்துக் கட்டி, அதனோடு இணைத்திருக்கும், எண்ண முடியாத இரத் தினங்கள் பதித்த பொற்கலப்பைக்கு வயிரத்தால் கொழு அமைத்து, உரம் போடப்பட்ட ஒப்பற்ற நிலத்தில், யாகத் திற்காக எண்ணில்லாத பல சால்கள் உழுதேம்.

(வி - ம்) கலப்பை என்பது பொதுப் பெயராலும் அதில் நுகம், ஏர், மேழி, கலப்பை, கொழு என்ற

228. கோடு - கொம்பு ; பணை - பருமை ; பியல் - பிடரி; கொழு - கலப்பையின் முனையில் தரையைக் கீறும் பொருட்டு இணைக்கப்பட்டுள்ள இரும்புச் சட்டம் ; சால் - வயலின் ஒரு தலைப்பிலிருந்து மறு தலைப்புவரை ஒருமுறை கலப்பை கிளறிச் செல்லும் சுவடு.

பல பகுதிகள் உண்டு. மாட்டின் கழுத்தில் வைப்பது நுகம் அல்லது நுகத்தடி. நுகத்தையும் கலப்பையையும் இணைக்கும் நீண்ட மரம் ஏர் அல்லது ஏர்க்கால். கீழே நிலத்தைக் கீற நிற்பது கலப்பை. அதற்குமேலே கைபிடித்துச் செலுத்த நிற்பது மேழி. கலப்பையோடு ஒட்டி இணைக்கப்படும் இரும்புச் சட்டத்திற்குப் பெயர் கொழு. கொழுவின் நுதி (முனை)யே கலப்பையின் முனையோடு கூடி நிலத்தைக் கீறிச் செல்லும். வேள்வியின் பொருட்டு இந்த உழுசடங்கைச் சனக மன்னன் செய்தான் ஆயினும் சதானந்தர் தாமும் உடன்பட்டிருந்தமையால் 'உழுதேம்' என்று பன்மையாற் கூறினர்.

சீதையின் தோற்றம்

229 உழுகின்ற கொழுமுகத்தின்
உதிக்கின்ற கதிரின்ஒளி
பொழிகின்ற புவிமடந்தை
உருவெளிப்பட் டெனப்,புணரி
எழுகின்ற தெள்ளமுதோடு
எழுந்தவளும் இழிந்தொதுங்கித்
தொழுகின்ற நல்நலத்துப்
பெண்அரசி தோன்றினள். க

உழுகின்ற கொழுவின் முகத்திலிருந்து உதிக்கின்ற நெற்கதிரின் பசிய ஒளியை வெளியே பொழிகின்ற பூமி தேவியின் உருவம் வெளிப்பட்டு வந்ததென்று கருதும்படி, பாற்கடலில் எழுந்த தெள்ளிய அமிழ்தத்தோடு எழுந்த இலக்குமியும் நாணி விலகி நின்று வணங்கத் தக்க சிறந்த அழகிய பெண்ணரசியான சீதை தோன்றினள்.

(வி - ம்) பயிருக்கு அடிப்படை முயற்சி உழுதலே யாகும். எனவே, பயிர் முளைத்துப் பயனளிப்பதை கொழு

229. கதிர் - நெற்கதிர்; புணரி - கடல்: பாற்கடல்.

முகத்தில் தோன்றுவதாக உபசரிக்கப் பட்டது. சூரியன் வெப்பமான கதிரைக் (கிரணங்களை) கீழ் நோக்கிப் பரப்புகிறான். நில மடந்தையோ கீழிருந்து தன்னுடைய குளிர்ந்த கதிர்களை மேல் நோக்கி (சூரியனை எதிர்த்து)ப் பரப்புகிறாள். இதுவரையில் உழும்போதெல்லாம் தான் உள்ளே மறைந்திருந்து கொண்டு கதிரை வெளியே பரப்பினாள். இப்பொழுது தனது சொந்தமான முழு உருவைக் கொண்டு நிலமகள் வெளியே தோன்றுவதைப் போலச் சீதை தோன்றினாள். சீதை தோன்றவே இலக்குமி நாணிக்கோணி ஒதுங்கி வழிபட வேண்டியவளானாள். கடற் செல்வத்தை மிஞ்சியது நிலச் செல்வமென்பது குறிப்பு. மேலும் இலக்குமியானவள் என்றும் நிறை செல்வமுடையவளாக வாழ்ந்து வருகிறாள். சீதையோ தருமம், தொண்டு, தியாகம் முதலிய எண்ணற்ற பண்பாட்டில் ஈடுபட்டு, உலக வாழ்வுக்கே ஒரு பெரிய வழிகாட்டியாக விளங்கப் போகிறாள் அல்லவா? அழகிலும் செல்வத்திலும்தான் என்ன, அவளுக்கு இவள் குறைந்தவளா? என்று சதாநந்தர் கருதுகிறார்.

அழகு செய்த தவம்

230 குணங்களைஎன் கூறுவது ?
கொம்பினைச்சேர்ந்து அவைஉய்யப்
பிணங்குவன ; அழகுஇவளைத்
தவம்செய்து பெற்றதுகாண் ;
கணங்குழையாள் எழுந்ததற்பின்
கதிர்வானிற் கங்கைஎனும்
அணங்கிழியப் பொலிவிழந்த
ஆறொத்தார் வேறுற்றார். ௬௦

---

230. உய்ய - மேன்மை அடைய ; பிணங்குதல்-நெருக்கடிப் படுதல்; கணம் - விண்மீன் ; அணங்கு - பெண்; இழிய - இறங்க.

அவளுடைய நற்குணங்களைப் பற்றி என்ன கூறுவது? அக்குணங்கள் பூங்கொம்பு போன்ற சீதையோடு சேர்ந்து மேன்மை யடைவதற்குத் தம்முள் 'நான் முந்தி நீ முந்தி' என்று நெருக்கடிப் பட்டுக்கொண்டிருக்கின்றன. அழகோ தவம் செய்து இவளை அடைந்திருக்கிறது. விண்மீன்போல் மின்னுகிற குழையை அணிந்திருக்கிற இந்தச் சீதை பிறந்த பிறகு என்ன ஆயிற்றுத் தெரியுமா? வானிலிருந்து கங்கை யாகிய பெண், நிலத்தில் வந்தவுடன் மற்றைய ஆறுகளெல் லாம் எவ்வாறு பொலிவு இழந்து போயிற்றோ அவ்வாறு ஏனைய பெண்களின் நிலை ஆகிவிட்டது.

(வி – ம்) தங்கள் உடலில் அழகை உண்டாக்கிக் கொள்ள எவ்வளவோ முயற்சிகளைப் பெண்கள் செய் கின்றனர். ஆனால் அழகு என்கிற பொருள் சீதையை அடைவதற்கு எவ்வளவோ காலம் தவம் செய்தது. அதன் பயனாக சீதை பரிபூரணமான அழகை அடைந்திருக்கிறாள். அவ்விதமாகவே நல்ல குணங்கள் எல்லாம் அவளோடு சேர்ந்து பெருமையடைய வேண்டுமென்று போட்டியிட்டு வந்தடைந்துள்ளன. இவ்வாறு கூறுவதால் அழகும் குண மும் பரிபூரணமாகப் பெற்று விட்டாள், இனிப்பெற இடமில்லை என்றபடி. கங்கையாறு தோன்றுவதற்கு முன் மற்றைய ஆறுகளுக்குப் பெருமை எவ்வளவோ கூறிக் கொண்டாடிக்கொண் டிருந்தார்கள். கங்கை தோன்றிய பின்பு மற்றைய ஆறுகளுக்கு மதிப்பே இல்லாமல் போய் விட்டது. ஆழத்தாலும், அகலத்தாலும், தூய்மையாலும் வற்றாது தோன்றிய நாள்தொட்டு இன்றளவும் இனியும் ஓடிக்கொண்டிருப்பதாலும் கங்கை சிறப்புற்றிருக்கிறது. அவ்வாறு சீதை பிறக்குமுன்பு அழகுள்ளவர், குணமுள்ள வர், பெருமையுள்ளவர் என்று சிலரைக் குறிப்பிட்டுச்

சொல்லிக் கொண்டார்கள். சீதை பிறந்த பிறகோ என்றால், மற்றைப் பெண்களைப்பற்றிய பேச்சே இல்லாமற் போயிற்று.

வில்லை வளைத்தவனுக்குத்தான் பெண்

231 கலித்தானைக் கடலோடும்
கைத்தானக் களிற்றரசர்
ஒலித்தாளி எனவந்து
மகள்மொழிந்தார்க்கு, எதிர்உடுத்த
புலித்தானைக் களிற்றுரிவைப்
போர்வையான் போர்வில்லை
வலித்தானே மங்கைதிரு
மணத்தான்என்று யாம்வலித்தேம். கக

பெரிய ஆரவாரம் செய்யும் கடல்போன்ற சேனையுடனே, துதிக்கை பொருந்திய மதம் பொழிகிற யானைகளையுடைய அரசர்கள் சத்தமிட்டுக் கொண்டு சிங்கம்போல வந்து, பெண் பேசினார்கள். புலித்தோலை ஆடையாகவும், யானைத்தோலைப் போர்வையாகவும் அணிந்து கொண்ட சிவபெருமானது வில்லை எவன் நாண் ஏற்றுகிறானோ அவனே சீதைக்கு மணமகனாவான் என்று நாங்கள் கூறினோம்.

(வி – ம்) நூற்றுக்கணக்கான அரசர்கள் வந்து சீதையை 'எனக்கு எனக்கெ'ன்று கேட்க முற்பட்டார்கள். சமாளிக்க முடியவில்லை. அதற்காக ஒரு யோசனை செய்து, இந்தப் பெரிய வில்லை எவன் நாணேற்றுகிறானோ அவனுக்கே இந்தப் பெண்ணை மணம் செய்து கொடுப்போம் என்று

231. கலி - ஓசை ; தானம் - யானைமதம் ; ஆளி - சிங்கம் ; மகள் மொழிதல் - பெண் பேசுதல் ; தானை - ஆடை ; உரிவை - தோல்.

கூறினர்கள். இது வினையாக முடிந்தது. மணம்பேசுதல், மகட்பேசுதல் என்று கூறப்படும். "தருமகட் பேசினேன்" (திருத்தொ. திருவந். 69) என்று கூறியுள்ளார் நம்பியாண்டார் நம்பி.

நாண் ஏற்றின் நன்று

232 அன்றுமுதல் இன்றளவும்
ஆரும்இந்தச் சிலைஅருகு
சென்றும்இலர்; போய்ஒளித்த
தேர்வேந்தர் திரிந்துமிலர்;
என்றும்இனி மணம்இல்லை
என்றிருந்தேம்; இவன்ஏற்றின்
நன்று;மலர்க் குழற்சீதை
நலம்பழுதா காதென்றான். கஉ

அந்த நாள் தொட்டு இன்றுவரை யாரும் இந்த வில்லின் பக்கத்திலும் செல்லவில்லை. ஓடிப்போய் ஒளித்துக்கொண்ட தேர்வேந்தர்கள் திரும்பவே இல்லை. இனி ஒரு நாளும் திருமணம் நடவாது என்று உட்கார்ந்து விட்டோம். இவன் நாண் ஏற்றுவானனால் மிக நல்லது. மலரணிந்த சீதையின் வாழ்வு வீணாகப் போகாது என்று சதாநந்தர் கூறினர்.

(வி - ம்) வில்லை வளைத்தவற்குப் பெண் என்று சொன்ன அந்த நாளிலிருந்து, வந்த எவரும் வில்லின் அருகில் செல்ல முற்பட்டாரில்லை. கேட்டுக்கொண்டு போனவர்களும் திரும்பி வரவில்லை. தடபுடல் செய்த அவர்களும் மறைந்தே போயினர். மேலே என்ன செய்வதென்பது விளங்காமல் இருந்தார்கள். ஒரு துன்பத்தை

232. சிலை - வில்; ஏற்றின் - வில்லை வளைத்து நாண் பூட்டினல்; குழல் - கூந்தல்.

ஒழிக்க முற்பட்டால் அதிலிருந்து வேறொரு பெரிய துன்பம் ஏற்படுகிறமாதிரி யாகிவிட்டது சீதையின் கதை.

மௌன நாடகம்

233 நினைந்துமுனி பகர்ந்தஎலாம்
நெறிஉன்னி அறிவனும்தன்
புனைந்தசடை முடிதுளக்கிப்
போர்ஏற்றின் முகம்பார்த்தான் ;
வனைந்தனைய திருமேனி
வள்ளலும்அம் மாதவத்தோன்
நினைந்தஎலாம் நினைந்தந்த
நெடுஞ்சிலையை நோக்கினன். கரு

சதாநந்த முனிவர் நன்கு நினைத்துப் பார்த்துச்சொன்ன எல்லாவற்றையும் கோசிக முனிவர் முறையாக எண்ணிப் பார்த்து, தன்னுடைய கட்டப்பட்ட சடை முடியை அசைத்து, போர்க் காளையாகிய இராமனுடைய முகத்தைப் பார்த்தார். எழுதிய ஓவியம் போன்ற அழகிய உருவுள்ள வள்ளலாகிய இராமனும், மாதவமுடைய கோசிக முனிவர் நினைத்த எல்லாவற்றையும் உணர்ந்து, அந்த நீண்ட வில்லை நோக்கினன்.

(வி - ம்) இங்கே முனிவரும் இராமனும் பேசிக் கொள்ளவில்லை. முகத்தைப் பார்த்தே அம் முனிவர் நினைந்த எல்லாவற்றையும் அறிந்துகொண்டான் இராமன். இப்படி ஒரு மௌன நாடகம் இங்கே நடந்தது.

233. அறிவன் - கோசிகன் ; உன்னி - எண்ணிப் பார்த்து; துளக்கி - அசைத்து ; போர்ஏறு - இராமன்.

இராமன் எழுந்தான்

234 *பொழிந்தநெய் ஆகுதி
 வாய்வழி பொங்கி
எழுந்தகொ ழுங்கனல்
 என்ன எழுந்தான் ;
அழிந்தது வில்என
 விண்ணவர் ஆர்த்தார் ;
மொழிந்தனர் ஆசிகள்
 முப்பகை வென்றார். கச

யாகத்தீயில் நெய்யை ஊற்றும்போது பொங்கி எழுகிற நெருப்பைப்போல இராமன் எழுந்தான். வில் அழிந்து போய்விட்டது என்று தேவர்கள் ஆரவாரஞ் செய்தனர். காமம் வெகுளி மயக்கம் என்ற மூன்று பகைகளையும் வென்ற முனிவர்கள் வாழ்த்துக் கூறினார்கள்.

(வி - ம்) காமம் என்பது உலக இன்பங்களில் கொள்ளும் ஆசை ; பெண்ணாசை மட்டும் அன்று. எப்பொருளில் ஆசைகொண்டாலும் அது காமம் எனப்படும். வெகுளி என்பது கோபம். மயக்கம் என்பது அறியாமை. இம் மூன்றும் அற்றால் ஒரே பேரின்பந்தான். துன்பமெல்லாம் இந்த மூன்றினாலேதான் உண்டாகின்றன. அதனால் இவற்றை ஒழிக்க அறிஞர் தவங்கிடக்கின்றனர். உயர வேண்டுமென்று தவம்புரிவார்க்கு இடையூறாக இக்குணங்கள் இருக்கிறபடியால் பகை என்று கூறப்பட்டது. பகை என்றபோதே ஒழிக்கத்தக்க தென்பதும் பெறப்பட்டது.

---

234. ஆகுதி - வேள்வித்தீயில் கொட்டப்படும் பொருள்.

போதுமக்கள் பேச்சு

235 காணும்நெடுஞ்சிலை
கால்வலிது என்பார்;
நாணுடை நங்கை
நலங்கிளர் செங்கேழ்
பாணிஇ வன்படர்
செங்கை புகாதேல்,
வாள்நுதல் மங்கையும்
வாழ்விலள் என்பார். கடு

(அங்குக் கூடிநின்ற பெண்களிற் சிலர்) நம் முன்னாலே காணப்படுகிற வில்லின்கால் மிக்க வலிமையுடையது என்பார்கள்; நாணமுடைய சீதையின் அழகு வடிவமான சிவந்த நிறமுள்ள கை, இவனுடைய பரந்த கையுள் நுழையாமற் போனால், அழகான நெற்றியையுடைய சீதைக்கு வாழ்வே கிடைக்காது என்பார்கள்.

(வி – ம்) வில் மிக்க வலிமையுடையது. வளைப்பதென்பது அரிய செயலாகும் என்று தோன்றுகிறது; என்றாலும் அவ்வாறு எதிர்மறுத்துச் சொல்ல மனமில்லாமல் 'கால் வலிது' என்று நிறுத்தப்பட்டது. இவ்வில் வளைக்கப்படப் போவதுமில்லை; சீதைக்கு வாழ்வு ஏற்படப் போவதுமில்லை என்பதுதான் கருத்து. இராமன் கையில் சீதை கை புகுதலாவது இராமன் கைகுவிய அதற்குள்ளே சீதையின் கை அகப்படுவதாகும். இது 'கைப்பிடித்தல்' என்னும் சடங்கைக் குறிக்கிறது. கடிமணப்படலத்தில், 'தையல் தளிர்க்கை தடக்கை பிடித்தான்' என வரும்.

---

235. கேழ் - நிறம்; பாணி - கை; வாள் நுதல் - ஒளி பொருந்திய நெற்றி.

இதுவும் அது

236 கரங்கள் குவித்திரு
கண்கள் பனிப்ப,
இருங்களிறு இச்சிலை
ஏற்றிலன் ஆயின்
நரந்த நறைக்குழல்
நங்கையும் நாமும்
முருங்கெரி யிற்புக
மூழ்குதும்' என்பார். கசு

கைகளைக் கூப்பிக்கொண்டு, கண்களில் நீர் பெருக, இந்தப் பெரிய யானைக்கன்று போல விளங்கும் இவன் இந்த வில்லை நாணேற்று விட்டால், கத்தூரி மணம் நாறும் கூந்தலையுடைய சீதையோடு நாங்கள் அழிக்கும் தன்மையுள்ள நெருப்பில் உடல்புகுமாறு மூழ்குவோம் என்று (சில பெண்கள்) கூறினர்.

(வி – ம்) சீதையிடம் மிக்க அன்பு கொண்ட சில பெண்கள், தாங்கள் மணம் பெற்று இன்புற்றிருக்க, சீதை மணமற்றவளாக இருப்பதைப் பொறுக்காமல் இவ்வாறு கூறினர். இந்தச் செயலில் தங்களால் ஒன்றும் செய்ய முடியவில்லையாகையால் தங்களுக்கு விருப்பமான தெய்வத்தை நினைத்துக் கைகுவித்தனர் என்க. உண்மையான அன்புகனிந்து தெய்வத்தை வேண்டுதலால் கண்ணிலிருந்து நீர் பெருகிற்று. இப்பெண்கள் சீதையின் நெருங்கிய தோழியராவர்.

---

236. பனிப்ப - நீர்சிந்த; களிறு - யானைபோன்ற இராமன்; சிலை - வில்; நரந்தம் - கத்தூரி; நறை - மணம் முருங்கு - அழித்தல்; எரி - நெருப்பு.

இதுவும் அது

237 'வள்ளல் மணத்தை
மகிழ்ந்தனன் என்றால்,
கொள்என முன்பு
கொடுப்பதை அல்லால்,
வெள்ளம் அணைத்தவன்
வில்லை எடுத்துஇப்
பிள்ளைமுன் இட்டது
பேதைமை' என்பார். கள

வள்ளலாகிய நம் மன்னவன், (சீதைக்குத்) திருமணம் செய்வதென்று (உண்மையிலேயே) நினைத்தால், 'என் பெண்ணைக் கொள்' என்று கொடுத்து விடவேண்டுமே யன்றி, கங்கையைத் தாங்கிய சிவபெருமானுடைய வில்லை எடுத்து இந்த இளம் பிள்ளைக்கு முன்னாலே போடுவது அறிவின்மையே ஆகும் என்பார்கள்.

(வி - ம்) சனகன் சீதையை மணக்க வருவோர்க்கு முன்பு, வளைக்க முடியாத வில்லை 'வளைக்க' என்று வைப்பதால், இவனுக்குச் சீதை திருமணத்திலேயே விருப்பமில்லையோ என்று குற்றம் சாற்றத் தோன்றுகிறது. இவ்வளவு நாளாக மாப்பிள்ளையே கிடைக்க வில்லை; இப்பொழுது கண்கொள்ளாத அழகனாக நிகரற்ற மாப்பிள்ளை வந்திருக்கிறான்; வாய் பேசாமல் பெண்ணைக் கொடுத்து விடவேண்டியதுதானே! சிவபெருமான் வளைக்கிற வில்லைக் கொண்டு வந்து போட்டு இந்தப் பச்சைக் குழந்தையை 'வளை' என்று சொல்வதைவிட மடத்தனம் வேறு உண்டா

237. மகிழ்தல் - விரும்புதல்; வெள்ளம் - கங்கை; பிள்ளை - தவழும் பருவத்துக் குழந்தை: ஈண்டு இளம் பருவத்து இராமனைக் குறித்தது.

என்று பெண்களுக்குத் தோன்றுகிறது. 'சீதைக்குத் திருமணம் செய்து பார்க்கவேண்டும்; இந்த மாப்பிள்ளையை விட்டுவிடக்கூடாது' என்ற ஆசையால் எழுகிற உணர்ச்சி! தங்கள் மன்னன் செயல், விளங்காத்தனமென்று ஆசையின் வேகத்தில் தோன்றினாலும் அவனிடமுள்ள கரைகடந்த அன்பால் 'வள்ளல்' என்ற சொல் மலர்ந்திருக்கிறது.

'வள்ளல்' என்ற சொல்லைக் கண்டதும் அதை இராமனுக்கு உரியதென்று கருதி வள்ளலாகிய இராமன் என்று உரைகண்டனர். இராமன் வள்ளல்தான். இருப்பினும் இங்கே முன்பின் அறியாத மிதிலை மக்கள், இராமனை ஒரு மாப்பிள்ளை என்றுதானே அறிய முடியும்? அவர்கள் வள்ளல் என்று இராமனைக் கருத என்ன நிகழ்ச்சி இருக்கிறது? தவிர, 'இப்பிள்ளை முன்' என்றுதானே பெண்கள் கூறுகிறார்கள்? ஒரே பாடலில் ஒருவனை வள்ளல் என்றும் பிள்ளை என்றும் கூறும் மனவுணர்ச்சி ஏற்படுதல் இயலாத தொன்றாம்.

'வெள்ள மணத்தவன்' என்பதை 'வெள்ளை மனத்தவன்' என்று பாடங்கொண்டு, சூதுவாதறியாத சனகன் என்று சிலர் பொருள் கண்டனர். 'பேதைமை' என்றொரு சொல் பின்னாலே இருந்து பொருளற்றுப் போவதை நோக்கினாரில்லை. வெள்ளை மனத்தவன் செயல் பேதைமையாகத்தானே இருக்கும்? இது கூறியது கூறலாக முடியுமல்லவா? 'வள்ளல்' என்ற சொல்லுக்கு இராமன் என்று பொருள் கொண்டதாலேயே இப்பாடலுக்குப் பொருள் கூறுவதில் இத்தனை குழப்ப மேற்பட்டுவிட்டது. ஆதலால் 'வள்ளல்' என்பதை, "கொள்ளன முன்பு கொடுப்பதை யல்லால்" என்பதற்கு எழுவாயாகக் கொண்டு சனகன் எனப் பொருள் கோடலே சிறப்புடைத்து. மேலும் கொள்ளனக் கொடுப்பது சனகன் தொழி

லாகக் கூறப்பட்டுள்ளது; அவ்வாறு கொள்ளனக் கொடுக்கும் தொழில் வள்ளலுக்கே உரியதாகலின் ஈண்டு வள்ளல் என்பது சனகனையே குறிக்கும்.

இராமன் நடந்து செல்லல்

238 தோகையர் இன்னன
சொல்லிட, நல்லோர்
ஓகை விளம்பிட,
உம்பர் உவப்ப,
மாக மடங்கலும்
மால்விடை யும்பொன்
நாகமும் நாகமும்
நாண நடந்தான். கஅ

கூடியிருந்த பெண்கள் இவ்வாறு சொல்லிக்கொண்டிருக்க, முனிவர்கள் மனஎழுச்சி கொண்டு வாழ்த்துரைக்கவும், தேவர்கள் மகிழ்ச்சி அடையவும், கம்பீரமான சிங்கமும், பெரிய காளையும், மேருமலையும், யானையும் நாணும்படி வில்லை நெருங்கி நடந்தான் இராமன்.

(வி - ம்) முனிவர்கள், இராமன் எழுந்து நடந்தது கண்டு மகிழ்ந்தார்கள்; அம்மகிழ்ச்சி 'இவன் வளைத்துவிட வேண்டும், வளைத்துவிட வேண்டும்' என்ற சொற்களாக, வாழ்த்துரைகளாக வெளிப்படுகிறது. அதனால் 'ஓகை விளம்பிட' எனப்பட்டது. தேவர்கள் வாய்விட்டுச் சொல்ல முடியாமல் உள்ளத்துள்ளேயே மகிழ்கின்றனர். அதனால்

---

238. தோகையர் - தோகை மயிலைப்போன்ற சாயலுள்ள பெண்கள்; ஓகை - மகிழ்ச்சி; உம்பர் - மேல் உலகம்: இது ஆகு பெயராய்த் தேவரை உணர்த்திற்று. மடங்கல் — சிங்கம்; மால் - பெரிய; விடை - காளை; பொன் நாகம் - பொன்மலை: மேரு மலை; நாகம் — யானை.

'உம்பர் உவப்ப' எனப்பட்டது. மேருமலை தோற்றப் பொலிவிற்கும் உயர்ச்சிக்கும் உவமிக்கப்பட்டது.

வில்லா? மணமாலையா?

239 ஆடக மால்வரை
அன்னது தன்னைத்
தேடரு மாமணி
சீதை எனும்பொற்
சூடக வால்வளை
சூட்டிட நீட்டும்
ஏடவிழ் மாலைஇது
என்ன எடுத்தான். கக

மேரு மலைபோலக் கிடக்கும் வில்லை, தேடிப்பெறு தற்கு அருமையான மாணிக்கம் போன்ற - சீதை என்னும் பெயரையுடைய - பொற்காப்பும் வெண்மையான சங்கு வளையலும் அணிந்த பெண்ணுக்குச் சூட்டுவதன் பொருட்டு நீட்டுகிற இதழ்விரிந்த மாலைதான் இது என்று சொல்லும் படி எடுத்தான்.

(வி-ம்) வால்வளை என்பது சங்குவளை அணிந்த சீதையைக் குறிக்கும். இது அன்மொழித் தொகை.

கண்டதும் கேட்டதும்

240 தடுத்திமை யாமல்
இருந்தவர், தாளில்
மடுத்ததும் நாண்நுதி
வைத்ததும் நோக்கார்;

239. ஆடகம் - பொன்; ஆடக மால்வரை - மேருமலை; சூடகம் - கைக்காப்பு; வால் - வெண்மையான; வளை - (சங்கு) வளையல்; சூட்டிட நீட்டும் மாலை - மணமாலை; ஏடு - இதழ்.

240. மடுத்தல் - அழுத்தல்: நுதி - நுனி.

கடுப்பினில் யாரும்
அறிந்திலர் ; கையால்
எடுத்தது கண்டனர் ;
இற்றது கேட்டார். ௨௦

கண்ணிமைக்காமல் இருந்த மக்கள், இராமன் வில் தண்டின் அடிநுனியில் காலைவைத்து அழுத்தியதையும், நாணினை மேல் நுனியில் பூட்டியதையும் கண்டார்களில்லை. தொழில் நிகழ்ந்த வேகத்தால் எவரும் அறிய முடியாது போயிற்று. வில்லைக் கையில் எடுத்ததைக் கண்ணுற் கண்டனர் (அவ்வளவுதான். உடனே சடாரென்று) ஒடிந்த ஒலியைக் காதாற் கேட்டார்கள்.

பல்வகை வாழ்த்து

241 *பூமழை பொழிந்தார் விண்ணோர் ;
பொன்மழை சொரிந்த மேகம் ;
பாமம்ஆர் கடல்கள் எல்லாம்
பன்மணி தூவி ஆர்த்த ;
கோமுனிக் கணங்கள் எல்லாம்
கூறின ஆசி ; கொற்ற
நாமவேற் சனகற்கு இன்று
நல்வினை பயந்தது என்று. ௨௧

வெற்றி பொருந்தியவனும் பகைவர்க்கு அச்சமூட்டுகின்ற வேலையுடையவனுமான சனகனுக்கு இன்று பெரிய நன்மை கிடைத்துவிட்டது என்று தேவர்கள் பூமழை பொழிந்தனர் ; மேகம் அழகிய மழையை (சாரலை)த் தூற்றியது ; கடல்கள் மாணிக்கம் போன்ற நீர்த் துளிகளைச்

240. கடுப்பு -விரைவு ; இற்றது - ஒடிந்தது.

241. பொன்-அழகிய; பாமம் - பரப்பு; ஆர்த்த - ஆரவாரம் செய்தன; கணம் - கூட்டம்; கொற்றம் - வெற்றி; நாமம்-அச்சம்.

சிதறி ஆரவாரம் செய்தன. பெரிய முனிவர்கள் கூட்டமாகக் கூடிநின்று வாழ்த்துக் கூறினர்கள்.

(வி - ம்) தேவர், மலர்களை மிகுதியாகக் கொட்டினர் என்பது தோன்றப் 'பொழிந்தார்' என்றும், மேகம் துளிகளைத் தூற்றியது என்பது தோன்றச் 'சொரிந்த' என்றும் கூறப்பட்டது. 'பொன்' சூரியன் எனக் கொண்டு, வெயில் இருக்கும் போதே தூற்றிய தூறல் என்றும் கொள்ளலாம். முன்பாடலில், இராமன் வில்லை முறித்தான் என்ற நிகழ்ச்சி கிடைக்கிறது. இங்கே சனகனுக்கு நல்வினை பயந்தது என்று கூறப்படுதலால் சீதைக்குக் கல்யாணம் நடக்க வில்லையே என்ற கவலை சனகனுக்கு நீங்கிவிட்டது என்பது கருத்து. வில்லை நாணேற்றுபவனுக்குப் பெண்ணைக் கொடுப்பது என்பது சூளுரையே யன்றி, வில்லை ஒடிப்பவனுக்குப் பெண்ணைக் கொடுப்ப தென்பதன்று. இங்கே நடந்த தென்ன? 'எடுத்தது கண்டனர், இற்றது கேட்டார்' என்பததானே! (256-ம் பாடல் பார்க்க).

நகர மக்களின் மகிழ்ச்சி

242 மாலையும் இழையும் சாந்தும்
சுன்னமும் வாச நெய்யும்
வேலைவெண் முத்தும் பொன்னும்
காசும்நுண் துகிலும் வீசி,
பால்வளை அமிழ்துஅ ளாய
பல்லியம் துவைப்ப, முந்நீர்
ஒல்கிளர்ந்து உவாஉற் றென்ன
ஒலிநகர் கிளர்ந்த தன்றே. உ உ

242. வாசநெய் - மணமுள்ள தைலவகை (அத்தர் போன்றது); சுண்ணம் - மணமுள்ள பொடி (துருத்தியில் அடைத்துக் காற்றோடு கலக்கச் செய்வர்); இயம் - இசைக் கருவிகள்; முந்நீர் - கடல்; ஓல் - ஒலி; உவா - நிறை மதி : பௌர்ணமை.

பூமாலே, நகை, சந்தனம், வாசனைப் பொடி, மணந்தரும் நெய், கடலில் பிறந்த முத்து, பொன், நாணயம், இரத்தினம், மெல்லிய ஆடை ஆகியவற்றை (ஒருவருக் கொருவர்) வழங்கி, வெண்மையான சங்குகளும், அமிழ்திற் கலந்த பலவகைப் பட்ட இசைக் கருவிகளும் முழங்க, பருவ காலத்தில் கடல் ஒலி ஆரவாரித்து எழுவதைப் போல மிதிலே நகர மக்களின் மகிழ்ச்சிஒலி ஆரவாரித்து எழுந்தது.

(வி - ம்) சீதைக்கு மணம் நடைபெற வழியில்லே யென்று கருதி வருந்தியிருந்த நகரமக்களுக்கு இராமன் செய்த செயல் பெரு மகிழ்ச்சியைத் தந்துவிட்டது. இந்த நிகழ்ச்சியை விசாரிக்க ஒவ்வொருவரும் மற்றவர் வீட்டுக் குச் செல்கின்றனர். வருபவர்க்கு வீடுதோறும் வர வேற்பு. தங்கள் விருப்பம் போல் பரிசுகளேயும் வழங்கு கின்றனர். செல்வர் வீடுகளில் திருமணம் போன்ற நிகழ்ச்சி கள் ஏற்படும்போது வருபவர்க்கெல்லாம் பற்பல பொருள் கள் வழங்கப்படுவது இயல்பு. சீதையின் திருமண வர வேற்பு வீடெங்கும் கொண்டாடப்பட்டது. எல்லா வீடுகளி லும் இசையரங்கும் நாட்டிய அரங்கும் நடைபெற்றன.

மக்கள் கருத்து

243 *தயரதன் புதல்வன் என்பார்;*
தாமரைக் கண்ணன் என்பார்;
புயல்இவன் மேனி என்பார்;
பூவையும் பொருவும் என்பார்;
மயல்உடைத்து உலகம் என்பார்;
மானுடன் அல்லன் என்பார்;
கயல்பொரு கடலுள் வைகும்
கடவுளே காணும் என்பார். உரு

---

243. புயல் - மேகம்; பூவை — காயாம் பூ; மயல் - மயக்கம்; கயல்பொரு - மீன்கள் ஒன்ருேடொன்று சண்டையிடுகிற.

தயரதன் மகன் என்றும், தாமரை போன்ற கண்களை உடையவன் என்றும், இவன் உடல்வண்ணம் மேகம் போலிருக்கிறது என்றும், காயா மலரை ஒத்திருக்கிறது என்றும், உலகமே இவனைக்கண்டு மயங்கி விட்டது என்றும், இவன் மனிதப் பிறவி உடையவனல்லன் என்றும், திருப் பாற்கடலிலே இருக்கும் திருமால்தான் என்றும் மக்கள் பேசிக்கொண்டனர்.

இதுவும் அது

244 நம்பியைக் காண நங்கைக்கு
ஆயிரம் நயனம் வேண்டும் ;
கொம்பினைக் காணுந் தோறும்
குரிசிற்கும் அன்ன தேயால் ;
நம்பியைக் காண்மின் என்பார் ;
தவம்உடைத்து உலகம் என்பார் ;
இம்பர்இந் நகரில் தந்த
முனிவனை இறைஞ்சும் என்பார். உச

ஆண்களிற் சிறந்த இவனைக்காண்பதற்கு, பெண்களிற் சிறந்த சீதைக்கு ஆயிரம் கண்கள் வேண்டும் (என்பர் சிலர்). பூங்கொம்பு போன்ற அவளைக் காணும் பொழுதெல்லாம் இராமனுக்கும் அப்படித்தான் (என்று சிலர் பதிலுக்குச் சொல்லுவார்கள்). தம்பியைப் பாருங்களேன்! என்பார் சிலர். உலகம் தவம் செய்துள்ளது என்பார் சிலர். இந்த உலகத்திலே அதிலும் இந்த ஊரிலே இவர்களைக் கொண்டு வந்து சேர்த்த அந்த முனிவனை வணங்குங்கள் என்பார் சிலர்.

---

244. நம்பி – ஆண்களில் சிறந்தவன் : குரிசிலும் அப்பொருளுடைத்து ; நங்கை - பெண்களிற் சிறந்தவள் ; நயனம் - கண் ; கொம்பு - பூங்கொம்பு : சீதை; இம்பர் – இவ்வுலகம்; இறைஞ்சுதல்- வணங்குதல்.

(வி - ம்) இராமனுடைய அழகு இருகண்ணில் அடங்குவதன்று. இருகண் பார்வையில் ஓர் உறுப்புத்தான் அடங்குகிறது. அந்த ஓர் உறுப்பையாவது முழுதும் பார்த்து விட முடிகிறதா என்றால் அதுவுமில்லை. "தோள் கண்டார் தோளே கண்டார்" (335). எனவே, அவனைக் கண்ட மக்களுக்கு ஆயிரங் கண்கள் இருந்தால் ஒரே நேரத்தில் அழகு முழுவதையும் பார்த்துவிடலாம் என்று தோன்றுகிறது. அதனால் "நம்பியைக் காண நங்கைக்கு ஆயிரம் நயனம் வேண்டும்" என்றார்கள். அவ்வாறு கூறுபவரை நோக்கி மற்றுஞ்சிலர், சீதையென்ன குறைந்த அழகுடையவளா ? அவளைப்பார்க்கிற போதெல்லாம் இராமனுக்கும் ஆயிரங் கண்தான் வேண்டும் ; இருகண்ணால் இராமனும் பார்த்துவிட முடியாதென்று சொன்னார்கள்.

சீதைநிலை கூறத் தொடங்குதல்

245 இற்றிவண் இன்ன தாக
மதியொடும் எல்லி நீங்கப்
பெற்றுயிர் பின்னும் காணும்
ஆசையாற் சிறிது பெற்ற
சிற்றிடைப் பெரிய கொங்கைச்
சேயரிக் கரிய வாட்கண்
பொற்றொடி மடந்தைக்கு அப்பால்
உற்றது புகலல் உற்றாம். உரு

வந்திருந்தோர் இங்கே இப்படிப் பேசிக்கொண்டிருக்க, நிலவோடு இராப்பொழுது நீங்கப்பெற்று, உயிர் போன்ற இராமனை இன்னும் காணவேண்டுமென்ற ஆசை

245. மதி — நிலா ; எல்லி — இரவு ; சேய் அரி - சிவந்த கோடுகள் ; பொன்தொடி - பொன்னாலாகிய வளையல் ; புகலல் — சொல்லல்.

யால் சிறிது நினைவு பெற்ற — சிறிய இடையையும், பெரிய கொங்கைகளையும், செவ்வரி பரந்த கரிய வாள்போன்ற கண்களையும், பொன் வளையல்களையும் உடைய சீதைக்குப் பின்பு நிகழ்ந்தவைகளைக் கூறுவோம்.

அவனைக் கண்டால் உயிரைக் காணலாம்

246 *நான்உலாவு மேருவோடு
நான்உலாவு பாணியும்
தூன்உலாவு தோளும்வாளி
யூடுலாவு தூணியும்
வாள்நிலாவின் நூல்உலாவு
மாலைமார்பும் மீளவும்
காணல்ஆகும் ஆகின்ஆவி
காணல்ஆகும் ஆகுமே. உசு

நாண் கயிறு பொருந்திய மேருமலை போன்ற வில்லுடனே என்னுடைய நாணமும் சேர்ந்து சுற்றுகின்ற கைகளையும், தூண்போன்ற தோள்களையும், அம்புகள் நிறைந்துள்ள அம்பறாத் தூணியையும், ஒளி பொருந்திய நிலவைப்போன்ற பூணூல் அணிந்த — மாலை பொருந்திய — மார்பையும் திரும்பவும் காணக்கூடுமானால் என்னுடைய உயிரையும் காணக் கூடும்.

(வி - ம்) என்னிடத்தில் இதுவரை இருந்து வந்த நாணமானது அவன் கைக்குப் போய்விட்டது. பற்றிக் கொண்டான் என்றபடி. 'என் நெஞ்சும் நாணும் நலனும்

246. நாண் - வில்லின் நாண் ; மேரு - மேருமலை போன்ற வில் ; நாண் — சீதையின் நாணம் ; பாணி — கைகள் ; வாளி ஊடு உலாவு தூணி என்பதை ஊடு வாளி உலாவு தூணி என மாற்றிக் கொள்ள வேண்டும்.

இவையெல்லாம், மன்னன் புனல் நாடன் வெளவினன்'
(முத்தொள்ளாயிரம்) என வருதல் காண்க.

உயிரை உண்ட மேகம்

247 விண்தலம் கலந்திலங்கு
திங்களோடும் மீதுசூழ்
வண்டலம்பு அலங்கல்தங்கு
பங்கியோடும் வார்சிலைக்
கொண்டல்ஒன்று இரண்டுகண்ணின்
மொண்டுகொண்டென் ஆவியை
உண்டதுண்டுஎன் நெஞ்சின்இன்னும்
உண்டதுண்டது உண்டரோ. உஎ

வானத்தில் பொருந்தி விளங்கும் நிலாவோடும், வண்டு மொய்க்கிற மாலையை அணிந்திருக்கிற தலைமுடியோடும் வில்லைத்தாங்கிய ஒரு மேகம், இரண்டு கண்களால் என் உயிரை உறிஞ்சி உண்டுவிட்டது. அப்படி உண்ட உணர்ச்சி என் நெஞ்சில் இப்பொழுதும் எப்பொழுதும் நீங்கவே நீங்காது.

(வி - ம்) மேகம் கடலில் புகுந்து நீரையுண்டு செல்லும். இங்கே ஒரு மேகம் வந்து புகுந்தது. வானத்திலுள்ள மேகத்தைப் போலவே இந்த மேகமும் வில்லைக் கொண்டிருந்தது. தன் இருகண்களைக் கொண்டு என் உயிராகிய நீரைக்குடித்து விட்டது. இந்த நிகழ்ச்சியை மறக்கவா முடியும்?

247. அலங்கல் — மாலை ; பங்கி - முடித்துக் கட்டிய ஆண் தலைமயிர் ; வார் - நீண்ட ; கொண்டல் - மேகம்.

இது ஆண்மையா ?

248 பஞ்சரங்கு தீயினுவி
பற்றநீடு கொற்றம்வாய்
வெஞ்சரங்கள் நெஞ்சரங்க
வெய்யகாமன் எய்யவே
சஞ்சலங்க லந்தபோது
தையலாரை உய்யவந்து
'அஞ்சல்அஞ்சல்' என்கிலாத
ஆண்மைஎன்ன ஆண்மையே ? உஅ

பஞ்சினைப் பற்றிய தீயைப்போல, என் உயிர் பற்றி எரியும்படி வெற்றி வாய்ந்த கொடுமையான அம்புகளை என் நெஞ்சிலே அழுந்தும்படி கொடிய மன்மதன் எய்கிறான். (அதையறிந்தும் இவன் வரவில்லை.) பெண்களுக்குத் துன்பம் வந்து பொருந்தியபோது அவர்கள் உய்யும்படி நேரில் வந்து 'பயப்படாதீர்கள் !' என்று காக்காத ஆண்மை என்ன ஆண்மை ?

(வி - ம்) தனக்கு வந்த ஆபத்தை விலக்க வேண்டுமென்பது எண்ணம். மன்மதன் அம்பை எய்யும்போது, தான் நின்று தடுக்காமல் வில்லைத் தோளில் போட்டுக் கொண்டு போய்விட்டானே என்று தோன்றுகிறது. வெட்கத்திலேயே பழகிய மனமாதலால் தன்னைக் காக்க வேண்டுமென்று ஓர் ஆடவனை நோக்கிச் சொல்ல வாய்வரவில்லை. பெண்கள் ஆபத்திலகப்பட்டால் நீக்க வேண்டியது ஆண்மகன் கடமை என்று கூற முற்படுகிறாள்.

---

248. அரங்குதல் - அழிதல்; கொற்றம் - வெற்றி; அரங்க- அழுந்த.

கண்ணில் இருந்தும் காண முடியவில்லை

249 விண்ணுளே எழுந்தமேகம்
மார்பின் நூலின் மின்னொடுஇம்
மண்ணுளே இழிந்ததென்ன
வந்துபோன மைந்தனார்
என்உளே இருந்தபோதும்
யாவர்என்று தேர்கிலேன்
கண்உளே இருந்தபோதும்
என்கொல்காண்கி லாதவே. உக

வானத்திலே எழுந்த மேகமானது, மார்பில் விளங்குகிற பூணூலாகிய மின்னலோடு நிலத்தில் இறங்கிய தென்னும்படி வந்துபோன அந்த வீரன், என்னுடைய எண்ணத்திலே தானே நிலைத்து விட்டான்; என்றாலும் இவன்யாவன் என்று அறிந்தேனில்லை. கண்ணுள்ளே இருந்து காட்சியளிக்கிறான்; என்றாலும் வெளியே காணமுடியவில்லையே! என்ன காரணம்?

(வி – ம்) நினைவில் இருக்கிறான்; யாரென்று தெரியவில்லை. கண்ணில் கண்ட காட்சி அப்படியே கண்ணுக்குள் நீங்காமல் தெரிந்துகொண்டிருக்கிறது; ஆனால் உருவம் காணப்படவில்லை. வெளியே உள்ள உருவம் பார்ப்பவர் கண்ணுக்குள்ளே இருக்கிற நடுக்கருப்பில் கண்ணாடியில் பதியும் உருவம் போலப் பதிகிறது. அதை அறிவு உணர்கிறது. இங்கே சீதையின் கண்ணில் பட்ட உருவம் – கண்ணினுள்ளே பதிந்த பதிவு – இருந்தபடியே உள்ளத்தில் தோன்றிக்கொண்டிருக்கிறது. இராமன் போனாலும் அந்த உருவம் மறையவில்லை. இதென்ன மாயமென்று நினைக்கிறாள் சீதை.

---

249. இழிந்தது - இறங்கியது.

விட்டு விட்டேனே !

250 பெய்கடற் பிறந்தயல்
பிறக்கொணா மருந்துபெற்று
ஐயபொற் கடத்தொடுஅங்கை
விட்டிருந்த ஆதர்போல்
மொய்கிடக்கும் அண்ணல்தோள்
முயங்கிடாது முன்னமே
கைகடக்க விட்டிருந்து
கட்டுரைப்ப தென்கொலோ ? ருo

பல வளங்களையும் தந்த பாற்கடலில் தோன்றியதும் வேறிடத்தில் தோன்ற முடியாததுமான அமுதத்தை, தங்கக்குடத்தில் பெற்று, அந்தக் குடத்தோடு கையிலிருந்து பறிகொடுத்த மூடனைப் போல வலிமை தங்கியிருக்கிற அந்த அண்ணலுடைய தோளைக் கண்டவுடனே கட்டிப் பிடித்துக் கொள்ளாமல், தவற விட்டுவிட்டேனே ! இனி இருந்து புலம்புவதில் என்ன பயன் ?

(வி — ம்) கண்ணிற் கண்டவுடனேயே கட்டிப் பிடித்துக் கொண்டால் எப்படிப் போவான் ? பறிபோய் விட்டதே என்று கருதுகிருள். அகப்பட்டதை விட்டு விட்டோமே என்ற ஏக்கத்தில் வெளிப்படும் மொழிகள் இவை.

ஒரு தோழியின் செயல்

251 என்றுகொண்டுள் நைந்துநைந்து
இரங்கிவிம்மி விம்மியே
பொன்திணிந்த கொங்கைமங்கை
இடரின்மூழ்கு போதின்வாய்

250. மருந்து - அமிழ்தம் ; ஆதர் - மூடர்; மொய்-வலிமை; அண்ணல் - தலைவன் : இராமன் ; முயங்குதல் - தழுவுதல்.

251. பொன்-தேமல்; திணிந்த-நெருங்கிய; இடர்-துன்பம்.

குன்றம்அன்ன சிலைமுறிந்த
கொள்கைகண்டு குளிர்மனத்து
ஒன்றும்உண்கண் மதிமுகத்து
ஒருத்திசெய்தது உரைசெய்வாம். ௫௧

என்று நினைந்து நினைந்து உள்ளம் நைந்து நைந்து வருந்தி விம்மினாள். இவ்விதமாகத் தேமல் படர்ந்த கொங்கைகளை உடைய சீதை துன்பக்கடலில் முழுகித் தத்தளிக்கிற போது, மலைபோன்ற வில்லை முறித்ததைக் கண்டு மகிழ்ந்த அழகிய கண்ணையும் மலர்ந்த முகத்தையும் உடைய ஒருத்தி வந்த விதத்தைச் சொல்லுவோம்.

நீலமாலை வருதல்

252 *வடங்களும் குழைகளும்
வான வில்இடத்
தொடர்ந்தபூங் கலைகளும்
குழலும் சோர்தர
நுடங்கிய மின்என
நொய்தின் எய்தினாள்
நெடுந்தடம் கிடந்தகண்
நீல மாலையே. ௫௨

நீண்ட அகன்ற கண்களையுடைய நீலமாலை என்னும் தோழி, இரத்தின மாலைகளும், காதணிகளும் வானவில்லைப் போலப் பலவகை நிறத்தில் ஒளி செய்யவும், அணிந்துள்ள அழகிய ஆடைகளும் கூந்தலும் தொங்கி அலையவும் வளைந்து வளைந்து வருகிற மின்னற் கொடிபோல விரைவாகச் சீதை இருக்கிற இடத்திற்கு ஓடிவந்தாள்.

251. உண் கண் - மை யூட்டப்பட்ட கண்.

252. வடம் - கழுத்தணி; குழை - காதணி; கலை - ஆடை; நொய்து - விரைவு.

(வி - ம்) கலைகளும் என்றதனால் அந்தப் பெண் பாவாடை தாவணிபோல ஒன்றுக்கு மேற்பட்ட ஆடைகளை உடுத்திருந்தாள் என்று கொள்ளலாம். ஆடையும் குழலும் ஓடிவருகிற வேகத்தில் கட்டுக் குலைந்து காற்றில் அலைந்தாலும் தொடர்ந்து வருகின்றன. வில்லை இராமன் வளைத்து விட்டான் என்ற செய்தியைச் சீதைக்குச் சொல்ல ஓடி வருகிறாள். மகிழ்ச்சி உச்சிக்குப் போய்விட்டது. வளைத்ததைப் பார்த்த அவளுடைய கண்கள் விரிந்து பெரிதாகி விட்டன என்று கருதுமாறு "நெடுந்தடங் கிடந்த கண்" எனவருகிறது.

நீலமாலையின் மகிழ்ச்சி

253 வந்தடி வணங்கிலள் ;
வழங்கும் ஓதையள் ;
அந்தம்இல் உவகையள் ;
ஆடிப் பாடினள் ;
சிந்தையுள் மகிழ்ச்சியும்
புகுந்த செய்கையும்
சுந்தரி, சொல்எனத்
தொழுது சொல்லுவாள். ருரு

அவள் சீதைக்கருகில் வந்தாள். வழக்கம் போல வணங்கவில்லை ; சத்தமிடுகிறாள் ; முடிவில்லாத மகிழ்ச்சியுடையவளாக ஆடுகிறாள் ; பாடுகிறாள். (வாயிலிருந்து சொல் எதுவும் வரவில்லை). உன் மனமகிழ்ச்சிக்குக் காரணமும், நிகழ்ந்த செய்கையும் எனக்குச் சொல்வாயாக என்று சீதை கேட்க (நீலமாலை) வணங்கிச் சொல்லுகிறாள்.

(வி - ம்) மன்னன் மகள் முன்பு தோழி பேசும் போது முதலில் வணங்கித்தான் செய்தி சொல்வது மரபு.

253. ஓதை - சத்தம் ; அந்தம் - முடிவு ; சுந்தரி - சீதை.

மகிழ்ச்சி தலைக்கு ஏறிப்போன படியால் வணங்க வேண்டு மென்ற நினைப்பே ஏற்படவில்லை. ஆஆ எப்படிப்பட்ட அழகன்! என்ன வீரம்! என்று இப்படிக்கூறி இரைச்சல் போடுகிறாள்; குதிக்கிறாள்; சொந்தமாகவே பாடத் தொடங்கிவிட்டாள். சீதைக்கு ஒன்றும் விளங்கவில்லை. இது மகிழ்ச்சியால் ஏற்படும் மெய்ப்பாடு. இவ்வளவு ஆட்டத்துக்கும் நடந்த செய்திதான் என்ன? சொல் என்ற பிறகுதான் தன்னறிவு வருகிறது. உடனே வணங்கு கிறாள்.

நீலமாலை இராமனைப் புகழ்ந்து கூறல்

254 கயரத துரகமாக்
கடலன், கல்வியன்,
தயரதன் எனும்பெயர்த்
தனிச்செல் நேமியான்,
புயல்பொழி தடக்கையான்
புதல்வன்; பூங்கணை
மயல்வினை மதனற்கும்
வடிவில் மேன்மையான். ௩௪

யானை இரதம் குதிரை ஆகியவற்றைக் கடல்போல மிகுதியாக உடையவன்; எல்லாக்கலைகளையும் அறிந்தவன்; தயரதன் என்ற பெயரை யுடையவன்; ஒப்பற்ற ஆட்சியை உடையவன்; மேகத்தைப் போல அள்ளிப் பொழிகிற பெருங்கையை உடையவன்; இத்தகைய மன்னனது மகன். மலர் அம்புகளால் ஆசையை உண்டாக்குகிற மன்மதனைக் காட்டிலும் அழகுடையவன்.

---

254. கயம் - யானை; ரதம்-இரதம் (எதுகை நோக்கி இகரம் தொக்கது); துரகம் - குதிரை; நேமி - சக்கரம்: ஆட்சி.

(வி - ம்) யானைப்படை, தேர்ப்படை, குதிரைப்படைகளைக் கடல்போல மிகுதியாக உடையவன் என்றாள். முதலில் மணமகன் தந்தையின் பெருமையை, பேரரசு, பேரறிவு, பெருங்கொடை ஆகிய மூன்று குணங்களால் சிறப்பித்துக் கூறினாள். பிறகு மணமகன் பெருமையைக் கூற முற்பட்டு ஆணழகுக்கு எல்லையான மன்மதனைக் காட்டிலும் அழகன் என்று தொடங்குகிறாள்.

இதுவும் அது

255 மராமரம் இவைஎன
வளர்ந்த தோளினான் ;
அராவணை அமலன்என்று
அயிர்க்கும் ஆற்றலான் ;
இராமன்என் பதுபெயர் ;
இளைய கோவொடும்
பராவரும் முனியொடும்
பதிவந் தெய்தினான். ருரு

மராமரந்தான் இவை என்று சொல்லும்படி வளர்ச்சியுற்ற தோள்களை உடையவன் ; பாம்பாகிய படுக்கையில் துயில் கொள்ளும் திருமால்தானோ என்று ஐயப்படத்தக்க ஆற்றல் உடையவன் ; இராமன் என்பது அவனுடைய பெயர் ; தம்பியோடும் துதிப்பதற்கரிய முனிவருடனும் இந்த ஊருக்கு வந்திருக்கிறான்.

---

255. மராமரம் - பெரிய மரம் ; அராவணை — பாம்புப் படுக்கை; அமலன் - ஆணவம், கர்மம், மாயை என்ற மலமற்றவன்: கடவுள் ; அயிர்த்தல் - ஐயப்படுதல் ; பராவ அரும் - துதித்தற்கு அருமையான.

(வி - ம்) மராமரம் என்பது ஆச்சாமரம் என்றும் ஆலமரம் என்றும் கருதலாம். இச்சொல் மிகப் பெரிய மரம் என்ற பொருளில் இந்நூலில் பல இடங்களில் வழங்கப் படுகிறது.

நாணேற்றியதைக் கூறல்

256 பூணியல் மொய்ம்பினன்
புனிதன் எய்தவில்
காணிய வந்தனன்
என்ன, காவலன்
ஆணையின் அடைந்தவில்
அதனை, ஆண்தகை
நாண் இனிது ஏற்றினன்
நடுங்கிற்று உம்பரே. ருசு

தோள்வளை அணிந்துள்ள வலிமையுடையவனுகிய இராமன், சிவபெருமான் எய்த வில்லைக் காணும் பொருட்டு வந்திருக்கிருன் என்று (முனிவர்) கூற, சனகன் ஆணையாற் கொண்டு வரப்பட்ட வில்லை, ஆணிற்சிறந்தஅவன் நாணியை இழுத்து இனிதாக (எளிதாக) ஏற்றினன். மேலே உள்ள உலகங்களும் ஆடிப் போய்விட்டன.

(வி - ம்) 'தடுத்திமை' (240) என்ற பாடலில் கூடியிருந்த யாவரும் நாண் ஏற்றியதைக் கண்டாரில்லை என்றும், எடுத்ததையும் ஒடிந்ததையும்தான் அறிந்தனர் என்றும் கூறப்பட்டிருக்கிறது. அப்படியானுல் சீதையை இராமன் எங்ஙனம் அடையக்கூடும் என்ற ஐயம் எழுகிறது. நாண் ஏற்றுபவனுக்குத்தான் சீதை மாலையிடுவாள் என்பது சூளுரையாகும் (பாட்டு 231). "இராமன் வில்லை வளைத்தான் ;

256. பூண் - தோள்வளை ; மொய்ம்பு - தோள் ; புனிதன் - சிவபெருமான் ; காணிய - காண ; உம்பர் - மேலுலகம்.

நாணியை இனிது ஏற்றினன்" என்ற செய்தி இங்கே நீலமாலை என்ற தோழியின் வாயிலாக அறிவுறுத்தப் படுதல் நோக்கத்தக்கது. அவையில் கூடியிருந்தவர்கள் கண்ணை இமையாமல் விழித்தது விழித்த படியேதான் இருந்தனர். என்றாலும், அவர்களின் பார்வையில் இராமனின் அழகு, அவன் செயல், தங்கட்கு ஏற்பட்ட வியப்பு, வில்லின் பருமை இன்னும் எத்தனையோ தோற்றங்களும், எண்ணங்களும் இடம் பெற்றன. எனவே, அறிய முடியாதவராயினர். நீலமாலை என்னும் சீதையின் தோழிக்கு ஒரே எண்ணம். வில்லையே நோக்கினாள். உண்மை நிகழ்ச்சிகளை அறிந்தாள். அவ்வாறு அறிந்த கண்களை 'நெடுந்தடங் கிடந்த கண்' (பாட்டு 252) என்று சிறப்பித்தார் கவி. படம் பிடிக்கிற உயர்ந்த இயந்திரத்தில் நுட்பமான நிகழ்ச்சிகளும் பதிவாவது போல, நீல மாலையின் கண்களில் இந்த விரைந்த நிகழ்ச்சி பதிவாகிவிட்டது. 240-ம் பாடலுக்கு இப்பாடல் ஒரு விரிவுரையாக விளங்குகிறது.

வில் முறிந்தமை கூறல்

257 மாத்திரை அளவிற்றான்
வலித்து முன்பயில்
சூத்திரம் இதுஎனத்
தோளின் வாங்கினன் ;
ஏத்தினர் இமையவர் ;
இழிந்த பூமழை ;
வேத்தவை நடுக்குற
முறிந்து வீழ்ந்ததே. ௩௭

257. மாத்திரை - கண்ணிமைப் பொழுது ; வலித்து - இழுத்து ; சூத்திரம் - நாண் கயிறு ; வேத்தவை - வேந்து அவை : அரச அவை ; இது வலித்தல் விகாரம்.

கண் இமைக்கும் நேரத்தில் (நாணியை) இழுத்து இது முன்பு பலநாள் பயின்ற நாண்கயிறு என்று சொல்லும் வண்ணம் தோள்வரை கொண்டு சென்றான். தேவர்கள் வாழ்த்தினர்; பூமழை பெய்தது; கூடியிருந்த அரசவை நடுங்கும்படி வில் முறிந்து விழுந்தது.

(வி - ம்) வில்லின் ஒரு நுனியைக் காலில் மிதித்துக் கொண்டு வளைத்து நாணியை மாட்டிவிட்டான்; வளைத் தலும், நாண் பூட்டலுமாகிய இரு செயல்களையும் அவை யோர் காணவில்லை என்று 240-ம் பாடலில் கூறப்பட்டது. அச்செயல்களை நீலமாலை கண்டுவிட்டாள் என்று முன் பாடலில் கூறப்பட்டது. வில்லை வளைத்து நாணியை மாட் டிய பிறகு, இடக்கையில் தண்டைப் பிடித்துக்கொண்டு, வலக்கையால் நாணியை இழுத்துக் காதளவு போக்கினான்; தாங்கமாட்டாமல் தண்டு முறிந்து விட்டது.

சீதையின் மகிழ்ச்சி

258 கோமுனி யுடன்வரு
 கொண்டல் என்றபின்,
தாமரைக் கண்ணினன்
 என்ற தன்மையால்,
ஆம்அவ னேகொல்என்று
 ஐயம் நீங்கினாள்.
வாமமே கலைஇற
 வளர்ந்தது அல்குலே. ௩௮

பெரிய முனிவருடன் வந்த மேகம் போன்றவன் என்று கூறி, தாமரை போன்ற கண்ணையுடையவன் என் றும் கூறியதனால், 'ஆம், அவனேதான்' என்று மனத்திற்

258. வாமம் - அழகு: இற - அறும்படி.

கொண்டு ஐயம் தீர்ந்தாள். அழகிய மேகலை அறுந்து போகும்படி அவளுடைய அல்குல் பாகமானது வளர்ந்து பருத்துப் போயிற்று.

(வி – ம்) நீலமாலை சொல்லும் பொழுது, ‘தாமரைக் கண்ணினன்’ என்று சொல்லவில்லை. சொல்லாதிருந்தும் அவள் கூறியதாக இங்கு கூறப்படுகிறது. எனவே நீல மாலை சொல்லிய எல்லாவற்றையும் கவி கூருது சிறிதே கூறினரென்று கொள்ள வேண்டும். இப்படியே, (பாடல் 53) ‘வலஞ் செய்து வணங்க’ என வருகிறது. ஆனல், அதற்குமுன் பாடலில் ‘வலஞ்செய்து வணங்கியதாக’ இல்லை. ஒருவேளை இக்குறிப்புள்ள பாடல்கள் இருந்து இழக்கப்பட்டிருக்கவும் கூடும்.

சீதையின் மனத்தெளிவு

259 இல்லையே நுசுப்பென்பர்
உண்டுஉண்டு என்னவும்
மெல்லியல் முலைகளும்
விம்ம விம்முவாள்;
சொல்லிய குறியின்அத்
தோன்ற லே;அவன்
அல்லனேல் இறப்பென்என்று
அகத்துள் உன்னினாள். ௬௧

இடை இல்லை என்று கருதியவர்கள் உண்டு உண்டு என்று சொல்ல, மெல்லிய தன்மை வாய்ந்த கொங்கைகளும் விம்மத் தானும் விம்மினாள். (தோழி) சொல்லிய அடை யாளங்களால் அந்த ஆடவன்தான் இவன்; ஒருவேளை அவனல்லாதிருந்தால் இறந்துவிடுவேன் என்று மனத்துள் முடிவு செய்து கொண்டாள்.

---

259. நுசுப்பு - இடை; உன்னினாள் - நினைத்தாள்.

(வி – ம்) இதுவரை தன்னால் காணப்பட்டவன் வருவானா? தன்னை மணப்பானா என்றெல்லாம் ஐயப்பட்டு ஏங்கிக் கிடந்தாள் சீதை. நிகழ்ந்ததை நீலமாலை சொல்லக் கேட்டதும் சீதைக்கு ஒரு தெளிவு ஏற்பட்டு விட்டது.

மகிழ்வுற்ற சனகன் கூறுதல்

260 ஆசையின் அயர்பவள்
அன்னள் ஆயினள் ;
பாசடைக் கமலத்தோன்
படைத்த வில்இறும்
ஓசையிற் பெரியதோர்
உவகை எய்திஅக்
கோசிகற் கொருமொழி
சனகன் கூறுவான். ௬0

ஆசை மிகுதியினாலே தளர்ந்த சீதை இவ்வண்ணம் தெளிவடைந்திருந்தாள். பசுமையான இலைகளையுடைய தாமரை மலரில் வீற்றிருக்கிற பிரமன் படைத்த வில்லானது ஒடிந்த ஓசையினாலே பெரிய மகிழ்ச்சியை அடைந்து, கோசிக முனிவரிடம் சனகன் ஒரு சொல்லைச் சொல்லத் தொடங்கினான்.

(வி - ம்) இந்த வில்லைச் சிவபெருமானுக்காகப் பிரமன் படைத்துக்கொடுத்தான் என்பது கதை.

திருமணம் முடிக்கத் துடித்தல்

261 உரைசெய்எம் பெரும!உன்
புதல்வன் வேள்விதான்
விரைவின் இன்று ஒருபகல்
முடித்தல் வேட்கையோ ?

260. பாசு - பசுமையான ; அடை - இலை; இறும் ஓசை - ஒடிந்ததால் உண்டான ஓசை.

261. வேள்வி - திருமணம்; வேட்கை - விருப்பம்.

முரசெறிந்து அதிர்கழல்
முழங்கு தானைஅவ்
அரசையும் இவ்வழி
அழைத்தல் வேட்கையோ? ௬௧

(நீங்காத் துயரை நீக்க வந்த) பெருமானே! நும் மகனுடைய திருமணத்தை விரைந்து இன்றே ஒருநாளில் முடிக்க விருப்பமா? முரசடித்து வீரக்கழலோசை முழங்குகிற சேனைகளையுடைய தயரத மன்னனையும் இங்கே அழைக்க விருப்பமா? உரைத்தருள்க (என்றான்).

(வி - ம்) தயரதன் மகன் இராமன் என்பது தெரிந்திருந்தும் சனகன், முனிவரை நோக்கி 'இராமன் உன்புதல்வன்' என்று குறிப்பிடுவதால், தயரதன் இல்லாவிடினும் மணத்தை விரைவில் முடிக்கவேண்டும் என்பதும், அவ்வாறு செய்ய முனிவருக்கு உரிமை உண்டு என்பதும் பெறப்படுகின்றன. 'அரசையும்' என்ற உம்மையால் தயரதன் வந்து தீரவேண்டும் என்பதில்லை என்ற குறிப்புத் தோன்றுகிறது. அறுபதினாயிரம் ஆண்டு மகப்பேறு இல்லாதிருந்து பெற்ற அருமை மகன் திருமணத்திற்குத் தந்தையின் வருகை அவ்வளவு முக்கியமென்று சனகன் கருதவில்லை. சீதையின் திருமண நீட்டிப்பு அவனை அவ்வாறு எண்ணும்படி செய்துவிட்டது.

மணவோலை விடுத்தல்

262 மல்வலான் அவ்வுரை
பகர, மாதவன்
ஒல்லையில் அவனும்வந்து
உறுதல் நன்றென,

261. தானை - சேனை.
262. ஒல்லை - விரைவு.

எல்லையில் உவகையான்
இயைந்த ஆறெலாம்
சொல்லுகென்று ஓலையும்
தூதும் போக்கினான். சஉ

மற்போரில் வல்லவனாகிய சனகன் அவ்வாறு சொல்லவே, கோசிக முனிவர், விரைவில் தயரதனும் வந்து சேர்தல் தான் நன்று என்றார். எல்லையில்லாத மகிழ்ச்சி கொண்டவனாகிய சனகன் இங்கே நடந்த செய்திகளையெல்லாம் (தயரத மன்னனிடம்) சொல்லுங்கள் என்று தூதுவரை மண ஓலையுடனே அனுப்பினான்.

—

12. எழுச்சிப் படலம்

[சீதையின் திருமணத்திற்குத் தயரதன் எழுந்த செய்தியைக் கூறும் படலம்].

தூதுவர் அயோத்தியை அடைதல்

263 கடுகிய தூதரும்
காலிற் காலிற்சென்று
இடிகுரல் முரசதிர்
அயோத்தி எய்தினர் ;
அடிஇணை தொழஇடம்
இன்றி மன்னர்தம்
முடியொடு முடிபொரு
வாயில் முன்னினர். க

விரைவாகச் செல்ல முற்பட்ட தூதுவர்கள் காற்றைப் போலக் கால் நடையாகச் சென்று, இடியின் குரல் போன்று ஒலிக்கும் முரசு முழங்குகின்ற அயோத்தி நகரை அடைந்தார்கள். கப்பங் கட்ட வந்துள்ள அரசர்கள், தயரத மன்னனுடைய அடிகளில் வீழ்ந்து வணங்க இடமில்லாமல், முடியோடு முடி மோதும்படி மொய்த்திருக்கின்ற அரண்மனை வாயிலின் முன்சென்று சேர்ந்தனர்.

தூதுவர் செய்தி கூறல்

264 முகந்தனர் திருவருள் ;
முறையின் எய்தினர் ;
திகழ்ந்தொளிர் கழல்இணை
தொழுது, செல்வனைப்

---

263. கால் - காற்று ; அடியிணை - இரண்டு பாதங்கள் ; பொரு - மோதுகிற ; கடுகிய - விரைந்த.

264. முகந்தனர் - பெற்றனர் ; செல்வன் - தயரதன்.

புகழ்ந்தனர் ; அரச ! நின்
புதல்வர் போயபின்
நிகழ்ந்ததை இதுஎன
நெடிது கூறினர். உ

வருக ! என்ற அரசனது ஆணையைப் பெற்றனர். முறைப்படி உள்ளே சென்றனர். விளங்கித் தோன்றுகிற கழல் அணிந்த பாதங்களைத் தொழுது, தயரத மன்னனைப் புகழ்ந்தனர். பிறகு அரசனே ! உனது புதல்வர்கள் இங்கிருந்து போனபின் நிகழ்ந்தது இது என்று விவரமாகக் கூறினர்.

மணவோலை படித்தல்

265 கூறிய தூதரும்
கொணர்ந்த ஓலையை
ஈறில்வன் புகழினய் !
இதுஅது என்றனர் ;
வேறொரு புலமகன்
விரும்பி வாங்கினன் ;
மாறதிர் கழலினன்
'வாசி' என்றனன். ௩

செய்தி கூறிய தூதரும் தாம் கொணர்ந்த ஓலையை, 'முடிவில்லாத நிறைந்த புகழை உடைய மன்னனே ! இவ்வோலை எங்கள் மன்னன் தந்தது' என்றனர். அந்த ஓலையை அருகே நின்ற வேறொரு அறிஞன் விருப்பத்துடனே வாங்கினன். பகைவர் நடுங்கும்படியான வீரக்கழலையுடைய தயரதன் 'படிப்பாயாக !' என்றனன்.

---

264. நிகழ்ந்ததை - நிகழ்ந்தது : (ஐ - சாரியை.)
265. புலமகன் - அறிவுள்ளவன். மாறு - பகைவர்.

தயரதன் மகிழ்ச்சி

266 இலைமுகப் படத்துஅவன்
எழுதிக் காட்டிய
தலைமகன் சிலைத்தொழில்
செவியிற் சார்தலும்
நிலைமுக வலையங்கள்
நிமிர்ந்து நீங்கிட
மலையென வளர்ந்தன
வயிரத் தோள்களே. ச

பனையோலையின் வழியாகப் படம்போல் விளக்கிச் சனகன் எழுதிக் காட்டியிருக்கிற, தன் மூத்த மகனாகிய இராமன், வில்லை வளைத்து ஒடித்த செய்தி காதிலே விழுந்தவுடனே, நிலையாக இருந்த தோளணி வாய்விண்டு நீங்குமாறு வயிரம் என்று சொல்லத்தக்க தோள்கள் மலைபோலப் பூரித்துப் போய்விட்டன.

வில் ஒடிந்ததில் வியப்பு

267 வெற்றிவேல் மன்னவன்
தக்கன் வேள்வியில்
கற்றைவார் சடைமுடிக்
கணிச்சி வானவன்
முற்றஏழ் உலகையும்
வென்ற மூரிவில்
இற்றபேர் ஒலிகொலோ
இடித்தது ஈங்கென்றான். ரு

---

266. இலை - பனை ஓலை ; வலையம் - தோள்வளை.

267. கற்றை - தொகுதி; வார் - நீண்ட ; கணிச்சி - மழு ; கணிச்சி வானவன் - சிவபெருமான் ; மூரி - வலிமை.

தக்கன் வேள்வியில் திணிந்த நீண்ட சடைமுடியை உடைய மழுவைத் தரித்த சிவபெருமான் ஏழுலகையும் முடிய வென்றபோது தாங்கிய வலியவில் ஒடிந்ததால் உண்டான பெரிய ஓசைதானோ அன்று இடிபோல இங்கே கேட்டது என்று வெற்றிவேலை உடைய தயரதன் கூறினான்.

(வி – ம்) மகன் சிவனுடைய வில்லை முறித்தான் என்ற சொல்லைக் கேட்டதும் மகிழ்ச்சி பெருகிவிட்டது. ஒடிந்த பெருஞ்சத்தத்தைக் கேட்டாற் போன்ற ஒரு உணர்ச்சி ஏற்பட்டு விட்டது. மிகுதியான மகிழ்ச்சியோ மிகுதியான துக்கமோ ஏற்படும்போது தொடர்பில்லாத எண்ணங்கள் தோன்றுதல் இயல்பு.

தூதுவர்க்குப் பரிசளித்தல்

268 என்றுஉரைத்து எதிர்எதிர்
இடைவி டாதுநேர்
துன்றிய கனைகழல்
தூதர் கொள்கெனப்
பொன்திணி கலன்களும்
தூசும் போக்கினான்
குன்றென உயரிய
குவவுத் தோளினான். ௬௬

மலைபோல் உயர்ந்து திரண்ட தோளையுடைய மன்னன் இவ்வாறு சொல்லிவிட்டு, 'நெருங்கிய கழல்களை அணிந்த தூதர்களே, பெற்றுக்கொள்ளுங்கள்!' என்று கூறி இரு பக்கங்களிலுமிருந்து ஓய்வின்றி, பொன்னாற் செய்த அணிகளையும், ஆடைகளையும் கொடுக்கச் செய்தான்.

---

268. துன்றிய - நெருங்கிய ; கனை - ஒலிக்கின்ற ; தூசு - ஆடை ; குவவு - திரண்ட.

(வி - ம்) தூதர்கள் எதிரில் நிற்கின்றனர். இருபுறத்திலும் இருந்து சன்மானப் பொருள்கள் ஒன்றை யொன்று எதிர்த்துப் போட்டியாக வருவதுபோல் வருகின்றன; இடைவிடாது வருகின்றன. அரசன் அவற்றை வாங்கிக் கொடுக்க முடியவில்லை. எனவே, கையை அசைத்துக் 'கொடுங்கள்! கொடுங்கள்'! என்ற குறிப்பைக் காட்டிக் கொண்டிருக்கிறான். அக்குறிப்பைப் 'போக்கினன்' என்ற சொல் விளக்கி நிற்கிறது. மன்னரவையில் சன்மானப் பொருளை அரசர்கள் தொடுவதும் கைகாட்டுவதும் வழக்கம்.

மணமுரசு அறைதல்

269 வானவன் குலத்துஎமர்
வரத்தி னுல்வரும்
வேனில்வேள் இருந்தஅம்
மிதிலை நோக்கிநம்
சேனையும் அரசரும்
செல்க முந்தென
ஆனைமேல் மணமுரசு
அறைகென்று ஏவினன். எ

சூரிய குலத்துதித்த எமது முன்னோர் செய்த தவத்தினுல் பிறந்த - மன்மதன் போன்ற இராமன் இருக்கிற அந்த மிதிலை நகரை நோக்கி, நம்முடைய சேனைகளும், சிற்றரசர்களும் முன்னுலே செல்லட்டும் என்று யானை முதுகில் ஏற்றி மணமுரசு அறைக என்று உத்தர விட்டான்.

---

269. வானவன் - சூரியன்; வேனில் வேள் - மன்மதன்: இங்கே மன்மதன் போன்ற இராமனைக் குறித்தது.

நகரத்தின் மகிழ்ச்சி

270 சாற்றிய முரசொலி
செவியிற் சாருமுன்
கோற்ருெடி மகளிரும்
கோல மைந்தரும்
வேற்றரு குமரரும்
வென்றி வேந்தரும்
காற்றெறி கடல்எனக்
களிப்பின் ஓங்கினர். அ

அடிக்கப்பட்ட முரசின் ஒலி கேட்டவுடனே திரண்ட வளையல்களை யணிந்துள்ள பெண்களும், அழகிய மைந்தர்களும், வேல் தாங்கிய படை வீரரும், வெற்றிக்குரிய சிற்றரசர்களும், காற்றினுல் மோதப்பட்ட கடலைப் போலக் களிப்பினுல் பூரித்தனர்.

தேர்களும் யானைகளும் புறப்படல்

271 சில்லிடம் உலகெனச்
செறிந்த தேர்கள்தாம்
புல்லிடு சுடரெனப்
பொலிந்த வேந்தரால்;
எல்லிடு கதிர்மணி
எறிக்கும் ஓடையால்
வில்லிடு முகிலெனப்
பொலிந்த வேழமே. க

---

270. கோற்ருெடி=கோல்+தொடி - திரண்ட வளையல்; வென்றி - வெற்றி; வென்றி வேந்தர், இயற்கை அடை.

271. சில் இடம் - சிறு இடம்; புல்லிடு - பொருந்தியிருக்கிற; எல் - ஒளி; ஓடை - (முகபடாம்) நெற்றிப்பட்டம்; வேழம்-யானை.

உலகம் சிறிது என்று தோன்றும்படி நெருங்கிச் செல்கின்ற தேர்கள், சூரியனை ஏற்றிக் கொண்டிருப்பதைப் போல அரசர்களால் விளங்கின. ஒளி வீசுகிற கிரணங்களையுடைய இரத்தினங்கள் விளங்குகிற நெற்றிப் பட்டங்களால் வானவில்லையுடைய மேகத்தைப் போல யானைகள் விளங்கின.

(வி - ம்) தேர்கள் வரிசை வரிசையாக வந்தவுடன், தேர்களை நிறுத்தவே இந்தப் பூமி இடங்காணாது போலிருக்கிறதே என்று தோன்றுகிறது; அவ்வளவு தேர்கள். அவற்றில் ஏறியிருக்கிற அரசர்கள் ஒரே ஒளிமயமாக இருக்கிறார்கள். இரத்தின நகைகளை அணிந்திருக்கிற காரணத்தால் சூரியனே வந்து தேரில் ஏறியிருப்பதைப் போலிருக்கிறது. யானைகளின் நெற்றியில் கட்டப்பட்டிருக்கிற பட்டத்தில் பல மணிகள் பதிக்கப் பட்டிருப்பதால் வான வில்லைப் போலவும், அதை அணிந்திருக்கிற யானைகள் மேகத்தைப் போலவும் இருக்கின்றன.

மகளிர் சென்ற காட்சி

272 மன்மணிப் புரவிகள்
மகளிர் ஊர்வன
அன்னமுந் தியதிரை
ஆறு போன்றன;
பொன்னணி புணர்முலை
புரிமென் கூந்தலார்
மின்னென மடப்பிடி
மேகம் போன்றவே. ௯0

272. மணி - கிண்கிணி மாலை; அன்னம் உந்திய - அன்னத்தைத் தள்ளிச் செல்லுகிற; புரி - முறுக்கு: பின்னல்; மடம்+பிடி=மடப்பிடி; மடம் - இளமை; பிடி - பெண் யானை.

பெண்கள் ஏறிச் செல்கிற - கிண்கிணி மாலை அணிந்த குதிரைகள், அன்னப் பறவைகளைத் தாங்கிச் செல்லும் அலைகளையுடைய ஆற்றைப் போன்றிருந்தன. தங்க நகைகளணிந்த நெருங்கிய தனங்களையும், பின்னிவிடப்பட்ட மெல்லிய கூந்தலையும்உடைய பெண்கள் மின்னலைப்போல விளங்க, அவர்கள் ஏறிச் செல்லும் இளம் பெண் யானைகள் மேகத்தைப் போன்றிருந்தன.

(வி – ம்) குதிரைகளின் மேல் பெண்கள் ஏறிச் செல்கின்றனர். குதிரைகள் மிதிலையை நோக்கிப் போகின்றன. அது ஒரு ஆறு செல்கிற மாதிரி தோன்றுகிறது. ஆற்று நீரின் மேல் அன்னப் பறவைகள் மிதந்து செல்வது போல மகளிர் காணப்படுகின்றனர். யானையின்மேலும் மகளிர் செல்கிறார்கள். அது மேகத்தின்மேல் மின்னல் ஏறிப் போகிற மாதிரி இருக்கிறது. மேகத்தில் மின்னல் தோன்றி மறையும். இங்கே மின்னல் நிலைத்து நிற்கிறது.

ஊடலுடன் வழிப்பயணம்

273 ஊடிய மனத்தினர்;
உறாத நோக்கினர்;
நீடிய உயிர்ப்பினர்;
நெரிந்த நெற்றியர்;
தோடவிழ் கோதையும்
துறந்த கூந்தலர்;
ஆடவர் உயிரென
அருகு போயினர். ௧௧

தம் கணவரோடு பிணங்கிய மனமுள்ள பெண்கள் (கணவரைத்) திரும்பிப் பாராமலும், பெருமூச்சு விட்டுக்

273. உறாத - பொருந்தாத : இணக்கம் அற்ற ; நெரிந்த - சுருங்கிய ; தோடு - இதழ் ; கோதை - மாலை.

கொண்டும், நெற்றியைச் சுழித்துக் கொண்டும், இதழ் விரிந்த மலரை நீக்கிய கூந்தலோடும் தங்கணவர்களுடன் அவர்களுடைய உயிரைப்போலத் தொடர்ந்து சென்றனர்.

(வி – ம்) கணவனுக்கும் மனைவிக்கும் வீட்டில் இரவெல்லாம் பிணக்கு. விடியற்காலம் இராமனுக்குத் திருமணம் என்ற செய்தி கேட்டதும் இருவரும் பயணம் கட்டிவிட்டார்கள். கோபம் ஒருபுறம் இருந்தாலும் திருமணத்திற்குச் செல்வதை விடமுடியவில்லை. கோபத்துடனேயே பயணம் நடக்கிறது. இப்படிப் பல குடும்பங்கள் செல்வதால் பன்மையாகக் கூறப்பட்டது. நெரிதலாவது சினமும் வெறுப்பும் கொண்டவர் கண்ணை ஒடுக்கி விழித்துப் பார்க்கும்போது ஏற்படுகிற நெற்றிச் சுருக்கம்.

துணைவியைப் பிரிந்தவன் நிலை

274 பிள்ளைமான் நோக்கியைப்
பிரிந்து போகின்றான்
அள்ளல்நீர் மருதவைப்பு
அதனில் அன்னமாம்
புள்ளும்மென் தாமரைப்
போதும் நோக்கினான்;
உள்ளமும் தானும்நின்று
ஊசல் ஆடினான். கஉ

மான்குட்டியைப் போன்ற கண்ணையுடைய இளமனைவியைப் பிரிந்து செல்லும் ஒருவன், சேறும் நீரும் கலந்து நிற்கும் மருத நிலத்தில் அன்னப் பறவைகளையும், தாமரை மலர்களையும் கண்டான்; மனமும் தானுமாக நின்று தவித்தான்.

---

274. பிள்ளைமான் - மான்குட்டி; அள்ளல் - சேறு.

(வி – ம்) மனைவியைப் பிரிந்து செல்லும் கணவன் செல்லும் வழியில் அன்னப் பறவைகளையும் தாமரை மலர்களையும் பார்க்கிறான். மனைவியின் நடையழகும் மெல்லிய அடிகளும் நினைவுக்கு வருகின்றன. ஏங்குகிறான். உள்ளமும் தானும் பெண்ணின்பால் நினைப்பும், வழியின்பால் செயலுமாக ஊசலாடினான் என்க. இராமன் முன்னே செல்ல, பின்சென்ற சீதை இராமன் அடியெடுத்து வைக்கும் போதெல்லாம் பின்னால் தெரியும் சிவந்த அடிகளையும், பக்கத்து நீரில் பூத்திருக்கும் தாமரை மலரையும் ஒப்புக் கண்டு களித்தாள் என்று வரும் குறிப்பு இங்கே நினைவு கூரத் தக்கதாகும். 'கஞ்சங்களை மஞ்சன்கழல் நகுகின்றது கண்டாள்' (கங்கைப் படலம்).

அளவிலாப் பெருங் கூட்டம்

275 சித்தி ரத்தடந்
தோள்மைந்தர் மங்கையர்
உய்த்து உரைப்ப
நினைப்ப உலப்பிலர் ;
இத்தி றத்தினர்
எத்தனை யோபலர்
மொய்த்து இரைத்து
வழிக்கொண்டு முன்னினார். கரு

திருமணத்தின் பொருட்டுச் செல்லுகிற அழகிய பெரிய தோள்களை உடைய இளைஞர்களையும் பெண்களையும் இத்தன்மை யுடையார் என்று ஊகித்துச் சொல்லவோ

275. சித்திரம் - அழகிய; தடம் - பெரிய; உய்த்து உரைத்தல் - ஆராய்ந்து சொல்லல் ; உலப்புஇலர் - அளவிலாதவர் ; முன்னுதல் - செல்லுதல்.

நினைக்கவோ முடியாது. இத்தன்மையை உடையார் எவ்வளவு பேர் நெருங்கி இரைந்துகொண்டு மிதிலைக்குச் செல்லும் வழியில் தொடர்ந்து சென்றார்கள்.

ஊமைக் கூட்டம்

276 குரைத்த தேரும்
களிறும் குதிரையும்
நிரைத்த வார்முர
சும்நிமிர்ந்து எங்கணும்
இரைத்த பேரொலி
யால்இடை யாவரும்
உரைத்து உணர்ந்திலர்
ஊமரின் ஏகினர். கசு

(மணிகள் கட்டியிருப்பதால்) ஒலிக்கிற தேர்களும், யானைகளும் குதிரைகளும் தோல் வாரினால் கட்டப்பட்டு வரிசையாகச் செல்கிற முரச வாத்தியங்களும் எங்கும் மிகுந்து ஒலித்த பெரிய ஓசையினாலே, இடையே சென்ற மக்கள் தாங்கள் பேசிய பேச்சை உணர முடியாமற் போன படியால் ஊமைக் கூட்டம்போலச் சென்றார்கள்.

(வி - ம்) பெருங்கூட்டம்; அதிலும் மகிழ்ச்சி கரை புரண்ட கூட்டம். ஆதலால் பலவகையான இரைச்சலோடு கிளம்பிச் செல்கிறது. இடையே செல்லும் மக்களும் ஏதேதோ பேசிக் கொண்டுதான் செல்கின்றனர். ஆனால் இவர்கள் பேசும் பேச்சு, அந்த இரைச்சலில் கலந்து விடுகிறதே அல்லாமல் தனியாகக் கேட் பதற்கில்லை. பேசுபவரின் வாய் அசைவதுதான் தெரி

276. குரைத்த - ஒலித்த; நிரை - வரிசை; வார் - தோலில் வகிர்ந்தெடுத்த வார்; நிமிர்ந்து - மிகுந்து.

கிறது. கேட்பவரின் காதில் ஒலி விழுகிறது. பொருள் விளங்கவில்லை. எனவே, வாயிருந்தும் ஊமையின் நிலைமை ஆகிவிட்டது. காதிருந்தும் செவிடன் நிலைமை ஆகிவிட்டது. மகிழ்ச்சி, ஆரவாரம் எல்லாம் ஒரே பேரொலியாகி மிதிலையை நோக்கிச் செல்ல முடிந்ததே யன்றித் தனித் தனியான மகிழ்ச்சிக்கு இடமில்லை. ஊமர் என்றதனுலே செவிடும் அடங்கியது; செவிடின்றி ஊமையில்லை யல்லவா?

இரவும் பகலும்

277 *குடையொடு களிறும் தொங்கற்
குழாங்களும் கொடியின் காடும்
இடைஇடை மயங்கி எங்கும்
வெளிகரந்து இருளைச் செய்யப்
படைகளும் முடியும் பூணும்
படர்வெயில் பரப்பிச் செல்ல
இடைஒரு கணத்தி னுள்ளே
இரவுண்டு பகலும் உண்டே. கரு

குடைகளும், யானைகளும், தோரணங்களும், கொடிகளும் ஒன்ருேடொன்று கலந்து எங்கும் இடைவெளி யில்லாமற் செய்து இருட்டை உண்டாக்குகின்றன. படைக் கலங்களும், மாணிக்கம் அழுத்திய முடிகளும், நகைகளும் பரவுகின்ற ஒளியைப் பெருக்கிச் செல்கின்றன. இதனுல் ஒவ்வொரு கணமும் பகலாகவும் இரவாகவும் தோன் றிற்று.

---

277. களிறு - ஆண் யானை; தொங்கல் - மாலை; குழாம் - கூட்டம்; காடு - தொகுதி; மயங்கி - கலந்து; வெயில் - ஒளி.

கைகேயி செல்லுதல்

278 பொய்கைஅம் கமலக் கானில்
பொலிவதோர் அன்னம் என்னக்
கைகயர் வேந்தன் பாவை
கன்னியர் ஈட்டம் பொங்கி
ஐஇரு நூறு சூழ
ஆய்மணிச் சிவிகை தன்மேல்
தெய்வமங் கையரும் நாணத்
தேன்இசை முரலப் போனாள். கஅ

பொய்கையிலுள்ள தாமரைக் கூட்டத்தில் விளங்குகிற ஓர் அன்னப்பறவை என்று சொல்லும்படி, கேகய நாட்டு மன்னன் மகள், மிகப் பலராகிய கன்னிப் பெண்களின் கூட்டமானது சூழ்ந்துவர, ஆராய்ந்தெடுத்துச் செய்த மாணிக்கப் பல்லக்கில், தேவமாதரும் வெட்கப் படும்படி தேன் வண்டுகள் ஒலி செய்யப் புறப்பட்டாள்.

(வி - ம்) ஆயிரக்கணக்கான பெண்கள் உடன்செல்லுகிறார்கள். அப்பெண்களின் மலர்ந்த முகங்கள் எல்லாம் தாமரைப் பூக்களாகக் காட்சியளிக்கின்றன. அந்த மலர்க் காட்டின் இடையே ஓர் அன்னம் விளங்குவதைப் போலக் கைகேயி விளங்குகிறாள்.

சுமித்திரை செல்லுதல்

279 விரிமணித் தார்கள் பூண்ட
வெல்பரி வெரிநில் தோன்றும்
அரிமலர்த் தடங்கண் நல்லார்
ஆயிரத் திரட்டி சூழக்

278. கமலக்கான் - தாமரை மலர்க் கூட்டம் ; சிவிகை - பல்லக்கு ; தேன் - வண்டு; முரல - ஒலிக்க; ஐஇருநூறு - ஆயிரம்: மிகப்பலர் என்பதை உணர்த்திற்று.

279 வெல்பரி - வெற்றிபொருந்திய குதிரை ; வெரிந் - முதுகு ; ஆயிரத்து இரட்டி - இரண்டாயிரம்.

குருமணிச் சிவிகை தன்மேற்
கொண்டலின் மின்இது என்ன
இருவரைப் பயந்த நங்கை
யாழ்இசை முரலப் போனாள். கஎ

விரிந்த கிண்கிணி மாலைகளை அணிந்துள்ள குதிரைகளின் முதுகில் ஏறிக்கொண்டு, செவ்வரி படர்ந்த விசாலமான கண்களையுடைய இரண்டாயிரம் பெண்கள் சூழ்ந்து வர, நீலக் கற்கள்பதித்த பல்லக்கில், மேகத்தினிடையே தோன்றும் மின்னலைப் போல, இருவரைப் பெற்ற சுமித்திரை யாழிசை முழங்கப் புறப்பட்டாள்.

கோசலை செல்லுதல்

280 வெள்ளயிற்று இலவச் செவ்வாய்
முகத்தைவெண் மதியம் என்று
கொள்ளையிற் சுற்றும் மீன்கள்
குழுமிய அனைய ஊர்தி
தெள்அரிப் பாண்டி பாணிச்
செயிரியர் இசைத்தேன் சிந்த
வள்ளலைப் பயந்த நங்கை
வானவர் வணங்கப் போனாள். கஅ

ஒளிபொருந்திய பற்களையும், முள்முருக்கம் பூவைப் போல் செந்நிறமுள்ள உதட்டினையும் உடைய முகத்தை, வெண்ணிறமுள்ள நிலவென்று கருதி விண்மீனெல்லாம் வந்து சுற்றிக் கூடி விட்டனவோ என்று சொல்லும்படி அமைந்த பல்லக்கில், தெளிந்த தேன் வண்டுகளின் இசையை ஒத்த பாண்டி என்னும் பண்ணினைத் தாளத்தோடு பாட வல்ல பாடகர், இசையாகிய தேனைச் சொரியவும், தேவர்கள்

280. வெள் எயிறு - வெண்மையான பல்; இலவு - முள் முருக்கு; ஊர்தி - வாகனம்: பல்லக்கு; பாண்டி - ஒருவகைப் பண்; பாணி - தாளம்; செயிரியர் - பாணர்; பாடகர்.

வணங்கவும், வள்ளலாகிய இராமனைப் பெற்ற கோசலை புறப்பட்டாள்.

தயரதனுடைய மற்ற மனைவியர் செல்லுதல்

281 துப்பினின் மணியிற் பொன்னிற்
சுடர்மர கதத்தின் முத்தின்
ஒப்புற அமைத்த தேரின்
ஓவியம் போல ஏறி
முப்பதிற் றிரட்டி கொண்ட
ஆயிரர் முகிழ்மென் கொங்கைச்
செப்பருந் திருவின் நல்லார்
தெரிவையர் சூழப் போனார். கக

பவழம், மாணிக்கம், தங்கம், மரகதம், முத்துஆகியவை கொண்டு அழகாகச் செய்யப்பட்ட தேர்களில் பதுமை போல ஏறி, அறுபதினாயிரம் என்ற எண்ணிக்கையை உடைய இளைய மெல்லிய கொங்கைகளையுடைய சொல்லுதற்கரிய இலக்குமிபோன்ற பெண்களாகிய அரசன் தேவிமார் ஏனைய பெண்டிர் சூழ்ந்துவரச் சென்றனர்.

வசிட்டன் செல்லுதல்

282 செவிவயின் அமுத கேள்வி
தெவிட்டினார், தேவர் நாவின்
அவிகையின் அளிக்கும் நீரார்,
ஆயிரத் திரட்டி சூழக்
கவிகையின் நீழற் கற்பின்
அருந்ததி கணவன் முத்துச்
சிவிகையின் அன்னம் ஊரும்
திசைமுகன் என்னச் சென்றான். உ௦

281. துப்பு - பவழம்; திரு - இலக்குமி; தெரிவையர் - பெண்கள்.

282. வயின் - இடம்; அவி - வேள்வித் தீயிலிடும் உணவு; கவிகை - குடை; சிவிகை - பல்லக்கு; திசை முகன் - பிரமன்.

கர்திஞல் கேள்வியறிவாகிய அமுதை யுண்டு தெவிட்டிப் போயிருப்பவரும், தேவர்களின் நாவில் அவியுணவைத் தமது கைகளினல் ஊட்டுபவருமான தன்மையை உடைய இரண்டாயிரம்பேர் சூழ்ந்துவர, கற்பிற் சிறந்த அருந்ததியின் கணவனை வசிட்டர், குடைநிழலில் முத்துப் பல்லக்கிலே, அன்னத்தில் ஏறிச் செல்லும் பிரமனைப் போலச் சென்ருர்.

பரத சத்துருக்கர் செல்லுதல்

283 பொருகளிறு இவுளி பொற்றேர்
பொலங்கழற் குமரர் முந்நீர்
அருவரை சூழ்ந்த தென்ன
அருகுபின் முன்னும் செல்லத்
திருவளர் மார்பர் தெய்வச்
சிலையினர் தேரர் வீரர்
இருவரும் முனிபின் போன
இருவரும் என்னப் போனர். உக

போர் செய்கிற யானைகளும், குதிரைகளும், அழகிய தேர்களும், அழகிய வீரக்கழலணிந்த குமரர்களும், மலையைச் சூழ்ந்த கடலைப்போல முன்னும் பின்னும் பக்கங்களிலும் பரவிச் செல்ல, இலக்குமி இருந்து வளருகிற மார்பை உடையவரும், தெய்வத்தன்மை பொருந்திய வில்லினை உடையவரும், தேரிற் செல்பவருமாகிய இரண்டு வீரர்களும் கோசிக முனிவரின் பின் சென்ற இருவரைப் போலச் சென்ருர்கள்.

---

283. வீரர் இருவர் - பரதனும் சத்துருக்கனும் ; களிறு - ஆண்யானை ; இவுளி - குதிரை; முந்நீர் - கடல்: ஆற்றுநீர், ஊற்றுநீர், மழைநீர் ஆகிய மூன்றுங் கொண்டது ; ஆக்கல், காத்தல், அழித்தல் என்ற மூன்று நீர்மையினை உடையதால் 'முந்நீர்' என்று உரைப்பாரும் உளர்.

பல்வேறு ஓசைகள்

284 மந்திர கீத ஓதை
வலம்புரி முழங்கும் ஓதை
அந்தணர் ஆசி ஓதை
ஆர்த்தெழு முரசின் ஓதை
கந்துகொல் களிற்றின் ஓதை
கடிகையர் கவியின் ஓதை
இந்திர திருவன் செல்ல
எழுந்தன திசைகள் எல்லாம். உஉ

இந்திரனை ஒத்த செல்வமுள்ள தயரதன் புறப்பட்டான்; மந்திரம் நிறைந்த பாடலின் ஓசையும், வலம்புரிச் சங்கு முழங்கும் ஓசையும் அந்தணரின் வாழ்த்தொலியும், கிளர்ந்து எழுகின்ற முரசின் ஒலியும், கட்டுத்தறியை முறிக்கிற யானைகளின் பிளிறலும், நாழிகைக் கணக்கர் கூறும் பாடலின் ஓசையும் சேர்ந்து எட்டுத்திசைகளிலும் கேட்டன.

தயரதன் செல்லுதல்

285 நோக்கிய திசைகள் தோறும்
தன்னையே நோக்கிச் செல்லும்
வீக்கிய கழற்கால் வேந்தர்
விரிந்தகைம் மலர்கள் கூப்பத்
தாக்கிய களிறும் தேரும்
புரவியும் படைஞர் தாளும்
ஆக்கிய தூளி விண்ணும்
மண்உலகு ஆக்கப் போனான். உ௩

---

284. ஓதை - ஓசை ; கந்து - கட்டுத்தறி ; கடிகையர் - அரசனுக்கு நாழிகை கூறுவோர்.

285. வீக்கிய - கட்டிய ; தாக்கிய - முட்டுகிற ; தூளி - புழுதி.

தயரதன் பார்க்கிற திசைகள் தோறும், அவனையே பார்த்துக்கொண்டு செல்லுகிற, கழலணிந்த காலையுடைய சிற்றரசர் விரிந்திருந்த தம் கைகளைக் குவிக்கவும், ஒன்றோடொன்று முட்டுகின்ற யானைகளும், தேர்களும், குதிரைகளும், காலாட் படைகளும் செல்வதனால் கிளம்பிய புழுதி பொன்னுலகத்தையும் மண்ணுலகமாக்கத் தயரத மன்னன் சென்றான்.

(வி – ம்) மண்ணுலகைச் சிறப்பித்துப் பொன்னுலகாவதாகக் கூறுவது இயல்பு. இங்கே திருமணத்துக்குச்செல்கிறவர்களுடைய கால்தூசி பொன்னுலகத்துக்குச் சென்று அதை மண்ணுலகாக்கிவிட்டதென்பது கவனிக்கத் தக்கது.

சேனைப் பெருக்கம்

286 வீரரும் களிறும் தேரும்
புரவியும் மிடைந்த சேனை
பேர்விடம் இல்லை; மற்றோர்
உலகில்லை ; பெயர்க்கல் ஆகா
நீர்உடை ஆடை யாளும்
நெளித்தனள் முதுகை என்றால்,
பார்பொறை நீக்கி னான்என்று
உரைப்பதுஎப் பரிசு மன்னோ. உ௪

வீரரும், யானையும், தேரும், குதிரையும் நெருங்கிய சேனைக்குப் பெயர்ந்து நகர இடமில்லை. வேறு உலகிற்குப் போதலும் இயலாது. நீக்கமுடியாத கடலை ஆடையாக உடுத்த நிலமகளும் முதுகை நெளித்தாள்

286. நீர் உடை ஆடையாள் - கடலாற் சூழப்பட்ட நிலவுலகு.

என்ருல், பூமியின் சுமையைத் தீர்த்தான் என்று தயரதனைப் பற்றிச் சொல்வது எவ்வாறு பொருந்தும் ?

(வி – ம்) அரசர்கள் நிலத்தின் சுமையை நீக்குகின்றனர் என்பது வழக்கு. அதாவது உதவாத வீண் மனிதர்கள் நிலத்துக்குச் சுமையாக இருக்கிருர்கள் ; அவர்கள் பெருகாதபடி காக்க வேண்டுமென்பது கருத்து. "கண்ணோட்டத்துள்ளது உலகியல் அஃதிலார், உண்மை நிலக்குப் பொறை" (குறள் 572). சுமையை நீக்குகிருன் என்று யாவரும் கூறிக்கொண்டிருக்க, இப்படி ஒரே இடத்தில் யாவற்றையும் தேக்கி நிலமகளைச் சுமக்கவைக்கிருனே என்று கூறப்பட்டிருத்தல் வஞ்சப் புகழ்ச்சியாகும்.

தயரதன் சந்திர சயிலம் சார்தல்

287 இன்னணம் ஏகி மன்னன்
ஓசனை இரண்டு சென்ருன்,
பொன்வரை போலும் இந்து
சயிலத்தின் சாரல் புக்கான்;
மன்மதக் களிறும் மாதர்
கொங்கையும் மாரன் அம்பும்
தென்வரைச் சாந்தும் நாறச்
சேனைசென்று இறுத்த தன்றே. உரு

தயரத மன்னன் இவ்வாறு புறப்பட்டு இரண்டு யோசனை தூரம் சென்ருன். மேரு மலையைப் போன்ற சந்திர சைலம் என்ற மலைச்சாரலை அடைந்தான். மன்

287. சயிலம் - மலை ; மன்மதக்களிறு - மன்மதனுடைய யானை : இருட்டு ; மாரன் அம்பு - மன்மதன் அம்பு : முல்லை ; சாந்து - சந்தனம் ; நாறுதல் - மணத்தல் ; இறுத்தது - சென்று தங்கியது.

மதனின் யானையாகிய இருளானது, முல்லையை மலரச் செய்யவும், மாதர் கொங்கைகளின் பொதிகைமலைச் சந்தன மணம் நாறச்செய்யவும், சேனைகள் அங்கே சென்றடைந் தன.

(வி - ம்) இருட்டு, முல்லை மலர்ந்து மணக்கும்படி செய்தது. முல்லையின் செயல் இருட்டின்மேல் ஏற்றிக் கூறப் பட்டது. மாதர் கொங்கையில் சந்தனம் பூசப்பட்டிருப்ப தால் அந்த மணத்தை வீசியது. நிரனிறைப் பொருள் கோள். இருட்டு மன்மதனின் யானை என்பதை, " ஆலைக் கரும்புசிலை ; ஐங்கணைபூ ; நாண் சுரும்பு ; மாலைக்கிளி புரவி; மாருதம் தேர் ; வேலை கடிமுரசம் ; கங்குல்களிறு ; குயில் காளம் ; கொடி மகரம் ; திங்கள் குடை " (இரத்தினச் சுருக்கம்) என்பதனால் அறிக.

---

13. வரைக்காட்சிப் படலம்

[மலையின் காட்சியைக்கண்டு அனுபவிக்கும் படலம்.
வரை - மலை.]

யானைமீதிருந்து பெண்கள் இறங்குதல்

288 *கோவை ஆர்வடக் கொழுங்குவடு
ஒடிதர நிவந்த
ஆவி வேட்டன வரிசிலை
அனங்கன்மேற் கொண்ட
பூவை வாய்ச்சியர் முலைசிலர்
புயத்தொடும் பூட்டத்
தேவ தாரத்தும் சந்திலும்
பூட்டின சிலமா. ௧

(1) கோத்த மாலைகளை அணிந்திருப்பனவும், செழுமையான மலையுச்சிகளும் நாணும்படி மேலோங்கி நிற்பனவும், கணவரது உயிரை விரும்பியனவும், கட்டமைந்த மன்மதனையே தன்னுள் அகப்படுத்தியனவுமான, மைனாவைப் போலப் பேசுகின்ற வாயையுடைய இளம் பெண்களின் முலைகள் கணவர்களது தோள்களோடு பூட்டப்பட்டன.

(2) வானத்தை அளாவிய ஆலமரத்தின் கிளைகள் ஒடிந்து விழும்படி துதிக்கைகளை மேலே நீட்டின; தாகத்

---

288. (1) குவடு - மலையுச்சி ; ஒடிதர - (பெருமை) முறிய; நிவந்த - ஓங்கின ; ஆவி - கணவரது உயிர் ; வேட்டன — விரும்பின ; அனங்கன் - மன்மதன் ; பூவை - மைனா.

288. (2) கோ - வானம்; வடம்-ஆலமரம்; குவடு-கிளைகள்; ஆவி - நீர்நிலை ; சந்து - சந்தனமரம் ; மா - யானை.

தைத் தீர்க்கும் பொருட்டு நீர்நிலைகளை விரும்பின ; வில்லைத் தாங்கிய மன்மதனைப் போன்ற இளைஞர்களை முதுகில் சுமந்து வந்தன ; அப்படிப்பட்ட யானைகள் தேவதாரு என்ற மரங்களிலும், சந்தன மரங்களிலும் கட்டப்பட்டன.

(வி – ம்) யானைகளின் மீது பெண்களும் ஆண்களும் சவாரி செய்து வந்தனர். யானை மீதிருந்த தங்கள் மனைவியரைக் கட்டித்தழுவிக் கீழே இறக்கிவிட்டனர். யானைகள் மரங்களிலே கட்டப்பட்டன. முதல் இரண்டு அடிகள் சிலேடை.

குதிரையில் வந்த பெண்கள்

289 உய்க்கும் வாசிகள் இழிந்தனர்
அன்னத்தின் ஒதுங்கி
மெய்க்க லாபமும் குழைகளும்
இழைகளும் விளங்கத்
தொக்க மென்மர நிழல்படத்
துவன்றிய சூழல்
புக்க மங்கையர் பூத்தகொம்பு
ஆம்எனப் பொலிந்தார் உ

பெண்கள் தாங்கள் ஏறிவந்த குதிரைகளை விட்டுக் கீழே இறங்கினர் ; அன்னப்பறவை போல ஒதுங்கி, உடலில் ஒட்டியாணமும், காதணிகளும், மற்றைய நகைகளும்விளங்க, மரக்கூட்டத்தின் நிழல் படிந்த இடத்தில் புகுந்த பெண்கள், பூத்துக் குலுங்கும் பூங்கொம்புபோல விளங்கினர்.

---

289. உய்க்கும் - செலுத்தப்படும் ; வாசி - குதிரை ; மெய்- உடல் ; தொக்க - கூட்டமான ; சூழல் - இடம்.

பெண்கள் களைப்பினால் உறங்குதல்

290 தளங்கொள் தாமரை எனத்தளிர்
அடியினும் முகத்தும்
வளங்கொள் மாலைவண்டு அலமர
வழிவருந் தினராய்
விளங்கு தம்உருப் பளிங்கிடை
வெளிப்பட வேறோர்
துளங்கு பாறையில் தோழியர்
அயிர்த்திடத் துயின்றார். ௯

இதழ் நிறைந்த தாமரை மலர் என்று கருதி, கால்களிலும், முகத்திலும் தேனுண்டு கொழுத்த வண்டுகள் தொடர்ந்து சுழன்று கொண்டிருக்க, வழிச்செலவினால் ஏற்பட்ட களைப்பால் ஒளிபொருந்திய பாறையின்மேல் பெண்கள் படுத்துறங்கினர். ஆனால் அவர்களுடைய உருவம் எதிரே உள்ள பளிங்குப் பாறைகளில் தெரிவதைக் கண்டு தோழியர் ஐயுற்றனர்.

மைந்தர்கள் தூசு துடைத்தல்

291 *மிதிக்கநிமிர் தூளியின்
விளக்கம்அறு மெய்யைச்
சுதைக்கண்நுரை யைப்பொருவு
தூசுகொடு தூசை
உதிர்த்தனர் இளங்குமரர்;
ஓவியரின் ஓவம்
புதுக்கினர் எனத்தருண
மங்கையர் பொலிந்தார். ௧௦

290. தளம் – பூவிதழ்; மாலை - தொடர்ந்துள்ள; அலமரல் - சுற்றி அலைதல்.

291. சுதை – பால்; தூசு - துணி; தூசை - புழுதியை; தருணம் - இளமை.

கால் மிதிபடுவதால் எழுந்த புழுதியினாலே, மாசு படிந்த (தமது மனைவியரின்) உடம்பை, பாலின் நுரையைப் போன்ற வெண்மையும் மென்மையும் வாய்ந்த துணியைக் கொண்டு இளங்குமரர்கள் துடைத்தனர். சிறந்த ஓவியர் செய்த பதுமையைப் புதுப்பித்தனர் என்று சொல்லும்படி இளவயது மங்கையர் பொலிந்து தோன்றினர்.

(வி - ம்) அழகான பெண்களின் உடம்பு முழுமையும் புழுதி படிந்து போயிருந்தன. அதனை இளந்துணியால், காதல்மிக்க கணவன்மார் துடைத்து விட்டனர். 'ஆவி விரி பால் நுரையின் ஆடை' (தைலமாட்டு படலம்) என்று துணியின் வெண்மையும், மென்மையும் கூறப்பட்டிருப்பது நோக்கத்தக்கது.

யானையில் வந்த அரசர்கள்

292 தாள்உயர் நடக்கிரி
இழிந்துதரை சேரும்
கோளரி எனக்கரிகொள்
கொற்றவர் இழிந்தார்;
பாளைவிரி ஒத்துலவு
சாமரை படப்போய்
வாள்எழ நிரைத்தபட
மாடம்அவை புக்கார். ரு

அடிப்பகுதியையுடைய உயர்ந்த பெரிய மலை மீதிருந்து இறங்கித் தரையை வந்தடையும் சிங்கம் என்று சொல்லும்படி, யானை மீதிருந்த அரசர்கள் இறங்கினர். விரிந்த தென்னம் பாளையைப் போல மலர்கின்ற வெண்சாமரை

---

292. கிரி - மலை; கோளரி - வலிய சிங்கம்; கரி - யானை; பாளைவிரி - விரிபாளை எனமாற்ற வேண்டும்: விரிந்தபாளை; படமாடம் - கூடாரம்.

வீசச் சென்று ஒளிவீசும்படி வரிசையாகவுள்ள கூடாரங்களில் புகுந்தனர்.

குதிரைகள் புரண்டு எழுதல்

293 தீயவரொடு ஒன்றிய
திறத்தரு நலத்தோர்
ஆயவரை அந்நிலை
அறிந்தனர் துறந்தாங்கு,
ஏயவரு நுண்பொடி
படிந்துடன் எழுந்துஒண்
பாய்பரி விரைந்துதறி
நின்றன பரிந்தே. சு

கெட்டவர்களுடன் அவர்கள் தன்மை தெரியாமல் பொருந்திய நல்லோர், பின் அந்தக் கெட்டவர்களின் தன்மையை அறிந்து அவர்களை விட்டு நீங்குவதைப் போல, நிலத்தில் புரண்டு எழுந்தவுடன் பாய்ந்து செல்லுகின்ற குதிரைகள் விரைவாக உடலை உலுக்கிப் புழுதியை உதறிப் பரிவாக நின்றன.

(வி – ம்) குதிரைகளை உடல் வலி தீரும் பொருட்டுப் புழுதியில் புரளவிடவேண்டும். புரண்டு எழுந்ததும் உடலை உலுக்கிப் புழுதியை உதறுவது குதிரைகளின் இயல்பு. இதில் ஒரு சிறந்த அறம் உரைக்கப்படுகிறது.

விஞ்சையரா ? மனிதரா ?

294 *கமர்உறு பொருப்பின் வாழும்
விஞ்சையர் காண வந்தார்;
நமரையும் அறியார் நின்று
திகைப்புறு தகைமை சான்ற

293. ஒன்றிய - பொருந்திய ; ஏய - பொருந்திய.

குமரரும் மங்கை மாரும்
குழுமலால், வழுவி விண்நின்று
அமரர்நாடு இழிந்த தென்னப்
பொலிந்ததுஅவ் அனிக வெள்ளம். எ

வெடிப்புகள் உள்ள மலையில் வாழும் விஞ்சையர் என்ற தேவசாதியார் காணவந்தனர். (வந்து இதிற் கலந்து விட்டபோது) இன்னர் தாம் தம்மினத்தவர் என்று பிரித் துணர முடியாமல் அவர்கள் திகைப்படையும்படியான தன்மை பொருந்திய (அழகிய) இளைஞரும் இளம் பெண் களுமாகக் கூடிவிட்டபடியால், தேவலோகமே வழுக்கி விழுந்துவிட்டதென்று கருதும்படி அந்தச் சேனைக்கடல் இருந்தது.

(வி - ம்) அருகிலிருந்த விஞ்சையர் புதிதாகக் கூட் டம் வந்திருப்பதறிந்து வேடிக்கை பார்க்க வந்தனர். வந்த இடத்தில் இருகூட்டமும் கலந்துபோய்விட்டன. அவர் களுள் யார் விஞ்சையர் யார் மனிதர் என்று இனங்காண முடியாமற் போய்விட்டது. அயோத்தி மக்கள்அழகு முதலியவற்றில் மேம்பட்டிருந்தனர் என்பது கருத்து.

மங்கையர் விளையாட்டு

295 வெயில்நிறம் குறையச் சோதி
மின்நிழல் பரப்ப முன்னம்
துயில்உணர் செவ்வி யோரும்
துனிஉறு முனிவி னோரும்

294. கமர் - வெடிப்பு ; விஞ்சையர் — ஒருவகைத் தேவ சாதியர் ; அனீகம் - சேனை.

295. துனி - ஊடலின் நீட்டிப்பு ; சிலம்பு - மலை.

குயிலொடும் இனிது பேசிச்
சிலம்பொடும் இனிது கூவி
மயில்இனம் திரிவது என்னத்
திரிந்தனர் மகளிர் எல்லாம். அ

சூரிய ஒளி மங்கும்படி (நகைகளின்) ஒளியானது மின்னலின் ஒளியைப் பரப்ப, முன்னாள் இரவில் கணவருடன் மகிழ்ந்து தூங்கி விழித்தவர்களும், ஊடல்கொண்டு பலனிழந்து ஆத்திரப்பட்டவர்களும் ஆகிய எல்லாப் பெண்களும் வெளியே வந்து அங்குள்ள குயில்களுடன் பேசியும், மலையோடு கூவி எதிரொலி கேட்டும், மயிற்கூட்டம் திரிவது போல் அங்கே விளையாடித் திரிந்தனர்.

மைந்தர் திரிந்த காட்சி

296 தாள்இணை கழல்கள் ஆர்ப்ப,
தார்இடை அளிகள் ஆர்ப்ப,
வாள்புடை இலங்க, செங்கேழ்
மணிஅணி வலயம் மின்ன,
தோள்என உயர்ந்த குன்றின்
சூழல்கள் இனிது நோக்கி
வாள்அரி திரிவது என்னத்
திரிந்தனர் மைந்தர் எல்லாம். கூ

இருகால்களிலும் வீரக்கழல் ஒலிக்கவும், மார்பில் அணிந்துள்ள மாலைகளில் வண்டுகள் ஒலித்து மொய்க்கவும்,

296. தார் - ஆண்கள் அணியும் மாலை; புடை - பக்கம்; செங்கேழ் - செந்நிறம்; வலயம் - ஆண்கள் தோளில் அணியும் ஒருவகை அணி.

பக்கத்தில் வாட்படை விளங்கவும், சிவந்த நிறமுள்ள மாணிக்கங்கள் அழுத்தப்பெற்ற தோள்வளைகள் மின்னவும், அவர்களுடைய தோளைப் போல் உயர்ந்து விளங்குகின்ற மலையிற் பல இடங்களையும் மகிழ்வோடு பார்த்துக்கொண்டு இளைஞர்கள் யாவரும் உடல் தளதளப்புள்ள சிங்கங்கள் திரிவதைப் போலத் திரிந்தனர்.

மாதர் சுனையில் தடுமாறுதல்

297 படிகத்தின் தலம்என் றெண்ணிப்
படர்சுனை முடுகிப் புக்க
சுடிகைப்பூங் கமலம் அன்ன
சுடர்மதி முகத்தி னார்தம்
வடகத்தோடு உடுத்த தூசை
மாசில்நீர் நனைப்ப நோக்கிக்
கடகக்கை எறிந்து தம்மில்
கருங்கழல் வீரர் நக்கார் ௧௦

பளிங்குக் கல் பரவிய நிலம் என்று நினைத்து அகன்ற சுனைநீரின்மேல் விரைவாகச் சென்ற, நெற்றிச்சுட்டி அணிந்த, தாமரை மலரையும் ஒளிபொருந்திய மதியினையும் போன்ற முகத்தையுடைய பெண்களின் தாவணியோடு உடுத்தியிருக்கிறசேலையை தூயநீரானது நனைத்துவிட்டதைக் கண்டு வீரர்கள் கைகொட்டித் தங்களுக்குள் ஒருவருக்கொருவர் பார்த்தபடி சிரித்துக்கொண்டனர்.

---

297. படிகம் - பளிங்கு ; சுனை - மலையில் இயற்கையாக அமைந்த நீர்நிலை; முடுகி - விரைவாக ; சுடிகை - நெற்றிச்சுட்டி ; வடகம் - மேலாடை : தாவணி ; கடகம் - காப்பு ; கரு - பெரிய

(வி - ம்) படிகமலையில் சலனமற்றுத் தேங்கிக் கிடக்கும் சுனைநீரும் படிகம்போல் தூய்தாக இருக்கிறது. நிலமும் நீரும் பளிங்காக விளங்குவதால் சுனையென் றறியாமல் தரை என்று எண்ணிச் சென்ற மாதர் அதில் வழுக்கி விழுந்து விட்டனர். அதைக் கண்ட இளைஞர்கள் சிரித்தனர்.

இன்பப் பொழுது போக்கு

298 *உண்ணு அமுதன்ன கலைப்பொருள்
உள்ளத்து உண்டும்
பெண்ஆர் அமுதம் அனையார்
மனத்தூடல் பேர்த்தும்
பண்ஆர்ந்த பாடல் செவிமாந்திப்
பயன்கொள் ஆடல்
கண்ணுன் நனிதுய்க்க வும்கங்குல்
கழிந்த தன்றே. கக

(வாயினுல்) உண்ணப்படாத அமுதத்தை ஒத்த மதன கலையிற் கூறியுள்ள பொருளை மனத்தால் அனுபவித்தலாலும், கையிற் கிடைத்த பெண்ணமுதம் போன்ற மனைவியரின் மனத்தில் ஏற்பட்ட ஊடலை நீக்குவதாலும், பண்ணோடு இயைந்த பாடல்களைக் காதாரப் பருகிப் பயனைப் பெறக் கூடிய நாட்டியத்தைக் கண்களால் நன்ருகக் காண்பதாலும் இராப்பொழுதைக் கழித்தார்கள்.

---

298. கலை - மதன கலை : கலவிக்கலை ; ஆர் அமுதம் - கையிற் பொருந்திய அமிழ்தம் ; பேர்த்தும் - நீக்கியும் ; கங்குல் - இருட்டு.

சோணையாற்றை அடைதல்

299 முறைஎலாம் முடித்து மன்னர்
மன்னனும் மூரித் தேர்மேல்
இறைஎலாம் வணங்கப் போனான் ;
எழுந்துடன் சேனை வெள்ளம்
குறைஎலாம் சோலை ஆகிக்
குழிஎலாம் கழுநீர் ஆகித்
துறைஎலாம் கமலம் ஆன
சோணையாறு அடைந்த தன்றே. கஉ

தயரத மன்னன் எழுந்து, காலையிற் செய்யத் தக்க கடனைச் செய்து முடித்த பின்னர், வலிமையுள்ள தேரில் மன்னர் எல்லாம் வணக்கம்செலுத்தப் புறப்பட்டான். கடல் போன்ற பெருஞ் சேனையும் அவனோடு கூட எழுந்து, நீர் பாயாத மேடெல்லாம் சோலையாகியும், நீர்தங்கிய பள்ளமெல்லாம் செங்கழுநீர்க் கொடிகள் படரும் இடமாகியும், மற்ற நீர்நிலை யெல்லாம் தாமரை மலரும்படியாகிய சோணை யாற்றின் (கரையை) அடைந்தது.

(வி - ம்) ஆற்றின் கரைகளும் அதனைச் சார்ந்த பகுதிகளும் மரமடர்ந்த சோலைகளாயின என்பதும், பள்ளங்களில் என்றும் ஊற்றின்உதவியினால் தண்ணீர் நிலையாக இருக்கிறதென்பதும் ஆற்றின் வளத்தைக் காட்டுகின்றன.

---

299. மூரித்தேர் - வலிமையுள்ள தேர் ; குறை - மேட்டுத் திடர் : ஆற்றிடைக்குறை ; துறை - நீர் தங்கிநிற்கும் இடம்.

நீராடச் செல்லல்

300 அடைந்துஅவண் இறுத்த பின்னர்
அருக்கனும் உம்பர்ச் சேர்ந்தான் ;
மடந்தையர் குழாங்க ளோடு
மன்னரும் மைந்தர் தாமும்
குடைந்துவண்டு உறையும் மென்பூக்
கொய்துநீர் ஆட, மைதீர்
தடங்களும் மடுவும் சூழ்ந்த
தண்நறும் சோலை சார்ந்தார். கரு

அங்கே சென்று தங்கிய பின்பு, சூரியன் உச்சியை அடைந்தான். வண்டுகள் பொருந்திக் குடைகின்ற மெல்லிய பூக்களைப் பறித்தும், நீர் நிலைகளில் குளித்தும் விளையாடும் பொருட்டுப் பெண்களின் கூட்டத்துடன் அரசர்களும் இளைஞர்களும், பரந்த இடங்களும் நீர்நிலையு முள்ள குளிர்ந்த மணம் வீசும் சோலைகளுக்குச் சென்றனர்.

குயில்களின் நாணம்

301 பாசிழைப் பரவை அல்குற்
பண்தரு கிளவித் தண்தேன்
மூசிய கூந்தல் மாதர்
மொய்த்தபேர் அமலை கேட்டுக்

---

300. இறுத்த - தங்கிய ; அருக்கன் - சூரியன் ; உம்பர் - உச்சி ; தடம் - இடம் ; மடு - நீர் நிலை ; ஆற்றோரத்தில் உள்ள நீர் தேங்கி நிற்கும் பள்ளமும் ஆம்.

301. பாசு - பசுமை : பசிய ; இழை - நகை : மேகலை ; பரவை - பரந்த ; கிளவி - பேச்சு ; மூசிய - மொய்த்த.

கூசின அல்ல, பேச
நாணின குயில்கள் எல்லாம்!
வாசகம் வல்லார் முன்நின்று
யாவர்வாய் திறக்க வல்லார். கச

பசும் பொன்னினுல் செய்யப்பட்ட மேகலையை அணிந்த பரந்த அல்குல் பாகத்தையும், பண் மயமான சொல்லையும், குளிர்ந்த பூக்களில் தேன்வண்டுகள் மொய்க்கின்ற கூந்தலையும் உடைய பெண்கள் கூடியதால் ஏற்பட்ட ஆரவாரத்தைக் கேட்டு, குயில்கள் அச்சமுறவில்லை; ஆனுல் வாய் திறப்பதற்கு வெட்கிப் போயின. பேசவல்லவர் முன்பு நின்று மற்றவர் வாயைத் திறக்க இயலுமா?

(வி – ம்) மகளிர் மிக மென்மையும், அன்புள்ளமும் உடையவர்களென்பதால், குயில்கள் அவர்களைக் கண்டு 'கூசின அல்ல' என்றும், ஆனுல் அவர்கள் குரல், மிகுந்த இனிமையும் குழைவும் உடைமையால் "பேச நாணின" என்றும் கூறுகின்ருர்.

பெண்களுக்குப் பணியாதார் யார்?

302 நஞ்சினும் கொடிய நாட்டம்
அமுதென நயந்து நோக்கிச்
செஞ்செவே கமலக் கையால்
தீண்டலும், நீண்ட கொம்பர்
தம்சிலம்பு அடியின் மென்பூச்
சொரிந்துஉடன் தாழ்ந்த என்ருல்,
வஞ்சிபோல் மருங்கு லார்மாட்டு
யாவரே வணங்க லாதார்? கரு

302. செஞ்ச - செவ்வையாக; கொம்பர் - கொம்பு; வஞ்சி- வஞ்சிக்கொடி.

நஞ்சைக் காட்டிலும் கொடுமையான தமது கண்களைக் கொண்டு அமிழ்து என்று கருதும்படி அன்புடன் நோக்கி, தாமரைப்பூப் போன்ற கைகளினால் நீண்ட பூங் கொம்புகளைச் செவ்வையாகப் பிடித்து வளைத்தார்கள். உடனே அவை அவர்களுடைய சிலம்பணிந்த காலடியில் மெல்லிய பூக்களைச் சொரிந்து தாழ்ந்தன. அப்படியானால் வஞ்சிக் கொடி போன்ற இடையையுடைய பெண்கள் விரும்பினால் யார்தான் வணங்காதிருப்பர் ?

(வி – ம்) பெண்களின் கண்கள் காதலரின் உயிரை உண்ணும் தன்மையுள்ளவை. என்றாலும், எல்லாருக்கும் அமுதமாக விளங்கும்படியான அன்புப் பார்வை யுடையன வாகவும் இருக்கின்றன. அன்புள்ள பெண்கள் விரும்பினால், அஃறிணைப் பொருள்கள் கூட வணங்கிவிடும் என்றால் அறிவுள்ள உயர்திணைப் பொருள்கள் ஏன் வணங்கமாட்டா? பெண்ணின் அன்பில் - தாயன்பில் – எல்லாம் அடிவணங்கி வாழ்த்தும் என்பதாம்.

நூதனத் தாமரை

303 நதியினும் குளத்தும் பூவா
நளினங்கள் குவளை யோடு
மதிநுதல் வல்லி பூப்ப
நோக்கிய மழலைத் தும்பி,
அதிசயம் எய்திப் புக்கு
வீழ்ந்தன ; அலைக்கப் போகா ;
புதியன கண்ட போழ்து
விடுவரோ புதுமை பார்ப்பார் ? கரு

303. நதி - நீர் ஓடை ; நளினங்கள் - தாமரை மலர்கள் ; வல்லி - கொடி : கொடிபோன்ற பெண்கள் ; தும்பி - வண்டு.

நீரோடுகிற கால்களிலும் குளங்களிலும் பூக்கமுடியாத தாமரைமலர்கள் கருங்குவளை மலர்களோடு, மதிபோன்ற நெற்றியையுடைய ஒரு (பெண்) கொடியில் பூத்திருப்பதைக் கண்ட இனிய ஓசையையுடைய வண்டுகள், வியப்படைந்து வந்து அவற்றின் மேல் (முகத்தின் மேலும் கண்களின் மேலும்) வீழ்ந்தன. கைகளால் ஓட்டினாலும் போகவில்லை. புதிய பொருள்களைத் தேடி அலைபவர்கள் (எங்காவது) அப் புதியபொருள்களைக் கண்டபோது விட்டு விலகுவார்களோ?

(வி – ம்) நீரில் பூக்கின்ற தாமரைப்பூ நிலத்தில் பூத்திருப்பது அதிசயமாக இருக்கிறது. பெண்ணாகிய ஒரு பூங்கொடியில் முகமாகிய தாமரைப்பூவும் அதன்மேல் கண்களாகிய இரண்டு நீலமலர்களும் பூத்திருக்கின்றன. வேடிக்கை பார்ப்பவருக்குப் பிறர் படுந்துன்பம் ஒரு பொருளாவதில்லை என்பது அறிவுறுத்தப் படுகிறது விலக்கியும் போகாமல் மொய்க்கும் வண்டுகளால். ஆறுகளில் தாமரை இராது. இங்கே நதி என்பது நீரோடை என்ற பொருளில் வந்திருக்கிறது. ஓடை என்பது நீரோட்டத்திற்கு இடமாக இருந்தாலும் நீர் நிலைத்து நிற்க, மிகுந்து வரும் நீர் வடிந்து செல்லும்படி அமைந்திருப்பதாகும். கோயில் ஐவேலி ; குளம் ஐவேலி; செங்கழுநீர் ஓடை ஐவேலி என வழங்குதல் காண்க. தாமரைக்கு, நதீசம் என்ற பெயருண்டு. நதியிற் பிறப்பது என்பது பொருள்.

கணவர் மகிழப் பூங்கோம்புகளுக்கு நகைகள் அணிதல்

304 பூஎலாம் கொய்து கொள்ளப்
பொலிவில துவள, நோக்கி
யாவையாம் கணவர் கண்ணுக்கு
அழகில இவைஎன் றெண்ணிக்

304. பொலிவு இல-அழகு இல்லாதனவாகி; குழை-காதணி.

கோவையும் வடமும் நாணும்
குழைகளும் குழையப் பூட்டிப்
பாவையர் பனிமென் கொம்பை
நோக்கினர் பரிந்து நிற்பார். கஎ

பூத்த பூக்களை எல்லாம் மற்றைப் பெண்கள் பறித்துச் சென்றுவிட்ட படியால், பூங்கொம்புகள் பொலிவு இழந்து கசங்கி நிற்பதைக்கண்டு " தங்கணவர்கள் பார்த்தால் இவை எப்படி இருக்கும்? இப்பொழுது இவை அழகாக இல்லையே" என்று கருதி மணிமாலை, முத்துவடம், அரையில் அணியும் கோவை, காதணி ஆகியவற்றை அந்தக் கொம்புகள் தாங்க மாட்டாமல் துவளும்படி பூட்டிவிட்டு, பெண்கள் அந்தக் குளிர்ந்த மெல்லிய பூங்கொம்புகளைப் பார்த்து அன்புடன் நின்றார்கள்.

கண்போத்தி விளையாடல்

305 போர்என்ன வீங்கும் பொருப்பன்ன
பொலங்கொள் திண்தோள்
மாரன் அனையான் மலர்கொய்திருந்
தானை வந்துஓர்
கார்அன்ன கூந்தல் குயில்அன்னவள்
கண்புதைப்ப
ஆர்என்ன லோடும் அனல்என்ன
அயிர்த்துஉ யிர்த்தாள். கஅ

போரென்ற சொல்லைக் கேட்டதும் பூரிப்படையும் மலைபோன்ற அழகிய தோளையுடைய, மன்மதனை ஒத்த ஒரு

---

305. அயிர்த்தல் - சந்தேகப் படுதல் ; உயிர்த்தல் - பெருமூச்சு விடுதல்.

ஆடவன், மலர் பறித்துக் கொண்டிருந்தான். அப்பொழுது மேகத்தை ஒத்த கூந்தலேயும், குயில்போன்ற மொழியையும் உடைய மனேவி பின்புறமாக வந்து கண்களேப் பொத்தினள். அவன் யார் என்று கேட்டான். உடனே அவள் மிகுந்த சந்தேகம் உடையவளாகி நெருப்பைக் கக்குவது போலப் பெருமூச்சு விட்டாள்.

(வி – ம்) பூப்பறித்துக் கொண்டிருந்த தன் கணவனின் பின்புறமாக வந்து கண்களேப் பொத்தினள் ஒருத்தி. அவன், கண்களேப் பொத்துகின்றவர் யார் என்று கேட்டான். என்னேத் தவிர வேறு பெண்களும் இவர் கண்களேப் பொத்தி விளேயாடுவார்கள் போலும். அதனல்தான் யார் என்று கேட்கிருர் என்று அயிர்த்து ஆத்திரப்பட்டாள். தன் கண்ணேப் பொத்த உரிமையுடையவள் தன் மனேவிதான் என்று கருதாமல் யார் என்று கேட்டது அவளால் தாங்க முடியாத தாகிவிட்டது.

வனப்பில் மயங்கி வயமிழந்தவன்

306 *சினேயின் மேல்இருந்
        தான்உருத் தேவரால்
வனேய வும்அரி
        யாள்வனப் பின்தலே
நினேவும் நோக்கமும்
        நீக்கலன் ; கைகளால்
நனேயும் நாள்முறி
        யும்கொய்து நல்கினன். கக

---

306. சினே - கிளே ; வனப்பு - அழகு ; நனே - பூ அரும்பு; முறி - தளிர் ; தேவர் - தெய்வம்.

*இவ்வடையாளம் பாடலின் சந்தம் மாறுவதைக் குறிக்கும்.

மரக்கிளையின் மேலிருந்த ஓர் ஆடவன், தெய்வத்தாலும் உருவத்தை எழுதமுடியாத அழகுள்ள காதலியின் அழகிலே ஈடுபட்ட மனத்தையும், பார்வையையும் திருப்ப முடியாதவனுகி, அரும்பையும், கொழுந்தையும் பறித்துப் போட்டுக் கொண்டிருந்தான்.

(வி – ம்) காதலிக்குப் பூப்பறித்துக் கொடுப்பதற்காக மரத்தில் ஏறினன். கீழே நிற்கின்ற காதலியின்மீது மனமும், கண்ணும் ஈடுபட்டுவிட்டன. எனவே, எதைப் பறிக்கின்றேமென்ற உணர்ச்சியே இன்றி, அரும்பு, இலே, தழை முதலிய எதையாவது கையில் அகப்படுவதைப் பறித்துப் போட்டுக் கொண்டிருந்தான்.

பூக்கொய்பவளின் புருவம் போதும்

307 ஊக்கம் உள்ளத்து
உடைய முனிவரால்
காக்கல் ஆவது
காமன்கை வில்எனும்
வாக்கு மாத்திரம்
அல்லது வல்லியிற்
பூக்கொய் வாள்புரு
வக்கடை போதுமே. ௨0

மனத்திலே தவஊக்கம் உடைய முனிவரால்தான் மன்மதனுடைய வில்லின் செயலுக்குத் தப்பித்துக் கொள்ள முடியும் என்று உலகோர் சொல்லிக்கொண்டிருக்கின்றனர். அது சொல்லளவேயன்றி (வேறன்று). கொடியில் பூக்கள் கொய்கின்ற பெண்ணின் புருவத்தின் கடைசி அசைவு ஒன்றே (அந்த முனிவரின் தவத்தைத் தூளாக்கப்) போதியதாகும்.

(வி – ம்) ஆசை நோய் தோன்றி ஆட்சி செலுத்தாமல் காத்துக் கொள்ளும் வலிமை, பெரு முயற்சியை உடைய முனிவருக்குத்தான் உண்டு என்று பொதுவாகக் கருதப் படுகிறது. அது வெறும் பேச்சளவே என்பதற்கு, மன்மதன் வேண்டியதில்லை. இங்கே பூக்கொய்கின்ற ஒரு பெண்ணின் புருவமாகிய வில்லின் நுனி வளைந்தால், அதுவே போது மானது. அடக்கும் வலிமையுடைய தவத்தினரே இப்படி ஆவரென்றால், மற்றவர்நிலை என்னவாகுமென்பது கூறு மலே விளங்கும்.

காதலர் பெருமித நடை

308 *புனைமலர்த் தடங்கள் நோக்கிப்
பூசல்வண்டு ஆர்த்துப் பொங்க
வினைஅறு துறக்க நாட்டு
விண்ணவர் கணமும் நாண
அனகரும் அணங்க னாரும்
அம்மலர்ச் சோலை நின்று
வனகரி பிடிகளோடு
வருவன போல வந்தார். உக

அழகிய மலர்நிறைந்த குளிக்கும் குளத்தை நோக்கி, இரைச்சலிடுகிற வண்டுகள் ஆரவாரம் செய்யவும், எவ்வகைத் தொழிலும் இல்லாத வானுலகத்துத் தேவர் கூட்டமும் வெட்கப் படவும், ஆடவரும், பெண்டிரும்

308. தடம் - குளிக்கும் குளங்கள் ; துறக்கம் - பொன் னுலகம் ; விண்ணவர் - தேவர் ; அனகர் - அழகுள்ள ஆடவர் ; அணங்குஅனார் - தெய்வ மகளைப்போன்ற பெண்கள் ; வனகரி - அழகிய ஆண்யானை ; பிடி - பெண்யானை.

அந்த மலர்ச் சோலையிலிருந்து ஆண்யானைகள், பெண்யானைகளுடன் வருதலைப்போல வந்தனர்.

(வி – ம்) பயிரிடுதல் முதலிய தொழில்களையோ நல்வினை தீவினைகளுக்குரிய வேறு செயல்களையோ தேவருலகில் உள்ளவர்கள் செய்வதில்லை. மண்ணுலகத்தில் செய்த நல்வினைப் பயனாக விண்ணுலகத்திற் சென்று இன்பம் நுகர்வதொன்றே துறக்க நாட்டவர்க்குரியது. அதனால் “ வினை அறு துறக்க நாடு ” எனப்பட்டது.

நீராடுங் காட்சி

309 தாளைஏய் கமலத் தாளின்
மார்புறத் தழுவு வாரும்
தோளையே பற்றி வெற்றித்
திருஎனத் தோன்று வாரும்
பாளையே விரிந்தது என்னப்
பந்துநீர் உந்து வாரும்
வாளைமீன் உகள அஞ்சி
மைந்தரைத் தழுவு வாரும். ௨௨

நாளம் பொருந்திய தாமரை மலரில் இருக்கின்ற இலக்குமியைப் போல, கணவனின் மார்பிற் பொருந்தக் கட்டித் தழுவுவாரும், தோளைக் கட்டிப் பிடித்துக்கொண்டு வெற்றிக்குரிய தெய்வம் என்று சொல்லும்படி விளங்குவாரும், தென்னம்பாளை விரிந்தாற்போல நீர் நிரம்பிய துருத்தியைக் கொண்டு நீரைப் பீச்சுகின்றவரும், பெரிய

---

309. தாள்-நாளம் : அடித்தண்டு ; கமலத்தாள்-தாமரையில் வாழும் இலக்குமி ; ஏய் - பொருந்திய ; பந்து - துருத்தி ; உகள – துள்ள.

வாளை மீன்கள் துள்ளுவதைக் கண்டு அஞ்சிக் கணவரைக் கட்டிப் பிடிப்பாருமாகப் பெண்கள் காணப்பட்டனர்.

(வி – ம்) நீரில் இறங்கும்பொழுது அச்சப்படுபவரைத் தூக்கிச் செல்வது இயல்பு. பழக்கமில்லாத பெண்களை மார்பில் அணைத்துக் கொண்டு போகின்றனர். சில பெண்கள் தோளைப்பிடித்துத் தொங்கிக்கொண்டே மிதக்கின்றனர்.

மகளிர் விளையாட்டு

310 வண்டுணக் கமழும் சுண்ணம்
வாசநெய் நானத் தோடும்
கொண்டெதிர் வீசு வாரும்
கோதைகொண்டு ஓச்சு வாரும்
தொண்டைவாய்ப் பெய்து தூ நீர்
மேல்எழத் தூகின் றாரும்
புண்டரீ கக்கை கூப்பிப்
புனல்முகந்து எறிகின் றாரும். உரு

வண்டுகள் வந்து மொய்க்கும்படியாக மணம் கமழுகின்ற வாசனைப் பொடியையும், வாசனைத் தைலத்தையும், கத்தூரியோடு கலந்து தெளிப்பவரும், பூக்களைத் தொடுத்து வீசுகின்றவரும், சிவந்த வாயில் நல்ல நீரைக்கொண்டு கொப்பளிப்பாரும், தாமரை மலர்போன்ற கையைக் குவித்து நீரை அள்ளி எறிபவருமாகப் பெண்கள் விளையாடினார்கள்.

---

310. சுண்ணம் - வாசனைப் பொடி ; வாசநெய்- மணமுள்ள தைலம் : அத்தர் ; நானம் - கத்தூரி ; தொண்டை - ஆதொண்டைக் கனி : காற்றோட்டிப் பழம் ; இது இப்போது காத்தட்டி என வழங்குகிறது ; புண்டரீகம் - தாமரை மலர்.

(வி - ம்) கரையிலும், கரையோர நீரிலும் நிற்கின்ற வர்கள், நீந்திச் சென்றவர்களை நோக்கிப் பூவை வீசுவதும், தண்ணீரை முகந்து எறிவதுமாக விளையாடுவதை நீர்த்துறை களில் காண்பது இயற்கை. தண்ணீரில் கிடப்பவர் நீரைக் கொப்பளித்துக் கொண்டிருப்பதும் இயற்கையேயாம்.

மாசு நீங்கிய மணி

311 *காக துண்ட
நறும்கல வைக்களி
ஆகம் உண்டது
அடங்கலும் நீங்கலால்
பாகுஅ டர்ந்த
பனிக்கனி வாய்ச்சியர்
வேக டம்செய்
மணிஎன மின்னினார். உ௪

உடலிற் பூசிய அகிலோடு கூடிய மணமுள்ள கலவைக் கூழ் முழுதும் நீரினால் கழுவப்பட்டுப் போய்விட்டபடியால், வெல்லப் பாகு போன்ற இனிய குளிர்ந்த கனிந்த மொழி பேசும் வாயையுடைய பெண்கள், மெருகிட்ட மணியைப் போல மின்னினார்கள்.

(வி – ம்) பெண்கள் குளிக்கப் போகும்பொழுது, மிகுந்த வாசனைக் குழம்புகளைப் பூசிக்கொண்டு செல்லுகின் றார்கள் என்பது கருத்து.

---

311. காகதுண்டம் - அகில் ; களி - கூழ் ; ஆகம் - உடல்; பனி - குளிர்ச்சி ; கனி - கனிந்த ; வேகடம் - மாசை நீக்குதல் : மெருகிடல்.

நீராடி முடித்தனர்

312 இனைய எய்தி
இரும்புனல் ஆடிய
வனைக ருங்கழல்
மைந்தரும் மாதரும் ;
அனைய நீர்வறி
தாகவந் தேறினர் ;
புனைந றும்துகில்
பூணொடும் தாங்கினர். உரு

இப்படிப்பட்ட தன்மைகளை அடைந்து பெரிய நீர் நிலைகளில் விளையாடிய, கட்டப்பட்ட பெரிய வீரக்கழல்களை அணிந்திருக்கிற மைந்தர்களும் பெண்களும், அந்த நீர்நிலைகள் வெறுமை யடையும்படி கரையில் வந்து சேர்ந்தனர். உடுத்தற்கு உரிய நல்ல ஆடைகளை உடுத்தி நகைகளையும் அணிந்து கொண்டனர்.

புலவி நீக்கும் தூது

313 *கலந்தவர்க்கு இனியதோர்
கள்ளும் ஆய்ப்பிரிந்து
உலந்தவர்க்கு உயிர்சுடு
விடமு மாய்உடன்
புலந்தவர்க்கு உறவுசெய்
புதிய தூதுமாய்
மலர்ந்தது நெடுநிலா
மதனன் வேண்டவே. உசு

---

312. இரு - பெரிய ; கரு - பெரிய ; வறிதாக - (மக்களால் நிறைந்திருந்த நீர்நிலை அவர்களை இழந்து) வெறுமையாக.

313. கள் - தேன் ; புலந்தவர் - ஊடியவர்.

கூடியிருக்கும் காதலர்க்கு இனிய தேனாகியும், பிரிந்து வருந்தும் காதலர்க்கு உயிரை வாட்டும் நஞ்சாகியும், ஊடி இருக்கும் காதலர்க்கு ஒன்று சேர்க்கும் புதிய தூதுவனாகி யும் விரிந்த நிலவானது மன்மதனது விருப்பப்படி தோன் றிற்று.

(வி - ம்) கூடியிருக்கும் காதலர், நிலவில் விளையாடிக் களித்தனர். பிரிந்த காதலர், முன் கூடி நுகர்ந்த இன்பத்தை எண்ணி வருந்தினர். ஆனால், பிரியாமல் அருகி லிருந்தே ஊடியிருக்கும் காதலர்க்கு, நிலவு எப்படி இருந்தது என்றால், இருவரையும் இணைத்து வைக்க வந்த தூதுவனாக இருந்தது. நிலவு, இன்ப நுகர்ச்சிக்குத் தூண்டுகோலாய் இருத்தலினால், ஊடியவர், ஊடல் நீங்கிக் கூடினர் என்பது கருத்து.

எல்லாம் உயர்ந்தன

314 ஆறெலாம் கங்கையே
ஆய ; ஆழிதாம்
கூறுபாற் கடலையே
ஒத்த ; குன்றெலாம்
ஈறிலான் கயிலையை
இயைந்த ; என் இனி
வேறியாம் புகல்வது
நிலவின் வீக்கமே. உஎ

(நிலவின் விரிவினால்) எல்லா ஆறுகளும் கங்கையைப் போல ஆய்விட்டன. கருங்கடல் பாற்கடலை யொத்து விளங்கியது. மலைகளெல்லாம் முடிவு நாளில்லாமல் விளங்கு

---

314. ஆழி - கடல் ; ஈறு - முடிவு ; வீக்கம் - விரிவு.

கிற சிவபெருமானது கயிலைமலையை ஒத்தன. நிலவின் விரிவைப்பற்றி இனிமேல் வேறு என்ன சொல்ல இருக்கிறது?

(வி - ம்) நிலவானது நிலமுழுதும் பால்போலப் பரந்து விளங்கியது. அதனால் சிவப்பு, கருப்பாக விளங்கிய ஆறுகளின் நீர் வெண்மையாகத் தோற்றின. கங்கைநீர் வெண்மை நிறமுடையது. அப்படியே கருங்கடல் பாற்கடலைப் போலவும், பச்சையும் கருப்புமான மலைகள் வெள்ளி மலைபோலவும் தோற்றின.

முன்னே தழுவி முதுகைத் தடவினள்

315 கொலைஉரு அமைந்தெனக்
 கொடிய நாட்டத்துஓர்
கலைஉரு அல்குலாள்
 கணவற் புல்குவாள்
சிலைஉரு அழிதரச்
 செறிந்த மார்பில்தன்
முலைஉரு வினஎன
 முதுகை நோக்கினாள். உஅ

கொலைத் தொழிலே ஓர் உருவெடுத்து வந்தாற்போன்ற கொடிய பார்வையையும், மன்மதக் கலையே ஓர் உருவெடுத்து வந்தாற் போன்ற அல்குற் பாகத்தையும் உடைய ஒரு பெண், கணவனைத் தழுவினாள். வில்லின் உருவமாக எழுதப் பட்டிருந்த தொய்யில் அழியும்படி இறுகப் புல்லிய தன் கணவனது மார்பில், தன்னுடைய தனங்கள் அழுந்திப் பின்புறம் உருவிப் போயிற்றோ என்று, அவனுடைய முதுகைத் தடவிப் பார்த்தாள்.

---

315. நாட்டம் - கண்கள்; புல்குதல் - தழுவுதல்.

கலவியில் அயர்ந்த பெண்

316 குங்குமம் உதிர்ந்தன ;
கோதை சோர்ந்தன ;
சங்கினம் முரன்றன ;
கலையும் சாறின ;
பொங்கின சிலம்புகள்
பூசல் இட்டன ;
மங்கையர் இளநலம்
மைந்தர் உண்ணவே. உக

மங்கையரோடு அவர்தம் கணவர்கள் இன்புற்றுக் கலவி நலம் எல்லாம் துய்த்தலினால், பெண்கள் அணிந்திருந்த குங்குமம் உதிர்ந்தன. மலர்கள் கசங்கின. சங்கு வளையல்கள் ஒலித்தன. ஆடை நழுவின. ஓசைப்பட்ட காற்சிலம்புகள் ஒன்றோடு ஒன்று மோதின.

(வி - ம்) கலவியின் முடிவில் அயர்ந்துபோன பெண்ணின் நிலை இதுவாகும். ‘ உண்டபின் கலவிப்போரில் ஒசிந்த மென் மகளிர் ’ (158) என, வருதலும் காண்க.

பொய்யுறக்கமும் விழிப்பும்

317 புனைகுழல் ஒருமயில்
பொய்உறங்குவாள்
துனிஉறு புலவியைக்
காதல் சூழ்சுடர்

---

316. சாறின-நழுவின; இளநலம்-இளமைப் பருவ இன்பம்.

317. புலவி - ஊடல் ; துனி - வருத்துகிற நீடிய ஊடல் ; சுடர் - சூரியன்.

பனிஎனத் துடைத்தலும்
பதைக்கும் சிந்தையாள்
கனவுஎனும் நலத்தினற்
கணவற் புல்லினள். ௩௦

பின்னிய கூந்தலேயும், மயில்போன்ற சாயலேயும்உடைய ஒரு பெண், கணவனுடன் ஊடியபடியே பொய் உறக்கம் கொண்டாள். வருத்துகின்ற நீடிய ஊடலே, சூழ்ந்த கதிர் களே உடைய கதிரவன் பனியை நீக்குவது போன்று ஆசை யானது நீக்கிவிட்டது. நடுங்கிய உள்ளமுடைய அவள், கனவு கண்டு பயந்தவளேப் போலக் கணவனேத் தழுவிக் கொண்டாள்.

(வி - ம்) கணவனுடன் ஊடியவள் கண்களே மூடிக் கொண்டு படுத்துவிட்டாள். ஆனல் உறக்கம் வரவில்லே. ஆசை பெருகியது. கணவனே, கோபமாகப் படுத்திருப்ப வளேத் தீண்டினல் சண்டை வலுக்கும் என்று எண்ணிப் பக்கத்தில் படுத்திருந்தான். கனவு கண்டு வெருண்டாற் போலக் கணவனேக் கட்டித் தழுவிக் கொண்டாள். சினங் கொண்டு விலகியவள், வலியத் தழுவ வெட்கப்பட்டுக் கிடக்க, கனவெனும் காரணங்கொண்டு தழுவ முடிந்ததால் கனவு நலமெனப்பட்டது. “ துனியும் புலவியும் இல்லாயிற் காமம், கனியும் கருக்காயு மற்று ”—(குறள் 1306) என்பதும் காண்க.

கைவிலகுழன் இருள் விலகியது

318 வட்டவாள் முகத்தொரு
மயிலும் மன்னனும்
கிட்டிய போதுடல்
கிடைக்கப் புல்லினர் ;

---

318. கங்குல் - இரவு.

விட்டிலர் ; கங்குலின்
விடிவு கண்டிலர்
ஒட்டிய உடல்பிரிப்பு
உணர்கி லாமையால். ௩௧

வட்டமாகிய ஒளி பொருந்திய முகத்தையுடைய மயில் போன்ற ஓர் பெண்ணும், ஆடவனும் நெருங்கியபோது, சேர்ந்துகிடக்கும்படி தழுவிக்கொண்டனர். விலகவில்லை. பொழுது விடிந்ததையும் அறிந்தாரில்லை ஒட்டிய உடலைப் பிரிப்பதென்ற ஒரு செய்தியையே அறியாத படியால்.

(வி - ம்) எல்லை மீறிய ஆசைப் பெருக்கினால் கட்டித் தழுவினர். அந்த மகிழ்ச்சியில் தூங்கிப்போயினர். உலகையே மறந்து போனபடியால், விடிந்த பிறகும் தாங்கள் விலகியிருக்க வேண்டும் என்பது நினைவுக்குவர இடமில்லாமற் போய்விட்டது.

இடை தேய்ந்தாற்போல் இரவு தேய்ந்தது

319 அருங்களி மால்களிறு
அனைய வீரர்க்கும்
கருங்குழல் மகளிர்க்கும்
கலவிப் பூசலால்
நெருங்கிய வனமுலை
சுமக்க நேர்கலா
மருங்குல்போல் தேய்ந்தது அம்
மாலைக் கங்குலே. ௩௨

அரிய மதத்தைப் பொழிகிற பெரிய யானையை ஒத்த வீரர்களுக்கும், கரிய கூந்தலையுடைய பெண்களுக்கும்,

319. களி - மதம் ; மருங்குல் - இடை.

நேர்ந்த கலவிப் போர் நிகழ்ச்சியினால், பெண்களின் இடைவெளி இல்லாத அழகிய தனங்களைத் தாங்க முடியாமல் தேய்ந்த இடையைப் போல இருள் அருகிப் போயிற்று; விடிந்தது.

(வி - ம்) இடை கண்ணுக்குத் தெரியவில்லை. இருட்டும் தெரியவில்லை. வெளிச்சத்தால் இருள் தெரியவில்லையானாலும் இருள் ஒழிந்து போகவில்லை என்பதுதான் உண்மை.

ஞாயிறு தோன்றிற்று

320 கடைஉற நன்னெறி
காண்கி லாதவர்க்கு,
இடைஉறு திருஎன
இந்து நந்திடப்,
படர்திரைக் கருங்கடற்
பரமன் மார்பிடைச்
சுடர்மணிக்கு அரசென
இரவி தோன்றினன். ௩௩

நல்ல வழியில் செய்யும் செயலைக் கடைசிவரை செய்து பயனடையாதவர்க்கு, இடையிலே வந்து போகிற செல்வத்தைப் போல, சந்திரன் மறைந்து போக, அலை மோதுகிற நிறமுள்ள கடலிலே பள்ளி கொண்டிருக்கின்ற திருமாலின் மார்பில், விளங்குகின்ற சிறந்த மணியைப் போலக் கதிரவன் தோன்றினன்.

---

320. நந்துதல் - மறைதல் ; கரு - நிறம்.

14. உலாவியற் படலம்

[மிதிலைத் தெருக்களில் இராமன் ஊர்வலம் சென்றதைக் கூறும் படலம்.]

தயரதன் சேனை மிதிலையை அடைதல்

321 *கங்கைநீர் நாடன் சேனை
மற்றுள கடல்கள் எல்லாம்
சங்கினம் ஆர்ப்ப வந்து
சார்வன போலச் சாரப்
பங்கயத்து அணங்கைத் தந்த
பாற்கடல் எதிர்வ தேபோல்
மங்கையைப் பயந்த மன்னன்
வளநகர் வந்தது அன்றே. க

கங்கைநீர் பாய்கின்ற நாட்டையுடைய தயரத மன்னனுடைய கூட்டமான்து (பாற்கடல் ஒழிந்த) மற்றைய கடல்களெல்லாம் சங்குகள் ஒலிக்க வந்து பொருந்துவதைப்போல வந்து சேர்ந்தது. தாமரை மலரிலிருக்கிற இலக்குமியைத் தந்த பாற்கடல் எதிர்கொள்வதைப் போல, சீதையைப் பெற்ற வளமுள்ள மிதிலை நகரத்து மக்கள் எதிர்கொண்டு சென்றனர்.

(வி - ம்) சீதை தோன்றிய மிதிலை இலக்குமி தோன்றிய பாற்கடலுக்கு உவமை ஆயிற்று. தயரதனுடைய கூட்டம் பெரிதாக இருந்ததால் அது "மற்றுள கடல்களெல்லாம்" என்று குறிப்பிடப் பட்டது. சேனை என்றது இங்கு மக்கள் கூட்டத்தை என்க. "விட்டது குரிசிலை விடாத சேனையே" (தைலமாட்டு படலம்).

321. பங்கயம் - தாமரைமலர்; வளநகர் - வளமுள்ள நகர மக்கள்.

சனகன் தயரதனை எதிர்கொள்ளல்

322 *கந்தையே பொருகரிச்
 சனகனும் காதலே
உந்தஒ ணரியதோர்
 பெருமையோடு உலகுளோர்
தந்தையே அனையஅத்
 தகவினன் முன்புதன்
சிந்தையே பொருநெடுந்
 தேரின்வந் தெய்தினன். உ

கட்டுத் தறியை மோதுகிற யானைகளை யுடைய சனக மன்னன் ஆசையோடு, சொல்ல முடியாத பெருமையுடன் கூடி உலக மக்களுக்குத் தந்தை யென்று கூறும்படியான தயரதனுக்கு முன்னால், தன் மனம்போல் விரைந்து செல்லும் தேரில் வந்து சேர்ந்தான்.

பிரிந்த உயிர் வந்தது

323 காவியும் குவளையும்
 கடிகொள்கா யாவுமொத்து
ஓவியம் சவிகெடப்
 பொலிவதோர் உருவொடே
தேவரும் தொழுகழல்
 சிறுவன்முன் பிரிவதோர்
ஆவிவந் தென்னவந்து
 அரசன்மாடு அணுகினன். ௩

322. கந்து - கட்டுத்தறி ; பொரு - மோதும்; கரி - யானை; உந்த - தள்ளிச் செல்ல ; தகவினன் - தகுதியுள்ளவன்; தயரதன்; சிந்தையே பொரு - மனத்தைப் போன்ற.

323. சவி - அழகு ; மாடு - பக்கம்.

நீலோற்பல மலரையும், கருங்குவளை மலரையும் மண முள்ள காயாம் பூவையும் போன்ற நிறத்துடன், சித்திரமும் அழகில்லை என்று தோன்றும்படி விளங்குகிற உருவத் துடன், தேவர்களும் வணங்கும் திருவடியையுடைய சிறு வனுகிய இராமன், முன் பிரிந்த உயிர் வந்து சேர்ந்ததைப் போலத் தயரதன் முன்பு வந்து சேர்ந்தான்.

(வி – ம்) காவி, குவளை என்பன நீல நிறமுடைய நீர்ப் பூவகை என்று கொள்ளப்படல் வேண்டும். தயரதனிட மிருந்து கோசிக முனிவரால் பிரித்துக் கொண்டு வரப்பட்ட இராமன் இப்பொழுதுதான் தயரதனிடம் வருகிருன். தய ரதனின் உயிர் பிரிந்து சென்ற மாதிரி சென்ற இராமன் இப் பொழுது வந்தான். " மன்னன் இன்னுயிர் வழிக்கொண் டால் என " (67) என்று முன்னர்க் கூறியிருப்பது காண்க.

தயரதன் இராமனைத் தழுவுதல்

324 அனிகம்வந் தடிதொழக்
கடிதுசென்று அரசர்கோன்
இனியபைங் கழல்பணிந்து
எழுதலும் தழுவினுன்
மனுவெனும் தகையன்;மார்
பிடைமறைந் தனமலைத்
தனிநெடும் சிலைஇறந்
தவழ்நடங் கிரிகளே.

தன் படைகள் வந்து அடிவணங்க விரைந்து சென்று, சக்கரவர்த்தியின் இனிய அழகிய பாதங்களில் வணங்கி

---

324. அனிகம் - படை ; தனி நெடுஞ்சிலை–ஒப்பற்ற நீண்ட வில் : சிவதனுசு ; இற – ஒடிய.

எழுந்த இராமனைக் கட்டித் தழுவினன் மனு என்று சொல்லும் தன்மையுள்ள தயரதன். (அப்பொழுது அவனுடைய) மார்பில், ஒப்பற்ற சிவதனுசு முறியும்படி விளங்கிய பெரிய மலைபோன்ற இராமனது தோள்கள் மறைந்தன.

(வி - ம்) அயோத்தியிலிருந்து வந்த சேனைத் தலைவர்கள் இளவரசனாகிய இராமனுக்கு வணக்கம் செலுத்தினர். உடனே இராமன், தயரதனின் கால்களில் விழுந்து வணங்கினான். அவனை வாரித்தழுவினான் தயரதன். அப்பொழுது இராமனுடைய பெரிய தோள்கள் தயரதனின் பெரிய மார்பில் பதிந்து மறைந்து விட்டன.

இலக்குவனைத் தழுவுதல்

325 இளையபைங் குரிசில்வந்து
அடிபணிந்து எழுதலும்
தளைவரும் தொடையல்மார்
பினில்உறத் தழுவினன்
களைவரும் துயர்அறக்
ககனம்என் திசைஎலாம்
விளைதரும் புகழினன்
எவரினும் மேன்மையான். ரு

இளைய அழகிய இலக்குவன் வந்து அடியில் விழுந்து வணங்கி எழுந்ததும், தொடுத்த மாலையை அணிந்துள்ள தன் மார்பில் அழுந்தும்படி கட்டித் தழுவினன். அப்படித் தழுவினவன் யார்? நீக்க முடியாத துன்பம் நீங்கும்படி

---

325. பை - அழகு; குரிசில் - பெருமையிற் சிறந்தோன்; தளை - தொடுத்தல்; தொடையல் - மாலை; களைவு அரும் — நீக்க முடியாத; ககனம் - வானம்.

வானுலகும் எட்டுத்திசையும் எங்கும் அழியாமல் வளரும் புகழினை யுடைய தயரதன். அவன் எவருக்கும் மேன்மை உடையவனாவான்.

தாயரின் மகிழ்ச்சி

326 கற்றைவார் சடையினன்
கைக்கொளும் தனுஇறக்
கொற்றம்நீள் புயம்நிமித்து
அருளும்அக் குரிசில்பின்
பெற்றதா யரையும்அப்
பெற்றியிற் றொழுதெழுந்து
உற்றபோது அவர்மனத்து
உவகையார் உரைசெய்வார். கூ

திரண்ட நீண்ட சடையை யுடைய சிவபெருமான் கையில் தாங்கும் வில், முறியும்படியான வெற்றியில் வளர்ந்த தோள்களை நிமிர்த்தருளுகிற அந்த இராமன், பெற்ற தாயரை முறையாகத் தொழுதெழுந்தபோது, அத்தாயரின் மனத்தில் ஏற்பட்ட மகிழ்ச்சியை யாரால் அளவிட்டுச் சொல்ல முடியும் ?

இராமன் பரதனைத் தழுவுதல்

327 உன்னுபேர் அன்புமிக்கு
ஒழுகிஒத்து ஒண்கனீர்
பன்னுதா ரைதரத்
தொழுதெழும் பரதனைப்

---

326. கற்றை - திரண்ட ; கொற்றம் - வெற்றி ; பெற்றி - இயல்பு.
327. பன்னு தாரை—விடாது ஒழுகுதல் ; பொன் - அழகு.

பொன்னின்மார் புறஅணைத்து
உயிர்உறப் புல்லினன் ;
தன்னைஅத் தாதைமுன்
தழுவினல் என்னவே. எ

நினைக்கும் தன்மையுள்ள பெரிய அன்பு மிகுந்து ஒழுகுவதைப் போல, ஒளி பொருந்திய கண்ணீர் நெருங்கிய தாரையாக ஊற்ற, தொழுது எழுந்த பரதனை அழகிய மார்பில் பொருந்த அணைத்து உயிருடன் ஒன்றும்படி கட்டித் தழுவினன் ; தந்தை தன்னை முன்பு தழுவினற் போல.

இராமனை முன்னே அழைத்துச்செல்க எனல்

328 சான்றெனத் தகையசெங்
கோலினன், உயிர்கள்தாம்
ஈன்றநற் றயெனக்
கருதுபேர் அருளினன்,
ஆன்றஇச் செல்வம்இத்
தனையும்மொய்த்து அருகுஉறத்
தோன்றலைக் கொண்டுமுற்
செல்கெனச் சொல்லினன். அ

(இதுதான்) முன்மாதிரி என்று சொல்லத்தக்க ஆட்சியையும், உலக உயிர்கள் பெற்றதாய் என்று கருதுகின்ற பெரிய அருளையும் உடைய தயரதன், "நிறைந்த இச் செல்வமெல்லாம் நெருங்கிப் பக்கத்திலே வர, இராமனை அழைத்துக் கொண்டு முன்னலே செல்லுங்கள்" என்று கூறினன்.

(வி – ம்) ஆட்சி புரிவோர் தயரதனின் ஆட்சி முறையைத்தான் மேற்கோளாகக் கொள்ள வேண்டும். அது அப்

---

328. சான்று - சாட்சி ; தோன்றல் - மகன் ; இராமன்.

படிப்பட்ட முன்மாதிரியான ஆட்சியாகும். யானை, சேனை முதலிய எல்லா விருதுகளுடனும் இராமனை முன்னாலே அழைத்துச் செல்லுங்கள் என்று தயரதன் கூறி அனுப்பி விட்டுத் தொடர்ந்து பின்னாலே வருகிறான். சான்று என்பது மேற்கோள் என்ற பொருளில் வந்திருக்கிறது. பின்னாளில் அரசாள்பவரைக் குறை கூறினால் மக்கள் தயரதன் ஆட்சியில் இப்படித்தான் நடந்தது என்று மேற்கோளாகக் காட்டும்படி சிறப்பாக ஆண்டான் எனக் கொள்ளல் வேண்டும். மேற்கோள் காட்டுவதும் தன் வழக்குக்குச் சான்றேயாம்.

இராமன் தேரில் செல்லுதல்

329 தொழுதுஇரன் டருகும்அன்
புடையதம் பியர்தொடர்ந்து,
அழிவில்சிந் தையினுவந்து
ஆடல்மா மிசைவரத்
தழுவுசங் குடன்நெடும்
பணைதழங் கிடஎழுந்து
எழுதரும் தகையதோர்
தேரின்மேல் ஏகினான். க

இருபக்கங்களிலும் தம்பியர் தொழுது தொடர்ந்து, என்றும் அன்பில் அழிவில்லாத மனத்திலே மகிழ்ச்சியைக் கொண்டு நாட்டியக் குதிரையில் வரவும், (மற்ற இசையுடன்) தழுவி ஒலிக்கிற சங்குகளும் நீண்ட (ஒலியைச் செய்கிற) பேரிகைகளும் முழங்கவும் எழுந்து, எழுதிக் காட்ட முடியாத அழகிய தேரின்மேல் (இராமன்) சென்றான்.

---

329. ஆடல் மா — நாட்டியக் குதிரை; பணை - முரசு; பேரிகை.

பெண்கள் வந்து மொய்த்தனர்

330 *மானினம் வருவ போன்றும்
மயிலினம் திரிவ போன்றும்
மீனினம் மிளிர்வ போன்றும்
மின்னினம் மிடைவ போன்றும்
தேனினம் பம்பி ஆர்ப்பச்
சிலம்பினம் புலம்பஎங்கும்
பூநனை கூந்தல் மாதர்
பொம்மெனப் புகுந்து மொய்த்தார். ௧௦

மான் கூட்டம் வருவதைப் போலவும், மயில் கூட்டமாகத் திரிவதைப் போலவும், மாடங்களில் விண்மீன் கூட்டமாக வருவதைப் போலவும், மின்னல் கூட்டமாக நெருங்குவதைப் போலவும், தேன் வண்டுகள் எழுந்து ஒலிக்கவும், காற்சிலம்புகள் ஒலிக்கவும், தேன் பொருந்திய மலரணிந்த கூந்தலையுடைய பெண்கள் விரைந்து புகுந்து தெரு முழுதும் மாடம் முழுதும் கூடிவிட்டனர்.

(வி - ம்) மானும், மயிலும் கூட்டங் கூட்டமாக ஓடி வருவது போலப் பெண்கள் ஓடிவந்து தெருவில் கூடிவிட்டனர். மின்னலைப் போலப் பெண்கள் மாளிகைகளின் மேன்மாடங்களிலும் கூடி நிறைந்து விட்டனர். விண்மீனின் கூட்டம் போலப் பெண்களின் நகைகளிலுள்ள மணிகள் மின்னுகின்றன. அவர்கள் ஓடி வருவதும் நிற்பதுமான சாயல் மின்னலைப் போன்றிருக்கிறது. ஓடிவரும்

---

330. மிடைதல் - நெருங்குதல் ; தேன் - வண்டு ; பம்பி - நிறைந்து ; நனை - தேன் ; 'பூ நனை' என்பதை 'நனை பூ' என மாற்றிக்கொள்க. பொம்மென - பொம் என்னும் ஓசை யுண்டாகும் படி : விரைந்து.

போது பூவில் மொய்த்துள்ள வண்டுகள் கலந்து ஒரே கூட்டமாகச் சத்தமிடுகின்றன. காற் சிலம்புகளின் ஒலி பேரொலியாகி விட்டது.

இதுவும் அது

331 விரிந்துவீழ் கூந்தல் பாரார் ;
மேகலை அற்ற நோக்கார் ;
சரிந்தபூந் துகில்கள் தாங்கார் ;
இடைதடு மாறத் தாழார் ;
நெருங்கினர் ; நெருங்கப் புக்கு
'நீங்குமின் நீங்குமின்' என்று
அருங்கலம் அனைய மாதர்
தேனுகர் அளியின் மொய்த்தார். கக

கூந்தல் கட்டவிழ்ந்து நிலத்தில் இழுபட்டு வருவதைக் கவனிக்க வில்லை ; ஒட்டியாணம் அறுந்து முத்து உதிர்வதை நோக்க வில்லை. தோளில் கிடந்த அழகிய முன்தானை நழுவுவதை இழுத்துப் போட்டுக் கொள்ள நினைக்கவில்லை. ஓட முடியாமல் இடை தள்ளாடுவதற்காகத் தாமதப் படவுமில்லை. இராமனின் தேரை அணுகினர். மேலும் நெருங்கும்படி புகுந்து, விலகுங்கள் விலகுங்கள் என்று சொல்லிக் கொண்டு, அரிய அணிகலன் போன்ற பெண்கள் தேன் பருகும் வண்டைப் போல வந்து கூடிவிட்டனர்.

(வி - ம்) இராமனைக் காணும் ஆசை மிகுந்திருந்தபடியாலும், தேர் நில்லாமல் சென்று கொண்டிருத்தலாலும் பார்ப்பதற்குப் பெண்கள் விரைந்து செல்ல வேண்டியதாயிற்று. நடந்தா வந்தனர் ? வண்டைப் போலப் பறந்து

331. அற்ற - அறுஅறுந்தன ; தாழார் - தாமதிக்க மாட்டார் ; அருங்கலம் - அரிய ஆபரணம்.

வந்தனர் என்க. வீழ் கூந்தல் - விரிந்து தொங்குகிற கூந்தலன்று; விரிந்து நீண்டு தெருவில் விழுந்து இழுபட்டுக் கொண்டே வருகிற கூந்தலாம். "அருங்கல மனைய மாதர்" என்பதை, "பூவினுக்கருங்கலம் பொங்கு தாமரை" என்றாற் போலப் பெண்களுக்குள்ளே அருங்கலமாக விளங்குபவர் கள் எனக்கொள்க. கற்பு, ஒழுக்கம் முதலிய குணநலம் பெற்றவர் என்றவாறு.

உள்ளத்தைப் பிடிக்க ஓடிவரும் பெண்கள்

332 பள்ளத்துப் பாயும் நன்னீர்
அனையவர்; பானல் பூத்த
வெள்ளத்துப் பெரிய கண்ணார்;
மென்சிலம்பு அலம்ப மென்பூத்
தள்ளத்தம் இடைகள் நோவத்
தமைவலித்து அவன்பாற் செல்லும்
உள்ளத்தைப் பிடித்தும் என்ன
ஓடுகின் றாரும் ஒத்தார். கஉ

கடலிலே போய்ப் பாய்கிற நல்ல நீரை ஒத்த பெண் கள் நீலமலர் பூத்த நீர் நிலைகளைக் காட்டினும் பெரிய கண் களை உடையவராக, மெல்லிய சிலம்பை யணிந்திருக்கிற மெல்லிய மலர்போன்ற பாதங்கள் தடுமாற, அவர்களுடைய இடை வருந்த, தம்மை இழுத்துக்கொண்டு புறப்பட்டு இராமனிடத்திற்குச் செல்லுகிற உள்ளத்தைப் பிடிப்பதற் காக ஓடுகிறவர்களைப் போன்றார்கள்.

---

332. பானல் - நீலோற்பல மலர்; அலம்ப - ஒலிக்க; பூ-பூப் போன்ற பாதங்கள்; வலித்து - இழுத்து.

(வி-ம்) இராமன் வருகிருன் என்று கேட்ட வுடனேயே பெண்களின் மனம் இராமனைக் காணும் ஆசை யால் முழுவலியோடும் வேகத்தோடும் இழுத்துச் செல்லு கிறது. அதனை விடாமல் பிடிப்போம் நாம் என்று வருபவர் போலப் பெண்கள் ஓடி வருகிருர்கள் ; கண்கள் இராமனை நோக்கி விழித்தபடியே இருக்கின்றன ; ஓட முடியாமல் கால் தத்தளிக்கிறது ; இடுப்பு வலியெடுத்து விட்டது. பள்ளம் என்றது இங்கே கடலைக்குறிக்கும். கடல் தூய்மை யானது ; ஆழமும் அகலமும் காண முடியாதது. அது இராமனுக்கு உவமை. ஆற்று நீர் போன்றவர்கள் பெண்கள். எப்படிப்பட்ட நீரும், கடலில் கலக்கும்போது கடல் நீரோடு இரண்டறக் கலந்துவிடுவது போல இறைவனின் அருள் வெள்ளத்தில் நல்ல ஆன்மாக் களாகிய அன்பு வெள்ளம் ஓடிப்பாய்ந்து கலந்து விடுகிற தென்ற உண்மை இங்கே காணப்படுகிறது. இராமனைப் பார்க்க வந்த பெண்கள் காமவயப்பட்டவரன்று; தூய அன்புருவமானவர் என்பதை வலியுறுத்தவே இங்கு " நன்னீர் அனையவர் " என்று கூறப்பட்டது.

சீதை தங்கள் அரசனின் மகள். அவளுக்கு நீண்ட நாளாக மணமகன் கிடைக்கவில்லை. இப்பொழுது பெரிய வீரனுக ஒருவன் கிடைத்திருக்கிருன். சீதையின் கணவனு கிய மணமகன் ஊர்வலம் வரும்போது பார்க்க ஊரிலுள்ள மக்களெல்லாம் ஆசைப்படுவது இயல்பு. நடுத்தர வயதுள்ள பெண்கள் திருமணப் பெண்ணையும் மாப்பிள்ளையையும் காண் பதில் பெரு விருப்புடையர் என்பது இயல்பாக உணரக் கூடியது. இங்கே உலகிலேயே அழகான சீதைக்கு, உலகிலேயே அழகான இராமன் மணமகன் என்ருல் அவ னும் தங்கள் அரண்மனைக்கு மாப்பிள்ளையாக வருகின்ருன்

என்றால் எப்படியிருக்கும்? அவனைப் பார்க்க எழுந்த ஆசை இயல்பான ஆசைதான். காம இச்சையால் எழுந்ததன்று என்று தெளிவுபடக் கூறப்பட்டது.

பெண்களின் கண்வழிச் செல்லல்

333 வீதிவாய்ச் செல்கின் றான்போல்
விழித்திமை யாது நின்ற
மாதரார் கண்க ளூடே
வாவுமான் தேரில் செல்வான்
யாதினும் உயர்ந்தோர் தன்னை
யாவர்க்கும் கண்ணன் என்றே
ஓதிய பெயர்க்குத் தானே
உறுபொருள் உணர்த்தி விட்டான். கரு

தெருவழியாகச் செல்கிறவனைப் போலச் சென்றாலும் விழித்த கண் இமையாமல் பார்த்துக் கொண்டிருக்கிற பெண்களின் கண்களின் ஊடே, தாவிச் செல்கிற குதிரை பூட்டிய தேரில் சென்றான். அப்படிச் செல்கிற இராமன், எல்லாவற்றுள்ளும் உயர்ந்த ஞானிகள் (கடவுளாகிய) தன்னை "யாவருக்கும் கண்ணென விளங்குபவன்" என்று கூறிய பெயர்க்கு உண்மையாக உள்ள பொருளை உணர்த்தி விட்டான்.

(வி - ம்) கண்ணுக்குக் கண்ணாக வுள்ளவன் கடவுள். கண் - கண்ணோட்டம்: கருணை. கருணைக்கடலாக வுள்ளவன் கடவுள் என்றும், கண் - அறிவு; கண்ணன்-அறிவுமயமானவன் என்றும் கொள்க. கடவுளான இராமன் குதிரை

---

333. வாவு - தாவிச் செல்கிற; மான் - குதிரை; உறு பொருள் - பொருந்திய பொருளை.

கள் கட்டப்பட்ட இரதத்தில் தெருவழியேதான் போகிறான். என்றாலும் அங்கே வரிசையாக நிற்கிற பெண்களின் கண்ணிலுள்ள கருமணியில் இராமன் உருவம் பதிந்து செல்கிறது. பெண்களின் கண்மணி வரிசையாக வைக்கப்பட்ட கண்ணாடி போலவும், அவற்றின் வழியாக இராமன் உருவம் தொடர்பாகச் செல்வது போலவும் இருக்கின்றன. தெருவிலே தேர் செல்வது ஒன்று. பெண்களின் கண்மணிகளான கண்ணாடி வீதியில் அவனுடைய உருவம் சென்று கொண்டே இருக்கிற தென்பது மற்றொன்று. எனவே "மாதரார் கண்களூடே வாவுமான் தேரிற் செல்வான்" எனப்பட்டது. "கண்ணே கண்ணிற் கருமணியே மணியாடு பாவாய்" (அப்பர் தேவாரம்). யாவர்க்கும் 'கண்ணன்' என்ற சொல்லுக்கு, இங்கே கண்ணில் பாவையாக விளங்கினான் என்ற அளவில்தான் பொருள் கிடைக்கிற தென்பது அறியத்தக்கது.

இடைவெளியில் பார்த்தல்

334 கருங்குழற் பாரம் வார்கொள்
கனமுலை கலைசூழ் அல்குல்
நெருங்கின மறைப்ப ஆண்டோர்
நீக்கிடம் பெறாது விம்மும்
பெருந்தடங் கண்ணி காணும்
பேரெழில் ஆசை தூண்ட
மருங்குலின் வெளிக ளூடே
வள்ளலை நோக்கு கின்றாள். கச

முன்னரே வந்து கூடிநின்ற பெண்களின் நிறைந்த கூந்தலும், கச்சணிந்த பெரிய தனங்களும், ஆடை அணியப்

334. பாரம் – தொகுதி ; மருங்குல் – இடை.

பட்டுள்ள அல்குல் பகுதியும் நெருங்கி மறைக்கிறபடியால், இராமனைப் பார்க்கும் பொருட்டு ஓடிவந்த ஒரு பெண்ணுக்குப் பார்க்கும் வழி கிடைக்கவில்லை. விம்முகிருள். அகன்ற கண்ணையுடைய அவள், ஆசைப் பெருக்கினல் ஒரு பெண்ணின் இடைக்கும் மற்ற பெண்ணின் இடைக்கும் இடையே உள்ள இடைவெளியில் பார்க்கிருள்.

(வி - ம்) பெண்கள் தெருவின் இருமருங்கும் வரிசையாகக் கூடிநின்று இராமனைப் பார்க்கிருர்கள். பிந்தி வந்த பெண்ணுக்குப் பார்க்க வழியில்லை. பெண்களின் பின்பக்கத்தில் நிற்கிருள். முன்னலே நிற்கிற பெண்களின் அல்குல் பாகமும் மார்பின் பாகமும் மிகப் பெரியனவாக இருப்பதால் அவை நெருங்கி ஒட்டிப்போயின. அப்பெண்களுக்கு இடையோ சிறிதாக இருக்கிறது. எனவே இரு பெண்களின் இடை சேருகிற இடத்தில் இடைவெளி இருக்கிறது. அந்த வெளியின் வழியாகப் பின்னலே இருக்கிற பெண் இராமனைப் பார்க்கின்ருள்.

கண்டதே கண்டார்

335 தோள்கண்டார் தோளே கண்டார்;
தொடுகழற் கமலம் அன்ன
தாள்கண்டார் தாளே கண்டார்;
தடக்கைகண் டாரும் அஃதே;
வாள்கொண்ட கண்ணுர் யாரே
வடிவினை முடியக் கண்டார்?
ஊழ்கொண்ட சமயத்து அன்னன்
உருவுகண் டாரை ஒத்தார். கரு

இராமனுடைய தோளைக் கண்டவர் தோளைத்தான் பார்த்தார்கள் ; கழலணிந்துள்ள தாமரை மலர்போன்ற காலைக்கண்டவர் காலைத்தான் பார்த்தார்கள். (இவ்வா றன்றி) ஒளி பொருந்திய கண்களையுடைய பெண்களில் யார் தான் அவனுடைய வடிவம் முழுவதையும் பார்த்தார்கள் ? ஒன்றுக்கொன்று மாறுபட்ட மதங்களின் வழியாகக் கட வுளின் உருவத்தைக் காண முற்பட்டவர்களைப் போன்ருர் கள்.

(வி - ம்) கடவுள் ஒருவர்தான் உண்டு. அக்கடவுளைக் காண எழுந்துள்ள மதங்கள் பல. ஒவ்வொரு மதத்தினரும் கடவுள் ஒருவர்தான் என்கின்றனர். அவர் யார்? என்ருல் ஒவ்வொருவரும் ஒவ்வொரு மாதிரியாகக் கூறுகின்றனர். எல்லோருடைய கூற்றிலும் உண்மை இருக்கத்தான் செய் கிறது. ஆனல் கடவுளுடைய முழு உருவத்தையும் காண மதங்கட்கு வலிமை இல்லாதபடியால், தாம் கண்ட பகுதி களையே கடவுளுருவ மென்று கூறுகின்றனர். இங்கேயும் பெண்கள் இராமனுடைய முழு உருவத்தையும் காண வேண்டுமென்று துடித்து வந்தனர். ஆனல் பட்ட இடத் தில் பதிந்த பார்வையைப் பெயர்க்க முடியவில்லை. பார்வை யில் முழு உருவமும் அடங்கவில்லை. ஆதலால்தான் நம்பியைக் காண ஆயிரம் கண் வேண்டும் எனப்பட்டது (244). ஆன்மா வுக்கும் கடவுளுக்கும் சமயத்துக்குமுள்ள தன்மைகள் இங்கே தெளிவுபெறக் கூறப்பட்டுள்ளன. பெண்கள் கண்ணில், தோளும், தாளும், கையும் பட்டனவே யன்றி மற்ற உறுப்புக்கள் ஏன் படவில்லை என்ருல், சிவபெருமா னுடைய மலைபோன்ற வில்லை வளைத்த தோளும் கையும், அகலிகைக்கு உருவம் நல்கிய திருவடியும் பெண்களின் மனத்தைக் கவர்ந்திருந்தன என்க.

இராமன் மண்டபம் அடைதல்

336 *மாதர் இன்னணம்
மொய்த்திட வள்ளல்போய்க்
கோதில் சிந்தை
வசிட்டனும் கோசிக
வேத பாரனும்
மேவிய மண்டபம்
ஏதி மன்னர்
குழாத்தொடும் எய்தினான். கசு

பெண்கள் இவ்வாறு வந்து நெருங்க, இராமன் சென்று, குற்றமற்ற உள்ளத்தை யுடைய வசிட்ட முனிவரும், வேதத்தின் கரைபோன்ற கோசிக முனிவரும் இருக்கிற மண்டபத்தை, படையை யுடைய சிற்றரசர்களின் கூட்டத்துடன் அடைந்தான்.

இராமன் முனிவரை வணங்குதல்

337 திருவின் நாயகன்
மின்திரிந் தாலெனத்
துருவு மாமணி
ஆரம் துயல்வரப்
பருவ மேகம்
படிந்தது போற்படிந்து
இருவர் தாளும்
முறையின் இறைஞ்சினான். கஎ

336. பாரம் – கரை; ஏதி – படை: ஆயுதம்; ஏதி மன்னர்–இயற்கையாக எப்பொழுதும் தாங்கியிருக்கிற ஆயுதங்களை யுடைய மன்னர்.

337. மின் – மின்னல் ; திரிந்தாலென – உலாவித் திரிந்த மாதிரி ; துருவு – தேடி எடுத்த ; துயல்வர – புரள.

இலக்குமியின் தலைவனான இராமன், மின்னல் இடம் பெயர்ந்து உலாவுவதைப் போல, பொறுக்கி எடுத்த பெரிய மணிகளால் செய்யப்பட்ட மாலைகள் அசைந்து புரளும்படி, மழைக்காலத்து மேகம் பொருந்துவதைப் போல இரு முனிவர்களுடைய திருவடிகளில் விழுந்து முறைப்படி வணங்கினான்.

இராமன் தம்பியரோடு இருத்தல்

338 இறைஞ்சி, அன்னவர்
ஏத்தினர் ஏவ,ஓர்
நிறைஞ்ச பூந்தவிசு
ஏறி, நிழல்கள்போல்
புறஞ்செய் தம்பிய
ருட்பொலிந் தானரோ
அறஞ்செய் காவற்கு
அயோத்தியுள் தோன்றினான். கஅ

அறத்தைக் காப்பதற்காக அயோத்தியில் தோன்றின இராமன், அவ்வாறு வணங்க, முனிவர்கள் வாழ்த்தி (இருக்கையில் அமரும்படி) கூற, பூநிறைந்த இருக்கையில் ஏறி, நிழலைப்போலத் தன்னைக் காத்து நிற்கிற தம்பியர்க்கு நடுவில் வீற்றிருந்தான்.

---

338. ஏத்தினர் – வாழ்த்தினர் ; நிறைஞ்ச : நிறைந்த என் பதன் விகாரம் ; நிறைஞ்ச பூந்தவிசு–பூநிறைந்த தவிசு ; சித்திரத் தாற் பூவேலை செய்த தவிசு எனினும் ஆம் ; தவிசு - இருக்கை : ஆசனம் ; புறம்செய் - புறத்தே காவல் செய்கிற அல்லது புறத்தே நின்று அழகு செய்கிற.

தயரதன் மண்டபம் அடைதல்

339 ஆன மாமணி
மண்டபம் அன்னதில்
தானை மன்னன்
தமரொடும் சார்ந்தனன்;
மீன்எ லாம்தன
பின்வர வெண்மதி
வானி லாவுற
வந்தது மானவே. கக

அத்தகைய பெருமை பொருந்திய அழகிய மண்டபத்திற்கு, சேனைகளையுடைய தயரத மன்னன் சுற்றத்தாரோடும் வந்து சேர்ந்தான். அது எப்படி இருந்ததென்றால், வான மீனெலாம் பின் தொடர்ந்துவர முழுமதி நிலவொளியோடு வந்தாற் போன்றிருந்தது.

(வி - ம்) தயரதன் முகம், மகிழ்ச்சிப் பெருக்குடன் தோன்றுவதாலும் அவனுடைய மகிழ்ச்சி காண்போருக்கெல்லாம் மகிழ்ச்சியை ஊட்டுவதாலும் நிலவைப் பொழிந்து வரும் மதியோடு உவமிக்கப்பட்டது.

தயரதன் வீற்றிருத்தல்

340 வந்து மாதவர்
பாதம் வணங்கி,மேல்
சிந்து தேமலர்
மாரி சிறந்திட,

---

339. தன - தன் : அகரச்சாரியை பெற்றுத் ' தன' என்றாயிற்று. மான — ஒப்ப.

340. தே மலர் - தேன் பொருந்திய மலர் : புதுமலர்.

அந்த ணாளர்கள்
    ஆசியொடு ஆதனம்
இந்தி ரன்முகம்
    நாணுற ஏறினன். உ0

தயரதன் வந்து அங்கிருந்த முனிவர்களுடைய கால்களில் வணங்கி, தன்மேலே பலராலும் தூவப்படுகிற தேன் பொருந்திய மலர், மழைபோல் விளங்க, அந்தணர்களின் வாழ்த்தோடு, இந்திரனும் வெட்கப்படும்படி தன் இருக்கையில் ஏறி அமர்ந்தான்.

சாமரை வீசுதல்

341 தீங்க ரும்பினும்
    தித்திக்கும் இன்சொலார்
தாங்கு சாமரை
    மாடு தயங்குவ,
ஓங்கி யோங்கி
    வளர்ந்துயர் கீர்த்தியின்
பூங்கொ ழுந்து
    பொலிவன போன்றவே. உக.

இனிப்பான கரும்புச் சாற்றைக் காட்டிலும் இனிப்பாயிருக்கிற இனிய சொல்லையுடைய பெண்கள் வீசுகிற சாமரங்கள் பக்கத்திலே விளங்குகின்றன. அது எவ்வாறுள தென்றால், ஓங்கி ஓங்கி வளர்ந்து உயருகின்ற தயரதனுடைய புகழின் அழகிய கொழுந்து விரிந்து விளங்குவதைப் போன்றிருக்கிறது.

——

341. மாடு - பக்கம் ; தயங்குவ - விளங்குவன.

15. கோலங்காண் படலம்

[சீதையின் வடிவழகைக் கண்ட படலம்.
கோலம் - வடிவம்]

வசிட்டன் சீதையை அழைத்து வருக எனல்

342 *தேவியர் மருங்கு சூழ
இந்திரன் இருக்கை சேர்ந்த
ஓவியம் உயிர்பெற் றென்ன
உவந்தர சிருந்த காலை,
தாவில்வெண் கவிகைச் செங்கோற்
சனகனை இனிது நோக்கி
மாவியல் நோக்கி ளைக்
கொணர்கென வசிட்டன் சொன்னான். க

மனைவியர் பக்கத்திலே சூழ்ந்திருக்க, இந்திரனுடைய இருக்கையை அடைந்த உயிர்பெற்ற ஓவியம் என்று சொல்லும்படி தயரதன் மகிழ்ச்சியோடு இருந்தவுடனே, குற்றமில்லாத வெண்கொற்றக் குடையையும் செவ்விய ஆட்சியையும் உடைய சனக மன்னனை வசிட்டர் அன்புடன் பார்த்து, "மாவடுவைப் போன்ற கண்களை யுடைய சீதையை அழைத்து வருக" என்று கூறினர்.

(வி – ம்) தயரதன் மகிழ்ச்சிப் பெருக்கில் திளைத்தவனக ஒன்றும் பேசாமல் வீற்றிருந்தான். ஆதலால் உயிர் பெற்ற ஓவியம் எனப்பட்டது. பெண்ணை அழைத்து வருக என்றதும், அழைத்து வந்ததும் பெண்ணை எல்லாரும் காண்பதற்கேயாம்.

---

342. தாவில் - தா+இல்=குற்றம் இல்லாத ; மா - மாவடு: மாம்பிஞ்சு. (சரிபாதியாக வெட்டப்பட்ட மாவடு, கண்போலவே தோன்றும்.)

சனகன் பெண்களை ஏவுதல்

343 உரைசெயத் தொழுத கையன்
உவந்தஉள் ளத்தன் பெண்ணுக்கு
அரசியைத் தருதிர் ஈண்டென்று
ஆயிழை யவரை ஏவக்
கரைசெயற்கு அரிய காதல்
கடாவிடக் கடிது சென்றார்
பிரசமொத்து இனிய சொல்லார்
பேதைதா தியரில் சொன்னார். உ

வசிட்டர் இவ்வாறு சொன்னவுடனே, கூப்பிய கைகளை உடையவனும், மகிழ்ந்த மனத்தை யுடையவனுமாகிய சனகன், "பெண்களுக்கு அரசியான சீதையை இங்கே அழைத்து வருக" என்று அங்கு நின்ற பெண்களை ஏவினன். தேன்போல இனிக்கும் சொல்லையுடைய அப்பெண்கள் கரையழிந்த காதலால் தள்ளப்பட்டு விரைந்து சென்றனர். சென்று, சீதையின் தாதியரிடம் தெரிவித்தார்கள்.

(வி – ம்) "மாவியல் நோக்கினள்" "பெண்ணிற்கரசி" என்று கூறிவருகிற இவ்விடத்தில், "பேதை" என்று கவிகூறுவதாக இப்பாடலில் வருகிறது. இம்மாதிரியாக இடர்ப்படும் பாடல் சில, கதைத் தொடர்புக்காகவே இடம் பெற்றுள்ளன.

---

343. ஆயிழை - ஆராய்ந்தெடுத்த நகைகள். (இங்கே அவற்றை அணிந்திருப்பவரைக் குறித்தது) கடாவிட - தூண்ட ; பிரசம் - தேன்.

அழகுக்கு அழகு செய்தார்

344 அமிழ்இமைத் துணைகள் கண்ணுக்கு
அணியென இமைக்கு மாபோல்
உமிழ்சுடர்க் கலன்கள் நங்கை
உருவினை மறைப்பது ஓரார்;
அமிழ்தினைச் சுவைசெய் தென்ன
அழகினுக்கு அழகு செய்தார்
இமிழ்திரைப் பரவை ஞாலம்
ஏழைமை உடைத்து மாதோ. ௩

கண்கள் மறைதற்குக் காரணமாகக் குவியும் கண்ணிமைகள் கண்ணுக்கே சிறப்பென்று சொல்லும்படி இமைப்பதைப் போல இமைக்கிற ஒளியுடைய நகைகள் சீதையின் உருவத்தையே மறைக்கின்றன என்பதை உணர்வார் இலர். திருப்பாற்கடலில் தோன்றிய அமிழ்தத்துக்குச் சுவையை ஏற்ற முற்படுபவரைப் போல அழகு வடிவமான சீதையை அழகு செய்ய முற்பட்டார்கள். ஒலிக்கின்ற கடல் சூழ்ந்த இவ்வுலகத்து மக்கள் மிகவும் மட்டமானவர்களாக இருக்கின்றனர்.

(வி-ம்) கண்ணின் மேலும் கீழுமாக இரு இமைகள் இமைத்துக் கொண்டிருக்கின்றன. அடிக்கடி அவை அழகான கண்களை மூடுகின்றன. மூடும்போது கண்ணின் அழகு மறைந்துதான் போகிறது. என்றாலும் உடனே திறந்து கொள்கின்றன. மூடித்திறப்பதால் கண்ணே ஒரு புது அழகு பெறுகிறது. தூசி முதலியன விலகித் தெளி

---

344. ஓரார் - அறிந்தாரில்லை: இமிழ் - ஒலி; பரவை-கடல்; ஞாலம் - நிலவுலகம்; ஏழைமை - அறியாமை; உடைத்து-உடையதாக இருக்கிறது.

வடைகிறது. நகைகளும் இமைக்கின்றன. அதாவது ஒளி வீசுகின்றன. ஒளி நன்ருகத்தான் இருக்கிறது. என்ருலும் அவை விலகி விலகி, அணியப்பட்டுள்ள இடங்களின் அழகைக் காணும்படி விடுவதில்லை. இருந்தபடியே இருந்து, தம் அழகைக் காட்டுகின்றனவே யன்றி, சீதையின் உடலழகைக் காண முடியாதபடி நிரந்தரமாக மறைத்துக்கொள்கின்றன. அழகே உருவெடுத்து வந்த சீதையின் உடலை இன்னும் அழகு செய்வதாக நினைத்து, உள்ள அழகை மறைத்ததைத் தவிரக் கண்ட பலன் ஒன்றும் இல்லை. உலக மக்கள் இப்படித்தான் பலவற்றைச் செய்கிருர்கள். மனிதர்கள் மட்டமாக இருக்கிருர்கள் என்பதைத் தவிர வேறென்ன சொல்ல இருக்கிற தென்கிருர் கவி.

அழகை உண்டு தடுமாறல்

345 கஞ்சத்துக் களிக்கும் இன்தேன்
 கவர்ந்துணும் வண்டு போல
அஞ்சொற்கள் கிள்ளைக் கெல்லாம்
 அருளினுள் அழகை மாந்தித்
தஞ்சொற்கள் குழறித் தத்தம்
 தகைதடு மாறி நின்ருர் ;
மஞ்சர்க்கும் மாத ரார்க்கும்
 மனம்என்பது ஒன்றே யன்ருே ? ௪

தாமரை மலரில் இருந்து மகிழ்வனவும், இனிய தேனை உண்பனவுமான வண்டுகளைப் போல, (கன்னிமாடத்திலுள்ள பெண்கள்) கிளிகளுக்கு அழகிய சொற்களைக் கற்பித்த சீதை

---

345. கஞ்சம் - தாமரை, தாமரைப்பூ ; கிள்ளை - கிளி ; மாந்தி - உண்டு ; தகை - தன்மை ; மஞ்சர் - மைந்தர் என்பதன் விகாரம்.

யின் அழகை உண்டு மகிழ்ந்து சொல் குழறித் தம் நிலைமாறி நின்றனர். ஆணுக்கும் பெண்ணுக்கும் மனம் ஒரே மாதிரியானது தானே!

(வி - ம்) பெண்கள், தேனுண்டு மயங்கும் வண்டைப் போல, அழகை உண்டு மயங்கிப் போயினர். மாதரைக் கண்டு மைந்தர் மயங்குவது இயல்பாக இருக்கவும், பெண்ணைக் கண்டு பெண்கள் மயங்குவது எப்படி என்றால் மனம் என்ற தத்துவம் இருசாராருக்கும் ஒன்றுதான். உயர் பொருளைக் கண்டு, கவர்ச்சியுற்று மகிழ்வதில் ஆண் பெண் என்ற வேறுபாடு கிடையாதென்க. "எண் பிறங் கழகிற் கெல்லை இல்லையாம் என்று நின்றாள், கண்பிற பொருளிற் செல்லா கருத்தெனின் அஃதே கண்ட, பெண் பிறந் தேனுக்கு என்றால் என்படும் பிறருக் கென்றாள்" (சூர்ப்பநகை மூக்கரிபடலம்) "பெண்ணுக்குப் பெண்ணாசை கொள்ள வந்த பெண்ணமுதே" என்பதும் அது.

ஒரே அழகு மயம்

346 இழைகுலாம் முலையி னாளை,
இடையுவா மதியின் நோக்கி,
மழைகுலா ஓதி நல்லார்
களிமயக் குற்று நின்றார்;
உழைகுலாம் நயனத்தார் மாட்டு
ஒன்றொன்றே விரும்பற்கு ஒத்தது
அழகெலாம் ஒருங்கே கண்டால்
யாவரே ஆற்ற வல்லார். ௫

---

346. இடையுவாமதி - பௌர்ணமியன்று தோன்றும் சந்திரன்; ஓதி - கூந்தல்; நல்லார் - பெண்கள்; உழை - மான்.

நகையணிந்திருக்கிற தனங்களை யுடைய சீதையை, மேகத்தைப் போன்ற கூந்தலையுடைய பெண்கள் நிறைமதி போன்ற தம் முகத்தினாலே நோக்கிக் கள் மயக்கங் கொண்ட வரைப் போல் நின்றனர். மானின் பார்வையைப் போல் மருண்ட பார்வையை யுடைய பிற பெண்களிடத்தில் ஒவ் வோர் உறுப்பு அழகாக இருப்பதைக் காணலாம். ஆனால் அழகெலாம் திரண்டு ஓரிடத்தில் காண வாய்க்குமானால் யாராலேதான் அந்த இனிமையைக் கண்டு பொறுக்க முடியும் ?

(வி - ம்) சில பெண்களுக்குக் கண் அழகாக இருக் கும். சிலருக்குக் கூந்தல் நீண்டு வளர்ந்திருக்கும். சில ருக்குச் சிவந்த மேற்பகுதியுடன் வெள்ளிய பற்கள் வரிசை யாக அமைந்திருக்கும். ஆனால், அவற்றிற்கேற்ப மற்ற உறுப்புக்கள் அமைவதில்லை. எல்லா உறுப்புக்களுமே சீதைக்கு அழகின் சிகரமாக அமைந்திருக்கின்றன. இதைப் பார்க்கும் பெண்கட்கு உள்ளமே நிலைக்குத்திப் போகிறது. உள்ளத்தில் இந்த அழகைக் கண்டதனால் ஏற்படும் இன்பம் ஊற்றெடுத்துக் கள்ளுண்ட மாதிரியான ஒரு களிப்பைத் தருகிறது. எனவே இந்த இன்பம் தாங்க முடியாத தாகி விட்டது.

சீதை நடந்த காட்சி

347 **வல்லியை உயிர்த்தநில**
மங்கைஇவள் பாதம்
மெல்லிய உறைக்கும்என
அஞ்சிவெளி எங்கும்

---

347. வல்லி - கொடி : கொடிபோன்ற சீதை ; உயிர்த்த - பெற்ற ; மெல்லிய - மென்மையுடையன ; உறைக்கும்-உறுத்தும் ;

பல்லவ மலர்த்தொகை
பரப்பினள் எனத்தன்
நல்லணி மணிச்சுடர்
தவழ்ந்திட நடந்தாள். சு

கொடிபோன்ற சீதையைப் பெற்ற நிலமகள், சீதையின் மென்மையான பாதங்கள் வருந்தும் என்று கருதிப் பயந்து, இடைவெளியுள்ள இடங்களில் எல்லாம் தளிர்களையும், மலர்களையும் பரப்பி வைத்தாள் என்று சொல்லும்படி சீதையின் இரத்தின நகைகளின் ஒளி பரவிச் செல்லச் சீதை நடக்கலானாள்.

(வி – ம்) பளிங்குக் கற்களால் தளவரிசை அமைக்கப் பட்ட மண்டபம்; அதில் சீதை நடக்கிறாள். சீதை அணிந்திருக்கின்ற உயர்ந்த நகைகளில் உள்ள பலநிறமுள்ள இரத்தினங்கள், பளிங்குக் கல்லில் ஒளிவீசி யடிக்கின்றன. அப்பொழுது பளிங்குக் கற்களின்மீது, பச்சை இலைகளும், பலநிற மலர்களும் பரப்பப்பட்டாற்போல அந்தக் காட்சி இருக்கிறது. சீதையைப் பெற்ற நிலமகள், தன் குழந்தையின் மெல்லிய பாதமானது தரையில் நடந்தால் உறுத்தும் என்று எண்ணித் தளிர்களையும், பூக்களையும் பரப்பியிருக்கிறாள் போலும் என்று நினைக்கத் தோன்றுகிறது. பெற்றவளுக்குத்தானே பிள்ளையின் அருமை தெரியும்!

இதுவும் அது

348 மண்முதல் அனைத்துலகின்
மங்கையருள் எல்லாம்
கண்மணி எனத்தகைய
கன்னிஎழில் காண

---

347. பல்லவம் – இலையின் கொழுந்து : தளிர்.

அண்ணல்மர பிற்சுடர்
அருந்தியொடு தான்அவ்
விண்ணிழிவது ஒப்பதொர்
விதான நிழல் வந்தாள். ஏ

நிலவுலகம் முதல்மற்றைய எல்லா உலகங்களிலும் உள்ள பெண்கள் யாவருள்ளும் கண்ணின் மணி என்று சொல்லத் தக்கவளாகச் சீதை விளங்குகிறாள். அந்தச் சீதையின் உருவ எழிலைக் காணும் பொருட்டு, இராமனது குலமுதல்வனான சூரியன், விருப்பத்தோடு இறங்கி வந்தாற்போல் விளங்குகிற ஒரு மேற்கட்டியின் கீழ், சீதை நடந்து வந்தாள்.

(வி – ம்) அரசர்கள் செல்லும்போது மேலே குடை பிடிக்கப்படுவதுபோல, மணப்பெண்வரும்போது தலைக்கு மேலே ஒரு விதானம் - மேற்கட்டியைத் தாங்கி வருகிறார்கள். அதன் கீழே சீதை நடந்து வருகிறாள். அந்த விதானம் ஒளியுள்ள மணிகள் பதிக்கப்பட்டு ஒரே ஒளி மயமாக விளங்குகிறது. மேலிருந்த சூரியனே இறங்கி சீதையின் தலைக்கு மேல் வந்திருக்கிறதோ என்று கருதும்படி இருக்கிறது. சூரியன் வரக் காரணமிருக்கிறது. இராமனுக்குப் பெண் பார்க்கத் தயரதன் முதலிய எல்லோரும் வந்திருக்கிற மண்டபத்துக்கு, குலமுதல்வனான சூரியனும் வரலாந்தானே! பெண்குலத்துக்கே பெருமைதரப் பிறந்திருக்கிறபடியால், சீதை உலகப் பெண்களின் கண்மணி என்று கூறப்பட்டாள். வெயில் இல்லாத இடத்தில் நிழல் என்றது உபசாரமாகக் கூறப்பட்டது. ஒளிமயமான விதானத்தின் நிழலில் வந்தாள் என்பது இன்புறத்தக்கது. விதானத்தின் கீழே என்பது பொருள்.

---

348. அண்ணல் – இராமன் ; மரபு - பரம்பரை ; இழிவது- இறங்கி வருவது ; விதானம் - மேற்கட்டி ; நிழல் - கீழே.

சீதை மண்டபத்துக்கு வருதல்

349 பொன்னின்ஒளி பூவின்வெறி
சாந்துபொதி சீதம்
மின்னின்எழில் அன்னவள்தன்
மேனியது மான
அன்னமும் அரம்பையரும்
ஆரமிழ்தும் நாண
மன்னவை இருந்தமணி
மண்டப மடைந்தாள். அ

தங்கத்தின் காந்தியையும், மலரின் மணத்தையும், சந்தனத்தில் நிறைந்துள்ள குளிர்ச்சியையும், மின்னலின் ஒளிமயமான வீச்சையும் (வெட்டும்) சீதையின் உடல் ஒத்திருக்க, அன்னமும், தேவமாதரும் சிறந்த அமிழ்தமும் வெட்கப்படும்படி அரசர் கூட்டம் இருக்கிற அழகிய மண்டபத்தை அடைந்தாள்.

(வி - ம்) அன்னம் நடை அழகிலும், அரம்பையர் உடல் அழகிலும், ஆரமிர்து இனிமையிலும் மிக்கன. அவை வெட்கப்படும்படி சீதை மண்டபத்துக்கு வந்து சேர்ந்தாள். உயர்ந்த பெண்ணின் உடலில் மணமும் குளிர்ச்சியும் உண்டு என்பதை " மாரிப் பித்திகத்து நீர்வார் கொழுமுகை, இரும் பனம் பசுங்குடைப் பலவுடன் பொதிந்து, பெரும்பெயல் விடியல் விரித்துவிட்டன்ன, நறுந்தண்ணியளே நன்மா மேனி " (குறுந் – 168) எனவரும் பாடலால் அறிக.

---

349. வெறி - மணம்; சாந்து - சந்தனம்; சீதம் - குளிர்ச்சி; மின்னின் எழில் - மின்வெட்டு.

இராமன் வில்லை நோக்கி எழுந்து வந்தபோது (238) 'மாக மடங்கலும் மால் விடையும்பொன் நாகமும் நாகமும் நாண நடந்தான்' எனவருதல் காண்க.

இராமன் கண்ட அமிழ்தம்

350 அன்னவளை அல்லள்என
ஆம்என அயிர்ப்பான் ;
கன்னிஅமிழ் தத்தைஎதிர்
கண்டகடல் வண்ணன்
உன்னுயிர் நிலைப்பதொர்
அருத்தியொடு உழைத்தாண்டு
இன்அமிழ்து எழக்களிகொள்
இந்திரனை ஒத்தான். க

அந்தச் சீதையை முன் தான் கண்ட பெண்தானு அல்லவா என்று ஐயப்பட்டிருந்தான் இராமன். கன்னியாகிய அமிழ்தத்தைக் கண்ணெதிரே கண்ட கடல்நிற வண்ணனுகிய அவன், இழுபட்டுக்கொண்டிருக்கிற உயிர் நிலைக்க வேண்டும் என்று விருப்பத்தோடு பாடுபட்டுக் (கடலைக் கடைந்து) அங்கே இனிய அமிழ்தம் எழக் கண்டு பெரு மகிழ்வு எய்திய இந்திரனைப்போல மகிழ்ச்சி யடைந்தான்.

(வி - ம்) இந்திரன், தன்னுயிர் தன்பால் நிலைத்து நிற்கவேண்டிக் கவலைப்பட்டான். திருப்பாற்கடல் கடையப்பட்டது. எவ்வளவோ துன்பங்கள் தோன்றின. கடைசியில் அமிழ்தமே வந்துவிட்டது. அதனைக் கண்டு

350. அயிர்ப்பான்-ஐயப்படுகின்றவனுகிய ; அயிர்ப்பானுகிய கடல் வண்ணன் ஒத்தான் என முடியும் ; உன்னு - இழுக்கிற ; உழைத்து - பாடுபட்டு.

இந்திரன் அடைந்த மகிழ்ச்சி சொல்ல முடியாதது. அப்படியே இராமனும் பிரிவினல் துயரப்பட்டான். வில்லே வளைத்து ஏதோ ஒரு பெண்ணை மணம் முடிப்பதென்ருகியிருக்கிறது. ஏற்கெனவே ஒரு பெண்ணை மனம் பற்றி இருக்கிறது. இப்பொழுது வருகிற மணப்பெண் வேறு பெண்ணுக இருந்தால், என்ன செய்வது என்று மந்தர மலேயும் வாசுகியும் பட்டபாடு பாடுகின்ருன். அப்பொழுது சீதை தோன்றினுள். அன்று கண்ட அதே பெண் என்றதும் மகிழ்ச்சி, எல்லே கடந்து போயிற்று. இங்கே இந்திரனது மகிழ்ச்சி, இராமனது மகிழ்ச்சிக்கு உவமையன்றி இந்திரன், இராமனுக்கு உவமையன்று. இந்திரன் கடல் அமிழ்தத்தைக் கண்டான். இராமன் கன்னி அமிழ்தத்தைக் கண்டான்.

மலர்மகளே இவள்

351 எங்கள்செய் தவத்தினில்
இராமன்என வந்தோன்
சங்கினெடு சக்கரம்
உடைத்தனி முதற்பேர்
அங்கண்அரசு ஆதலினவ்
அல்லிமலர் புல்லும்
மங்கைஇவள் ஆம்என
வசிட்டன்மகிழ் வுற்ருன். ௪௦

முயன்று செய்த எங்களுடைய தவத்தினுல் இராமன் என்ற பெயரோடு வந்தவன் சங்கையும் சக்கரத்தையும் உடைய ஒப்பற்ற கடவுள்; பெரிய கண்களையுடைய அரசு; ஆதலால் அந்தத் தாமரை மலரில் பொருந்தி இருக்கிற

---

351. செய்தவம் - செய்த தவம்; தனிமுதல் - கடவுள்; அல்லி - தாமரை.

இலக்குமி இவள் ஆவாள் என்று வசிட்ட முனிவர் நினைத்து மகிழ்ச்சி யடைந்தார்.

(வி - ம்) இராமன் முனிவர்களின் தவத்தின் பயனாகப் பிறந்தான். அவன் திருமாலின் அவதாரம் ஆதலின் அவனை மணக்கும் இவள் இலக்குமிதான் என்று கருதினர்.

உண்மைச் செல்வம்

352 துன்றுபுரி கோதைஎழில்
கண்டுலகு சூழ்வந்து
ஒன்றுபுரி கோலொடு
தனித்திகிரி உய்ப்பான்
என்றும்உல கேழும்அரசு
எய்திஉள னேனும்
இன்றுதிரு எய்தியது
எனக்கென நினைந்தான். கக

உலகம் முழுதும் சுற்றிவந்து எதிர்ப்பில்லாத ஒரே தன்மையான ஆட்சியுடன் ஒப்பற்ற ஆணை செலுத்துப வனாகிய தயரதன், அடர்ந்த முறுக்கிய கூந்தலையுடைய சீதையின் அழகைக் கண்டு ஆட்சி தொடங்கிய நாள் தொட்டு, ஏழுலக அரசாட்சியையும் அடைந்திருக்கின்றேன்; ஆனாலும் இன்றுதான் உண்மையான செல்வம் எனக்குக் கிட்டியது என்று நினைத்தான்.

(வி - ம்) தயரதனிடம் எல்லாச் செல்வமும் குறை வறப் பொருந்தி யிருந்தன. தனக்குப்பின் பாதுகாத்து

352. துன்று - அடர்ந்த ; புரி - முறுக்கு ; கோதை - பூ மாலை அணிந்த சீதை ; திகிரி - சக்கரம் : ஆணை ; உய்த்தல் - செலுத்துதல்.

அவற்றை அறவழிப்படுத்துபவர் யார் என்ற ஏக்கம் அவனை வாட்டியது. பிள்ளை இல்லை என்று வருந்தினான். ஒப்பற்ற பிள்ளை பிறந்தது. மகனுக்கு நல்ல மனைவி கிடைத்தா லல்லது தன்கருத்துப் பயன் பெறுமாறில்லை. மகனுடைய குடும்பம் சீராக அமையாதவரை செல்வம் பயன்படுமென்ற மன அமைதி தயரதனுக்கு ஏற்பட இடமில்லை. ஆதலால்தான் பெருஞ்செல்வ மிருந்தாலும் சீதை மருகியான இன்றுதான் அது உண்மைச் செல்வமாயிற்று என்று கருதினான். செல்வம் தீமைக்கும் பயன் படுமாதலால், நல்வழியில் பயன்படும் போதுதான் அதன் உண்மைப் பொருளை அது பெறுகிற தென்பது கருத்து. மருகி எவ்வாறோ அவ்வாறே மகன். அவ்வாறே மகன் நடத்தும் எல்லாம். 'மருவிய காதல் மனையாளும் தானும், இருவரும் பூண்டுர்ப்பின் அல்லால் - ஒருவரால், இல்வாழ்க்கை என்னும் இயல்புடைய வான் சகடம், செல்லாது' (அறநெறிச்சாரம்).

தெய்வமெனக் கைதுவிதல்

353 நைவளம் நவிற்றுமொழி
நண்ணவர லோடும்
வையநுகர் கொற்றவனும்
மாதவரும் அல்லார்
கைகள்தலை புக்கன;
கருத்துளதும் எல்லாம்
தெய்வமென உற்ற;உடல்
சிந்தைவயம் அன்றோ? கஉ

353. நைவளம் - ஒரு பண் : நட்டபாடை என்பர்; மொழி - சொல் : சொல்லையுடைய சீதை ; நண்ணவரல் - நெருங்கி வருதல்; நுகர் - உண்ட ; உளதும் - மற்றுள்ளதும் ; உற்ற - கருதின.

கைவளம் என்ற பண்ணினைப்போல் மொழிகின்ற சொல்லை உடைய சீதை அருகில் வந்ததும், உலகை உண்ட திருமாலின் அம்சமான வெற்றி வீரனும், முனிவரும் அல்லாத மற்றெல்லாருடைய கைகளும் தலைமேல் ஏறின. கருத்தில் உள்ளதும் மற்றெல்லாமும் (சீதையை) தெய்வ வடிவம் என்று நினைத்தன. உடல் மனத்தின் வயப்பட்டது தானே!

(வி – ம்) இராமன் அமிழ்தங் கண்ட இந்திரன் போல் இருந்தானாகலின், அவனுடைய கைகள் தலைக்குமேல் ஏற வில்லை. முனிவர்கள் தெய்வத்தை உணர்ந்தவராதலின் மணப் பெண்ணைக் கண்டு நிதானத்துடன் இருந்தனர். மற்றெல்லா ருடைய கைகளும் தலைமேலேறின. சீதையை வணங்கினர் என்றபடி. மாமனாராகிய தயரதன் முதலியோரும் வணங் கலாமா என்றால், மனம் முதலிய அந்தக்கரணங்கள் யாவும் இது ஒரு தெய்வம் என்று ஒரே படித்தாக எண்ணிக் குவிந்துவிட்டபடியால், மாமனார் மருமகள் என்ற வேறு பாட்டுக்கு இடமில்லாது ஒழிந்தது என்க. மனத்திற்கு வேறுபட்டு உடல் இயங்காது என்பது இயற்கை விதி.

தாதை அருகில் சீதை

354 மாதவரை முற்கொள
வணங்கிநெடு மன்னன்
பாதமல ரைத்தொழுது
கண்கள்பனி சோரும்
தாதையருகு இட்டதவி
சில்தனி இருந்தாள்
போதினை வெறுத்துஅரசர்
பொன்மனை புகுந்தாள். கரு

354. பனி - நீர்; சோரும் - வடிகிற.

தாமரை மலரை விட்டு நீங்கி, அரசரின் அழகிய மனையில் புகுந்த சீதை, வசிட்டர் முதலிய முனிவர்களை முதலில் வணங்கி, பிறகு புகழை உடைய தயரதனின் மலர் போன்ற பாதங்களை வணங்கி, கண்களில் இருந்து ஆனந்த நீரைப் பெருக்குகின்ற தந்தைக்குப் பக்கத்தில் உள்ள இருக்கையில் தனியாக இருந்தாள்.

(வி - ம்) இலக்குமி பூவிலிருந்து அருள் சுரப்பதில் சலித்துப்போய், உலகமக்களோடு கலந்து இன்ப துன்பங்களில் ஈடுபட்டு அறத்தை நிலைநிறுத்துதற்கு வந்து தோன்றினுள் என்பது தோன்ற வெறுத்துப் புகுந்தாள் என்று கூறப் பட்டது.

வில்லை மட்டுமா முறிப்பான் ?

355 அச்சென நினைத்தமுதல்
அந்தணன் நினைந்தான்
பச்சைமலை ஒத்தபடி
வத்துஅடல் இராமன்
நச்சுடை வடிக்கண்மலர்
நங்கைஇவள் என்ருல்
இச்சிலை கிடக்க,மலை
ஏழையும் இருனே. கச

பச்சை நிற மலையை ஒத்த உருவத்தையுடைய வீரனுகிய இராமன், நஞ்சு தோய்ந்த கூரிய கண்களையுடைய பெண்-இவள் என்ருல், இந்த வில் கிடக்கிறது அற்பம்! ஏழுமலைகளையும் நொறுக்கிவிடுவானே! என்று முனிவர்களுக்கு அச்சுப் போல விளங்குபவரும், அந்தணர்களுக்குள்ளே முதல் அந்தணரைப் போன்றவருமான கோசிக முனிவர் நினைத்துக்கொண்டார்.

(வி – ம்) வண்டிக்கு அச்சு எவ்வளவு முக்கியமோ அப்படி முனிவர்கூட்டத்துக்கு முக்கியமானவர் கோசிக முனிவராவர். வில்லை வளைத்தது பெரிய செயல் என்று கருதியிருந்தார் முனிவர். சீதையைப் பார்த்தவுடன் முதல் அந்தணரான முனிவர் திகைத்துப் போனர். அழகுத் தெய்வமே உருவெடுத்த சீதையைக் கண்டதும், இப்படி ஒரு பெண்ணை மணங்கொள்வதென்றால் இந்த வில்லும் ஒரு பொருளா? என்ன வேண்டுமானாலும் இராமன் செய்வான். அவன் ஆற்றல் அவ்வளவு பெரிது. அந்த ஆற்றலை எழுப்ப இந்த அழகு அதைவிடப் பெரிது என்று முனிவர் கருது கிறார். "காற்றிலேறி அவ்விண்ணையும் சாடுவோம் காதற் பெண்கள் கடைக்கண் பணியிலே" "நூற்றிரண்டு மலை களைச் சாடுவோம் நுண்ணிடைப் பெண் ஒருத்தி பணியிலே" என்ற பாரதியார் வாக்கு இதிலிருந்து பிறந்தனவாம். 'கிடக்க' என்றது ஏளனக் குறிப்பு. திருமாலுக்கு நிறம் பச்சை, கருப்பு, நீலம் என்ற மூன்றும் குறிப்பிடப்படும். 'பச்சைமா மலைபோல் மேனி' (திவ்விய – தொண்ட 873) 'கோலங்கரிய பிரானே' (ஷை – நாச்சி 528) 'நீல மாமுகில் வண்ணனை' (ஷை – பெரிய. 1847) என வருதல் காண்க. திருமாலின் வண்ணம் பச்சையா கருப்பா நீலமா என்றால் மூன்றுந்தான் என்க. திருமாலுக்கு நிறம் எதுவும் இல்லை. அப்படியே கடல் நீருக்கும் நிறமில்லை. ஆனல் ஆழத்துக்கும், அகலத்துக்கும் ஏற்ப நிறம் ஏற்படுகிறது. ஆழம் குறைந்த இடத்தில் கடல் பச்சையாகவும், அதிக ஆழமுள்ள இடத்தில் நீலமாகவும், நடுக்கடலில் கருப்பாகவும் தோன்றுவதைக் காணலாம். எனவே, ஆழமும் அகலமும் உள்ள பெருங் கடல் மூன்று நிறத்தைக் காட்டுவதாலும், உண்மையில் அதற்கு நிற மில்லாதபடியாலும், அளவு கடந்த ஆழமும்,

அகலமும் உண்மையாலும் கடல் வண்ணன் (பச்சை, நீலம், கருப்பு மூன்றுங் கொண்டது) என்று கூறப்பட்டது.

கடைக்கண் பார்வை

356 எய்யவில் வளைத்ததும்
இறுத்ததும் உரைத்து
மெய்வினை விடத்தும்முதல்
ஐயம்விடல் உற்றாள்,
ஐயனை அகத்துவடி
வேயல புறத்தும்
கைவளை திருத்துபு
கடைக்கணின் உணர்ந்தாள். கரு

எய்தற்குரிய வில்லை வளைத்ததையும் அது முறிந்ததையும் (நீலமாலை) உரைக்க, உண்மை கைவந்தபோதும், (நீங்கா திருந்த) முதலில் ஏற்பட்ட ஐயத்தைவிட முற்பட்டவளாய் மனத்துள் நீங்காதிருக்கிற வடிவே அன்றிப் புறத்தே கண்ணெதிரில் இருக்கிற இராமன் உருவத்தையும் கைவளையைச் சரிசெய்து கொள்ளும் பாவனையில் கடைக்கண்ணால் கண்டு (அன்று காணப்பட்டவன்தான் என்று) உணர்ந்து கொண்டாள்.

(வி – ம்) நீலமாலை என்னும் தோழி வந்து சொன்ன போதே, சீதைக்கு வில்லை வளைத்தவன், தன்னால் காணப் பட்டவனேயாவான் என்று தெரிந்துகொண்டாள். என்றாலும் சிறு ஐயம் எஞ்சி நின்றது. நேரில் தன் கண்ணினால் பார்க்காதவரையிலும் ஐயம் முற்றாக நீங்கவில்லை. " நேரில் பார்ப்பேன் ; அவனேயானால் சரி ; அல்ல எனில் இறப்

356. எய்ய-எய்தற்கு உரிய; வினைவுஇடத்தும் - பயன்படுகிற இடத்திலும்.

பேன் " என்று முடிவு செய்து கொண்டிருந்தாள். (259) அந்த ஐயம் தீரவே கடைக்கண்ணால் பார்த்தாள் என்க. அவையிலிருந்தோர் அனைவரும் சீதையின் தோற்றப் பொலிவை நோக்கி யிருப்பதால் இராமனைப் பார்க்க வாய்ப் பில்லை அவளுக்கு. நாணம் வேறு உடனிருக்கிற தல்லவா? ஒன்று செய்தாள். தன் கைவளையல்களைத் தொட்டுச் சரிப் படுத்துவதாக ஒரு போக்குக் காட்டினாள். எல்லோருடைய கண்களும் வளையலை நோக்கின. அப்பொழுது எவர் கண் ணிலும் படாமல், கடைக்கண்ணால் இராமனை நோக்கி, அவனேதான் இவன் என்று உணர்ந்து கொண்டாள். உள்ளத்திலே இராமனின் உருவம் நீங்காதிருந்தது. இப் பொழுது அதுதான் நேரில் இருக்கிற உருவம் என்று கண்டு கொண்டாள். ஐயனை, திருத்துபு உணர்ந்தாள்; (உணர்ந்து) ஐயம் விடல் உற்றாள் என மாற்றிக் கூட்டுக.

சீதையின் பூரிப்பு

357 கருங்கடை நெடுங்கணொளி
யாறுநிறை கண்ணப்
பெருங்கடலின் மண்டஉயிர்
பெற்றினி துயிர்க்கும்
அருங்கலன் அணங்கரசி
ஆரமிழ்து அனைத்தும்
ஒருங்குடன் அருந்தினரை
ஒத்துஉடல் தடித்தாள். கசஅ

357. கண்ணப் பெருங்கடல் - கண்ணாகிய பெருங் கடல்; மண்ட-நெருங்கிப் பாய; இனிது உயிர்க்கும்-பெருமூச்சொழிந்து இயல்பாக மூச்சுவிடுகின்ற; தடித்தாள் - பூரித்தாள்.

கருமையான கடைநீண்ட கண்ணினது பார்வையான ஆறு, கண்ணன் என்னும் நிறை பெருங் கடலில் போய்ப் பாய, அதன்வழி உயிரைப் பெற்று அமைதி அடைந்த அரிய ஆபரணமாக விளங்கும் பெண்ணரசியான சீதை, பொருந் திய அமிழ்தம் முழுவதையும் ஒன்றாக உண்டவரை ஒத்து உடல் பூரித்துப் போனாள்.

(வி — ம்) முதன் முதலில் இராமனைக் கண்டு, பிரிந்த போது உயிரே நிலைகலங்கிப் போய்விட்டது. அன்று தோன்றிய பெருமூச்சு - ஏக்கம் இப்பொழுதுதான் நீங் கிற்று. நிலைகலங்கிய உயிரும் தன் இடத்தில் பொருந்தி நிலைத்தது. ஆதலால்தான் 'உயிர் பெற்று இனிது உயிர்க் கும்' எனப்பட்டது. கலங்கி இளைத்த உடல், கலங்கிய உயிர், கலங்கிய மூச்சு எல்லாம் பழைய நிலையை அடைந்தன. அதற்குமேலே அளவற்ற மகிழ்ச்சி ஏற்பட்டதால், உடல் தடித்துவிட்டது. கைக்கு எட்டிய இராமனை விட்டுவிட் டேனே என்று புலம்பியதை 'பெய்கடல் பிறந்தயல் பிறக் கொணு மருந்து பெற்று, ஐயபொற் கடத்தொடங்கைவிட்டி ருந்த ஆகர்போல், கைகடக்க விட்டு (250) என்று கூறிய கவி, இங்கே 'ஆரமிழ் தனைத்தும் ஒருங்குடன் அருந்தினரை ஒத்துடல் தடித்தாள்' என்று கூறுவது உணரத்தக்கது.

திருமணத்துக்கு நாள் வினவுதல்

358 **சொல்உயர் களிற்றரசர்**
கோமகன் இருந்தான்
கல்விகரை யுற்றமுனி
கவுசிகனை மேலோய்

---

358. சொல் - புகழ் ; வல்லி - கொடி ; பொரு - போர் செய்கிற : எதிர்க்கிற.

வல்லிபொரு சிற்றிடை
　　மடந்தைமண நாளாம்
எல்லையில் நலத்தபகல்
　　என்றுரைசெய் கென்றான்　　　　கள

வீற்றிருந்தவனாகிய புகழ் மிகுந்த யானைப்படையை யுடைய மன்னர் மன்னனாகிய தயரதன், கல்வியின் கரை கண்டவரான கோசிக முனிவரை நோக்கி 'மேலானவரே! கொடியோடு போட்டியிடுகிற சிற்றிடைச் சீதையின் திருமண நாளாகிய அளவில்லாத நன்மைக்குரிய நாள் என்றைக்குச் சொல்வீராக' என்று கேட்டான்:

(வி – ம்) 'கல்வி கரையில' (நாலடி) என்பதைக் கரையில்லாத கல்விக் கடலின் கரை கண்டவர் கோசிக முனிவர் என்று கவி கூறுகிறார். குலகுருவான வசிட்டர் அருகில் இருக்கும்போது, தயரதன் கோசிகரை நாள் பார்க்கச் சொல்லுகிறான். இராமனுடைய இந்தத் திரு மணத்திற்கு இந்தச் சமயத்தில் கோசிகர்தான் தகுதி என்று தயரதன் நினைத்ததுதான் சரி. சீதையைத் தேடித் தந்த பெருமை கோசிகரைச் சேர்ந்ததுதானே! இராமனின் திருமணத்திற்கு என்று கூறாமல், சீதைக்கு மணநாள் எது என்று கேட்பது நோக்கத்தக்கது.

நாளையே நல்ல நாள்

359　வாளையுக ளக்கயல்கள்
　　வாவுமதின் மேதி
மூளைமுது கைக்கதுவ
　　மூரியவ ரால்மீன்

359. உகள - துள்ள ; வாவும் அதின் - தாவும் அதனால் ; மூளை - மூளையுள்ள இடமான தலை ; கதுவ - உராய ; மூரிய - வலிமையுடைய ; உற்ற - பொருந்திய.

பாளைவிரி யக்குதிகொள்
பண்ணைவள நாடா !
நாளைஎன வுற்றபகல்
நற்றவன் உரைத்தான். கஅ

வாளைமீன்கள் துள்ளி விழுவதனாலும், கெண்டை மீன்கள் தாவிப் பாய்தலினாலும், எருமையின் தலையிலும் முதுகிலும் விழுந்து தாக்க, வலிமையுள்ள வரால் மீன்கள் அருகிலுள்ள பாக்குமரத்தின் பாளைகள் விரியும்படி குதிக்கிற வயல் வளத்தையுடைய கோசல நாட்டின் மன்னா! பொருந்தின நாள் நாளையேயாகும் என்று நல்ல தவத்தை யுடைய கோசிகர் உரைத்தார்.

(வி – ம்) வாளையும், கயலும், வராலும் துள்ளிக் குதிக்கின்றன. அங்கே கிடக்கிற எருமையின் தலையும் முதுகும் அடிவாங்கிக் காயப்படுகின்றன. அதோடு மட்டுமல்ல. மீன்கள் துள்ளி வரப்புக்களில் நிற்கிற பாக்கு மரங்களில் குதிப்பதால் பாளைகள் அடிபட்டு விரிகின்றன. அவ்வித மான வளமுள்ள நாடு கோசல நாடு என்று முனிவர் கூறிப் புகழ்கிறார்.

தயரதன் எழுந்து செல்லுதல்

360 சொற்றபொழு தத்தரசர்
கைதொழ எழுந்தான்
ஒற்றைவயி ரச்சுரிகொள்
சங்கினொலி பொங்க

---

360. பொழுதத்து-பொழுது ; சுரி - சங்கின் உட்பாகத்தில் உள்ள சுருள் ; பொங்க - எழ ; புதுவெயில் - காலை இள வெயில் ; அநுச்சை - அனுமதி : ஆசி.

பொற்றட முடிப்புது
வெயிற்பொழி தரப்போய்
நற்றவர் அநுச்சையொடு
நன்மனை புகுந்தான். கக

கோசிக முனிவர் சொன்னவுடன் இருந்த அரசர்கள் கைதொழுது எழுந்து நிற்கவும், வயிரப்பூண் கட்டிய வலம் சுழித்த ஒற்றைச் சங்கின் ஒலி எழவும், பொன்னினால் செய்யப்பட்ட முடி, இளவெயிலைப் போல ஒளி வீசவும் தயரதன் எழுந்து போய் முனிவர்களின் ஆசியோடு நல்ல மாளிகை ஒன்றில் புகுந்தான்.

(வி – ம்) அரசவையிலும், அரசர் செல்லும்போதும், போரில் வெற்றி காணும்போதும், பிறபோதும், சங்கம் முழக்குவது இயல்பு. இங்கே சங்கு மட்டும் ஊதப்பட்டதாகக் கூறப்பட்டிருக்கிறது. பலவகை இசைக் கருவிகளுடன் சங்கம் முழங்குவதுமுண்டு. ‘ஒற்றை வலம்புரி ஊத’ (விக்கிரம சோழன் உலா-66).

எல்லோரும் எழுந்து செல்லுதல்

361 அன்னம்அரி திற்பிரிய,
அண்ணலும் அகன்றுஓர்
பொன்னின்நெடு மாடமனை
புக்கனன்; மணிப்பூண்

361. அன்னம் - அன்னம்போன்ற சீதை; அண்ணல் - இராமன்; மாடமனை-மாடிவீடு.

மன்னவர் பிரிந்தனர்கள் ;
மாதவர்கள் போனர் ;
மின்னுசுடர் நாயகனும்
மேருவின் மறைந்தான். ௨௦

அன்னப்பேடைப் போன்ற சீதை (இராமனை விட்டுப் பிரிய மனமில்லாமல்) வருத்தத்துடன் பிரிந்து செல்ல, இராமனும் மண்டபத்தி னின்றும் சென்று பொன் மாடங்களையுடைய ஒரு பெரிய மாளிகையை அடைந்தான் ; இரத்தினம் இழைத்த நகைகளை அணிந்த மன்னர்கள் சென்றனர்; முனிவர்களும் சென்றார்கள் ; ஒளியைப் பரப்புகிற சூரியனும் மலையில் சென்று மறைந்தான்.

———

361. சுடர் நாயகன்-சூரியன்; மேரு-மலை.

16. கடிமணப் படலம்

[சீதையின் திருமணச் செய்தியைக் கூறும் படலம்.
கடி - சிறந்த]

மணமுரசு அறைக!

362 *மானவர் பெருமானும்
மனம்நினை வினன்ஆகத்
தேனமர் குழலாள்தன்
திருமண வினைநாளைப்
பூநகு மணிவாசம்
புனைநகர் அணிவீரென்று
ஆனையின் மிசைஆணை
அணிமுரசு அறைகென்றான். க

மன்னவருள் பெருமை பொருந்திய சனகன், (இனிமேல் செய்யவேண்டிய செயல்களை) மனத்தின்கண் நினைந்தவனாக, வண்டுகள் விரும்பி உறைகின்ற மலர்க் கூந்தற் சீதையின் திருமணச் சடங்கு, நாளை நடைபெறும் ஆதலால், மலர்களினாலும் ஒளிவிடும் மணிகளினாலும், மணமிக்க பொருள்களினாலும் அழகிய நகரத்தை அழகுசெய்வீராக என்று, (வள்ளுவனைக் கொண்டு) யானைமீதமர்ந்து மணமுரசறைந்து தனது கட்டளையைத் தெரிவிக்கும்படி கூறினான்.

(வி – ம்) அரசரது ஆணையை, யானைமீதமர்ந்து முரசறைந்து நகரமாந்தர்க்குத் தெரிவிப்பது வழக்கம்.

---

362. மானவர் - மன்னவர் ; நகுதல் - ஒளிவிடுதல் ; புனை - அலங்கரிக்கப்பட்ட ; ஆணை - மன்னவன் கட்டளை ; அணிமுரசு - அழகிய முரசு, மணமுரசு.

மணமுரசு கேட்ட மக்கள்

363 முரசறை தலும்மான
முதியரும் இளையோரும்
விரைசெறி குழலாரும்
விரவினர் விரைகின்றார் ;
உரைசெறி கிளையோடும்
உவகையின் உயர்கின்றார் ;
கரைநெரி வரிதாகும்
இரவுஒரு கரைகண்டார். உ

முரசு அறைவித்ததும் பெருமை சான்ற வயது முதிர்ந்தவர்களும், இளைஞர்களும், மணநாறும் கூந்தலையுடைய மங்கையரும் ஒன்றுகூடி, நகரை அழகு செய்ய விரைந்து முற்பட்டனர். (உளங்கலந்து) உரையாடும் நிறைந்த சுற்றத்தாரோடு மகிழ்ச்சி மிக அடைந்தனர். கரைகாணமுடியாத கடல்போன்ற இருட்டின் ஒரு கரையைக் கண்டனர்.

(வி – ம்) மறுநாள் நடக்கவிருக்கும் திருமணத்தில் கொண்ட விருப்பினால் இருள் கடலாகத் தோற்றியது. கரை காணாது கடலில் அகப்பட்டுத் தத்தளிப்பவர் ஒரு கரையைக் கண்டாற்போல விடியப்போகிறது என்ற அறிகுறியைக் கண்டார்கள். “ கரைகண்டார் ” என்றதனால் இரவு, கடலெனக் கொள்ளப்பட்டது.

---

363. விரை - மணம் ; விரவினர் - ஒன்று கூடினராய் ; உரை - உரையாடுகின்ற ; கிளை - சுற்றம்.

பொழுது புலர்ந்தது

364 அஞ்சன ஒளியானும்
அலர்மிசை உறைவாளும்
எஞ்சலில் மண நாளைப்
புணர்குவர் எனலோடும்
செஞ்சுடர் இருள்கிறித்
தினகரன் ஒருதேர்மேல்
மஞ்சனை அணிகோலம்
காணிய எனவந்தான். ௩

அஞ்சனம் போன்ற நிறத்தையுடைய இராமனும், தாமரை மலரில் வீற்றிருக்கும் இலக்குமியாகிய சீதையும் நாளை, குறைவில்லாத மணம்புரிந்து கொள்ளப்போகின்றனர் என்ற செய்தி அறிந்து, சூரியன் தன் சிவந்த கதிர்களினால் இருளைக் கிழித்துக்கொண்டு, ஒருருளைத் தேரேறி மகனை மணக்கோலத்தில் காண வருபவனைப் போலத் தோன்றினான்.

(வி – ம்) இராமனும் சீதையும், திருமாலும் இலக்குமியும் என்றபடி. சூரியன் என்றும்போல் இன்றும் தோன்றினான். என்றாலும் இன்றைய நிகழ்ச்சியோடு இணைத்துக் கூறப்பட்டது அவனது தோற்றம். 'இருள் கீறி' என்றதனால் இருள் ஒரு கருப்புத் திரைபோல மறைப்பதால் அந்தத் திரையைக் கிழித்துக்கொண்டு தோன்றினான் எனப்

---

364. அஞ்சனம்-கண்ணுக்குத் தீட்டும் மை; எஞ்சல்-குறைவு; செஞ்சுடர் - சிவந்த கதிர்கள்; தினகரன் - சூரியன்; மஞ்சன்-மைந்தன்; அணிகோலம்-அழகு படுத்துகிற அலங்காரம்: இங்கே மணக்கோலம்.

பட்டது. சூரியன் ஒருருளைத் தேரில் செல்பவன் என்பது புராணம். இராமன், சூரியனுக்கு மகனல்ல என்றாலும், அவனுடைய குலத்தில் பிறந்தவன் ஆதலினால் மைந்தன் எனப்பட்டான்.

அழகுசெய்தல்

365 அன்னமென் நடையாரும்
மழவிடை அனையாரும்
கன்னிநன் நகர்வாழை
கமுகொடு நடுவாரும்
பன்னரு நிரைமுத்தம்
பரியன தெரிவாரும்
பொன்னணி அணிவாரும்
மணியணி புனைவாரும். ௪

அன்னம் போன்ற மெத்தென்ற நடையை உடைய பெண்டிரும், இளங்காளையைப் போன்ற தோற்றமுடைய ஆடவரும் (ஒப்பனை செய்யத் துவங்கினர்) அழிவில்லாத நல்ல வீடுதோறும் வாழைமரங்களையும், கமுக மரங்களையும் நட்டார்கள்; புகழ்ந்து கூறிமுடியாத முத்துக் குவியலிலிருந்து பருமையானவற்றைப் பொறுக்கி எடுத்தார்கள்; தங்க நகைகளை அணிந்துகொண்டார்கள்; இரத்தின நகைகளை அணிந்துகொண்டார்கள்.

(வி – ம்) நகரின்கண் உள்ள ஆடவர் பெண்டிர் அனைவரும் தங்களை அணிமுதலியவற்றால் அழகுசெய்து கொண்டனர். நகரையும் பலவகையாக அழகுபடுத்தினர், வெளி

365. கன்னி - அழிவில்லாத ; நகர் - வீடு ; நிரை - கூட்டம்: குவியல் ; பரியன - பருமையானவைகளை.

யிடங்களிலிருந்து பலர் வந்தனர் என்ற நிகழ்ச்சிகள் இது முதல் ஐந்து பாடல்கள் வரை கூறப்படுகின்றன. இவை முழுமையும் தனித்தனி வினை முடிபின்றித் தொடர்ந்து செல்லுகின்றன. 'ஆயினர்' என்ற வினைமுடிபை வரவழைத்து முடிக்கவேண்டும்.

ஊரை அழகுபடுத்தல்

366 சந்தனம் அகில்நாறும்
சாந்தொடு தெருவெங்கும்
சிந்தினர் திரிவாரும்
செழுமலர் சொரிவாரும்
இந்திர தனுநாண
எரிமணி நிரைமாடத்து
அந்தமில் விலையாரக்
கோவைகள் அணிவாரும். ௫

சந்தனத்தையும், அகிலையும் அரைத்து மணமுள்ள மற்றைச் சாந்துகளுடன் கலந்து, தெருவெல்லாம் தெளித்துக் கொண்டு திரிந்தனர். வளமுள்ள பூக்களைத் தூவினர். வானவில் வெட்கம் உறும்படி ஒளியுள்ள மணிகளைப் பதித்திருக்கிற மாடி வீடுகளில், மதிக்கமுடியாத விலையுள்ள முத்துமாலைகளைத் தொங்கவிட்டனர்.

---

366. சாந்து - அரைத்த விழுது ; இந்திரதனு - வானவில் ; எரி - ஒளிவீசுகிற ; அந்தம்இல் - முடிவில்லாத : இவ்வளவென்று மதிப்பிட்டுச் சொல்லமுடியாத ; ஆரம் - முத்து ; கோவை - மாலை

திண்ணை அலங்காரம்

367 தளங்கிளர் மணிகாலத்
தவழ்சுடர் உமிழ்தீபம்
இளங்குளிர் முளைஆர்நல்
பாலிகை இனமெங்கும்
விளிம்புபொன் நிரைநாற
வெயிலொடு நிலவீனும்
பளிங்குடை உயர்திண்ணைப்
பந்தியின் வைப்பாரும் ; சு

விளக்கின் அடித்தட்டில் பதித்துள்ள மணிகள் ஒளி வீச, அசைந்தாடும் ஒளி மிளிரும் விளக்குகளையும், புதிய குளிர்ந்த நல்ல முளைப் பாலிகை வகைகளையும் வைத்தனர். எங்கே? ஓரங்களில் வரிசைப்படப் பதித்திருக்கிற பொன்னின் ஒளியானது வீச, வெயிலின் ஒளியையும் நிலவின் ஒளியையும் காட்டுகிற பளிங்குத் திண்ணைகளில் வரிசையாக வைத்தனர்.

(வி - ம்) விளக்குகளையும், முளைப்பாலிகைகளையும் வீட்டுத் தெருத் திண்ணைகளின் மீது வைத்தனர். திண்ணையின் ஓரங்கள் பொன்னினுல் வரம்பிடப்பட்டிருக்கின்றன. பொன்னின் காந்தியும் பளிங்கின் ஒளியும் ஒருபுறத்தில் வெயிலின் ஒளியையும், ஒருபுறத்தில் நிலவின் ஒளியையையும் உண்டாக்குகின்றன. விளக்கின் அடிப்பகுதி தட்டுப் போலிருக்கும். அதில் பதித்துள்ள மணிகள் விளக்கின் ஒளியினுல் மிகுந்து ஒளிவீசுகின்றன. மங்கலநாளில் குறிப்பாக மணவறையில் முளைப்பாலிகை வைப்பது வழக்கம். உண்ணக்

---

367. தளம் - விளக்கின் அடிப்பகுதியாகிய தட்டு ; கால - ஒளியைக் கக்க ; நாற - வீச ; பந்தியின் - வரிசையாக.

கூடிய பயறு வகைகளை நீரில் நனைத்து, அதற்கென்றுள்ள வாயகன்ற கலயங்களில் இட்டு முளை எழும்பச்செய்து வைக்கப்படும். பாலிகை என்பது கலயம். அதில் முளையும் சேர்ந்திருப்பதால் முளைப்பாலிகை எனப்படுகிறது. அது இங்கே 'முளைஆர் நற்பாலிகை' என்று கூறப்பட்டிருக்கிறது.

முகப்பு அலங்காரம்

368 மந்தர மணிமாட
முன்றிலின் வயினெங்கும்
அந்தமில் ஒளிர்முத்தின்
அகனிரை ஒளிநாறி
இந்திர நெடுவானம்
இவண்இல குவதென்னப்
பந்தரி னிழல்வீசப்
படர்வெயில் கடிவாரும்; எ

மந்தரமலைபோன்ற அழகிய மாளிகையின் முன்னிடங்களில் எல்லாம் எல்லையற்ற ஒளியை உடைய முத்துக்கள் பரந்து நெருங்கி ஒளியை வீச, இந்திரனுடைய புகழ் மிகுந்த வானுலகம் இங்கே வந்து விளங்குகிறது என்று சொல்லும்படி முத்துப் பந்தர்களின் நிழலினாலே வெயிலை மறைத்தார்கள்.

(வி - ம்) உயர்ந்து விளங்கும் மாளிகையின் முன்பு உள்ள வெளியான இடங்களில் எல்லாம் முத்துப் பந்தல் போட்டிருக்கிறார்கள். அதைப் பார்த்தால் இந்திரலோகமே இங்கே இறங்கி வந்திருக்கிறது என்றுதான் சொல்லத்

---

368. முன்றில் - முன்முகப்பு: இல்முன்; வயின் - இடம் அகல் - அகன்ற: பரந்த; நிரை - கூட்டம்.

தோன்றுகிறது. இது அலங்காரத்துக்காக மட்டும் போடப் பட்டதல்ல. வெயிலை மறைப்பதற்காகவும் போடப்பட்ட தாகும்.

மக்கள் வருகை

369 தேர்மிசை வருவாரும்
சிவிகையில் வருவாரும்
ஊர்தியில் வருவாரும்
ஒளிர்மணி நிரையோடைக்
கார்மிசை வருவாரும்
கரிணியில் வருவாரும்
பார்மிசை வருவாரும்
பண்டியில் வருவாரும் ; அ

தேரின்மீதும், பல்லக்கின்மீதும் குதிரை முதலிய பல வாகனங்களின்மீதும், வரிசையாக மணிகள் பதிக்கப்பட்ட நெற்றிப் பட்டத்தை அணிந்த ஆண்யானைகளின்மீதும், பெண்யானைகளின்மீதும், கால் நடையிலும், வண்டிகளிலும் மக்கள் வந்தனர்.

(வி - ம்) தேர், பல்லக்கு, யானை, வண்டி முதலியன கூறப்பட்டபடியால், கூறப்படாத குதிரை, ஒட்டை, கோவேறுகழுதை முதலியன ஊர்தி என்றதில் அடங்கும். கால்நடையாக வந்தவரையும் 'பார்மிசைவருவார்' என நயம்படக் கூறப்பட்டிருக்கிறது. மற்றையோர் ஒவ்வொன் றின்மேல் வந்தார்கள் என்றாற்போலப் பாரின்மேல் வந்தார்

---

369. மிசை - மேலே ; சிவிகை - பல்லக்கு ; ஊர்தி - வாக னம்; ஓடைக் கார் - நெற்றிப் பட்டத்தை அணிந்திருக்கிறமேகம்: யானை ; கரிணி - பெண்யானை ; பார் - நிலம் ; பண்டி - வண்டி.

கள் எனப்பட்டது. வசதியற்ற மக்களை, பெற்றதாய் (நிலமகள்) தூக்கி வருகிறாள் என்பதும் பெறப்படுகிறது. ஆண்யானைகளில் போர்வீரர்களும், பெண்யானைகளில் மற்றையோரும் வந்தனர் என்க.

திருநாளே மணநாள்

370 உண்ணிறை நிமிர்செல்வம்
ஒருதுறை செலவென்றும்
கண்ணுறல் அரிதென்றும்
கருதுதல் அரிதம்மா!
எண்ணுறு சுடர்வானத்து
இந்திரன் முடிசூட
மண்ணுறு திருநாளே
ஒத்ததுஅம் மணநாளே. கூ

மிதிலை நகரத்தினுள்நிறைந்து மிகுந்த செல்வத்தை, ஒரு முடிபுக்கு வரும்படி என்றைக்கும் பார்த்து முடிப்ப தென்பது முடியாதது. அப்படியே என்றென்றும் நினைத்து உண ரவும் முடியாது. அம்மம்மா! யாவராலும் மதிக்கப்படுகிற ஒளிபொருந்திய வானுலகத்து இந்திரன்முடிசூடும்பொருட்டு அலங்கரிக்கப்பட்ட திருநாளை ஒத்தது இங்கே நடைபெறும் திருமணநாள்.

(வி - ம்) அலங்கரிப்பதற்கென உயர்ந்த பொருள்கள் எல்லாம் மிதிலையில் வந்து குவிந்துவிட்டன. அவற்றைப் பார்த்து முடிப்ப தென்பது ஆகாதது. இப்படித்தான் இருக் கும் என்று எண்ணித் தீர்க்கலாம் என்றாலும் இயலாது.

370 துறை - கரை : முடிவு ; மண் - அலங்காரம் , மண் ணுறு - அலங்கரிக்கின்ற.

அவ்வளவுபொருள்கள்! தேவேந்திரன்முடிசூடுவதற்குச்செய்யும் அலங்காரந்தான் இது என்று சொல்லத்தோன்றுகிறது. இன்னும் உயர்ந்த தேவர் இருக்கும்போது இந்திரனை என் சொல்லவேண்டும் என்றால், மற்றைத் தேவருக்கு முடிசூட்டுதல் இல்லை. முடிசூடுபவருள் தலைசிறந்தவன் இந்திரன்தான். சிறந்து பெருகிய இன்பம் பொன்னுலக இன்பமேயாகும். மண்ணுலகில்நடக்கும் மணவிழாவின் குறிக்கோள் இன்பமே யாதலால் இந்திரனின் முடிசூட்டு விழா ஒப்புக் கூறப்பட்டது.

தயரதன் வருகை

371 *கரைதெரி வரியது ;
கனகம் வேய்ந்தது ;
வரையென உயர்ந்தது ;
மணியிற் செய்தது ;
நிரைவளை மணவினை
நிரப்பும் மண்டபம்
அரசர்தம் அரசனும்
அணுகல் மேயினன். ௬௦

எல்லை காணமுடியாதது ; தங்கத் தகடு வேயப்பட்டது ; மலைபோல உயரமானது ; பலநிற மணிகள் பதிக்கப்பட்டது ; வரிசைப்படப் பலவளையல்களை அணிந்துள்ள சீதையின் திருமணச் சடங்கு நிறைபெறுவதற்கு, அலங்கரிக்கப்பட்ட அந்த மண்டபத்தை மன்னர் மன்னனை தயரதன் நெருங்கினான்.

---

371. கரை - எல்லை ; கனகம் - தங்கம் ; நிரை - வரிசை ; வளை - வளையல்: இங்கே வளையலை அணிந்துள்ள சீதை.

(வி – ம்) திருமண மண்டபம் மிகப் பெரியது. உள்ளே செய்யப்பட்டிருக்கிற ஒப்பனையாலும், பெருங் கூட்டமாக மக்கள் நெருங்கியிருத்தலினாலும் ஒரு கடைசிக்கு மறுகடைசி தெரியவில்லை.

சனகன் முதலியோர் வருகை

372 அனையவன் மண்டபம்
அணுகி, அம்பொனின்
புனைமணி யாதனம்
பொலியத் தோன்றினான் ;
முனிவரும் மன்னரும்
முறையின் ஏறினார்
சனகனும் தன்கிளை
தழுவ ஏறினான். கக

அத்தகைய (மன்னர் மன்னனாகிய) தயரதன் மண்டபத்தை அடைந்து, தங்கத்தில் மணிகளால் இழைக்கப்பட்ட இருக்கையானது பெருமை அடையும்படி வீற்றிருந்தான். முனிவர்களும், மற்றைய மன்னர்களும் தகுதிப்படி இருந்தனர். சனக மன்னனும் தன் சுற்றத்தார் சூழ்ந்துவர வந்து சேர்ந்தான்.

மணமகன் வருகை

373 *எஞ்சலில் உலகத் துள்ள
எறிபடை அரச வெள்ளம்
குஞ்சரக் குழாத்திற் சுற்றக்
கொற்றவன் இருந்த கூடம்

---

372. அம்பொன் - தங்கம் ; ஆதனம் - இருக்கை.
373. எஞ்சல் - குறைவு ; குஞ்சரம் - யானை.

வெஞ்சினத் தனுவ லானும்
மேருமால் வரையிற் சேரும்
செஞ்சுடர்க் கடவுள் என்னத்
தேரிடைச் சென்று சேர்ந்தான். கஉ

உலகத்திலுள்ள வீசுகிற ஆயுதங்களையுடைய குறைவில்லாத அரசர் பெருங்கூட்டம், யானைக் கூட்டத்தைப் போலத் தன்னைச் சூழ்ந்துவர, கடுங்கோபமுள்ள வில்வித்தையிலே வல்லவனாகிய இராமனும் அரசன் இருக்கிற மணிபண்டபத்தின் வாயிலை, மாமேருமலையை அடையும் சூரியனைப் போலத் தேரின் மேற்சென்று அடைந்தான்.

(வி – ம்) எஞ்சலில் அரசவெள்ளம் என இயைக்க. மேருமலை உலக நடுவில் இருப்பதாகவும், அதைச் சுற்றிச் சூரியன் செல்கின்றான் என்பதும் புராணம்.

மணமகன் அமர்தல்

374 இரதம்ஆண்டு இழிந்த பின்னர்
இருமருங்கு இரண்டு கையும்
பரதனும் இளைய கோவும்
பரிந்தனர் ஏந்தப் பைந்தார்
வரதனும் எய்தி மைதீர்
மாதவர்த் தொழுது நீதி
விரதமெய்த் தாதை பாதம்
வணங்கிமாடு இருந்த வேலை. கந

373. தனு - வில் ; செஞ்சுடர்க்கடவுள் - சூரியன்.

374. ஆண்டு - அவ்விடத்தில்; மருங்கு; பக்கம்; பரிந்தனர்- அன்புடையவர்களாகி ; பைந்தார் - பசுமையான மலர்மாலையை ; வரதன் - வரங்களை அளிப்பவன் : இராமன் ; மை - குற்றம்; மாடு - பக்கத்தில்.

அவ்விடத்தில் இரதத்தை விட்டு இறங்கிய பின்பு, இருபக்கங்களில் இருகைகளையும் பரதனும் இலக்குவனும் அன்போடு தாங்கிச் செல்ல, பசுமையான மலர் மாலை யணிந்த இராமன் (மண்டபத்தினுள்) சென்று,குற்றம் நீங்கிய முனிவர்களைத் தொழுது, நீதி செலுத்துதலையே விரதமாகக் கொண்டு சத்தியத்தைக் காக்கும் தந்தையின் திருவடிகளை வணங்கி அவனருகில் இருக்கும்பொழுது,

மணமகள் வருகை

375 சிலையுடைக் கயல்வாள் திங்கள்
ஏந்திஓர் செம்பொற் கொம்பர்
முலையிடை முகிழ்ப்பத் தேர்மேல்
முன்திசை முளைத்தது அன்னாள்
அலைகடற் பிறந்து பின்னை
அவனியில் தோன்றி மீள
மலையிடை உதிக்கின்றாள் போல்
மண்டப மதனில் வந்தாள். கச

வில்லையும், கெண்டை மீன்களையும், ஒளிபொருந்திய சந்திரனையும் தாங்கிக்கொண்டு, முலையாகிய தாமரை மொட்டு நடுவிலே தோன்ற, தங்கக் கொம்பு ஒன்று தேரின் மேல், கீழ்த்திசையில் முளைத்தெழுவதைப் போலச் சீதை யானவள் வந்தாள். எங்கே ? திருப்பாற்கடலிலே பிறந்து, பின்பு நிலவுலகத்தில் தோன்றி, இப்பொழுது மலையிலே உதயம் செய்கிறவளைப்போல மண்டபத்தினுள்ளே வந்தாள்.

---

375. கயல் - கெண்டைமீன் ; வாள் - ஒளிபொருந்திய ; கொம்பர் - கொம்பு ; மீமிசை - மேலே ; அவனி - நிலம்.

(வி — ம்) மண்டபம் மிக உயரமாக இருக்கிறது. பொன்னாலான கொம்பு போன்ற சீதை வில்லைப்போன்ற புருவங்களையும், கயலைப்போன்ற கண்களையும், திங்களைப் போன்ற முகத்தையும், தாமரை முகையைப் போன்ற மார்பையும் கொண்டிருக்கிருள்.

கடலில் (இலக்குமியாகத்) தோன்றினாள் ; நிலத்தில் (சீதையாகத்) தோன்றினாள் ; இப்பொழுது மலையில் தோன்றுவது போல மண்டபத்தில் (மணப்பெண்ணாக) வந்தாள்.

போகமும் யோகமும்

376 *மன்றலின் வந்து
மணித்தவிசு ஏறி
வென்றி நெடுந்தகை
வீரனும் ஆர்வத்து
இன்துணை அன்னமும்
எய்தி இருந்தார் ;
ஒன்றிய போகமும்
யோகமும் ஒத்தார். கரு

திருமணத்தின் பொருட்டு வந்து மணத்திற்குரிய மணையில் ஏறி, வெற்றியையும், பெருமைக் குணத்தையுமுடைய வீரனாகிய இராமனும், அன்போடு கூடிய இனிய துணைவியான அன்னம்போன்ற சீதையும் பொருந்தி இருந்தனர். சேர்ந்திருந்த இன்பத்தையும், தவத்தையும் ஒத்துக் காணப்பட்டனர்.

---

376. மன்றல் - திருமணம் ; தவிசு - இருக்கை : மணை ; போகம் - இன்பம்; யோகம் - தவம்.

(வி – ம்) சீதைக்கு இராமனும், இராமனுக்குச் சீதையும் வாழ்க்கையில் துணையாகவே இருக்கின்றனர். ஆனால் இங்கே சொல்லும்போது இராமனின் வாழ்க்கைக்குச் சீதை துணையாக இருந்தாள் என்ற குறிப்புக் காணப்படுகிறது. 'வாழ்க்கைத் துணைநலம்' என்ற திருக்குறள் அதிகாரத்தில் பொய்யாமொழியார் கூறிய 10 பாடல்களிலும் ஆணின் வாழ்க்கைக்குப் பெண் துணையாக இருக்கவேண்டியதன் இலக்கணம் கூறப்படுகிறதே யன்றிப் பெண்ணுக்கு ஆண் துணையாக இருக்கும் இலக்கணம் கூறப்படவில்லை. அக்கருத்தே இங்கும் கொள்ளப்பட்டிருக்கிறது. ஆண் துணையைப் பற்றித்தான் பெண் வாழவேண்டும் என்ற பிறர் கூற்று இங்கே மறுக்கப்படுதல் காண்க.

இன்பமும், தவமும் பொருந்தியிருந்தாற் போல இவ்விருவரும் இருந்தனர். மனத்தை நிறுத்தித் தவம் செய்வார், உலக இன்பத்தை வெறுக்கவேண்டும் என்று கூறுவாரும் உண்டு. உலக இன்பம் துய்ப்பாருக்குத் தவம் கூடாதென்பாரும் உண்டு. இங்கே இன்பமும், யோகமும் ஒன்று சேர்ந்திருக்கிறது; இருக்கமுடியும். அதுதான் உண்மை வாழ்வு என்று அறிவுறுத்தப்படுகிறது. இன்பம் என்பதில் சிற்றின்பம் பேரின்பம் என்ற இரண்டும் அடங்கும். இனி யோகம் என்ற முயற்சியும், இன்பம் என்ற பயனும் ஒரே பொருளாகி நிற்கும் கடவுள் தன்மையையும் குறித்தவாறும். செயலும் பயனும் ஒரே தத்துவத்தைக் கொண்டதென்பதாம். ஆநந்த சொரூபி இறைவன் என்பதும், அதை அடைய வழி காட்டுவது தவம் என்பதும், இரண்டும் ஓரிடத்தில் பொருந்தி அமைந்திருப்பது இந்த மணத் தவிசிலேயே என்பதும் குறித்தவாறும்.

சீதையைச் சனகன் ஈதல்

377 கோமகன் முன்சன
கன்குளிர் நன்னீர்ப்
பூமக ளும்பொரு
ளும்மென நீஎன்
மாமகள் தன்னொடு
மன்னுதி யென்னுத்
தாமரை அன்ன
தடக்கையின் ஈந்தான். கசு

இராமனுக்கு எதிரே சனக மன்னன் வந்து, "குளிர்ந்த நல்ல நீரிலே தோன்றிய தாமரைப் பூவிற் பொருந்திய இலக்குமியையும், பரம்பொருளான திருமாலையும் போல நீ என்னுடைய பெருமை பொருந்திய மகளான சீதையுடன் நிலைத்து வாழ்வாயாக" என்று சொல்லி, தாமரை மலரைப் போன்ற இராமனது விசாலமான கையில் (சீதையின் கையைப் பிடித்துக்) கொடுத்தான்.

(வி – ம்) 'பூமகளும்' என்றதனுல் 'பொருள்' என்றது திருமாலை என்க. அவர்களைப் போல இன்பம், செல்வம் முதலிய எல்லாவகையிலும் பெருகி நிலைபெற்று வாழுங்கள் என்று சனகன் வாழ்த்திச் சீதையை இராமன் கையில் ஈந்தான்.

---

377. கோமகன் - மன்னன் மகன் : இராமன் ; பொருள் - முதற்பொருள் : கடவுள்.

வாழ்த்தொலிகள்

378 அந்தணர் ஆசி,
அருங்கலம் அன்னார்
தந்தபல் லாண்டிசை,
தார்முடி மன்னர்
வந்தனை, வானவர்
வாழ்த்தொலி போல,
முந்திய சங்கம்
முழங்கின மாதோ. கஎ

அந்தணரின் ஆசி உரையும், கற்பின் அருங்கலமான பெண்கள் கூறும் பல்லாண்டின் இசையும், மாலையணிந்த முடியையுடைய அரசர்களின் வணக்க உரையும், தேவர்களின் வாழ்த்தொலியும், அவற்றின் முழக்கம்போல முதன்மை பெற்ற சங்குகளும் முழங்கின.

மீன்பூத்த நிலம்

379 வானவர் பூமழை,
மன்னவர் பொற்பூ,
ஏனையர் தூவும்
இலங்கொளி முத்தம்,
தான்நகும் நாண்மலர்
என்றிவை தம்மால்
மீன்நகு வானின்
விளங்கியது இப்பார். கஅ

---

378. அருங்கலம் அன்னார் - பெண் குலத்திற்கு அரிய பொருளாக விளங்கும் கற்பரசிகள்.

379. நாண்மலர் - நாள்மலர் : புதிதாகப் பூத்த மலர்.

விண்ணில் உள்ளவர்கள் மலர்களை மழையாகப் பொழிந்தனர்; அரசர்கள் தங்கத்தாலான பூக்களைத் தூவினர்; மற்றையோர் முத்துக்களைத் தூவினர். இவைகளாலும், தானாகப் பூத்துக் குலுங்குகிற மலர்களாலும் மீன் பூத்த வானத்தைப் போல இந் நிலவுலகமும் விளங்கியது.

மணமக்கள் மனைபுகுதல்

380 மற்றுள செய்வன
செய்து மகிழ்ந்தார்
முற்றிய மாதவர்
தாள்முறை சூடிக்
கொற்றவ னைக்கழல்
கும்பிட லோடும்
பொற்றொடி கைக்கொடு
நன்மனை புக்கான். கக

மற்றும் செய்ய வேண்டியவற்றைச் செய்து மகிழ்ந்தார்கள். முதிர்ந்த முனிவர்களின் பாதங்களை முறையாக வணங்கி, தயரதனின் பாதங்களையும் வணங்கி, தங்க வளையல் அணிந்துள்ள சீதையின் கையைப் பிடித்துக்கொண்டு நல்ல மனையில் புகுந்தான்.

இராமன் தாயரை வணங்குதல்

381 கேகயன் மாமகள்
கேழ்கிளர் பாதம்
தாயினும் அன்பொடு
தாழ்ந்து வணங்கா,

---

380. மாதவர் - முனிவர்; கழல் - பாதங்கள்; பொற்றொடி - பொன்வளையல்: பொன்வளையல்களை அணிந்துள்ள சீதை; (அன்மொழித்தொகை) நன்மனை - நல்ல வீடு: சீதையும் இராமனுமாகிய மணமக்கள் புகப்பெறும்வீடு நல்ல வீடு எனப்பட்டது.

ஆயதன் அன்னை
அடித்துணை சூடித்
தூய சுமித்திரை
தாள்தொழ லோடும் ; ௨௦

கேகய மன்னன் மகளான கைகேயியின் ஒளிமிகுந்த பாதங்களை, பெற்ற தாயினிடத்துக் கொண்டுள்ள அன்பைக் காட்டிலும் மிக்க அன்புடன் பணிந்து வணங்கி, பெற்ற அன்னையாகிய கோசலையின் இரு பாதங்களையும் வணங்கி, தூய உள்ளமுடைய சுமித்திரையின் தாளையும் (இராமன்) தொழுதபோது,

(வி - ம்) இராமன் அளவுகடந்த அன்புடன் கைகேயியினால் வளர்க்கப்பட்டவன். இதனை, 'உனக்குக் கேடு வருகிற'தென்று கூனிகூற, கைகேயி 'இராமனைப் பயந்த எற்கு இடருண்டோ' என்றாள். (மந்தரை சூழ்ச்சி) பிள்ளைகளுண்டென்ற எண்ணம் தோன்றும் போது இராமனின் நினைப்பே முன் நின்றது. அதனால்தான் முதலில் அவளை வணங்கினன்போலும்.

வணங்கிய சீதையை மாமியர் வாழ்த்துதல்

382 அன்னமும் அன்னவர்
அம்பொன் மலர்த்தாள்
சென்னி புனைந்தனள் ;
சிந்தை உவந்தார்

381. கேழ் - ஒளி : மினுமினுப்பு ; ஆய - பெற்றவளாகிய.
382. சென்னி - தலை ;

கன்னி அருந்ததி
காரிகை காண் நம்
நன்மக னுக்குஇவள்
நல்அணி என்றார். உக

அன்னம் போன்ற சீதையும் அம்மூவருடைய அழகிய பொன்போன்ற மலரடிகளைத் தன் தலை பொருந்தும்படி வணங்கினாள். அவர்களும் மனம் மகிழ்ந்தார்கள். 'இந்தக் கன்னியாகிய சீதை அருந்ததி என்ற பெண்ணே யாவாள். நம் நல்ல மகனுக்கு இவள் நல்ல ஆபரணமாக விளங்கு கிறாள்' என்றனர்.

நன்கொடை வழங்கல்

383 எண்ணில கோடிபொன்
எல்லையில் கோடி
வண்ண அருங்கலம்
மங்கையர் வெள்ளம்,
கண்ணகல் நாடொடு
காசுயர் தூசும்,
பெண்ணி னணங்கனை
யாள்பெறு கென்றார். உ௨

எண்ண முடியாத கோடிக்கணக்கான பொன் நாணயங்களையும், அளவிட முடியாத கோடிக்கணக்கான அழகிய அருமையான நகைகளையும், உதவிப் பொருள்களின் கூட்டத்தையும், இடம் அகன்ற நாடுகளையும்,விலை மிகுந்த ஆடை

382. கன்னி - கன்னியாகிய சீதை ; அருந்ததி - அருந்ததியைப் போன்ற ; காரிகை - பெண்.

383. வண்ணம் - அழகு ; கண்அகல் - இடம் அகன்ற ; தூசு - ஆடை ; அணங்கு - தெய்வம்.

களையும் பெண்களுக்குத் தெய்வம்போன்ற சீதை பெறுக என்று கூறிப் பலரும் நன்கொடை வழங்கினார்கள்.

(வி – ம்) மணமகள் வணங்கும்போது வாழ்த்துக் கூறி உயர்ந்த பொருள்களை ஈதல் மரபாகும்.

தனி மனை புகுதல்.

384 நூற்கடல் அன்னவர்
சொற்கடல் நோக்கி,
மாற்கடல் அன்ன
மனத்தவ ளோடும்
கார்க்கடல் போற்கரு
ணைக்கடல் பண்டைப்
பாற்கடல் அன்னதொர்
பள்ளி அணைந்தான். உரு

கடல் போலப் பெருகியுள்ள நூல்களை எல்லாம் கற்று அதன் மயமாக விளங்குகிற அறிஞர்களின் நிறைந்த சொற்றொடர்களை ஆராய்ந்து, ஆசைக்கடலாக விளங்கும் மனத்தை யுடைய சீதையோடு கருங்கடலைப் போல விளங்கும் கருணைக் கடலான இராமன், முந்திய தன் இருக்கையான பாற்கடலை ஒத்த ஒரு அரண்மனையை அடைந்தான்.

(வி – ம்) மணமானவுடன் இன்ப மயக்கம் தலைக் கொள்ளும். இராமனுக்கும் கொண்டதென்பது முன்னர்க் கூறப்பட்டது. அதை நிதானப்படுத்திக் கொண்டான் என்க. சீதையின் உள்ளம் கொந்தளிக்கும் கடல் போலிருக்கிறது. இன்ப வாழ்வுக்காக விடப்பட்ட புதிய அரண்மனை, அவனுக்குப் பழகிய பாற்கடலைப் போலவே இருந்தது என்க.

---

384. மால் - மயக்கம் ; பள்ளி - அரண்மனை.

17. பரசிராமப் படலம்

[பரசிராமனைச் சந்தித்த படலம். பரசு – ஒருவகை ஆயுதம். அதைத் தாங்கிய இராமன் பரசிராமன்.]

கோசிக முனிவர் இமயஞ் சார்தல்

385 தாவதொர் வகையேநனி
சனகன் குயிலுடனே
நானுவிதம் வருபோகமும்
நுகர்கின்றஅந் நாள்வாய்
ஆறுமறை நெறிஆசிகள்
முனிகோசிகன் அருளிப்
போனான்வட திசைவாய்உயர்
பொன்மால்வரை புக்கான். க

இராமன் தக்க வகையில் சிறப்புடன் சனகன் மகளான குயில்போன்ற சீதையுடனே, பலவிதமான இன்பங்களைத் துய்க்கின்றபொழுது, கோசிக முனிவர் அழிதல் இல்லாத வேதமுறைப்படி ஆசிகூறி வாழ்த்திவிட்டு, வடதிசையிலுள்ள இமய மலையைப் போய் அடைந்தார்.

(வி – ம்) திருமணம் ஆன பின்னர் மிதிலையிலேயே சிலநாள் சீதையோடு இன்பப் பொழுது போக்காக இராமன் இருந்தான். கோசிக முனிவர் தவத்தின் பொருட்டு இமயத்தை நோக்கிச் சென்றுவிட்டார். கோசிக முனிவர் என்ற பாத்திரம் தோன்றி, இராம இலக்குவர்க்குப் போர் முனையில் நேரான படைப்பயிற்சி அளித்தலும், இராமனுக்கு

---

385. ஆவது - ஆகத்தக்கது ; நனி - மிகுதியாக ; குயில் - குயிலின் இனிய குரலையுடைய சீதை ; ஆறு - அழிவில்லாத ; பொன் மால்வரை - இமயமலை.

நல்லபெண்ணைத் திருமணம் நடத்தி வைத்தலுமான செயல் களைமுடித்து வைத்தது. இனி இந்த இராம காதையில் அப் பாத்திரத்தைப் பற்றிய பேச்சே கிடையாது. ஒரு பாத்திரம் தோன்றித் தன் வேலையை முடித்து விடுவது கதைப் போக் கில் ஒரு கர்மயோகம் போலவே காட்சி யளிக்கும். தயரத னிடம் கையடைப் படலத்தில் பெற்றுக் கொண்ட பிள்ளையை மணமுடித்து ஒன்றுக்கு இரண்டாக ஒப்புவித்து விட்டு மறைகிறது அப்பாத்திரம். ஒவ்வொரு பாத்திரமும் வேண்டிய இடத்தில் தோன்றிச் செயலாற்றி மறைந்து விடுகிறது. வழவழ வென்று இழுபடும் பாத்திரங்களை இந்நூலில் காண முடியாது. முதலாவது தோன்றி மறைகிற முக்கிய பாத்திரம் கோசிக முனிவரே யாவர்.

புதிய மணத்தம்பதிகள் தம் ஊரில் இருந்து இன்பந் துய்ப்பது நிறைவுடையதாவதில்லை. ஊர்த்தொல்லை, உற்றார் தொல்லை, நண்பர் தொல்லை முதலியவைகட்கு இடையே முழு இன்பத்தையும் பெற முடிகிறதில்லை. நாளெல்லாம் இரவெல்லாம் இன்பத்தையே எண்ணி நிற்கும் இளம் தம்பதி கட்கு, தொல்லை செய்யாத நல்லவர் கூடச் சிறிது விலகி நின்றால் நலமெனத் தோன்றுவது இயல்பு. எவ்விதமானாலும் பிறரொருவருடைய பொறுப்பில் யாவும் நீங்க, மனைவியும் தானுமாகத் தனி இடத்தில் பொருந்தி வாழும் வாழ்வே முழு இன்பத்துக்கும் இடமுடையதாகும். அப்படி எல்லாப் பொறுப்பையும் மனமுவந்து சனகன் செய்ய, இருவரும் இளமை இன்பத்தை – நானாவிதமாக – மனங்கொண்டபடி துய்த்தனர். ஆனால் இதற்கு முன் பாடலில், "நூற்கட லன்னவர் சொற்கடல் நோக்கி" இன்பந் துய்த்தான் என்பது நோக்குதற்குரியது. போனான் புக்கான் என்ப தைப் போய்ப் புக்கான் எனக் கொள்க.

தயரதன் அயோத்திக்குப் புறப்படல்

386 அப்போதினின் முடிமன்னவன்
அணிமாநகர் செலவே
இப்போதுநம் அனிகம்தனை
எழுகென்றினிது இசையாக்
கைப்போதக நிகர்காவலர்
குழுவந்தடி கதுவ
ஒப்போதரு தேர்மீதினில்
இனிதேறினன் உரவோன். உ

அந்த நாளில் ஒரு நாள் முடியரசனாகிய தயரதன் அழகிய அயோத்திமா நகரத்திற்குச் செல்லும் பொருட்டு, "இப்பொழுது நம்முடைய சேனைகள் உடன் எழுக" என்று சொல்ல, யானைகளைப் போன்ற அரசர் கூட்டம்வந்து திருவடிகளிற் பொருந்த, ஒப்பிட்டு உரைக்கமுடியாத அருமையான தேரின்மேல் இனிதாக ஏறினான்.

(வி - ம்) அந்த நாள் என்றது இராமனும் சீதையும் இன்பந் துய்த்துக்கொண்டிருக்கும் நாளை.

இராமன் முதலியோர் புறப்படல்

387 முன்னேநெடு முடிமன்னவன்
முறையிற்செல, மிதிலை
நன்மாநகர் உறைவார்மனம்
அவைபின்செல நடுவே

---

386. அனிகம் - சேனை ; கைப்போதகம் - யானை ; ஒப்பு ஒத அரு - ஒப்பிட்டுச் சொல்ல முடியாத ; உரவோன் - வலிமையுள்ள தயரதன்.

தன்னேர்புரை தருதம்பியர்
தழுவிச்செல மழைவாய்
மின்னேபுரை இடையாளொடும்
இனிதேகினன் வீரன். ௩

முன்னணியில் தயரதன் மரபின்படி செல்லவும், மிதிலை நகரத்தின் மக்கள் மனத்தில் எழுந்த அன்பு பின்னே தொடர்ந்து வரவும், இவற்றுக்கு இடையே தனக்கு இணையான தம்பியர் மூவரும் அருகிற் சூழ்ந்து வரவும், மேகத்தின் இடையில் தோன்றும் மின்னலை ஒத்த இடையை யுடைய சீதையோடு இனிமையாக இராமன் புறப்பட்டுச் சென்றான்.

பரசிராமன் தோற்றம்

388 அயிர்துற்றிய கடல்மாநிலம்
அடையத்தனி படரும்
செயிர்சுற்றிய படையான்,அடல்
மறமன்னவர் திலகன்,
உயிர்உற்றதோர் மரமாமென
ஓராயிரம் உயர்தோள்
வயிரப்பணை துணியத்தொடு
வடிவாய்மழு உடையான். ச

---

387. தன் நேர் புரைதரு - தன்னைச் சரியாக ஒத்த; மழை-மேகம்.

388. அயிர் - மணல் ; துற்றிய - நெருங்கிய ; அடைய - முழுதும் ; செயிர் - வலிமை ; அடல் - வலிமை : மறம் — வீரம் ; திலகன் - திலகம் போன்றவன் : எல்லா அலங்காரங்களினுள்ளும் நெற்றியில் இடும் பொட்டுத்தான் தலை சிறந்ததென்பது கொள்கை. அப்படித் திலகமாக விளங்குபவன் ; பணை - கிளைகள் ; மழு-ஒருவகை ஆயுதம் : வெட்டக் கூடியது.

மணல் நெருங்கிய கடலாற் சூழப்பட்ட இந்தப் பெரிய பூவுலகம் முழுதும் நிறைந்துள்ள வலிமை மிகுந்த சேனையை உடையவன்; வலிமையுடைய வீரரான அரசர்களுக்குள் திலகம் போன்றவன்; உயிருள்ள ஒரு மரமென்று சொல்லும்படி ஆயிரம் உயர்ந்த தோள்களையுடையவன்; அத்தகைய கார்த்த வீரியாருச்சுனனின் வயிரம் பற்றிய கைகளாகிய கிளைகள் துணுக்குற்று விழும்படி செய்த கூர்மையான வாயையுடைய மழு என்னும் ஆயுதத்தை உடையவன். (பரசிராமன்).

(வி – ம்) மணமக்களை அழைத்துக்கொண்டு வரும் வழியில் பரசிராமன் தோன்றினன். இவன், ஆயிரங் கைகளையுடைய கார்த்தவீரியாருச்சுனனைக் கொன்றவன். அரசர்களை அழிக்க முற்பட்டு இருபத்தொரு தலைமுறைவரை அரசரைக் கொன்று, அந்த இரத்த நீரில் தன் தந்தைக்கு நீர்க்கடன் செய்தான் என்பர்.

இராமன் எதிரில் பரசிராமன்

389 பொங்கும்படை இரியக்கிளர்
புருவங்கடை நெரிய
வெங்கண்பொறி சிதறக்கடிது
உருமேறென இடியாச்
சிங்கம்என உயர்நேர்வரு
குமரன்எதிர் சென்றான்;
அங்கண்ணழ கனுமிங்கிவன்
ஆரோஎனும் அளவில், ரு

389. இரிய - கலைந்து ஓட; உரும் ஏறு - பேரிடி.

மகிழ்ச்சி பொங்கச் செல்லுகிற தயரதனுடைய சேனை பயந்து ஓடும்படி, எழுந்து புருவம் கடைவளையவும், வெப்பங்கொண்ட கண்ணிலிருந்து நெருப்புப் பொறி சிதறவும், விரைந்து பேரிடிபோலச் சத்தமிட்டு, சிங்கத்தைப் போல உயர்ந்த தேரில் வருகிற குமரனுக்கு எதிரில் சென்றான். அழகிய கண்களையுடைய அழகின் உருவமான இராமன், இவன் யார் ? என்றான். அப்பொழுது,

(வி - ம்) பரசிராமன் ஒரு முனிவன் ; எவ்வளவோ தவம் செய்தவன் ; மிகுந்த வலிமையும், போர்த்திறமையும் உடையவன் ; சிவபெருமானிடத்தில் மழுவாயுதம் பெற்றவன் ; ஆனால் அகங்காரத்தின் வடிவம். எதிரில்லாத பலம் பெற்று நிமிர்ந்த ஒருவனுக்கு அடக்கம் இல்லாவிட்டால் எந்த நிலையுண்டாகும் என்பதை இங்கே வரும் கவிகளால் உணர முடியும். வழி நெடுகத் தன்பாட்டில் செல்லுகிற ஒரு திருமணக் கூட்டத்தைக் கண்டு எவ்வளவு ஆத்திரப் படுகிறான் !

தயரதனின் நடுக்கம்

390 அரசன்னவன் இடைவந்தினிது
ஆராதனை புரிவான்,
விரைசெய்முடி படிமேலுற
அடிமேலுற விழவும்
கரைசென்றிலன் அளையான்நெடு
முடிவின்கனல் கால்வான் ;
முரசின்குரல் படவீரனது
எதிர்நின்றிவை மொழிவான். ௯

390. ஆராதனை - வழிபாடு ; விரை - மணம் ; படி - நிலம்; கரை - முடிவு ; நெடு முடிவு - ஊழிக்காலம்.

தயரதன் இடையிலே வந்து இனிமையான பூசை செய்பவனாக, பூமணம் வீசுகிற தன் முடியானது நிலத்தில் படும்படியும், பரசிராமனுடைய அடிகள் தன் தலையிற் படும்படியும் விழுந்தான். விழுந்த பிறகும், பரசிராமன் ஆத்திரம் குறையாதவனாக உலக முடிவு காலத்தில் ஏற்படும் கொதிப்பைக் கக்கினான். பெரிய முரசடிக்கிற மாதிரியாக இராமனுக்கு முன்னே சென்று இவ்வாறு கூறினான் ;

பரசிராமன் வீரங் கூறல்

391 *மூவெழு முறைமை பாரின்
முடியுடை வேந்தை எல்லாம்
வேவெழு மழுவின் வாயால்
வேர்அறக் களைந்திட்டு அன்னார்
தூவெழு குருதி வெள்ளத்
துறையிடை முறையின் எந்தைக்கு
ஆவன கடன்கள் நேர்ந்தேன்
அருஞ்சினம் அடக்கி நின்றேன். எ

இருபத்தொரு தலைமுறை, உலகில் முடிதாங்கிய அரசர்களை எல்லாம் நெருப்பைக் கக்குகிற மழுவாயுதத்தின் வாயினால் வேருடன் அற்றுப் போம்படி களைந்து தீர்த்து, அவர்களின் தசையிலிருந்து எழுகிற இரத்த வெள்ளத்தினால் ஆன நீர்த்துறையிலே விதிப்படி என் தந்தைக்குச் செய்யவேண்டிய கடன்களைச் செய்தேன். அதன்பிறகுதான் நான் கோபமடங்கி இருக்கின்றேன்.

---

391. வேவெழு - எரிந்தெழுகின்ற ; தூ - தசை ; துறை - நீர்த்துறை.

இதுவும் அது

392 உலகெலாம் முனிவற்கு ஈந்தேன்;
　　உறுபகை ஒடுக்கிப் போந்தேன்;
அலகின்மா தவங்கள் செய்துஓர்
　　அருவரை இருந்தேன்: ஆண்டைச்
சிலையைநீ இறுத்த வோசை
　　செவியுறச் சீறி வந்தேன்;
மலைகுவென்; வல்லை யாயின்
　　வாங்குதி தனுவை என்றான்.　　அ

(அவ்வாறு பெற்ற) உலகம் எல்லாவற்றையும் முனிவனுக்குக் கொடுத்தேன். மிகுந்த பகைவர்களை ஒடுக்கித் திரும்பினேன். கணக்கிட முடியாத பெரிய தவங்களைச் செய்து ஒரு அருமையான மலையில் இருந்தேன். நீ வில்லை முறித்த ஓசை அங்கே காதிற் கேட்டதனால் சீற்றங்கொண்டு வந்திருக்கின்றேன். போருக்குத் தயார்! வலிமை இருந்தால் (இந்த) வில்லை வாங்கிப் போருக்கு முற்படு என்றான்.

இராமன் வில்லை வாங்கிக் கூறல்

393 என்றனன் என்ன நின்ற
　　இராமனும் முறுவல் எய்தி,
நன்றொளிர் முகத்தன் ஆகி,
　　நாரணன் வலியின் ஆண்ட

---

392. உறு - மிகுந்த; வல்லைஆயின் - வலிமைஉடையையானால்; முனிவன் - காசிப முனிவன்.

393. முறுவல் - புன்சிரிப்பு; ஆண்ட - பயின்ற.

வென்றிவில் தருக என்னக்
கொடுத்தனன் ; வீரன் கொண்டான் ;
துன்றிரும் சடையோன் அஞ்சத்
தோள்உற வாங்கிச் சொல்லும் ; ௯

என்று சொன்ன பரசிராமனைப் போல நின்ற இராமனும், புன்சிரிப்புக் கொண்டு நல்ல ஒளி பொருந்திய முகத்தனாகி, 'திருமால் வலிமையோடு பயின்ற வெற்றி பொருந்திய வில்லைத் தருவாயாக' என்று கூற, பரசிராமன் வில்லைக் கொடுத்தான். வீரனாகிய இராமன் பெற்றுக்கொண்டான். நெருங்கிய பெரிய சடையை உடைய பரசிராமன் அஞ்சும்படி அம்பைக் கோத்து நாணியைத் தோள்வரை இழுத்துப் பிடித்துக் கொண்டு சொல்கின்றான் ;

(வி - ம்) பரசிராமன் எப்படி நிமிர்ந்து நின்றானோ அப்படியே இராமனும் நிமிர்ந்து நின்றான். ஆனால் அவன் கடுங்கோபத்துடன் காணப்பட்டான். இராமன் புன்முறுவலுடன் காணப்பட்டான். இங்கே இருவர்க்கும் ஒப்புமையாக நிற்பது வீரமே யாகும். மனத்தில் உள்ள அஞ்சாமை முகத்தில் ஒளிர்ந்தது.

அம்புக்கு வழி சொல் !

394 பூதலத்து அரசை எல்லாம்
பொன்றுவித் தனையென் றாலும்,
வேதவித் தாய மேலோன்
மைந்தன்நீ ; விரதம் பூண்டாய் ;

393. துன்று-நெருங்கிய ; இரு-பெரிய ; வாங்கி-இழுத்து.
394. பொன்றுவித்தல் - கொல்லுதல் ; வேதவித்து ஆய - வேதத்திற்கு மூலமாக உள்ள.

ஆதலிற் கொல்லல் ஆகாது ;
அம்பிது பிழைப்ப தன்றால்
யாதுஇதற்கு இலக்க மாவது ?
இயம்புதி விரைவின் என்றான். ௪௦

நிலவுலகத்திலுள்ள அரசர்களை எல்லாம் கொன்று முடித்துவிட்டாய் என்றாலும், வேதத்தை ஆழ அறிந்தவனை சமதக்கினி முனிவன் மகனாக இருக்கிறாய். மேலும் நீ தவக்கோலம் பூண்டிருக்கிறாய். ஆகையினால் கொல்ல விருப்பமில்லை. ஆனால் இந்த அம்பு வீணாகாது. இதற்கு இலக்காவது யாது என்பதைத் தாமதியாமல் சொல் என்றான்.

(வி - ம்) உனக்காகவும்,உன் தந்தைக்காகவும் இரங்குகின்றேன். உன் தந்தை சிறந்த கல்வி அறிவுடையவர். நீயோ தவசி. அம்புக்கு வழிசொல் என்றான் இராமன்.

அம்பின் செயல்

395 *எய்தஅம்பு இடைபழுது
எய்தி டாமல்என்
செய்தவம் யாவையும்
சிதைக்க வேஎன,
கைஅவன் நெகிழ்தலும்
கணையும் சென்றுஅவன்
மையறு தவமெலாம்
வாரி மீண்டதே. ௧௧

எய்யும் அம்பு இடையில் பழுதடையாமல், செய்யப்பட்ட என்னுடைய தவம் முழுவதையும் சிதைக்கட்டும்

---

395. கணை - அம்பு ; மை - குற்றம்.
இரா. 25

என்று பரசிராமன் சொல்ல, அம்பைப் பிடித்திருந்த இராம னின் கை நெகிழ்ந்தது ; அம்பு சென்று பரசிராமனுடைய குற்றமற்ற தவங்களை எல்லாம் வாரிக்கொண்டு திரும்பிற்று.

(வி - ம்) இராமன் இலக்கில்லாமல் (வெற்று வேட் டாக) விடுவதில்லை. உன்னைக் கொல்ல விரும்பவில்லை ; வழி என்ன என்று கேட்டான். நான் இனித் தவம் செய்வ தில்லை ; இதுவரை செய்த தவத்தின் பயனையும் நான் அடைவதில்லை என்று கூறினான் என்க.

தயரதன் துயர் நீங்குதல்

396 அழிந்துஅவன் போனபின்
அமலன், ஐஉணர்வு
ஒழிந்துதன் உயிர்உலந்து
உருகு தாதையைப்
பொழிந்தபேர் அன்பினால்
தொழுது முன்புபுக்கு
இழிந்தவான் துயர்க்கடற்
கரைநின்று ஏற்றினான். கஉ

பரசிராமன் தோல்வியுற்றுப் போனபிறகு, ஐம்புலன் களும் அடங்கி, உயிர்சோர்ந்து உருகிக் கிடக்கும் தன் தகப்பனை, இராமன் வெளிப்பட்டுத் தோன்றுகின்ற மிகுந்த அன்புடன் வணங்கி, முன்னர் அமிழ்ந்திக் கிடந்த பெரிய துயர்க் கடலில் இருந்து கரையில் சேர்த்தான்.

(வி - ம்) இராமனுடன் எதிர்க்க வேண்டாமென்று பரசிராமன் காலில் தயரதன் விழுந்தான். அவன் அதைச்

---

396. அழிந்து - தோற்று; அமலன் - மலம்அற்றவன் : கட வுள்: இராமன் ; ஐஉணர்வு - ஐம்புலன்களால் உணரும் உணர்வு ; உலந்து - குறைந்து; இழிந்த - விழுந்த ; வான் - பெரிய.

சிறிதும் பொருட்படுத்தவில்லை. விழுந்தவன் விழுந்தபடியே உணர்வற்றுக் கிடந்தான். பரசிராமன் தோற்றுப் போய் விட்டபிறகு இராமன் தயரதனை எழுப்பினன். எதிர்பாரா மல் கடலில் தவறி விழுந்தவனைப் போலத் தயரதன் துன்ப மென்ற பெருங்கடலில் முழுகிக் கிடந்தான் என்க.

தயரதன் மகிழ்ச்சிப் பெருக்கு

397 பரிவறு சிந்தனைப்
பரசு ராமன்கை
வரிசிலை வாங்கிஓர்
வசையை நீக்கிய
ஒருவனைத் தழுவிநின்று
உச்சி மோந்துதன்
அருவிஅம் கண்எனும்
கலசம் ஆட்டினன் கரு

அன்பற்ற மனத்தையுடைய அந்தப் பரசிராமன் கையி லிருந்த வில்லை வாங்கி, (இதுவரை அரச குலத்துக் கேற்பட் டிருந்த) வசையை நீக்கிய ஒப்பற்ற இராமனைக் கட்டித் தழுவி உச்சி மோந்து தன்னுடைய அழகிய கண்களி லிருந்து பெருகுகிற ஆனந்தக் கண்ணீரினல் இராமனை முழுக்காட்டி விட்டான்.

(வி - ம்) பரசிராமன் தவம், போர் முதலியவற்றில் தலை சிறந்தவனானாலும் வறண்ட மனமுடையவன் என்பதை, " பரிவறு சிந்தையன் " என்று கூறினர். இராமன் அவனைத் தோற்கச் செய்ததால் அரசர்க்கிருந்த இகழ்வு நீங்கிவிட்டது.

---

397. பரிவு - அன்பு : உச்சி மோத்தல் - அன்பினல் முகத் தைத் தலையில் பொருத்தி அணைத்தல் ; கலசம் - குடம்.

இராமன் தப்பிப் பிழைத்தாற்போதும் என்று பரசிராமன் காலில்விழுந்த தயரதனுக்கு, இராமன் தான் பிழைத்ததன்றி இருபத்தொரு தலைமுறை அரச குலத்தையே போரிட்டுக் கருவறுத்தபரசிராமனையும் தோற்கடித்து விட்டான்என்பதை அறிந்தவுடன் ஏற்பட்ட மகிழ்ச்சியில் கண்களிலிருந்து மகிழ்ச்சிக் கண்ணீர் குடங்குடமாகச் சுரந்தது என்று கூறப் பட்டது. இதனால், குலத்துக் கேற்பட்ட வசை நீங்கியது என்று.கூறுவது தயரதன் உள்ளப் பண்பை விளக்குகிறது.

கண்ணாகிய கலசம்; அக்கலசத்திலிருந்து நீரைக் கொட்டினான்; கலசம் மலையாகவும் நீர் அருவியாகவும் கொள்க. கலசத்தில் உள்ள நீர் கொட்டப்பட்டால் கலசம் வெறுங் கலசமாவ தியல்பு. இங்கே கலசமே மலையாக இருந்து வற்றாத அருவி என நீரைக் கொட்டிக் கொண்டே இருக்கிறதென்க.

இராமன் அயோத்தி அடைதல்

398 பூமழை பொழிந்தனர்
புகுந்த தேவர்கள்;
வாமவேல் வருணனை
மான வெஞ்சிலை
சேமியென்று உதவினன்;
சேனை யார்த்தெழ
நாமநீர் அயோத்திமா
நகரம் நண்ணினான். கசு

அங்கு வந்திருந்த தேவர்கள் பூமழை பொழிந்தனர். அழகிய வேலையுடைய வருணன் என்பவனிடம் (இராமன்)

398. வாமம் - அழகு; மான - பெருமை பொருந்திய; வெம் - கொடுமையான; சேமி - காப்பாற்றிவை; நாமம் - நிறைவு.

இந்தப் பெரிய சிலேயைக் காப்பாற்றி வை என்று கூறிக் கொடுத்துவிட்டு, தன்னுடைய சேனைகள் ஆரவாரித்துச் செல்ல, நீர்வளம் மிகுந்த அயோத்தி நகரத்தைச் சார்ந்தான்.

தயரதன் பரதனிடம் கூற முற்படல்

399 நண்ணினர் இன்பத்து
வைகும் நாளிடை
மன்னுறு முரசினம்
வயங்கு தானையான்
அண்ணலேப் பரதனை
நோக்கி, ஆண்தகை
எண்ணரும் தகையதோர்
பொருள்இ யம்புவான். கடு

அயோத்தியில் சென்று இன்பத்தில் திளேத்துக் கொண்டிருக்கிறபொழுது, மண்பொருந்திய முரச வாத்தியங்கள் முழங்க விளங்கும் சேனையை யுடையவனுகிய தயரதன், அண்ணலாகிய பரதனைப் பார்த்து, பரதனுல் நினைப்பதற்கும் இயலாத ஒரு செய்தியைச் சொன்னுன்.

கேகயநாடு ஏகு எனல்

400 ஆணை நின் றன்முது
தாதை, ஐய! நிற்
காணிய விழைவதுஓர்
கருத்தன் ஆதலால்

399. மண் - முரசு, மத்தளம் போன்ற கருவிகளிற் பூசப் படும் ஒருவகைப் பசை. ஆண்தகை - பரதன்.

400. ஆணை-அதிகாரம்; முதுதாதை-பாட்டன்;

கேணியில் வளைமுரல்
கேக யம்புகப்
பூண்ஒளிர் மார்பநீ
போதி என்றனன். கசு

ஐயா ! ஆணைசெலுத்தும் அரசனாகிய உன் பாட்டன் உன்னைப் பார்க்க விருப்பமுடையவனாக இருப்பதால், குளங்களில் சங்குகள் ஊர்ந்து திரிகிற கேகய நாட்டிற்கு நகைகளால் விளங்கப் பெறும் மார்பையுடைய நீ செல்வாயாக என்று கூறினன்.

உயிர் பிரிந்த உடல்

401 ஏவலும் இறைஞ்சிப்போய்
இராமன் சேவடிப்
பூவினைச் சென்னியிற்
புனைந்து போயினான் ;
ஆவி அங்கு அவனலது
இல்லை ஆதலால்
ஓவலில் உயிர்பிரிந்து
உடல்சென்று என்னவே. கஎ

செல்வாயாக என்று சொன்னவுடனே, தந்தையை வணங்கி இராமனுடைய அடிகளாகிய தாமரை மலர்களையும் தலைபொருந்த வணங்கிப் போயினான். பரதனுக்கு இராமனைத் தவிர வேறு உயிரென்பதில்லை ஆதலால் நீங்காத உயிரை

---

400. கேணி-சிறு குளம் ; வளை - சங்கு.

401. ஏவல் - போகும்படி அல்லது செய்யும்படி சொல்லித் தூண்டுதல் ; ஓவல்-நீங்குதல்.

நீங்கிச் செல்வதைப் போல உடலைத் தூக்கிக்கொண்டு சென்றான்.

(வி - ம்) உயிர் நீங்கினால் உடல் செல்ல இயலாது. இங்கே பரதனின் உடல் செல்லுகிறது; உயிர் இருக்கத்தான் செய்கிறது. ஆனால் அந்த உயிர் உயிர்ச்சத்தை இழந்து விட்டது. உண்டு உறங்கி நடந்து திரிய ஆகுமேயன்றி உயிரான செயலாற்றுந் தன்மையை யிழந்து விட்டதென்க.

வானவர் மாதவம்

402 ஆனவன் போனபின்
அரசர் கோமகன்
ஊனமில் பார்அரசு
உய்க்கும் நாளிடை
வானவர் செய்தமா
தவம்உண் டாதலால்
மேல்நிகழ் பொருளது
விளம்பு வாம்அரோ. கஅ

பரதன் சென்றபின்பு, அரசன் உலக அரசியலைக் குற்றமில்லாமல் நடத்தும் பொழுது, தேவர்கள் செய்த தவம் உள்ளபடியினாலே, மேலே நிகழ்கின்ற நிகழ்ச்சியைக் கூறுகிறேன்.

(வி - ம்) இது கவிக்கூற்று. இதுவரையும் கதை சிறப்பாக நிகழ்ந்தது. அதைச் சொல்லிவந்தேன். இனி, கதையில்

---

402. ஊனம் - குறைவு ; உய்க்கும் - செலுத்தும்; நிகழ் பொருளது - நடக்கும் செயல்களை.

அடுத்த கட்டம்வருகிறது. அங்கே பல நிகழ்ச்சிகள் உண்டு. ஆனால் அவையெல்லாம் தேவர்கள் செய்த தவத்தின் பயனாக விளைவனஎன்று கவி வருத்தத்துடன் முகவுரையாகத் தெரிவிக்கிறார். இராமனும் சீதையும் சுகமாக இன்பக்கடலில் திளைத்திருக்கிறார்கள். கடுங்காடு வாவா என்கிறது. பார் அரசு ஊனமின்றி இதுவரை ஆளப்பட்டு வருகிறது. இனி அது பெருங்கலக்கம் அடையப்போகிறது. இவைஎல்லாம் தெய்வச்செயல் என்று படிப்பவருக்கு ஆறுதல்கூறி அயோத்திக் காண்டத்தைத் தொடங்குகிறார்.

குற்றியலுகர விளக்கம்

வல்லொற்றில் உகரம் ஏறிய கு, டு, சு, து, பு, று என்ற ஆறு எழுத்துக்களில் ஒன்று ஒரு சொல்லின் கடைசியில் நின்றால், அது குற்றிய லுகரமாகும். உதாரணம் :—நாகு, பகடு, மஞ்சு, அஃது, சார்பு, கூற்று என்பன. ஆனால் இந்த ஆறு எழுத்தும் முதலில் ஒரே ஒரு குற்றெழுத்தோடு வருமானால் அது குற்றியலுகர மல்ல. உதாரணம் :—நகு, மடு, பசு, அது, தபு, மறு என்பன. சிலபோது வகர மெய்யோடு கூடிய உகரமும் (வ்+உ=வு) குற்றிய லுகரம் போலக் கொள்ளப்படும். உதாரணம் :—கதவு.

குற்றியலுகரத்தை அடுத்து வருகிற சொல்லின் முதல் எழுத்து உயிரெழுத்தாக இருந்தால், குற்றிய லுகரம் தான் ஏறிய மெய்யெழுத்தை விட்டு (உயிராகிய உ) ஓடிப்போகும். வருஞ் சொல்லின் முதலில் உள்ள உயிரெழுத்து, உகரம் பிரிந்த முதற் சொல்லின் மெய்யெழுத்தோடு கூடிக்கொள்ளும். உதாரணம் :—

'கமுகு+ஓங்கு' இதில் முதற்சொல்லின் கடைசியில் உள்ள 'கு' குற்றியலுகரமாகும். 'கு' என்னும் எழுத்தைப் பிரித்தால் க்+உ என்று இரு எழுத்துக்களாகும். அடுத்த சொல் 'ஓங்கு' என்று உயிரெழுத்தில் தொடங்குகிற படியால், இரண்டும் சேருகின்றபொழுது, முதற்சொல்லின் கடைசியில் உள்ள குற்றிய லுகரம் (உ) ஓடிப்போய்விடும். அது போக மிஞ்சியிருப்பது இறுதியில் உள்ள 'க்' என்ற மெய்யெழுத்

தும், வருமொழி முதலில் உள்ள 'ஓ' என்ற உயி ரெழுத்தும் (க்+ஓ=கோ) சேர்ந்து 'கமுகோங்கு' என்றாகிவிடும். பிரித்தால், 'கமுகு+ஓங்கு' என நிற்கும். இம்மாதிரியே குற்றியலுகரம் வருமிடங்களி லெல்லாம் கொள்க. ஒரு பாடலை மாதிரிக்குத் தரு கின்றேன்.

குற்றிய லுகரத்தைப் பிரித்து எழுதிய பாடல் :—

ஏகம் முதற்கல்வி முளைத்து எழுந்து
என்ணில் கேள்வி
ஆகும் முதல்திண் பணைபோக்கி
அருந்த வத்தின்
சாகம் தழைத்து அன்பு அரும்பித்
தருமம் மலர்ந்து
போகம் கனிஒன்று பழுத்தது
போலும் அன்றே.

குற்றிய லுகரத்தைச் சேர்த்தெழுதிய அதே பாடல் :—

ஏகம் முதற்கல்வி முளைத்தெழுந்
தெண்ணில் கேள்வி
ஆகும் முதல்திண் பணைபோக்கி
அருந்த வத்தின்
சாகம் தழைத்தன் பரும்பித்
தருமம் மலர்ந்து
போகங் கனிஒன்று பழுத்தது
போலும் அன்றே.

முளைத்து+எழுந்து=முளைத்தெழுந்து.
எழுந்து+எண்ணில்=எழுந்தெண்ணில்

தழைத்து + அன்பு = தழைத்தன்பு.
அன்பு + அரும்பி = அன்பரும்பி.

இவ்வாறு கண்டு கொள்க. குற்றியலுகரம் பிரித்துப் போட்டிருக்கிற இடங்களில் சேர்த்துப் படித்தால் தான் பாடலின் சந்தம் சரியாக வரும்.

இந்தப் பாடலில், மலர்ந்து ஒன்று பழுத்தது என்ற மூன்று சொற்களில் குற்றியலுகரம் வந்திருக்கிறது. அதற்கடுத்த சொல்லின் முதலெழுத்து உயிரெழுத்தாக இல்லாதபடியால் குற்றியலுகரம் இருந்தபடியே இருப்பதறிக.

பாடல்களில் காணப்படும்

கதைக் குறிப்புக்கள்

பாற்கடல் கடைந்தது

பாடல் :—4, 130, 225, 250, 350, 375, 384.

தேவர், அசுரருடன் பெரும் போர்களைச் செய்து மடிந்ததால் மடியாமல் இருக்கும் பொருட்டு, பாற்கடலைக் கடைந்து அமிழ்தம் எடுக்க முயன்றனர். மந்திர மலையை மத்தாகக் கொண்டு வாசுகி என்ற பாம்பைக் கடைகயிறாக்கிக் கடைந்தனர். திருமால் ஆமை (கூர்மாவதாரம்) உருக்கொண்டு மலையை முதுகில் தாங்கினர். கொடிய நஞ்சு தோன்றியது. யாவரும் நடுங்கினர். சிவபெருமான் அதனை எடுத்து உண்டு கழுத்தில் அடக்கிக் கொண்டனர். மீண்டும் கடல் கடையப்பட்டது

தேவர்கள் ஆற்ருது களைத்துப் போயினர். அங்கே வந்த வாலியை வேண்டினர். அவன் இரு கைகளாலும் இயக்கிக் கடைந்தான். அமுதம் எழுந்தது. தேவர்கள் உண்டு மகிழ்ந்து சாவாப் பேறு பெற்றனர். கடைந்தபோது தோன்றிய மற்றைப் பொருள்களாவன : தன்வந்திரி, உச்சை சிரவம் என்னும் குதிரை, ஐராவதம் என்னும் யானை, அரம்பையர், கௌத்துவமணி, சிந்தாமணி, காமதேனு, கற்பகதரு, சந்திரன், மூதேவி, இலக்குமி என்பன. இலக்குமியையும், கௌத்துவமணியையும் திருமால் ஏற்றுக்கொண்டார். எஞ்சிய பல இந்திரனுக்குக் கொடுக்கப்பட்டன.

சம்பரன் கதை

பாடல் :—55

சம்பராசுரன் என்பவன் இன்னும் பல அசுரர்களுடன் சென்று பொன்னுலகைக் கைக்கொண்டு இந்திரனைத் துரத்தி விட்டான். தோல்வியுற்ற இந்திரன் தயரதனிடத்தில் முறையிட, அவன் சென்று போரிட்டுச் சம்பராசுரனைக் குலத்தோடு மாண்டு போகும்படி செய்தான். அப்போரில் கைகேயி தயரதனுடைய தேரை ஓட்டினுள். அதனுல் ஏற்பட்ட மகிழ்ச்சியினுல் கைகேயி கேட்கும்போது இரண்டு வரம் தருவதாகத் தயரதன் வாக்களித்தான்.

சிவன் கங்கை அணிதல்

பாடல் :—59, 78, 144, 208, 230, 237

பகீரதன் என்பான் தன் முன்னேரை உய்விப்பான் வேண்டிக் கங்கையை நிலத்திற்குக் கொணர அருந்தவம்

ஆற்றினன். கங்கை, நிலம் நோக்கிக் கடுவேகத்துடன் வந்தது. இவ்வேகத்துடன் வருமாயின் உலகு அழிந்துவிடுமே என அஞ்சிய பகீரதன் சிவபெருமானை வேண்டினன். சிவபெருமான் கங்கையைத் தலையில் தாங்கி அதன் வேகத்தைத் தணித்துவிட்டனர்.

சிவன் பிறை சூடுதல்

பாடல் :—70, 130

தக்கன் சாபத்தை ஏற்ற சந்திரன் நாடோறும் உடல் தேய்ந்து வரலானான். கடைசியில் மனம் நொந்து சிவனிடம் சென்று முறையிட்டான். அடைக்கலம் தந்த சிவபெருமான், அவனைத் தன் தலையில்வைத்துக் காத்தனர்.

மன்மதன் எரிந்தது

பாடல்—70, 71, 161

ஒருகால், சிவபெருமான் யோக நிட்டையில் அமர்ந்துவிட்டார். இது கண்ட தேவர்கள், யோகத்தைக் கலைக்குமாறு மன்மதனை ஏவினர். அவன் சென்று அம்பு தூவ, சிவபெருமான் சினந்து நெற்றிக் கண்ணை விழித்தனர். நெற்றிக் கண்ணிலிருந்து தோன்றிய நெருப்பால் மன்மதன் எரிந்தனன். பின் அவன் மனைவியான இரதியின் வேண்டுகோளால் மன்மதன் உயிர் பெற்றனன்.

சிவன் யானைத்தோலைப் போர்த்தது

பாடல்—71, 198, 231

தாருக வனத்து இருடிகள் கூடிச் சிவபெருமானை அழிப்பதற்காகப் பெரு வேள்வி யொன்று செய்து, அவ்

வேள்வியினின்றும் எழுந்த புலி, யானை முதலிய விலங்குகளை அவர்மீது ஏவினர். இறைவன் அவற்றைக் கொன்று அவற்றின் தோலை யுரித்து உடுத்தும், போர்த்தும் கொண்டார்.

உலகம் தாங்கிய வராகம்

பாடல் :—109

இரணியாக்கன் என்னும் அசுரன் இந்நிலவுலகத்தையெல்லாம் சுருட்டிக் கொண்டு கடலுள் ஒளிந்து கொண்டான். அக்காலை, திருமால் பன்றியுருக்கொண்டு சென்று, அவனொடு பொருது உலகைத் தன்னுடைய சிங்கப் பல்லில் தாங்கி எடுத்து வந்தனர்.

அகிலம் அடங்கும் வயிறு

பாடல் :—117, 134, 353

ஒவ்வொரு ஊழிக்காலத்திலும் மழைப்பெருக்கால் நட்சத்திர மண்டிலம் வரை நீர்பெருகி நிற்க, திருமால், உலகைத் தம் வயிற்றில் அடக்கிக் காப்பாற்றுவார். ஆலிலை மேற் பள்ளிகொண்டு நீரில் மிதந்து, பின்னர் தம் உந்திக் கமலத்தில் பிரமனைப் படைத்து, அவனைக் கொண்டு உலகைப் படைப்பார்.

சிபியின் கதை

பாடல் :—207

சிபி என்பவன் சூரிய குல மன்னன். வனத்தில் இவன் சென்றபோது ஒரு வல்லூறு புறு ஒன்றைத்

துரத்திக் கொண்டு வந்தது. அந்தப் புறு பதறியடித்துக்கொண்டு சிபியின் அருகில் வந்துவிட்டது. அவன் இரக்கங் கொண்டு அதற்கு அபயங்கொடுத்தான். வல்லூறு தான் துரத்தி வந்த உணவாகிய புறுவை விடு என்றது. 'உனக்கு உணவுக்குத் தசைதானே வேண்டும், என் தசையைத் தருகிறேன்' என்று தன் உடலிலிருந்த தசையை யெல்லாம் அறுத்துத் தராசில் வைத்துப் புறுவின் எடைக்கு ஈடு செய்யமுயன்றும், புறுவிருந்த தட்டு உயரவில்லை. எனவே தானும் ஏறினன்.

பாற்கடலில் பள்ளி கொள்ளல்

பாடல் :—201, 243, 255

திருமால் திருப்பாற் கடலில் ஆயிரம் தலைகளையுடைய ஆதிசேடன் என்னும் பாம்பின் மேல் இலக்குமி அருகிலிருக்கப் பள்ளி கொண்டிருப்பார். இது சேட சயனம் எனப்படும்.

அணியரங்கம் தந்தது

பாடல் :—206

இக்குவாகு என்ற மன்னன் தவஞ்செய்து பிரமனிடம் பெற்ற திருமால் உருவினை, அயோத்தியில் வைத்துப் பரம்பரையாகப் பூசித்து வந்தனர். அதனை இராமன் வீடணனுக்குக் கொடுத்தான். முனிவர் பலருடைய வேண்டுகோளின் பேரில் சீரங்கத்தில் அது பிரதிட்டை செய்யப் பெற்றது.

தக்கன் வேள்வி

பாடல் :—267

தக்கன் என்பவன் பேரரசனாக உலகை ஆண்டிருந்தான். கைலாயத்துக்குச் சென்றபோது அவனைக் கவனிப்பார் இல்லாதபடியால், சினம் மிக்கு சிவனை யாரும் வணங்காதிருக்கும்படி செய்ய, வேள்வி தொடங்கினான். அதைத் தேவர்களும், பிறரும் வந்து நடத்தினர். சிவன் தம் அம்சமாக வீரபத்திரரை உண்டாக்கி வேள்வியை அழிக்கும்படி அனுப்பி வைத்தார். வீரபத்திரர் அந்த வேள்வியையும், அதற்கு உடன்பட்டிருந்தவர்களையும் சின்னா பின்னப் படுத்தினர். அப்பொழுது அவர் கொண்டிருந்த வில்லே, இராமனால் முறிக்கப் பட்டதென்று தயரதன் கூறினான். இது உபசாரமாகச் சிவனுடைய வில்லென்று கூறப்பட்டது.

அருந்ததி

பாடல் :—382.

இவள் வசிட்ட முனிவரின் மனைவி. கற்பிற் சிறந்த உத்தமி. எல்லா நூலாசிரியர்களும் கற்புக்கு எடுத்துக் காட்டாக அருந்ததியையே குறிப்பிட்டுள்ளனர். உலக வழக்கும் அதுவே.

பாட்டு முதற் குறிப்பு

(எண்கள் பாடல்களின் எண்ணைக் குறிக்கும்)

பிழை திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
கஅ	19	1950ல்	1940ல்
9	25	வளாரதவர்	வளராதவர்
11	18	தோற்றமளிக்கிற தென்பது	தோற்றமளிக்கின்றன என்பது
15	20	பணிலம் - முத்து	பணிலம் - சங்கு
18	1	நிறைந்துள்ளன	நிறைந்துள்ளது
27	3–4	தருகின்றன	தருகின்றது
29	20	பூங்கொத்து	பூங்கொத்துக்கள்
39	13	மன்னர்	மன்னவர்
41	22	போகம்கனி	போகங்கனி
53	13	படைப்பன்	படைப்பென்
104	4	முனிவன்	முனிவர்
108	21	சம்பாதித்தை	சம்பாதித்தைப்
110	17	வறுமாறு	வருமாறு
116	23	இரக்கவும்	இறக்கவும்
133	7	நிகழ்சிகளே	நிகழ்ச்சிகளே
136	7	ஒலிப்ப மெல்லியலார்	ஒலிப்பமெல் லியலார்
137	16	கோட்டைத் சுவரின்	கோட்டைச் சுவரின்
153	21	வெள்ளத்தை தடுத்துப்	வெள்ளத்தைத் தடுத்துப்
162	13	ஒதுங்குகின்றான்	ஒதுங்குகின்றாள்
166	2–3	உண்டாக்கப் பட்டதோ	உண்டாக்கப் பட்டனவோ
173	4	மூட்டி விட்டாற்போல	மூட்டி விட்டாற்போல,
186	4	பாடற்கருத்து	பாடற் கருத்து,
191	22	பிரிவு துன்பத்துக்குக்	பிரிவு, துன்பத்துக்குக்
194	22	மலைபோலும் உள்ள	மலைபோலும் உடலினையும் உள்ள

பிழை திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
200	16	பகலில் சரியாக	பகலில் சரியாக,
203	16	இராம இலக்குமணர்களை	இராம இலக்குவர்களை
206	1	தன்னை ஆதரித்து	தன்னை ஆதரித்த
213	12	காரணஞக	காரணஞக
,,	16	பெரும்புகழ்ப் புகார்	பெரும் பெயர்ப் புகார்
216	13	இலட்சுமண	இலக்குவ
233	15	பயஞக சீதை	பயஞக, சீதை
275	2	எவ்வளவு பேர்	எவ்வளவோ பேர்
292	20	உடுத்தியிருக்கிற சேலையை	உடுத்தியிருக்கிற சேலையை,
317	7	புயம் நிமித்து	புயம் நிமிர்த்து
321	26	அறு அறுந்தன	அறுந்தன
360	18	திண்னே	திண்ணே
360	21	ஒளியையையும்	ஒளியையும்
369	25	அதை அடைய	அவனை அடைய
374	22	உதவிப் பொருள்களின்	உதவிப் பெண்களின்